கலைஞரின்
கடிதங்கள்



28

05.04.1996 - முதல்
23.09.1998 - வரை

சீதை பதிப்பகம்

திமுக அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன்
நினைவகம்
சென்னை-18
அறிவாலயம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 28

05.04.1996 - 23.09.1998

தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL


விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2235
894.8116
கலை-ம-28

திருமுருக. அருணாச்சலனார்
இயற்கை நூல்
நிலையம்
சென்னை-18
தென்னார் அறிவாலயம்



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

முக.ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2353. குளிர்தரு - தருநிழல் - நிழல் தரும் சுகம்!	05-04-1996	23
2354. வெற்றியே நமது குறிக்கோள் எனக் கொள்க!	16-04-1996	28
2355. வெற்றி நமதே! வீழட்டும் சர்வாதிகாரம்!	29-04-1996	31
2356. தூங்காமை, தூய்மை, துணிவுடைமையுடன்!	19-08-1996	34
2357. தூய்மையான உடையில், துளி மை விழலாமா?	25-08-1996	38
2358. கழக அணி வெற்றிக்குக் கைகோத்து நிற்போம்!	08-09-1996	43
2359. அந்த முகவிலாசத்தை அடையாளம் காட்டு!	09-04-1997	48
2360. மஞ்சள் துண்டு, தெய்வீக மகத்துவத்திற்கா?	10-04-1997	53
2361. விளைவு தெரியாத குழந்தையின் விளையாட்டு!	14-04-1997	58
2362. மலம் மூடத்தான் மலர் பறித்தார் என்றால்!	17-04-1997	61
2363. உன்னை எதிர்பார்க்கிறேன் சென்னைக்கு!	30-04-1997	66

2364. களை போக்கிக் கதிர் வளர்க்கும் கழனி காண்போம்!	06-05-1997	70
2365. வெந்தபுண்ணில் வேல் எறியும் நிகழ்ச்சி வேண்டாம்!	07-05-1997	76
2366. ஓராண்டு கால ஒப்பற்ற சாதனைகள் பாராய்!	09-05-1997	81
2367. தென்பாண்டிச் சீமைக்கு வருகிறேன்!	24-05-1997	94
2368. அண்ணா நகரில் கூடுகிறோம்; அன்பே வா!	05-06-1997	101
2369. சேலம் காண இருக்கும் சிங்கநடையும் - சிங்காரத்தென்றல் நடையும்!	19-06-1997	106
2370. வினை விதைத்தால் வினை அறுக்கத்தானே வேண்டும்!	22-06-1997	110
2371. சேலம் வரும் வழியில் சிந்தை கவரும் திட்டங்கள்!	23-06-1997	114
2372. சேவலென நிமிர்ந்து வா! செங்கதிராய்க் கிளம்பி வா!	25-06-1997	119
2373. சேலத்துச் செய்தியும் செயலாக்கமும்!	05-07-1997	124
2374. இரு கரம் பற்றி வேண்டுகிறேன்!	17-07-1997	133
2375. தியாகிகளை மதிக்கும் திராவிட ஆட்சி!	28-08-1997	138

2376. காணவும் கேட்கவும் - கண், காது இல்லையா?	30-08-1997	147
2377. பத்தரை மாற்றுத் தங்கக் கட்டி பறிபோனதே!	17-11-1997	152
2378. எழுஞாயிறே! இருட்டைக் கிழிப்போம் வா!	01-01-1998	156
2379. விளக்கமளிக்க விடுக்கும் நீட்டோலை!	02-01-1998	161
2380. அரசியல் நாகரிகத்துக்கு அறைகூவல்!	03-01-1998	165
2381. பழக்கப்பட்டுப்போன கட்டுக்கதை!	04-01-1998	170
2382. சரித்திரத்தில் இடம் பெறும் சான்றிதழ்கள்!	05-01-1998	174
2383. ‘‘திட்டும் காவியம்’’ தீட்டிய நாவலர்!	06-01-1998	181
2384. பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்!	07-01-1998	186
2385. வெற்றிக்கனிகள் காத்திருக்கின்றன; வீரர்காள்! வீராங்கனைகாள்!	08-01-1998	195
2386. மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது!	09-01-1998	200
2387. இங்கே அழைப்பது அண்ணாவின் இதயம்!	10-01-1998	206
2388. அடையாளம் காட்டிக் கொள்கிறார்கள்!	11-01-1998	211

2389. தமிழர் திருநாள் உறுதிமொழி ஏற்போம்!	14-01-1998	216
2390. இவர்களும் அவர்களும்; அவர்களும் இவர்களும்!	16-01-1998	223
2391. ரஜினியின் அறிக்கை - சிலரது பார்வை!	17-01-1998	228
2392. கோபி விழாவும், கோப அறிக்கையும்!	18-01-1998	232
2393. உதவாதினி ஒரு தாமதம், உடனே எழுக உடன்பிறப்பே!	21-01-1998	236
2394. இரண்டு நிகழ்ச்சிகள்! இரண்டு ஒப்பீடுகள்!	22-01-1998	241
2395. இளைஞர் அணிகளின் எழுச்சிப் பேரணிகள்!	23-01-1998	246
2396. உயரத் தூக்கிப் பிடி நம் வெற்றிக் கொடி!	25-01-1998	250
297. காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?	26-01-1998	253
2398. கடற்கரை அழைக்கிறது, கழகக் கண்மணியே வா!	28-01-1998	257
2399. என் நம்பிக்கைக்கு நல்ல துணை நீதானே!	29-01-1998	262
2400. வாழுமோ நஞ்சு உமிழும் வஞ்ச நெஞ்சம்?	31-01-1998	265
2401. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்!	01-02-1998	272
2402. இனிய முகம் கண்டிட இன்று புறப்படுகிறேன்!	05-02-1998	277

2403. ஊமையோ, செவிடோ; என் உடன்பிறப்புதான்!	12-03-1998	283
2404. வாழப்பாடி நினைவில் வந்ததும் வராததும்!	31-03-1998	286
2405. சைதை கிட்டு; செயலில் சிட்டு!	05-06-1998	292
2406.விளக்குக! இருள் விலக்க, விளக்காகுக!	12-06-1998	296
2407. தேசியத் திட்டத்தில் என்னதான் தேடினாலும்...!	14-06-1998	299
2408. கடமை ஆற்றிடக் கழகக் கண்மணியே எழுக!	22-06-1998	303
2409. அடாத புயலிலும் அகல் விளக்கேந்தி நடப்போம்!	26-06-1998	306
2410. நமக்கு வழங்கப்பட்டுள்ள நல்ல பாடம்!	29-06-1998	311
2411. சென்னை பொதுக்குழு; அழைக்கிறது உன்னை!	05-07-1998	314
2412. மனச்சாட்சி உறங்காமலிருந்தால்!	14-07-1998	318
2413. அனைவர்க்கும் பொருந்தும் அன்பு வேண்டுகோள்!	15-07-1998	323
2414. திரைப்படத் தொழில் தேய்ந்து போகவோ?	18-07-1998	327
2415. இப்படியும் நாடகம் நடக்குது இந்த நாட்டிலே!	19-07-1998	331
2416. கற்கண்டுச் செய்தியொன்று கரூரில் இருந்து!	22-07-1998	335

2417. வைரமணி மட்டுமல்ல; வைராக்கியமணியும் கூட!	25-07-1998	340
2418. மார்க்சிஸ்ட் ஏட்டுக்கு மறுப்பல்ல; விளக்கம்!	26-07-1998	345
2419. கனியாக - தேனாக - கற்கண்டாக!	01-08-1998	350
2420.சமாதானபுரம் அழைக்கிறது!	03-09-1998	355
2421. கண்ணீரும் பன்னீரும் கலந்த மண்ணில்!	05-09-1998	359
2422. குருவிக் கதையும் - நமது கொள்கை வழியும்!	06-09-1998	363
2423. கலிங்கத்துப்பரணியும் - கழகப் பேரணியும்!	07-09-1998	367
2424. தெரிந்து கொள்வதற்கும் - தெளிவு பெறுவதற்கும்	08-09-1998	371
2425. உன் வருகையில்தான் என் வருகைக்கே சிறப்பு!	09-09-1998	375
2426. உறுதிகொண்ட நெஞ்சினாய்! வா! வா! வா!	11-09-1998	379
2427. நான் உறங்கிட அனுமதி தருவாயா?	12-09-1998	383
2428. செல்வோம் நெல்லைக்கு; வெல்வோம் தொல்லைகளை!	13-09-1998	388
2429. பாதை கடினம்; பயணத்தில் தேவை கவனம்!	15-09-1998	393
2430. நெஞ்சில் நிலைத்த நெல்லை மாநாடு!	23-09-1998	397

2353. குளிர்தரு - தருநிழல் - நிழல் தரும் சுகம்!

உடன்பிறப்பே,

கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே - தருநிழலே - நிழல் தந்த சுகமே - எனும் வடலூர் வள்ளலார் பாடலை என் நெஞ்சுக்குள் பாடிக் கொள்கிறேன். காரணம், எனக்கு வாய்விட்டுப் பாட வராது. என்ன திடீரென்று அருட்பாவுக்குள் நுழைந்து விட்டாய்! என நீ கேட்பதை உன் விழிகள் காட்டுகின்றனவே!

ஒன்றுமில்லை உடன்பிறப்பே, இத்திங்கள் 14ஆம் நாள் கலையுலகச் செல்வர்கள் இணைந்து நின்று எனக்குக் கலையுலகப் பொன்விழா கொண்டாடப் போகிறார்கள். புரட்சிக் கலைஞர் தம்பி விஜயகாந்த் தலைவராகவும் புரட்சித் தமிழன் தம்பி சத்தியராஜ் செயலாளராகவும் நண்பர் இப்ராகிம் ராவுத்தர் பொருளாளராகவும் மற்றும் கலையுலக உடன்பிறப்புகள்ளைக் கொண்ட குழு ஒன்று அமைத்து எனது ஐம்பது ஆண்டுகால கலையுலகப் பணிக்குப் பாராட்டு தெரிவிக்கிறார்கள்.

மறுநாள் 15ந்தேதி திருக்குறளுக்கு நான் எழுதியுள்ள உரைநூல், பேராசிரியர் தலைமையில் பெரும்புலவர் அ.ச. ஞானசம்பந்தனார் அவர்களால் வெளியிடப்படுகிறது. குறளில் எனக்குள்ள ஈடுபாடு நீ அறியாததல்ல - அந்த ஈடுபாட்டின் சிகரமாக உயர்ந்து நிற்பதே வள்ளுவர் கோட்டம் என்பதைத் தமிழ் வையகம் உணரும். 354 குறட்பாக்களுக்கு நான் குறளோவியம் தீட்டினேன். அக்குறளோவியம் டாக்டர் கே. செல்லப்பன் அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக வந்தது.

அக்குறளோவியம் முத்தமிழ்க் காவலரின் மருமகன் டி.எஸ். கே. கண்ணன் அவர்களால் இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு

உத்திரபிரதேசத் தலைநகர் பாட்னாவில் முதல்வர் லல்லு பிரசாத் அவர்களால் வெளியிடப்பட்டது.

மேலும் என் ஆசை 1330 குறட்பாக்களுக்கும் உரை எழுத வேண்டுமென்று அமைந்தது. அந்த ஆவலை முரசொலியில் ஒவ்வொரு நாளும் குறளுக்கு உரை எழுதியதின் மூலமாகத் தணித்துக் கொண்டேன். 1330 குறளுக்கும் நான் எழுதிய உரை திருமகள் நிலையத்தாரால் நூலாக வெளியிடப்படுகிறது. அந்நாள்தான் இத்திங்கள் 15ஆம் நாளாகும்.

> "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்க்கை நெறி வகுத்துக் காட்டி வள்ளுவரால் வழங்கப் பெற்ற அறிவுக் கருவூலமே திருக்குறள்."

விஞ்ஞானம் பெருகிப் பரவி வளர்ந்திருக்கும் இந்தக் காலத்தில் நிழற்படக் கருவியின் வாயிலாக ஒளிப்பதிவாளர்கள் அவர்கள் திறனுக்கேற்பவும், கற்பனைக்கேற்பவும் ஓர் அழகுமிழ்ச் சோலையையோ - ஒரு ஆலயத்துக் கோபுரத்தையோ - ஒரு ஆடற்பாவையின் சிலையையோ - பல்வேறு கோணங்களில் சித்தரித்துக் காட்டுகிற வித்தகத்தைக் கண்டு மகிழ்கிறோம்.

அஃதேபோல் அழியாப் புகழ் கொண்ட குறளுக்குப் பதவுரையென்றும், விரிவுரையென்றும், விளக்கவுரையென்றும் அக்காலந் தொட்டு இக்காலம்வரையில் ஆய்ந்து வழங்கியுள்ள அறிஞர் பெருமக்கள் பலர் எனலாம். பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிப்பெருமாள் போன்றோர் குறளுக்குத் தந்துள்ள விளக்கங்களேயன்னியில் பிற்காலத்திலும் புலவர் பெருமக்கள் அரிய விளக்கங்களை அளித்துள்ளனர்.

குறளின் பெருமை கூற வந்த அக்காலத்துப் புலவர் கபிலர்,

> *"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட*
> *பனையளவு காட்டும் படித்தால்...."*

என்று வியந்து போற்றுகிறார்.

காலை நேரம். கபிலர் பசும் புல் ஒன்றைப் பார்க்கிறார். தரையுடன் ஒட்டிக் கிடக்கும் அந்தச் சிறிய புல்லின் நுனியில் தினையின் அளவைக் காட்டிலும் குறைவான ஒரு பனித்துளியையும் அவர் காண்கிறார். பனித்துளியை உற்று நோக்குகிறார். அந்தப் பனித்துளியின் அளவுக்குள்ளே - ஆங்கருகே

ஓங்கி உயர்ந்து நிற்கும் பனைமரம் முழுவதும் தெரிகிறது! அந்தக் காட்சி கபிலரைக் கற்பனைச் சிறகடித்துப் பறக்கச் செய்கிறது! ஆகா! ஒரு சிறு பனித்துளிக்குள்ளே பக்கத்தேயுள்ள பனைமரம் முழுதும் தெரிகின்றதே; இதே போலத்தான் வள்ளுவனின் குறட்பாவுக்குள்ளும் இந்த வையகத்துக்குத் தேவையான பெரும் பொருள் பொதிந்து கிடக்கிறது

குர்ஆன், பைபிள் போன்றவை மார்க்க மத நூல்களாகப் போற்றப்படுகின்றன! அந்த மார்க்க மதங்களைச் சேர்ந்த கோடானு கோடி மக்கள், தங்களுக்குத் தக்க வழி காட்டும் அருட் பிழம்புகளென அந்த நூல்களை ஏற்றித் தொழுது பின்பற்றுகின்றனர்! குறள், ஒரு குறிப்பிட்ட மதத்தின் அல்லது மார்க்கத்தின் வழி காட்டும் நூலாக இல்லாமல் பொதுவான வாழ்க்கை நெறி வகுக்கும் நூலாகத் திகழ்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு உருவாகியிருந்த தமிழ் நிலத்துச் சமுதாயச் சூழலின் நடுவிலே எழுத்தாணி பிடித்து ஏடெழுதிய வள்ளுவப் பெருந்தகையார், அறம் எதுவென அறுதியிட்டுக் கூறினார். இல்வாழ்க்கையின் இனிய பயனையும், எப்படியிருந்தால் துறவறம் சிறப்புடையது என்பதையும், வாழ்க்கையில் கொள்ளுவன - தள்ளுவன எவை எவை எனப் பகுத்துக்காட்டியும், முடியரசு ஆட்சி நடந்த காலத்திற்குச் சொல்லப்பட்ட அறிவுரைகள் குடியரசு ஆட்சி நடக்கும் நாடுகளுக்கும் பொருந்துமெனக் கூறுமளவுக்கு அரசியல் கோட்பாடுகளை வகுத்தளித்தும், உயிர் இனத்தின் இயற்கை உணவான காம உணர்வு ஆறாவது அறிவையும் பெற்றுள்ள மனித இனத்தினையும் ஆட்படுத்தக்கூடிய ஆற்றல் கொண்டது எனினும் அதற்கு அன்பினை அடிப்படையாகக் கொண்ட இலக்கண இலக்கியக் கவசம் அணிவித்தும், எப்பாலினும் சிறந்த முப்பாலினைப் பொழிந்து அதில் தேன் தமிழும் கலந்து நம் இதயத்தின் வாயிதழ் திறந்து ஊட்டுகின்ற அமிழ்தமே திருக்குறள்!

ஒன்றுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களுக்கோ பதவுரை, விரிவுரை என்று எழுதிக் கொண்டிராமல் பலரும் விரும்பிப் படிக்கத்தக்க வண்ணம் அவர்களைக் கவர்ந்திழுத்துக் கருத்துகளை நெஞ்சத்தில் பதிய வைத்திட வேண்டுமென்ற ஆசைத் துடிப்பு எனக்கு முப்பது ஆண்டுக் காலமாகவே உண்டு. முதல் முயற்சியை 1956ஆம் ஆண்டு தொடங்கினேன். முரசொலி

வார இதழில் குறளோவியம் என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதிடத் துணிந்தேன்.

அதற்கென முதலில் நான் தேர்ந்தெடுத்துச் சொல்லோவியம் தீட்டிய குறள் :-

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"

என்பதாகும்!

தமைக்காத்த தலைவன் தமக்காகக் கண்ணீர் சிந்துமளவுக்கு ஏற்படுகின்ற களச்சாவினை வீரர்கள், யாசித்தாவது பெறவேண்டும் - என்பதே இதன் பொருளாகும்.

களம்பட்டுத் தியாகியாக நான் மாண்டு கிடக்க என் உடல் மீது என் தலைவர் அண்ணா அவர்கள் கண்ணீர் சிந்தும் பேறு பெற வேண்டுமென்ற அவா மிகுதியால் எழுதப்பட்ட முதல் குறளோவியம் இது.

ஆனால் நான் நினைத்ததற்கு மாறாக நடந்து விட்டதே! என் அன்புத் தலைவர் எனக்கு முன் மறைந்துவிட்டாரே!

குறளோவியம் எழுதிடப் புதிதாகப் பயிற்சி பெறவில்லை யென்பதையும், நாற்பது ஆண்டுக்காலமாக நான் பல்வேறு கோணங்களில் வளமை மிகு தமிழ்மொழியைப் படம்பிடித்துக்காட்டி வருவதின் தொடர்ச்சியே இந்த நூல் என்பதையும் விரித்துரைக்கத்தான் இத்தகைய எடுத்துக் காட்டுகளே தவிர இறுமாப்பின் விளைவல்ல! அந்தத் தீய பண்பு என இதயத்தில் எள்முனையளவுகூட என்றைக்கும் இடம் பெற்றதுமில்லை!

உரைநடையில் குறட்பாக்களை மலர்மாலையாக ஆக்கியோர் உளர். செய்யுள் செய்து குறளுக்குப் பொருள் உரைத்தோர் உளர்! சுருக்கமாகச் சுவையாகக் குறளுக்குப் பொழிப்புரை புகன்றோர் உளர்! இசைத் தமிழால் இனிய குறளைச் செவி வழிப்பாயச் செய்து சிந்தை குளிர்விப்போர் உளர்!

இவற்றுக்கிடையே என் பங்காக நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி நிழல் தரும் குளிர் தருக்கள் அடர்ந்த

நீரோடைத் தமிழிலும், நெஞ்சில் கனலேற்றும் முழவோசைத் தமிழிலும், நீள் விழியில் நதி தோன்றத் தூண்டும் உருக்கமிகு உணர்ச்சித் தமிழிலும் குறட்பாக்களை உங்கள் முன்னால் உலவவிட்டிருக்கிறேன்.

இவ்வாறு குறளோவியம் நூலுக்கு முன்னுரை எழுதினேன்.

அதே அடக்க உணர்வோடுதான் 1330 குறட்பாக்களுக்கும் ஒரு நாளைக்கு ஒரு குறள் என்று - சிந்தித்து, உரையெழுதி, திருக்குறள் உரை நூலையும் தமிழர் கரங்களில் தவழவிட இருக்கிறேன்.

எனவே உடன்பிறப்பே, கொந்தளித்துக் குமுறும் அரசியல் சூழலில் - புயலும், சூறாவளியும் வீசும் அரசியல் சூழலில் - கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவும் - தரு நிழலும் - நிழல் தரும் சுகமுமாக கலை உலகத்தினர் நடத்தும் நிகழ்ச்சியும், திருக்குறள் உரை நூல் வெளியீட்டு விழாவும் அமைந்துள்ளன என்பதை எண்ணியெண்ணி மகிழ்கிறேன். அந்த இரு நாட்கள் நிழல் தரும் சுகத்திற்குப்பின் மீண்டும் கோடை வெயில் கொடுமையாக வீசும் அரசியலில் உன்னோடு பயணம் செய்யப் போகிறேன். நீ என்னோடு பயணம் செய்யப் போகிறாய்! இடையில் இரு நாட்கள் இலக்கிய, கலைப் பூஞ்சோலையில் இளைப்பாறும் நாட்கள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(05-04-1996)

2354. வெற்றியே நமது குறிக்கோள் எனக் கொள்க!

உடன்பிறப்பே,

நடைபெற்றுக் கொண்டிருக்கிற போராட்டம், சர்வாதிகாரக் குணம் கொண்டோரிடமிருந்து ஜனநாயகத்தை மீட்பதற்காக நடைபெறும் போராட்டம் - அரசியல் நாகரிகம், பண்பாடுகளுக்கு விரோதமாக, மரபுகளை, நெறிமுறைகளை மண்ணில் போட்டுப் புதைத்துக் கொண்டிருக்கும் மதோன்மத்தர்களிடமிருந்து இந்த மாநில மக்களை விடுவிப்பதற்காக நடைபெறும் போராட்டம் - உத்தம வேடம் போட்டுக் கொண்டு ஊர்நாறும் ஊழல்களை, தொட்டில் முதல் சுடுகாட்டுக் கொட்டகை வரையில் செய்து முடித்துவிட்டு, மேலும் தமிழ் நாட்டையே கூறுபோட்டு விற்றுவிடத் துடித்துக் கொண்டிருக்கும் லஞ்சலாவண்யப் பேய்ப் பிசாசுகளை, இனியும் தேட்டை போடவிடாமல் கோட்டையிலிருந்து விரட்டியடிக்கும் போராட்டம்!

இந்தப் போராட்டத்தில் வெற்றி நமது தி.மு.க. முற்போக்குக் கூட்டணிக்கே எனினும், வெற்றிமாலை இப்போதே நமது கழுத்தில் வந்து விழுந்து விட்டதாகக் கற்பனை செய்து கொண்டு மெத்தனமாக இருந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

வாக்குகள் வலியவந்து நமது வேட்பாளர்களுக்குக் குவியப் போகின்றன என்றும் - அதற்கு அறிகுறிதான் ஆங்காங்குக் கூடிடும் அலைமோதும் பொதுக் கூட்டங்கள் என்றும் - நீயும் நானும் கருதிக் கொண்டு மந்தமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தால்; பிறகு நான் உனக்கு ஆரம்பப்பள்ளியில் படித்த ஆமையும் முயலும் கதையைத்தான் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கும்.

அதுவும் முயலாக இருக்கும் நம்மை வெல்ல நினைக்கும் இந்த ஆமை; சாதாரண ஆமை அல்ல!

*** பொங்கும் பொறாமை!**

*** அரசியல் நாகரிகம் அறியாமை!**

*** நீதிக்குத் தலைவணங்காமை!**

*** நியாயத்தைப் போற்றாமை!**

*** நிர்வாகம் நடத்திடத் தெரியாமை!**

*** ஒரு துளியும் உண்மை பேசாமை!**

*** ஊழல் புரிய அஞ்சாமை!**

இந்த ஆமையுடன் நடத்தும் போட்டிப் பந்தயத்தில், துள்ளிக்குதித்துத் துடிதுடிப்புக் காட்டி ஆர்வங் கொந்தளிக்க ஆர்ப்பாட்டம் செய்து; வெற்றி வெற்றி என்ற அதீத நம்பிக்கையில் அலட்சியமாகச் சிறு தூக்கம் போடலாமென நினைத்தாலும், அது தமிழகத்துக்குப் பெருந்துக்கமாக மாறிவிடும் என்பதை நமது அணியின் வேட்பாளர்களும் மறந்துவிடக்கூடாது, அந்த வேட்பாளர்களின் வெற்றிக்காக சுற்றிச் சுழலும் உன்னைப் போன்ற என் உயிரினுமேலான அன்பு உடன்பிறப்புகளும் மறந்துவிடலாகாது!

ஒவ்வொரு தொகுதியிலும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் உள்ள வாக்காளர்கள் நாள் தோறும் சந்தித்து வாக்கு கேட்கும் பணியில் ஈடுபடுவது என்பது; எறும்புகளையும், தேனீக்களையும் மிஞ்சக் கூடிய அளவுக்குச் சுறுசுறுப்புடன் அமைந்திடல் வேண்டும்.

நாம் கறந்து வைத்த பாலை நாமே கவிழ்த்துவிட்டது போலவோ - வெண்ணெய் திரளும்போது தாழியை உடைத்துவிட்டது போலவோ - எல்லாம் நன்மையாகக் கூடிவரும்போது; அவசரம், ஆர்ப்பாட்டம், பரபரப்பு, பதற்றம் இவற்றுக்கு எள்முனையளவு இடம் தந்தாலும் காரியம் கெட்டுவிடும் என்பதை உணர்ந்து கடமையாற்றிட வேண்டுகிறேன்.

ஆர்வக் கோளாறு - அத்துடன் இணைந்த அவசரம் - அவற்றின் காரணமாகத்தானே கம்பர் மகன் அம்பிகாபதியின் காதலி அமராவதி, எல்லாப் பூக்களையும் எண்ணி முடிக்காமல்; தர்பார் மண்டபப் பலகணி வழியே தனது தலையலங்காரம் காட்டி; காதலன் அம்பிகாபதியின் தலை பறிக்கப்படும் நிலை ஏற்பட்டது என்பதைத்

தேர்தல் நேரத்தில் ஒரு பாடமாகக் கொள்ள வேண்டுமல்லவா! பம்பரம்போல் சுழன்று பணியாற்ற வேண்டும் - பரபரப்பு கூடாது!

வெற்றியே குறிக்கோள் என்று விவேகமுடன் உழைத்திடல் வேண்டும் - வெற்றுக் கூச்சல், வெறும் ஆரவாரம் கூடாது! அமைதியாக - அயர்வின்றி - வாக்குச் சேகரிக்கும் போதும், வாக்குப் பதிவு முடிவுறும் கடைசி மணித்துளி வரையிலும், வாக்கு எண்ணிக்கை நிறைவுறும் வரையிலும், பொறுப்புடனும் உறுதியுடனும் பணி புரிவோரே, முற்போக்குக் கூட்டணியின் வெற்றியை ஈட்டித்தரக் கூடிய கண்மணிகளாவர்!

இதனைக் கருத்தில் கொண்டு முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களும், அவர்களின் வெற்றிக்குப் பாடுபடும் அணியில் உள்ள கட்சிகளின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளோரும், ஆதரவு தரும் அனைத்து அமைப்புகளில் இருப்போரும் கடமையாற்றிட வேண்டும், களத்தில் வெற்றி கண்டிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(16-04-1996)

2355. வெற்றி நமதே! வீழட்டும் சர்வாதிகாரம்!

உடன்பிறப்பே,

முதல் கட்டமாகத் தமிழகத்தில் 150 சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. வாக்கு எண்ணிக்கை முடியும் வரையில் நமது முற்போக்குக் கூட்டணியினர் விழிப்பாக இருந்து; அறுவடையான நெல்லை, களத்து மேட்டிலிருந்து கயவர்கள் எவரும் அள்ளிக்கொண்டு போய்விடாமல் பாதுகாத்திடுவர் என்பதிலும், அலட்சியமாக இருந்திட மாட்டார்கள் என்பதிலும் அணுவளவு கூட ஐயப்பாட்டுக்கு இடமின்றி இருக்கின்றேன்.

முதல்கட்டத் தேர்தல் முடிவுற்றுள்ள எல்லா மாவட்டங்களிலுமிருந்தும் மாவட்டக் கழகச் செயலாளர்களும், வேட்பாளர்களும் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு நமது அணியினரின் வெற்றி முகட்டுக்கான பாதை மிக மிக ஒளிமயமாக விளங்குகிறது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தவண்ணமுள்ளனர். நமது அணியின் முன்னோடிகள் மட்டுமல்லாமல் தமிழக அரசின் புலனாய்வுத் துறையினரும் முற்போக்குக் கூட்டணியே முதல் கட்டத் தேர்தலில் முன்னணியில் இருப்பதாக, தமது மேலிடத்துக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று நம்பகமான தகவலும் கிடைத்துள்ளது.

இந்தத் தகவலுக்குப் பிறகு ஜெயலலிதா அவர்கள், எஞ்சியுள்ள சுமார் 80க்கு மேற்பட்ட சட்டப்பேரவைத் தொகுதிகளில் இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெறும் போது எத்தகைய தில்லுமுல்லு வேலைகளில் இறங்கலாமென்று திட்டம் தீட்டிக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

அந்தத் திட்டப்படி ஆளுங்கட்சியினர் வகுத்திடும் ஜனநாயக விரோதமான செயல்கள் பின்வருமாறு இருக்குமென்று கணிக்கப்படுகிறது.

இரண்டாம் கட்டத் தேர்தல் மே மாதம் 2ந் தேதியன்று நடைபெறுவதற்கு முன்பே, ஏழை எளிய மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் காவல்துறையினர் புகுந்து கடும் எச்சரிக்கைகள் விட்டாக வேண்டுமென மேலிடம் விரும்புகிறதாம். முற்போக்குக் கூட்டணிக்கு வாக்கு அளிக்கக் கூடாது என்று மிரட்ட வேண்டுமென்று மேலிடம் உத்தரவிட்டு; கொடியங்குளம் பாணியில் போலீசாரை ஏவிவிடவும் ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாம். ஆனால் முதல் கட்டத் தேர்தலிலேயே இந்த அராஜக ஆட்சிக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிட்டது என்ற கணக்கைப் புரிந்து கொண்டுவிட்ட காவல்துறையினரும் - இதுவரையில் கட்டுண்டோம் பொறுத்திருப்போம் எனக் கண்கலங்கியிருந்த அதிகாரிகளும் - அத்தகைய மிரட்டல் வேலைகளுக்குத் தாங்கள் போகமாட்டோம் என்று உறுதியாக இருப்பதுடன்; அப்படியே போக நேர்ந்தாலும் கடமை உணர்ந்து நியாயத்தின் பக்கமே நிற்பது என்றும் தங்களின் நெஞ்சுக்கு, நீதி வழங்கிக் கொண்டிருக்கிறார்களாம்.

ஒருவேளை நியாயம் தவறி ஜனநாயகத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நிதானத்தையிழந்து சில அதிகாரிகளோ, காவல்துறையினரோ நடந்து கொள்ள முனைவார்களேயானால்; அந்த மக்கள் விரோதச்செயல்களைத் தடுத்திடும் மலையரண்களாக நமது அணியின் உடன்பிறப்புகள் நிமிர்ந்து நின்று மக்களாட்சித் தத்துவத்தின் மரபு நெறிமுறைகளைக் காத்திடத் தவற மாட்டீர்கள் என எனக்குத் தெரியும் - ஆம்; தவறவும் மாட்டீர்கள்! தவறவும் கூடாது; கூடவே கூடாது!

நரகல் நடை, நடுங்கா நாக்கு நடை, சந்து முனை சிந்து என்றெல்லாம் மாற்றார் நம்மீது பொழியும் இழிமொழிகளைப்பற்றி நமது அண்ணா கூறுவாரே - அந்த நரகல் நடையும், சந்துமுனைச் சிந்தும் கொண்டு அவர்களின் பிரச்சாரத்தில் நம்மைப்பற்றியும் நமது அணியைப்பற்றியும் அள்ளிப் பொழியும் அவதூறுகளை மேலும் அதிகமாக்கிடவும் திட்டம் வகுத்துள்ளனராம் - நன்றாக வகுக்கட்டும்! மலத்தைக் கொப்பளித்து நம்மீது துப்ப முனைகிறார்கள், நாம் ஒதுங்கிக் கொள்வோம் - அவர்கள் வாய் மட்டுமே மணக்கட்டும் பாவம்!

ஆளுங்கட்சி அணி - அதனை வீழ்த்திடும் வலுவான அணியான நமது அணி - இந்த இரண்டு அணிகளில் நமது அணிக்கு

வெற்றி கிடைத்து விடக்கூடாது என்று நல்லெண்ணம் (?) கொண்ட வேறு சில வஞ்சக அணியினர் காலையிலே தங்களுக்கு வாக்கு சேகரித்துப் பார்த்துவிட்டு, மாலையிலே அ.தி.மு.க. அணிக்கே வாக்களியுங்கள் என்று பகிரங்கமாகவே கேட்க ஆரம்பித்துவிட்டனர் என்ற செய்தியும் வந்துகொண்டேயிருக்கிறது. பார்த்தீர்களா; நான் அப்போதே சொன்னேன் இவர்கள் எல்லாம் ஜெயலலிதா அவர்களின் கூலிப்பட்டாளம் என்று! இப்போது அது உண்மையாகி விட்டது. பெரியார் அவர்கள் அடிக்கடி சொல்வதுபோலப் பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது. இப்படியொரு துரோகத்தை, துட்டுக்கு விலைபோகும் கூட்டத்தை, தங்களின் எதிரி ஜெயலலிதா அல்ல; முற்போக்குக் கூட்டணிதான் என்று வெளிப்படையாகவே பேசித் திரிந்து அந்த அம்மையாருக்காக வேலை பார்க்கும் வீடணக்கும்பலை அடையாளம் கண்டுகொண்டு அதிர்ச்சி அடைந்தவர்கள் மீண்டும் கழகத்திற்கே திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் மீறி இரண்டாவது கட்டத் தேர்தலிலும் நமக்குத்தான் மிகப் பெரும்பாலான இடங்கள்; முதற்கட்டத்தைப்போலவே நாடாளுமன்றத் தொகுதிகளிலும், சட்டமன்றத் தொகுதிகளிலும் கிடைக்க இருக்கிறது எனினும், நமது அணியின் செயல்வீரக் கண்மணிகள் ஆளுங்கட்சியினர் திட்டமிட்டிருக்கும் சூழ்ச்சிகளைச் சுக்குநூறாக்கிடவும், மிரட்டல்களைச் சுருட்டித் தூக்கி வீசிடவும் தங்களைத் தயார்படுத்திக் கொண்டு தளராமல் பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். வெற்றி நமதே! வீழட்டும் சர்வாதிகாரம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(29-04-1996)

2356. தூங்காமை, தூய்மை, துணிவுடைமையுடன்!

உடன்பிறப்பே,

மன்னிக்கவும் - மன்னிக்கவும் என்று நூறு முறை, ஆயிரம் முறை உன் கரங்களை அழுத்திப் பிடித்துக் கொண்டு கண்கள் கெஞ்சிட, நெஞ்சம் விம்மிட உன் முன்னால் நிற்பது போன்ற நினைவுடன் இந்தக் கடிதம் தீட்டிடுகிறேன் உனக்கு!

ஏறத்தாழ நூறு நாட்களுக்குப் பிறகு என் நினைப்பு வந்ததே உனக்கு என்று செல்லக் கோபத்தில் விழிகளை நடிப்புக்காக உருட்டி என்னை நீ முறைத்துப் பார்ப்பது மனத்திரையில் தெரியத்தான் செய்கிறது.

என்ன செய்வது; நீயும் உன் போன்ற உழைக்கும் எண்ணம் கொண்ட உடன்பிறப்புகளும் தமிழ்ப் பெருங்குடி மக்களும் என் தலையில் தூக்கி வைத்துள்ள சுமை, என்னை நிமிரவும் முடியாமல் - திரும்பவும் முடியாமல் - நெருக்கடிக்கு ஆளாக்கித் திக்குமுக்காடச் செய்துக்கொண்டிருக்கிறதே; நான் என்ன செய்ய உடன்பிறப்பே!

கள்ளிக் காடழித்து முல்லைத் தோட்டம் அமைத்திடுக என ஆணையிட்டிருந்தால் கடும் உழைப்பை நல்கி அப்பணி முடித்துக்காட்டி களிப்பில் மூழ்கியிருப்பேன்.

வெள்ளப் பெருக்கு, வீடுகளைச் சாய்த்து வீதிகளைச் சரித்து, விலங்குகளை மாய்த்து, மனிதர்களுக்கு விபரீதம் விளைத்திடுகிறது - அதனைத் தடுத்து ஆபத்தைத் தவிர்த்து அபயமளித்திடு! என உத்தரவிட்டிருந்தால் உடன் செய்து முடித்து உள்ளம் குளிர்ந்திருப்பேன்.

பரவுகிறது தீ! பதறுகிறது நெஞ்சம்! பனை ஓலைக் குடிசைகளும் அங்குப் பதுங்கி வாழும் பாபப்பட்ட ஜென்மங்களும் பஸ்பமாவதற்குள் ஓடிச்சென்று பாதுகாப்புத்தந்திடு எனப் பகர்ந்திருந்தால் பாயும் அருவியாகப் பறந்து சென்று தீயணைத்துத் திறனைக் காட்டியிருப்பேன்.

ஆனால் நீயும் தமிழ் மக்களும் எனக்கிட்டிருக்கும் வேலையோ, ஆகாயமளாவ அணையெழுப்பினும் அயர்ந்து நிற்காத வெள்ளமாக - அருவிகள் ஆயிரம் சீறிப் பாயினும் அடங்க நடுங்காத தீயாக - வெட்டித் தள்ளத் தள்ள மாளாத கள்ளியாக - உருவெடுத்து நிற்பதைப் பார்த்து மலைத்துப் போகிறேன். களைத்துப் போகிறேன்.

நடக்கும் பாதையில் ஓரிரு முட்கள் இருந்தால் எடுத்துத் தொலைவில் வீசி விட்டுப் பயணத்தைத் தொடரலாம்; இந்தப் பாதையோ முட்களாலேயே ஆன பாதை என்கிற போது எப்படியிருக்கும் என்றுதான் திகைக்கிறேன் என்று தேர்தலுக்கு முன்பே ஓர் ஆங்கில ஏட்டுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தேனே; அது உனக்கு ஞாபகத்தில் இருக்குமென நம்புகிறேன்.

நெருப்பையும் நீரையும் அடக்கியாண்டு கள்ளிக் காடுகளை அழித்து முல்லைக் கொல்லைகளை உருவாக்கிய பெருமை மனித இனத்திற்கு உண்டல்லவா; அதனை ஆழ்ந்த பெருமூச்சுடன் நினைத்துப் பார்க்கும் போதும், நீ என்றைக்கும் தோளோடு தோள் நின்று துணையிருப்பாய் என்ற நம்பிக்கை, தூணாக உயர்ந்து என்னைத் தாங்கும் போதும் களைப்பு, மலைப்பு எல்லாம் சற்றுத் தொலைவில் ஒதுங்கித்தான் போய்விடுகின்றன.

இந்த எழுபத்தி மூன்று வயதில் இளஞ்சூரியனுடன் எழுந்து ஏழு மணி வரையில் உலவலும், உடற்பயிற்சியும் என்று ஓடிடும் நேரம் போக, எஞ்சிய நேரத்தில் இரண்டு மூன்று மணி நேரம் தவிர்த்து ஒரு நாளில் இருபது மணி நேரமும் உழைக்கிறேன். உறங்கலாம் என்று கூறும் கண்கள்! உடற்கூறுகளும் அவற்றுக்கு ஒத்துப்பாடும்! ஆனால், படுத்தவுடன் பணிகளின் பட்டியல், மணியைப் பார்க்கத் தோன்றாமல் மனத்தைப் பாடாய்ப்படுத்தும்! இப்படிக் கிடைத்த நேரத்தில்தான் உனக்கு நான் இந்தக் கடிதம் கூட எழுதுகிறேன்!

மூன்று மாத காலமாகிறது, முரசொலியின் பக்கம் சென்று! பிரமுகர்கள் நேர்காணல் - கோட்டையில் பணிகள் - கோப்புகள் பார்த்தல் - ஆட்சி நடக்கும் தலைமைச் செயலகத்திலும், அன்றாடம் மனுக்களுடன் மக்கள் கூட்டம் - மாலையில் உன்னை மட்டும் சந்திக்கலாம் என்று அண்ணா அறிவாலயம் வந்தால் அங்கேயும் மனுநீதி கேட்போர் ஆயிரம்பேர் - அவர்களுக்கிடையே

சிக்கி நான் உன்னைத் தாகமுடன் நோக்குவதும், நீ என்னை ஆவலுடன் நோக்குவதும் - அன்றாட நிகழ்ச்சிகள் ஆகி விட்டன!

என்றைக்குப் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தேனோ அன்று முதல் பத்து பேருடன் இருந்தே பழகி விட்ட எனக்கு - பாளையங்கோட்டைத் தனிமைச் சிறை அனுபவம் ஒன்று தவிர - எப்போதுமே உன் போன்றோர் புடைசூழ இருப்பதுதான் மகிழ்ச்சியானது! மனத்துக்கு இதமானது!

ஆனால், கள்ளிகளும் கருநாகப் புற்றுகளும் அடர்ந்து, பாதாள மூலி படர்ந்து, பளிங்கு நீர்க்கிணறு பாழுங்கிணறு ஆகிவிட்ட வீடுபோல விளங்கிடும் - நாடு செழித்திடவும், நலம் பல குவிந்திடவும், நான் மட்டுமல்ல நாம் அனைவரும், நரம்பு வலிக்க வலிக்க - எலும்பு தேயத் தேய - நாட்கணக்கில், மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் ஓய்வின்றி உழைத்துத்தான் தீர வேண்டும்.

இந்தியத் திருநாட்டின் இளந்தலைவர் ஒருவரை இரத்தச் சகதியில் மிதக்க விட்ட ஓர் இருண்ட வேளையில் - தமிழ் மக்களின் விழிகளை இமைகளுக்குப் பதிலாகக் கண்ணீர்த் துளிகள் மூடிக் கொண்டிருந்த நேரத்தில் - பெரியார், அண்ணா பெயர்களைக் கூறிக்கொண்டு ஒரு பித்தலாட்டக் கொள்ளைக்கூட்டம் ஐந்தாண்டு கால அராஜகச் செயல்களால் மாநிலத்தைச் சூறையாடிக் குதித்துக் கும்மாளமிட்டு, இன்னமும் தனது குள்ளநரிச் செயல்களால் மக்களை ஏமாற்றலாமென மனப்பால் குடித்துக் கூனிக் குறுகி, மூலையில் அமர்ந்து முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது.

உடன்பிறப்பே, நரிகளுக்கும் - முதலைகளுக்கும் நடுவில் நின்றுதான் நமது கழக அரசு, நமது நம்பிக்கைக்குரிய தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன், நல்லியக்கத்தார், நல்லிதயத்தார் வழங்குகின்ற நற்சான்றுகளுடன், ஏழை எளிய நடுத்தர மக்களுக்கான ஏற்றமிகு தொண்டினை தூங்காமை, தூய்மை, துணிவுடைமையுடன் ஆற்றி வருகின்றது!

மேலும் ஆற்றிட வேண்டும் - ஆற்றும் வேளையில் போற்றும் பெரியோரும், தூற்றும் சிறியோரும் எதிர்ப்படுவர்!

பெரியோர் வார்த்தையை ஊக்க மருந்தாகப் பெற்றும், சிறியோர் தூற்றலைச் செடிக்கு அடியில் இடப்படும் உரமாகக்

கொண்டும் - பிறந்த பொன்னாட்டுக்கு உழைப்பதில் மறந்தும் ஓய்வு கொள்ளாமல் தொடர்ந்திடுவேன் பணியினை! நீயும் தொடர்ந்திடுவாய் எனும் துணிவுடன்!

உடன்பிறப்பே, இது இனி அடுத்தடுத்து நான் உனக்கு எழுத இருக்கும் மடல்களுக்கு ஒரு முன்னுரைக் கடிதமெனக் கொள்க!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(19-08-1996)

2357. தூய்மையான உடையில், துளி மை விழலாமா?

உடன்பிறப்பே,

மூன்று திங்களில் இரண்டொரு நாட்கள் முன்பு உனக்கு நான் எழுதிய முன்னுரைக் கடிதத்தைத் தொடர்ந்து இது இரண்டாவது கடிதம். இனிக் கிழமைக்கு இரண்டு அல்லது மூன்று மடல்கள் உனக்கு எழுதுவேன். முன்னுரைக் கடிதத்தில் நான் குறிப்பிட்டுள்ளதுபோல உனக்கு நான் கடிதம் எழுதாததற்கு ஓய்வில்லாப் பணியென்பது மட்டும் காரணமல்ல - உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கில் என்னைச் சென்னை வந்தே சந்தித்துக் கொண்டிருக்கிறார்களே; அதுவும் ஒரு முக்கியமான காரணம்தான்!

நேரிலேயே காணும் வாய்ப்பு இருந்திடும்போது, அதுவும் தொடர்ந்து இருந்திடும்போது, நிரூபம் தேவைப்படாமல் போய்விடுகிறதல்லவா?

சென்னைக்கு வராமல் சிற்றூர் பேரூர்களில் நகர்ப்புறங்களில் வீட்டுப் பணிகளையும் கவனித்துக் கொண்டு நாட்டுக்குத் தொண்டாற்றக் கழகக் கண்மணியாகவும் சுற்றிச் சுழன்றிடும் உடன்பிறப்புகள் சுடர் விழிகாட்டி என்னைச் சுட்டெரிப்பது போல் ஓகோ! சென்னைக்கு வந்து உன்னை நேரில் பார்த்து விடுவதால் கடிதம் எழுதவில்லையா? வந்து பார்த்தவர்களுக்குச் சரி - வராமலே இருந்தும் உன் கடிதம் காணக்காத்திருக்கும் உடன்பிறப்புகளுக்கு உன் சமாதானம் என்ன - சமாளிப்புத்தான் என்னவென்று வினவிடும் காட்சி எனக்கு விளங்காமல் இல்லை.

சரி எதற்கு வம்பு? இனிப் பார்த்தவர்க்கு - பார்க்காதவர்களுக்கு - இக்கடிதத்தைப் படிக்காதவர்க்கும் கூடி அடிக்கடி எழுதிக்

கொண்டேயிருக்கப் போகிறேனே; அதனால் இந்தக் காரணம் காட்டும் காண்டத்திற்கு இத்துடன் ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறேன்.

உடன்பிறப்பே, கழக அரசின் நூறு நாள் அரும்பணிகளை ஆன்றோர் சான்றோர் முதல் அனைவருமே பாராட்டி மகிழ்கின்றனர். தேர்தல் நேரத்திலே வெற்றி வாய்ப்பு குறித்துக் கருத்துக்கணிப்பு எடுத்து வெளியிட்ட ஆப்ட் எனும் ஆய்வு நிறுவனத்தினர், இப்போதும் நூறு நாள் கழக அரசின் பணிகளைக் கண்டு மனநிறைவு கொண்டுள்ள மக்கள் தொகையினர் எண்பது சதவிகிதத்திற்கும் அதிகம் என்று கூறியுள்ளது கண்டு மகிழ்கிறேன் எனினும், எஞ்சியுள்ள இருபது சதவிகித மக்களுக்கும் ஏற்புடைய ஆட்சியினைத் தரவேண்டுமே என்பதிலே மிகவும் கவலையுள்ளவனாகவே இருக்கிறேன்.

நடுநிலையாளர்கள் பலர், ஏடுகளிலேகூடக் கழக ஆட்சிக்குப் புகழ்க் காவியம் தீட்டுகின்றனர். பூரித்துப் போகிறேன். ஆனாலும்கூட, தும்பை மலர் போன்ற தூய வெள்ளுடையில் ஒரு துளி மை சிந்தினாற்போல சிலகுறைகளை அந்த நடுநிலையாளர்கள் சுட்டிக்காட்டும்போது என் மகிழ்ச்சிக்குப் பலத்த முட்டுக்கட்டை போடப்பட்டுவிடுகிறது.

ஆட்சி நன்றாகத்தானிருக்கிறது - அமைச்சர் நன்றாகத்தான் செயல்படுகிறார்கள் - சட்டமன்றத்தில் ஜனநாயகம் கொடிகட்டிப் பறக்கிறது - அடித்தட்டு மக்களுக்கான அனைத்து வசதிகளிலும் கவனம் செலுத்தப்படுகிறது - ஆடம்பரம் அறவே இல்லை - திட்டங்கள் அறிவிக்கப்படுவது மட்டுமல்ல; நடைமுறைப்படுத்தவும் நாட்டம் செலுத்தப்படுகிறது - இந்த நூறு நாட்கள் பாராட்டத்தக்க வகையிலே அமைந்தன, இனியும் இவ்வாறே அமைய வேண்டும் எனச் சொல்லிவிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆளுங்கட்சியில் அடிமட்டத்தில் சில தவறுகள் நடைபெறாமல் இருந்தால் மேலும் சிலாக்கியமாக இருக்கும் என்று அவர்கள் இடித்துக் காட்டியிருப்பதைப் படிக்கும்போதும் கேட்கும்போதும்,

“இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்“

எனும் குறளின் கருத்து என்னைக் குத்திக்காட்டிக் கொண்டேயிருக்கிறது.

அப்படியென்ன அடிமட்டத்தில் தவறு நடக்கிறது? நானும் ஆயிரம் முறை என்னை நானே கேட்டுக்கொண்டேன். அந்தத் தவறு என்ன என்பதையும் அதனை எப்படித் தவிர்ப்பது என்பதையும் உன் போன்ற உடன்பிறப்புகள்தானே எனக்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.

திருத்தம் சொல்லுங்கள்! திருத்திக் கொள்ளப்படும் என்பதுதானே என் வாக்குறுதி!

நிர்வாகத்தில் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஊழலற்ற ஆட்சியைத் தரவேண்டு மென்று நான் உறுதியெடுத்துக் கொண்டிருப்பதும், அதுவே என் உயிர் என் உடலை விட்டுப் பிரியும் வரையிலும் நான் கொண்டுள்ள கொள்கையாக இருப்பதும் - உன்னைப் போன்ற என் உயிரினுமேலான உடன்பிறப்புகள் எனக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்புத் தருவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் என்பதை, தாயின்மேல் ஆணை - தந்தை மேல் ஆணை - தமிழ் மேல் ஆணை - தன்மானப் பெரியார் மேல் ஆணை - தமையனாம் அண்ணா மேல் ஆணையிட்டு நான் சூளுரைப்பதை உடன்பிறப்பே, உன்னால் உணர்ந்து கொள்ள முடியாதா - என்ன!

ஆயிரம் கோடி இரண்டாயிரம் கோடியெனக் கொள்ளையடித்துத் தமிழ்நாட்டையே வேட்டைக் காடாக்கிக் கொண்ட கூட்டம், இன்று நீ, நான் என்று ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்துக் கொண்டு காராக்கிரகத்தின் கம்பிகளை எண்ணும் காட்சியைத் தமிழ்ச் சமுதாயம், தன் தலையில் அடித்துக் கொண்டு பார்த்துக் கொண்டுதானிருக்கிறது.

இன்று எழுந்துள்ள இந்த நிலை - மக்களின் எழுச்சி அலை - எப்படிப்பட்ட ஆட்சி இருக்கக்கூடாது என்பதற்கான திட்டவட்ட எச்சரிக்கை!

என்னைச் சந்தித்த ஓர் உடன்பிறப்பைப் பார்த்துக் கேட்டேன்; எங்கே வந்தாய்? என்று! ஒரு துண்டுத்தாளை நீட்டினார். அந்தத் தாளில் ஒருவருக்கு வேறு ஊருக்கு மாறுதல்

வேண்டுவதற்கான முறையீடு! உறவினரா? என்று கேட்டேன். இல்லை என்றார்! நண்பரா? என்றேன். நாணிக்கோணி இல்லை என்றார்! பிறகென்ன என்றேன். நல்லவர் என்றார்! நான் விளக்கமளித்தேன்.

அ என்பவரை அந்த ஊருக்கு மாற்றும்போது ஏற்கனவே அந்த ஊரில் உள்ள ஆ என்பவர் இந்த ஊருக்கு மாற்றப்பட வேண்டுமல்லவா? அப்போது ஆ பாதிக்கப்படுவதற்காக யாராவது சிபாரிசு வந்தால் என்ன செய்வது? எனவே பணி மாறுதல்களை, இயல்பாக விட்டு விடுவதே நல்லது. இந்த விளக்கம் உனக்கு மட்டுமல்ல; துண்டுத் தாளுடன் வரும் எல்லோருக்கும் பொருந்தும்; எல்லாவற்றுக்கும் பொருந்தும். உண்மையிலே யாராவது தவறு செய்திருந்தால் - சுட்டிக்காட்டினால்; ஆதாரமிருந்தால், அவர்களை நடவடிக்கைக்கு ஆளாக்குவதில் தவறில்லை. தயக்கமும் இல்லை. இதை உணர்ந்து நடந்தால் ஊழலுக்கே இடமில்லை என்றேன்.

நான் உணர்த்தியதை அந்த உடன்பிறப்பு உணர்ந்து கொண்டதால் உவகையுடன் வணக்கம் தெரிவித்து விடைபெற்றுக் கொண்டார். சீலர் அவர் என்பதால் சிக்கல் இல்லை! சிலர் இருக்கிறார்கள் சினம் கொண்டே சீற்றமுடன் திரும்பிச் செல்வர்! என் செய்வது; தேர்தல் நேரத்தில் மக்களுக்கு நான் அளித்திருக்கும் வாக்குறுதி நேர்மையான நிர்வாகம் தருவோம் என்பதாகுமே; மக்களின் அந்த எதிர்பார்ப்பை, ஏமாற்றத்திற்கு உள்ளாக்கலாமா?

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது - திட்டங்களாக மட்டுமல்ல, சட்டங்களாக மட்டுமல்ல, அரசின் அரும்பணிகளாக மட்டுமல்ல, குற்றம் குறைகளற்ற ஓர் அரசைத் தருகிறோம் எனும் புகழை, குன்றின் மேலிட்ட விளக்காகவும் ஒளிவிடச் செய்வதற்காகவும் என்பதை மறந்துவிடலாகாதல்லவா!

ஆம், உடன்பிறப்பே! ஊழல் ஒரு துளியுமில்லாத ஆட்சி என்பது நூல் இழையாகவும் அந்த இழையில் நமது ஆட்சியின் சாதனைகள் மணி முத்துகளாகவும் திகழ்ந்தால்தான் கழகத்தின்

அழகிற்கு மேலும் அழகு! பெருமைக்கு மேலும் பெருமை!

அந்தப் பெருமையைப் பெருக்குவதற்கு என் பிரியமுள்ள உடன்பிறப்பே, நான் பெற்றுள்ள உறுதியை நீயும் பெற்றிடுவாய் என்ற நம்பிக்கை என் இதயத்தில் இமயமாக உயர்ந்து நிற்கிறது!

அந்த நம்பிக்கையுடன், நல்லோர் போன்ற - நாடு மகிழ - நமது பயணம், கல்லிலும் முள்ளிலும் காட்டாற்று வெள்ளத்திலும் தங்கு தடையின்றித் துணிவுடன் தொடரட்டும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(25-08-1996)

2358. கழக அணி வெற்றிக்குக் கைகோத்து நிற்போம்!

உடன்பிறப்பே,

தேர்தல் வாக்குறுதிகள் என்பவை, சில கட்சிகளுக்கு ஆட்சியைப் பிடித்தபிறகு புயல்காற்றில் அடித்துச் செல்லப்பட்டு எங்கேயோ ஒதுங்கிவிடும் சருகுகள்! தி.மு.கழகத்தைப் பொருத்தவரையிலோ சொன்னதைச் செய்வோம் - செய்வதைச் சொல்வோம் என்று சுருதி பேதமின்றிச் சுகமான இசையைச் சுமந்து வரும் தென்றல் தரும் இன்பம்!

தரை வரியை நீக்குவோம் என்று சொன்னோம்; பொறுப்பேற்றுக் கொண்டதும் கோப்பில் இட்ட முதல் கையெழுத்தே மனைவரி நீக்கப்படுகிறது என்ற ஆணைக்காகவே! மருத்துவமனையில் நோயாளிகளைப் பார்ப்பதற்கும் கட்டணம் விதித்திருந்தனர் கடந்த கால ஆட்சியில்; வந்ததும் வராததுமாக அந்தத் தலைவரியும் நீக்கப்பட்டுப் பார்வையாளர்களின் தலைவலி போக்கப்பட்டது.

மாவட்டங்களில், கோட்டங்களில், வட்டங்களில் உள்ள அதிகாரிகள் மக்களை நேரில் சந்தித்து மனுக்களைப் பெற்றுக் குறைகளைக் களையும் கழக அரசின் மனுநீதித் திட்டம், ஜெயலலிதாவின் ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டுவிட்டது - அதனை மீண்டும் உயிர்ப்பித்து உலவவிட்டோம்.

சிங்கிள் டெண்டர் முறை எனும் சூது வலையினால் சுருட்டல் வேலையில் இறங்கி, மக்களின் வரிப்பணத்தை வாரிக்கொண்டு கொழுத்துக்கிடந்த மலைமுழுங்கி மகாதேவன்களை மடக்கிப் போட்டு, மக்கள் பணம் மக்களுக்காக முறைப்படிச் செலவிடப்படுவதற்காகப் பொது டெண்டர் முறையை நடைமுறைப்படுத்திப் பெருங் கொள்ளைகளைத் தடுத்தோம்.

இந்தியாவில் தயாராகும் அந்நிய நாட்டு மது வகைக்கான கட்டணத்தில் ஆண்டுக்கு சுமார் எழுபது கோடி ரூபாய், தோட்டத்திற்குப் போய்க் கொண்டிருந்ததைக் கோட்டைக் கருவூலத்திற்கே திருப்பினோம். கிரானைட் கல்லில் கொள்ளை அடிப்பதற்கென்றே இயற்றிய விதிகளை மாற்றி அரசுக்குப் பல கோடி ஆதாயம் கிட்டுமாறு வகை செய்தோம்.

மாவட்டந்தோறும் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு அவர்களின் மேற்படிப்பை அரசே ஏற்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பட்டதாரிகள் இல்லாத குடும்ப மாணவர்களில் முதல் பத்து பேருக்கான தொழில்துறைக் கல்விச் செலவை அரசே ஏற்குமென ஆணையிடப்பட்டுள்ளது.

12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் வரையில் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் திட்டம் செயலாக்கப்படுகிறது. ஒருமுனைவரி விதிப்பு அமலாக்கம் செய்யப்பட்டும், வரிச் சீர்திருத்தம் செய்யப்பட்டும், வணிகப் பெருமக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறோம். பருப்பு, மஞ்சள், மிளகாய் போன்ற அத்தியாவசியப் பண்டங்களுக்கு அறவே வரி விலக்கு. மக்கள் நலப்பணியாளர், மகளிர் பணி, ஆசிரியர், புதிய காவலர் பணியென சுமார் நான்கு லட்சம் பேருக்கு இந்த நிதி ஆண்டில் வேலை வாய்ப்புக்கு லட்சக்கணக்கில் லஞ்சம் வாங்குவதற்காகக் கடந்த ஆட்சியாளர் வகுத்திருந்த ஊழல் வாய்க்கால்களையெல்லாம் மண்கொட்டி மூடி விட்டோம்.

தமிழ் ஆட்சிமொழித்துறைக்குத் தனி அமைச்சகமே உருவாக்கி, உரிய தொண்டாற்றி வருகிறோம். ஜெயா ஆட்சியில் மறுதளிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்வி, தொழிற்கல்வியில் உரிய வாய்ப்பு வழங்கினோம். கழக அரசின் கடந்த கால நல்வாழ்வுத் திட்டங்களுக்கும், நலிந்த கலைஞர்கள், சுதந்திரப் போராட்டக்காரர்கள், மொழிக்காவலர்கள், அர்ச்சகர்கள், உலமாக்கள், ஓதுவார்கள், கோயில் பூசாரிகள் எனப் பல பிரிவினருக்கும் ஊதியங்கள் உயர்த்தப்பட்டன. தொழில்வளம் பெருகித் தொடர்ந்து பணியாற்றுகிறோம். மின்சக்தி உற்பத்தியை முதலிடம் தந்து பெருக்க முனைந்துள்ளோம். தொழிலாளர், நெசவாளர், விவசாயிகள் துயரம் தணித்துள்ளோம்.

குடிநீர், சுகாதாரம், கல்விக்கூடம், சாலைவசதி போன்ற மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவும், அதற்கென அறிவிக்கப்படும் திட்டங்களின் முழுப்பயன், அனைத்து மக்களையும் சென்றடையவும் - அரசின் தலைமைச் செயலகமெனும் உச்சியிலிருந்து பொழியும் செலவுத் தொகையெனும் அருவிகள், மாவட்ட ஆட்சியர் வாயிலாக வாய்க்கால்களாக வகைப்படுத்தப்பட்டு, கடைக்கோடி பிரஜைக்கும் கண்டிப்பாகப் போய்ச்சேர்ந்திட கண்மாயாகவும் கடமையுணர்வுடனும் மடைகோலப்பட்டு; மாநகராட்சி மன்ற மேயர்கள், உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் என்ற ஆணிவேர்களும் சல்லிவேர்களும் உரத்தையும் நீரையும் சுமந்து சென்று பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் உள்ள பாமர மனிதனையும் - பட்டினத்தானையும் வளப்படுத்தியாக வேண்டும்.

அதற்காகத்தான் உடன்பிறப்பே, கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் உறுதியளித்திருந்தபடி உள்ளாட்சி மன்றத் தேர்தல்களையும், கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களையும் செப்டம்பர் மாதத்தில் நடத்துவோம் என்று கவர்னர் உரை வாயிலாகவும் நிதிநிலையறிக்கையிலும் திட்டவட்டமாக எடுத்துச் சொன்னோம்.

சொல்லாத நல்லவைகளைக் கூட செய்யும் நமக்கு, சொன்னதைச் செய்வதில் என்றைக்குமே சோம்பல் ஏற்பட்டதில்லை. இதோ உள்ளாட்சி மன்றத் தேர்தல் களம் அமைந்து விட்டது. ஆங்காங்கு மக்களின் தேவைகளை அக்கறையுடன் கவனித்துச் செயல்படுவதற்கு - ஒவ்வொரு சிறுசிறு பகுதியிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளின் பணி மலரப் போகிறது.

இந்தத் தேர்தலில் நமது கழக அணியில் உள்ள கட்சிகள், பெரும்பான்மையான இடங்களில் - ஆம்; மிகப் பெரும்பான்மையான இடங்களில் - வெற்றிக்கொடி நாட்ட இருக்கின்றன என்பதில் கடுகளவும் அய்யமில்லை!

இதற்கிடையே ஊரையடித்து உலையில் போட்டுக் கொண்டவர்கள் உத்தமி வேடம் போட்டுக் கொண்டு,

நாளைக்கொரு அறிக்கை விடுவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கையாக இருக்கிறது.

உடன்பிறவாச் சகோதரியை விட்டு ஒரு கணமும் பிரியேன் - தொண்டர்கள் எனக்குத் தூசு - நீங்கள் உங்கள் மனைவியை விட்டுப் பிரிய முடியுமா? அதுபோல என்னாலும் என் உயிர்த் தோழியை விட்டுப் பிரிய முடியாது என்று கூறி; ஒரு மாதம்கூட ஆகவில்லை; இப்போது பிரிந்து விட்டேன், பிரிந்து விட்டேன் என்று பிலாக்கணம் பாடுவது யாரை ஏமாற்ற? எவரைப் பித்தர்கள் எனக் கருதிக் கொண்டு? - என்பதைக் கூடவா மக்கள் நினைத்துப் பார்க்காமல் போய்விடுவார்கள்.

அந்த உயிர்த் தோழிக்குச் சொந்தத்தில் இருந்த ஒரு தொழில் - கேசட் விற்பனை மட்டுமே; அந்தத் தோழிக்குத் தமிழ்நாட்டில் மட்டும் தோட்டம் துரவுகள் என்றும் - நிலபுலங்கள் என்றும் - மாட மாளிகைகள் என்றும் அமெரிக்க டாலர்கள் லட்சக் கணக்கில் என்றும் - வந்தது எப்படி? எல்லாப் பணமும் ஊழல் மகாராணியின் பணமல்லவா? உயிர்த் தோழியின் பெயர் அதை மறைக்கும் கேடயமல்லவா?

இந்திரா குமாரி, சிக்குவதற்கு முன்பு அவரை ஏதுமறியாத ஏந்திழை என்றதும் இந்த மகாராணிதான்; இப்போது இந்திரகுமாரி ஊழல் மங்கைதான் என்று தனது ஊதுகுழல்களை விட்டு உண்ணாவிரதப் பந்தலில் பேசச் செய்வதும் இந்த மகாராணிதான்!

செல்வ கணபதி சிக்கும் வரையில் அவர் சீலர் - குணசீலர் - இது மகாராணி மக்கள்முன் வைத்த மதிப்பீடு - இன்று ராணியின் தர்பாரிலே செல்வகணபதி செல்லாக்காசு!

இப்படியே தொடர்கிறது இந்த மகா மகா ஊழல் புராணம்! இது மகாமகக் குளத்தில் தொடங்கி, இன்றும் தொடர்கிறது! பொய்க்கே ஓர் அளவில்லாத புண்யவதியைப் பார்க்க வேண்டுமா? வேறெங்கும் போக வேண்டியதில்லை!

வளர்ப்பு மகன் திருமணப் பத்திரிகை இன்னும் கசங்காமல் பல வீடுகளில் பளபளத்துக் கொண்டிருக்கும் போதே - வளர்ப்பு மகனைக் குதிரை பூட்டிய சாரட்டில் வைத்து, அன்புத் தோழிகள் இருவரும் அணிமணிகள் குலுங்கிட பவனி வந்த அந்த நூறுகோடி ரூபாய்த் திருமணக்காட்சியின் படங்களும், வீடியோக்களும், தொலைக்காட்சிகளும் இன்னமும் மறையாமல் மங்காமல்

இருக்கும் போதே – எனக்கு யாரும் வளர்ப்பு மகனே இல்லை என்று வாய் நீளம் காட்டுவதற்கு ஒரு தனித்திறமைதான் வேண்டும்.

இத்தனையும் பொறுத்துக் கொண்டு அவருக்குப் பின்னே அடங்கி ஒடுங்கி நடமாடும் பல்கலைக்கழகங்கள் நடுங்கிக் கிடக்கும் விந்தைதான் என்னே!

இந்த அம்மையார் போட்ட வழக்கு ஒன்று தன் தலைக்குமேல் கத்தியாகத் தொங்கிக் கொண்டிருக்கும் போதே பழி வாங்காதே பழி வாங்காதே! என் தலைவியைப் பழி வாங்காதே! என்று அறந்தாங்கிகள் அலறுகின்ற மர்மம்தான் என்ன!

உடன்பிறப்பே, மக்களை இன்னமும் மண் பதுமைகளாக எண்ணிக் கொண்டு, கொட்டி வைத்திருக்கும் கொள்ளைப் பணம் கொண்டு தொடர்ந்து அரசியல் நடத்திப் பார்க்கலாம் என்ற நப்பாசையில் நமது கழகத்தின் மீது நச்சுப்பல்லைப் பதிக்க நினைப்போர், தமது விஷம் தமது நரம்பு மண்டலம் முழுவதும் ஏறி தடுமாறி விழத்தான் போகிறார்கள்.

உன் தடந்தோளும் - உன் நெஞ்சில் எழுந்து நிற்கும் உறுதியெனும் வாளும் - பெரியார், அண்ணா எனும் இருவரின் தாளும் நமக்குத் துணையிருக்கும் வரையில் - வெற்றிகள் தொடரும்! வீண் எதிர்ப்புகள் தொலையும்!

கழக அணியின் வெற்றிக்குக் கடந்த தேர்தலில் கண்துஞ்சாது பாடுபட்ட கண்மணியே; அந்தப் பொதுத்தேர்தல் களத்தைத் தொடர்ந்து இன்று காணும் இந்தத் தேர்தல் களத்திலும் நமது அணியின் வெற்றிக்குக் கைகோத்து நிற்போம் வா!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(08-09-1996)

2359. அந்த முகவிலாசத்தை அடையாளம் காட்டு!

உடன்பிறப்பே,

ஓய்வு துளியுமில்லாத அளவுக்கு அரசுப் பணிகள் - கழகப் பணிகள் - பல்வேறு அரசியல் பிரச்சினைகள், இவற்றின் காரணமாகக் கடிதத வாயிலாக உன்னுடன் தொடர்புகொள்ளும் வாய்ப்புக்கு நேரமில்லாமலே போய்விட்டது. நேரில் உன்னை நித்த நித்தம் காணுகின்ற வாய்ப்பைப் பெற்றதில் கடிதம் எழுதிடல் தேவையில்லை என நான் கருதியதும் உண்டு. அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்திற்கு நீ எழுதும் கடிதங்களில் பெரும்பாலானவை, 'கடிதம் எழுதாமல் எமை வாட்டுவதேன்?' எனும் கேள்விக்கணைகளாகவே இருக்கின்றன. முரசொலி அலுவலகப் பக்கம் நான் போய்ப் பல திங்கள்கள் ஓடிவிட்டன எனினும், அங்கு வரும் கடிதங்களைக் கட்டாகக் கட்டி எனக்கு அனுப்புகின்றனர். அவற்றிலும் நூற்றுக்குத் தொண்ணூறு; மடல் வரையப் போகிறாயா இல்லையா? எனும் மன உளைச்சலைத் தாங்கிவரும் கடிதங்கள்தான். எனவே இனியும் உன் போன்றோர் விடும் சுடுகணைகளைத் தாங்கக்கூடிய வலிவு உன் மீது பாசங்கொண்ட இந்த நெஞ்சத்திற்கு இல்லையென்பதால் இன்று மீண்டும் தொடங்குகிறேன் கடிதம் எழுதிட!

தொடங்குவாய் சரிதான்; ஆனால், தொடராமல் விட்டு விடுவாய் என்று நீ சிணுங்கிக் கொண்டு செல்லமாகக் கோபித்துக் கொள்வது எனக்குத் தெரியாமல் இல்லை! எங்கிருந்தாலும் - எவ்வளவு தொலைவு தூரத்தில் இருந்தாலும் உன்னை அறிந்திடுபவன் நான் என்பதை நீயுந்தான் அறிவாயே!

என்னதான் ஓய்வற்ற பணி இருப்பினும் ஓய்வுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு இனி உனக்கு வாரம் ஒரு முறை அல்லது இருமுறை கண்டிப்பாகக் கடிதம் எழுதுவேன். என்ன உடன்பிறப்பே செய்வது; நான்தானே என் கைப்பட உனக்குக் கடிதம் எழுத

வேண்டியிருக்கிறது. யாரையோ எழுதச் சொல்லி அதில் ஒரு கையெழுத்தை மட்டும் போட்டு, உனக்கு நான் உண்மையாகவே எழுதிய கடிதம்போல் நாடகம் காட்டுவதென்றால் ஒரு நாளைக்கு ஒன்றென்ன, ஒன்பது கடிதங்கள் கூட எழுதுவேன்.

விடிய விடிய விழித்திருந்து அண்ணா அவர்கள் கடிதம் தீட்டி காஞ்சி இதழ்மூலம் அனுப்பியதைப் பக்கமிருந்து பார்த்தவர்களில் நானும் ஒருவனாயிற்றே! அதனால் அவர் தம்பியாகிய நான் அவரைப்போல் கண்ணயராது கைவலி கருதாது என் கைப்படவே உனக்கு எழுதினால்தானே எனக்கு மனநிறைவு! படிக்கின்ற உனக்கும் பூரிப்பு!

இந்த உணர்வுதானே உடன்பிறப்பே, உன்னையும் என்னையும் மானசீகமாக இணைத்து, மலையென வந்த எதிர்ப்புகளையும், துரோகங்களையும் முறியடித்துத் தமிழினம் நிமிர்ந்து நிற்கக் கூடிய அளவுக்குத் தியாகம் புரியும் தி.மு.கழகத்தை வலிவோடும் பொலிவோடும் வளர்த்து வருகிறது.

எத்தனையோ அவதூறுகள் - எத்தனையோ நச்சுப் பிரச்சாரங்கள் - எத்தனையோ சகதிகள் - எத்தனையோ அடக்குமுறைகள் - அத்தனையும் உன் வலிவால் வளர்ந்துள்ள இந்தக கழகத்தை, அண்ணா காலம் முதல் இன்று வரையில் அழித்திட முனைந்ததை நாடறியும். நல்லோர் அறிவர். அனைத்துக்கும் உச்சமாக இந்தியாவின் இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நம்மீது வீண் பழி சுமத்தி நாம் இருந்த இடம் புல் முளைத்துப் போகுமளவுக்குச் செய்ய வேண்டுமெனத் திட்டமிட்டுத் திக்கெட்டும் பொய்ப் பழி பரப்பினரே; அந்த அநியாயத்தையும் கொடுஞ்செயலையும் மறக்க முடியுமா? ஆனால் அனைத்தையும் வெற்றி கண்டு விலங்கில் சிக்குண்ட சிங்கம் வீறுகொண்டு விலங்கொடித்துக் காடதிரக் கர்ச்சனை செய்து பீடுநடை போட்டு வந்தது போல எழுந்து நின்றது கழகம். என்றென்றும் இவ்வாறே நிற்கும்.

உடன்பிறப்பே, கழகத்தின் ஆட்சி இன்று நடைபெறுகிறது. மாற்றாரும் போற்றுகின்ற நிலையில் நமது ஆட்சியின் மாட்சி ஒளிவிடுகிறது. இந்த ஒளி மங்கிடாமல் காத்திட - எங்கும் பரவி வெளிச்சம் தந்திட - மறைந்திருக்கும் இருள் கங்குகள் கூட விலகி ஓடிட - இன்னும் நாம் உழைத்திட வேண்டும்.

இன்னும் நாம் வலிமை பெற்றிட வேண்டும். கூடி வருகிறது நமது இயக்கத்தின் வலிமை என்பதைத் தலைமைக் கழகத்தில் குவிந்திருக்கும் உறுப்பினர் எண்ணிக்கைக் கணக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

இப்போது நமது கழக அமைப்பின் தேர்தல், கிளைகள் தொடங்கி தலைமைக் கழகம் வரையில் நடக்க இருக்கிறதல்லவா? அதற்கென முதற்கட்டமாக உறுப்பினர் சேர்த்தல் புதுப்பித்தல் பணி முடிவடைந்துள்ளது. கடந்த முறையைவிட இம்முறை பதினைந்து லட்சம் உறுப்பினர்கள் அதிகமெனப் பட்டியல் தெரிவிக்கின்றது. உறுப்பினர் கட்டணம் இரண்டு ரூபாய் வீதம் அனுப்பி வைக்கப்பட்டு, இப்போதுள்ள அறுபத்தி இரண்டு லட்சம் உறுப்பினர்க்காக வந்த கட்டணத் தொகை ஒரு கோடியே இருபத்தி நாலு லட்ச ரூபாய் வங்கிக் கணக்கில் கட்டப்பட்டுள்ளது. இன்னும் உறுப்பினர் படிவங்கள் வந்து கொண்டுமிருக்கின்றன. நமது தலைமைக் கழகத்தில் எல்லாக் கணக்கிற்கும் பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கைக் குழுவினர் தணிக்கையும் - மற்றும் தனியார் தணிக்கையும் (Internal Audit) தொடக்க கால முதலே உண்டு என்பதைத்தான் நீ அறிவாய்!

அண்மையில் கூடிய மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி மே 15 முதல் உறுப்பினர் அட்டைகள் வழங்கப்பட இருக்கிறது. பணச் செலவைக் கூடப் பார்க்காமல் எல்லாம் கறாராக இருக்க வேண்டுமென்பதற்காக எண்பது லட்ச ரூபாய்ச் செலவில் கணினி மூலம் (கம்ப்யூட்டர்) உறுப்பினர் அட்டைகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணி நடைபெறுவதைப் பார்ப்பதே எங்களுக்குத் தலைமைக் கழக அலுவலகத்தில் ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

நமது பொருளாளர் வீராசாமியுடன் தம்பி கோ.சி. மணி ஒருநாள் வந்து உறுப்பினர் அட்டைகள் கணினி மூலம் தயாராவது கண்டு ஆச்சரியத்தால் வாயைத் திறந்தவர் திறந்தவர்தான்!

மே திங்களில் உறுப்பினர்கள் அட்டை வழங்கத் தொடங்குவதைத் தொடர்ந்து ஜூன் 2-ஆம் நாள் சென்னையில் பொதுக்குழு நடைபெற இருக்கிறது. ஜூன் 30-ல் கிளைக் கழகத் தேர்தல்கள் ஆரம்பமாக இருக்கின்றன. இதற்கிடையே சேலத்தில்

ஜூன் 27, 28, 29 ஆகிய நாட்களில் கழகத்தின் சிறப்பு மாநாட்டுப் பேரணி, இளைஞர் அணி மாநாடு, கழக மாநாடு ஆகியவை, தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் செயல்திறன்மிக்க மேற்பார்வையில் நடைபெற இருக்கின்றன. சேலம், திராவிட இயக்கத்தின் சிறப்பான திருப்புமுனைக்குத் தொடக்க விழா நடத்திய இடமல்லவா!

அந்த சேலத்திற்குச் சென்று செம்மாந்து நின்று - அரிமா நோக்குடன் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து, இனி நடக்க வேண்டிய பயணத்திற்கு நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளப் போகிறோம்.

அங்கேதான் மூன்று நாட்கள் நமது அணி வகுப்பும் பாசறை முழக்கமும் நடைபெற இருக்கிறது - இப்போதே சொல்லிவைக்கிறேன் அந்தப் பயணத்திற்கு முன் கூட்டியே நீ ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டுமென்று!

இன்று ஏடுகளில் ஒரு செய்தி கண்டாயா உடன்பிறப்பே, அன்று நான் சொன்னேனே; நீ கூட நம்பிடத் தயங்கினாயே; அது இப்போது உண்மைதான் என்று உலகிற்குத் தெரிந்துவிட்டது பார்த்தாயா!

பொருள் மிகக் கொடுத்து; ஆம்; கோடி கோடியாகவே கொடுத்துக் கழகத்தைப் பிளக்க முனைந்து ஒரு சரிவை ஏற்படுத்தினாரே அந்த நாள் ஆண்ட அரண்மனை மகாராணி, அந்த ராணியின் சதிச் செயல் உண்மைதான் என்பதை அந்தக் கைப்பாவைகள் இன்றைக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஊருக்கும் உலகுக்கும் உணர்த்திவிட்ட வேடிக்கை என்ன சொல்வேன்!

அன்று நம்பிட மறுத்து என் சொல்லைப் புறக்கணித்த உடன்பிறப்புகள் இனியாவது தேர்ந்து தெளிந்து தாமிருக்க வேண்டிய தாயின் மடி எது என்பதையும், பேயின் மடிவிட்டு ஓடிவருதல் எப்படி என்பதையும் கண்டறிந்து கொள்வர் எனவும் கொள்ள வேண்டுமெனவும் அழைப்பு விடுக்கின்றேன், அன்றும் இன்றும் அவர்கட்கு அண்ணனாக இருந்தவன் - இருப்பவன் என்ற முறையில்!

நீயும் அந்த உடன்பிறப்புகளை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்து வரும் பணியில் ஈடுபடு!

எது உண்மையான திராவிட இயக்கம் - எது பெரியார் வழியில் நடைபோடும் இயக்கம் - எது அண்ணா வழியில் அயராது உழைக்கும் இயக்கம் - என்பதை எடுத்துச் சொல்!

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றிய விளக்கக் கூட்டங்களில் கலந்து உரையாற்றும் உன் போன்ற உடன்பிறப்புகள், நாட்டு மக்களின் நன்மையொன்றையே மனத்தில் வைத்து நேர்மையான நல்லாட்சி நடத்தும் கழகத்தையும் அதற்கு உறுதுணையாக இருக்கும் தோழமைக் கட்சிகளையும் மக்களுக்கு நாளும் நினைவூட்டு!

மக்கள் துரோகிகள் - கொள்ளைக் கூட்டத்தினர் - என அடையாளம் காட்டப்பட்டவர்களின் அரவணைப்புக்காக அவசரம் காட்டுபவர்களின் முக விலாசத்தையும் அந்த மக்களுக்கு அடையாளம் காட்டு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(09-04-1997)

2360. மஞ்சள் துண்டு, தெய்வீக மகத்துவத்திற்கா?

உடன்பிறப்பே,

சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எண்ணெய் தடவி உடம்பு வழித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று என் வலது கன்னத்தில் மாம்பிஞ்சு அளவுக்கு ஒரு வீக்கம் ஏற்பட்டு, அது கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகவும் தொடங்கியது. உடனே நரம்பியல் நிபுணர் டாக்டர் இராமமூர்த்தி அவர்களும், டாக்டர் கோபால் அவர்களும் என்னை சென்னை மலர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பல்வேறு சோதனைகளைச் செய்தனர். வலது கன்னத்தில் உமிழ் நீர் சுரப்பியுடன் இணைந்துள்ள மெல்லிய நரம்புக் குழாயில் சிறிய அளவு வெடிப்பு ஏற்பட்டு அதன் காரணமாக உமிழ்நீர்த் தேக்கம் ஏற்பட்டு அதனால் அந்த வீக்கம் என்று கண்டறியப்பட்டது. வலதுபுறம் வாய்க்குள் அறுவை சிகிச்சை செய்து அந்த மெல்லிய குழாயை ஒட்ட வைக்கலாமென முடிவெடுத்த டாக்டர்கள் என்னை ஆப்பரேஷன் தியேட்டருக்குள் இட்டுச் சென்றனர்.

அறுவை சிகிச்சைக்குத் தயாராக முன்னேற்பாடுகள் அனைத்தும் நடந்து முடிந்தபிறகு - மீண்டும் டாக்டர்கள் கலந்துபேசிக் கொண்டிருந்தனர். அந்த அறுவை சிகிச்சையினால் எதிர்விளைவுகள் எதுவும் ஏற்படுமோ என்ற அய்யப்பாட்டின் அடிப்படையில்தான் டாக்டர்களுக்கிடையே அந்த விவாதம் நடைபெற்றிருக்கிறது. டாக்டர்கள் வீக்கமும் சிறிது குறைந்து கொண்டு வந்திருக்கிறது. கடைசியாக ஒரு வழியாக அறுவை சிகிச்சை வேண்டாமென முடிவு செய்யப்பட்டு சில நாட்கள் சில மாத்திரைகள் மட்டும் நாள்தோறும் சாப்பிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அதற்குள் மலர் மருத்துவமனைக்கு ஏராளமான தொலைபேசிகள் - நண்பர்கள் - கழகக் கண்மணிகள்!

கழுத்துப் பகுதியும் முகம் உள்ளிட்ட தோள் பகுதியும் எப்போதும் கதகதப்பான வெம்மையுடன் இருக்க வேண்டுமென்றும் அதற்கு நான் வழக்கமாக அணியும் கைத்தறித் துண்டுக்குப் பதிலாகக் கம்பளிச் சால்வையும் கழுத்தின் மேல் பட்டுக் கொண்டிருக்கும்படியாக அணிவது நல்லது என்றும் டாக்டர் வலியுறுத்திக் கூறினார். அப்படிக் கம்பளிச் சால்வை அணிந்து கொண்டால் கழுத்து வலிக்காமல் இருப்பதற்கும் நல்ல பாதுகாப்பு என்றும் டாக்டர்கள் கூறினர். அவர்களின் அறிவுரை கேட்டு அப்போது நான் உடனடியாக அணிந்து கொண்டது மஞ்சள் நிற சால்வையாக இருந்தது. தொடர்ந்து இரண்டொரு நாள் மஞ்சள் சால்வையை என் கழுத்தை வளைத்துப் போட்டுக் கொண்டதைக் கண்ட என் வீட்டில் உள்ளவர்களும், நண்பர்களும் - இது நன்றாக இருக்கிறது - இதையே உங்களுக்குத் தனி அடையாளமாக இதே வண்ணத்தில் எப்போதும் அணிந்திடுங்கள் என்று அன்புக் கட்டளையிட்டனர்.

அடையாளமாகச் சிலர் தாடி வைத்துக் கொண்டிருப்பதைபோல - சிலர் தொப்பி அணிந்து கொண்டிருப்பதைப்போல - சிலர் கையில் பிரம்பு வைத்துக் கொண்டிருப்பதைப்போல - நமக்கும் இந்த மஞ்சள் சால்வை அடையாளமாக இருக்கட்டுமே என்று எண்ணினேன். தொடர்ந்து அணிந்து வருகிறேன். இந்தச் சால்வை சிலரது கேலிக்கும் கிண்டலுக்கும் உரியதாகியிருக்கிறது என்பதைக் கண்டும் கேட்டும் எனக்குச் சிரிப்பு மேலிடுகிறதே தவிர, சீற்றம் பிறக்கவில்லை.

பதவியில் நிலைக்க வேண்டுமென்பதற்காக - மீண்டும் மீண்டும் பதவி பெற வேண்டுமென்பதற்காக - ஏதோ பகுத்தறிவுக்கு ஒவ்வாத முறையில் மஞ்சள் துண்டு போட்டுக் கொண்டிருப்பதாகச் சிலர் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். வெறும் வெள்ளைத் துண்டு போட்டுக் கொண்டிருந்தபோதுதான் 1957 தேர்தலில் வென்றேன். 1962 தேர்தலில் வென்றேன். 1967 தேர்தலில் வென்று அண்ணாவின் அரசில் பொதுப்பணி அமைச்சராக ஆனேன். 1969ல் முதலமைச்சராக ஆன போதும் வெள்ளைத்துண்டுதான்! 1971ல் சட்டப் பேரவைக்கு 185 இடங்களில் கழகம் வென்று இரண்டாவது முறை முதலமைச்சரானபோதும் வெள்ளைத் துண்டுதான்! ஐந்தாண்டுக்கு ஒரு மாதம் குறைய அந்த ஆட்சிக் காலத்திலும் நான் அணிந்திருந்தது வெள்ளைத் துண்டுதான்!

1989ல் மூன்றாவது முறை முதல்வராகத் தேர்வு பெற்றபோதும் வெள்ளைத் துண்டுதான்! மூன்றாண்டுகளுக்கு முன்பு திடீரென ஏற்பட்ட கன்னத்து வீக்கம் காரணமாக நாலாவது முறை நான் முதலமைச்சராவதற்கு முன்புதான் என் கழுத்தையும் தோளையும் மஞ்சள் துண்டு வளைத்துக் கொண்டது!

இதைத் தவிர இந்த மஞ்சள் துண்டுக்கு வேறெந்த மௌடீகமான காரணமும் இல்லை என்பதை, குறை தேடி அலையும் குட்டை மனம் படைத்தோர் தவிர்த்து, அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் அனைவரும் அறிந்தே இருக்கின்றனர்.

என்னை எப்போதும் தாக்கிப் பேச வேண்டுமென்பதிலும் - அப்போதுதான் தனது தலைவியின் அருள்பாலிப்பு கிட்டுமென்பதிலும் அசையாத உறுதியும், நம்பிக்கையும் கொண்ட நாவலர் அவர்கள்கூட என்னை மஞ்சளாடை மடாதிபதி என்று வல்லம் பிரச்சினைக்காகத் தஞ்சையில் நடந்த கண்டனக் கூட்டத்திலும் - குறள் சிறப்புரை வெளியீட்டு விழா ஒன்றிலும் ஏகடியம் புரிந்துள்ளார்.

என் செய்வது; செவ்வாடையின் சிறப்பைச் சினிமாப் படம் வரையில் எடுத்துக்காட்டி நடிக்க தன் வீட்டு அம்மையாருக்கு அனுமதி வழங்கி, ஆசிர்வாதம் பெற்ற அவருக்கு, நான் எந்த மூட நம்பிக்கையின் அடையாளமாகவும் அல்லாமல், மஞ்சள் சால்வை அணிவது என்னை மடாதிபதியாக வர்ணிக்கத் தோன்றுகிறதே, அதுதான் வியப்பு!

தான் பேசியதையே - அந்தப் பேச்சு திராவிடர் கழகத்தின் அதிகாரபூர்வமான விடுதலை ஏட்டில் 11.3.1997 அன்று மூன்றாம் பக்கத்தில் அச்சாகி வெளிவந்ததையே - சுமார் ஒரு மாதகாலம் சும்மா இருந்துவிட்டு, நான் சட்டப்பேரவையில் 14.3.1997 அன்று படித்துக் காட்டிய பிறகு அந்தப் பேச்சையே திரித்துக் கூறுகிற அளவுக்கு நாவலருக்கு மனச்சாட்சி மரத்துப் போய்விட்டதையல்லவா இப்போது நாடு காண்கிறது! அ.தி.மு.க. ஆட்சியில் வல்லம் பகுதியிலே பெரியார் மணியம்மைக் கல்வி வளாகத்துக்குக் கொடுக்கப்பட்ட இடங்களை நான் பறித்துக்கொள்ள முயற்சிப்பதைப் போல ஒரு கற்பனையைச் செய்துகொண்டு கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் என்ற குறளை மேற்கோள் காட்டி,

> "இந்த மாதிரி பொறாமைப்படுகிறவன் சாப்பிட முடியாமல், வேட்டி கட்ட முடியாமல் செத்துப் போய்விடுவான் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்"

என்று தஞ்சைக் கூட்டத்திலே நாவலர் பேசிட அதைக் கேட்டு அந்தக் கூட்டத்தில் சிரிப்பும் கைதட்டலும் என்று விடுதலை ஏடு கூட மகிழ்ந்து செய்தி வெளியிட்டிருக்கிறது. இப்போது, அதே நாவலர் நேற்றுச் சென்னையில் பேசும்போது செத்துப் போய்விடுவான் என்று சொல்லவே இல்லை என்று சாதித்துள்ளார். சரி போகட்டும், அவர் தன் தவறை உணர்ந்து அப்படிப் பேசவில்லை என்று சமாளிப்பது எனக்கோர் ஆறுதலான செய்திதான்.

ஆனால் ஒன்று; வல்லம் கல்லூரி விவகாரம்தான் என்ன? நான் அதைப்பற்றி நிதிநிலை அறிக்கைக்கான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போதே 14.3.1997-ஆம் நாளன்றைக்கே தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியில் ஜானகி அம்மையாரும் செல்வி ஜெயலலிதாவும் பெரியார் மணியம்மை கல்லூரிக்காக தஞ்சாவூர் வல்லத்தில் தந்துள்ள இடத்தைப் பற்றி எந்தப் பிரச்சினையும் இல்லை. அந்த இடம் போக மீதமுள்ள புறம்போக்கு நிலத்தில் பெரியார் மணியம்மை கல்லூரி நிர்வாகம் அனுமதி பெறாமல் ஆக்ரமிப்பு செய்திருக்கிறது என்பதுதான் பிரச்சினை. அதுபற்றிக் கூட அந்த நிர்வாகத்தின் சார்பில் எனக்கோ, அரசுக்கோ எந்தவிதமான விண்ணப்பமும் தராமல் அந்த நிர்வாகத்தின் மூலம் திடீரென நீதிமன்ற இடைக்காலத் தடை பெறப்பட்டது. தடையாணை பெற்ற பிறகும் பொறுப்பில் உள்ள எனக்கோ அரசுக்கோ, ஒரு கால்துண்டு காகிதத்தில் அந்த நிர்வாகம் ஒரு தகவல் கூட அனுப்பவில்லை. எடுத்த எடுப்பிலேயே தங்களின் ஆக்ரமிப்பை நிலைப்படுத்திக்கொள்ள அவர்களே நீதிமன்றம் சென்றார்கள்! என்னையும் கழக அரசையும் கடுமையாகக் கண்டித்து எங்களைப் பெரியாரின் விரோதிகளாகச் சித்தரித்தார்கள்! களம்புகுவோம் என்று கர்ச்சனை செய்தார்கள்! நாவலரைப் போன்றவர்களைக் கூட அழைத்து நாராச நடையில் அவர்கள் செய்த அர்ச்சனைகளாக ஆனந்தமுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்! மார்ச் 14 அன்று நான் பேரவையில் வல்லம் பகுதி புறம்போக்கு நிலம் பற்றி விளக்கிய பிறகு கூட, என்னிடம் திராவிடர் கழகச் சார்பில் யாரும் கேட்கவில்லை என்று

எடுத்துச் சொன்ன பிறகும் கூட, மேடைகளிலும், ஏடுகளிலும், பேட்டிகளிலும் அன்னை மணியம்மைக்கும், அய்யா பெரியாருக்கும் நான் ஏதோ எதிரி என்பதுபோல சித்தரிக்கப்படுவதற்கு நேரத்தைச் செலவழித்தார்களே தவிர எந்த அரசுப் புறம்போக்கு நிலம் பற்றி எந்தவிதமான அணுகுமுறையும் இல்லை; முறையீட்டு விண்ணப்பமும் இல்லை என்பதுதான் ஆச்சரியத்திற்குரியது!

உடன்பிறப்பே, இந்தக் கடிதம், மஞ்சள் துண்டு நான் அணிவது ஏதோ தெய்வீக மகத்துவத்திற்காக அல்ல என்பதையும். கறுப்புத்துண்டும் கறுப்புச் சட்டையும் அணிவது என் தாய்க் கழகத்தினர் என்னைப் புரிந்தும் புரியாதவர்கள் போல வல்லம் பிரச்சினையில் என் மீது வீண்பழி சுமத்தியுள்ளனர் என்பதையும் விளக்குவதற்குப் பயன்பட்டிருக்குமேயானால் எனக்கு மகிழ்ச்சியே!

“அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று
அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்
எவர் சொன்ன சொல் ஆனாலும் அதனையுன்றன்
இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்”

அந்தக் காலத்து பகுத்தறிவு ஏட்டில் வெளிவந்த சாமி சிதம்பரனாரின் பாடல் இது என்பது என் நினைவு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(10-04-1997)

2361. விளைவு தெரியாத குழந்தையின் விளையாட்டு!

உடன்பிறப்பே,

டெல்லிக்கு வந்து நான் இத்தனை நாட்கள் இது வரையில் தங்கியதில்லை. உதகை, கொடைக்கானல் என்று தமிழ்நாட்டுக்குள்ளேயே மலைகளுக்குச் சென்று பத்து நாட்கள் என்று தங்கிப் பழக்கமில்லை. இளங்காற்றும் இனிய இயற்கைக் காட்சிகளும் உடலுக்கு ஆரோக்யம் தரும் சீதோஷ்ணமும் கொண்ட அந்த இடங்களிலேயே அதிக நாட்கள் தங்கிட வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளாத நான், இப்போது டெல்லியில் இதுவரை ஐந்து நாட்கள்; அதுவும் வெப்பம் மேலேறி வருகிற நாட்களில் தங்கிடவும், மேலும் சில நாட்கள் தங்க வேண்டிய நிலையிலும் உன்போன்ற உடன்பிறப்புகளைத் தினந்தோறும் காணுகிற இன்பமான சூழலை இழந்துவிட்டு இங்கே இருக்கிறேன். நமது நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காலையிலும் மாலையிலும் காண்பதிலே ஒரு நிம்மதி.

இடைப்பட்ட நேரத்தில் ஐக்கிய முன்னணியில் உள்ள கட்சிகளின் தலைவர்களையும், முன்னோடிகளையும் சந்தித்து விவாதிக்கிற பணி - ஆம்; ஏற்றுக் கொண்டுள்ள பணி!

ஒவ்வொரு நாளும் ஐக்கிய முன்னணிக் கட்சிகளின் தலைவர்கள் கூடிப் பேசுகிறோம் - இந்தியத் திருநாட்டின் எதிர்காலத்தை இருட்டாக்கி விடக்கூடிய அளவுக்கு வெடித்துவிட்ட பிரச்சினையை எவ்வாறு சரிசெய்வது என்பது பற்றிய விவாதம் விடிய விடியக்கூட நடைபெறுகிறது - புதிய விடியலைக் காண்பதற்காக!

தமிழ்நாட்டின் குரலை கழகச் சார்பில் நானும் தம்பி முரசொலி மாறனும் - தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பில் அன்பு நண்பர் மூப்பனார் அவர்களும், ப. சிதம்பரம் அவர்களும் ஒலித்துக் கொண்டிருக்கிறோம். இடையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி தமிழ் மாநில பொதுச் செயலாளர் நண்பர் நல்லகண்ணு அவர்களும் வந்து கலந்துரையாடிச் சென்றார்.

விளைவை அறியாத குழந்தை விளக்கை எடுத்து வீட்டுக்குள்ளேயிருக்கும் திரைச் சீலையின் மீது பிடித்துவிட்டதைப்போல - எப்படியோ டெல்லிப் பட்டினத்தில் ஒரு காரியம் நடைபெற்றுவிட்டது.

தீயைத் தடுக்கும் பணியிலும் - வீட்டைக் காப்பாற்றும் பணியிலும் பொறுப்பை உணர்ந்து ஈடுபடுபவர்களைப் போலத்தான் இங்குள்ள ஐக்கிய முன்னணிக் கட்சியினரும், வேறு சில கட்சியினரும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இங்கே நேரடியாகப் பணி முகாமிலே இருக்கிற எங்களுக்கே தெரியாத சில செய்திகளைத் தமிழ்நாட்டிலே உள்ள சில ஏடுகள் வெளியிடுவதைக் கண்டு வியப்புறுகிறேன்.

எனக்கும் மூப்பனார் அவர்களுக்கும் மனத்தாங்கலாம்! நான் பாரதீய ஜனதாவின் பக்கம் போகப் பார்க்கிறேனாம்! அதனால் மூப்பனாருக்கும் எனக்கும் தகராறாம்!

இப்படி மூட்டிவிட்டுப் பார்க்கிறார்கள், மூளவில்லையே பகையென்று ஏங்கித் தவிக்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்ன தெரியுமா உடன்பிறப்பே; நானும் மூப்பனாரும் டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் சந்தித்து உரையாடிய செய்தியும் அந்த ஏட்டில் வருகிறது. அதே ஏட்டில் இப்படிக் கலகமூட்டும் தகவலும் வெளி வருகிறது.

இந்தக் கடிதங்கூட, இன்றைக்குக்க் காலை 11 மணி முதல் நானும் மூப்பனாரும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவும், அசாம் முதல்வர் மகந்தாவும் டெல்லியில் தமிழ்நாடு இல்லத்தில் கலந்து பேசி, அவர்கள் பிற்பகல் ஒரு மணியளவில் விடைபெற்றுச் சென்ற பிறகுதான் உனக்கு எழுதுகிறேன்.

ஆனால், தமிழகத்திலும் சரி - இங்கும் சரி, செய்திகள் இப்படி ஜோடிக்கப்படுகின்றன.

இன்றைய டெல்லி தமிழ்நாடு இல்லச் சந்திப்பு எதற்காக என்றால்; இந்தியத் திருநாட்டில் உள்ள மாநிலக் கட்சிகளைக் கொண்ட கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதென்றும் - அந்த அமைப்பில் இடம்பெறும் கட்சிகளின் மூலம், மத்தியில் கூட்டாட்சித் தத்துவம் செயல்படுகிற அளவுக்கு உந்துதலை

ஏற்படுத்துவதென்று நாம் கொண்டுள்ள கருத்தை விரைவில் வடிவம் கொடுத்துச் செயல்படுத்த இருக்கிறோம்; அதற்காகத்தான்!

இதனையொட்டி இன்று ஏற்பட்டுள்ள இந்திய நெருக்கடிக்கு எப்படித் தீர்வு காண்பது என்பது குறித்தும் விரிவாகப் பேசினோம்.

இன்னும் இன்றிரவும், நாளையும் தொடர்ந்து பேச இருக்கிறோம் ஐக்கிய முன்னணியில் உள்ள எல்லாத் தலைவர்களும்!

உண்மை இவ்வாறிருக்க; வெள்ளம் கரையுடைக்காமல் தடுத்திட ஊர்மக்கள் மண்வெட்டியும் கூடையும் எடுத்துக் கொண்டு ஓடும்போது அவர்கள் மீது கல்வீசும் கொடுமை போல கண்டதையும் எழுதிக் காரியத்தைக் கெடுக்கப் பார்க்கிறார்கள் சிலர் என்கிறபோது, அவர்கள் நம்மை எதிர்க்கவில்லை - அதற்குப் பதிலாகத் தங்கள் காலடியிலேயே குழிபறித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் எண்ணிட வேண்டியுள்ளது.

மத்திய அரசு மட்டுமல்ல; மாநில அரசுகளும் ஆங்காங்கு வெளியிட்டுள்ள நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் மக்களுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை வகுத்து, அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய வேளையில் இப்படியொரு தடை திடீரென எதிர்ப்பட்டு விட்டதே என்று ஆதங்கம் கொள்ளாதவர் யாரும் இருக்க முடியாது. அந்த ஆதங்கம் தீர்ந்திடவும் - நாடு வாழ, நலிவு தீர ஆக்கப் பணிகள் மலர்ந்திடவும், இடையில் குறுக்கிட்ட இத்தடையை நீக்குகிற ஓயாத வேலையை நாம் மேற்கொண்டுள்ளோம்.

இப்பணி முடித்துவிட்டுத் திரும்பிட இன்னும் இரண்டொரு நாட்களாகக்கூடும். அதுவரையில் தமிழகத்தில் - குறிப்பாக சென்னையில் - சிறப்பாகப் பேரவையில் - வழக்கமாக அண்ணா அறிவாலயத்தில் நான் மேற்கொள்கிற பணிகள் ஒத்திவைக்கப்பட உள்ளனவே என உள்ளம் வெதும்புகின்றேன். உடன்பிறப்பாகிய நீ மட்டுமல்ல; இப்பணியில் தொடர்புடையோர் அனைவருமே இதற்காக என்னை மன்னித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவே இம்மடல் தீட்டியுள்ளேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(14-04-1997)

2362. மலம் மூடத்தான் மலர் பறித்தார் என்றால்!

உடன்பிறப்பே,

மைசூர் மகாராஜா நகைகள் கொடுத்தாரோ இல்லையோ; அவர் மாளிகையிலும் இல்லாத நகைகள் - வைர வைடூர்யங்களாக - நெக்லஸ்களாக - ஒட்டியாணங்களாக - மரகதப் பச்சைகளாக இந்த மகாராணியின் வீட்டில் இருந்தவை கண்டுபிடிக்கப்பட்டு இப்போது நீதிமன்றத்துப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மைசூர் மகாராஜாவுக்கு இருந்த மாளிகையைப் போல இந்த மகாராணியின் மாளிகையும் படு பளபளப்பு! பல கோடிச் செலவில் தரையும், சுவரும், குளியல் தொட்டியும் என்று வெகு மினுமினுப்பு!

இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட அறுபது லட்ச ரூபாய் மதிப்புள்ள பேருந்து வண்டியே ஒரு நடமாடும் சொர்க்கலோகம்! மொசாய்க் தளம் - இரண்டு ரஜாய் மெத்தை போட்ட கட்டில்கள்! சோபாக்கள் - குளியல் அறை - சமையல் அறை - சாப்பாட்டு மேசை - உள்ளிருந்தவாறே வெளியே நடப்பதைப் பார்க்க நவீனமானதும் நூதனமானதுமான கருவிகள் அமைப்பு - எல்லாம் ஒரு பேருந்துக்குள்ளேதான்! FIVE STAR ஓட்டலில் அல்ல!

சென்னையின் எல்லையிலிருந்து மாமல்லபுரம் போகும் சாலையிலும் - ஓரத்திலுமாக நாற்பது குட்டி அரண்மனைகள் - அந்த அரண்மனைகளைச் சுற்றி வளைத்துப் போடப்பட்ட அப்பாவி மக்களின் நிலபுலங்கள்!

சுமார் பத்து கோடி ரூபாய்க்கு உயிர்த்தோழியின் பெயரிலும் - தற்காலிக வளர்ப்பு மகன் பெயரிலும் - வாங்கப்பட்ட கொடை நாடு எஸ்டேட் என்று தேயிலைத் தோட்டம்! ஐநூறுக்கு மேற்பட்ட இடங்களில் சொத்துக்கள் - நிலங்களாக - தோட்டங்களாக - மைலாப்பூர் லஸ் பகுதியில் வாங்கப்பட்டது போன்ற பெரிய பங்களாக்களாக! இத்தனையும் போதாமல் அரசுக்குச்

சொந்தமான டான்சி நிலத்தை விதிமுறைகளுக்கு மாறாக, அடி மாட்டு விலைக்கு வாங்கிய கொள்ளையோ, கொள்ளை! ஒரு ரூபாய், சம்பளம் மாதம் தோறும் பெற்ற இந்த நேர்மையின் திரு உருவத்திற்கு (?) இத்தனை பெரிய மாளிகைகள் வந்தது எப்படி? இத்தனை தோட்டங்கள் எங்கிருந்து வந்தன?

வெளிநாட்டிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கான டாலர் வருகிறது - யார் அனுப்பியது என்று தெரியவில்லையாம்; அதனால் 'ஒன்றும் தெரியாத பாப்பா, போட்டுக் கொண்டாளாம் தாழ்ப்பாள்' என்பதுபோல - அந்தப் பணத்தை முதலமைச்சர் நிவாரணநிதியிலே சேர்க்க மனமில்லாமல், தன் பெயரிலேயே வங்கியில் போட்டுக் கொண்டாராம்!

கிராமப்புறத்து ஏழை மக்கள் பார்க்க வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குகிறேன் என்று கூறி; அதிலே பல கோடி வாயில் போட்டுக் கொண்டது இந்த மூலவிக்கிரகமும் அதற்கு அடுத்த உற்சவ விக்ரகமும்தான் என்பதை அதற்குள் நாடு மறந்து விடுமா என்ன? சுடுகாட்டையும் விட்டு வைக்காமல், அங்கேயும் சுரண்டிப் பங்கு போட்டுக் கொண்ட கூட்டம்!

இலவச வேட்டி சேலை - இலவசக் காலணிகள் இவற்றில் அடித்த கொள்ளையிலேதானே போயஸ் மாளிகையில் பத்தாயிரம் சேலைகள்! எழுநூறு ஜோடி காலணிகள்! ஐந்தாண்டுக் காலம் ஒரு கூட்டுச் சதியே நடத்தி லஞ்ச லாவண்ய நாடகத்தை அரங்கேற்றிக் களித்து - கடைசியாக உயிர்த் தோழியையும் அவர்தம் உற்றார் உறவினரையும் காட்டிக்கொடுத்து விட்ட நிகழ்ச்சி; கதையுமல்ல! கற்பனையுமல்ல! நடந்து விட்ட சோக வரலாறு அல்லவா?

இந்த வஞ்சக வரலாற்றுக் கதாநாயகியாக வேடம் தாங்கியுள்ளார்; இந்தப் பூனையும் அந்தப் பாலைக் குடிக்குமா? என்று கேட்ட வேடிக்கை போல - திடீரென ருத்ராட்சத்தை உருட்டிக்கொண்டு மந்திரம் ஜெபிக்கிற விந்தை மிகு சம்பவங்கள் இப்போது சிலரால் காட்சியாக்கப்பட்டு வருகின்றன.

ஏடுகளில் பார்த்தேன்; ஒரு தனியார் தொலைக்காட்சியில் பேட்டியாம்! இதோ புதிய அரிச்சந்தரி அவதரித்தார் என்று கூறுகிற அளவுக்கு உண்மைகளையெல்லாம் விழுங்கிவிட்டு, பொய்களையே உதிர்த்திருக்கிற திறமையே திறமை! வினாக்களும் விடைகளும் மிக நன்றாக ஒத்திகை பார்க்கப்பட்டு பேட்டி வடிவம் பெற்றிருக்கிறது என்பதைப் பேட்டியைப் பார்த்தவர்கள் அல்லது

ஏட்டில் படித்தவர்கள் மறுக்க முடியாது என்பது நூற்றுக்கு நூறு உண்மையான செய்தி!

இல்லாவிட்டால், அந்தப் பேட்டியில் நான் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதும், நாட்டு மக்கள் அறிந்துள்ளதுமான மகா பெரிய மயானக் கொள்ளைகளைப் பற்றியெல்லாம் ஏன் கேட்கப்படவில்லை? கேட்டிருந்தால் மகாராணிக்கு மயக்கம் வந்திருக்கும் என்றுதானே வசதியான கேள்விகளுடன் பேட்டி நிறுத்தப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, கேட்கப்பட்ட கேள்விகள் - சொல்லப்பட்ட பதில்கள் - இவற்றைப் பார்க்கும்போது, இந்தக் கேள்விகளைக் கேட்டிருந்தால் என்ன பதில் சொல்லியிருக்க முடியும் என்பதையும் நீயோ நானோ சிந்திக்காமல் இருந்திருக்க முடியுமா?

இதோ உதாரணமாக ஒரு கேள்வியும் பதிலும்!

கேட்கப்பட்ட கேள்வி :-

1982-ல் எம்.ஜி.ஆர். உங்களை அரசியலில் அறிமுகம் செய்தபோது, அ.தி.மு.க. பலவீனம் அடைந்து விடக்கூடாது என்பதற்காக நீங்கள் அழைக்கப்பட்டீர்கள் என்று கூடக் கூறினார்களே?

சொல்லப்பட்ட பதில் :-

கட்சி பலவீனப்பட்டு விட்டது என்று என்னை அழைத்தார் என்பது சரியல்ல - சுற்றி இருப்பவர்களிடம் அவருக்கு நம்பிக்கை குறைந்தது. எனவே, நூற்றுக்கு நூறு நம்பிக்கையான ஒருவர் அரசியலுக்கு வேண்டுமென்ற தேவையை உணர்ந்து என்னை அழைத்தார்.

உடன்பிறப்பே, உடனே அடுத்த கேள்வி என்ன கேட்டிருக்கப்பட வேண்டும்?

கேட்டிருக்க வேண்டிய கேள்வி :- உங்கள் மீது எம்.ஜி.ஆர். அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தபோது, அவர் உடல் நலிவுற்றிருந்த சமயம் நீங்கள் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில் உங்கள் வளர்ச்சி கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்று குறிப்பிட்டு, அப்படி நீங்கள் ஆங்கிலத்தில் எழுதிய கடிதம் எல்லா பத்திரிகைகளிலும் பிளாக் செய்து வெளிவந்ததே; அது ஏன்?

உங்களை நம்பிய எம்.ஜி.ஆர். பற்றி நீங்கள் இப்படி எழுதியது சரியா?

இந்தக் கேள்விக்கு என்ன பதில் கிடைத்திருக்கும்! நான் கடவுளின் குழந்தை! என்னிடம் இப்படியெல்லாம் சிக்கலான கேள்வி கேட்கக்கூடாது என்று பதில்தான் கிடைத்திருக்கும். பாவம் என் செய்வது; ஒத்திகை பார்த்து நடத்தப்பட்ட பேட்டியில் இந்தக் கேள்வியெல்லாம் கேட்க முடியுமா?

கேட்டிருக்க வேண்டிய இன்னொரு கேள்வி :-

வளர்ப்பு மகன் திருமணம் என்று கூறி ஊரை வளைத்துப் பந்தல் போட்டு, வாழை மரங்களை ஆயிரக்கணக்கில் கட்டி, நூறாண்டு காலத்தில் இப்படியொரு திருமணம் நடந்தேயில்லையென்று உங்கள் ஜெ.ஜெ. டி.வி.யிலேயே வர்ணித்துவிட்டு, பிரதமருக்கு, ஜனாதிபதிக்கு நேரில் சென்று கொடுத்த திருமண அழைப்பிதழில் வளர்ப்பு மகன் என்று குறிப்பிட்டுவிட்டு, இப்போது எனக்கு வளர்ப்பு மகனே கிடையாது என்று கூறிவிட்டீர்களே; இது முரண்பாடு இல்லையா?

கேட்டிருக்க வேண்டிய மற்றொரு கேள்வி :-

என் உயிர்த் தோழியைப் பிரிய மாட்டேன். நீங்கள் உங்கள் மனைவியைப் பிரிந்து வாழ்வீர்களா? என்று உங்கள் அமைச்சரவையிலே இருந்தவர்களைப் பார்த்து ஆத்திரமாகக் கேட்டீர்களே; இப்போது உயிர்த்தோழிக்கும் உங்களுக்கும் தொடர்பே இல்லை என்கிறீர்கள் - நீங்களும் உங்கள் உயிர்த்தோழியும் இணைந்து எடுத்துக் கொண்ட படங்களும் - இணைந்து நடத்திய ஊழல்களும் - இணைந்து வாங்கிய சொத்துக்களும் உங்கள் சுயரூபத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகிறதா இல்லையா?

இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்ல முடியும்? நான் மாற்றி மாற்றிப் பொய் சொன்னாலும் - நேற்று நான் சொன்னதை இன்றைக்கு நானே மறுத்து அறிக்கை விட்டாலும் நம்புவதற்குச் சில அப்பாவித் தொண்டர்கள் இருக்கிறார்கள். என்னை அண்டிக் கிடப்பதற்கு என் பணம் பெற்றுப் புதுக்கட்சி தொடங்கிய சில பேர் இன்று என் தோட்டத்து வாசல்படியில் தவம் கிடக்கிறார்கள். இன்னமும் பணம் கேட்டுக்கொண்டும், எப்படியாவது ஒரு பதவி வேண்டுமென்றும் மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால்

உமது கேள்விக்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை. தயவுசெய்து தயாரிக்கப்பட்ட வினாக்களை மட்டும் விடுப்பீராக! இல்லையேல் என்னை விடுப்பீராக!

என்றுதானே ஆவேசமான விடை அளிக்கப்பட்டிருக்கும்.

அதனால்தான் உடன்பிறப்பே, இப்படிப் பல கேள்விகள் பேட்டி எடுத்த தொலைகாட்சிப் பெட்டியின் சட்டைப் பைக்குள் தூங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் ஒன்று; அந்தக் கேள்விகள் அங்கே தூங்கலாம் - தமிழ்நாட்டு மக்களின் அரசியல் நினைவுகள் எனும் அம்பறாத் தூணிகளில் இருந்து அக்கினிக் கணைகளாக அந்தக் கேள்விகள் விழிப்புற்று வெளிப்பட்டுக் கொண்டுதானிருக்கும்.

"மலம் முடத்தான் மலர்பறித்தேன் என்றால்
குளிர் மலர்ச்சோலை கோவென்று அழாதா?"

என்று புரட்சிக் கவிஞர் ஒருமுறை உருக்கத்துடன் கேட்டார்! அப்படி மூடும் முயற்சியில்தான் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் மலர்களைப் பறித்திருக்கிறார்கள்!

என்னதான் மணமுள்ள மலர்களைப் பறித்து மூடினாலும் - எதை மூட நினைக்கிறார்களோ; அதன் நாற்றம் மூக்கைத் துளைக்காமல் விடாது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(17-04-1997)

2363. உன்னை எதிர்பார்க்கிறேன் சென்னைக்கு!

உடன்பிறப்பே,

அலை இசைக்கும் ஆழ் கடல்கள் ஆர்ப்பரித்து அலறத் தொடங்கினாலும் - அண்ட பகிரண்டம் உடைந்து சிதறி உருமாறிப் புரண்டு குலுங்கினாலும் - ஆடாமல் அசையாமல் நின்று, நிமிர்ந்த நோக்கு தாழாமல் நடை போட்டுக் கழகமெனும் இந்தக் கலத்தைச் சரியான பாதையில் நெஞ்சுரத்துடன் செலுத்திக் காட்டும் உன் வல்லமையை எத்தனையோ கால கட்டங்களில் கண்டு பூரித்துப் போயிருப்பவன் நான்.

அண்மையில் அந்த அற்புதக் காட்சியை ஆரூர் தொடங்கிக் குடந்தை நகர் வரையில் காண முடிந்தது - அடுத்து சேலத்தில் அந்த வடிவத்தைக் காண இருக்கிறேன். இதற்கிடையில் சென்னையிலும் காண்பேன்; மே தினத்தன்று!

எழுச்சியுற்ற இளைஞன்தான் ஏறு நடை சிங்கந்தான் கொழித்து விட்ட உமிகள்தான் இனிக் குள்ளநரிக் கூட்டத்தார் என்று முரசு கொட்டும் இளைஞர் அணிப்படை நம்மிடமுண்டு!

மலை குலையலாம். ஆனால் எம் மனம் குலையாது தலைவா; என்று மார்தட்டிப் போர்க்குரல் முழக்கும் மாணவமணிகளின் அணிவகுப்பு நம்மிடமுண்டு!

மானமொன்றே நல்வாழ்வெனக்கொண்டு வாழ்ந்த மரபின் மணிவிளக்குகளாம் மகளிர் அணியின் மாண்பு செழுமிய மகத்தான சேனையும் நம்மிடம் உண்டு.

இப்படிப் பலப்பல அணிகளினூடே உயிர் மூச்சை இந்த இயக்கத்திற்குத் தந்திட எந்த நேரமும் காத்துக்கிடக்கிற கழகத்தின் அரிய சொத்தாம் தொண்டர் அணியும் - தொகை தொகையாய்க் கூடி நின்று, தொலைவில் இல்லை நாங்கள், கழகத் தலைமையின்

கண்ணசைவு தெரியும் அளவுக்கான தூரத்தில்தான் இருக்கிறோம் - தொழிலாளர் துணைவன் தி.மு.க. என்று உறுதி கொண்டுதான் இயங்குகிறோம் என ஒலித்தவாறுள்ள பாட்டாளிகளின் பட்டாளமும் நம்மிடம் உண்டு.

அந்தப் பாட்டாளிகளின் படைவரிசையைப் பார்த்துச் சுவைக்கும் மேலான நாள்தான் மே திருநாள்!

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரில் மே தின விழாவை மேன்மையுடன் நடத்திக் காட்டும் நமது கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை, இந்த ஆண்டு அந்தத் தீர்த்தம் திருவிழாவைச் சென்னை மாநகரில் நடத்துகிறது.

தொழிலாளர் அணியின் செயலாளர் பேரூர் நடராசனும், தொ.மு.ச. பேரவையின் தலைவர் குப்புசாமியும், பொதுச் செயலாளர் பெருமாளும்; சென்னையில் மே விழா சீருற சிறப்புற நடைபெற வேண்டுமென்று சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கிறார்கள்.

மாநில முழுவதுமுள்ள தொ.மு.ச. சார்புடைய தொழிலாளர் பாசறைகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் சென்னை வர ஆயத்தம் செய்து கொண்டுள்ளனர் எனும் செய்தி அன்றாடம் ஏடுகளில் வந்து கொண்டிருக்கிறது.

இராணுவ வீரர்களைப் போல உடையணிந்து அதே மிடுக்குடன் கரங்களில் கம்பீரமாகக் கொடியேந்தி, உரிமை முழக்கமிடும் பதாகைகளை உயரப் பிடித்தவாறு மே தினப் பூங்காவிலிருந்து - புறப்பட்டுச் சென்னை மாநகர் வீதிகளில் தொழிலாளர் அணியினர் வீறு கொண்டெழுகின்ற பேரணியைக் காணவும் - அன்று மாலையில் கடற்கரையில் நடைபெறும் கடலையே வெற்றி கொள்ளும் பொதுக்கூட்டத்தைக் காணவும், கேட்கவும் நானே ஆவலுடன் துடித்துக் கொண்டிருக்கிறேன் என்றால் நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் எப்படி இருப்பீர்கள் என எனக்குத் தெரியாதா என்ன!

இடையறாது உழைத்திடும் நான், சற்று இளைப்பாறும் இடமாக இலக்கியவாதிகளைச் சந்திக்கும் மேடையைத் தேர்ந்தெடுத்து அங்குச் செல்கிறேன்.

ஆனால் சற்றுக் களைத்திருக்கும்போது என் சோர்வு நீக்கும் மாமருந்தாக நீதான் இருக்கிறாய்! உடன்பிறப்பே, உன் கண்ணின் கடைப்பார்வைதானே இருக்கிறது!

என்ன அண்ணே; உனக்கே களைப்பா? கவலையா? சோர்வா? என்று நீ கேட்பதற்குள் சொல்லி விடுகிறேன், ஓயாத அலைச்சலால் உடலுக்குத்தான் களைப்பும் அலுப்பும் தவிர, உள்ளத்திற்கு அல்ல!

ஓராயிரம் கணைகளைப் பாய்ந்து தழும்பேறிக் காய்த்துப் போன இந்த உள்ளத்திற்கு இனிமேல் வலி ஏற்படுத்த புதிய கணைகள் ஏவிட யாருளர்? இருப்பினும் அக்கணைகள் என் நெஞ்சில் தாக்கிய மாத்திரத்தில் முனை மழுங்கி விழுந்துவிடுகிற அளவுக்கு - கணை கூர்மையற்றது என்று சொல்ல மாட்டேன் - என் உள்ளம் மரத்துப் போய்விட்டது என்றுதான் குறிப்பிடுகிறேன்.

எனவே மார்ச் தொடங்கி ஏப்ரல் முடிய இரு திங்கள் சட்டப்பேரவைப்பணிகள். அதுவும் காலை 9 மணிக்குப் பேரவைக்குச் சென்றால் மதியம் இரண்டு மணியோ மூன்று மணியோ அது வரையில் அதே தொடர்பணிதான் - இடையில் டெல்லி மாநகரத்தில் பத்து நாட்கள்; பதற்றம் நிறைந்த நாட்கள். பட்டபாட்டிற்குப் பயன் கிடைக்காவிடினும் எனக்கு வீண் கெட்ட பெயர் ஏற்படக் காரணமாக இருந்த நாட்கள்.

இப்படித் தொய்வில்லாத பணிகள் தொடர்ந்து என்னை வளைத்துக் கொண்டதால் களைத்துப் போயிருக்கிற நான் சென்னையில் நீ நடத்தப் போகும் பீடுநடைப் பேரணியைத்தான் அன்று நடைபெறும் மே தினப் பொதுக் கூட்டத்தைத்தான் எனக்குப் புது ஆரோக்கியம் வழங்க இருக்கும் ஒளடதமாக எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அரசியல் வானில் எத்தனையோ கரு மேகங்களும், வெண் முகில்களும், மின்னல் கீற்றுகளும், வால் நட்சத்திரத் தோற்றங்களும் காணப்படும் இந்தக் காலகட்டத்தில், அயர்வை அச்சத்தால் போக்கி - இரத்தத்தை வியர்வைக் குளமாக்கி - வாடுகின்ற பாட்டாளி ஆடுகின்ற திருநாளாம் இந்த மே திருநாளில் தங்களின் தொழிலாளர் உரிமைக்கோரிக்கைகளுடன் அரசியல் பார்வையினையும் கூர்ந்து கவனித்துச் செயல்பட்டாக வேண்டும்.

அரசியல் இல்லையேல் அரசு இல்லை - அந்த அரசு, நல்லரசாக நாட்டப்பெறல் வேண்டும். நல்லவைகள் வாழ்ந்து வளர்ந்திடக் கூடாது என்பதிலே நயவஞ்சகம் கொண்டோர்க்கு நாட்டம் அதிகம்! அய்யோ இவர்களும் ஆளுகின்றார்களே என்ற வாட்டம் நிரம்ப!

இத்தகைய தீயசக்திகளுக்கிடையே - நச்சு நினைவினர்க்கு மத்தியிலே - நமது கழக அரசு எல்லா மக்களுக்குமான நற்பணிகளை நாளும் இயற்றி வருகிறது.

இந்த அரசுக்கும், அரசை நடத்துகிற கழகத்திற்கும் கேடயமாக - கவசமாக இருக்கின்ற லட்சக்கணக்கான உடன்பிறப்புகளில் தொ.மு.ச. பேரவையின் உறுப்பினர்களும் ஒன்றி இருக்கின்றார்கள்.

அவர்கள்தான் அணி வகுக்கப் போகிறார்கள்
மே தினத்தில்! சென்னையில்!

அந்த எழுச்சி காண நீயும் வந்திடுவாய்!
வருவாய் எனக்கு உற்சாகம் தருவாய்!

இந்த அவாவுடன் உன்னை
எதிர்பார்க்கிறேன் சென்னைக்கு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(30-04-1997)

2364. களை போக்கிக் கதிர் வளர்க்கும் கழனி காண்போம்!

உடன்பிறப்பே,

2A.6.3 Inauguration of the project

The Company incurred an expenditure of Rs. 43.14 lakhs by way of printing of invitation cards, souvenir, decoration, silver momentos, cultural programmes, etc., towards inauguration of the project as against the ceiling limit of Rs. 0.75 lakh fixed (September 1990) by the State Government for such function.

ஆங்கிலத்தில் உள்ள இந்த நாலு வரிகளும் கம்ப்ட் ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா கடந்த கால ஜெயலலிதா ஆட்சி பற்றிக் குறிப்பிட்டுள்ள வாசகங்களின் ஒரு பகுதியே ஆகும்.

அதாவது ஒரு திறப்புவிழா நிகழ்ச்சிக்கு எழுபத்தி ஐயாயிரம் ரூபாய்ச் செலவிட உச்சவரம்பு வைத்துத் திட்டமிட்டு, நாற்பத்தி மூன்று லட்சத்து பதினான்காயிரம் ரூபாய்ச் செலவழிக்கப்பட்டுள்ளது என்பதையே இந்திய மத்திய தணிக்கையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தத் திறப்பு விழாவுக்குத் தெரியுமா? எல்லாக் கலைஞர்களும், அரசியல் தலைவர்களும் திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். பெயரை வைக்க வேண்டுமென்றும், அவர் பெயரை வைப்பதுதான் பொருத்தமானதென்றும் கருத்துத் தெரிவித்து அறிக்கைகள் விட்டுக் கொண்டிருந்தபோது; அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு தன்னுடைய பெயரையே வைத்துக்கொண்டு அம்மையார் அவர்கள் ஜெயலலிதா திரைப்பட நகரம் என்று திறப்பு விழா செய்து கொண்டாரே; அந்த

விழாவுக்குத்தான் செலவு 75 ஆயிரம் எனத் திட்டமிட்டு 43 லட்ச ரூபாய்ச் செலவு செய்திருக்கிறார்கள்.

ஒருநாள் ஒரு மாலை நேரத்து விழாவுக்கே 43 லட்ச ரூபாய்ச் செலவிட்டுள்ளார் இந்த அம்மணி என்பதை நாமல்ல; மத்திய தணிக்கையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஜெயலலிதா நகரைத்தான், நமது ஆட்சி மலர்ந்தவுடன் 'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்' என்று மாற்றினோம் என்பதும் உனக்குத் தெரியும்.

இப்படி ஆடம்பரச் செலவு ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் உண்டு! உதாரணத்திற்குத்தான் இந்த ஒரு துளியை எடுத்துக்காட்டினேன்.

ஐந்தாண்டு காலம் தனது பாதுகாப்புக்கு மட்டும் அறுநூறு பேர் கொண்ட ஒரு படையை வைத்துக் கொண்டு, அதற்காக இருபது கோடி ரூபாய்ச் செலவழித்த மகாராணி ஆயிற்றே அவர்!

ஒவ்வொரு மாவட்டத்திலும் திட்டங்களை அறிவிப்பதாகச் சொல்லிக்கொண்டு, அறிவிக்கப்பட்ட திட்டங்கள் ஆண்டவன் சத்தியமாக அமலுக்கு வரப்போவதில்லை என்ற தைரியத்துடன் ஆடம்பர ஆர்ப்பாட்ட விழாக்களை லட்சோப லட்சம் ரூபாய்ச் செலவில் அவ்வப்போது நடத்திக் கொண்டவராயிற்றே!

அரைமணி நேரமோ ஒரு மணி நேரமோ அமர்ந்திடும் பொதுக்கூட்ட மேடை - அந்த மேடையிலே ஒரு கழிப்பிடம் - அந்தக் கழிப்பிடத்துக்கு மட்டும் ஆன செலவு பருகூர் நிகழ்ச்சியின்போது ஒன்றரை லட்சம் ரூபாய்.

கழிப்பிடம் - ஆம்; தற்காலிகக் கழிப்பிடம் - சில மணித் துளிகள் மட்டுமே பயன்படுத்தப்படும் பொதுக்கூட்ட மேடைக் கழிப்பிடம் - அதற்கே இப்படி லட்சக்கணக்கில் செலவு என்றால் மொத்த விழா நிகழ்ச்சிக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஐம்பது அல்லது அறுபது லட்சங்களைத் தாண்டிச் செலவு அந்த ஓர் ஊருக்கு மட்டும் என்பதை நான் தேர்தல் நேரத்திலேயே புள்ளி விவரங்களுடன் ஆதாரபூர்வமாகக் கூறியிருக்கிறேன். மறந்திருக்கமாட்டாய்.

எல்லாம் மக்களின் வரிப் பணம் என்கிறபோது எப்படித்தான் அந்தக் கொடுமைகளைச் சகித்துக் கொள்ள முடியும்?

இவையெல்லாம் ஒரு ரூபாய்ச் சம்பளம் வாங்குவதாகக் கூறிக்கொண்டவருக்காக நடைபெற்ற அரசின் ஒய்யார விழாக்கள்!

'ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம் உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்!' என்பது போல அந்த ஒய்யாரத்துக்குள்ளேதான் ஈரும் பேனும் என்பது போலக் கூட அல்ல; புழுவும் பூச்சியுமாய் புற்றீசல்போலக் கிளம்பியுள்ள ஊழல்கள்! இன்னமும் கிளம்பிக் கொண்டிருக்கிற ஊழல்கள்!

இந்த ஊழல்கள் எல்லாம் கட்டுக்கதை என்கிறார் உல்லாச புரியில் உலவிக் கொண்டிருந்த உலக மகா ஊழல் ராணி!

உடன்பிறவாச் சகோதரி அல்லது உயிர்த்தோழியுடன் - மற்றும் அவர்தம் உற்றாருடன் ஊரார் சொத்துகளைக் கொள்ளையடிப்பதென்றே சதித்திட்டம் வகுத்து, அதற்கேற்ப - மாமல்லபுரம் வரையிலே சுமார் நாற்பது மாளிகைகள் - ஒவ்வொன்றும் சுந்தர வளாகங்களாக! சொர்க்கபுரியின் நகல்களாக!

கொடைநாடு எஸ்டேட் என்ற தேயிலைத் தோட்டத்தைச் சுமார் பத்து கோடி ரூபாய்க்கு வாங்கியதாக ஒரு பம்மாத்து! விசாரித்தால் அது மேலும் பல கோடி!

இந்த அகிலம் புகழ் ஊழல்களுக்கெல்லாம் அச்சாரமாக - ஆரம்ப ஊழல் டான்சி நில ஊழல்!

அரசு நிலத்தை அமைச்சர்கள் வாங்கக்கூடாது எனும் விதிமுறையைக் காலில் போட்டு மிதித்துவிட்டு அரசு நிலத்தையே அடிமாட்டு விலைக்கு வாங்கிக் கொண்ட லஞ்ச லாவண்யச் சதி!

கொளுத்தும் வெயிலில் சாலையில் கால்வைக்க முடியாமல் துடித்துத் துவளுகிறது ஏழைகளின் வர்க்கம்!

இங்கோ ஏழுநூறு ஜோடி செருப்புக்களுடன் எக்காளமிடுகிறது எத்தர்களின் சொர்க்கம்!

ஒட்டுப் போட்டத் துணிகூட கட்டிக் கொள்ள இல்லையென்று கண்ணீர் வடிக்கிற தாய்க்குலம் ஒரு பக்கம் - பட்டுச்சேலை பல

வண்ணச் சேலையென பத்தாயிரக் கணக்கில் அடுக்கி வைத்து வேடிக்கை பார்க்கிற வேதாவிலாசம் இன்னொரு பக்கம்!

இவருக்குப் பொது நிகழ்ச்சிகளில் வழங்கப்பட்ட பரிசுகளை கட்சிக்கோ, அல்லது அரசுக்கோ அனுப்பி வைக்காமல் அனைத்தையும் தனக்கென்று வைத்துக் கொண்டார் என்று முன்னாள் அமைச்சர் நண்பர் ராஜாராம் அவர்கள் 1995ல் வழக்கொன்று தொடர்ந்தார். அதற்குப் பதில் அளித்து வாக்குமூலம் தந்த ஜெயலலிதா; தான் பெற்ற பரிசுப் பொருள்களில் சிலவற்றை அரசின் பொதுத்துறையில் ஒப்படைத்து விட்டதாகவும், மற்ற பரிசுப் பொருள்களைப் பரிசு தந்தவர்களுக்கே திருப்பி அனுப்பி விட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அந்த வாக்குமூலத்திற்கு முற்றிலும் மாறாக லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பரிசுப் பொருள்கள் சுந்தரவதனம் என்பவர் வீட்டிலிருந்து லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதே அது எப்படி? ஒருவேளை அந்தச் சுந்தரவதனம்தான் அந்தப் பரிசுகளை ஜெயலலிதாவுக்கு வழங்கியவரோ? அவரிடமே அம்மையார் திருப்பிக் கொடுத்துவிட்டதாக இப்போது சாதிக்கிறாரோ?

உடன்பிறப்பே, எத்தனை முரண்பாடுகள் பார்த்தாயா?

வெளிநாட்டிலிருந்து மூன்று லட்சம் டாலர் - நமது இந்திய மதிப்புக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள டிராப்ட் இந்த அம்மையாருக்கு வந்தது. அது யாரிடமிருந்து வந்தது? என்று அதிகாரிகள் கேட்கிறார்கள். யார் அனுப்பியது என்று தெரியாது என்கிறார். அந்த ஒரு கோடி ரூபாயை என்ன செய்தீர்கள்? இது அதிகாரியின் கேள்வி.

என் பெயரில் வங்கியில் போட்டுக் கொண்டேன் என்கிறார் ஊழலுக்கரசி!

ஊர் பேர் தெரியாத முகவரியில்லாத ஒருவர் ஒரு கோடி ரூபாய் உங்களுக்கு அனுப்பினால் அதை முதலமைச்சர் நிதியில் அரசாங்கக் கணக்கில் அல்லவா போட்டு வைக்க வேண்டும். உங்கள் பெயரில் போட்டுக் கொண்டது என்ன நியாயம்? என்ன நாணயம்?

இப்படி நாம் கேட்டோம் - நாடு கேட்டது; நாடாண்ட மகாராணிக்கு அதற்குப் பதில் அளிக்க நா அசையவில்லை!

இன்று தன்மீது கூறப்படும் குற்றங்கள் அனைத்தும் குப்பைகள் என்கிறார் - வேண்டுமென்றே சொல்லப்படும் பொய்யுரைகள் என்கிறார் -

சுடுகாட்டுக் கொட்டகைகளைக் கூட விட்டு வைக்காமல்; கொள்ளையடித்து வாயில் போட்டுக்கொண்ட கூட்டத்தைக் கூண்டிலேற்றுக! அந்தக் கூட்டம் அகப்படுத்திய சொத்துகளை மீட்டுத் தந்திடுக!

எனும் மக்களின் ஆணைக்குத் தலைவணங்கித்தான் கடந்த தேர்தலில் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளது. மக்களிடம் எடுத்துரைத்த வாக்குறுதியும் - அதனை நாம் நிறைவேற்றுவோம் என்று அந்த மக்கள் நம்பியிருந்த நிலையும்தான் இன்றைக்குச் செயல்படத் தொடங்கியுள்ளன.

வழக்கு விசாரணைகள் ஆரம்பமாக இருக்கின்றன. பட்டிக்காட்டுப் பாமரர் முதல் பட்டினத்துக்காரர்கள் வரையில் இப்போதே மூக்கு நுனியில் விரலை வைத்து ஆச்சரியத்தில் மூழ்கியுள்ளனர்; இப்படியும் ஒரு இமாலய ஊழலா என்று!

ஒருபுறம் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கட்டும் - நாம் நமது கழக அரசின் சார்பில் மக்கள் நலனை அடிப்படையாக வைத்துத் தீட்டியுள்ள திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தப்பட மேலும் மேலும் முனைந்து முன்னேறுவோம் - நாட்டு மக்களையும் முன்னேற்றுவோம்!

“சுவைரை வைத்துத்தான் சித்திரம்” என்பது பொன்மொழி!

கட்சியெனும் சுவர் இல்லையேல்; ஆட்சியெனும் சித்திரம் வரைய இயலாது!

இப்போது சுவரை வைத்துச் சித்திரம் வரைந்துள்ளோம்! மேலும் பல முற்போக்கு திட்டங்கள் - மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் எனும் சித்திரங்கள் வரைவோம்!

அதேநேரம் சுவர், சித்திரத்தைச் சிதைத்திடவும் கூடாது! ஆம்; நாம் அதற்கு இடந்தரக் கூடாது! சித்திரமும் சுவரின் சிறப்பை

சீர்குலைத்திடல் ஆகாது! அதற்கும் நாம் விழிப்புடனிருக்க வேண்டும்!

கட்சியின் சார்பில் ஆட்சி எனினும் கட்சி வேறு ஆட்சி வேறு!

இந்த வேறுபாட்டை உணர்ந்து, ஆட்சியில் கட்சியின் தலையீடு அணுவளவும் இன்றி அரசின் திட்டங்கள் நிறைவேற உழைப்போம்! உழைப்போம்!

அப்போதுதான் ஊழல்களை ஒழித்து நாம் நடத்தும் ஆட்சி; களைகளை எடுத்துவிட்டுக் கதிர் வளர்க்கும் கழனி போல வளங்குன்றாமல் வலிவுடன் வளரும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(06-05-1997)

2365. வெந்தபுண்ணில் வேல் எறியும் நிகழ்ச்சி வேண்டாம்!

உடன்பிறப்பே,

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு நான் தொடர்கதையாக எழுதி, பின்னர் புத்தகமாகவும், அதன் பிறகு திரைப்படமாகவும் வெளிவந்த ''ஒரே இரத்தம்'' எனும் சமுதாய மறுமலர்ச்சிச் சித்திரத்தில் மகேஸ்வரன் என்ற ஒரு கதாபாத்திரம், பின்வருமாறு பேச வைத்துள்ளேன்.

ஒரு புறம் தாழ்த்தப்பட்ட மக்கள்! மறுபுறம் பிற்படுத்தப்பட்ட மக்கள்! உங்களுக்குள்ளேயே அடித்துக் கொண்டும் வெட்டிக் கொண்டும் நீங்கள் பிறந்த இந்த மண்ணில் இரத்தத்தைத் தெளிக்கிறீர்களே; அதனால் பகையென்னும் பயிர்தான் விளையுமே தவிர - வேறென்ன நற்பயனைக் காணப்போகிறீர்கள்? இதோ நான், உங்களைவிட உயர்ந்த சாதிக்காரன்! ஒரு காலத்தில் உங்களை இப்படிப் பிரித்து வைப்பதில் சுவைகண்ட பெரிய சாதிக்கார வீட்டுப் பிள்ளை! மிகச் சிறுபான்மையோராகிய எங்களால் மிகப் பெரும்பான்மையான உங்களை எப்படிப் பிரித்து வைக்க முடிந்தது? உங்களுக்கு வீரம் உண்டு! வல்லமை உண்டு! அறிவு உண்டு! ஆற்றல் உண்டு அஞ்சாத் துணிவுமிக்கவர்கள்தான் நீங்கள்!

இதோ இந்தப் பக்கம் நிற்கிற தாழ்த்தப்பட்ட சகோதரர்களானாலும் - அதோ அந்தப் பக்கம் நிற்கிற பிற்படுத்தப்பட்ட சகோதரர்களானாலும் - எங்களைவிட எதிலும் குறைந்தவர்கள் அல்ல! உண்மையாகச் சொன்னால் எங்களைவிட உயர்ந்தவர்களேதான்

நீங்கள் எல்லாம்! ஆனாலும் ஒற்றுமை என்ற ஒரு குணம் இல்லாத காரணத்தால் உங்களை ஒருவரையொருவர் மோதவிட்டுக் கொண்டே எங்களைப் போன்ற பெரிய சாதிக்காரர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறோம்.

தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பகை உணர்ச்சி தேவைதானா?

கல்வியென்னும் பலகணி திறக்கப்பட்டு, அறிவு மணம் படவிடாத இந்தக் கிராமப் புறங்களில் மட்டுமல்ல; நவீன விஞ்ஞானக் கல்வி முறைகளும் நாகரிகமும் நடைபழகுகின்ற நகர்ப்புறங்களிலேகூட இத்தகைய சாதிக் கலவரங்களைத் தவிர்க்க முடியவில்லை. அறிவு ஒளியை ஏற்றி வைக்கின்ற கல்லூரிகளில் மாணவர்களுக்கிடையேகூட சாதிக் கலவரங்கள் தலைவிரித்தாடுகிற - அலங்கோலத்தை இன்னமும் காண முடிகிறது. அந்தக் கலவரங்களில் ஈடுபட்டு இரத்தம் சிந்துவோர் யார்? நாட்டில் சாதிகளைப் பிரித்து வைத்துத் தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொண்டதாகக் குற்றம்சாட்டப்படுகிற உயர்சாதிக்காரர்களா?

இல்லை! இல்லவே இல்லை! யார் தாழ்த்தப்பட்டுக் கிடக்கிறார்களோ - யார் ஒதுக்கப்பட்டு உழல்கிறார்களோ - யார் பிற்படுத்தப்பட்டு பள்ளத்தில் உருண்டு வீழ்ந்திருக்கிறார்களோ - அவர்கள்தான் ஒருவருக்கொருவர் ஆயுதம் தாங்கிக் கலவரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாலு வேங்கைகள் சேர்ந்து நாற்பதாயிரம் மான்கள் கொண்ட கூட்டத்தை ஒற்றுமையில்லாக் கூட்டமாக ஆக்கிவிட்டன. இப்போது மான்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன. வேங்கைகள் வேடிக்கை பார்க்கின்றன. மானும் புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று அந்தக் காலத்தில் ஆட்சிச் சிறப்புக்கு எடுத்துக்காட்டினை எழுதிக்காட்டுவார்கள்! இப்போது மானும் புலியும்கூட வேண்டாம்; மானும் மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா?

பல ஆண்டுகளுக்கு முன் என்னைப் போன்றோர் உள்ளத்தில் எழுந்த இந்த வேதனை நிறைந்த கேள்வி இன்றைக்கும் எழும்பிட வேண்டிய சூழ்நிலையில்தானே நாடு இருக்கிறது என்பதை எண்ணிடும்போது வெந்த புண்ணாகிறது நெஞ்சம்!

வெந்த புண்ணில் வேல் எறிவதுபோல் சில நிகழ்ச்சிகள்! அந்தப் புண்ணுக்கு மருந்திட்டு ஆற்றுவதுபோல தம்பி வை. பாலசுந்தரத்தின் அறிக்கை அமைந்துள்ள போதிலும், மனத்தில் மண்டிக்கிடக்கும் சிலவற்றை உனக்கு எழுதும் கடிதம் வாயிலாக விளக்க வேண்டியதுத்தான் இருக்கிறது.

காந்தியடிகளார் சிலை, பெரியார் சிலை, அண்ணா சிலை, காமராஜர் சிலை போன்ற தலைவர்களின் சிலை அமைக்கப்பட்டு, அந்தச் சிலைகளுக்கு யாராவது எதிர்ப்பு தெரிவித்தாலோ - அல்லது அந்தச் சிலைகளில் ஏதாவது ஊனம் விளைவித்தாலோ அது அரசியல் கட்சிகள் அளவிலான மோதலாக உருவாகி, அந்த மோதலும் நீர்க் குமிழிபோல் விரைவில் முடிந்துவிடுவதைக் காணமுடிகிறது.

ஆனால், அரசியல் மேதை அண்ணல் அம்பேத்கர் சிலையோ, தேவர் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கனார் சிலையோ அமைக்கப்படும்பொழுது இந்த மாநிலத்தில் சில பகுதிகளில் கருத்து வேறுபாடு, ஜாதிப் போர்வையைப் போர்த்திக்கொண்டு மிக மும்முரமாகப் போராட்ட முரசு கொட்டிக் கிளம்பி விடுகிறது. ஆம்; வெட்டு - குத்து - கொலை - கொள்ளை - வைக்கோல் போர் எரிப்பு - வீடு வாசல் தீக்கிரை - அரசின் பொதுத்துறைச் சொத்துக்களுக்குச் சேதம் - சூறை என்கிற அளவுக்குச் சகட்டுமேனிக்குச் சட்டமீறல் நிகழ்ச்சிகள், வன்முறைச் சம்பவங்கள் தலைவிரித்தாடத் தொடங்கிவிடுகின்றன.

கடந்த காலத்தில் கீழவெண்மணிகளும், முதுகுளத்தூர்களும் நடைபெற்றன அவை, கனவாய்ப் பழங்கதையாய்ப் போய் விடட்டும் என்று நினைத்தால்; அதற்கு மாறாக இப்போதும் சமுதாயத்தில் பகை வளர்த்து அந்த நெருப்பில் குளிர் காய எண்ணிடுவோர் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கண்டமனூர் ஒரு கிராமம் - வைகை வீரன் அழகுமுத்துக்கோன் மாவட்டத்தில் தேனிப் பகுதியில் உள்ள ஊர் - அங்கே

தங்களுக்குரிய பட்டா நிலத்தில் தேவர் சிலையை அமைத்துக் கொண்டனர் தேவர் மீது பற்றும் பாசமும் கொண்டோர். அதற்கு எதிர்ப்பு - சிலையின் கைகள் உடைக்கப்பட்டன; எனவே சிறு பொறி கிளம்பிற்று! அது பெருந்தீயாக மாறி விடாமல் அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டது! அமைதி திரும்பி இயல்பான நிலைக்கு அந்தப் பகுதி திரும்பியது.

இதற்கிடையே சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் வேண்டுமென்று ஒரு கோரிக்கை! பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டையைப் புதிதாக நமது அரசு அமைத்து விழா நடத்தியபோதே சுந்தரலிங்கம் பெயரால் ஒரு தோரண வாயிலையும் அமைத்தோம். நான் எழுதிய பாயும் புலி பண்டாரக வன்னியன் எனும் புதினமே சுந்தரலிங்கத்தின் தீரச் செயலைத்தான் முதல் அத்தியாயமாகக் கொண்டு ஆரம்பமாகிறது. அதனால் எனக்குச் சுந்தரலிங்கத்தின் நினைவு, யாரும் தூண்டாமலே வரக்கூடிய ஒன்றுதான். அதனால் தேவேந்திர சங்கம், சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகக் கோரிக்கை எழுப்பியதைப் புறக்கணிக்காமல் - அலட்சியப்படுத்தாமல் உடனடியாக மே முதல்நாள் அந்தப் பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்கிடச் செய்தேன். அதற்கு ஒரு சாரார் எதிர்ப்பு - அந்த எதிர்ப்பை அந்தப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மீது கற்களால் - சாலை மறியல்களால் காட்டிக் கொண்டனர். அரசு எடுத்த நடவடிக்கையால் அந்த எதிர்ப்பும் நிறுத்தப்பட்டது.

இதற்கிடையே மீண்டும் கண்டமனூரில் கலவரம் விளையக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது சிலரால்! அந்த முயற்சி தடுக்கப்பட்டிராவிடில் ஒரு பெரிய சாதிக்கலவரத்தையும் இரத்தக் களரியையும் அந்தப் பகுதி மக்கள் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்! அதைத் தடுப்பதற்காக அரசு, காவல்துறை மூலம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் சாதிக் கலவரம் தவிர்க்கப்பட்டு, ஒரு சில வன்முறைச் சம்பவங்கள், பஸ் மறியல், பஸ் எரிப்பு, ரயில் மறியல் ரயில் பயணிகள் பஸ் பயணிகளுக்குத் தாக்குதல் என்ற அளவில் முடிந்துள்ளது.

இது தேவைதானா என்பதைப் பொறுப்புள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

புலியும் மானும் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று புகழ்வது பழைய கால முறை!

மானும் மானும் கூட ஒரே துறையில் தண்ணீர் குடிக்க முடியாமல் - மண்டைகள் உருளும் காலமாக இந்தக் காலம் இருக்கிறதே; இந்தச் சமுதாயத் தீங்கினை அனைவரும் ஓரணியில் நின்று அகற்றிட முன் வரவேண்டாமா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

(07-05-1997)

2366. ஓராண்டு கால ஒப்பற்ற சாதனைகள் பாராய்!

உடன்பிறப்பே,

மக்களின் தீர்ப்பைப் பெற்று தோழமைக் கட்சிகளின் துணையுடன் கழகம் ஆட்சிக்கு மீண்டும் வந்து 13ஆம் தேதியுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

இந்த ஓராண்டில் கழக ஆட்சியின் சாதனைகளை முழுமையாகவும், விரிவாகவும் எடுத்துச் சொல்ல இந்தக் கடிதம் போதாது - பல கடிதங்கள் தொடர்ந்து எழுதிட வேண்டும். இருப்பினும் என் நினைவாற்றல் கொண்டு சிலவற்றை மட்டும் உனக்கும் உன் போன்ற என் உடன்பிறப்புக்களுக்கும் கோடிட்டுக் காட்டும் கடமையை இக்கடித வாயிலாக நிறைவேற்ற முனைகிறேன்.

* மாநகராட்சிகள், நகராட்சிகள், ஒன்றியங்கள், ஊராட்சிகள் அனைத்தும் பல ஆண்டுக் காலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிகாரிகளின் பொறுப்பில் இருந்த நிலையை மாற்றி உடனடியாக உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தி - அந்த மன்றங்களில் மகளிருக்கு 33 சதவிகித ஒதுக்கீட்டையும் வழங்கி - குறிப்பாக திருச்சி, திருநெல்வேலி மாநகராட்சிகளில் மேயர்களாக இரு மகளிர் - அதிலும் ஒருவர் ஆதிதிராவிடர் பெண்மணி என ஜனநாயகமும் - சமத்துவமும் ஒளிவிடச் செய்துள்ளது இந்த ஓராண்டில் கழக ஆட்சி.

* இடைநிலை ஆசிரியர்கள் தேர்வு முறையில் ஜெயலலிதா ஆட்சியில் நடைபெற்ற லஞ்ச லாவண்யத்தை அடியோடு ஒழித்து, வேலை வாய்ப்பு அலுவலக முன்னுரிமை அடிப்படையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்களைத் தேர்வு செய்து பதவியில் அமர்த்தியது கழக ஆட்சி!

* கூட்டுறவு நிறுவனங்களில் பல ஆண்டுக் காலமாகத் தேர்தல் நடைபெறாமல் இருந்து, 1989-1990 கழக ஆட்சியில் நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தல் மூலம் அமைந்த சங்கங்களையும் கலைத்துவிட்ட கடந்த ஆட்சியின் ஜனநாயக விரோதச் செயலுக்கு மாறாகக் கூட்டுறவுத் தேர்தலை நடத்தி முடித்ததும் இன்றைய கழக ஆட்சியில்தான்.

* முன்பிருந்த ஆட்சியில் பல்வேறு துறைகளிலே பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் போது - விதிகளுக்கு முரணாக ஒரே வேலைக்கு ஒரேயொரு ஒப்பந்தப்புள்ளி வழங்கி வந்த நிலையினை மாற்றி - திறந்த வெளி ஒப்பந்தப் புள்ளிகள் மூலமே பணிகளை நிறைவேற்ற ஆணை பிறப்பித்து அவ்வாறே பணிகள் நடைபெற்று வருவது நமது கழக ஆட்சில்தான்.

* ஒளிவு மறைவற்ற நிர்வாகத்தை வழங்க வேண்டுமென்பதற்காகப் பொது மக்கள், அரசு நிர்வாகம் குறித்துத் தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற வேண்டுமென்பதற்காகத் தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஒன்று கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ளதும் கழக ஆட்சியில்தான்.

* உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலாக நிதி அளித்திட மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து;

1. மொத்த கேளிக்கை வரியில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 60 சதவிகிதம் முதல் 70 சதவிகிதம் வரையிலான பங்கீட்டை, 1997-98 ஆம் ஆண்டு முதல் 90 சதவிகிதம் என உயர்த்தி அளிப்பதும்,

2. நமது மாநிலத்தில் முதல் தடவையாக - கேளிக்கை வரி நீங்கலாக அனைத்து வரி வருவாயில் 8 சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவதும்,

3. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய்க் கணக்கில் இந்த ஆண்டு அளிக்கும் மானியம் ரூ. 646 கோடியிலிருந்து 1997-98இல் 1174 கோடியாக அதிகரித்துள்ளதும்,

இந்த ஓராண்டு காலத்தில்தான்! ஆம்; நமது கழக ஆட்சியில்தான்.

* குடிநீர் வசதியே இல்லாத 154 குடியிருப்புகளுக்கு மார்ச் 1997க்குள் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்து அந்தப் பணி நிறைவேற்றப்பட்டதும் கழக அரசில்தான்.

* ஐந்தாண்டு திட்டக் கால இறுதிக்குள் - தமிழகத்திலுள்ள அனைத்து ஊரக குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்து - பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற வசதி பெறாத கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்குவோமென அறிவித்து, இதற்காக 1997-98இல் 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது கழக அரசு.

* ஆட்சிப் பொறுப்பேற்றதும் - ஆந்திர அரசுடன் அடிக்கடி தொடர்புகொண்டு கிருஷ்ணா நீர் சென்னை வருவதற்கான வழிவகை கண்டதும், பெருமழை காரணமாக இதில் சற்றுச் சுணக்கம் ஏற்பட்டபோதிலும் - வரும் ஜூலை திங்களுக்கு முன்பே இந்தப் பிரச்சினை தீர்ந்து கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரத் தொடங்கிட வழி வகுத்துள்ளதும் கழக ஆட்சிதான்.

* ஊரகப் பகுதிகளில் 2770 மின் விசை நீரேற்றுத் திட்டங்களை நிலை உயர்த்துவதற்கு - 1996-97இல் முப்பது கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பணி முற்றுப் பெற்றதும் கழக ஆட்சியில்தான்.

* 5 தனியார் நிறுவனங்களுடன் - 2,280 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய - ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது கழக ஆட்சியில். இவற்றில் சென்னை பேசின் பிரிட்ஜில் திட்டப்பணி தொடங்கப்பட்டு விட்டது.

* 1,250 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 11 மின் திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டுள்ளது. மேலும் 9 திட்டங்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

* காற்றாலைகள் மூலம் 118 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* கோயில்களப்பால், பெருங்குளம் ஆகிய இடங்களில் 30 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு மின் உற்பத்தித் திட்டங்களையும் - சென்னை பேசின் பிரிட்ஜ் எரிவாயு மின் உற்பத்தித் திட்டத்தின் உற்பத்தித் திறனை 120 மெகாவாட்டிலிருந்து 180 மெகாவாட்டாக உயர்த்தும் பணியினையும் மின்வாரியம் மேற்கொண்டுள்ளது.

* இந்த ஆண்டு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் புதிதாக 76,000 கம்பங்கள் நட்டு புதிய மின் விளக்குகள் பொருத்தப்படும்.

* ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வொரு ஆண்டும் - ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து - அதனை அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கிராமமாக மாதிரி கிராமமாக அமைத்திட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட முனைந்துள்ளது கழக அரசு.

* திடீரென அ.தி.மு.க. ஆட்சியில் வீட்டுக்கு அனுப்பப்பட்ட முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்ததோடல்லாமல், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமும் 1989-90ல் கழக அரசின் பரிசீலனையிலே இருந்தது. ஆனால் அதைச் செயல்படுத்துவதற்குமுன் ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. அந்த ஆணையின் மீது ஜெயலலிதா அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிமன்ற அவமதிப்பு வழக்கை கிராம அதிகாரிகள் தொடுத்தார்கள். ஜெயா அரசு அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடத்தியது. ஆனால் கழக அரசு அந்த வழக்கைத் திரும்பப் பெற்று 5.12.1986 தேதியிலிருந்து அவர்களுக்கு 175 ரூபாய் மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியமும், அந்த அலுவலர்கள் இறந்திருந்தால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு மாதம் 100 ரூபாய் வீதமும் வழங்கிட 23.8.1996 அன்று ஆணை பிறப்பித்தது. இதன்மூலம் ஒவ்வொரு அலுவலருக்கும் சுமார் 23,000 ரூபாய் மொத்தமாகக் கிடைக்கும். இதன்மூலம் 15,000 முன்னாள் கிராம அதிகாரிகள் பயன் அடைவார்கள்.

அக்கவுண்டண்ட் - ஜெனரல் அலுவலகத்திலே இதற்குத் தேவையான ஆணை பிறப்பிப்பதிலே ஏற்பட்டுள்ள காலத்தாழ்வு காரணமாக, அந்த அலுவலர்கள் இந்தத் தொகையைப் பெறுவதிலே காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும் ஒருசிலர் இதற்காக மனு செய்து கொள்ளாமலே இருப்பதால், அதற்காகவும் ஏடுகள் வாயிலாக இந்த அரசு விளம்பரம் செய்திருக்கின்றது. இப்படி முன்னாள் கிராம அதிகாரிகளுக்காக அக்கறை கொண்டு ஆவன செய்வதும் கழக ஆட்சிதான்.

* மாநில அளவிலே - பட்டதாரிகள் யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த - முதல் மதிப்பெண் பெறும் பத்து மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தொழிற்கல்வி படிக்க ஆகும் செலவை அரசே ஏற்றுக் கொள்ளும் என அறிவித்து அதை நடைமுறைப்படுத்துவது கழக அரசு.

* திருநெல்வேலியில் புதிய சட்டக் கல்லூரி.

* சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்.

* சேலத்திலே தந்தை பெரியார் பெயரிலே பல்கலைக்கழகம்.

* திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதன் மருத்துவக் கல்லூரி.

* ஐந்தாம் வகுப்பு வரையிலும் - மாணவர்களுக்கு முதல் பாகமாக (பார்ட் 1) தமிழ் கட்டாயப் பாடமாகவும் - இரண்டாவது பாகமாக (பார்ட் 2) ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் இருக்கும். மொழிச் சிறுபான்மையர் தங்கள் தாய்மொழியைக் கற்க விரும்பும் நிலையில் 15 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால், அதற்குரிய மொழி ஆசிரியரை நியமிக்க வழிவகை செய்யப்படும்.

* இதுவரை அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கான காலி இடங்கள் இந்த மாதத்திற்குள் நிரப்பப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருப்பது கழக அரசு.

* 1990-ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பிலே இருந்தபோது - இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டத்தை வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினருக்கு விரிவுபடுத்தி, (அதற்கு முன்பு சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர் போன்ற ஒருசில குறிப்பிட்ட வகுப்பினரே அந்தப் பயனைப் பெற்று வந்தனர்) சென்ற ஆண்டு இத்திட்டத்திற்கு 2 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

* வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை வழங்கும் திட்டத்தை - கிராமப்புறங்களில் வாழும் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டு, இதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

* இலவச வீட்டு மனை வழங்கும் திட்டம் - முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்குக் கீழே கிராமப்புறங்களிலே வாழும் குடும்பங்களுக்கும் விரிவுபடுத்த 1997-98-ல் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

* சென்னை விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக நிதிநிலை அறிக்கையிலே ஐம்பது கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது கழக அரசு.

* 1972-ஆம் ஆண்டிலேயே கழக அரசு - 1500-க்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட கிராமங்கள் அனைத்தையும் முக்கிய சாலையோடு இணைக்கும் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

பின்னர், 1990-ஆம் ஆண்டில் - 1000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களை முக்கிய சாலையோடு இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதில் மீதமுள்ள 517 கிராமங்களில் - 1997-98ல் 108 கிராமங்களுக்கும்; 1998-99-இல் 408 கிராமங்களுக்கும் இணைப்புச்சாலை வசதிகள் செய்து கொடுக்க முடிவெடுத்துள்ளது கழக அரசு.

மேலும் தொடர்ந்து 500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்கள் சாலை வசதிக்காக எடுத்துக்கொள்ளப்படும். 5 ஆண்டுகளில் தமிழகத்தில் சாலை வசதி இல்லா கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம்.

* 1996-97 - ஆம் ஆண்டிற்கு 150 கோடி ரூபாய்ச் செலவிலே 2,200 பேருந்துகள் போக்குவரத்துக்கழகங்களுக்காக வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதில் 1,738 பேருந்துகள் இதுவரை வாங்கப்பட்டுள்ள நிலையில் மேலும் இந்த ஆண்டிற்கு 292 கோடி ரூபாய்ச் செலவிலே 3,600 பேருந்துகள் புதிதாக வாங்கப்படும் என்று அறிவித்து அதை நிறைவேற்றுவதற்கு முனைந்து பணியாற்றுவதும் கழக அரசுதான்.

* அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலே ப்ளஸ் 2 மாணவர்களுக்கும் இலவச பயணம் மேற்கொள்ள சலுகை அளிக்கப்பட்டுள்ளதும் கழக ஆட்சியில்தான்.

* பேருந்துகளில் சாதாரண வழித்தடங்களில் மாத்திரமல்லாமல், விரைவுப் பேருந்து வழித் தடங்களிலும் - கண் இல்லாதவர்கள், கால் முடமானவர்கள் இலவசப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதும் நமது கழகத்தின் ஆட்சியில்தான்.

* அரசுப் பேருந்துகள் இயக்கப்படாத ஊரக உட்பகுதிகளுக்குத் தனியார் நிறுவனங்களின் சிறிய பேருந்துகளை (வேன்) இயக்க அனுமதிக்கலாம் என்று முடிவெடுத்து - 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்படாத உரிய வழித்தடங்களில் அவைகள் இயங்க அனுமதி வழங்கவிருக்கிறது கழக அரசு.

* 1977 - ஆம் ஆண்டிற்குப் பிறகு சாலைப் பணியாளர்களின் புதிய நியமனம் தடை செய்யப்பட்டுவிட்ட காரணத்தால் - தற்போது 4,975 பேர்களே இந்தப் பணியிலே உள்ளனர். இந்தத் தடையை நீக்கி - இப்பணியை விரிவுபடுத்தி - முன்பு இருந்ததைப் போல 8 கிலோ மீட்டருக்கு இருவர் என்ற அடிப்படையில் 10,000 பேர் சாலைப் பணியாளர்களாக நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

* சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் - சுமை தூக்கும் தொழிலாளர்கள் 10 ஆண்டு பணியாற்றியிருந்தால் நிரந்தரமாக்கப்படுவார்கள் என அறிவித்துள்ளது கழக அரசு.

* அரசு மருத்துவமனைகளிலே வெளிநோயாளிகளுக்கான சிகிச்சை நேரம் பகல் 12 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

* ஊராட்சி ஒன்றிய தொடக்க சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கிப் பொதுமக்களுக்குச் சிகிச்சை அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* சித்த மருத்துவர்கள் - வயது முதிர்ந்தவர்களுக்கு மாத உதவித் தொகை 150 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

* சென்னை மருத்துவக் கல்லூரி நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டுள்ளது.

* 1996-97-இல் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் - 1997-98-ஆம் ஆண்டிற்கு 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டிடம் கட்டுவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* அரசு மருத்துவமனைகளுக்கு 10 ஆயிரம் படுக்கைகளும், 6 ஆயிரம் கட்டில்களும் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

* இருதய அறுவை சிகிச்சை, மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை, அவை தொடர்பான மருத்துவ சிகிச்சை ஆகியவற்றிற்கு - வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு - 25,000 ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படும்.

* வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள - ஊனமுற்றவர்களுக்கு செயற்கைக்கால் அல்லது கைகள் பொருத்துவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும்.

* உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்படும் 1000 ஏழைகளுக்குத் தனியார் மருத்துவமனைகள் மூலம் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

* இந்தியாவிலேயே முதன்முறையாக அறுபது வயதிற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு ரூ. 150 ஓய்வூதியம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* கைத்தறி நெசவாளர்கள் இறந்தால் - அவர்கள் குடும்பத்திற்கு வழங்கும் கருணைத் தொகை 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

* கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

* மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்திற்கு ம. சிங்காரவேலர் பெயர் சூட்டப்பட்டது.

* இறப்பு நேரிடும் மீனவர் குடும்பங்களுக்கும் நிரந்தரமாக ஊனமுற்றவர்களுக்கும் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து வழங்கும் 35 ஆயிரம் ரூபாய்க்கும் மேலான கூடுதல் காப்பீட்டுத் தொகை 15 ஆயிரம் ரூபாயை மாநில அரசே ஏற்றுக்கொண்டு - 50 ஆயிரம் ரூபாயாக வழங்கும்.

* மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும் நேரங்களில் உடனடியாகத் தொடர்பு கொள்வதற்காக வாக்கி டாக்கிகளை மானிய உதவியுடன் அரசு வழங்கவுள்ளது.

* ஒரு குடும்பத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர் 250 பேருக்கு தேவையான முதலீட்டில் பத்து சதவிகித தொகை 50 ஆயிரம் ரூபாய் வரம்பிற்குள் மானியமாக வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* இந்த ஆண்டு ஐம்பது சத்துணவுக் கூடங்களில் மகளிர் நல மையங்கள் தொடங்கப்படும். இங்கே மகளிர், சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம், சுயவேலைவாய்ப்புப் பயிற்சி, அறிவொளி, வாழ்க்கைக் கல்வி போன்றவற்றை அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

* இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு - திங்கள் ஒன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 150 ரூபாயை உயர்த்தித் தரும்படி கேட்டதை மைய அரசு ஏற்கவில்லை. மத்திய அரசு ஏற்கும் வரை - மாநில அரசின் சார்பிலே இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கூடுதலாக 50 ரூபாய் மாதந்தோறும் அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* அகதிகள் முகாமிற்கு வெளியே சென்று வேலை பார்க்கவும் - அவர்களின் குழந்தைகள் அருகேயுள்ள கல்வி நிலையங்களில் பயிலவும் அனுமதி தரப்பட்டுள்ளது.

* அகதிகள் தங்கியிருக்கும் முகாமை புதுப்பிக்க 5.63 கோடி ரூபாய்;

* அகதிகள் குடும்பத்தினருக்கும் இந்த ஆண்டு இலவசமாக வேட்டி சேலை.

* மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்வு.

* கடந்த ஆண்டு பத்துக் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப் பட்டதற்கு மாறாக - இந்த ஆண்டிற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கி 20 ஆயிரம் மணமக்கள் உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

* டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை 300 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

* கலப்புத் திருமணத் தம்பதியருக்கு வழங்கப்படும் அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத் தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தப்பட்டது.

* திரைப்படத் துறையிலே சண்டைக் காட்சிகளின் போது நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்கள் உயிரிழக்க நேரிட்டால் - ஒரு இலட்சம் ரூபாயும், ஊனமுற்றால் 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* 25 பிரதிகளுக்குக் குறைவாக, குறைந்த செலவில் எடுக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 1989-ல், கழக அரசால் தொடங்கப்பட்ட திரைப்பட மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், தற்போது வழங்கப்படும் மானியத் தொகையான ரூ. 3 இலட்சம் ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்படும். அத்திரைப்படங்களுக்கு அவை முதன்முறையாகத் திரையிடப்பட்ட நாளிலிருந்து, முதல் நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

* அண்ணா நினைவிட முகப்பிலும் - காமராஜர் நினைவிட முகப்பிலும் - எம்.ஜி.ஆர். நினைவிட முகப்பிலும் அவர்களுடைய மார்பளவுச் சிலைகள் வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

* முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் பெயரால் சாலை - இந்த ஆண்டு நினைவு மண்டபம்.

* அரசு அலுவலர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதி 60 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டது.

* முழு ஓய்வூதியம் பெறும் பணிக்கால வரம்பினை 33லிருந்து 30 ஆகக் குறைக்கவும் - ஓய்வூதியம் கணக்கிடும் முறையிலே சில மாற்றங்களைச் செய்து அவர்களுக்கு சலுகையும் செய்திருக்கிறோம்.

* 1989ஆம் ஆண்டு கழக ஆட்சியில் பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 250 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தப்பட்டது. 1992இல் இது 500 ரூபாயாக உயர்ந்தது. இப்போது கழக ஆட்சியிலே இது ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

* பத்திரிகைத் துறையிலே 20 ஆண்டுகள் பணியாற்றியுள்ள ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், புகைப்படக்காரர்கள் இயற்கை எய்தினால் - அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பணிபுரியும்போது விபத்தில் இறக்க நேரிட்டால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் - அத்துடன் ஈமச் சடங்கிற்காக 500 ரூபாயும் வழங்கப்படும்.

* ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் - தனது தொகுதியிலே செயல்படுத்த விரும்பும் பணிகளுக்காக ஆண்டுக்கு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

* கழக அரசு பொறுப்பேற்றதும் - வணிகர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்தால்தான் மக்களுக்கு வாங்கும் விலையிலே பொருட்கள் கிடைக்க முடியுமென்பதை உணர்ந்த இந்த அரசு, இதுவரை சுமார் 450 கோடி ரூபாய் அளவிற்குச் சலுகைகள் அளித்திருப்பதும், குறிப்பாக அனைத்துப் பொருட்களுக்கும் ஒரு முனைவரி என்ற வகையிலே சீர்திருத்தம் செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

* தொழில் வளர்ச்சியையும் மனதிலே கொண்டு மூலப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி யாவும் மூன்று விழுக்காடு அளவுக்குக் குறைக்க வழி கண்டதும் இந்த அரசுதான்.

* தமிழகத்திலே தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்பதற்காக கழக அரசு பொறுப்பேற்றது முதல், இடைத்தரகர்களை ஒழித்துவிட்டு - தொழில் தொடங்க முனைவோர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, கோடிக்கணக்கான ரூபாய் முதலீட்டிலே தமிழகத்திலே தொடங்கப்படவிருக்கின்ற எண்ணற்ற தொழிற்சாலைகளைப் பற்றி அடிக்கடி பேசியிருப்பதால் இக்கடிதத்திலே அதனைப் பற்றி விரிவாக எழுதவில்லை. மேலும் ஆங்கில ஏடுகளுக்கு அளித்த பேட்டிகளில் அதனைப்பற்றி விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

* பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் மத நல்லிணக்க மனித நேய உணர்வுடன் சாதி மத பேதமற்று வாழ வேண்டுமென்ற அரசின் கொள்கையின் செயலாக்கத்திற்கு துணைபுரிய அதி விரைவுப்படை ஒன்று (ஸ்விப்ட் ஆக்ஷன் ஃபோர்ஸ்) அமைக்கப்பட்டுள்ளது.

* திருக்கோயில்களின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த - கடந்த ஆண்டு திருத்தப்பட்ட இந்து சமய அறநிலையச்

சட்டத்திருத்தத்தின்படி முதலமைச்சர் தலைமையில், அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சமயச் சான்றோர்கள், தமிழறிஞர்கள் எட்டுப்பேரை உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

* இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னையிலே Information Technology of Institute of Tamil Nadu (I.T.I.T.) என்கிற அமைப்பு நிறுவிட முனைந்து

Computer Graphics,

Software Engineering and Hardware Systems,

Multimedia,

Telecommunications,

Information Technology,

Digital Technology

போன்ற தகவல் தொழில் நுட்பத்துறையின் அனைத்து அம்சங்களிலும் தன்னிகரற்று விளங்கும் இளைஞர்கள் உருவாக்கப்படுவதற்கு வழிவகுப்பது கழக அரசு.

* அனைத்திந்திய வளர்ச்சி நிதிநிறுவனங்களில் ஏதேனும் ஒரு நிறுவனத்தையாவது - சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நிறுவ வேண்டும் என்று மத்திய அரசை நாம் வலியுறுத்தியதன் அடிப்படையிலே - இந்திய கட்டமைப்பு வசதி நிதி நிறுவனம் (இன்ப்ராஸ்ட்ரக்சர் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன்) சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது கழக அரசில்!

உடன்பிறப்பே, கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டதும் உடனடியாக விரைந்து நிறைவேற்றப்பட இருப்பதுமான திட்டங்களை, சாதனைகளை இக்கடிதத்தில் ஓரளவே சுட்டிக்காட்டியிருக்கிறேன். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் போன்ற கழக அரசின் கடந்த காலத் திட்டங்களைக் குறிப்பிட கடிதத்தில் இடமுமில்லை - எனக்குக் கையும் வலியெடுக்கிறது; எல்லாவற்றையும் எழுதிட முடியாமல்!

* உணவு, உடை;

* பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி;

* மருத்துவ வசதி;
* வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு வசதி;
* ஒவ்வொரு கிராமத்துக்கும் நியாய விலைக்கடை;
* கட்டாய ஆரம்பக் கல்வி;
* கிராமங்கள் அனைத்துக்கும் சாலை வசதி

எனும் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை மக்களுக்கு அளிப்பதைத் தலையாய குறிக்கோளாகக் கொண்டு மேலும் தொலை நோக்குத் திட்டங்களாகத் தொழில்துறை வளர்ச்சியும் - சமுதாய மறுமலர்ச்சியும் கண்டிடத் தொடர்ந்து தொண்டாற்றிட இந்த ஓராண்டு நிறைவின்போது சூளுரை மேற்கொள்வோம்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(09-05-1997)

2367. தென்பாண்டிச் சீமைக்கு வருகிறேன்!

உடன்பிறப்பே,

"இருப்பது ஓர் உயிர், அது போகப்போவது ஒருமுறை அந்த உயிர் ஒரு நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே!"

எனும் அறிஞர் அண்ணா வாசகத்தை நெஞ்சில் பதித்துக் கொண்டும்,

"ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்
ஆனது ஆகட்டுமே!"

என்று ஆரூரில் பிறந்த அடலேறு பாவலரேறு பாலசுந்தரனார் பாடியதை உச்சரித்துக்கொண்டும்,

உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். ஆம்; தென்மாவட்டங்கள் சிலவற்றில் மூண்டெழுந்த சாதிக் கலவரம் குறிப்பாக தேவர் குலப்பெருமக்களுக்கும் - தேவேந்திர குலப் பெருமக்களுக்கும் இடையே உருவாகிவிட்ட கசப்புணர்வின், காழ்ப்புணர்வின் காரணத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை அனைவரும் தெளிவாக அறிவார்கள். அந்தக் கலவரத் தீயில் குளிர்காய நினைத்து, இந்த அரசுக்கு எதிராகத் தூண்டிவிட்ட அரசியல் கட்சி எது என்பதை அந்தப் பகுதியிலே உள்ள நடுநிலையாளர்கள் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

கலவரங்கள் நடைபெறும்போதும் - ரயில் மறியல் - பேருந்துக்குத் தீ வைத்தல் - சாலை மறியல் - போக்குவரத்துச் சாதனங்களை உடைத்தல் போன்ற காரியங்களில் ஈடுபட்டவர்கள், குடிசைகளுக்கும் வைக்கோற் போர்களுக்கும் தீ வைத்தவர்கள் சசிகலாவை விடுதலை செய்! என்று கோஷம் போட்டார்கள் என்று பல பத்திரிகைகளில் செய்தி வந்தது.

திருமதி சசிகலாவை அந்நியச் செலாவணி வழக்கில் மத்திய அரசின் அமலாக்கப் பிரிவினர் கைது செய்து சிறை

வைத்துள்ளனர். இந்த உண்மை தெரிந்தும்கூட மாநில அரசின்மீது கோபம் கொப்பளிக்க வேண்டுமெனத் திட்டமிட்டு கோஷம் போடுகிறார்கள் என்றால் அவர்கள் யார் என்பதும் - சில சாதீயக் குழுக்களின் போர்வையில் அந்த அரசியல்வாதிகள் எப்படித் தங்களை மறைத்துக் கொண்டு கழக அரசுக்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஊருக்கு வெளிச்சமாகி விட்ட உண்மைகளே ஆகும்.

தென் மாவட்டங்களில் சாதிக்கலவரம் தூண்டிவிடப்பட்ட நேரத்தில் - அதற்கான சதித்திட்டங்கள் வகுக்கப்பட்ட சமயத்தில் - கலவரம் பகுதி பகுதியாகப் பரவிய நேரத்தில் - பத்திரிகைகளில் வெளிவந்த புகைப்படமொன்றை - மே திங்கள் பத்து பதினோரு தேதிகளில் நான் பார்த்தேன். அந்த ஏட்டினைப் படித்த நாட்டு மக்களும் பார்த்திருப்பார்கள். அந்தப்படம் எவ்வளவு பெரிய உண்மையை வெளிக் கொணருகிறது தெரியுமா?

ஆம், உடன்பிறப்பே, கலவரத்தில் ஈடுபட்டவர்கள், ஆங்காங்குள்ள ஊருக்கு வழிகாட்டும் பெயர்ப்பலகைகளை உடைத்து நொறுக்கிச் சாலைகளிலே போட்டு மகிழ்கிறார்கள். அந்தக் காட்சி புகைப்படமாக எடுக்கப்பட்டபோது, கலவரக்காரர்கள் இரட்டைவிரல் காட்டி புகைப்படத்துக்கு போஸ் கொடுக்கிறார்கள். இதிலிருந்து எதை யூகிக்க முடிகிறது? கலவரங்களின் ஆரம்பக் கட்டத்திலேயே இரட்டை இலைக்காரர்கள் தங்களின் பங்கினை அளித்திருக்கிறார்கள் என்பதைத்தானே உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது!

அமைதிப் பூங்காவாகத் தமிழகம் விளங்கி, அரசின் மக்கள் நலப்பணிகளை அனைத்து மக்களும் பெற்றுப் பயனடைவதற்கு மாறாக, ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு கலப்பது போல இந்தச் சாதிக்கலவரச் சதிவலையில் யாரும் சிக்கவேண்டாம் என்பதற்காகத்தான் மே 14 ஆம் தேதி சென்னை ராஜாஜி மண்டபத்தில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள், சமுதாயத் தலைவர்களைக் கொண்டு கூட்டத்தைக் கூட்டினேன். ஐம்பதுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட அந்தக் கூட்டம் பத்து மணி நேரத்துக்கு மேலாக நடைபெற்றது. அமைதி வழி காண்பதற்கான தீர்மானங்களையும் வடித்தெடுத்தது.

அக்கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்ட கருத்தின் அடிப்படையில் மறுநாள் சென்னைக் கோட்டையில் இருபிரிவைச்

சார்ந்த தலைவர்களை அழைத்துப் பலமணி நேரம் பேசினேன். அதற்கு மறுநாள் 16-ந் தேதியும் பேசினேன்.

வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் பெயரை மாற்றாமல் அது போகும் வழியில் சில மாற்றங்களைச் செய்யலாமா என்று அரசின் சார்பில் அறிவித்த யோசனையை தேவேந்திர சங்கத்தின் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. தேவர் பேரவையினரும் இணக்கம் தெரிவிக்கவில்லை. எனவே உடன்பாடு ஏற்படாமல் மே முதல் நாள் அறிவிக்கப்பட்டபடியே விருதுநகரை மட்டும் தலைநகராகக் கொண்டு வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் இயங்குமென்று அரசுச் சார்பில் அறிவிக்கப்பட்டாயிற்று.

பூலித்தேவன் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற தேவர் பேரவையினரின் கோரிக்கையையும் பரிசீலித்து ஆவன செய்யப்படுமென்று சொல்லப்பட்டதே தவிர, புறக்கணித்து ஒதுக்கிவிடவில்லை.

துப்பாக்கிச் சூடுகளுக்கு நீதி விசாரணை கோரப்பட்டது. அதையும் ஏற்று ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகளைக் கொண்ட நீதிவிசாரணைகள், சிவகாசிக்கும் - துறையூருக்குமாக அறிவிக்கப்பட்டாகி விட்டது.

கலவர நேரத்தில் காமராசர் மாவட்டத்தில் உள்ள கலெக்டர் திரு. ராஜகோபால் நல்ல முறையில் மக்களுடன் கலந்து பாதுகாப்புப் பணிகளை ஆற்றினார்; எனவே அவர் மாற்றப்பட்டுள்ளதாக ஏற்கனவே அரசு எடுத்த முடிவை பரிசீலித்து அவரே தொடர்ந்து கலெக்டராகப் பணிபுரிய வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதையும் அரசு ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்தாயிற்று.

மாவட்ட ஆட்சித் தலைவராகத் தேவர் குலத்தைச் சார்ந்தோர் யாருமே இல்லையே என்று ஆதங்கம் தெரிவிக்கப்பட்டது. அந்தக் குறையும் வேண்டாமென்று கரூர் தீரன் சின்னமலை மாவட்டத்துக்கு அக்குலத்தைச் சேர்ந்த ஒருவரை மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டாயிற்று.

இதற்குப்பிறகு கன்யாகுமரிக்கு அருகில் உள்ள வள்ளியூரில் அம்பேத்கர் சிலையைச் சிலர் ஊனப்படுத்த அதன் காரணமாக அமளி எழுந்து, அது அந்த ஊரிலேயே பேசித் தீர்க்கப்பட்டு அமைதி ஏற்பட்டது. ஆனால் அம்பேத்கர் சிலை சேதப்படுத்தப்பட்டது

வள்ளியூரில் எனினும்; அதை எதிர்த்து மதுரையில் தேவர் சிலையை சேதப்படுத்தத் திரண்டது ஒரு கூட்டம். அதனால் கலவரம் மூண்டது.

என் செய்வது, உடன்பிறப்பே; சிலைக்கும் பெயருக்கும் இரண்டு வகுப்பினருக்கிடையே கலகம் ஏற்பட்டு, வன்முறைகளும் - வெட்டு குத்துக்களும் - கொலைகளும் பெருகிடும் போது அந்த நிகழ்ச்சிகளுக்குத் தொடர்பே இல்லாத அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒரு மக்கள் நல அரசுக்கு உண்டா இல்லையா?

எவ்வளவோ வேண்டுகோள்களுக்குப் பிறகு - காவல் துறையினர் எடுத்த கடுமையான நடவடிக்கைகளுக்குப் பிறகு, சாதிக்கலவரத்தைச் சாக்கிட்டுக்கொண்டு சில சமூக விரோத சக்திகளின் தீய செயல்களைத் தடுத்து நிறுத்தி அமைதி உருவாக்க முடிந்திருந்தது.

மக்கள் நலன் கருதும் அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் எடுத்துக்கொண்ட முயற்சியும்; விடுத்த வேண்டுகோளும் வீண் போகாமல் அமைதி உருவாயிருக்கும் வேளையில்; மீண்டும் கறுப்புக்கொடி என்ற பெயரால் ஓர் அமளியை எனக்கெதிராக நடத்திட சிலர் அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கறுப்புக்கொடிக்கு அவர்கள் கூறும் காரணம்; நான் தேவர்களுக்கு எதிராக, தேவேந்திர குலத்தினருக்குச் சாதகமாக இருக்கிறேனாம்! இப்படியொரு குற்றச்சாட்டு, என்மீது!

இதில் வேடிக்கை என்னவென்றால் தேவேந்திர குல சங்க கூட்டமைப்பினரும் என்னைப் பார்த்து நீ, தேவேந்திர குலத்துக்கு எதிராகவும் தேவர்களுக்குச் சாதகமாகவும் இருக்கிறாய்! என்றே குற்றம் சாட்டுகின்றனர்.

நான் இந்த இரு சமுதாயத்தினருக்கு மட்டுமல்ல; நாட்டில் உள்ள எல்லாச் சமுதாயத்தினருக்கும்தான் நண்பனாக, அந்தச் சமுதாய மக்களின் நலன் நாடுபவனாக இருக்கிறேன்.

1989ல் என் ஆட்சிக்காலத்தில்தான் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எனும் ஒரு பிரிவு அறிவிக்கப்பட்டு அதில் சீர்மரபினரும் இணைக்கப்பட்டு கல்வி வேலை வாய்ப்புகளில் கணிசமான இடத்தைப் பெற்று வருகின்றனர்.

ஆதிதிராவிடர் இலாகாவுடன் இணைந்து கிடந்த பிற்படுத்தப்பட்ட சமுதாய இலாகாவை அதிலிருந்து பிரித்து, ஆதிதிராவிடர்க்குத் தனி இலாகா - தனி அமைச்சர்; பிற்படுத்தப்பட்டோருக்கான தனி இலாகா - தனி அமைச்சர் - தனியாக நிதி ஒதுக்கீடு என ஆணை பிறப்பித்து, அதனை 1970 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டு வந்ததே நான்தான்!

இந்தியாவிலேயே முதன் முதலாக ஆதிதிராவிடர்க்கென இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித்தரும் திட்டத்தைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்தியதும் நானேதான்!

நெல்லைச் சீமையிலே பிரபல வக்கீலாக இருந்த திரு. ரத்தினவேல் பாண்டியன், நான் முதலமைச்சராக இருந்தபோது தான் அரசு வழக்கறிஞராக ஆக்கப்பட்டு, நீதிபதியாக உயர்ந்து, உச்சநீதிமன்றம் வரை சென்று புகழ் நாட்டினார் என்பது நாடறிந்த உண்மையல்லவா!

நூறாண்டு காலமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் காணாத புதுமையாக ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த திரு. வரதராசன் அவர்கள் நீதியரசராகப் பொறுப்பேற்றதும் - படிப்படியாக உயர்ந்து உச்சநீதிமன்றம் வரை சென்று அமர்ந்ததும் என் தலைமையில் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதானே!

ஆனால் வேதனையான வேடிக்கை; யாரோ கலந்த நஞ்சு நெஞ்சில் பரவி - என்னை இந்த இரு சமுதாய மக்களுக்கும் பகைவனாகக் காட்டிப் பழி தீர்த்துக்கொள்ளும் படலத்துக்குத் திட்டம் தீட்டப்படுகிறதே அதுதான்!

உடன்பிறப்பே,

வரும் 28 ஆம் நாள் மதுரை மாநகராட்சி வெள்ளி விழாவில் கலந்துகொள்கிறேன். என்னரும் நண்பர் மதுரை முத்துவுக்கு மேயர் சங்கிலியும் அங்கியும் அணிவித்து அழகு பார்த்து மதுரையை மாநகராட்சி அந்தஸ்த்துக்கு உயர்த்தி மகிழ்ந்த நான், இப்போது மீண்டும் ஆட்சியில் அமர்ந்து அந்த மதுரை மாநகராட்சி என்ற வெள்ளிவிழாவில் கலந்து கொள்வதும் - மதுரை வளர்ச்சிக்கான திட்டங்களைத் தொடங்கிட அறிவிக்க இருப்பதும் சிலருக்கு எரிச்சலை மூட்டியிருக்கிறது. அதனால் இல்லாத காரணங்களை இட்டுக்கட்டி எனக்குக் கறுப்புக்கொடி என்று அறிவித்துள்ளார்கள்.

ஜனநாயக முறையில் கறுப்புக் கொடி என அறிவிப்பு - ஆனால் வன்முறையைக் கட்டவிழ்த்து விடக் கடுமையான திட்டம்!

29, 30 தேதிகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செல்லும் போதும் கறுப்புக்கொடியாம் - வழி மறிப்பாம் - வன்முறை தாண்டவமாம்!

அவற்றுக்கான திட்டங்களை ரகசியமாகக் கூடி தீட்டுவதாகச் செய்திகள்!

இவற்றையெல்லாம் கேள்வியுறும் உன் போன்ற கழக உடன்பிறப்புகள்; என்னை வரவேற்பது என்ற முறையில் பெருங்கூட்டமாகத் திரள வேண்டுமென அமைப்புகளைக் கூட்டி அழைப்பு விடுவதைக் கேள்விப்படுகிறேன் ஏடுகளிலும் காண்கிறேன்.

அந்த முயற்சி வேண்டாம் - கூடாது என்று என் அன்பு உடன்பிறப்புகளையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

நான் அந்தப் பகுதிகளுக்கு வரும்போது எது நடந்தாலும் இன்முகத்துடன், புன்னகையுடன் ஏற்றுக்கொள்வது என்ற உறுதியுடன்தான் வருவேன் என்பது உனக்கும் தெரியும் என்னையறிந்த உடன்பிறப்புகள் மாற்று முகாமில் இருந்தாலும் அவர்களுக்கும் தெரியும்.

புதுவை மண்ணிலே 1945 ஆம் ஆண்டு என்னைப் பலர் கூடி அடித்துச் சாக்கடையிலே தூக்கிப் போட்டுவிட்டுப்போனபோது; இந்த உயிர் போயிருக்கலாம் - போகவில்லை! என் காயங்களுக்குத் தந்தை பெரியாரும், அன்னை மணியம்மையாரும் மருந்து போட்டு ஆற்றிடும் பேற்றினை அப்போது நான் பெற்றேன்.

1953ல் கல்லக்குடி போராட்டத்தில் தண்டவாளத்திலே வைத்த தலை நசுங்கி அப்போதே நான் தியாகியாகி இருக்கலாம். ''தண்டவாளத்திலே தலை வைத்துப்படு என்றாலும் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள் என்றாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதுபவன்தான் என் தம்பி கருணாநிதி'' என்ற பாராட்டினை அண்ணாவிடத்திலே பெறுகின்ற பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

1967 தேர்தலில் சைதாப்பேட்டை தொகுதியில் இரவு 11 மணிக்குத் தேர்தல் பணிமனைகளுக்குச் சென்று திரும்பியபோது கோட்டூர்புரத்தில் அரசியல் கொலை வெறியர்களால்

வளைக்கப்பட்டு விடியற்காலைவரையில் அண்ணாவும் மற்றவர்களும் என்னைச் சென்னை நகர் முழுவதும் தேடியலைந்து இறுதியாக உயிர் பிழைத்து வந்தேனே; அந்தச் சம்பவத்திலேகூட சாவு என்னைத் தழுவியிருக்கலாம். ஆனால் எப்படியோ அது நடக்கவில்லை.

இப்போது எப்படியாவது அது நடக்க வேண்டுமெனச் சிலர் திட்டம் தீட்டுகிறார்கள் என்றால்; என் தமிழ் மக்கள் தீட்டும் திட்டம்தானே - யாருக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறேனோ; அவர்கள் வைத்திடும் குறிதானே - அதற்கு இலக்காவது என்பது என் வாழ்வில் ஒரு இன்பம்தானே - என்ற அந்த இனிய நினைவுடன்தான் மதுரைக்கும், மற்ற தென் மாவட்டப் பகுதிகளுக்கும் வர இருக்கிறேன்.

எந்த நிலையிலும் அமைதி காத்திட வேண்டிய பொறுப்பு, உடன்பிறப்பே - கழகக் கண்மணியே - உன்னுடையது என்பதை மறந்து விடாதே! மறந்தால் என் அன்பு வேண்டுகோளை நீ மறுத்ததாகப் பொருள்!

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு.

கடமைக்குத் தந்தை பெரியாரையும், கண்ணியத்துக்கு அறிஞர் அண்ணாவையும், கட்டுப்பாட்டுக்கு என்னையும் நினைத்துக் கொள்!

கழகத்துக்காகக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்றையும் நினைத்துக் கொள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(24-05-1997)

42235
894.8116
திரு

திமுக அறக்கட்டளை
பேராசிரியர்
அன்பழகனார்
நினைவு நூல்
இலையம்
சென்னை-18
அறிவாலயம்

2368. அண்ணா நகரில் கூடுகிறோம்; அன்பே வா!

உடன்பிறப்பே,

புயல் ஒரு புறம் - சூறாவளி ஒரு புறம்; அதுவும் ஒரேநாளில் ஒரே பகுதியில் சுழன்றடித்துக் கொண்டிருக்கும்போது, அகல் விளக்கு ஒன்றினைக் கையிலேந்தி, எண்ணெய் ஒரு துளியும் சிந்தாமல் எரியும் திரி அணையாமல் ஆடவர் மகளிர் ஊர்வலம் ஒன்று அணுச் சஞ்சலமுமின்றி ஆரவாரம் ஆர்ப்பாட்டமேதுமில்லாமல் நடைபெற்றுள்ளது என்றால்; அது அதிசயச் செய்திகளில் ஒன்றுதானே!

எது பொதுக்குழு? எவர் அக்குழுவின் உறுப்பினர்? என்றைக்கு அது கூடுகிறது? எத்தனை மணிக்கு? என்பதிலே போட்டா போட்டி காட்டா குஸ்தி நடைபெற்று திருநாவுக்கரசு அறிவித்த தேதிக்கு முன்பு, திடீரென ஒரு தேதியை அறிவித்துவிட்டு, அதன் பிறகும் ஒரு பொதுக்குழு என்றால் இடையில் எத்தனை நாள் இருக்க வேண்டும், எத்தனை நாளைக்கு முந்தி முன்னறிவிப்பு தரவேண்டும் என்ற விதிமுறைகளையெல்லாம் கண்டு கொள்ளாமல் நீ பத்தாம் தேதியா? இதோ பார் நான் எட்டாம் தேதி! ஓ; நீ ஏழாம் தேதியா? இதோ நான் ஆறாம் தேதி! இப்படி அறிவித்து அறிவித்து ஐந்து நாலு என்றெல்லாம் தேதிகள் வீதிக்கு வந்து இறுதியாக ஒரு வழியாக ஜூன் 3ஆம் தேதியை இருவருமே நிர்ணயித்து; சென்னையில் கோடம்பாக்கமெனும் ஒரே பகுதியில் இரு பொதுக்குழுக்களும் ஆட்கள் திரட்டப்பட்டு ஓரிரு மணி நேரம் முன்னதாக திருநாவுக்கரசின் பொதுக்குழுவின் தீர்மானப்படி ஜெயலலிதா நீக்கப்பட்டு, அடுத்து நடைபெற்ற ஜெ பொதுக்குழுவில் திருநாவுக்கரசை நீக்கியது செல்லும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு; இந்த இரண்டு பொதுக்குழுக்களில் எது உண்மை? எது போலி? என்ற பெரிய பிரச்சினைக்கிடையே தமிழக அரசியல் அரங்கம் அலை

மோதிக் கொண்டிருந்த வேளையில்தான் நமது கழகத்தின் பொதுக்குழு ஜூன் 2-ஆம் தேதியன்று சென்னையின் அதே பகுதியில் அமைதியாக நடைபெற்று, தணிக்கைக் குழுவினர் தந்த கழகக் கணக்கு அறிக்கைக்கு ஒப்புதல் உட்பட முக்கிய தீர்மானங்களையும் நிறைவேற்றி அடுத்த நாள் அடியேன் பிறந்த நாளையும் கொண்டாடி என்னை வாழ்த்திட விடியற் காலை 4 மணி முதல் இடைவிடாது இரவு 11 மணி வரையில் காத்திருந்தும், கால்நோக கியூ வரிசையில் நின்றிருந்தும் உன் உடன்பிறப்புகளாம் உன் போன்றோர் காட்டிய கட்டுப்பாடு இருக்கிறதே அதை நினைத்துப் பெருமூச்செறிந்து புன்னகை மலர இமைகளை மூடிய போது மனக்கண் முன்னால் கண்டகாட்சிதான் புயலுக்கும் சூறாவளிக்குமிடையே அவற்றைப் பற்றி ஆயாசாம் கொள்ளாமல் அகல் விளக்கேந்திச் செல்லும் அந்த ஊர்வலமாகும்!

இது நான் சென்னையில் கண்ட ஊர்வலமாகும் - அடுத்து சேலத்தில் காண இருக்கிறேனே; மற்றொரு ஊர்வலம்! மகத்தான ஊர்வலம்! சேலத்துத் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் அழைப்பையேற்று நீயும் நானும் கலந்து கொள்ளப்போகும் கவின்மிகு பேரணியைத்தான் குறிப்பிடுகிறேன்; அந்த மாபெரும் ஊர்வலம் நமது மாநில சிறப்பு மாநாட்டையொட்டி நடைபெற இருக்கிறது!

இப்போதே பல ஊர்களில் இருந்து பயணத்துக்குத் தயார் என்று நமது பாசறைகளின் கண்மணிகள் முரசொலிக்கத் தொடங்கிவிட்டார்கள். சேலத்துக்குச் சிறப்பு ரயில்களில் வருகிறோமென்றும் - சீருந்துகளுக்கும், பேருந்துகளுக்கும் வாடகைக்கான முன்பணம் கட்டி விட்டோமென்றும் சீருடைகள் தைத்துவிட்டோம் எங்கள் அணிகளுக்கென்றும் தினந்தோறும் செய்திகள்! தித்திக்கும் கற்கண்டுகளாய்க் கடிதங்கள்!

ஒருபுறம் உறுப்பினர் அட்டைகள் வழங்கும் பணி - அதனைத் தொடர்ந்து ஆங்காங்கு முறைப்படி கிளைக் கழகத் தேர்தல்கள் - மற்றும் ஒன்றிய மாவட்டத் தேர்தல் பணிகள் பொதுக்குழுவுக்கானதும் செயற்குழுவுக்கானதுமான உறுப்பினர்களின் தேர்தல்கள் - இத்தனை அயராத அலுவல்களுக்கிடையே எப்படித்தான் நீ இவ்வளவு உற்சாகமாக ஓடியாடி உழைக்கிறாயோ என்று நான் வியப்புற்று உன்னை வாழ்த்தும்போதுதான் என் வயது முதிர்ந்திருப்பதும் தெரியாமல்

எங்கேயோ அந்தத் தளர்ச்சியும் களைப்பும் ஓடி ஒளிந்து கொள்கின்றன.

உடன்பிறப்பே, சில நேரங்களில் என்னையே நான் கடுமையாகக் கடிந்து கொள்கிறேன்; உன்னையும் உன் போன்ற கழகக் கண்மணிகளையும் ஓய்வே இன்றி உழைத்திடச் செய்வதற்காக! என் செய்வது ''அழுது அழுது பெற்றாலும் அவள்தானே பிள்ளை பெற வேண்டும்'' எனும் பழமொழிக்கொப்ப நமது கழகத்தின் வலிவுக்கும் பொலிவுக்குமான செயலாக்கத் தொண்டுகளை நாம்தானே ஆற்றிட வேண்டியிருக்கிறது!

ஆனால் ஒன்று, என் அருமைத் தம்பியே! அன்புத் தங்கையே! அகவையில் மூத்த பெரியீர்! எனக்கும் உமக்கும் ஏற்படும் எல்லாக் களைப்பும் - எல்லாச் சலிப்பும் - இருவண்ணக் கொடியேந்தி பட்டாளத்து நடைபோடும் அணிவகுப்புகளை நமது பேரணிகளில் காணும்போது பஞ்சாகப் பறந்து போகின்றன! அதுவும் இப்போதெல்லாம் நமது பேரணிகள் பெருங்கடல்களாக ஆர்ப்பரிக்கின்றன!

பொதுக்கூட்டங்களே மாநாடுகளாகக் காட்சிதரும் போது, மாநாடுகள் என்றால் எப்படி அமையும் - அதிலும் மாநில மாநாடு என்றால் கேட்க வேண்டுமா!

இன்னும் குறிப்பாகவும் சிறப்பாகவும் கோடிட்டு வைத்துக்கொள்ள வேண்டிய சரித்திர வரிகளாகவும் என்றென்றும் விளங்கப் போகும் மாநாடுகளில் ஒன்று இப்போது தம்பி வீரபாண்டி முன்நின்று நடத்த இருக்கிற இந்தச் சேலத்து மாநாடு.

சேலத்தில்தானே தென்னிந்திய நல உரிமைச் சங்கமெனும் நமது நீதிக்கட்சி திராவிடர் கழகமாயிற்று - அந்தத் தீர்மானத்தைப் பெரியாரின் வழிநின்று அறிஞர் அண்ணா அவர்கள்தானே கொண்டுவந்து நிறைவேற்றித் தந்தார். அந்த நீதிக்கட்சியின் தொடக்கத்தையும் தொடங்கியதற்கான காரணத்தையும் மாநாட்டில் படங்களைத் திறந்து வைத்து உரையாற்றுவோர் அனைவருமே தொட்டுக் காட்டத்தான் போகிறார்கள். உரையில் மட்டுமல்ல; ஓவியக் கண்காட்சியிலும் திராவிட இயக்க வரலாற்றை எடுத்துக் காட்டிட இளைஞர் அணியினர் எழுச்சிக் கோலம் பூண்டு நிற்கின்றனர். ஏனெனில்; இளைஞர் அணிச் செயலாளர் மு.க.ஸ்டாலின் தலைமையில்தானே முதல் நாள் மாநாடே துவங்கப் போகிறது! இப்போது அவர் சென்னையில் இளைய மேயர் வேறு!

திறப்புரை வி.பி. இராசன் - வரவேற்புரை இரா. இராசேந்திரன் - நன்றியுரை வீரபாண்டியின் செல்வன் செழியன் என்றால் துடிப்புக்கும் துள்ளலுக்கும், எங்கெங்குக் காணினும் எழுச்சிமயம் என்ற ஏற்றத்திற்கும் கேட்கவா வேண்டும்.

இளைஞர் அணியாம் எழுஞாயிற்று அணியின் மாநாட்டைத் தொடர்ந்து - இந்த 74ன் தலைமையில் கழகத்தின் சிறப்பு மாநாடு - திறப்பு விழா ஆற்ற இருப்பதோ 75 - என்ன உடன்பிறப்பே; புரியவில்லை உனக்கு?

ஆம்; நாங்கள் இருவரும் எங்கள் கடமைகளை இளமை முதல் ஒரே நிலையில் நின்று ஆற்றி - ஒரே கொள்கை உறுதியுடன் தமிழ் மக்களிடம் பரப்பி - மாதாக்கள் இருவரின் மணிவயிற்றில் பிறந்தாலும் உடன்பிறந்த சகோதரர்கள்தான் எனும் நினைப்பு மாறாமல் உனையொத்த உடன்பிறப்புகளுடன் முறையே 75, 74 ஆண்டுகளாக ஒட்டியிருந்துவிட்டவர்கள் அல்லவா! இன்னும் அப்படியே இருப்பவர்கள் அல்லவா!

எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதனைத் திட்டமிட்டு அற்புதமாகச் செய்யக்கூடிய என் தம்பிமார்களில் சிறப்பான இடத்தைப் பெற்ற குறிப்பிடத்தக்கவர்களிலே ஒருவர் - கொள்கை மாறாத நம் குலக்கொழுந்து வீரபாண்டி ஆறுமுகம்! இந்த என் பாராட்டுக்கு அடையாளமாக எழுந்து நிற்பதே சேலத்தில் நமது கழகத்தின் சீர்மிகு மாளிகை! அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் ஒவ்வொரு கட்டமும் நானறிவேன் - பேராசிரியர் அறிவார் - மாவட்டத்தில் உள்ள கழக மாமணிகள் அறிவார்கள். அந்தத் தம்பி ஆறுமுகம் வரவேற்புரை ஆற்றிட - அனைத்து மாவட்டக்கழகச் செயலாளர்களும், மாநில மாவட்டங்களின் பொறுப்பாளர்களும் வழிமொழிந்து உரையாற்றுவார்கள்.

இன்றுள்ள இந்திய அரசியல் சூழலில் சேலத்துச் சிறப்பு மாநாடு கூடுகிறதென்றால்; ஒரு முக்கியமான கட்டத்தில் முக்கியமான முடிவுகளை எடுத்திடவும் - எடுக்கப்படும் முடிவுகளுக்கான ஆரோக்யமிகுந்த விவாதங்களை நடத்துவதற்கும் இந்த ஜூன் திங்கள் 27, 28, 29 ஆகிய நாட்கள் காத்திருக்கின்றன என்பதை நான் சொல்லி நாட்டினர் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

உடன்பிறப்பே; இது சேலத்துக்காக இந்தச் சிறப்பு மாநாட்டுக்காகத் தீட்டப்படும் முதல் கடிதம்தானே - அதனால் அண்ணாநகரில் கூடுகிறோம் எனும் அறிவிப்புடன் அன்பே வா எனும் அழைப்புடன் நிறுத்துகிறேன். இடையில் 20 நாட்களுக்கு மேல் இருக்கின்றன. அதற்குள் எத்தனையோ கடிதங்கள், உன்னையும் என்னையும் எப்போதும் போல் இணைத்திட! பிணைத்திட! இடைவெளியில்லாமல் நாம் உழைத்திட!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(05-06-1997)

2369. சேலம் காண இருக்கும் சிங்கநடையும் - சிங்காரத்தென்றல் நடையும்!

உடன்பிறப்பே,

எங்கெங்குக் காணினும் எழுச்சி - எளிமை நிறைந்த எழில் - மாநாட்டு நிர்வாகிகள், வீரபாண்டியிடம் ஆலோசனைகளைப் பெற்றுப் பம்பரமெனச் சுழல்கிறார்கள் என்று சொல்ல முடியாது; ஏனென்றால் பம்பரம் ஒரே இடத்தில்தானே சுழன்று கொண்டிருக்கும் - இவர்களோ பறவைகளெனச் சிறகடித்துப் பணி புரிகிறார்கள் - ஆயிரக்கணக்கில் கொடிகள்; ஆங்காங்குத் தொண்டர்கள் அமைக்கும் தோரணவாயில்கள் - அண்ணே! மிகவும் அருமையான ஏற்பாடுகள் - என்றைக்கு வரும் அந்தப் பேரணி - எப்போது கேட்கலாம் அந்த மாநாட்டு முழக்கங்களை - திராவிடத் தீரர்கள் தீட்டும் கருத்தோவியங்களை நேரில் காணவும், செவி மடுத்துச் சிந்தை குளிரவும், அதற்கேற்பச் செயலாற்றிடவும் என எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர் தமிழ்ப் பெருமக்கள் - அந்த வட்டாரம் முழுவதுமே, இப்போதே கொட்டு முழக்குடன் குதூகலமாய்க் குதித்தாடுகின்றனர் சேலம் வழங்க இருக்கும் எழிற்கோலத்தை எண்ணி!

என்று என் செவி குளிரச் சிந்தை மகிழச் சொல்லிப் பூரித்துப் போகின்றனர் சேலத்துக்குப் போய் வந்தவர்கள்.

நமது பொதுச் செயலாளர் சென்று மாநாட்டுப் பணிகளை நேரில் பார்வையிட்டார் - தலைமைக் கழகத்துச் செயலாளர்களும், பல்வேறு மாவட்டக் கழகச் செயலாளர்களும் சேலம் சென்றனர். சிரித்த முகத்துடன் எனக்குச் செய்திகள் அறிவித்தனர். எந்தெந்த மாவட்டங்கள் எந்தெந்த இடங்களில் கொள்கை முழக்கும் எழுச்சி மயமான விதானங்களை அமைப்பது என ஆய்ந்தறிந்து அதற்காவன செய்து, அவை எப்படி இருக்கும் என்பதை அகக் கண்ணால் கண்டு இப்போதே மெய்சிலிர்த்துக் களிக்கின்றனர் அந்த மாவட்டச் செயலாளர்கள்.

மாவட்டங்களில் உள்ள முன்னணித் தளகர்த்தர்களும், மாசற்ற நெஞ்சினராம் அவர்தம் அணி வகுப்பில் இணைந்து அண்ணா வழியில் அயராது உழைக்கும் என் உயிரினு மேலான உன்னைப் போன்ற உடன்பிறப்புகளும், மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலையெனப் பலமுறை களம் கண்டு பயனுள்ள சாதனைகளைத் தாயகத்திற்குத் திரட்டித்தந்த தியாக சீலர்களும், எழுத்தால், பேச்சால், இணையற்ற கலைத்திறனால் இயக்கம் போற்றிக்காத்த ஏந்தல்களும் இருக்கின்ற கழகம்தானே திராவிட முன்னேற்றக் கழகம்!

அந்தக் கழகத்தின் மாநாடு என்றால்; அது என்றைக்குத்தான் சோடை போயிற்று - இன்றைக்குச் சோடைபோக?

அதுவும் என் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் முன் நின்று நடத்தும்போது மாநாட்டின் சிறப்புக்குக் கேட்கவும் வேண்டுமோ?

நம்முடைய கழகத்தின் வளர்ச்சி - மக்களிடையே மலர்ந்திடும் செல்வாக்கு - இவற்றுக்கு எடை கல் எது என்பதை நாம் எப்போதுமே தேடியலையத் தேவையில்லாமல் நமது எதிரிகளே அவற்றைக் கணித்துக் கொடுத்து நம்மைக் களிப்பில் ஆழ்த்திடத் தவறுவதில்லை.

இன்று நேற்றல்ல; 1949ல் அண்ணா அவர்கள் தலைமையில் கழகம் கண்ட பிறகுகூட அல்ல; அதற்கு முன்பே நமது அய்யா பெரியார் அவர்கள் தலைமையில் நாம் இயங்கியபோது நடைபெற்ற திராவிடர் கழக மாநாடுகளைப் பற்றியும், எதிரிகள்தான் எக்காளக் குரலெடுத்து எரிச்சலைப் புலம்பலாக முழக்கி - நமது வளர்ச்சியை நமக்கும் நாட்டுக்கும் புலப்படுத்தியிருக்கின்றனர். அதைப் போலவே திருச்சியானாலும், மதுரையானாலும், கோவையானாலும், சேலமானாலும், சென்னை, செங்கையானாலும் எங்கு நமது மாநாடு - அல்லது விழா - அல்லது பொதுக்கூட்டம் நடைபெற்றாலும் அதுபற்றி ஏதாவது சொத்தைச் செய்திகளைப் பரப்புவதிலே சில மனிதர்களுக்கும் சில ஏடுகளுக்கும் தனி இன்பம்! கட்டாய வசூல் என்று கதையளப்பார்கள் - அப்படி யாராவது ஒருவர் இருவர் வசூல் செய்து அந்தச் செய்தி கிடைத்தவுடன் அவர்கள் கழகத்திலேயிருந்து நீக்கப்படுவதைக் கண்டபிறகும் கழகத்தின் கண்டிப்பையும் கட்டுப்பாட்டையும் பாராட்டாமல் பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருப்பார்கள்.

அத்தகைய பண்பு வாய்ந்தோரைத்தான் அண்ணா அவர்கள், சந்து முனை சிந்துபாடிகள் - நரகல்நடையழகர்கள் - நடுங்கா நாக்கழகர்கள் என்று நாகரிகமான நளினத்துடன் வர்ணனை செய்து நமக்குப் பலமுறை அடையாளம் காட்டியிருக்கிறார்கள்.

திராவிடமா? அது தீரா விடமாயிற்றே! விடம் என்றால் நஞ்சாயிற்றே! எனவே திராவிடம் என்பதும் தீயநஞ்சு தானே! எனக் கூச்சல் கிளப்பி நம்மீது பாய்ச்சல் நடத்திய எதிரிகளின் படைகள் எத்தனை! எத்தனை!

அந்தத் திராவிடர், தீராத விடமல்ல - அது ஓர் கலாச்சாரத்தின் பெயர் - ஓர் இனத்தின் அடையாளப் பட்டயம் - இந்தியாவில் உள்ள ஒரு மொழிக் குடும்பத்தின் தொன்மையான விலாசம் - இதனை நாம் மட்டுமல்ல; தென் மாநிலங்களில் உள்ள அறிஞர் பெருமக்கள், வட மாநிலத்து ஆய்வாளர்கள், பிறநாட்டு நல்லறிஞர்கள் அனைவரும் கூடிநின்று இதோ சென்னையில் திராவிட மொழியியல் கழகத்தின் வெள்ளி விழாவை நடத்திக் காட்டி மெய்ப்பித்துள்ள செய்தியையும் அந்த விழாவில் நானும், நமது பேராசிரியரும், முனைவர் தமிழ்க்குடி மகனும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியதையும்; உடன்பிறப்பே! நீ என்னவென்று கருதுகிறாய்?

நம்மை அலட்சியப்படுத்தி அலட்சியப்படுத்தி - அவதூறு கூறி அவதூறு கூறி - புறக்கணித்துப் புறக்கணித்து - இட்டுக் கட்டிய பொய்களைத் திட்டமிட்டு வாரியிறைத்து வாரியிறைத்து - எதிரிகள் ஆடிய ஆட்டத்தையெல்லாம் அடக்கிக் காட்டி நாம் பெற்றுள்ள வெற்றியின் அடையாளச் சின்னமல்லவா அந்த வெள்ளி விழா நிகழ்ச்சி!

எங்கோ ஓர் மூலையில் - இடுக்கில், ஆய்வாளர்களின் மூளை அலமாரியில் முடங்கிக் கிடந்த "திராவிடம்" எனும் சொக்கத் தங்கத்தை வெளிக் கொணர்ந்து முதலில் திராவிடர்களின் விழிப்புக்காக இயக்கம் கண்டவர்கள் டாக்டர் நாயர், நடேசனார், தியாகராயர் என்றால் - அந்தத் தங்கத்தை அணிமணிகளாக்கித் தந்தவர் தந்தை பெரியார் - அவற்றை மெருகூட்டி ஒளியேற்றியவர் அறிஞர் அண்ணா என்பதை வரலாறு நிமிர்ந்து நின்று கூறுகிற காலத்தில் அல்லவா நாம் சேலத்தில் கூடுகிறோம்!

எனவே மகிழ்ச்சி இருக்காதா?
மகிழ்ச்சியின் வெளிப்பாடுதானே எழுச்சி!

எழுச்சியின் சித்திரம்தானே திராவிட இயக்கம்!

அந்த இயக்கத்தின் அரசியல், சமுதாய, பொருளாதார அடிப்படையிலான உரிமை முழக்கும் பாசறைதானே திராவிட முன்னேற்றக் கழகம்!

அக்கழக மாநாடு சேலத்தில் என்றால் அங்கே உன் சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும், புரட்சித் தமிழ் நடையும் பேரணியிலும் மாநாட்டிலும் கண்டிட கேட்டிட நான் துடித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை நீ அறிய மாட்டாயா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

(19-06-1997)

2370. வினை விதைத்தால் வினை அறுக்கத்தானே வேண்டும்!

உடன்பிறப்பே,

நாடாள்வதற்கு மீண்டும் வரப்போகிறார்களாம்; வந்தபின், அவர்களைப் பழிவாங்கும் நம்மைப் பதிலுக்குப் பதில் பழிவாங்கப் போகிறார்களாம் - இப்படிப் பேசியிருக்கிறார் விழுப்புரத்தில் நாரணமங்கலத்து மாவீரர் நமது மதிப்புக்குரிய நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் பெருமான் அவர்கள்! அண்மையில் தஞ்சையில் அவர் ஒரு கூட்டத்தில் என்னைத் தாக்கிப் பேசி மகிழ்ந்தாரே அதைவிட சற்றுத் தரமான பேச்சுத்தான் அவரது விழுப்புரம் பேச்சு.

இப்போது நாம் அவர்களைப் பழி வாங்குகிறோமாம் - அவரும் சொல்கிறார், அவரது அருமைத் தலைவி அம்மையார் ஜெயலலிதாவும் அப்படித்தான் அறிக்கைகளை அன்றாடம் ஏடுகளில் பறக்கவிடுகிறார்.

என்ன வேடிக்கை பார்த்தாயா? அ.தி.மு.க. ஆட்சியிலே நாவலர் அவர்கள் இரண்டாவது இடத்திலே இருந்து கொண்டு எந்த அடிப்படை ஆதாரமும் இல்லாமல் கழகத்தின் கட்டவிழ்த்துவிட்ட பழிவாங்கும் நடவடிக்கைகளை மறந்து போனாரா? அல்லது நாட்டு மக்கள்தான் மறந்துவிடுவார்கள் என்ற நினைப்பா?

இந்திரா காந்தி அவர்களைக் கொல்ல செய்ய முயற்சி என்று என் மீதும் பேராசிரியர் மீதும் மற்றும் நமது கழக முன்னணியினர் (இன்று வேறு முகாம் அமைத்துக் கொண்டு இருப்போர் உள்ளிட்ட) நூற்றுக்கணக்கானோர் மீது அ.தி.மு.க. ஆட்சியில் தொடரப்பட்ட வழக்கு எடுபடாமல் போனபிறகு எம்.ஜி.ஆர். அவர்கள்கூட அதை அப்படியே விட்டுவிட்டார்.

ஆனால், அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் இரண்டாமிடத்து நாவலர் உட்பட ஆலோசித்து; அட்வகேட்

ஜெனரல் அறிவுரையைக்கூடப் பொருட்டாக மதிக்காமல்; உச்சநீதிமன்றத்துக்கு அப்பீல் செய்துதான் தீரவேண்டுமென்று குதியாய்க் குதித்து - அங்கு அனுப்பிய அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதே; அப்படித் துடியாய்த் துடித்து நம்மையெல்லாம் தண்டனைக்கு ஆளாக்க முண்டியடித்து முயற்சித்ததற்குப் பெயர் என்ன நாவலரே; என்று நாம் கேட்டால் அது ஒன்றும் பழிவாங்கும் நோக்கம் அல்ல என்று நாவலர் அவர்கள் எந்தப் புதிய அகராதியின் வாயிலாகப் பொருள் சொல்லப் போகிறாரோ; தெரியவில்லை!

என்னையும் என் குடும்பத்தாரையும் களங்கப்படுத்த சிவசுப்பிரமணியம் கமிஷன் அமைத்து; அந்தக் கமிஷன் விசாரிக்க வேண்டிய குற்றச்சாட்டு விபரங்கள் என்று பத்திரிகைகளில் உலகத்தில் எந்த விசாரணைக் கமிஷனிலும் மேற்கொள்ளப்படாத புதுமையாக, முழுப் பக்க விளம்பரங்கள் கொடுத்து; அந்த விளம்பரத்துக்கும் மட்டும் அரசு பணம் பத்து லட்ச ரூபாய்ச் செலவழித்ததே ஜெயலலிதாவும் நாவலரும் நடத்திய ஆட்சி; அந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நம்மீது அள்ளிப் பொழிந்த செயலுக்குப் பெயர் பழிவாங்கும் நடவடிக்கை என்பதல்லாமல் வேறென்ன பெயர் நாவலர் அவர்களே; என்று வினவினால், விழுப்புரத்தில் முழங்கிய நாவலர் அவர்கள் திருவாய் மலர்ந்தருளப் போகிற விடைதான் என்னவாக இருக்குமோ?

இந்தி ஆதிக்க எதிர்ப்பு எம் கொள்கையென்று கூறிக் கொண்டே - அதற்காக அண்ணா தலைமையில் களங்கூடக் கண்ட நாவலர் அவர்களே; நீங்கள்தானே - பேராசிரியரும் அவருள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பத்து பேரும் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் ஈடுபட்டார்கள் என்று குற்றம்சாட்டி அவர்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளையே பறித்துக்கொண்டு முற்றாக வெளியேற்றும் தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி மகிழ்ந்தவர் என்பது இப்போதாவது நினைவுக்கு வருகிறதா? எந்த அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவு நகலை அண்ணா தீயிட்டுக் கொளுத்தினாரோ; அதேமுறையில் அறப்போரில் ஈடுபட்ட பேராசிரியரையும் அவருடன் சேர்த்து பத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் பதவி பறித்து வெளியேற்றும் தீர்மானத்தை நாவலரே; உங்கள் தமிழ் நடமிடும் நாவினால்தானே உச்சரித்து நிறைவேற்றினீர்கள் - அஃதென்ன; பழிவாங்கும் படலமல்லவோ! தங்களின் அகராதியில் வேறு ஏதாவது

வித்தியாசமான பொருள் உண்டோ அந்த நாணத்தகுந்த - வெட்கங்கெட்ட - வேதனையான செயலுக்கு? விளக்குங்கள் நாவலரே என்று கேட்டால் விழுப்புரத்தில் மட்டுமே முழக்குவேன் என்பதுதான் பதிலா?

நாவலர் போற்றும் நடமாடும் தெய்வம்(?) நாள்தோறும் பத்திரிகை அறிக்கைகள் என்று படமெடுத்தாடுவதும் காணுகிறோம். கேரளாவிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலையில் வீணாகும் தண்ணீரையெல்லாம் இந்த அம்மணி, தமிழகத்துக்கு வாய்க்கால் வெட்டி வரப்பு கட்டித் திருப்பி விட்டிருந்தார்களாம் - அதை நான் கெடுத்து, அந்த ஆறுகளை மீண்டும் கேரளத்துக்கே திருப்பி அனுப்பி விட்டேனாம்! என்ன வேடிக்கை பார்த்தாயா?

ஐந்து ஆண்டு காலம் ஆட்சி நடத்திய அம்மணியார் அரபிக்கடலில் வீணாகும் தண்ணீரைத் தமிழகப் பாசனத்துக்குத் திருப்பிவிடக் கேரள அரசுடன் பேசியிருக்கலாமே - யார் தடுத்தார்கள்? இப்போது எப்படிக் கதை கட்டுகிறார் கண்டனையா? கேரளம், மின்சாரம் கேட்க வந்தபோது நாம் பேரம் பேசியிருக்க வேண்டுமாம் - அடடா; எவ்வளவு பெருந்தன்மையான அறிவுரை! அதுமட்டுமா? காவிரிப் பிரச்சினையில் தமிழக மக்களுக்குக் கருணாநிதி அரசு துரோகம் செய்து விட்டதாம் - துரோகத்திற்கே பெயர் போனவர், நம்மைப் பார்த்து துரோகக் கணை வீசுகிறார்! அருமை நண்பர் எம்.ஜி.ஆர். நோயுற்று இயங்கிக் கொண்டிருந்தபோது அவரைப் பற்றிக் காரசாரமாக ராஜீவ்காந்திக்கு அம்மையார் எழுதிய கடிதம், அப்படியே பிளாக் செய்யப்பட்டு ஏடுகளில் வந்தது கூடவா மக்களுக்கு மறந்து போய் விடும்? அது துரோகமா? அல்லது தூய நேசமா?

என் வளர்ச்சியும் செல்வாக்கும் கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்று அட்டகாசமாக ஆங்கிலத்தில் கடிதம் எழுதிய கை யாருடைய கை? ஜெயலலிதா அவர்களின் கைதானே! இவரா துரோகம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது?

காவிரிக்காகக் கண்ணீர் வடிக்கும் இந்தக் கலைச்செல்விதான்; கழக அரசு நடுவர் மன்றம் வேண்டுமென்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தபோது நடுவர்மன்றத்தின் தீர்ப்பைக் கர்நாடகம் ஏற்க வேண்டுமென்று கட்டாயமில்லை என்று கர்ச்சனை செய்தவர் - அதற்காக கர்நாடகத்தின் சபாஷ் பட்டத்தைப் பெற்றவர் - இவர்

நம்மைப் பார்த்து இப்படிப் பேசுவது காலத்தின் கோலமப்பா; கோலம்! வாயினால் சிரிக்க முடியாத இன்னொரு வினோதம் பார்த்தாயா? பிற்படுத்தப்பட்ட மக்கள் மீது கருணாநிதி அரசுக்கு உள்ளபடியாக அக்கறை இல்லை.

இது ஜெயலலிதா எனும் அம்மணியார் உதிர்த்துள்ள அறிக்கை வாசகம் - 69 சதவிகிதத்துக்குச் சட்டமியற்றி விட்டு; அதை உச்சநீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லாமல் - அங்கே சமரசம் செய்துகொண்டு அந்த ஒரு தவறு காரணமாகவே 50 சதவிகித நிலை நமக்கு வந்துற்ற நிலையில்; இப்போது கழக அரசு 69 சதவிகிதத்துக்காக உச்சநீதிமன்றத்தில் அரசியல் சட்ட விவகார நீதிபதிகள் கொண்ட குழுவில் வாதாடிக் கொண்டிருப்பதை முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முயலுவது போல மறைக்க முயலுகிறாரே செல்வி ஜெயலலிதா - புரிகிறதா உனக்கு அவரது போக்கு!

ஊழல் வழக்குகள் உச்சந்தலைக்கு மேல் போய்விட்டன - இனி சாண் போனால் என்ன; முழம் போனால் என்ன என்ற நிலையில் - கிணற்றில் விழுபவர், அருகம் புல்லின் நுனியைப் பிடித்துத் தப்ப முனைவது போல் அறிக்கைகளை நம்பி, அவற்றை மக்களும் நம்புவார்கள் என்று நம்பி - வெம்பி வெடிக்கிறார்! வேதனைதான் - என்ன செய்ய முடியும்? வினை விதைத்தவர் வினை அறுக்க வேண்டுமென்பதுதானே நியதி!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(22-06-1997)

2371. சேலம் வரும் வழியில் சிந்தை கவரும் திட்டங்கள்!

உடன்பிறப்பே,

வரும் 27 ஆம் நாள் சீர்மிகு சேலத்தில் உன் சிரிப்பு செழித்திடும் முகத்தை நான் காண வருவதற்கு முன்பு இராணிப்பேட்டை தொகுதியில் உள்ள பொன்னை கிராமத்திற்கும், வாணியம்பாடி தொகுதியில் உள்ள விண்ணமங்கலம் கிராமத்திற்கும் 26 ஆம் நாள் காலையிலும் மாலையிலும் சென்று அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன்.

ஒரு நிகழ்ச்சிக்குப் பெயர் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அதனை அனைத்து வசதிகளையும் கொண்ட நவீன கிராமமாக உருவாக்கும் திட்டம்தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பதாகும். இத்திட்டத்தை நிதிநிலை அறிக்கையில் அறிவித்து விளக்கமும் சட்டப்பேரவையில் வழங்கியிருக்கிறேன். நமது கழகத்தின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றவைகளில் ஒன்றுதான் இந்தத் திட்டம்.

குறைந்தபட்ச அடிப்படை வசதிகளான குடிநீர், தொடக்கக் கல்வி, பொது சுகாதாரம், ஊட்டச்சத்து, குடியிருப்பு, கிராமச் சாலைகள் மற்றும் அவற்றின் இணைப்புச் சாலைகள், நியாயவிலைக் கடைகள் ஆகிய வசதிகளை, இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்தின் ஒவ்வொரு குடியிருப்புக்கும் வழங்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்கோர் அடையாளமாகவும் முன்னோடியாகவும் தான் பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகில் உள்ள கவர்னகிரி எனும் வீரன் சுந்தரலிங்கம் பிறந்த ஊரில் அவரது வாரிசுதாரர்களுக்கு அறுபது லட்சம் ரூபாய்ச் செலவில் எல்லா வசதிகளும் கொண்ட நவீன கிராமம் அமைக்கப்படுகிற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வாரிசுதாரர்களுக்கு ஏற்கனவே இரண்டு மூன்று

மாதங்களுக்கு முன்பே அமைத்திடத் தொடங்கிய நாற்பது வீடுகளுடன் இருநூறு வீடுகள் கட்டித்தரும் திட்டமும் வேறு பல வசதிகளும் விரைவில் நிறைவேற்றித் தந்திட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. அனைத்து வசதிகளும் அங்குச் செய்து முடிக்கப்பட்டவுடன், அந்த நிறைவு விழா நிகழ்ச்சிக்கு அந்த ஊருக்கு வருவதாக - என்னைச் சந்திக்கச் சென்னை வந்திருந்த வீரன் சுந்தரலிங்கம் வாரிசுதாரர்களிடம் வாக்குறுதியும் அளித்திருக்கிறேன்.

இப்போது 26-ந் தேதி காலை ராணிப்பேட்டைத் தொகுதி பொன்னை கிராமத்துக்குச் செல்வது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக!

தங்கு தடையின்றி குடிநீர் வசதி கிடைத்திடவும், குடிநீர்க் குழாய்களுக்கு இணைப்பு வழங்கிடவும், புதுப்பிக்கவும், பல லட்சங்கள் செலவிடப்பட உள்ளது. ஒட்டனேரி, எஸ்.என். பாளையம், பி.என். பாளையம், முத்தியால்பள்ளி, கொண்டாரெட்டிப்பள்ளி, தேவகன்னிகாபுரம் ஆகிய பகுதிகள் இதனால் பலன் பெற இருக்கின்றன. பொன்னையில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டப்பட இருக்கிறது. தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிட வசதி செய்யப்பட இருக்கிறது. சுமார் 22 லட்ச ரூபாய்ச் செலவில் தொகுப்பு வீடுகள் கட்டப்பட உள்ளன. ஒட்டனேரியில் நியாய விலைக் கடைக்குக் கட்டிடம் கட்டப்பட இருக்கிறது. பொன்னை கிராமத்தைச் சூழ்ந்துள்ள இந்தப் பகுதிகள் அனைத்தும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் முழுமையான வசதிகளைப் பெற இருக்கின்றன.

இப்படி ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு நவீன கிராமம் - முழு வசதிகளுடன்! ஆம்; ஓராண்டில் 234 நவீன கிராமங்கள் - எல்லா வசதிகளுடனும் ஏற்றம் பெற்று எழிலார் தோற்றம் கொள்ள இருக்கின்றன.

அப்படியானால் மற்ற கிராமங்கள்? அவற்றின் நிலை என்ன? அவைகளும் முற்றிலும் முழுமையான வசதிகளை உடனடியாக எட்ட முடியாவிடினும், படிப்படியாகப் பசுமை பெறுவதற்காகத்தானே ஆங்காங்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தொண்டாற்றிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாமாங்கமாக நடைபெறாமல் இருந்த உள்ளாட்சி மன்றத்

தேர்தலை நமது தேர்தல் கால வாக்குறுதியின்படி நடத்தி முடித்திருக்கிறோம்.

அதையும் கருத்தில் கொண்டுதான் அந்தக் கிராமப்புறத்து மக்களுக்கும், படிப்படியாக அடிப்படை வசதிகளைப் பெருக்கிடும் நோக்கத்துடன் இந்த நிதிநிலை அறிக்கையில் நமக்கு நாமே என்ற திட்டத்தை அறிவித்து; அதனை வாணியம்பாடி தொகுதியில் விண்ணமங்கலத்தில் 26-ந் தேதி மாலையில் ஆரம்பித்து வைத்திட இருக்கிறேன்.

உடன்பிறப்பே, 1969ஆம் ஆண்டில் அண்ணாவின் மறைவுக்குப்பின் அவர் வழியில் உழைத்திட நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் இந்தியாவிலேயே முதன் முதலாக மனுநீதித் திட்டம் என்று ஒன்றினை அறிமுகப்படுத்தியது உனக்குத் தெரியும். மக்களை அதிகாரிகள் சென்று சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களை ஆங்காங்கு பெற்று அவர்களின் நியாயமான தேவைகளை நிறைவேற்றுவதும் அதற்காக வழங்கப்படும் மனுக்கள் மீது உரிய நீதி வழங்குவதும்தான் மனுநீதித் திட்டமாகும்.

இப்போது அந்தத் திட்டத்தின் மற்றொரு விரிவாக்கத் திட்டமாகத்தான் நமக்கு நாமே திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்த முனைந்துள்ளேன்.

ஊராட்சியில் உள்ள வாக்காளர்கள் ஒன்று கூடி, ஊர் மக்கள் மன்றம் ஒன்றை அமைத்துக் கொண்டு செயல்பட வேண்டுமென்பதையொட்டி, அப்படிக் கூட்டப்படும் கூட்டத்திற்கு அனைத்துத் துறை அலுவலர்களும் சென்று அந்த ஊர் மக்கள் மன்றத்தில் எடுத்துரைக்கப்படும் மக்கள் தேவைகளையும், பிரச்சினைகளையும் கேட்டறிந்திட வேண்டும். ஊர் மக்கள் மன்றத்தை ஆண்டுக்கு மூன்று முறையாவது கூட்டுகின்ற நிலை இருக்க வேண்டும். இதனை உள்ளாட்சித் தலைவர்களே முன்னின்று கூட்டலாம்; அல்லது மாவட்ட அரசு அலுவலர்கள் - மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுரை பெற்று அந்தக் கூட்டங்களை கூட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளலாம்.

அந்த ஊர் மக்கள் மன்றத்தில் ஊருக்குத் தேவையானவற்றை விவாதித்து, எந்தெந்தத் திட்டங்களை நிறைவேற்றலாம் என்று வரையறுப்பதுடன், அத்திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் அந்த ஊர் மக்கள் பங்கு பெறலாம்.

அந்த ஊர் மக்கள் உடனடியாக முடிக்கக் கூடிய தேவைகளை அவ்வூர் மக்களே செய்து முடிக்க - அரசு அலுவலர்கள் உதவிட வேண்டும்.

சில மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், குடிமராமத்துப் பணிகளை மக்களின் ஈடுபாட்டினைப் பயன்படுத்தி கண்மாய், ஏரி, குளங்கள் ஆகியவற்றைத் தூர்வாரி செப்பனிட்டுள்ளார்கள். சில இடங்களில் சாலைகளையும் அமைத்துள்ளார்கள்.

வெள்ளையடிக்காத பள்ளிக் கூடங்களுக்கு மக்களே வெள்ளையடிக்கலாம். சில பகுதிகளில் சில நன்கொடையாளர்கள் மருத்துவமனைக் கட்டிடம், பள்ளிக்கூட கட்டிடம் கட்டுவதற்கு முன் வருகிறார்கள். அவர்களின் தொண்டுள்ளத்தைப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும்.

எனவே எந்த அளவுக்கு மக்கள், இந்த அரசின் வேண்டுகோளை ஏற்று உடல் உழைப்பு தானம் - மற்றும் நன்கொடை வழங்கத் தயாராக இருக்கிறார்கள் - அதாவது அவர்களின் ஊர்களுக்காக - ஊர் மக்களின் நலத்திற்காக - என்பதை நான் நேரில் காணும் வாய்ப்பு விண்ணமங்கலம் ''நமக்கு நாமே'' திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியில் ஏற்பட இருக்கிறது.

இந்த இரு தொடக்க நிகழ்ச்சிகளுக்குப் பிறகு தமிழக முழுவதும் தொடர்ந்து எல்லாத் தொகுதிகளிலும் அண்ணா மறுமலர்ச்சித்திட்டமும், எல்லா ஊர்களிலும் நமக்கு நாமே திட்டமும் - அமைச்சர்களைக் கொண்டும் - நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டும் தொடங்கப்பட இருக்கின்றன. ஆம்; நிச்சயம் தொடங்கப்பட வேண்டும்.

அடித்தள மக்களின் தேவைகளையும் - சாதாரண சாமானிய, நடுத்தர மக்களின் கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றிட உறுதியெடுத்துக் கொண்டு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள நமக்கு, இடையூறுகள் பல விளைவிக்கப்பட்டாலும் - திசை திருப்பும் நடவடிக்கைகள் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டாலும் - அவற்றையும் தாங்கிக் கொண்டு என் கடன் பணி செய்து கிடப்பதே! எனும் கடமையை ஆற்றிட மேலும் ஊக்கத்தை அளிக்க இருப்பதே சேலத்துச் சிறப்பு மாநாடு! அந்த மாநாட்டில் உன்போன்ற உடன்பிறப்புகளும் - என்னுயிர் போன்ற தமிழ்ப் பெருமக்களும் -

எனக்குத் தர இருக்கின்ற உற்சாகப் பெருக்கினை ஆரோக்கிய ஒளடதமாகக் கொண்டு, தமிழகம் வளம் பெற - தன்னிறைவு பெற - இன்னும் இன்னும் இன்னும் தளராது உழைத்திடுவேன். மன்னிக்க வேண்டும் உடன்பிறப்பே! உழைத்திடுவோம்! உழைத்திடுவோம்! ஊளையிடும் ஊழல் நரிகளை உதாசீனப்படுத்திவிட்டு ஒரு சிங்கம் செம்மாந்து செல்வதுபோல நடைபெற இருக்கும் சேலத்துப் பேரணியைக் காண வந்து கொண்டிருக்கிறேன்.

வரும் வழியில்; தமிழக மக்கள் எனக்கும் உனக்கும் இட்ட கட்டளையை நிறைவேற்றத்தான் கிராமப்புறங்களுக்கான அரசுத் திட்டங்கள் இரண்டினை தொடங்கி வைக்கிறேன். வரவேற்புக்குழுத் தலைவர், வீரபாண்டி ஆறுமுகம் கூட தொலைபேசி மூலம் என்னிடம் கேட்டார்; என்ன அண்ணே; மாநாட்டுக்கு முதல் நாளே மக்களை அங்கே கூட்டி விடுகிறீர்களே! என்று!

அவர் ஆதங்கம் எனக்குப் புரிகிறது - தம்பீ! வருத்தப்படாதே! நான் வடாற்க்காடு வழியாக வருவதால் மாநாட்டு வசூல் ஒன்றும் குறைந்துவிடாது! சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் என்று தேர்தல் வாக்குறுதியளித்திருப்பதை மறந்துவிடலாமா? அதை மறக்காத காரணத்தினால்தான் மக்கள் திட்டங்களை நிறைவேற்றிட முன்னுரிமை கொடுத்து, மாநாட்டுக்கு முதல்நாள் அவற்றில் கலந்து கொள்கிறேன் என்று நான் அவருக்குத் தொலைபேசியில் விளக்கமளித்ததும் ஏற்றுக் கொண்டார்.

உடன்பிறப்பே, நீயும் ஏற்றுக் கொள்வாய் என்பது எனக்குத் தெரியும் - இந்த என் விளக்கத்தை மட்டுமல்ல; விரிவான முறையில் தமிழக முழுவதும் இரு திட்டங்களும் நிறைவேற்றப்படுவதற்கான அயராப் பணியையும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(23-06-1997)

2372. சேவலென நிமிர்ந்து வா!
சொங்கதிராய்க் கிளம்பி வா!

உடன்பிறப்பே,

அவரே எடுத்துக்கொண்ட பணியானாலும் கழகம் கொடுத்த பணியானாலும் வியப்பு மேலிடும் வகையில் வெற்றிகரமாக முடித்துக் காட்டுவதில் தீரர்! சூரர்! என்று தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தைப் பாராட்டுவதுடன் அவர் முன்னின்று நடத்தும் சேலம் மாநாட்டில் வெறும் திருவிழாக் கோலம் தெரியவில்லை. எதிர்காலத்தை உருவாக்கும் போர் மறவர்களின் எழுச்சியின் வடிவத்தை எங்கு நோக்கினும் காண முடிகிறது எனவும் புகழ்ந்துரைத்து, சேலம் மாநாட்டிலே நடைபெற இருக்கும் பேரணியில்; இளைஞர் அணியின் வரிசை இன்னும் முடியவில்லை என்கிற அளவுக்கும், மாணவர் அணி மடைதிறந்து வருகிறதே என மலைத்திடும் நிலையிலும், தொழிலாளர் அணி எல்லையின்றித் தொடர்கிறதே எனும் வகையிலும், கொத்தனைய மலர்க் கூட்டமாய் இத்தனை மகளிர் எங்கிருந்து வந்தனர் என வியப்படையும் வண்ணமும், வெளிநாடு படை கண்டு, மாற்றார் மனந் திருந்த வேண்டாமா? உன் நடையழகு கண்டு பிரமித்துத் தலைவருக்கு வயதில் நாற்பது குறைந்திட வேண்டாமா? திரும்பும் திசையெல்லாம் உன் திண் தோள் வடிவம்தான் தெரிய வேண்டும். சேலம் மாநாடு குறித்துக் காலமெல்லாம் சரித்திரம் பேச வேண்டும்! புதிய புற நானூறு படைத்திட எழுஞாயிறே! இளஞ்சிங்கமே எழுக! என அழைப்பு விடுத்து என் தம்பி கயல் தினகரன் முரசொலியில் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதியைத்தான் இக் கடிதத்தில் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

எனக்கே ஓர் ஆதங்கம்; என்னடா இது சேலம் மாநாடு குறித்து நாம் மட்டுந்தானே நாள்தோறும் கடிதம்

எழுதிக்கொண்டிருக்கிறோம் - நமது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் குறிக்கோளையும் தொகுத்தும் விரித்தும் கூறி சேலம் மாநாடு பற்றிச் சிறப்புக் கட்டுரைகளை நமது தம்பியரில் எழுத்தாற்றல் படைத்தோர் பலர் இருக்கிறார்களே; அவர்கள் எதுவும் இதுவரை எழுதிடக் காணோமே! என்பதுதான் அந்த ஆதங்கம்.

எழுத்தாற்றல் படைத்த தம்பியர்க்கு எத்தனையோ அலுவல்கள்! போதாக்குறைக்கு அவர்களில் பலருக்குப் பதவிப் பொறுப்புகள் வேறு வந்து விட்டதால்; அந்தப் பொறுப்பினை நிறைவேற்றவே நேரம் போதவில்லை - அதனால் அவர்கள் எழுத்துப் பணியில் ஆர்வம் செலுத்திட இயலவில்லை என எனக்கு நானே சமாதானம் தேடிக் கொண்டபோதிலும் - நமக்கும்தான் பதவிப் பொறுப்பு - எத்தனையோ பிரச்சினைகள் - அவற்றுக்கிடையே கழகப் பணிகளில் ஒன்றான - அந்தப் பணிக்கு சிகரமான மாநாட்டுப் பணிக்கு நேரத்தை விடியற்காலையிலேயே தேடிப்பிடிக்க முடிகிறதே - சில தம்பிகள் நமது கழகத்தின் தோற்றல் சின்னமான உதயசூரியனையே, சுவர்களில் கண்டவர்களேயன்றி வானத்தில் கிழக்குத் திசையில் பார்த்தறியாதவர்கள் என்பதால் அல்லவா அவர்களால் சேலம் மாநாட்டுக்கென ஒரு கட்டுரை தீட்டிட முடியாமல் போய் விடுகிறது என்ற கவலையும் கூடவே எழத்தான் செய்கிறது.

ஆனால் அந்தக் கவலையைப் போக்கும் வண்ணம் தம்பி கயல் தினகரன் ஓர் எண்ணக் கருவூலம் தந்துள்ளார் கட்டுரை வடிவில்!

1951 டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய நாட்களில் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற கழகத்தின் முதல் மாநில மாநாட்டை கயல் தினகரன் நினைவூட்டி எழுதியிருப்பதைப் படிக்கும்போது அந்த மாநாட்டு மேடையில் அண்ணாவுடனும் அண்ணாவின் பல முன்னணித் தம்பியர்களாம் என் அருமைத் தோழர்களுடனும் நானும் அமர்ந்திருந்ததையும் - அண்ணாவைத் தலைமையேற்க நான் வழிமொழிந்து உரை நிகழ்த்தியதையும் எண்ணிப் பார்க்கிறேன் - இப்போதும் கண்ணீர் ததும்புகிறது.

கண்ணீர் என் இமைகளை உடைப்பதற்குக் காரணம்; அந்த அண்ணன் இன்றில்லையே! அன்று எனது தோளோடு தோள்

உராய்ந்திட அணிவகுத்துப் பணியாற்றிய பல தோழர்கள் மறைந்து விட்டனரே; என்பதன்றி வேறு எதுவாக இருக்க முடியும்!

சேலம் என்றால் ஒரு காலத்தில் அண்ணன் சித்தையன் நினைவுதான் வரும் - அவர் பேரைக் குறிச்சிப் பெரியவர் ஜி.பி. சோமசுந்தரம் அவர்களுக்கு எழுதிய ஓர் அஞ்சலட்டையை இன்று காலையில் தம்பி டாக்டர் நாதன் என்னிடம் காட்டினார்.

1937 ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாள் சேலத்தில் நடைபெற்ற மூன்றாவது மாவட்ட சுயமரியாதை மாநாட்டுக்கு ஜி.பி. சோமசுந்தரம் அவர்கள் முன்கூட்டியே வந்திருந்து மாநாட்டுப் பணியாற்றிட அழைத்து சித்தையன் அவர்களால் எழுதப்பட்ட கடிதம் அது!

ஆம், உடன்பிறப்பே - அறுபது ஆண்டுகளுக்கு முன்பு சேலத்தில் மாவட்ட சுயமரியாதை மாநாடு - தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு முழக்கம் ஒலித்திட்ட மாநாடு!

உனக்கு நினைவிருக்குமே; 1929-ல் செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில்தான் தந்தை பெரியார் அவர்கள் பெண்ணுரிமைக்கான தீர்மானத்தை நிறைவேற்றினார் என்பதைச் சுட்டிக்காட்டி, 1989-ல் சட்டப்பேரவையில் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை என்ற சட்டத்தை நிறைவேற்றி - அய்யாவின் தீர்மானத்தை 60 ஆண்டுகளுக்குப் பிறகு செயல்படுத்துகிறோம் என்று பெருமிதம் பொங்க நான் பேசியது!

அந்தப் பெண்ணுரிமை முழக்கத்தை நமது காஞ்சி அண்ணனும் - கவிதை மன்னனாம் புரட்சிக் கவிஞரும் - அவர்களைத் தொடர்ந்து நாமும் ஓங்கி ஒலித்து வருகிறோம் என்பதற்கான எடுத்துக்காட்டுகள்தானே கழக ஆட்சியில் பெண்கள் வேலைவாய்ப்பில் 30 சதவிகிதமும் - உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் 33 சதவிகிதமும் உரிமை பெற்ற வரலாறாகும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு சுயமரியாதை மாநாடு நடந்த சேலத்தில்தான் 1944 ஆகஸ்டு 27 ஆம் நாள் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனும் நமது திராவிட இயக்கம் திராவிடர் கழகம் என்று பெயர் சூட்டிக்கொண்ட மாநாடு தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்றது. அந்த 27 ஆம் தேதியென்ற

பொருத்தம் கூட இப்போது நமது தி.மு.கழக மாநில மாநாட்டுக்கும் சேலத்தில் அமைந்து 27ந்தேதிதான் மாநாட்டுப் பேரணி தொடங்குகிறது.

இடையே இந்த 53 ஆண்டுக் காலத்தில் எத்தனையோ அரசியல், சமுதாய, பொருளாதார எழுச்சிகள்! மாற்றங்கள்!

நாடுகளின் எல்லைக்கோடுகள் மாறினாலும் - நில நடுக்கங்கள் ஏற்பட்டாலும் - ஊழிகள் கொந்தளித்தாலும் - எரிமலைகள் சீறினாலும் - என்றும்போல் பூமிப்பந்து சுழன்று கொண்டிருப்பது போலவே; திராவிட இயக்கத்தின் தாக்கம் தமிழகம், தென்னகம் மட்டுமின்றி நாடு முழுவதும் இன்றைக்கு நிலை கொண்டிருக்கிறது.

பூமியை ஓர் அரக்கன் பாயாகச் சுருட்டிக் கொண்டு போய்விட்டான் எனப் புராணக் கதையொன்றுண்டு - திராவிட இயக்கத் தாக்கமெனும் இந்தப் பூமியின் சுழற்சியை நிறுத்திவிட்டுப் பாயாகச் சுருட்ட முடியுமா எனப் பகற்கனவு காண்போர் அன்றுமிருந்தனர்; இன்றுமிருக்கின்றனர்.

பாயாகச் சுருளாது இந்த இயக்கம் - பாயும் புலியாகச் சீறும் என்று கூறி; இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? என்று வினா எழுப்பி;

“இந்நாட்டான் இங்கு வாழ்ந்தான்
எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான்!
தமிழ்நாட்டான் தலைகுனிந்தான்!
இதோ நிமிர்ந்தான்!
எழுச்சியுற்ற தமிழன்தான் - அவன்
ஏறுநடை சிங்கந்தான்!
கொழித்துவிட்ட உமிகள்தான் - இனிக்
குள்ளநரிக் கூட்டத்தார்!

என்று முரசொலித்து முன்னேறும் அணிதான் மூவேந்தர் வழிவந்த திராவிட முன்னேற்றக்கழக அணி!

இந்தச் சூளுரை முழக்கிச் சுடர் முகந்தூக்கி நடை போட - சேலம் அழைக்கிறது!

சேவலென நிமிர்ந்து வா! செங்கதிராய்க் கிளம்பி வா!

வாகனங்களில் பயணிக்கும் என் வாஞ்சைமிகு உடன்பிறப்பே! ஆர்வமுடன் வந்திடு - அதற்காக அவசரம் வேண்டாம் பயணத்தில்! இது உன் ஆருயிர் அண்ணனின் வேண்டுகோள்! சந்திப்போம் சேலத்தில்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(25-06-1997)

2373. சேலத்துச் செய்தியும் செயலாக்கமும்!

உடன்பிறப்பே,

தொடர்ந்து இருபத்தி நான்கு மணி நேரம் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது - இடையில் ஏதாவது நெஞ்சுக்கு அதிர்ச்சி தரும் செய்தியொன்று வந்து விடும் என்பதைப் பலமுறை உனக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அப்படித்தான் சேலத்து மாநாட்டு வெற்றிப் பெருமிதத்தில் அளவிலா மகிழ்ச்சியில் திளைத்திருந்த என்னை மதுரை மாவட்டம் மேலவளவு கிராமத்தில் நடைபெற்ற பயங்கரப் படுகொலை நிகழ்ச்சி ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

நல்லெண்ணங் கொண்ட நடுநிலையாளர்களும், நாளேடுகள் பலவும், கிழமை ஏடுகளும் சிலாகித்துப் பாராட்டிய சேலம் மாநாட்டு நிகழ்ச்சிகள் - இன்னமும் என் கண் முன்னால் காட்சிகளாகி என்னைக் களிப்பிலாழ்த்திக் கொண்டிருக்கின்றன என்றாலும், மாநாட்டில் நமது கழக முன்னணியினர் பல்வேறு தலைப்புகளில் பயனுள்ள கருத்துகள் பலவற்றைச் சொல்முழக்கமாக ஒலித்தது இன்னமும் என் செவிகளில் ரீங்காரமிட்டுக்கொண்டு சிந்தைக்கின்பம் வழங்கிக் கொண்டிருக்கிறது என்றாலும் அந்தோ; அடுத்த நாளே இடியெனத் தாக்கிய மேலவளவுச் செய்தி என் மேனியெலாம் தணலாக்கிவிட்டதை எவ்வாறு மறக்க முடியும்? அந்த வேதனையிலிருந்து எப்படித்தான் மீள முடியும்?

ஊராட்சி மன்றத் தலைவரானார் - என்னைச் சென்னை அண்ணா அறிவாலயம் வந்து சந்தித்தார் - ஆதிக்க சக்திகள் காட்டி வரும் எதிர்ப்பைத் தெரிவித்தார் - அவரது வேதனையை நான் பகிர்ந்து கொண்டதுடன் நில்லாமல், மாவட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி அவர் தனது ஊராட்சி அலுவல்களைக் கவனிப்பதற்கு ஒத்துழைக்குமாறு பணித்தேன். அவ்வாறே அந்த ஊரில் நடைபெற வேண்டிய பணிகளுக்கான கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித்

தலைவரே மேலவளவு சென்று ஊராட்சித் தலைவர் முருகேசன் அவர்களைச் சந்தித்துப் பெற்று அவற்றை நிறைவேற்றுமாறு அதிகாரிகளுக்குக் கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்.

அமைதி திரும்பியிருக்கிறது - இயல்பான கிராமப்பணிகள் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன என்ற நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கும்கூட நேரமின்றி; சாதிவெறி கோரதாண்டவமாடி விட்டது மேலவளவில்!

ஊராட்சித் தலைவர் முருகேசன் அவர்களும் அவருடன் துணைக்குச் சென்ற ஐவரும் பேருந்துக்குள்ளேயே தாக்கப்பட்டுப் பிணமாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆதிமகனாம் வள்ளுவனும் போதி மரத்துப் புத்தனும் எந்த மனித நேயத்தை வலியுறுத்தினார்களோ; அந்த மனித நேயத்தைச் சாதிவெறி எனும் கோடாரி கொண்டு வெட்டிச் சாய்க்கும் வீணர்கள் இன்னமும் நாட்டில் நம்மிடையே வாழ்கிறார்களே என நினைக்கும்போது நெஞ்சகத்தைச் சுடு கணைகள் துளைக்கின்றன.

உத்தமர் காந்தியடிகளும், ஓய்வறியாமல் உழைத்த தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும், அண்ணல் அம்பேத்கரும் அவர்களையொத்த அருமைச் சான்றோர் பெருமக்களும் சாதிப்பூசல்களை ஒழித்துச் சமத்துவ சமுதாயம் காண்பதற்குப் பட்டபாடெல்லாம் பாழாகிப் போவதோ என்று என்னைப் போன்றோர் குமுறும் நிலை இனியும் தொடரலாமோ?

இந்தச் சாதிவெறிச் சனியன் பூதாகரமாக உருவெடுத்துப் போர்க்களம் காண்பதற்கு ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு காரணம் முளைத்து விடுகிறது.

நல்ல நோக்கத்துடன் போக்குவரத்துக் கழகங்களுக்கும் மாவட்டங்களுக்கும் தலைவர்களின் பெயர்கள் வைக்கப்பட்டு - பின்னர் அந்தப் பெயர்கள் பல்கிப் பெருகி ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு பெயருக்கான கோரிக்கைகளை எழுப்புவதும் - அதற்கான போராட்டங்கள் நடத்துவதும் என்பதாக நிலைமை முற்றிப் போய்விட்டது.

1995-ஆம் ஆண்டு அன்றிருந்த ஆட்சியாளரால் அறிவிக்கப்பட்ட சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் தொடங்கப் படாமலே இருந்து அதற்காக ஒரு சாரார் போராட்டங்களை

அறிவித்ததைத் தொடர்ந்து, 1997-ஆம் ஆண்டு மே திங்கள் முதல் நாளில் தொடங்கப்பட்டது. பல ஆண்டுகளாகப் பூலித்தேவன் பெயரால் போக்குவரத்துக் கழகம் வேண்டுமென்று கோரிக்கை எழுப்பியவர்கள் சார்பாக ஒரு சாரார் களத்தில் குதித்தனர்.

அமளி மூண்டது! அனைத்துக் கட்சியினர் - ஆன்றோர் - சான்றோர் - எடுத்த முயற்சியானாலும், காவல் துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளினாலும் அமைதி திரும்பிக் கொண்டிருந்தது. எனினும் பூலித்தேவன் போக்குவரத்துக் கழகத்துக்கான கோரிக்கைக் குரல் வலுப்பெற்றது - அப்போது அந்தப் பகுதியில் பயணம் மேற்கொண்டிருந்த தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் அன்புக்கினிய நண்பர் திரு. மூப்பனார் அவர்கள் வாயிலாக வழங்கப்பட்ட கோரிக்கைகளில் அதுவும் ஒன்றானதால்; அவர்களை அழைத்துப் பேசி பூலித்தேவன் போக்குவரத்துக் கழகம் தொடங்கிட அரசின் சார்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதனை எதிர்க்க மற்றொரு பிரிவினர் மார் தட்டிக் கிளம்பினர் - இப்படி ஒருவர் மாற்றி ஒருவர் இந்தப் பெயர்களுக்காகப் போராடுவதும் - அதேபோல இந்தப் பெயர்களை எதிர்த்துக் கிளர்ந்தெழுவதும் - இரத்தம் சிந்துவதும் - சாதி பேதத் தீவிர உணர்வு காரணமாகக் கிளம்புகின்ற விஷத்தன்மை வாய்ந்த விளைவுகளுக்கு ஒருவகையில் நாற்றங்கால்கள் ஆகி விடுகின்றன என்பதால்தான் - இவை மட்டும் சாதிப் பூசலுக்குக் காரணம் என்றில்லாவிடினும் இவையும் ஒரு வகையில் காரணமே என்பதை உணர்ந்து இந்தப் பெயர்களை நீக்கும் அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று, அமைதியை விரும்பும் தலைவர்களும், பத்திரிகைத் துறை நண்பர்களும் அரசை வலியுறுத்தி வந்தனர்.

குறிப்பாக முதலில் திரு. மூப்பனார் அவர்களும், அடுத்து இந்திய கம்யூனிஸ்டு தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர் திரு. நல்லகண்ணு அவர்களும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. வீரமணி அவர்களும் தொடக்கத்திலேயே விடுத்த அறிக்கைகளில் தலைவர்களின் பெயர்களை மாவட்டங்களில் இருந்தும், பேருந்துகளில் இருந்தும் நீக்கலாம் என்று திட்டவட்டமாகவே குறிப்பிட்டிருந்தனர்.

அவர்களுக்கோ, அல்லது அனைத்துக்கட்சித் தலைவர்கள் - சமுதாயத்தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு

பெயர் நீக்கத்துக்கு ஆதரவு காட்டிய பெரும்பான்மையான தலைவர்களுக்கோ, மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வைக்கப்பட்டுள்ள பெயர்கள் கொண்ட தலைவர்கள் மீது மரியாதையில்லை, அன்பு இல்லை என்று எவராவது விரல் கூட்டிக் கூற முடியுமா?

இன்னும் சொல்லப்போனால், அந்தப் பெயர்களுக்குரிய தலைவர்களுடன் இணைந்து பணியாற்றியவர்கள் - அவர்களைத் தங்கள் வழிகாட்டிகளாக ஏற்றுக்கொண்டு அவர்கள் தலைமையில் தொண்டாற்றியவர்கள் - அவர்களுக்கும் நமக்குமில்லாத கவலை - முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதாவுக்குத் திடீரென ஏற்பட்டு ஒருநாளைக்கொரு கண்டன அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

தனது ஆட்சிக்காலத்தில் தன் பெயரைச் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட இடங்களுக்கும் - திட்டங்களுக்கும் சூட்டிக் கொண்டவர் - நீலகிரியில் உள்ள முதுமலை தேசிய சரணாலயம் என்ற பெயரை அழித்துவிட்டு அதற்கும் தனது பெயரை வைத்துக் கொண்டவர் - நேற்றைய தினம் இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். விடுத்துள்ள அறிக்கையில் எடுத்துக்காட்டியுள்ளது போல, சென்னை திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்ட வேண்டுமென்று கலையுலகமே வற்புறுத்திக் கேட்டபோது, அதனை அலட்சியப்படுத்திவிட்டுத் தன் பெயரையே அந்தத் திரைப்பட நகருக்கு வைத்துக் கொண்டவர் - பெரியாரையும், அண்ணாவையும் சினிமா பரிசளிப்பு விழா மேடையிலே மட்டும் கண்டுவிட்டு; இன்று பெரியார் பெயருக்காகவும் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். பெயருக்காகவும் நீலிக்கண்ணீர் வடித்துப் பம்மாத்து அறிக்கைகள் வெளியிடுவதைக் காணும்பொழுது வேதனையான வேடிக்கையாகவே இருக்கிறது.

சாதிப்பூசல்களை, அரசு அறிவித்துள்ள இந்த முடிவினால் மட்டும் அறவே அகற்றிவிட முடியும் என்று நாமும் கருதவில்லை - இந்த முடிவை வரவேற்றுப் பாராட்டியுள்ள தலைவர்களும் கருதவில்லை.

சமுதாயத்தில் ஆணிவேர் விட்டு ஆழப் பதிந்துள்ள அந்தத் தீமையை அகற்றுவதற்கான பல்வேறு வகையான முயற்சிகளில் இதுவும் ஒன்று.

அதே தலைவர்களின் பெயரால் இருபத்தி ஐந்து லட்சம் ரூபாய் வைப்புநிதியாக ஒவ்வொரு அறக்கட்டளைக்கும் வழங்கி அந்தப் பல்கலைக்கழகங்களுக்குட்பட்ட கல்லூரியில் பயிலும் சிறப்பான மாணவர்களுக்குக் கல்வி உதவி அளிப்பதென அரசு எடுத்துள்ள முடிவினால் வருங்கால இளைய சமுதாயம் வலிவும் பொலிவும் பெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை. அதுவே மறைந்த தலைவர்களுக்கு நாம் செலுத்தும் மரியாதையும் நன்றிக் கடனுமாகும்.

மேலும் இதன் தொடர் முயற்சியாகத்தான் தமிழக முழுவதுமுள்ள இந்துக் கோயில்கள், கிறிஸ்துவ ஆலயங்கள், இஸ்லாமியப் பள்ளிவாசல்களின் சமபந்தி விருந்து நடைபெற்று லட்சக்கணக்கானோர் அந்த விருந்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலும் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் - நமது அரசின் சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் இன்னும் பல இருக்கின்றன.

சேலம் மாநாட்டில் நான் விடுத்த வேண்டுகோளை; உடன்பிறப்பே, நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் மறக்காமல் மனத்தில் பதிய வைத்துக் கொண்டிருப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

அருமை முருகேசனுடன் ஐவர் ஆவி போக்கிய ஆதிக்க வெறியை அகற்றி வீழ்த்திட சேலத்தில் நான் விடுத்த வேண்டுகோளைச் செயல்படுத்திட இளைஞர், பெரியோர், ஆடவர், பெண்டிர் அனைவரும் இன்றே புறப்பட வேண்டும். இதோ, சேலத்துச் சிறப்பு மாநாட்டில் நான் விடுத்த செய்தி :-

ஆசியாவிலேயே சிறந்த சமுதாயச் சீர்திருத்த இயக்கம் இது என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். புத்தருக்குப் பிறகு கன்ஃபூசியஸுக்குப் பிறகு தோன்றிய மிகச்சிறந்த சீர்திருத்தவாதி தந்தை பெரியார் அவர்கள் ஆவார்கள். தந்தை பெரியாருக்கு செயிண்ட் தாமஸ் போல வந்து வாய்த்தவர், அவர் தந்த சமுதாயச் சீர்திருத்த ஜோதியை தமிழகமெங்கும் - உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் - இந்தப் பூமிப் பந்தில் சென்று பரப்பிய செம்மல் நம்முடைய சிந்தை அணு

ஒவ்வொன்றிலும் குடியிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள்.

21ஆம் நூற்றாண்டை நோக்கி அழைத்துப் போக வேண்டும் என்கிறார்கள். அதன் பொருள் என்ன? ஒரு நவீன சமுதாயத்தை - மாடர்ன் சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பதுதான் அதன் பொருள். நான் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். நாம் அமைக்க விரும்பும் மாடர்ன் சொசைட்டி என்பது வெஸ்டர்ன் சொசைட்டி (Western Society) அல்ல; ஆம்; மேலை நாட்டை, அமெரிக்காவை அப்படியே காப்பி அடிக்கும் சமுதாயம் அல்லவே அல்ல! நான் ஒரு புதிய ஒட்டு மாங்கனியைத் தோற்றுவிக்க விரும்புகிறேன். ஆம் நண்பர்களே! நான் அப்படி ஒரு கனவு காண்கிறேன். நாம் உருவாக்கும் 21ஆம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமுதாயம் - சங்க காலத் தமிழகப் பண்பாட்டின் அடிப்படையிலே அமைந்திட வேண்டும்.

ஆம் நண்பர்களே! நான் அப்படி ஒரு கனவு காண்கிறேன்! சங்க காலத்தில் சாதியில்லை; திருவள்ளுவர் கூறினார் - ‘‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்’’ என்று! அப்படி ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிக்க வேண்டும். ஆம், உடன்பிறப்புகளே, நான் அப்படி ஒரு கனவு காண்கிறேன்.

எத்தனையோ மேற்கோள்கள் உண்டு. சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பாடிய பாடல்கள் உண்டு. ‘‘சாதி இரண்டொழிய வேறில்லை, சாற்றுங்கால் நீதி வழுவா நெறிமுறையில் மேதினியில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்’’ என்ற பழைய பாடலை மறந்துவிடக்கூடாது. ‘‘சாதியிலே மதங்களிலே சாத்திரச் சந்தடியிலே’’ சாயாதீர் என்ற பாடலை மறந்துவிடக்கூடாது. ‘‘சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்’’ என்று பாடிய பாரதியின் வரிகளையும் மறந்துவிடக் கூடாது. ‘‘இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே’’ என்று

புரட்சிக் கவிஞர் பாடிய அந்த வீர வரிகளையும் மறந்துவிடக் கூடாது.

என்னை இந்த நேரத்தில் ஒரு கவலை பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கின்றது. எதற்காக இந்த இயக்கம் துவங்கப்பட்டதோ - எதற்காக பெரியாரும், அண்ணாவும் இந்த இயக்கத்தை ஆரம்பித்தார்களோ, எதற்காக ஐம்பதாண்டுக் காலம் - என் தம்பிமார்கள் காட்டிலும், மேட்டிலும் நடந்து; கல்லடியும், சொல்லடியும் பட்டு; கண்ணீரும் செந்நீரும் சிந்திப் பாடுபட்டார்களோ - அதிலே தோற்றுவிட்டோமோ என்கிற கவலை என் உறக்கத்தைக் கலைக்கிறது. நம் காலத்திலேயே நம் இலட்சியத்திற்குச் சிதைவா? நம்முடைய கொள்கைகளுக்குச் சீரழிவா? உடன்பிறப்புகளே, என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கம்ப்யூட்டர் கல்வி கற்று அமெரிக்காவோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறவன்கூட சாதி பேசுகிறானே? சகித்துக்கொள்ள முடியுமா என்னால்? உலகமே ஒரு குக்கிராமமாக மாறிக் கொண்டிருக்கின்ற நேரம்; சாதி எங்கே வந்தது? சாதி இருக்கிற வரை தமிழன் வளர முடியாது! நிச்சயமாக வளர முடியாது. சமூக உரிமையானாலும், சமூக நீதியானாலும் கேளுங்கள். தமிழனாக இருந்து கேளுங்கள்; மனிதனாக இருந்து மனித உரிமைகளைக் கேளுங்கள். தமிழன் என்கிற அடையாளத்தை இழந்தால் தமிழ் அழிந்துவிடும்; தமிழ்நாடே அழிந்துவிடும்.

'தமிழன் என்றொரு இனம் உண்டு; தனியே அவர்க்கொரு குணம் உண்டு' என்று நாமக்கல் கவிஞர் பாடினாரே, அந்தத் தமிழினமே அழிந்துவிடும்.

எனவே, என் தம்பிமார்களுக்கு ஒரு புதிய அழைப்பினைச் சேலம் சிறப்பு மாநாட்டுச் செய்தியாக விடுக்கிறேன். 21ஆம் நூற்றாண்டு தமிழ்ச் சமுதாயத்தை சங்கத் தமிழ்ப் பண்பாட்டுப் பாணியில் அமைத்திட வாரீர்! வாரீர்! என்று அழைக்கிறேன்.

சங்கத் தமிழ்ச் சமுதாயம் என்றால் அது சாதி இல்லாத சமுதாயம்! ஆணுக்குப் பெண் சமம் என்கிற சமுதாயம்! இதற்கு நீங்கள் மக்களைத் தயார்படுத்த வேண்டும். அதுதான் நான் உங்களுக்கு இடும் உத்திரவு! சாதி பேசுகிறவன் கழகத் தொண்டன் அல்லன்; என் உடன்பிறப்பும் அல்லன்.

தி.மு.கழகம் நாட்டிலே ஒரு மாபெரும் மாற்றத்தைத் தோற்றுவித்த கருவியாகும். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல தமிழ்நாட்டு மக்களே, தி.மு.கழகத்தை அப்படி ஒரு கருவியாக உருவாக்கிப் பாதுகாத்து வருகிறார்கள்.

D.M.K. is not merely a political party. It is a great instrument of social change, the fountain head of Social Reforms and Social Justice.

தி.மு.க. ஒரு வெறும் அரசியல் கட்சியல்ல; சமுதாய மாற்றத்தை உருவாக்கும் ஒரு கருவி; சமுதாயச் சீர்திருத்தமும் சமூகநீதியும் உருவாகும் ஊற்றுக்கண்! என் தம்பிமார்களுக்குச் சேலம் சிறப்பு மாநாட்டுச் சிறப்புச் செய்தியாக இன்னொன்றும் சொல்வேன்.

சமுதாய மறுமலர்ச்சித் தூதுவராகத் தி.மு.கழகத்துக்காரர் ஒவ்வொருவரும் மீண்டும் தங்களைத் தாங்களே அர்ப்பணித்துக் கொண்டு சமுதாய மாற்றம் காண வேண்டும்!

I call upon my dear D.M.K. brothers and sisters to re-dedicate themselves to Social Reconstruction, social reform and social justice.

திரும்பவும் துவக்கிய இடத்திலிருந்தே துவங்குவோம். இல்லாவிட்டால் நமது இலட்சியம் வெற்றி பெறாது; வஞ்சகம் வெற்றி பெற்றுவிடும் என்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.

நான் திரும்பவும் சொல்கிறேன். சேலம் சிறப்பு மாநாட்டுச் சிறப்புச் செய்தியாகச் சொல்கிறேன். தம்பிகளே! தங்கைகளே! உயிரினும் மேலான உடன்பிறப்புகளே!

சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தை 21 ஆம் நூற்றாண்டிற்கேற்ப அமைத்திட வாரீர்! சாதி சமூகக் கொடுமைகள் களைந்து, சமதர்மத் தமிழ்ச் சமுதாயம் சமைத்திட வாரீர்!

இங்கே பிறந்த தமிழன் சிங்கப்பூரில், மலேசியாவில் உலகப் பிரஜையாக வாழ்கிறான்; உழைத்து வாழ்கிறான், உல்லாசமாக வாழ்கிறான். ஆனால் பிறந்த நாட்டிலே விதியை நொந்துகொண்டு, சாதிச் சனியனில் அகப்பட்டுக் கொண்டு வறுமையில் வாட வேண்டுமா? இதை மாற்ற வேண்டாமா? மாற்ற வேண்டும்; மாற்றியே தீர வேண்டும்; அதை இப்போதே துவக்குவோம் வாரீர்!

Once again, I call upon my Dear D.M.K. Borthers and Sisters to re-dedicate themselves to Social Reconstruction."

சேலத்துச் செய்தி உன் செவிகளுக்கு இனிமையூட்டுவதற்காக அல்ல - சிந்தையில் பதித்துச் செயலாக்கம் காண்பதற்காக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(05-07-1997)

2374. இரு கரம் பற்றி வேண்டுகிறேன்!

உடன்பிறப்பே,

இன்னும் இரண்டு ஆண்டுகளில் 50ஆம் ஆண்டு பொன் விழாவைக் கொண்டாட இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் எனும் நமது அரசியல் சமுதாயப் பேரியக்கம்; சமதர்மம், சமயச் சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய இலட்சியங்களில் முழு ஈடுபாடும் பற்றும் கொண்டு அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு அடிப்படையில் அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும்; பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழி கண்டிடவும், பிற மொழி ஆதிக்கத்திற்கு இடம் கொடாமல் அந்தந்த மாநில மொழிகளுக்கு உரிய இடத்தைப் பெற்றுத் தரவும், மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங்களில் சுயாட்சியும் மத்தியில் கூட்டாட்சியும் உருவாகிடவும் தொண்டாற்றுவதாகும் என்பதைக் கழகத்தின் சட்டதிட்டப் புத்தகத்திலேயே கொள்கை கோட்பாடுகளாக அறிவித்துள்ளதை நெஞ்சில் பதியவைத்துக் கொண்டு நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் என்னுடன் பயணம் மேற்கொண்டிருப்பதை எண்ணி எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன் நான்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் நம் கரத்தில் ஒப்படைத்துச் சென்ற அகல் விளக்காம் கழகத்தை அணையாமல் காக்கும் பொறுப்பேற்றுள்ள நாம் இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? எனும் கேள்விக்குறியை கம்பீரமான கண்பார்வையிலேயே வரைந்து காட்டிச் சேலத்தில் கூடிய அந்தக் காட்சியை இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்க்கத்தான் செய்கிறது.

தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் நேரடிப் பார்வையில் கழகச் செயல்வீரர்கள் சேலத்தில் பந்தல் போட்டிருந்த இடத்தில்தான் மாநாடு என்றில்லாமல் - மாநகரம், புறநகரம் எங்கெங்குக் காணினும் அங்கெல்லாம் மாநாடுதான், மக்கள் வெள்ளம்தான் எனுமளவுக்கு நடந்த அந்தச் சிறப்பு மாநாட்டில் தொடர்ச்சியாகப் பதினைந்து மணி நேரம் ஒரே இடத்தில் கொட்டக்கொட்ட விழித்துக் கொண்டு மாவட்ட வாரியாக அந்த மாவட்டத் தளகர்த்தர்கள் தலைமையில் நடைபெற்ற பேரணியையும், இளைஞர், மாணவர், மகளிர், தொழிலாளர், விவசாயிகள் எனும் அணி வகுப்புகளையும் பார்த்துக் களித்தபோது என் உடற்சோர்வு, உளச்சோர்வு இரண்டுமே எங்கே ஓடி ஒளிந்து கொண்டன என்பது எனக்கே தெரியவில்லை.

இப்படியொரு மாநாட்டைச் சேலம் இதுவரை கண்டதுமில்லை - இனிக் காணப்போவதுமில்லையென நடுநிலையாளர்கள் - நல்மனத்துக்குச் சொந்தக்காரர்கள் கூறிப் புகழ்ந்தது கேட்டுப் பூரித்துப் போனேன். 1949ல் கழகம் உருவாகி, அதன் பின்னர் 1952 தொடக்கத்தில் சென்னையில் நமது அறிவுச் சுரங்கம் அண்ணா தலைமையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டிலிருந்து தொடர்ந்து நடைபெறுகிற நமது ஒவ்வொரு மாநாட்டையும் நமது கழகத்தின் மாநாடுகள்தான் வென்று காட்டியுள்ளனவே தவிர, வேறு எந்தவொரு இயக்கமும் வென்று காட்டியதாக வரலாறு இல்லை.

இத்தகைய ஈடு இணையற்ற சரித்திரப் பெருமை கொண்ட இந்த ஜனநாயக இயக்கத்தின் அமைப்புகளின் தேர்தல்களும் கிளைக் கழகம் தொடங்கித் தலைமைக் கழகம் வரையில் சுமார் இந்த ஐம்பது ஆண்டுகளில் ஒன்பது முடிவுற்று இப்போது கழகத்தின் 10-வது பொதுத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் மூன்று மாத அவகாசத்துடன் இந்தத் தேர்தல் பணிகள் ஆற்றப்பட்டிருக்க வேண்டிய சூழ்நிலையில் தேர்தல் ஆணையம் ஜூலை மாதம் 28-ந் தேதிக்குள் கழகத்தின் அனைத்து அமைப்புகளின் தேர்தல்களும் நிறைவுற்றாக வேண்டுமெனக் கண்டிப்பாகத் தெரிவித்துவிட்ட காரணத்தால் நமது பொதுச் செயலாளர் அவர்கள் உடனடி அறிவிப்புச் செய்து செயற்குழு, பொதுக்குழு, நிர்வாகக் குழுக்களை கூட்டித் தேர்தல் பணிகளைக் கழகத்தினர் ஆங்காங்கு விரைந்து நடத்திட வேண்டுமென வேண்டுகோள் அறிக்கைகளை விடுத்தார்.

பெரும்பகுதி எல்லா அமைப்புகளின் தேர்தல்களும் நடைபெற்று, ஓரிரு நாட்களில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் இருந்து தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு - தலைமைக் கழகத்தின் தேர்தல் ஜூலை 27ஆம் நாள் சென்னை மாநகரில் கூடும் பொதுக் குழுவில் நடைபெற இருக்கிறது. அறுபத்தி இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பட்டியலை எழுதி அவர்களுக்கு உறுப்பினர் அட்டைகள் வழங்குவது பெருங் கடினமான வேலை என்பதை உணர்ந்து சுமார் எண்பது லட்ச ரூபாய் செலவிட்டு கணினி (கம்ப்யூட்டர்) முறையில் உறுப்பினர் அட்டைகள் தயாரித்து - அவற்றை உரிய நேரத்தில் வழங்கி - அதன் தொடர்ச்சியாக அமைப்புகளின் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

ஆங்காங்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்தல்களில் ஏதாவது புகார் எழுமானால் அந்தப் புகார்களைப் பெற்றுத் தீர்ப்பு வழங்கிட தேர்தல் பணிச் செயலாளர் விடுதலை விரும்பி, தொ.மு.ச. பேரவைத் தலைவரும், தலைமைக் கழக அலுவலகச் செயலாளருமான செ. குப்புசாமி, தலைமைக் கழகச் செயலாளர் மிசா. கணேசன், தலைமைக் கழச் செய்தித் தொடர்பாளர் சா. கணேசன், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் உசேன், தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் வை. பெருமாள் ஆகிய அறுவர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுப் பணிகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பணிகளைக் கண்காணித்ததோடு தலையைப் பிய்த்துக் கொள்ளும் பிரச்சினைகளை அன்றாடம் சந்தித்துத் தீர்த்து வைத்தவர் பொருளாளர் வீராசாமி!

அறுபது லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்தப் பெரும் இயக்கம் ஒரு பிரம்மாண்டமான கட்சித் தேர்தல் நடத்தி முடித்துள்ள பாங்கு கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிற அதே நேரத்தில் - சில இடங்களில் கட்சிப் பொறுப்புக்கு ஏற்பட்ட போட்டியில் ஒரு சில அசம்பாவித நிகழ்ச்சிகளும், வன்முறைகளும் ஏற்பட்டது கண்டு அந்த மகிழ்ச்சி இன்பத்தில் பாதியை இழந்துவிட்ட உணர்வுடன் இருக்கின்றேன். இயக்கப் பணியாற்றிட நிர்வாகப் பொறுப்புக்கு நான் - நீ என்று வரிந்து கட்டிக் கொண்டு போட்டியிட முன் வருவதை நான் வரவேற்காமல் இருக்க முடியுமா?

ஆனால் மிகச் சில இடங்கள்தான் எனினும், அங்கும் கண்ணியக் குறைவான, கட்டுப்பாடு மீறிய காரியங்கள் நடைபெறாமல் இருந்திருந்தால் தூய வெள்ளை உடையில் சில மைத்துளிகள் கூட படவில்லை; தேர்தல் தேர்வு எழுதும்போது என்ற பெருமை முழுமையாக எனக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் இருந்திருக்கும் அல்லவா? அதை நினைத்து பெருமூச்செறிகிறேன்!

> "அறுவர் குழுவுக்கு, தலைமையின் கவனத்திற்கும் வராத சில குறைபாடுகள் ஒன்றிரண்டு அமைப்புகளில் இருக்குமானால்; அவற்றையும் தலைமைக் கழகத் தேர்தல் நிறைவுற்ற பிறகு ஆய்வுசெய்து சரி செய்து கொள்ளலாம் என்ற உறுதியைத் தலைமைக் கழகத்தின் சார்பாக, தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்."

இன்னொன்று - எனக்கு இனிக்காத ஒன்று - இனிக்காதது மட்டுமல்ல; ஏக்கம் அளித்திடும் ஒன்று - சில இடங்களில் இன்னமும் கழக உடன்பிறப்புகள் இந்தத் தேர்தலில் சாதியப் பற்றுடனும், முனைப்புடனும் நடந்து கொண்டார்கள் என்று!

உண்மையை ஒளிக்கத் தேவையில்லை - ஓர் இடம் இரண்டு இடம்தான் என்றாலும்; நான் சேலம் மாநாட்டில் சாதிப்பற்றுக் கொண்டிருப்போர் என் தம்பியே அல்ல என்று கூறியதை அந்தச் சில தம்பியர் எப்படி மறந்துவிட்டனரோ எனக்குப் புரியவில்லை. அவர்கள் அப்பற்றினைத் துறந்து தமிழர்களாக - என் தம்பியராகத் திகழ்ந்திட வேண்டுகிறேன்.

உடன்பிறப்பே, இரண்டு நாட்களுக்கு முன்பு மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சங்கரய்யாவும் அக்கட்சி நண்பர்களும் எனைக் காண வந்தனர். தீண்டாமை ஒழிப்புக்கும், வகுப்புக் கலவரங்களை ஒடுக்குவதற்கும் பல திட்டங்களை என்னிடம் விரிவாகப் பேசினர். அப்போது சாதிச் சங்கத் தொடர்புகள், மாநாடுகள் இவற்றைத் தி.மு.க. தலைவர்கள் தவிர்த்தால் என்ன என்று கேட்டனர். நான் உடனே நமது கழகச் சட்டதிட்டப் புத்தகத்தை எடுத்து அவர்களிடத்திலே காட்டினேன்.

அதில் உறுப்பினர் என்ற தலைப்பில் விதி 5 - பிரிவு 2ல் -

"வேறு எந்த அரசியல்கட்சியிலோ, சாதிமத சங்கங்களிலோ உறுப்பினராக உள்ளோர், கழகத்தின் உறுப்பினராக இருக்கும் தகுதியுடையோர் அல்லர்"

என்பதைப் படித்துப் பார்த்தவுடன் தோழர் சங்கரய்யாவும் மற்றவர்களும் வியப்புடன் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்தனர். உடன்பிறப்பே, நமது கழக சட்டதிட்டத்தில் இந்தப் பிரிவு கண்டிப்பானதாக இருந்தாலும் - கடைப்பிடிப்பதில் எங்கேயோ ஒருசில மூலைகளில் கடுகளவு ஊனம் ஏற்பட்டிருக்கலாம். சாதி சமயச் சார்பற்ற தமிழ்ச் சமுதாயம் அமைத்திட இன்று நாம் மேற்கொண்டுள்ள சபதத்தின் வெற்றிக்குக் கழக சட்டதிட்டத்தின் 5வது விதியின் 2வது பிரிவை உள்ளார்ந்த உணர்வுடன் நமது உடன்பிறப்புகள் கடைப்பிடித்தாக வேண்டும்.

கழகத்தின் உறுப்பினர் - நிர்வாகி - ஒரு பொறுப்புக்குரியவர் - என்பதிலே உள்ள சிறப்பையும்விட அதிக சிறப்பானது இந்தக் கழகத்தின் கொள்கை கோட்பாடுகளுக்காக நம்மை நாமே அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம் என்பதுதான்.

கட்சிக்குள் உட்பகை எத்துணை தீங்கு பயக்கும் என்பதற்கு தூத்துக்குடி கழகத் தளபதி கே.வி.கே. சாமிக்கு ஏற்பட்ட முடிவும் - அதுகண்டு அன்று அண்ணா சிந்திய கண்ணீரும்; "தென்பாண்டிக் கடல் முத்தே! தீர்ந்ததோ உந்தன் வாழ்வு!" என முரசொலி கடிதத்தில் நான் புலம்பி அழுததும் இன்றைக்கு நினைத்தாலும் நெஞ்சைச் சுட்டெரிக்கக்கூடியவை அல்லவா?

இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து இன்று சில உடன்பிறப்புகளுக்குக் கிலேசம் ஏற்படும் நிகழ்வுகள் இந்தத் தேர்தலில் நடைபெற்றிருப்பினும்; எதிர்காலத்தில் அந்தக் கிலேசம் போக்கப்படும் என்று நான் அளிக்கும் உறுதியை ஏற்று, இயக்க ஒற்றுமை காத்திட அந்த உடன்பிறப்புகளின் இருகரம் பற்றி வேண்டுகின்றேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(17-07-1997)

2375. தியாகிகளை மதிக்கும் திராவிட ஆட்சி!

உடன்பிறப்பே,

திராவிட ஆட்சியில் உண்மையான தியாகிகள் அடையாளம் காணப்படவில்லை. காமராஜர் சிபாரிசு செய்த தியாகிகளைக் கூடக் கண்டுகொள்ளவில்லை என்று சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் மாநில காங்கிரசின் முன்னணித் தலைவர்களில் ஒருவருமான அருமை நண்பர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சேலத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியதை நாளேடுகளில் பார்த்துவிட்டு நான் மிகுந்த வேதனைக்கு ஆளானேன்.

24 ஆண்டுகளுக்கு முன்பு 1973 மார்ச் 22 ஆம் நாள் தமிழக சட்டப்பேரவையில் பேரவை உறுப்பினர்களால் எழுப்பப் பெற்ற கேள்விகளையும் அவற்றுக்கு நான் அளித்த விடைகளையும் தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் படித்துப் பார்ப்பாரேயானால் அவர் சேலத்தில் செய்தியாளர்களிடம் கூறியது எவ்வளவு தவறானது என்பதை உணர்ந்துகொள்வார் என்று நம்புகிறேன். எனவே 22.3.1973 சட்டப்பேரவை நிகழ்ச்சி - கேள்வி நேரத்தின் ஒரு பகுதியை இப்போது நினைவூட்டுகிறேன்.

திரு. எஸ். சங்குமுத்து தேவர் :- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.

அ) தமிழ்நாடு விடுதலைப்போராட்ட வீரர்களின் சங்கத்திடமிருந்து நவம்பர் 1972இல் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு முறைகேடாக ஓய்வூதியம் வழங்கப்பட்டது குறித்து ஏதாவது மனு வந்ததா?

ஆ) ஆமெனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- ஆம்.

ஆ) திருவாளர் ஜி. திருவேங்கடம், எம்.எம். சுப்பிரமணியம் ஆகிய இருவரும் உண்மையான விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்ல என்று சொல்லப்படுவதாகத் தமிழ்நாடு விடுதலைப் போராட்ட வீரர்கள் குழுவின் இணைப்பாளர் திரு. தளவாய் அவர்கள் 1972 நவம்பர் திங்களில் அரசின் நாட்டத்திற்கு கொண்டு வந்தார். அவர்கள் விடுதலை வீரர் ஓய்வூதியத்தைச் சட்ட விரோதமாகப் பெற்று வருகின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார். இதுபற்றி விசாரணை செய்யப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். திரு. ஜி. திருவேங்கடம், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர் ஆவார். ஓய்வூதியம் வழங்க ஒப்பளிப்பதற்கு முன் அவர் விடுதலைப் போராட்ட வீரர்தானா, சான்றுள்ளதா, என்பன குறித்துச் சென்னை மத்திய சிறைச்சாலையில் விசாரித்துச் சிறைச்சான்றிதழும் பெறப்பட்டது. வெளிநாட்டுத் துணி விற்கும் கடைகளின் முன் மறியல் செய்ததற்காக 12.6.1930 முதல் 11.12.1930 வரை அவர் சிறையிலிருந்தார். மேலும், சிறைச்சாலையில் அவர் இருந்ததற்குச் சான்றாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடமிருந்தும், வடசென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியிடமிருந்தும், பெற்ற சான்றிதழை வாங்கி அனுப்பியிருந்தார். 1.1.1969 முதல் அவருக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. திரு. எம்.எம். சுப்பிரமணியம் என்னும் பெயருடைய எவரும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறவில்லை என்று, சென்னை சம்பளக் கணக்கு அதிகாரி தெரிவித்தார். எனவே சட்டவிரோதமாக அவர்களுக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது என்னும் திரு. தளவாய் சுமத்திய குற்றச்சாட்டு ஆதாரமற்றதாகும்.

திரு. கே.ஏ. வகாப் :- தலைவர் அவர்களே, இந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் உண்மையிலேயே விடுதலைப் போராட்ட வீரர்கள்தான் என்பதற்கு அதிகாரிகளைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறதா? அதுமட்டும் அல்லாமல், இப்படிச் சில பெரிய காங்கிரஸ் காரர்களிடமிருந்து அவர்கள் சிபாரிசுச் சீட்டு வாங்கிக்கொண்டு வந்தால் இத்தகைய ஓய்வூதியம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. விடுதலைப்போராட்ட வீரர்கள் இல்லையென்றாலும்கூட, அவர்கள் பேரிலுள்ள அனுதாபத்தினால்

சில பேருக்குச் சிபாரிசுச் சீட்டுகள் கொடுக்கப்படுவதாக அறியப்படுகிறது. அப்படிப்பட்ட தகவல் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- பெரிய காங்கிரஸ் தலைவர்கள் அல்லது முன்னாள் காங்கிரஸ் அமைச்சர்கள் சான்றிதழ் தரும்போது, தங்களோடு அவர்கள் சிறையில் இருந்தார்கள் என்ற வகையில் குறிப்பிட்டிருந்தால் அது பரிசீலிக்கப்பட்டு, தகுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றவர்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் உண்மையானவர்களா என்று கண்டுபிடிப்பதற்குச் சிறைச்சாலையில் அவர்கள் இருந்ததற்கான சான்றிதழும் கோரப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி :- தலைவர் அவர்களே, விடுதலைப்போராட்ட வீரர்கள் ஓய்வூதியத்தைப் பெற குறிப்பிட்ட காலம் சிறைப்படாமலிருந்தாலும்கூட, விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் உடல் ஊனமுற்றிருந்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- அவர்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு உரிய நிலையில் உள்ளவர்கள் இல்லையென்றாலும்கூட அரசு அப்படிப் பட்டவர்களையெல்லாம் சில நேரங்களில் அனுதாபத்தோடு கவனித்து ஆவன செய்து வருகிறது.

திரு. நா. வீராசாமி :- தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அளிக்கின்ற ஓய்வூதியத்திலும், அதுபோல தாமிரப் பத்திரம் பெற்றவர்களுக்குக் கொடுக்கின்ற ஓய்வூதியத்திலும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? இரண்டு பேர்களுக்கும் ஒரே மாதிரி ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறதா? அப்படியென்றால், தாமிரப் பத்திரம் பெற்றவர்களை மத்திய சர்க்கார், மதிக்கும் வகையில் இன்னும் சற்று அதிக அளவு ஓய்வூதியம் மத்திய சர்க்கார் அளிக்க வேண்டும் என்று நம்முடைய அரசாங்கம் ஏதாவது சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- ஆறு மாதங்களுக்கு மேல் சிறைச்சாலையில் இருந்தவர்களுக்கு மத்திய சர்க்கார் சற்று அதிகத் தொகை வழங்குகிற அளவில் ஓய்வூதியத் திட்டத்தை

இப்பொழுது அமல்படுத்தி வருகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், தாமிரப் பத்திரம் பெற்றவர்களாக இருந்தாலும் பெறாதவர்களாக இருந்தாலும், அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இப்பொழுது அளிக்கப்படுகிற மானியத்தைத்தான் பெற்று வருகிறார்கள்.

திரு. கே.ஏ. வகாப் :- மத்திய சர்க்கார் அளிக்கும் ஓய்வூதியத்தை நம்முடைய மாநில அரசாங்கம் அளிக்கும் ஓய்வூதியத்தைக் கழித்துக்கொண்டு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய தமிழக அரசை விட அவர்களிடத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய மத்திய சர்க்கார் இதைக் கழிக்காமல் அவர்களுக்குத் தர அரசு ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- ஆறு மாத காலம் சிறையில் இருந்த அப்படிப்பட்டவர்களுக்கு ரூ. 200 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ரூ. 75 மாநில சர்க்காரிடமிருந்து பெற்று விடுவதைக் கழித்துக் கொண்டு தருவதுதான் முறை என்று மத்திய சர்க்கார் கருதுகிறது. அதிலே நாம் குறுக்கிடத் தயாராக இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் :- விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சிலர் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தாலும், அதற்கான சான்றிதழை அவர்கள் பெற முடியவில்லை. அப்படிப்பட்டவர்கள் இந்த ஓய்வூதியத்தைப் பெற அரசு எந்த வகையில் ஆவன செய்யும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- நான் முன்பே சொன்னேன். அப்படிச் சான்றிதழ் பெற முடியாதவர்கள் தங்களோடு சிறையில் இருந்த காங்கிரஸ்காரர்களில் பெரியவர்கள் அல்லது முன்னாள் அமைச்சர்கள் மூலமாகச் சான்றிதழ் பெற்றால் அது பரிசீலிக்கப்படுகிறது என்று சொன்னேன். அப்படிப் பல பேர் முன்னாள் அமைச்சர்களிடமிருந்தும், காங்கிரஸ் பெரியவர்களிடமிருந்தும் இதுபோன்ற சான்றிதழைப் பெற்றிருக்கிறார்கள். அவைகளைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளப்பட்டவை சிலவும், ஏற்றுக்கொள்ளப்படாதவை சிலவும் உள்ளன.

திரு. ந. தருமலிங்கம் :- 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் எத்தனை விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

வழங்கப்பட்டிருக்கிறது? அதற்குப் பிறகு கழக ஆட்சியில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- இந்தத் திட்டம் 1966-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. 1966-ஆம் ஆண்டு ஐந்து பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. 1.1.1967 முதல் 21.3.1973 வரையில் 7,673 பேருக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. இரத்தினசபாபதி :- காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கட்டபொம்மன் வாரிசுகளுக்கு அரசியல் தியாகிகளுக்கு அளிக்கப்படுவது போல் ஓய்வூதியம் தரும் முயற்சியை நிராகரித்தது போல் இல்லாமல் இப்பொழுது இந்த அரசு ஏற்றுக்கொண்டு அளித்து வருகிறதா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- வீரபாண்டியக் கட்டபொம்மனுடைய சந்ததியினர்களுக்கு இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று வீரபாண்டியக் கட்டபொம்மன் குடும்பத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியக் கட்டபொம்மன் துரை, திரு. சைவ வீரபாண்டிய துரை, திரு. ஊமைத்துரை என்பவருடைய மக்களான திரு. சுப்பிரமணிய கட்டபொம்மன் துரை, திரு. ஜெகவீரபாண்டிய துரை, திரு. சின்னபொம்முதுரை ஆகிய ஐந்து பேர்களுக்கு இந்த ஓய்வூதியம் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அளிக்கப்படுகிறது.

திரு. கா.வேழவேந்தன் :- தலைவர் அவர்களே, எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இந்த அரசு வந்ததற்குப் பின்னர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் தரப்படுகிற நேரத்திலே இந்த அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நடைபெறுகிறபொழுது ஒரு சிலர் அரசுக்கெதிராக அவற்றில் ஈடுபட்டுக் கெடுதல் விளைவிக்கின்றார்களே, அவர்களைப் பற்றிய புகார்கள் வந்தால் அதைப் பரிசீலித்து ஓய்வூதியம் அவர்களுக்குத் தரப்படுவதை மறுபரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- ஓய்வூதியம் தரப்படுவது அரசாங்கத்தை அவர்கள் வாழ்த்த வேண்டும் என்பதற்காக அல்ல. ஏற்கனவே அவர்கள் செய்த தியாகத்திற்கு மதிப்புக் கொடுத்து அரசு இப்படிப்பட்ட காரியத்தைச் செய்து

வருகிறது. அவர்கள் நன்றி பாராட்ட வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :- தலைவர் அவர்களே, கட்டபொம்மன் வாரிசுக்கு நம்முடைய அரசு தியாகிகள் மானியம் வழங்கி வருவதைப் போன்று சின்ன மருது, பெரிய மருது போன்றவர்களின் பரம்பரையினருக்கும் தியாகிகள் மானியம் வழங்குவதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- உண்மையான வாரிசுகள் யார் என்று தெரிந்தால் அதைப்பற்றிக் கவனிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் :- தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைவதற்கு ஏற்பட்ட போராட்டத்திலே ஈடுபட்ட தியாகிகளுக்கு பென்ஷன் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த விவரங்கள் எந்த அளவிற்குச் சேகரிக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே சிறை சென்றவர்களுக்கு இது போன்ற ஓய்வூதியம் தரப்படுமா என்ற கேள்விக்கு நான் பதில் அளிக்கும்போது, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி தாய்த் தமிழகத்தோடு இணைவதற்காகப் போராடியவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். நான் அதற்குப் பதிலளிக்கும்பொழுது இரண்டும் சேர்த்து ஆலோசிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இரண்டும் சேர்த்து ஆலோசிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா :- தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் குடும்பத்திற்கு அரசு உதவித் தொகை அளிக்க திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- ஆம், தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் மனைவி திருமதி. செந்தியம்மாளுக்கு மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ. 150; 26.1.1970-லிருந்து, அவர் ஆயுள் வரை அரசு வழங்கியுள்ளது.

திரு. ஈ.எஸ். தியாகராஜன் :- திருத்தணி வட்டம் தமிழகத்தோடு இணைவதற்காக சிலம்புச் செல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் சிறை சென்றவர்களுக்கும், அதிலே உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கும் மானியங்கள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முதல்வர் மு. கருணாநிதி :- நாடு, மொழி, எல்லை இவைகளைக் காக்கப் போராடியவர்கள் யாராக இருந்தாலும் அரசு கவனிக்கும்.

உடன்பிறப்பே,

இந்த ஆதாரத்தை மட்டுமல்ல; இதோ மற்றொரு ஆதாரம் கூட திரு. மு. செல்லப்பன் எம்.ஏ.எம்.எட்., அவர்களால் எழுதி வெளியிட்டுள்ள வீரத் தியாகி விசுவநாததாஸ் என்ற புத்தகத்தில் 57-ஆம் பக்கத்தில் இருப்பதை எதிர்க்கட்சித் தலைவர் காணவேண்டுமென்று விரும்புகிறேன்.

"விசுவநாததாசின் இரண்டாவது மகன் காசிநாதன், பலமுறை முயன்றதின் காரணமாக அப்போது முதல்வராக இருந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் காசிநாதன், பிச்சம்மாள், தங்கத்தாய், முத்தைய தாஸ் ஆகிய (வாரிசுகள்)வர்களுக்கு ஐம்பது ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க உத்தரவிட்டார். பின்னர் அத்தொகை 150 ரூபாயாக உயர்ந்து தற்போது 750 ஆக உயர்ந்துள்ளது.

இப்படி அந்த வரலாற்றுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காசிநாதன் இறந்தபின் அவர் மனைவிக்கு உதவித் தொகை கிடைக்கவில்லை. வறுமை நிலையில் இருந்து வரும் தியாகியின் சந்ததியினர் அரசாங்கம் அளித்து வரும் இந்த உதவித்தொகை கொண்டுதான் உயிர் வாழ்ந்து வருகின்றனர். இல்லையேல் என்றோ மாண்டு போயிருப்பர். முதன்முதலில் இக்குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கி அவர்களை உயிர் வாழச் செய்து கொண்டிருக்கும் கலைஞர் மேலும் தேவையான உதவிகளைச் செய்வார் என்று நம்புகிறோம்"

என்றும் அந்த நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அந்த நம்பிக்கை வீண்போகாது என்பதற்கு அடையாளமாகத்தான் அண்மையில் இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் குமுதம் இதழில் எழுதியுள்ள கட்டுரையில் விடுத்த வேண்டுகோளை ஏற்று விடுதலைநாள் விழா கொடியேற்றும் நிகழ்ச்சியிலேயே அறிவித்திருக்கிறேன்; தியாகி விசுவநாததாசின் திருமங்கலம் வீடு அரசின் நினைவுச் சின்னமாகுமென்று!

அதுமட்டுமல்ல; இன்றைக்குத் தியாகிகளுக்கும் அவர்களின் சந்ததியினருக்கும் 31.3.1997 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசின் கொள்கைக் குறிப்பின்படி வழங்கப்படும் நிதி எவ்வளவு? எத்தனை பேருக்கு? என்ற விபரங்களும் இதோ :-

* விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மாநில அரசின் ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை (ரூ. 1500 மற்றும் மருத்துவப்படி ரூ. 15 உட்பட) 5,068 பேர்.

* மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ. 750 மற்றும் மருத்துவப்படி ரூ. 15 உட்பட) 1,892 பேர்.

* மத்திய அரசின் ஓய்வூதியம் பெறும், விடுதலை வீரர்கள் - மாநில அரசின் ஓய்வூதியத்தையும் கூடுதலாகப் பெறுபவர்களின் எண்ணிக்கை (31.3.1997 வரை ரூபாய் 250 மற்றும் மருத்துவப்படி ரூ. 15 என்ற அளவில் இருந்தது, 1.4.1997 முதல் ரூபாய் 500 மற்றும் மருத்துவப்படி 15 என்று உயர்த்தப்பட்டது) 2,507 பேர்.

மேலும், அண்மையில் சுதந்திர தினப் பொன்விழா ஆகஸ்ட் 15 அன்று கொண்டாடப்பட்டபோது -

சுதந்திரம் அடைந்த ஐம்பதாம் ஆண்டு பொன் விழா நினைவாக - இனிமேல் விடுதலைப் போர் தியாகிகளுக்கு மத்திய அரசு இந்தப் பொன் விழா ஆண்டில் அறிவிக்கும் ஓய்வூதியப் பயன் எவ்வளவோ - அந்த அளவுக்குச் சமமான பயனை மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் தியாகிகளும் பெற்றிட வழிவகை செய்யப்படும் என்றும் அறிவித்துள்ளேன்.

விடுதலைப் போரில் ஈடுபட்ட சரித்திர நாயகர்கள் கட்டபொம்மன், மருதுபாண்டியர், வேலு நாச்சியார், சுந்தரலிங்கம், பூலித்தேவன், அழகுமுத்துக்கோன், தீரன் சின்னமலை ஆகியோர்

நினைவாகக் கழக அரசு ஆற்றியுள்ள பணிகளும் ஆற்ற இருக்கிற பணிகளும் நாடறிந்த உண்மை என்கிறபோது நான் இன்னமும் விபரங்கள் கூற வேண்டுமா?

குறிப்பு :-

(20 ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாட்டில் ஓய்வூதியம் பெற்ற தியாகிகள் 5 பேர் மட்டுமே - இந்த எண்ணிக்கை 1973 கழக ஆட்சியில் 7673 ஆக உயர்ந்து 31.12.1975-ல் கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பு 8172 தியாகிகள் என வளர்ந்தது.

(அவர்களின் காலமானவர்கள் போக இப்போது 5068 தியாகிகள் தமிழக அரசின் மானியம் பெறுகிறார்கள்.)

அன்புள்ள,

மு. கருணாநிதி

(28-08-1997)

2376. காணவும் கேட்கவும் - கண், காது இல்லையா?

உடன்பிறப்பே,

இந்தச் சுதந்திர தினப்பொன்விழா ஆண்டில்தான் கருணாநிதிக்குத் தியாகிகள் மீது திடீரெனப் பாசம் வந்துவிட்டது என்று உண்மைகளை அறியாத திரு. சோ அவர்களைப் போன்ற சில நண்பர்கள் வார ஏடுகளில் எழுதி வருவது கண்டு வியந்து போனேன். 'தியாகிகளை மதிக்கும் திராவிட ஆட்சி' என்ற தலைப்பில் நான் இரண்டு நாட்களுக்கு முன்பு எழுதிய கடிதம் கண்டிருப்பாய். விடுதலைப்போராட்ட தியாகிகளை இந்த அரசு 1967 முதல் எவ்வாறு மதித்து, சிறப்பித்து, அவர்களது வறுமை போக்கிட உதவிகளை வழங்கி வருகிறது என்பதற்கு ஒரு நீண்ட பட்டியலே உண்டு.

மேலும் சிலவற்றைக் கூறுகிறேன். நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் காலமாகும் வரையில் அவருக்கு மாதந்தோறும் உதவிநிதி வழங்கியது இந்த அரசுதான் - வழங்கியவனும் நான்தான். தலைமைச் செயலகத்தில் கழக அரசு கட்டியுள்ள பத்து மாடிக் கட்டிடத்துக்கு நாமக்கல் கவிஞர் மாளிகை என்று பெயர் சூட்டியவனும் நான்தான்!

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மறைந்த போது என் தலைமையில் இருந்த கழக அரசு, அவருக்கு நினைவிடம் அமைத்ததையும் - மூதறிஞர் இராஜாஜிக்கு நினைவாலயம் அமைத்ததையும் சரித்திரம் உணர்ந்தவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு மறைத்தால் தவிர, உண்மையின் பேருருவை மறைக்க முடியுமா?

தில்லையாடி வள்ளியம்மையின் பெயரால் நகரமும் - நினைவு மண்டபமும் அமைத்தது 1969-ல் கழக அரசுதான் என்பதை நினைவு சரியாக இருப்பவர்கள் எவரும் மறுக்க முடியாதே!

காமராசர் மறைந்தவுடன் அவரது தொண்டரடிப் பொடி ஆழ்வாராக அவர் இல்லத்தில் பணியாற்றி வந்த வைரவன் அவர்களை நிர்க்கதியாக விடக் கூடாதென்று நண்பர் நாத்திகம் ராமசாமி கூறியதற்கிணங்க; அரசு சார்பில் தக்க ஊதியத்தில் நினைவு இல்லப் பணியில் அமர்த்தி, அவர் குடும்பம் வாழ வீடு ஒன்றும் ஒதுக்கியது இந்தக் கருணாநிதி தலைமையில் இருந்த கழக அரசுதான்!

அவ்வளவு ஏன்; பெரியவர் பக்தவத்சலத்தின் அருகிலேயே இருந்து பணிவிடை புரிந்த நண்பர் பாலு என்பவர், வசிப்பதற்கு வீடின்றி வருந்தியது கேட்டு அவருக்கும் வீடு ஒன்று வழங்கியது கடந்த ஆண்டில் இந்த அரசுதான்! வாரன் சாலையை 'பக்தவத்சலம் சாலை' என்று மாற்றியதுடன் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதும் இந்த அரசுதான்!

சிதம்பரனார் சிறையில் சித்திரவதைப்பட்டு இழுத்திட்ட செக்கை, 1969-ல் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தேடிக்கண்டுபிடிக்கச் சொல்லி, அதனைக்கொண்டு வந்து ராஜாஜி மண்டபத்துக்கு அருகில் பொதுமக்கள் பார்வைக்கு வைத்ததும் எல்லோரும் அறிந்த செய்தியே ஆகும்.

1989-ல் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு அன்னை சிவகாமி வளாகம் என்று பெயர் சூட்டினேன்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு குமாரசாமி ராஜா பெயரைச் சூட்டியவனும் நானேதான்!

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு சுப்ரமணிய சிவாவின் பெயர் சூட்டியதும் இந்த ஆட்சியில் தான்; 1989-ல்தான்!

விடுதலைப்போராட்ட வரலாற்று வீரர்கள், மன்னர்கள் நினைவுச் சின்னங்களாக - நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் பூலித்தேவன் மாளிகை என்றும், சுந்தரலிங்கம் வளாகம் என்றும் 1989-லேயே கழக ஆட்சியில் பெயர்களைத் தாங்கிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

விடுதலைப் போராட்டத் தியாகி வீரன் வாஞ்சிநாதன் மனைவிக்குத் தியாகிகள் ஓய்வூதியம் காங்கிரஸ் ஆட்சியிலே வழங்கப்படவில்லை. கழக ஆட்சியிலேதான் வழங்கப்பட்டது.

வீரன் வாஞ்சிநாதனின் நெருங்கிய நண்பரும், பேரவையிலே உறுப்பினராக இருந்தவருமான கோமதி சங்கர தீட்சிதர் அவர்களின் பிறந்தநாளை அரசின் சார்பிலே ராஜாஜி மண்டபத்திலே சீரோடும் சிறப்போடும் நடத்தியதும் கழக அரசுதான்.

தியாகச் செம்மல் திரு. செங்கல்வராயன் அவர்களின் பவள விழா நடத்தியதும் நமது கழகம்தான்!

1972-ஆம் ஆண்டு தூத்துக்குடியில் வ.உ.சி. அவர்களுக்குச் சிலை வைத்ததும் கழக அரசுதான்.

1972ஆம் ஆண்டு நடைபெற்ற வெள்ளி விழாவின் போது டெல்லி சென்ற சுதந்திரப் போராட்ட தியாகிகளை வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழக முதலமைச்சராக நானே புகைவண்டி நிலையத்திற்குச் சென்று வழியனுப்பி வைத்தேன்.

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்குக் கோட்டை கட்டியது மட்டுமல்லாமல், கட்டபொம்மனின் வாரிசுகளுக்குக் குடியிருப்புகளைக் கட்டித் தந்ததும் கழக அரசுதான்.

மதுரையிலே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரில் கழக அரசு காலத்தில் உசிலம்பட்டி, மேலநீலிதநல்லூர், கமுதி ஆகிய நகரங்களில் கல்லூரிகள் அமைக்கப்பட்டதும் நினைவில் கொள்ளத்தக்கதன்றோ! சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் மருது பாண்டியருக்கு நினைவகம் எழுப்பியதோடு அவருடைய வாரிசுதாரர்களுக்கும், கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கி வருவதும் கழக அரசுதான்.

மத்திய - மாநில அரசுகளின் ஓய்வூதியம் பெறும் தியாகிகள், விதவைகள், உரிய வயதடையாத குழந்தைகள் ஆகியோருக்குக் கழக அரசு 1.8.1980 முதல் மருத்துவப்படியாக மாதம் ஒன்றுக்கு பதினைந்து ரூபாய் வீதம் வழங்கி வருகிறது. மேலும் இவர்கள் அனைவருக்கும் அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தியாகிகளின் விதவைகளுக்கும், அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளுக்கும், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 5.11.96 முதல் இலவசப் பயணம் செய்ய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தியாகிகள் மறைவெய்தும்போது அவர்களது ஈமச்சடங்குகளை நிறைவேற்ற அவர்களது குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் நிதி உதவி கழக அரசு காலத்தில்தான் அறிவிக்கப்பட்டது. மேலும் விடுதலைப் போராட்ட தியாகிகள் மரணமடைந்தால் அவர்களுக்குத் தாசில்தார் தகுதிக்குக் குறையாத அரசு அலுவலர் ஒருவர் சென்று இறுதி வணக்கம் செலுத்த வேண்டுமென்று கழக அரசு காலத்தில்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

விடுதலைப் போராட்ட வீரரும், தமிழ் அறிஞருமான பரலி சு. நெல்லையப்பர் அவர்களுக்கு அரசு மாத ஓய்வூதியமாக நூறு ரூபாய் 1970இல் வழங்கியது. 1971இல் அவர் மரணமடைந்தால் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. அவரது மகள் பூங்கோதை தனது குடும்பம் நலிவுற்ற நிலைமையில் இருப்பதாக அரசுக்கு விண்ணப்பித்ததை ஏற்று ஒரு சிறப்பு நேர்வாக அதனைக் கருதி 16.10.1989 முதல் அவருடைய குடும்பத்திற்கு 500 ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்கிட கழக அரசுதான் ஆணை பிறப்பித்தது. அதுபோலவே சிதம்பரனாரின் பேத்தி திருமதி சேதுலட்சுமி விடுத்த வேண்டுகோளையேற்று 9.3.1989 முதல் ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டதும் கழக அரசுதான்.

உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற வ.ரா. அவர்களின் துணைவியாருக்கு 1990இல் ஓய்வூதியம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்க ஆணையிட்டதும் கழக அரசுதான். பெருந்தலைவர் காமராசரின் தமக்கையார் திருமதி நாகம்மாள் அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கழக ஆட்சியில் அப்போதே அவர் வீட்டுக்குச் சென்று பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகை அளிக்கப்பட்டது.

இதோ இப்போதுகூட பாஞ்சாலங்குறிச்சியை அடுத்த கவனர்கிரியில் வீரன் சுந்தரலிங்கம் பெயரால் நவீன கிராமம் சுந்தரலிங்கத்தின் வாரிசுகளுக்காக, 60 லட்சம் ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

உடன்பிறப்பே, இதோ பார்க்கிறாயே; இதுதான் திருமங்கலத்தில் இடிந்து கிடக்கும் வீரத்தியாகி விசுவநாததாசின் வீடு - இத்தனை ஆண்டுக்காலம் இதனை நினைவுச் சின்னமாக்க (20 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில்கூட) முன்வராத நிலையில்; இப்போது இந்த இல்லத்தைத் தியாகக் கலைஞன் விசுவநாததாசின்

பெயரால் நினைவு மண்டபம் எழுப்பிட இந்த அரசு முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆகஸ்டு 19ஆம் நாள் சட்ட அமைச்சர் தம்பி ஆலடி அருணாவும், தேவர் பேரவைச் செயலாளர் டாக்டர் ராமகிருஷ்ணனும் பூலித்தேவன் வாழ்ந்த நெற்கட்டும் செவல் என்ற இடத்திற்குச் சென்று கலனாகிக் கிடக்கும் பூலித்தேவன் மாளிகையைக் கண்டு வந்து, அதற்கான புகைப்படங்களையும் என்னிடம் அளித்துள்ளனர். மிக விரைவில் நெற்கட்டும் செவலில் பூலித்தேவனுக்கு நினைவு மாளிகை எழுப்பப்பட இருக்கிறது.

திராவிட இயக்கம் தேசிய விடுதலைக்கு விரோதமானது என்றும் - தேசத் தியாகிகளை மதிக்காத இயக்கமென்றும் - எழுதுகிற வார இதழாளர்கள், உண்மைத் தியாகி செங்கல்வராயன் அவர்கள், இந்த அரசு தியாகிகளை எத்துணைக் காலமாக மதிக்கிறது என்பதை எடுத்துரைத்து வருவதையும் - சுதந்திரப் பொன் விழா நாளன்று கவர்னர் மாளிகையில் தியாகி தளவாய் அவர்கள் பல தியாகிகளுடன் அணிவகுத்து வந்து என்னைப் பாராட்டி வெள்ளியால் ஆன கோல் ஒன்றைப் பரிசாக அளித்ததையும் கேட்காமல் பார்க்காமல் காதுகளையும் கண்களையும் மூடிக் கொள்கிறார்களே, ஏன்? கழகம் என்றால் அப்படி ஓர் ஒவ்வாமையா? (அலர்ஜி) கருணாநிதி என்றால் அவ்விதம் ஓர் எரிச்சலா?

பரவாயில்லை உடன்பிறப்பே, எலுமிச்சம் பழ எரிச்சல் முதலில் சிரமமாக இருக்கும் - ஆனால் பிறகு குளுகுளு என்று குளிர்ச்சி வழங்கும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(30-08-1997)

2377. பத்தரை மாற்றுத் தங்கக் கட்டி பறிபோனதே!

உடன்பிறப்பே,

நவம்பர் 14ஆம் நாள் காலை, ஜப்பானிய தொழில் நிறுவனங்கள் பலவற்றின் சார்பில் பத்து பிரதிநிதிகளைக்கொண்ட தூதுக்குழு ஒன்று என்னைத் தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலே சந்தித்து நீண்ட நேரம் பல விஷயங்களைப் பற்றி விவாதிக்கிறது. தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றம் குறித்து மேலும் நவீன யுக்திகளுடன் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற அடிப்படைக் கட்டமைப்புகள், வசதி வாய்ப்புகள், அரசின் ஒத்துழைப்பு, தொழிலாளர்களின் கடமை கட்டுப்பாட்டு உணர்வு எந்த அளவுக்குச் சிலாக்கியமாக இருக்கிறது என்பது பற்றியும் அரசின் சார்பில் நான் அளித்த விளக்கங்களைக் கேட்டு பல்துறை அதிகாரிகளுடன் கலந்து பேசிட அக்குழுவினர் விடை பெற்றுச் செல்கிறார்கள்.

நிறைந்த மகிழ்ச்சியுடன் தலைமைச் செயலகத்திலிருந்து புறப்படுகிறேன். என்னுடன் முரசொலி மாறனும், வீராசாமியும், துரைமுருகனும் வருகிறார்கள். ஆலிவர் சாலையில் வீட்டில் இறங்கிக் கொண்டு, உணவருந்த உட்காருகிறேன். தொலைபேசி மணி அடிக்கிறது. கோட்டையிலிருந்து தலைமைச் செயலாளர் பேசுவதாக சண்முகநாதன் சொல்கிறார்.

அவருடன் பேசுகிறேன். சார்! மத்திய இணை அமைச்சர் என்.வி.என். சோமு சென்ற ஹெலிகாப்டர் அருணாசலப் பிரதேசத்தில் மலைக்காட்டுக்குள் விபத்துக்குள்ளானதாகத் தகவல் வந்துள்ளது

இந்தச் செய்தியை முழுவதும் கேட்க முடியவில்லை. என் தலை சுற்றுகிறது. உணவருந்த அமர்ந்திருந்த நாற்காலியிலிருந்து சாய்கிறேன். துணைவியார் துடித்துப் போய் என்னைப்

பிடித்துக்கொண்டு சண்முகநாதனுக்குச் செய்தி சொல்ல, உடன் டாக்டர் ஓடி வருகிறார் அவர் வீட்டிலிருந்து - வீடு போய்ச் சேர்ந்ததும் சேராததுமாகத் தம்பி துரைமுருகனும், வீராசாமியும் அலறி அடித்துக் கொண்டு பறந்து வருகிறார்கள்.

அதற்குள் பிரதமர் குஜ்ரால் அவர்கள் என்னிடம் டெல்லியிலிருந்து தொலைபேசியில் தொடர்புகொண்டு தம்பி சோமு நம்மை விட்டுப்போய் விட்டார் என்ற சோகச் செய்தியை என் செவிகளிலும் சிந்தையிலும் தீப்பிழம்பாகப் பொழிந்து இரங்கல் தெரிவிக்கிறார்.

கதறியழுது கொண்டிருக்கும் என்னை டெல்லியில் இருந்தவாறு நிதியமைச்சர் நண்பர் சிதம்பரம் அவர்கள் ஆறுதல் கூறி அமைதிப்படுத்த முயற்சி செய்கிறார்.

வேதனையை அவராலேயே தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் என் தம்பியைப் பறிகொடுத்து நெஞ்சுடைந்து பதறும் என்னை யார்தான் தேற்றிட இயலும்.

எல்லாம் முடிந்து விட்டது. அருணாசலப்பிரதேசத்து மலைமுகடுகளுக்கும் காடுகளுக்குமிடையே என் ஆருயிர்த் தம்பியும் அவனுடன் பயணித்த பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் கணநேரத்தில் பிணமாகி விட்டனர்.

தொலைக்காட்சியில் இச் செய்தி Flash News ஆக ஓடுகிறது. துரைமுருகன் மீதும் வீராசாமி மீதும் சாய்ந்து கொண்டே, ஊர்ஜிதமாகி என் உயிரை வாட்டும் அந்த ஒற்றை வரிச் செய்தி கண்டு உரக்கச் சொல்லுகிறேன் - இந்தக் கொடுமைகளையெல்லாம் காணவும் கேட்கவும்தான் நான் இன்னமும் இருக்கிறேனா?

என் இதயத்தில் விழுந்த எத்தனை சம்மட்டி அடிகளால் நொறுங்கிச் சிதறிய வார்த்தைகள் இவை என்பதை, என்னை உணர்ந்த உடன்பிறப்பே; நீ நிச்சயம் உணர்வாய் என்றே நம்புகிறேன்.

ஒரு வயதுப் பிள்ளையாய், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் 1938-ல் அன்னையாருடன் சிறையில் அடைக்கப்பட்டு - சிறுவனாக இருந்தபொழுதே; தந்தை என்.வி.என். வழிநின்று தந்தை பெரியாரின் அன்பைப் பெற்று, அறிஞர் அண்ணாவின் அரவணைப்புக்குள் இலட்சியவாதியாக நிமிர்ந்து நின்று,

எந்நாளும் பாசம் மாறாத, பாதை தவறாத, பண்பு நிறைந்த என் தம்பியாகக் கட்சிப் பொறுப்பையும் ஆட்சிப் பொறுப்பையும் நிர்வகித்துப் புகழின் உச்சியில் நிலைத்து விட்ட அந்தத் தம்பிக்கு இரண்டு மூன்று திங்களுக்கு முன்புதானே மணிவிழா நடந்தது - அவரது மகள் கனிமொழிக்கு மணவிழாவும் நடந்தது.

எங்கள் குடும்பங்கள் இரண்டில்லை - ஒன்றுதான் உணர்வின் அடிப்படையில்; என்பதற்கு அடையாளமாகத்தானே - அந்த வீட்டில் மாறன் என்ற பெயரும் கனிமொழி என்ற பெயரும் திகழ்கின்றன என்பதை எண்ணி எண்ணிக் களித்திருக்கிறேனே; அந்தக் களிப்பினை வென்று காட்டிக் கண்ணீர்க் கடலன்றோ என்னைச் சூழ்ந்து அலை மோதுகிறது.

அடடா; என் தம்பிக்கு இறுதி அஞ்சலி செலுத்திடத்தான் எத்தனை தலைவர்கள் - எத்தனை கழகக் கண்மணிகள்!

பிரதமரென்ன, தமிழக ஆளுநர் என்ன, வாஜ்பேயி என்ன, பேராசிரியர் என்ன, மூப்பனார் என்ன, முலாயம் சிங் என்ன, மத்திய அமைச்சர்கள் மற்றும் தமிழகத்தில் உள்ள கட்சிகளின் தலைவர்களென்ன - என் தம்பியின் இறுதிப் பயணம் இராணுவ மரியாதையுடன்! அதில் இந்த அண்ணன் பெருமை கொள்ளவா முடிந்தது? எரியூட்டும் போது வெடித்த குண்டுகளை; ராணுவ வீரர்கள் மரியாதை நிமித்தம் வெடித்தனர், எனினும் - அவை என் இதயத்தை அல்லவோ; மேலும் துளைத்துத் தூளாக்கின!

அன்றொரு நாள் தந்தை என்.வி.என். அவர்கள் அமைச்சர் பொறுப்பிலிருக்கும்போது மரணப்படுக்கையில் கடைசியாகக் கண்களை மூடுவதற்கு முன்பு சோமு உள்ளிட்ட தனது குடும்பத்தினரை அழைத்து;

"நான் விடைபெறுகிறேன்.
நீங்கள் யாரும் கழகத்திற்கும்
கலைஞருக்கும் துரோகம் செய்யாதீர்."

- எனக் கூறி சத்தியம் வாங்கிக் கொண்டதைத் தம்பி சோமு பேசாத மேடையில்லை - எழுதாத ஏடில்லை!

அந்தச் சத்தியத்தைக் கடைசி மூச்சு அடங்கும் வரையில் கடைப்பிடித்த என் அன்புத்தம்பியை, ஆருயிர்த் தம்பியை,

அடக்கமே உருவான தம்பியை, அறிவும் ஆற்றலும் பெற்ற தம்பியை; அய்யகோ இழந்துவிட்டேன்!

"ஆம்; நமது கழகக்குடும்பம்
ஒப்பற்ற கொள்கைக் கருவூலத்தை
இழந்துவிட்டது.
பத்தரை மாற்றுத் தங்கக் கட்டி பறிபோய்விட்டது."

ஆயினும் நமக்கு நாமே ஆறுதல் வழங்கிக் கொண்டு அவர் விட்டுச் சென்றுள்ள பணிகளை அண்ணா வழியில் அயராதுழைத்து, நிறைவேற்றிட இந்நாளில் உறுதி பூணுவோம்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(17-11-1997)

2378. எழுஞாயிறே! இருட்டைக் கிழிப்போம் வா!

உடன்பிறப்பே,

இன்று புத்தாண்டுப் புதுநாள்! தமிழ்ப் புத்தாண்டாம் பொங்கல் திருநாளின் வருகைக்குக் கட்டியம் கூறும் நாளாக இந்நாள் ஆண்டுதோறும் அமைகிறது. உலக மக்கள் உவகைப் பெருக்குடன் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்ளும் இவ்வேளையில், கடந்த ஆண்டு நமது கால்களின் வேகத்துக்குத் தடையாகக் குறுக்கிட்ட கவலைகளையும் - நமது பயணத்திற்கு ஊக்கமூட்டி ஒலித்திட்ட வெற்றி முரசங்களையும் எண்ணிப் பார்த்து, இன்னமும் எண்ணத் தொலையாத பணிகள் நம்முன் கிடப்பதைக் கண்டு, களிப்பும், கவலையும் மாறி மாறி எதிர்ப்படுவதுதான் இலட்சிய வாழ்க்கையின் இலக்கணமெனக் கொண்டு, மேலும் இந்தப் பயணத்தில் முன்னேறிச் சென்றிடு எழுஞாயிறே! இருட்டைக் கிழிப்போம் வா - என உன்னை அழைத்து, என்னையும் தயார்ப்படுத்திக் கொள்கிறேன் என்பதைக் காட்டவே இந்தக் கடிதம்.

உலகத்தில் பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றான இந்தியத் திருநாடு, இந்தப் புத்தாண்டின் தொடக்கத்திலேயே ஜனநாயக வழியில் ஒரு மாபெரும் தேர்தலைச் சந்திக்கும் கடமைக்கு உள்ளாகியிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலும், சட்டமன்றத் தேர்தலும் நடந்து முடிந்து இருபதே மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன. அதற்குள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, அதற்கான தேர்தலை நாடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு, ஆசைப்பட்டு சில காங்கிரஸ் கனவான்கள் ஆப்பசைத்த நிலைக்கு ஆளான காரணத்தினால்தான் இந்தத் தேர்தல்!

இருபது மாதங்களாக அயல்நாடுகளின் உறவுகளைப் புதுப்பித்து உறுதிப்படுத்தி - இந்தியாவில் ஏற்பட்டுத் தீரவேண்டிய

கூட்டாட்சித் தத்துவத்திற்கு முன்னுதாரணமாக விளங்கி - மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து - சமூக நீதி காத்து - ஏழை எளியோர் சஞ்சலம் தீர்த்து - நேர்மையானதொரு ஆட்சியை வழங்கிய ஐக்கிய முன்னணி அரசை வஞ்சகத்தால் கவிழ்த்தோர், இன்று வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டு கடைத்தேற வழியின்றிக் கலங்கித் துடிக்கின்றனர். நமது முன்னணியோ மீண்டும் ஆட்சி அமைப்போம் என்ற நெஞ்சுறுதியுடனும் - நம்பிக்கையுடனும் கச்சைக் கட்டிக் களத்தில் நிற்கிறது.

இந்த முன்னணியில் இடம்பெற்றிருப்பது மட்டுமல்ல, முன்னணி உருவாகிடவே காரணமாக இருந்த கட்சிகளில் ஒன்றான நமது கழகம், இந்த இருபது மாத ஆட்சிப் பொறுப்பில், தமிழகத்தில் இணையற்ற சாதனைகள் பலவற்றை நிறைவேற்றி வருவதோடு, இன்னல்கள் - இடையூறுகள் - எரிச்சல்காரர்களின் எதிர்ப்புகள் - இவற்றுக்கெல்லாம் ஈடு கொடுத்து அரசின் இயந்திரம் நேரான வழியில் நேர்மை மிகு வழியில் சென்றிடவும் வகை கண்டுள்ளது.

கடந்த இருபது மாத காலத்தில், கணக்குப் பார்த்தால் எத்தனை எத்தனை தொழிற்சாலைகள் - எத்தனை எத்தனை அடிப்படை வசதிகள் - இந்த அரசின் ஒவ்வொரு துறையும் ஆற்றியிருக்கும் அரும் பணிகளையும், நிகழ்த்தியிருக்கும் சாதனைகளையும் பட்டியலிட்டுக் காட்ட இந்த ஒரு கடிதம் போதாது. பல கடிதங்கள் நான் எழுத வேண்டும்! எழுதுவேன் தொடர்ந்து!

இவற்றுக்கிடையே 1996 மே திங்களில், தமிழகப் பெருமக்கள் அளித்த தேர்தல் தீர்ப்புடன், நமக்குப் பெருங்கட்டளையொன்றையும் வழங்கியிருந்தனர்.

கோட்டைக்குள் புகுந்துகொண்டு ஊழல் சேட்டைகளால் நாட்டுக்கே கேட்டை உருவாக்கிவிட்ட கொள்ளைக் கும்பலைக் கூண்டிலே நிறுத்துக என்பதுதான் மக்களிட்ட அந்தக் கட்டளை.

அந்த ஆணையை நிறைவேற்றச் சட்டப்படி மேற்கொள்ள வேண்டிய காரியங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தப்பிக்க முடியாது எனினும், தண்டனையைத் தாமதப்படுத்துவோம் என்ற தந்திர வலை பின்னிக்கொண்டு, உத்தமர் கூட்டமன்றோ யாம்! என ஊரையும், உலகையும் ஏமாற்றிட, ஊளையிடும் நரிகளின் ஓங்காரக் குரலை வண்டுகளின் ரீங்காரம் என நம்பி வீழ்ந்திட நாடு தயாராக இல்லை. நல்லோர் தயாராக இல்லை.

நாங்கள் இருக்கிறோம் தயாராக! என எத்தர்கள் சிலரும், ஏமாளிகள் சிலரும், என்றும் போல் எடுபிடிகள் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். என்ன ஆச்சரியம் பார்! எங்கிருந்து ஊழல்? அதனை எரித்துப் பொசுக்குகிறோம்! எனத் தோள்தட்டித் தொடை தட்டிக் கிளம்பியோர் கூட, இதோ இங்கிருக்கிறது ஊழல் எனத் தெரிந்து - அந்த ஊழலை நீச்சல் குளமாக்கிக்கொண்டு நீந்திக் களிக்கும் காட்சி, கண்கொள்ளாக் கண்றாவிக் காட்சியாகிவிட்டிருக்கிறதே!

ஊழலை எதிர்த்துச் சட்டரீதியாகவும் - சமூக ரீதியாகவும் நாம் நடத்திக்கொண்டிருக்கும் யுத்தத்தினூடே, இதோ மற்றொரு யுத்தம், மதவெறியை எதிர்த்தும் நாம் நடத்த வேண்டியிருக்கிறது.

பெரியாரும், அண்ணாவும் நிலைப்படுத்திய திராவிட இயக்க உணர்வுகள் எனும் வேலிகளைத் தாண்டி, சிறுபான்மைச் சமுதாயங்களைக் கடித்துக் குதறும் மதவெறி வேங்கைகள் நுழைய முடியாது என்றும் - பெரும்பான்மைச் சமுதாய மக்களுக்கும், சிறுபான்மைச் சமுதாய மக்களுக்கும் இடையே முகிழ்த்துள்ள சகோதர பாசத்தைச் சீர்குலைக்க முடியாது என்றும் - பெருமிதத்துடன் நெஞ்சு நிமிர்த்தி நின்ற இந்தப் பூமியில், மதவெறி மாய்மாலத்திற்குச் சிவப்புக் கம்பளம் விரித்து, ஆலவட்டம் சுழற்றி, அதிர்வெடிகள் முழங்கிட அழைப்புக் கொடுத்து, அரவணைத்துத் தழுவிடும் அரசியல் கட்சிகள், இன்னமும் பெரியார், அண்ணா படங்களைப் போட்டுக் கொண்டு - போதாததற்கு அண்ணல் அம்பேத்கர் படத்தையும் போட்டுக்கொண்டு நாற்காலிக் கனவுகள் காண்கின்றனவே! அந்தக் கட்சிகளையும், அவற்றின் தோளில் ஏறி வரும் மதவெறியையும் ஒருசேர இனங்கண்டு வீழ்த்த வேண்டிய களத்தில் நாம் கடும் பணியாற்றிட வேண்டியுள்ளது.

இவர் யார்? அவர் யார்? எப்படிப்பட்டவர்? எத்தகையவர்? என யார் யார் நம்மால் அடையாளம் காட்டப்பட்டார்களோ, அதனை ஆரம்பத்தில் நம்பாதவர்கள் கூட, அப்படியும் இருக்குமா எனச் சந்தேகப்பட்டவர்கள் கூட, ஊரை ஏமாற்றியவர்களின் உண்மைச் சொரூபத்தைக் கண்டு, இதுவரை ஏமாந்து போனதற்காகத் தலைகுனிந்து நிற்கின்றனர்.

ஆனால், இதற்கிடையே ஊழலுக்கு உதட்டுச் சாயம் பூசி, கரிய மை கண்ணிமைகளில் தீட்டி, அதனை அலங்காரப் பதுமையாக

அம்பலத்தில் கொண்டுவந்து நிறுத்தவும் - மதவெறியை மஞ்சத்தில் அமர்த்தவும் - இவைகளின் மயக்குப் பார்வைக்கும், தளுக்குப் பேச்சுக்கும் திராவிடக் காளையரைப் பலியாக்கிக் களிக்கவும் சில பிறவிகள் சிலிர்த்துக்கொண்டு அலைவதை அந்தப் பிறவிகளே மறைத்திட முயன்றாலும், அந்த முயற்சி நெருப்புக் கோழி தன் தலையை மட்டும் ஒளித்துக் கொண்டு உடல் முழுமையையும் ஒளித்துக் கொண்டதாகக் கருதிடும் பித்துக்குளித்தனம் போன்றதுதான்! எனினும் உடன்பிறப்பே, இனம் தெரியாத இன்ப லாகிரியில் அடிமைகளாம் நமதருமைத் தமிழ்ச் சிங்கங்கள் சிக்கிக் கொள்ளாமல் அவர்களுக்கு அறிவுரை கூறி, அவர்கள் இருக்க வேண்டிய பாசறையும், களமும் எது என்பதைப் புரிய வைக்கும் பொறுப்பை உன் போன்றோர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மதவெறிச் செயலுக்கு உதாரணம் தேடி, நீயும், நானும் ஒரு காத தூரமா போக வேண்டும் - வேண்டாமே! பாபர் மசூதியை ஒரே நாளில் இடித்துத் தகர்த்து மண்மேடாக்கிய அந்தக் கொடிய செயல் ஒன்று போதுமே!

இன்னமும், அதற்காக மன்னிப்புக் கேட்கவோ, பரிகாரம் தேடவோ முனையாத மமதைக்குப் பெயர் மதவெறியன்றி வேறு என்ன?

அந்த வெறிச் செயல் நடைபெற, கரசேவையை அனுமதிக்க வேண்டுமென்று புதுடெல்லி அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே, அன்றைக்கே தனியொரு குரலாய் ஒலித்த குரல் யாருடையது?

அன்றைக்கு அந்தக் குரலை, பா.ஜ.க.வின் ஊதுகுழல் என வர்ணித்துக் கண்டித்து அறிக்கை விட்டவர், இன்றைக்குப் பூசிக் கொண்டுள்ள வர்ணம் என்ன?

அதேபோல, இங்கு ஊழல் சாம்ராஜ்யத்தை ஒய்யாரமாக நடத்தி, தனது லஞ்ச லாவண்ய மோசடிகளுக்கு உடன்பிறவாச் சகோதரியை, அதாவது உயிர்த்தோழியைக் கேடயமாக ஆக்கிக் கொண்டு - அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டு, தான் மட்டும் தப்பித்துக்கொள்ளலாம் என்று தந்திரம் செய்து, தமிழகத்தையே சூறையாடிய அம்மையார் கொள்ளையடித்துக் குவித்திருக்கும் சொத்துக்களையெல்லாம் பறித்துக் கொள்ள வேண்டுமெனப் பறைசாற்றிப் பயணம் நடத்தியோர், புலிப் பாய்ச்சல் நடத்தியோர் இன்று பூனைபோல, போயஸ் தோட்டத்து மூலையொன்றில்

பதுங்கிக் கொண்ட பரிதாபம்தான் என்ன? இவற்றையெல்லாம் மக்கள் மன்றம் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டுதானிருக்கிறது.

அந்த மன்றத்தை இன்று தனக்குத் துணையாகக் கிடைத்துள்ள ஒரு சிலரை விலைபோட்டு வாங்கியது போல வாங்கி விடலாமெனக் கனவு கொண்டிருக்கும் ஊழல் சக்திக்கு உரிய பாடம் கற்பிக்கவும் - அந்தச் சக்திக்கு உதவி புரிவதாக உறுதி அளித்து; அதனை ஊன்றுகோலாகக்கொண்டு இந்தத் தமிழ் மண்ணில் - திராவிட பூமியில் மதவெறி எனும் விஷ விதையை ஊன்றிடத் துடிப்போர்க்குத் தடுப்புச் சுவர் எழுப்பி விரட்டி அடிப்பதற்கும் - நமது கூட்டணி வெற்றிவாகை சூடிட வேண்டுமென்று நான் விளக்கவும் வேண்டுமோ!

கழகக் கண்மணியே! களம் அமைந்துவிட்டது! கட்டுப்பாட்டுடன் கடமையாற்றும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது - யாரை ஆதரித்து? எங்கே? எந்தக் கட்சியை?

இந்தக் கேள்விகளும், அதற்குரிய பதில்களும் முக்கியமல்ல! நாம் அமைக்கும் அணி, மத்தியில் கூட்டாட்சிக்கு வழிவகுக்கும் அணி - மாநிலத்தில் ஊழலைத் தலைகாட்டாமல் அடிக்கும் அணி - மதவெறிக் களைகள் முளைத்திட இம்மியும் - இடம் தராத அணி - பாட்டாளி வர்க்கத்திற்குப் பாதுகாப்பான அணி - தமிழ்க் கலாச்சாரத்துக்குக் கடுகளவும் தாழ்வு நேராமல் காத்திடும் அணி - சமூக நீதி அணி! சமத்துவ அணி! சமதர்ம அணி!

இந்த அணியில் உள்ள கட்சிகளின் வேட்பாளர் யாரோ, அவர் நமது கழகத்தின் வேட்பாளர்! கூட்டணியில் நாம் காலம் காலமாகக் கடைப்பிடித்து வரும் இலக்கணம் இதுதான்!

அன்புள்ள,

மு. க.

(01-01-1998)

2379. விளக்கமளிக்க விடுக்கும் நீட்டோலை!

உடன்பிறப்பே,

இந்தியாவின் இளந்தலைவர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதைத் தமது தேர்தல் பிரச்சாரத்துக்கு முதன்மைப் பொருளாக வைத்து, இ. காங்கிரஸ், 1991-ஆம் ஆண்டு மத்தியில் ஆட்சிக்கு வந்துவிட்டதைப் போலவே மீண்டும் வந்துவிடலாம் என மனப்பால் குடித்து, அதற்கென ஜெயின் கமிஷன் அறிக்கையைப் பயன்படுத்த முயன்று, திட்டமிட்டபடி ஆகா! ஊஹூ! என்று நாடகம் நடத்தி - இறுதியாக ஐக்கிய முன்னணி அரசுக்குத் தந்து கொண்டிருந்த ஆதரவை விலக்கிக் கொண்டதன் காரணமாக, வேறு வழி எதுவும் காண முடியாத சூழலில், குடியரசுத் தலைவர் அவர்கள் நாடாளுமன்றத்தைக் கலைத்து, புதிய தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பைச் செய்தார் என்பது நாடறிந்த உண்மையாகும்.

அதற்குப் பிறகு, புதிய தேர்தலுக்கான உத்திகளில் அரசியல் கட்சிகள் தீவிரமாகவும், நிதானமாகவும் ஈடுபடத் தொடங்கின. நிதானமாக ஈடுபடத் தொடங்கி, நிதானமாகவே செயல்பட்டு வருகிற அணிகளில் தி.மு.க. கூட்டணியும் ஒன்று என்பதை அறியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. கூட்டணியில் இடம்பெறக் கூடிய அளவுக்கு வேறு சில கட்சிகளின் அணுகுமுறைகள் அமைந்ததையும், அதனை, மதவெறியை மாய்ப்பதற்கும், மத நல்லிணக்கம் காண்பதற்கும், சமூகநீதியைக் காப்பதற்கும், மாநில அதிகாரங்களைப் பெருக்குவதற்கும், மத்தியில் கூட்டாட்சித் தத்துவம் நிலைப்பதற்கும் வலிமை சேர்க்கக் கூடியது எனக் கருதி, நமது கழகம் வரவேற்றுப் பாராட்டி, அந்தக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிட முன்வந்ததையும் நீயும் அறிவாய் - அன்றாடம் செய்தித்தாள்களைப் படிப்போர் அனைவரும் அறிவீகள்.

அவ்வாறு கழகத் தலைமையிடம் பேச வந்த புதிய கட்சிகளில் ஒன்று, பாட்டாளி மக்கள் கட்சியாகும். நான், புதிய கட்சி என்று குறிப்பிடுவதற்குக் காரணம் நம்முடன் கூட்டணி சேர வந்த புதிய கட்சி என்பதற்காகத்தான்! அது ஏற்கனவே பழைய கட்சிதான்! அதன் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் எனக்குப் பழைய நண்பர்தான்!

1996-ஆம் ஆண்டிலேயே நமது கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி இருந்திருக்க வேண்டும். இரண்டு நாடாளுமன்றத் தொகுதிகள் - இருபத்தி ஐந்து சட்டமன்றத் தொகுதிகள் என்று அக்கட்சியின் பிரதிநிதிகள் அண்ணா அறிவாலயத்தில் பேசிவிட்டுப் போனபிறகு - திரும்ப வந்து பதில் சொல்லாமலே தி.மு.க.வுடன் கூட்டணி இல்லையென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அறிவித்ததெல்லாம் பழைய கதை எனினும், இப்போது நினைவூட்டுவதற்குக் காரணம், நமது கழகம் என்றைக்கும் அவர்களை மதிக்கத் தவறியதில்லை என்று எடுத்துக் காட்டுவதற்காகத்தான். அக்கட்சித் தலைமையை என்றும் மதிப்பவர்கள் நாம் என்பதால்தான் நமது ஆட்சி அமைந்த பிறகு கூட, டாக்டர் அவர்களும், நண்பர் பேராசிரியர் தீரனும் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அளித்த கோரிக்கையை இந்த அரசு ஏற்று பாட்டாளிமக்கள் கட்சியினர் மீது கடந்த ஆட்சிக் காலத்தில் தொடரப்பட்டிருந்த நானூறுக்கு மேற்பட்ட வழக்குகள் ஆய்வு செய்யப்பட்டு திரும்பப் பெறப்பட்டுள்ளன என்பதையும் நினைவூட்டுவது இந்த நேரத்தில் என் கடமையாகிறது. அந்த வழக்குகளில் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்த பா.ம.க.வின் தொண்டர்கள் சுமார் ஐயாயிரம் பேர் இருக்கும். அவர்களெல்லாம் இந்த ஆட்சியில்தான் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

சரி! பிரச்சினைக்கு வருவோம் - இந்தத் தேர்தலில் என்னிடம் பாட்டாளி மக்கள் கட்சியின் பிரதிநிதிகளாக கட்சியின் தலைவர் தீரன் எம்.எல்.ஏ. அவர்களும் மற்றும் மணி எம்.எல்.ஏ. அவர்களும் பேசுவதற்காக வந்தார்கள். அதற்கு முதல் நாள் அக்கட்சியின் செயற்குழு வேலூரில் நடைபெற்று; அதனையொட்டி டாக்டர் அவர்கள் நிருபர்களுக்குப் பேட்டி அளித்திருந்தார். அந்தப் பேட்டியில் இந்தத் தேர்தலில் பா.ம.க., தி.மு.கழகத்துடனோ அல்லது அ.தி.மு.க.வுடனோ கூட்டு சேரும் என்பதாக அவர் அறிவித்திருந்தது ஏடுகளில் வெளிவந்திருந்தது.

நான் அச்செய்தியைத் தீரன் அவர்களிடம் சுட்டிக்காட்டி, இது எப்படிச் சரியாக இருக்க முடியும்! நேர் எதிரான இரண்டு கட்சிகளின் பெயர்களைச் சொல்லி இரண்டில் ஒன்றுடன் கூட்டணி என்பது பொருத்தமாகத் தெரியவில்லையே! என்று கேட்டேன்.

"ஏதோ நிருபர்கள் மடக்கி மடக்கிக் கேள்வி கேட்டார்கள் அதனால் அப்படிச் சொல்ல வேண்டிய நிலை"

என்பதாகத் தீரன் அவர்களும், அவருடன் வந்த மணி அவர்களும் சமாதானம் சொன்னார்கள். நான் அதைக்கூடப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல்,

தேர்தல் அறிவிப்புக்கே இன்னும் நாட்கள் அதிகமிருக்கின்றன. அறிவிப்பு வரவே இன்னும் இருபது நாட்களுக்கு மேலாகும். ஜனவரி முதல் வாரம்தான் அறிவிப்பு வரும் - பிப்ரவரி இரண்டாவது வாரத்தில்தான் வேட்புமனு தாக்கல் என்பது இருக்கக் கூடும் என்று தெரிகிறது. மார்ச்சில்தான் தேர்தலே முடிவடையும் என்றும் கூறப்படுகிறது. எனவே, நாம் கலந்து பேச நிரம்ப நேரமிருக்கிறது. கடந்த முறை போல் ஆகாமல், இந்த முறை நமது அணியில் பா.ம.க. நிச்சயம் இருக்கும், இருக்க வேண்டும் என்று நான் அவர்களிடம் கூறினேன்.

அடுத்து ஓரிரு நாட்களில் நமது கழகத்தின் செயற்குழு சென்னையில் டிசம்பர் 14-ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டு அதற்காக நான் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, டாக்டர் என்னைச் சந்திக்க விரும்புவதாகத் தொலைபேசிச் செய்தி வந்தது. செயற்குழுவில் கூட்டணி பற்றி எந்த முடிவும் எடுக்கப்போவதில்லை; எல்லாக்கட்சிகளுடனும் பேசி விட்டுத்தான் முடிவெடுக்க இருக்கிறோம். அதனால், இன்று செயற்குழு முடிந்ததும் சந்திக்கிறேன் என்று டாக்டர் அவர்களுக்கு அறிவிக்கச் சொல்லிவிட்டு, நான் செயற்குழு கூட்டத்தில் கலந்துகொள்ளப் போய்விட்டேன்.

செயற்குழு முடிந்தபிறகு கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியிடம் டாக்டர் ராமதாஸ் அவர்களிடம் சந்திப்புக்கான நேரம் கேட்குமாறு கூறினேன். அவரும் பலமுறை முயன்று, இறுதியில் அந்த முயற்சியில் தோல்வியடைந்துவிட்டதாகவும், வேண்டுமென்றே டாக்டர் அவர்கள் தன்னிடம் பேசுவதைத் தவிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையே வந்த செய்திகள் என்னைத் திடுக்கிட வைத்தன. ஏற்கனவே இரண்டு மாதங்களுக்கு முன்பே, பா.ம.க. சார்பில் ஒரு முக்கியமான தலைவர் மூலம் அ.தி.மு.க.வுடன், உடன்பாட்டுப் பேச்சு வார்த்தை முடிந்துவிட்டதாகவும், தி.மு.க.வுடன் பேச்சு வார்த்தை முயற்சி - தி.மு.க. மதிக்காமல் நடந்து கொள்கிறது என்ற குற்றச்சாட்டு - எல்லாமே அந்தக் கட்சியின் தூய்மையான தொண்டர்களை நம்ப வைப்பதற்காக நடத்தப்படுகிற திட்டமிடப்பட்ட நாடகம் என்பதும் தெளிவான உண்மைகளாக இருக்கவே நான் திடுக்கிட்டேனேயல்லாமல் வேறல்ல!

உறுதிபடைத்த தலைவர்களில் ஒருவர் என்று நான் யாரை நம்பினேனோ, அவரா இப்படி! என்ற சஞ்சலம் என்னைக் கப்பிக்கொண்டது.

கடந்த ஆட்சியில், அவர் சிறைப் பிடிக்கப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டபோது - அவரைப் பற்றி அந்நாள் முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் பேசிய கடுமையான மொழிகளும், அந்தக் கட்சியையே தடை செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்ததையும் - அந்த வேலூரில் சிறையிலிருந்த அவரைக் காண நானும், கழக நண்பர்களும் ஓடோடிச் சென்றதையும் - அக்கட்சியுடன் இணைந்து பல போராட்டங்கள் நடத்தியதையும் - பழகியதையும், பாசம் கொட்டியதையும், அவர்களும் அதுபோல நேசக்கரம் நீட்டியதையும் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியவில்லை.

என்செய்வது! எல்லாவற்றையும் கடந்த நரித்தனம் இரு கட்சிகளுக்குமிடையே புகுந்து அவரை நம்மிடமிருந்து மட்டுமல்ல, அவர் கட்டிக்காத்த புரட்சிகரமான கொள்கைகளிடமிருந்தும் அவரைப் பிரித்துவிட்டதே - கூடாதோர் நட்புக்குக் கூட்டிவைத்து விட்டதே என்ற கவலையுடன்தான் இந்தக் கடிதம் எழுதியுள்ளேன்; கண்டன மடல் அல்ல இது! விபரமறியாமல் இருப்போர்க்கு விளக்கமளிக்க விடுக்கும் நீட்டோலை! அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

(02-01-1998)

2380. அரசியல் நாகரிகத்துக்கு அறைகூவல்!

உடன்பிறப்பே,

பாரதீய ஜனதாவுக்கும், அ.தி.மு.க.வுக்கும் உறவும், உடன்பாடும் ஏற்பட பகீரதப்பிரயத்தனம் செய்து வெற்றி கண்டவர் - அதே மூச்சில் தி.மு.க.வுக்கும், த.மா.கா.வுக்கும் கூட்டணி ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொள்ள தனது மூளை முழுவதையும் விஷமாக்கிக் கொண்டு வியர்வை சிந்த வேலை செய்பவர் - இந்தப் பார் போற்றும் அறிவுலக மேதையென்று தன்னை எண்ணிக் கொண்டு நிலைக்கண்ணாடியில் நிமிடத்துக்கு நிமிடம் முகம் பார்த்துக் கொள்பவர் - ஆம்! ஒரு வாரப் பத்திரிகையாளர்! சென்னை எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் நான் எம்.ஜி.ஆரின் மார்பளவுச் சிலையைத் திறந்து வைத்தது குறித்து மனம் புழுங்கி, அடடா! தெரியுமா சேதி? எம்.ஜி.ஆரின் விசுவாசிகளைக் கவர்ந்திழுக்கத்தான் கருணாநிதி அந்தச் சிலை திறப்பு வேஷம் போட்டிருக்கிறார் என்று விமர்சனக் கட்டுரை தீட்டியுள்ளார்.

தி.மு.க. என்றாலே, அவருக்கு உடலோடு ஒட்டியதும், உள்ளத்தோடு ஒட்டியதுமான காரணம் தெரியாத அலர்ஜி உண்டு என்பதை நான் பல முறைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

பாவம்! அவருக்கு எம்.ஜி.ஆரின் உண்மையான விசுவாசிகள் யார் என்பதே தெரியவில்லையா? அல்லது தெரிந்திருந்தும் தனது திரித்துக் கூறும் திருப்பணிக்கு வலுச்சேர்ப்பதற்காக இப்படி ஒரு வாதத்தை எழுப்பிப் பார்க்கிறாரா? என்ற கேள்விகளுக்கெல்லாம் இடமில்லை. அவரது குருதியோட்டத்துடன் கலந்தது தி.மு.க.வை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வு.

ஒன்றை அவர் நினைவுபடுத்திக் கொள்ளாவிட்டாலும், அவரது வாசகர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியது என் கடமையாகிறது.

1989-ல் தி.மு.க. ஆட்சி அமைந்தபோது, எம்.ஜி.ஆர். கழகத்தின் தலைவர் அருமை நண்பர் ஆர்.எம்.வீ. அவர்கள்,

எனக்கொரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் தொடக்க விழா நிகழ்ச்சி, எம்.ஜி.ஆர். அவர்களின் திடீர் மறைவு காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. அந்தப் பல்கலைக் கழகத்தின் தொடக்க விழாவை உங்கள் அரசு முன் நின்று நடத்தவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

எந்தவிதமான தயக்கமுமின்றி, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் தொடக்க விழாவை - அன்றைய குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களை அழைத்து, பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே மிகச் சிறப்புடன் நடத்தி வைத்தபோது இந்த வாரப் பத்திரிகையாளர், வாய்மூடிக் கொண்டுதானிருந்தார்.

அதனைத் தொடர்ந்து சில மாதங்களுக்குப் பிறகு, அறந்தாங்கி நகரில் எம்.ஜி.ஆர் சிலையை நான் திறந்து வைக்க. வேண்டுமென்று அ.தி.மு.க.வின் மற்றொரு அணியின் பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு அவர்கள் கேட்டுக்கொண்டபோது, அதனையேற்று அந்தச் சீர்மிகு சிலைதிறப்பு விழா நிகழ்ச்சியிலே நான் கலந்துகொண்டேன் என்பது, அப்போது இந்த வாரப் பத்திரிகை ஆசிரியரின் கவனத்திற்கு வரவில்லை போலும். அது நடந்து ஆறு ஏழு ஆண்டுகள் கடந்து விட்டதால், இப்போது இவருக்கு நினைவுக்கு வராமல் மறந்து விட்டது போலும்!

சரி! 1996-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கழகம் வெற்றி பெற்று நான்காவது முறையாக நான் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் அருமை நண்பர் ஆர்.எம்.வீ. இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். மற்றும் கலையுலகத்தினர் ஏற்கனவே எவ்வளவோ வலியுறுத்தியும், தமிழக அரசின் திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். பெயரை வைக்க மறுத்து, தனது பெயரையே ஜெயலலிதா சினிமா சிட்டி என்று வைத்துக்கொண்டதை அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டி; அந்தத் திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்டவேண்டுமென்றதை ஏற்றுக்கொண்டு உடனடியாக 'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்' என்று பெயர் வைத்தது, இந்த வாரப் பத்திரிகையாளருக்கு நினைவுக்கு வராமலே போய்விட்டது.

எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் - எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் - அறந்தாங்கி எம்.ஜி.ஆர். சிலை திறப்பு -

இவையெல்லாம் தேர்தல் நேரத்திலே அல்ல! எம்.ஜி.ஆர். விசுவாசிகளைக் கவருவதற்காக அல்ல!

தேர்தல்கள் முடிந்து நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலகட்டத்தில் எம்.ஜி.ஆர். நினைவாக ஆற்றப்பட்ட பணிகள் என்பதே; வார இதழாளருக்கல்ல; அதன் வாசகர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியவனாக இருக்கிறேன்.

இப்போது எம்.ஜி.ஆர். நினைவிடத்து முகப்பிலே அவரது மார்பளவுச் சிலை திறந்ததற்கான சிறந்த காரணம்கூட ஒன்றுண்டு.

ஆறு ஏழு மாதங்களுக்கு முன்பு நண்பர் நாத்திகம் இராமசாமி அவர்கள் என்னைச் சந்தித்து ஒரு கோரிக்கை எழுப்பினார்.

கிண்டி காந்தி மண்டபத்தில் காந்தியடிகளின் மார்பளவுச் சிலை அதன் முகப்பில் வைக்கப்பட்டுள்ளது. கிண்டி ராஜாஜி நினைவுமண்டபத்தில் ராஜாஜியின் மார்பளவுச் சிலையை வைத்துள்ளீர்கள். அதைப்போல காமராஜர் நினைவு மண்டப முகப்பிலும் காமராஜர் சிலையை வைக்க வேண்டும்.

இதுதான் அவரது கோரிக்கை. நான் அவரிடம் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மேலும் சொன்னேன்.

‘‘நண்பரே! காந்தியடிகள் மார்பளவுச் சிலை காந்தி மண்டபம் இருப்பது போல - ராஜாஜி நினைவு மண்டபத்தில் ராஜாஜியின் மார்பளவுச் சிலை இருப்பது போல - காமராஜரின் நினைவு மண்டப முகப்பிலும் அவரது மார்பளவுச் சிலை வைக்கப்படும். அதேமாதிரி அண்ணா சதுக்கத்து முகப்பிலும், எம்.ஜி.ஆர். சதுக்கத்து முகப்பிலும் அண்ணா சிலையும், எம்.ஜி.ஆர். சிலையும் மார்பளவு உள்ளவை வைக்கப்படும்’’

என்று நான் கூறியது அப்போதே ஏடுகளில் வெளிவந்துள்ளதை வாரப் பத்திரிகை ஆசிரியர் தனக்கு வசதியாக மறந்து விட்டார்.

அறிவித்தவாறு, அக்டோபர் திங்கள் காமராசர் அவர்களின் நினைவுநாளான (அக். 2) அன்று அவரது நினைவு மண்டபத்தில் அவரது மார்பளவுச் சிலையை நான் திறந்து வைத்தேன்.

வார இதழ் ஆசிரியர் அல்ல; அவரது வாசகர்கள் அறிந்துகொள்ள வேண்டியது; இந்த மூன்று மார்பளவுச் சிலைகளும் அவர்களது

நினைவிடங்களின் முகப்பில் அவர்களது நினைவுநாளன்று திறந்து வைக்கப்படுமென்று நான் அறிவித்தது நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட; அல்லது அறிவிக்கப்படுமென்று யூகிக்கப்பட்ட காலத்தில் அல்ல! ஆறு மாதங்களுக்கு முன்பு!

காமராஜரின் விசுவாசிகளைக் கவருவதற்காக - எம்.ஜி.ஆரின் விசுவாசிகளைக் கவருவதற்காக, அண்ணாவின் விசுவாசிகளைக் கவருவதற்காக - எனத் திட்டமிட்டு நடத்தப்பட்ட அல்லது நடத்தப்படும் காரியங்களல்ல; கடமையுணர்வின் செயல்பாடுகள் என்பதை நல்ல உள்ளங்கள் புரிந்து கொள்வது சுலபம்! நஞ்சு உள்ளங்களுக்குக் கொஞ்சம் கஷ்டம்!

எத்தனையோ ஆண்டுக்காலம் பிரிக்க முடியாத நண்பர்களாகக் கலையுலகிலும் அரசியலிலும் இருந்த நானும் எம்.ஜி.ஆரும் 1972-ல் பிரிக்கப்பட்டோம்.

பின்னர் ஏற்பட்ட அரசியல் மோதல்களில் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதும், ஒருவர்மீதொருவர் புகார் கொடுப்பதும் தொடர்கதையாக இருந்ததுண்டு! காரணம்; இருவரும் இரு கட்சிகளின் தலைவர்கள்!

ஆனால், ஒரே கட்சியில் இருந்து கொண்டு, அதுவும் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்துகொண்டு, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். கடுமையான நோயுற்றுப் பேச முடியாத நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தபோது - இதுதான் சமயமென்று எம்.ஜி.ஆரை அகற்றிவிட்டுத் தன்னை முதல்வராக்க வேண்டுமென்று அன்றைய பிரதமர் ராஜீவ்காந்திக்கு எழுதிய கடிதத்தில், தனது வளர்ச்சியையும் செல்வாக்கையும் கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்று ஜெயலலிதா குறிப்பிட்டு, அந்த அம்மையாரின் கைப்பட எழுதப்பட்ட ஆங்கிலக் கடிதம் பத்திரிகைகளில் பிளாக் செய்து அப்படியே வெளியிடப்பட்டதே, அப்போது இந்த வார ஏட்டின் ஆசிரியர் எங்கே போனார்? எந்த நாட்டில் இருந்தார்?

ஈரோடு நகரில் திருநாவுக்கரசு அவர்கள் அமைக்க விரும்பிய எம்.ஜி.ஆர். சிலைக்கு அனுமதி தர மறுத்து அந்தச் சிலையையே இரவோடு இரவாக ஜெயலலிதா ஆட்சியில் திருடிக் கொண்டு போய் போலீஸ் லாக்கப்பில் வைத்து விட்டார்களே; அப்போதெல்லாம் வாரப் பத்திரிகையாளரின் வாய்மை (அப்படியொன்று இருந்தால்) தேடிச் சென்ற புகலிடம்தான் எதுவோ?

உடன்பிறப்பே, மறைந்த தலைவர்கள் - தியாகிகள் - அறிஞர்கள் - ஆன்றோர் - சான்றோர் - இவர்களின் நினைவு போற்றி மரியாதை செலுத்துகின்ற மனிதாபிமானப் பண்பைக் கூட சில அரசியல் கோமாளிகள் களங்கப்படுத்திட எண்ணிப் பேசுவதும், எழுதுவதும் இந்தத் தமிழ் நிலத்தில் ஆண்டாண்டு காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் அரசியல் நாகரிகத்துக்கு அறைகூவல் விடும் அவமானகரமான செயலாகத்தான் இருக்கிறது.

1959லேயே காமராசர் சிலையைச் சென்னை தி.மு.க. மாநகராட்சி மன்றம் பண்டித நேருவை அழைத்துத் திறந்து வைத்தது.

எத்தனையோ எதிர்ப்புக்கிடையே காந்தியடிகள் சிலையை, வேலூர் - கழக நகராட்சி மன்ற சார்பில் 3.1.1954 அன்று அறிஞர் அண்ணா திறந்து வைத்தார்.

சில மாதங்கள் முன்பு திரு. மூப்பனார் அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் தந்தை பெரியார் சிலையைத் திறந்து வைத்தார்.

அண்மையில் சென்னை காமராஜர் சாலையில் நேத்தாஜி சிலையை நான் திறந்து வைத்தேன்.

அதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் காங்கிரஸ் தியாகி ருக்மணி லட்சுமிபதி சிலையைத் திறந்து வைத்தேன்.

வரும் பிப்ரவரி 13-ஆம் நாள் கிண்டியில் பக்தவத்சலம் நினைவு மண்டபம் திறக்கப்பட இருக்கிறது.

வரும் 17-ந் தேதி கோபியில், எம்.ஜி.ஆர். சிலை திறப்பதற்கு திரு ஆர்.எம்.வீ. அவர்கள், என்னிடம் மூன்று மாதங்களுக்கு முன்பே கேட்டு அதற்கும் ஒப்புதல் அளித்துள்ளேன்.

ராஜாஜி மறைந்தபோது பெரியார் கண்ணீர் வடித்தார்.

ஆயிரம் கருத்து வேறுபாடுகளுக்கிடையேயும் மலர்ந்திடும் இந்த மனித நேயப் பண்பாட்டை - அரசியல் நாகரிகத்தை அந்தத் தலைவர்களின் விசுவாசிகளைக் கவர்வதற்காக என்று கதைப்பது கடைந்தெடுத்த விஷமத்தனம் - விஷ மனப்பான்மை என்பதன்றி வேறென்ன உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(03-01-1998)

2381. பழக்கப்பட்டுப்போன கட்டுக்கதை!

உடன்பிறப்பே,

நெல்லையில் தனது மாநாட்டில் மற்றும் பேரணியில் கலந்துகொண்டோரின் மொத்தத் தொகை 3.5 லட்சம் (மூன்று புள்ளி அஞ்சு லட்சம்) பேர் என்று நிருபர்களிடம் ஜெயலலிதா சொன்னதை, நிருபர்கள்தான் தவறாக எழுதிக் கொண்டார்களோ அல்லது பத்திரிகை அலுவலகங்களில் அச்சாகும்போது இடையிலே இருந்த புள்ளி விழுந்து போய் விட்டதோ தெரியவில்லை; முப்பத்தி ஐந்து லட்சம் பேர் என்று அவர் கூறியதாகச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

சென்னையில் எம்.ஜி.ஆர். சிலையைத் திறக்க 1990-ல் நீங்கள் நடத்திய பேரணியை விட இந்த நெல்லைப் பேரணியிலும் மாநாட்டிலும் கூட்டம் குறைவாகத்தானே இருக்கிறது என்று நிருபர்கள் கேட்டிருக்கின்றனர்.

உடனே ஜெயலலிதா, ஓ! நீங்கள் தி.மு.க. - த.மா.கா. கட்சிகளின் ஆதரவு நிருபர்களா? அதனால்தான் கூட்டம் குறைவு என்கிறீர்கள்! என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்.

பாவம்! நிருபர்கள் - அவர்கள் அப்படிக் கேட்டதற்குக் காரணம் 1990-ல் ஜெயலலிதா நடத்தியது அ.தி.மு.க.வினர் மட்டுமே கலந்துகொண்ட பேரணி - ஆனால், நெல்லை மாநாடும் பேரணியும் அ.தி.மு.க. மட்டுமல்ல, பா.ஜ.க. தொண்டர்களும், ம.தி.மு.க. தொண்டர்களும், பா.ம.க. தொண்டர்களும், ஜனதா கட்சி தொண்டர்களும் இன்னும் சில தோழமைக் கட்சிகளின் தொண்டர்களும் கலந்துகொண்ட நிகழ்ச்சியாகும். எனவேதான், எதிர்பார்த்த அளவு கூட்டமில்லையே என்று பழைய அ.தி.மு.க. மாநாட்டு நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்குக் கட்சி முத்திரை குத்திவிட்டார் ஜெயலலிதா அம்மையார்.

அத்துடன் நிறுத்தாமல் இன்னும் இருபது லட்சம் பேர் அதிகமாக வந்திருப்பார்கள். தி.மு.க. அரசின் கெடுபிடிகளாலும், அரசு விளைவித்த இடையூறுகளினாலும் வரவேண்டிய கூட்டத்தின் அளவு சற்றுக் குறைந்து விட்டது என்றும் அவர் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்.

உடன்பிறப்பே, உனக்கும், உன் சார்பாக நாட்டு மக்களுக்கும் இரண்டு நிகழ்வுகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1976-க்கு முன்பு கழக ஆட்சியில் நான் முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்தபோது, கோவை மாநகரில் அண்ணாவின் வெண்கலச்சிலையொன்றை முக்கியமான ஓர் இடத்தில் திறந்து வைத்தேன். அந்தச் சிலை, கடந்த ஜெயலலிதா ஆட்சியின்போது, நள்ளிரவில் லாரி ஒன்று மோதி உடைந்து போய்விட்டது. அந்தச் சிலையிருந்த இடத்தில் அண்ணாவின் வேறொரு வெண்கலச் சிலை வைத்திட கோவைக் கழகத்தினர் முயற்சி மேற்கொண்டு - அரசிடம் அனுமதி கோரினர். சிலையும் தயாராகி விட்டது. தயாரிக்கப்பட்ட அண்ணா சிலை, அனுமதிக்காகப் பல மாதங்கள் காத்துக் கிடந்த நிலை. அண்ணா சிலையை, கழகம் அமைக்கக் கூடாது - அதை என் கையால் திறக்கக் கூடாது என்று ஓர் உயர்ந்த அரசியல் நாகரிக நிலை எடுத்து - ஜெயலலிதா அரசு அனுமதி கொடுக்க மறுத்து விட்டது.

பின்னர், சிலை அமைப்பதற்காக ஒரு போராட்டம் அறிவிக்கப்பட்டு, அந்தப் போராட்டத்திற்குக் கோவை மாநகரில் நானே தலைமை வகிப்பதென்றும் அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர்தான் ஜெயலலிதா அரசு, சிலை அமைக்க இணக்கம் தெரிவித்து, ஆனால், வேறொரு இடத்தில்தான் சிலை வைக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்து அனுமதி அளித்தது. அதனையேற்று, அண்ணா சிலையை அரசு குறிப்பிட்ட இடத்தில் நான் திறந்து வைத்தேன்.

உடன்பிறப்பே, இந்த நிகழ்ச்சியை ஞாபகம் வைத்துக் கொண்டு, இதோ இப்போது நடந்த மற்றொரு நிகழ்ச்சியையும் பார்!

நெல்லையில் அ.தி.மு.க. மாநாட்டையொட்டி எம்.ஜி.ஆர். சிலை வைப்பதற்காக, மாவட்ட அரசு அதிகாரிகளிடம் அந்த மாவட்ட அ.தி.மு.க.வினர் அனுமதி கோரி, சிலை வைத்திட மூன்று இடங்களைக் குறித்துக் கேட்டுள்ளனர். மாவட்ட அரசு

அதிகாரிகள் அ.தி.மு.க.வினர் கேட்டுள்ள மூன்று இடங்களும் போக்குவரத்து நெரிசல் மிக்க இடங்கள் என்றும், எனவே, அந்தக் குறிப்பிட்ட மூன்று இடங்களும் தர இயலாது என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கும் கருத்துரு கொண்ட கோப்பு என் பார்வைக்கு வந்தது. நான் அதிகாரிகளின் கருத்துருவை ஏற்றுக் கொள்ளாமல், நெல்லையில் எம்.ஜி.ஆர். சிலை வைக்க அ.தி.மு.க. கேட்கும் அந்த மூன்று இடங்களில் எது இடைஞ்சல் குறைவாக உள்ள இடமோ, அந்த இடத்தில் அனுமதி கொடுக்கலாம் என்று டிசம்பர் 4-ஆம் தேதியே ஆணை பிறப்பித்துக் கோப்பில் எழுத்து மூலம் தெரிவித்தேன்.

நெல்லை மாநகராட்சி மன்றத்திற்கும் அரசின் இந்தக் கருத்து எடுத்துக் கூறப்பட்டு, அந்த மன்றமும் காலம் தாழ்த்தாது அதற்கான அனுமதித் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுத்தது.

நெல்லை நகரில் மிக முக்கியமான பகுதியில் போக்குவரத்துப் போலீசாருக்கான குடையையும் இடித்துத் தள்ளி அகற்றிவிட்டு, எம்.ஜி.ஆர். சிலை வைக்க பீடம் கட்ட அனுமதிக்கப்பட்டதைப் பல ஏடுகள் படம் பிடித்து வெளியிட்டிருப்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

ஜெயலலிதா அரசு, அண்ணா சிலை விவகாரத்தில் தி.மு.க.விடம் எப்படி நடந்துகொண்டு, எப்படி இறங்கி வந்தது என்பதற்கும் - ஆனால், தி.மு.க. அரசு, எம்.ஜி.ஆர். சிலை விவகாரத்தில் அ.தி.மு.க.விடம் எப்படி நடந்து கொண்டது என்பதற்கும் - முறையே கோவையும், நெல்லையும் உதாரணங்களாக விளங்குகின்றனவா அல்லவா?

அதுமட்டுமல்ல, இந்த மாநாட்டுக்காக நெல்லை மாநகரத்தில் சாலைகள், வழிகள் அனைத்திலும் வரவேற்பு வளைவுகளையும் - போக்குவரத்துக்கு இடையூறாகக் கோபுரங்களையும் அமைத்திட சாலைகளில் விதிகளை மீறி குழிகள் தோண்டப்பட்டுள்ளதையும் கூட, அதிகாரிகள் கண்டும் காணாமலேதான் இருந்துவிட்டனர்.

எம்.ஜி.ஆர். சிலை அமைத்திட, அதிகாரிகளின் கருத்துகளை ஏற்காமல் உடனே அனுமதி கொடுத்தமைக்காக நண்பர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் கூட, தொலைபேசி மூலம் எனக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இத்தனையும் தெரிந்திருந்தும், இவர்களின் மாநாட்டுக்கும் பேரணிக்கும் தி.மு.க. அரசு பல இடையூறுகளைச் செய்துவிட்டது என்று ஜெயலலிதா செய்தியாளர்களிடம் கூறியிருப்பது, வெறும் அரசியல் பசப்பலே தவிர, வேறு எதுவுமில்லை.

போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி, இவர்களின் மாநாடும், பேரணியும் அமைதியாக நடைபெறுவதற்குப் போலீசார் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் - இவர்களின் மாநாட்டுக்கு வருவோர் தவிர, வெவ்வேறு பணிகளுக்காக நெல்லைக்கு வருவோர் - நெல்லை வழியாகப் போவோர் - என்ற நிலையில் பொதுமக்களின் சௌகரியத்திற்காகச் செய்த ஏற்பாடுகளையும் - இவர்களின் மாநாட்டுக்கு அரசு செய்த இடையூறு என்பது, எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சிகளுக்கு இடையூறு விளைவித்தே பழக்கப்பட்டுப்போன பழைய மகாராணியின் கட்டுக்கதை!

அன்புள்ள,

மு. க.

(04-01-1998)

2382. சரித்திரத்தில் இடம் பெறும் சான்றிதழ்கள்!

உடன்பிறப்பே,

நான் குற்றமற்றவள்! நேர்மையின் திருவுருவம்! நியாயத்தின் வடிவம்! நீதியின் உறைவிடம்! ஊழலுக்கு அப்பாற்பட்ட உத்தமி! என்மீது எந்தக் கிரிமினல் குற்றமும் இல்லை! தூய்மையின் அவதாரமே நான்தான்!

இப்படியெல்லாம் தனது ஊழலுக்கு உடந்தையாக இருக்கும் கட்சிக்காரர்களிடத்தில் உரைத்து வந்த ஜெயலலிதா, நெல்லையில் நடத்திய மாநாட்டில், இந்த வாசகங்களின் வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களை மீண்டும் மயக்கி மாய்மாலச் சகதியில் வீழ்த்தப் பெரிதும் முயன்றிருக்கிறார்.

அதற்கு மத்தள முரசு கொட்ட ஒருவர் - அதாவது ஜெயலலிதா கூட்டத்தினர் கொள்ளையடித்துக் குவித்து வைத்துள்ள அணிமணிகள், ஆடம்பர மாளிகைகள், தேயிலை - திராட்சைத் தோட்டங்கள் அனைத்தையும், அரசு கைப்பற்றி அவர்களை நடுத்தெருவில் நிறுத்தி விசாரணை நடத்தித் தண்டனை கொடுக்க வேண்டுமென்றவர்!

இன்னொருவர் - அந்த அம்மையாரை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கி - சென்ற இடமெல்லாம் வன்முறைத் தாக்குதலுக்கு அஞ்சி, நமது கழகத்தின் துணைக்காகத் தவம் கிடந்தவர் - நீதிமன்றம் வரை சென்று நிர்வாண நடனங்களைக் கண்டு மிரண்டவர்!

மற்றொருவர் - ஐந்தாண்டு முன்பு பாபர் மசூதி இடிப்பதற்கான கரசேவையை ஊக்குவித்து டெல்லியில் ஜெயலலிதா உரையாற்றியதற்காக, அவரை பா.ஜ.க.வின் ஊதுகுழல் என வர்ணித்தவர்!

மேலும் ஒருவர் - தனது கட்சியைத் தடை செய்ய வேண்டுமென்று ஜெயலலிதா - சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியபோதும் - தன்னைப் பற்றி அதே அவையில் தரக்குறைவாகப் பேசியபோதும் - அந்த ஊழல் ராணியின் தோலை உரிப்போம் என்றவர்!

இவர்கள் எல்லாம் இன்று பக்கவாத்தியம் முழங்கிட, அம்மையார் ஜெயலலிதா, அடாணா ராகத்தில் நெல்லை மாநாட்டில் தி.மு.க.வையும், என்னையும் சாடோ சாடென்று சாடி, பயங்கரமாகக் கச்சேரி பாடி முடித்துள்ளனர்.

அவர்கள் நிறைவேற்றிய தீர்மானமொன்றில், மாநில சுயாட்சிக்கு ஜெயலலிதாதான் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர் என்பதுபோலப் பிதற்றியிருப்பது கண்டு விஷயமறிந்தவர்கள் வாயால் சிரிக்கக் கூடத் தயங்குகிறார்கள்.

1969-ல் நான் முதல்வர் பொறுப்பை ஏற்றவுடன், டெல்லியில் 17.3.69-ல் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அண்ணாவின் கொள்கையான மாநில சுயாட்சிக்காக, ஒரு குழு அமைக்கப்படுமென அறிவித்து, அவ்வாறே நீதிபதி ராஜமன்னார் - அறிஞர் ஏ.எல். முதலியார் - நீதிபதி சந்திராரெட்டி ஆகியோர் கொண்ட குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளை மாறன் - செழியன் கமிட்டி ஆய்வு செய்து அரசுக்கு அளித்து - 1970-ஆம் ஆண்டு திருச்சி மாநாட்டில் நான் எழுப்பிய கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக, மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி, என்பதை அறிவித்து - 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 16-ஆம் தேதி தமிழகச் சட்டப்பேரவையில் அரசின் சார்பில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றி - இன்றளவும் அதற்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிற நம்மைப்பார்த்து, நாம் அந்தக் கொள்கையையே மறந்து விட்டோம் என்று ஜெயலலிதாவின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது, சூரிய ஒளியை மறைக்க சிட்டுக்குருவி சிறகு விரித்தது போன்ற செயலன்றி வேறென்ன!

இவர் குற்றமற்றவராம் - கழக அரசு தொடர்ந்துள்ளது அனைத்துப் பொய்வழக்காம் - தன்னை ஒரு நிரபராதி என்று நிரூபிப்பாராம் - பழி வாங்கும் செயலுக்கு பாடம் கற்பிப்பாராம்!

இதைப்போன்ற வாக்குமூல வாசகங்களைத் தொகுத்துத்தான் உயர்நீதிமன்றத்தில் தனக்கு முன் ஜாமீன் கேட்டார் ஜெயலலிதா.

முன் ஜாமீன் தர மறுத்து உயர்நீதிமன்ற நீதிபதி சிவப்பா அவர்கள், தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பது என்ன?

"வேண்டுமென்றே அரசியலில் காழ்ப்புணர்ச்சியோடு, தன் மீது பொய் வழக்குகள் போடப்பட்டிருப்பதாக ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்ட வாதத்தை ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆரம்ப ஆதாரங்கள் உள்ளன.

தனி மனித சுதந்திரத்தை விட, கூறப்பட்ட ஊழலைக் கண்டுபிடிப்பது விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு முக்கியமான கடமையாகும். அரசுத் தரப்பு ஆவணங்களை ஆராய்ந்த போது - இந்த வழக்குகள் உள்நோக்கத்துடன் போடப்படவில்லை என்று தோன்றுகிறது.

ஒருவருக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்பது தேவையான ஒன்றுதான். ஆனால், உயர்மட்டத்தில் ஊழல் புரிந்தவர்கள் விசாரிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டியது அதைவிட முக்கியமானது.

அரசுத் தரப்பில் இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது, அரசியல் ரீதியாக பழி வாங்குவதற்காக இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற முடிவுக்கு வர முடியாது".

இப்படியொரு சான்றிதழ் 6.12.1996-ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களால், அம்மையார் தொடுத்த முன் ஜாமீன் கோரும் வழக்கில் வழங்கப்பட்டதை - மாநாட்டு மேடையில் இருந்தோரும் - எதிரே பந்தலில் அமர்ந்திருந்த பங்குதாரர்களும் மறந்திருக்கக் கூடும். ஆனால், மக்கள் மறந்துவிடவில்லை. ஒருவேளை மறந்திருந்தாலும், தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டியது உன் போன்ற உடன்பிறப்புகளின் கடமையென்பதை நீ மறந்துவிடாதே!

அடுத்து, 12.12.1996 - அன்று ஜெயலலிதாவின் ஜாமீன் மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கிய முதன்மை செஷன்ஸ்

நீதிமன்ற நீதிபதி ராமமூர்த்தி அவர்கள், அந்தத் தீர்ப்பில் வரைந்து காட்டியுள்ளது என்ன?

> "தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கியதில் முறைகேடுகள் நடந்திருப்பதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அதன் தொடர்பாக ஜெயலலிதா கைது செய்யப்பட்டிருக்கிறார்.
>
> டி.வி.க்கள் வாங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுதான் டி.வி.க்கள் வாங்க ஏற்பாடுகள் செய்திருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும், அந்தக் குழு அப்பொழுது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவால்தான் இயக்கப்பட்டிருக்கிறது. டி.வி. வாங்கிய முறைகள் விதிகளுக்கு மாறானதாகும். முறையான டெண்டர் எதுவும் விடப்படவில்லை. குறைந்த விலைக்குச் சில நிறுவனங்கள் டி.வி.க்கள் கொடுக்க முன்வந்தன. அவர்களைப் புறக்கணித்துவிட்டு, இவர்களாகச் சில நிறுவனங்களில் டி.வி. வாங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கிராம சமூகக் கூடங்களுக்காக 45,302 கலர் டி.வி. பெட்டிகள் வாங்கப்பட்டன. ஒரு டி.வி. 14,500 ரூபாய் என்று விலை குறிப்பிடப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நேரத்தில் ஒரு டி.வி.யின் விலை 12,500 ரூபாய்தான். இதில் முறைகேடு நடைபெற்றுள்ளது. இதன்மூலம் அரசுக்கு 8 கோடியே 52 இலட்சம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டிருக்கிறது."

உடன்பிறப்பே, ஜெயலலிதா, தன்னைச் சிறையிலிருந்து ஜாமீனில் விடுவிக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கையை ஏற்க மறுத்து, முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் வாசகங்களை மறந்துவிடக் கூடிய அளவுக்கு மக்கள் ஞாபகமறதியுள்ளவர்களா என்ன!

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஊழலில், எட்டு கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படச் செய்துவிட்டு, அந்தக் கோடிகளை ஜெயலலிதாவும், அவரது அமைச்சர்களும் சுருட்டிக்கொள்ளவில்லையா? பங்கு போட்டுக்கொள்ளவில்லையா? பாவம்! கிராமப்புறத்து மக்களுக்காக வாங்கியதாகச் சொல்லப்பட்ட தொலைக்காட்சிப்

பெட்டிகள்! அந்தப் பேரத்திலேயே பெரும் ஊழல் புரிந்தவர்கள், இன்றைக்கு இலைச்சோற்றுக்குள் மலையளவு பூசணிக்காயை மறைக்க முனைகிறார்கள்!

இதோ இந்த அம்மையார் ஆட்சியில் நடைபெற்ற ஸ்பிக் பங்கு பேர ஊழல் ஊரறிந்த ரகசியமாயிற்றே!

1989-ல் நான் மூன்றாவது முறை முதல்வராகப் பொறுப்பேற்ற போது, எம்.ஏ.சிதம்பரம் ஸ்பிக் தலைவராகவும், அவரது மகன் ஏ.சி. முத்தையா மேனேஜிங் டைரக்டராகவும் இருப்பதைப் பற்றி, அவர்களிடமே பேசி - தமிழக அரசின் தலைமைச் செயலாளர்தான் தலைவராகவும், ஏ.சி.முத்தையா, எம்.டி.யாகவும் பொறுப்பேற்கும் நிலையை உண்டாக்கியிருந்தேன். ஆனால் ஜெயலலிதா, பெருமளவுக்கு ஸ்பிக் பங்கு பேரத்தில் ஊழல் நடத்தி, அதன் தொடர்பாக அரசின் தலைமைச் செயலாளர் வகித்து வந்த தலைவர் பொறுப்பில் மீண்டும் எம்.ஏ.சிதம்பரம் அவர்களை அமர்த்துவதற்கும், ஏ.சி.முத்தையா அவர்களை எம்.டி.யாக அமர்த்துவதற்கும் வழி வகை செய்தார். இதை எதிர்த்து சுப்பிரமணியம் சுவாமிதான் வழக்கு தொடுத்திருந்தார். அந்த வழக்கில் தீர்ப்பு கூறிய உயர்நீதிமன்ற நீதிபதி ஒய். வெங்கடாசலம் அவர்கள், ஜெயலலிதாவைப் பற்றி அத்தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளதை நீயும் ஒரு முறை படித்துப் பார்த்து, மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்.

> “சாதாரணமாகக் காய்கறி வாங்கும்போதோ அல்லது வீட்டில் வேண்டாத சாமான்களை விற்கும் போதோ தாய்மார்கள் விலை பற்றிப் பேரம் செய்வார்கள். ஆனால், டிட்கோ பங்குகளை விற்பனை செய்ய எந்த விதிமுறையும் கடைப்பிடிக்கவில்லை.
>
> ஐ.ஏ.எஸ். அதிகாரி, நிதி நிபுணர்கள் கொண்ட கமிட்டி நிறுவப்பட்டு, அதன் பரிந்துரையின் பேரில், அமைச்சர் அவையில் விவாதித்து, பங்குகளை நல்ல விலைக்கு விற்க முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா உத்தரவிட்டிருக்க வேண்டும். ஆனால், ஜெயலலிதா அப்படிச் செய்யவில்லை.
>
> ஜெயலலிதா, எம்.ஏ. சிதம்பரம், ஏ.சி. முத்தையா ஆகியோருக்குத் தனிப்பட்ட உடன்பாடு இருந்தது

என்பது உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனி போல் தெளிவாகத் தெரிகிறது. நேர்மையான முறையில் அப்போதைய ஆட்சி முடிவெடுக்கவில்லை. 3 பேரின் சொந்த ஆதாயத்திற்காகவே டிட்கோவின் உரிமைப் பங்குகள் விற்கப்பட்டுள்ளன.

ஜெயலலிதாவின் நடவடிக்கையால் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த ஸ்பிக் நிறுவனம், இரு தொழில் அதிபர்களிடத்தில் சரணடையச் செய்யப்பட்டுவிட்டது.

சுய ஆதாயத்திற்காக டிட்கோவின் பங்குகளை விற்றதால், அரசுக்கு 29 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது என்பதை, இக்கோர்ட்டு ஏற்றுக் கொள்கிறது. உண்மையான நஷ்டம் என்ன என்பதை, இன்னும் விரிவான விசாரணை நடத்திய பிறகே தெரியும்.

சட்டத்திற்கே அப்பாற்பட்டவர் போலவும் - சட்டம் தன்னைக் கட்டுப்படுத்தாது போலவும் ஜெயலலிதா உத்தரவில் கையெழுத்து போட்டுள்ளார். தொழில் அதிபர்கள் இருவருக்கும் பயன்படும் வகையில், ஜெயலலிதா, அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார். அவர் தன்னிச்சையாக எடுத்த முடிவு நீதிமன்ற மனசாட்சிக்கு அதிர்ச்சியை அளிக்கிறது.

அதிகாரத்தில் இருப்பவர்கள் தன்னிச்சையாகச் செயல்படுவதைத் தொடர்ந்து அனுமதித்தால், தழைத்தோங்கும் ஜனநாயகத்தில் கரும்புள்ளி ஏற்பட்டுவிடும். நாட்டில் பொருளாதார, சீர்குலைவு ஏற்பட்டுவிடும்.

அரசின் பங்குகளைத் தனியாருக்கு முறைகேடாக தாரைவார்த்தது குறித்து இக்கோர்ட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கருதுகிறது. இதைச் சாதாரணமாகி விட்டுவிட்டால் இது மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமைந்து விடும்.”

இப்படியொரு கருத்துரையை உயர்நீதிமன்றம் 15.12.1997 அன்று தீர்ப்பின் மூலம் அறிவித்திருக்கிறது.

இவ்வளவு ஏன்? ஜெயலலிதா ஆட்சி நடைபெற்ற 1995-ஆம் ஆண்டிலேயே டான்சி நிலத்தை ஜெயலலிதா அபகரித்தது குறித்தும் - நிலக்கரி ஊழல் நடத்தியது குறித்தும் சுப்பிரமணியம்சாமி தொடுத்த வழக்கில், உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா அரசு உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்தது. அந்த அப்பீல் மனுவில் அளித்த இடைக்கால உத்தரவில், உச்சநீதிமன்றம் ஜெயலலிதா மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளில், சட்டவிதிமுறைகளின்படி, பூர்வாங்க ஆதாரம் இருக்கிறது என்று தெளிவுபடுத்தியிருக்கிறது.

எனவே, குற்றமற்றவர் மீது நமது அரசு, வேண்டுமென்றே பழி வாங்கும் நோக்கத்துடன் குற்றம் சுமத்தவில்லை என்பதற்கு நீதிபதிகளின் கருத்துரைகளை மட்டுமல்ல, அ.தி.மு.க.வுடன் அணி அமைத்துக் கொண்டுள்ள பா.ஜ.க.வின் அணியில் உள்ள சமதா கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்ணான்டஸ் அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்பு ஜெயலலிதாவின் ஊழலைப் பற்றிச் சொல்லியுள்ள, சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய சான்றிதழையும் தமிழ் நாட்டு மக்கள் மறந்துவிடப் போவதில்லை. இதோ சமதா கட்சித் தலைவர் பெர்ணான்டசின் சர்டிபிகேட்! ஜெயலலிதாவுக்குக் கொடுத்தது!

"Embodiment of Corruption -

Fountain head of Corruption."

அதாவது, ஜெயலலிதா, ஊழலின் ஒட்டு மொத்த உருவம் - ஊழலின் ஊற்றுக்கண்!

இப்படிச் சொல்வது நாமல்ல! அத்வானி அவர்களின் ஆத்ம நண்பர் - அவர் அணியில் உள்ள தோழர் ஜார்ஜ் பெர்ணான்டஸ்!

அன்புள்ள,

மு. க.

(05-01-1998)

2383. "திட்டும் காவியம்" தீட்டிய நாவலர்!

உடன்பிறப்பே,

நெல்லையில் ஜெயலலிதா நடத்திய மாநாட்டில் கார் ஒன்றை அவரிடமிருந்து பரிசாகப் பெற்ற அன்பு நண்பர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், ஜெயின் கமிஷன் அறிக்கை ஓர் ஆய்வு என்று சிறிய அளவுப் புத்தகமொன்றை எழுதி அண்மையில் வெளியிட்டுள்ளார். அந்த நூலுக்கு அவரே எழுதியுள்ள முன்னுரையில்,

> "முன்னாள் இந்தியப் பிரதமரும், இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான புகழ்மிக்க திரு. இராஜீவ்காந்தி அவர்கள், படுகொலை செய்யப்பட்டதையொட்டி, உண்மை நிலவரங்களைக் கண்டறிந்த நீதிபதி ஜெ.எஸ். வர்மா கமிஷனும், நீதிபதி எம்.சி. ஜெயின் கமிஷனும் ஆகிய இரண்டு கமிஷன்களும்... என்று குறிப்பிட்டு விட்டு,
>
> கொலை, சதிக் குற்றம் சுமத்தப்பட்டவர்களை விசாரிக்கத் தனி நீதிமன்றமும் மத்திய அரசால் அமைக்கப்பட்டன"

என்று கூறியுள்ளார். மற்றும் அவரது விளக்கத்தில் இராஜீவ்காந்திக்குக் கொடுக்கப்பட்டு வந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடுகள் ஏற்பட்டனவா? என்பதைக் கண்டறிய வர்மா கமிஷன் நியமிக்கப்பட்டு, அது தனது அறிக்கையை 15.6.1992-ல் அளித்து விட்டது என்றும்,

இராஜீவ்காந்தியை கொலை செய்ததாகவும், அவரைக் கொல்ல சதி செய்ததாகவும் கைது செய்யப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க பூவிருந்தவல்லியில் தனி நீதிமன்றம் நிறுவப்பட்டு அது தனது தீர்ப்பை 28.1.1998-ல் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் சுட்டிக்காட்ட, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தவறவில்லை.

அந்த முன்னுரையின் இறுதிப் பகுதியில் அவர் பின்வருமாறு ஆத்திரமுடன் எழுதியிருக்கிறார்.

> நீதிபதி ஜெயின் கமிஷன் ஆய்வு நடத்தி உணர்த்தியுள்ள உண்மைகளைப் பற்றியும், தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியும், அவரைச் சார்ந்தோரும், அவர்களை ஆதரிக்கும் பிற கட்சியினரும் எப்படிப்பட்ட பொய்யான, பித்தலாட்டமான, மோசடியான திசை திருப்பும் பிரச்சாரத்தைச் செய்து வருகிறார்கள் என்பது பற்றியும் சுருக்கமான முறையில் விளக்கிக் காட்டவே இச் சிறிய ஏடு வெளியிடப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, வார்த்தைகளில் விம்மிப் புடைக்கும் தரக்குறைவினைக் கண்டாயா?

பொய்யான, பித்தலாட்டமான, மோசடியான

இத்தகைய சொற்களைக் கையாண்டுள்ளீரே நாவலரே! என்று நாம் கேட்டால், அவர் உடனே நம்மைப் பார்த்து இதையெல்லாம் பொது வாழ்வில் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான். என்னையே பார்த்து ஜெயலலிதா தெரு நாய் என்றும் உதிர்ந்த மயிர் என்றும் கூறி, அந்த அறிக்கை அனைத்து ஏடுகளிலும் வெளிவரவில்லையா? என்று தனக்கேயுரிய நீட்டி முழக்கும் பாணியில் பதில் சொன்னாலும் சொல்லுவார்!

மான உணர்வு பற்றிக் கவலைப்படாமல் பதவி உணர்விலேயே காலம் தள்ளுபவர்களுக்கும் - மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின் - என்ற குறளின் கருத்தை நெஞ்சில் பதித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் வித்தியாசம் உண்டு என்பதால்,

நாவலர் நெடுஞ்செழியன், தனது நூலின் முன்னுரையில் என்னைப் பற்றியும், தி.மு.க. மற்றும் கட்சிகளைப் பற்றியும் ஜெயின் கமிஷன் பற்றிக் கருத்துக் கூறிய தலைவர்களைப் பற்றியும் பொய்யர்கள் - பித்தலாட்டாக்காரர்கள் - மோசடிப் பேர்வழிகள் என்று தீட்டியுள்ள திட்டல் காவியம் பற்றியும் கோபமுற்று, அவருக்கு விடையளிக்க அவர் பயன்படுத்தியுள்ள பழுதுறு சொற்களைப் போலவே இழிதகை அர்ச்சனையை நம்மாலும் செய்ய முடியும்.

செய்யக் கூடாது என்பது மட்டுமல்ல! செய்வது பண்பாடல்ல என்பது மாத்திரமல்ல! அவர் புரண்டெழுந்து வாரியிறைக்கும் அதே சேற்றை, அவர் மீது வாரி வாரி இறைக்க, அவரைப்போலவே அந்தச் சேற்றுக்குட்டையில் விழுந்து எழுந்திட நாம் தயாராகவுமில்லை.

இவைகளேயன்னியில், ஏதாவது உடலில் உறைப்பவர்களுக்கு வேண்டுமானால் நமது எதிர்க்கணைகள் சூடு சொரணையை ஏற்படுத்தக்கூடும். ஆனால், இந்தக் கட்டையோ தெருநாய் - உதிர்ந்த மயிர் போன்ற ஜெயலலிதாவின் இழிச் சொற்களை வாரிக் கட்டிக் கொண்டு, மீண்டும் இளித்தவாறு என்னருமைத் தலைவியே என்று குனிந்து, பணிந்து, கும்பிடு போட்டு நிற்கும் திருமேனியாயிற்றே! எனவே, அவரது அக்கினிக் கணைக்குப் பதிலாக அக்கினிக் கணையையே ஏவிடாமல் - அறிவுக் கணையை ஏவி அவரைச் சிந்திக்க வைக்க முயற்சி செய்வோம்!

சிந்தனையா? அதில் நான் மூழ்கிக் கிடந்து முத்து எடுத்ததெல்லாம் அந்தக் காலம் - ஆனால், இந்தக் காலம் சிந்தனை என்ன விலையெனக் கேட்டு விட்டு, நிந்தனைப் புராணம் பாடி, என்னம்மை ஜெயலலிதாவை வந்தனை செய்யும் காலமாயிற்றே!

என்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், அதற்கோர் விளக்கமளித்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் நாம் ஊதுகிற சங்கை ஊதி வைப்போம் - விடிகிறபோது விடியட்டும் என்ற ரீதியில் அவருக்கோர் அதிர்ச்சி உணர்வைத் தந்திட அவரது நூலில் இருந்தே அவரது கருத்து ஒன்றை அவருக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு முதலில் அவர் கலந்துகொண்டதும், கார் பரிசு பெற்றதுமான - அவரே அவைத் தலைவராக இருப்பதுமான - அ.தி.மு.க. நெல்லை மாநாட்டில் அவரது முன்னிலையிலேயே நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் ஒன்றைப் பார்ப்போம்.

அந்த மாநாட்டுத் தீர்மானங்கள் அச்சுப் போட்டு அனைத்து ஏடுகளுக்கும் தரப்பட்டுள்ளன. அவற்றில் 12-வது தீர்மானம் ஜெயின் கமிஷன் பற்றியதாகும். அந்தத் தீர்மானத்தின் கடைசிப் பகுதியின் வாசகங்கள் இதோ! இவ்வாறு அமைந்துள்ளன.

"பல்வேறு தேசவிரோதச் செயல்களில் கருணாநிதியும், தி.மு.க.வும் ஈடுபட்டதும், ராஜீவ் கொலை சதிக்குக்

காரணமாக இருந்ததும், ஜெயின் கமிஷன் அறிக்கையால் ஊர்ஜிதப் படுத்தப்பட்டதால்தான் மத்தியில் தி.மு.க. அமைச்சர்கள் விலக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்து, மத்திய அமைச்சரவையே ராஜினாமா செய்யும் நிலை உருவானது. அதே காரணங்கள் மற்றும் உணர்வுகளின் அடிப்படையில், மாநிலத்தில் உள்ள கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையும் தானாகப் பதவி இறங்கிட வேண்டும் அல்லது உரிய நடவடிக்கை மூலம் வெளியேற்றப்பட வேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்துகிறது. அதோடு மட்டுமல்லாமல், கருணாநிதியும், அவருக்குத் துணை இருந்தோரும் கிரிமினல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் இம்மாநாடு மத்திய அரசை வற்புறுத்துகின்றது"

உடன்பிறப்பே, இந்தத் தீர்மானம், ஜெயின் கமிஷன் அறிக்கையைத் தீயிட்டுக் கொளுத்திய டாக்டர் ராமதாஸ் அவர்கள், கலந்து கொண்ட மாநாட்டில்தான் நிறைவேற்றப்பட்டுள்ளது. உணர்ச்சி வயப்பட்டு ஈழத் தமிழர்கள் மீது கொண்டுள்ள பற்றுபாசத்தால் தி.மு.க. தலைமைக்குத் தெரிவிக்காமலே கள்ளத் தோணியில் சென்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை வவுனியா காட்டில் சந்தித்தேன் என்று சென்னைச் செய்தியாளர்கள் கூட்டத்தில் அன்றைக்கே கூறிய வை. கோபால்சாமி (மன்னிக்கவும் புரட்சிப் புயல்) அவர்கள் கலந்து கொண்ட மாநாட்டில்தான் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆம்! 'ஜெயின் கமிஷன் ஓர் ஆய்வு' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ள நாவலர் நெடுஞ்செழியன் முன்னிலையில்தான் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, அந்த ஆய்வு நூலில் நாவலர் எழுதியுள்ளதற்கும் - அவர் கலந்து கொண்டு நிறைவேற்றியுள்ள தீர்மானத்திற்கு மிடையே உள்ள இமய மலையளவு முரண்பாட்டைக் கொஞ்சம் கவனிப்போமா?

மக்கள் மன்றம் தேர்தல் வாயிலாக, ஜெயின் கமிஷன் அடிப்படையில் தி.மு.க.வுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்று ஜனநாயக நோக்குடன் தனது ஆய்வு நூலைச் செய்திடும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், அதே நூலின் 29-வது பக்கத்தில் கருணாநிதி, கொலை சதித் திட்டத்தில் ஈடுபட்டதாகக்

கமிஷன் கூறவில்லை என்று துணை தலைப்பு கட்டி எழுதியுள்ள பகுதியில் என்ன சொல்லுகிறார்? இதோ! படித்துப் பாரேன்!

> "கலைஞர் கருணாநிதி அவர்களும், அவரது தி.மு.கழகத்தினரும், இராஜீவ்காந்தியின் கொலையிலோ அல்லது அதற்கான சதியிலோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஈடுபட்டதாக ஜெயின் கமிஷன் குறிப்பிடவில்லை. நாமும் அப்படிச் சொல்லவில்லை, எவரும் சொல்லவில்லை."

இது நாவலர் நெடுஞ்செழியன் எழுதி, 8.12.1997 ஆம் நாளன்று, அவரே முன்னுரை தீட்டி வெளியிடப்பட்டுள்ள நூலில் இடம் பெற்றுள்ள வாசகம். அவரது இந்த வாசகத்துக்கும் - அவர் அவைத் தலைவராக இருந்து அவர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட நெல்லை மாநாட்டுத் தீர்மானத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு இமயமலை அளவிலானது என்றேனே! இப்போது மீண்டுமொருமுறை அந்தத் தீர்மான வாசகத்தையும், நாவலர் நெடுஞ்செழியன் தீட்டியுள்ள ஆய்வு நூலின் வாசகத்தையும் ஒப்பிட்டுப் படித்துப்பார்; ஒருமுறைக்கு இருமுறை படித்துப்பார்!

உடன்பிறப்பே, இதை நான் எழுதிய பிறகு அவர் சொல்லக்கூடும், விற்காமல் கிடந்த புத்தகத்திற்கு கருணாநிதி விளம்பரம் தந்து விட்டார் நன்றி என்று!

என்ன இருந்தாலும், நமக்குப் பழைய நண்பர் அல்லவா! இந்தக் கடிதம் அப்படிப் பயன்பட்டாலும் எனக்கு மகிழ்ச்சியே!

அன்புள்ள,

மு. க.

(06-01-1998)

2384. பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்!

உடன்பிறப்பே,

முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.க. தலைவருமான ஜெயலலிதாவுக்கு எதில் திறமையிருக்கிறதோ, இல்லையோ இந்தியாவில் உள்ள எந்தத் தலைவருக்கும் இல்லாத அளவுக்கு அல்லது அந்தத் தலைவர்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்குப் பொய் பேசும் திறமையிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் தீர வேண்டும். தன்னுடைய நெஞ்சே தன்னைச் சுடும் எனும் அறவழி மொழியை உணர்ந்து வாய்மையுடன் வாழும் தலைவர்களும் உண்டு இந்த நாட்டில்! பொய்ம்மையும் வாய்மையிடத்த எனும் குறளைத் தனது பொய்யுரைகளுக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டு பொய்களையே கண்ணீரில் கோத்துப் புலம்பி அழுது பொதுமக்களை ஏமாற்றத் திட்டமிட்டுச் செயல்படும் ஜெயலலிதா போன்ற தலைவர்கள் மிகச் சிலரே உண்டு!

ஊரார் சொத்துகளைக் கொள்ளையடித்து உல்லாச வாழ்வு நடத்திய ஜெயலலிதா மீது, 1996-ல் மக்கள் மன்றம் அளித்த தீர்ப்பின்படி வழக்குகள் தொடர்ந்து, அதன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டுச் சிறை புகுந்தபோது, அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அவருக்குச் சிறப்பு வகுப்பு கேட்காமல் மறந்து விட்ட காரணத்தால், சிறை அதிகாரிகள் என் செய்வது எனத் தெரியாமல் திகைத்து நின்றனர்.

சிறப்பு வகுப்பு அதிகாரபூர்வமாக ஒருநாள் இரவு மட்டும் தராமல் இருந்தாலும், சிறப்பு வகுப்புக்குரிய வசதிகள் அனைத்தும் உடனடியாகச் செய்து தருமாறு அதிகாரபூர்வமற்ற முறையில் சிறை அதிகாரிகளுக்குக் கூறப்பட்டு; அவர்களும் அவ்வாறே

அந்த வசதிகளை வழங்கி; மறுநாளில் இருந்து அதிகாரபூர்வமாக அவருக்குச் சிறப்பு வகுப்பும், அதற்குரிய வசதிகளும் வழங்கப்பட்டன என்பதை அனைவரும் அறிவர்.

சிறையிலிருந்தபோது அவருக்கு என்னென்ன பொருட்கள் அனுமதிக்கப்பட்டன என்ற பெரியதோர் பட்டியலை அப்போதே சட்ட அமைச்சர் ஆலடி அருணா அவர்கள், பத்திரிகைகளுக்கு அளித்து அந்தப் பட்டியலும் எல்லோராலும் படிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவுக்குப் பிறகு மாதங்கள் பல உருண்டு விட்டன என்ற நினைப்பில், மக்களின் மறதியை அனுகூலமாக்கிக்கொள்ளலாம் என்ற அசட்டு தைரியத்தில், ஜெயலலிதா அவர்கள், சிறைச்சாலைக் கொடுமைகள் எனும் சிற்றிலக்கியம் ஒன்றையே நெல்லை மாநாட்டில் படைத்திருக்கிறார். (இல்லை - படித்திருக்கிறார்)

அடா! அடா! எத்தனை எத்தனை பொய்கள்! எத்தனை எத்தனை புளுகுத் தோரணங்கள்! மிசா காலத்தில் சென்னைச் சிறையில் அடைக்கப்பட்டோர் அனுபவித்த சித்திரவதைகளையும், சிறுநீரில் கலந்த உணவை அருந்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டதையும் அவர் அறிந்திருக்க மாட்டார்! ஏனெனில், அந்தக் கொடுமை நடந்தது 1976-ல்! அப்போது ஜெயலலிதா, அரசியல் பக்கம் தலைகாட்டவே இல்லை! அவர் இருந்த இடமே வேறு! 1976 மிசா சிறைக் கொடுமைகளை அவர் அறிந்திருப்பாரேயானால், அந்தக் கொடுமைகளையும் கூட தனது சிறைவாழ்வுத் துன்பத்துடன் பட்டியலிட்டு இணைத்துக் கொண்டு நெல்லை மாநாட்டில் சந்திரமதி மயான காண்ட ஒப்பாரியொன்றையே பாடி முடித்திருப்பார்.

எதற்கும் உடன்பிறப்பே, அவர் சிறையில் இருக்கும்போது என்ன வசதிகள் தரப்பட்டன என்பதற்கு அன்று சட்ட அமைச்சரும், சிறைத்துறை அமைச்சருமான ஆலடி அருணா வெளியிட்ட அறிக்கையை அப்படியே இந்தக் கடிதத்தில் இணைத்துள்ளேன். படித்துப் பார். தேவையான நேரத்தில் மக்கள் மன்றங்களில் பயன்படுத்து.

ஜெயலலிதாவுக்குச் சிறப்பு வகுப்பு கேட்காத நிலையில் கூட முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கருணை உள்ளம் கொண்டு சிறையில் சிறப்பு வகுப்பு அளித்திட உத்தரவிட்டார்.

அதற்கேற்ப எல்லா வசதிகளும் அவருக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது மேஜை, நாற்காலி, மின் விசிறி, எவர்சில்வர் பாத்திரங்கள், கட்டில் மெத்தை, தலையணைகள், போர்வைகள் ஆகியவை அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

அவர் விரும்பிய அளவிற்கு பழங்கள், பிஸ்கட், ரொட்டி, துணிகள் ஆகியவைகளை வீட்டில் இருந்து பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் வீட்டிலிருந்து சாப்பாடு நீங்கலாக, வேண்டிய பொருட்களைப் பெற்று வருகிறார்.

உதாரணமாக, நேற்று முன்தினம் (20.12.96) மட்டும் வெள்ளைத் துண்டு 12; டர்க்கி டவல் 5; சிறிய துண்டு 12; தலையணை உறை 4; போர்வை 2; கைக்குட்டை 4; பழச்சாறு பாட்டில் 1; ஹார்லிக்ஸ் பாட்டில் 1; ஜாம் பாட்டில் 2; வாய் கழுவும் புட்டி 2; ரொட்டி ஒரு பெட்டி, மினரல் தண்ணீர் பாட்டில் 12; பன் 12; கமலா, ஆரஞ்சு 24; சாத்துக்குடி 12; ஆப்பிள் 8, பச்சை வாழைப்பழம் 6 முதலானவைகளைப் பெற்றிருக்கிறார்.

இதுபோன்ற ஒவ்வொரு தேவையைப் பெறவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். வீட்டுச் சாப்பாட்டைத் தவிர எல்லா வசதிகளும் நியாயமான அளவு அவருக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. சிறையில் பருப்பு, நெய், தயிர் கலந்த சுவையான சாப்பாடு கொடுக்கப்படுகிறது. பார்வையாளர்களும் அவரைப்பார்க்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

சிறையில் ஜெயலலிதா இருக்கும் வளாகம், அதில் உள்ள அறை, சென்னை மத்தியச் சிறையில் மிகவும் பாதுகாப்பான இடம் ஆகும். இவரது பாதுகாப்புக்காக மட்டும் இவர் இருக்கும் வளாகத்தின் உள்ளே ஒரு தலைமை பெண் அதிகாரி, ஒரு தலைமை பெண் காவலர், எட்டு இரண்டாம் நிலை பெண் காவலர்கள் பாதுகாப்புக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அந்த வளாகத்திற்கு வெளியே சுற்றி பாதுகாப்பு அளிக்க ஒரு துணைச் சிறை அதிகாரியும், 10 காவலர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் 24

மணி நேரமும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பாதுகாப்பு கடந்த காலத்தில் எந்த கைதிக்கும் வழங்கப்பட்டதில்லை.

இதையெல்லாம் மறைத்துவிட்டுத்தான் ஜெயலலிதா அம்மையார், 'தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்' என்ற குறளை மறந்துவிட்டு நெல்லையில் பேசியிருக்கிறார். என்செய்வது! நெஞ்சம் இருப்பவர்களுக்காக எழுதப்பட்ட குறள் அது! இவரது பொய்க்கு இன்னும் சில உதாரணங்கள் :-

இந்த அம்மையார் வீட்டில் அதிகாரிகள் நீதிமன்ற ஆணை பெற்று, சோதனை நடத்தியபோது அம்மையாரின் செயலாளர்கள் அருகில்தான் இருந்தனர். சோதனையில் கைப்பற்றப்பட்ட பொருள்களின் பட்டியலுக்குச் சாட்சி கையெழுத்தும் போட்டுள்ளனர். எவை எவை கைப்பற்றப்பட்டன என்ற விபரங்கள் ஏடுகளில் காட்சிகளாகவும் வந்தன. தொலைக்காட்சியிலும் விளம்பரங்களாயின.

பத்தாயிரம் சேலைகள் - சுமார் நானூறு ஜோடி செருப்புகள் - பல கோடி ரூபாய் நகைகள் - இவைகள் சோதனையில் சிக்கின என்ற செய்திகள் நாளேடுகளில் பக்கம் பக்கமாக படங்களுடன் வந்தபோது, ஜெயலலிதாவின் செயலர்கள் என்ன சொன்னார்கள்?

இத்தனை செருப்புகளும், அம்மா சினிமாவில் நடிக்கும் போது, ஒவ்வொரு படத்திற்காகவும் அம்மா பயன்படுத்திய செருப்புகள் என்று பேட்டிகள் கொடுத்தார்களா, இல்லையா?

ஆனால், இப்போது நெல்லை மாநாட்டில் ஜெயலலிதா, அந்த செருப்புகளைப் பற்றி என்ன கூறியுள்ளார்!

> "டி.வி.யில் போயஸ் கார்டனில் நான் ஏராளமான செருப்புகளை வைத்திருந்ததாகக் காட்டினார்கள். ஆனால், அவையெல்லாம் சினிமா ஸ்டுடியோவில் இருந்து வாங்கி வந்து, போயஸ் கார்டனில் போட்டு படமாக்கப் பட்டவை".

இப்படியொரு பொய்யைக் கொஞ்சம்கூட வாய் கூசாமல் சொல்லியிருக்கிறார். இதையும் அவரது பங்குதாரர்கள், எதிரிலேயும், மேடையிலும் அமர்ந்து வாய்பிளந்து கேட்டுக்

கொண்டிருக்கிறார்கள் என்றால், இந்த வேதனையை யாரிடம் போய்ச் சொல்வது!

செருப்புகள் தன்னுடையது அல்ல என்று மாநாட்டில் முழங்கியவர், சோதனையின்போது அதிகாரிகள் கைப்பற்றி நீதிமன்றப் பொறுப்பில் வைத்துள்ள நகைகள் தன்னுடையதல்ல என்று கூறியிருக்கிறாரா என்றால் இல்லை! மாநாட்டில் கூறினாரா என்றால் இல்லை! மாநாட்டில் என்ன கூறியிருக்கிறார்?

நான் நீதிமன்றத்துக்குச் சென்று வழக்காடி, என்னுடைய நகைகளை எல்லாம் மீட்பேன். என்று சூளுரை மேற்கொண்டிருக்கிறார்; பல கோடி செலவிட்டு நடத்திய அந்த மாநாட்டில்!

செருப்புகளைத் துச்சமென மதித்து, அவை தன்னுடையது அல்ல என்று ஒரு தடாலடிப் பொய்யை அவிழ்த்து விட்டவர், சோதனையின்போது போயஸ் தோட்டத்திலிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் ஆறு கோடி ரூபாய் நகைகளைத் தன்னுடையதல்ல என்று கூறவில்லை! மாறாக அந்த நகைகளை வழக்காடி மீட்பேன் என்று சபதம் செய்திருக்கிறார்! எல்லாம் ஒரு நம்பிக்கைதான்! பாரதீய ஜனதா ஆட்சி மத்தியிலே வந்து விடும், அவர்களிடம் சொல்லி வழக்குகளையெல்லாம் ஒரு வழி செய்து விட்டு, நீதிமன்றத்தில் உள்ள ஆறு கோடி ரூபாய் நகைகளை வசப்படுத்திக் கொள்ளலாம் என்று!

தேர்தலில் நிற்பதற்கு நகை நட்டுகளை விற்றுச் செலவு செய்தேன் என்று உருக்கமாகப் பேசி மக்களைத் தன்பால் ஈர்த்த மகராசி - மாதம் ஒரு ரூபாய் சம்பளத்தில் வாங்கிக் குவித்த நகைகள், பொருள்கள், தோட்டம் துரவுகள், பங்களாக்கள், பளபளப்பான மாளிகைகள் எல்லாமே நாட்டு மக்கள் அதிர்ச்சியடையும் வண்ணம் நாள்தோறும் பத்திரிகைகளில் வெளிவந்த ஆதாரபூர்வமான தகவல்கள்தான். அவற்றை மறுபடியும் நீயும், மற்றவர்களும் தேடிக் கண்டுபிடித்துச் சேகரிப்பது என்பது சிரமமாக இருக்குமே என்பதற்காக, நானே விடிய விடிய அந்தச் சிரமத்தை ஏற்றுக்கொண்டு - இதோ இந்தப் பட்டியலையும் தந்துள்ளேன்.

ஜெயலலிதா வீட்டில் சோதனை நடைபெற்ற போது கிடைத்த பொருள்களின் மதிப்பு :

ரூபாய்

1. ஜெயலலிதாவின் 86 வகையான நகைகள் - 17,50,031
2. சசிகலாவின் 62 வகையான நகைகள் - 9,38,460
3. 91 கைக் கடிகாரம் - 6,87,350
4. ஏழு விலை உயர்ந்த கைக்கடிகாரம் - 9,03,000
5. 914 புதிய பட்டுச் சேலைகள் - 61,13,700
6. 6195 மற்ற புதிய சேலைகள் - 27,08,720
7. 2140 பழைய சேலைகள் மற்றும் துணிமணிகள் - 4,21,870
8. 389 ஜோடி செருப்புகள் - 2,00,902
9. ஜெயலலிதாவின் 26 வகையான நகைகள் - 19,30,852
10. ஜெயலலிதாவின் 41 வகையான நகைகள் - 23,90,058
11. ஜெயலலிதாவின் 228 வகையான நகைகள் - 1,40,75,958
12. ஜெயலலிதாவின் 394 வகையான நகைகள் - 3,12,67,725
13. சசிகலாவின் 34 வகையான நகைகள் - 17,54,868
14. 1116 கிலோ எடையுள்ள வெள்ளி பாத்திரங்கள் -48,80,000
15. இந்தியன் வங்கி, அபிராமபுரம் கிளையில் ஆர்.ஐ.பி. மூலம் தொகை முதலீடு செய்த வகையில் - 1,00,00,000
16. சொகுசு பேருந்து எண் : டி.என்.09-எப். 2575 - 32,40,278

ஜெயலலிதா கூட்டத்தார் வாங்கிய ஒரு சில புதிய சொத்துகள்

	ரூபாய்
1. ஆர்.எஸ். எண். 1567/1, மைலாப்பூர் 1 கிரவுண்டு மற்றும் 1407 ச.அடி இடம் மற்றும் கட்டிடம் -	10,20,370
2. திரு.வி.க. தொழிற்பேட்டை கிண்டி, மனை எண். எஸ்.7 டி.எஸ்.என். 4345, 4664.60 ச. அடி (ஜெயா பப்ளிகேஷன்ஸ்) -	15,05,428

3. திரு.வி.க. தொழிற்பேட்டை டான்சி பவுண்டரி இடம், மற்றும் கட்டிடம் 55 கிரவுண்ட் 2,143 ச.அடி (ஜெயா பப்ளிகேஷன்ஸ்) - 2,13,68,152

4. திரு.வி.க. தொழிற்பேட்டை கிண்டி, ந.அ. எண். 89, ஆலந்தூர் கிராமம் (சசி எண்டர்பிரைசஸ்) - 90,17,089

5. 18, கிழக்கு அபிராமபுரம் 3வது தெரு, மைலாப்பூர் கிராமம் (சசி எண்டர்பிரைசஸ்) - 42,02,105

6. ஈக்காட்டுத்தாங்கல் இன்னர் ரிங் ரோட்டில் எண். 48ல் உள்ள ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ் பங்கு மதிப்பு - 84,21,000

7. எண். 1, பரமேஸ்வரி நகர், ஊரூர் கிராமம் (ஜெயா பப்ளிகேஷன்ஸ்) - 34,20,160

8. எண். 68, ஹபிபுல்லா ரோடு, தி. நகர், சென்னை - 17. - 43,56,142

9. எண். 69, ஹபிபுல்லா ரோடு, தி.நகர், சென்னை -17. - 59,96,346

10. கொடைநாடு தேயிலை எஸ்டேட் 900 ஏக்கர், கோத்தகிரி (சசிகலா, இளவரசி, சுதாகரன்) - 7,60,00,000

11. நீலாங்கரை, 4/130, ராஜா நகர், கிழக்கு கடற்கரை சாலை புதிய கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் - 80,75,000

12. பையனூரில் பண்ணை வீடு பங்களா - 1,25,90,261

13. ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி தொழிற்பேட்டை எண். 48, புதியதாக கட்டப்பட்ட கட்டடம் - 2,13,63,457

14. சென்னை, வெட்டுவான்கேணி 3/178 சி புதிய / கூடுதலாகக் கட்டப்பட்ட குடியிருப்புக் கட்டடம் - 1,52,59,076

15. ஆந்திரா மாநிலத்தில் உள்ள திராட்சைத் தோட்ட பண்ணை வீட்டில் புதிய கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடம் - 6,40,33,961

16. சிறுதாவூர் - புதிய கூடுதலாகக் கட்டப்பட்ட பங்களா - 5,40,52,298

17. சென்னை போயஸ் தோட்டம், க. எண். 36 இல் புதிய / கூடுதலாகக் கட்டப்பட்ட குடியிருப்புக் கட்டடம் - 7,24,98,000

18. சென்னை, ஸ்ரீராம் நகர், டி.டி.கே. சாலை புதிய கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடம் - 29,59,000

19. சோளிங்கநல்லூர் சீ செல் அவின்யூ - புதிய கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடம் - 80,36,868

20. தியாகராயநகர், பத்மநாபா தெருவில் புதிய கூடுதலாகக் கட்டப்பட்ட குடியிருப்பு கட்டிடம் - 20,43,000

21. சென்னை அண்ணாநகர் எல். 66 புதிய கூடுதலாகக் கட்டப்பட்ட கூடியிருப்பு கட்டிடம் - 24,83,759

22. புதிய மகாபலிபுரம், ஈஞ்சம்பாக்கம் 1/240ல் கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் நான்கு - 53,11,000

23. சென்னை, அக்கரை, மர்பி தெரு 1, கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடம் - 20,38,959

24. திரு.வி.க. தொழிற்பேட்டை கிண்டி பிளாட் எண். எஸ்.7, கணபதி காலனி, கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடம் - 39,34,000

உடன்பிறப்பே,

1991 ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராக ஆவதற்கு முன்பு, அவருக்கிருந்த சொத்துகளின் மதிப்பு இரண்டு கோடியே எண்பத்தி மூன்று லட்சம் ரூபாய்.

ஆனால் 1996 ஆம் ஆண்டு, அவரது ஐந்தாண்டு கால ஆட்சிக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டுள்ள விபரங்களின்படி 30.4.96 அன்று அவரது சொத்துகளின் மதிப்பு அறுபத்தி ஆறுகோடி ரூபாய்!

இவைகளன்னியில், வெளிநாடுகளில் மறைக்கப்பட்டுள்ள சொத்துகள் பல்லாயிரம்! பலநூறு கோடி ரூபாய்கள்!

அந்த வெளிநாட்டிலிருந்து வந்ததுதானே மூன்று லட்சம் டாலர்! அதாவது ஒரு கோடி ரூபாய்! அது எப்படி வந்தது

என்ற கேள்விக்கு அம்மையார் அந்நியச் செலாவணிப் பிரிவு அதிகாரிகளின் முன்பு அளித்த விளக்கம் என்ன?

> "யாரோ மூன்று லட்சம் டாலர் அனுப்பியிருக்கிறார்கள். யார் அனுப்பியது என்று தெரியாது. இந்த ஒரு கோடி ரூபாயை என்ன செய்வது என எனக்குத் தெரியவில்லை. என் ஆடிட்டரை கூப்பிட்டுக் கேட்டேன். அவர் அறிவுரைப்படி, இதை என் பெயரில் வங்கியில் போட்டு விட்டேன்."

யார் அனுப்பியது என்று தெரியாத பணத்தை முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அப்போதே முதலமைச்சர் நிவாரண நிதியில் சேர்த்திருக்கலாமே! அல்லது கட்சி நிதிக்குக் கொடுத்திருக்கலாமே! அடடா! எவ்வளவு பொதுநல மனப்பான்மையுடன் அந்த வெளிநாட்டு பணத்தைத் தன் பெயரிலேயே வங்கியில் போட்டுக் கொண்டிருக்கிறார் பார்த்தாயா!

பொய்யுரைக்கும் கலையில் இவரை மிஞ்சுவார் எவரும் இல்லை - என்பதற்கு இதுவரை வெளியான இவரது ஊழல் கணக்கும், இவரது நெல்லை மாநாட்டில் கதைத்த கதைப்பும் எடுத்துக் காட்டுகளாக விளங்குவதை மட்டும்; மற்றவர்க்கு விளக்கிடக் கணமும் தயங்காமல் நீ கடமையாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கடிதம்!

> *"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்*
> *தன்நெஞ்சே தன்னைச் சுடும்"*

ஆம்! நெஞ்சமிருப்பவர்களுக்காக வள்ளுவர் வடித்த குறள் இது!

அன்புள்ள,

மு. க.

(07-01-1998)

2385. வெற்றிக்கனிகள் காத்திருக்கின்றன; வீரர்காள்! வீராங்கனைகாள்!

உடன்பிறப்பே,

தி.மு.க. மாவட்டக் கழகச் செயல்வீரர்களின் கூட்டம் கடந்த பத்து நாட்களாக அண்ணா அறிவாலயத்தில் தொடர்ந்து நடைபெற்று, இன்னும் இரண்டொரு மாவட்டங்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் 6.1.1998 ஆம் நாளுடன் நிறைவுற்றிருக்கிறது.

அந்தக் கூட்டங்களில் கலந்துரையாடலுக்காக அழைக்கப்பட்டு வந்தவர்களில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவருமே வெறும் உணர்ச்சிவயப்பட்டுப் பேசுகின்றவர்களாக இல்லாமல் ஆழமாகச் சிந்தித்து அரசியல் நிலவலங்களையும், மக்களின் எண்ணங்களையும், ஆட்சியின் சாதனைகளில், திட்டங்களில் உள்ள நிறைகுறைகளையும் மனம் விட்டுப் பேசியது அண்ணா காலத்தில் அரும்பிய ஆரோக்கியம் மிகுந்த உட்கட்சி ஜனநாயகம் இன்றைக்கு எந்த அளவுக்கு மலர்ந்து மணம் வீசுகிறது என்பதற்குத் தக்க சான்றாக விளங்கியது.

நாம் சந்திக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், மாற்றார் எவ்வாறெல்லாம் தங்கள் திருவிளையாடல்களை நடத்துவார்கள் என்பதையும், அவற்றை நாம் நமது அண்ணாவின் வழியில் எப்படி எதிர்கொள்வது என்பதையும் செயல்வீரர்களாம் உன்போன்ற உடன்பிறப்புகள் விளக்கிய விதம் கண்டு பூரித்துப் போனேன்.

தேர்தலுக்காக அண்ணா தோற்றுவித்த இயக்கமல்ல இது! அய்யா பெரியார் அவர்களின் தன்மான இயக்கக்

கொள்கை வழியில் சமுதாய மறுமலர்ச்சிக்காகப் பணியாற்றிக் கொண்டிருந்த நாம், சமுதாயத்தில் காண விரும்பும் மாற்றங்களை அரசியல் ரீதியாக சட்டபூர்வமானதாக ஆக்க வேண்டும் எனும் முனைப்புடன் 1956-ல் நடைபெற்ற திருச்சி மாநாட்டில் பொது வாக்கெடுப்பில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, தேர்தலில் ஈடுபடுவது என முடிவெடுத்தோம். தேர்தல் காரணமாக வரும் பதவியை மேலே போட்டுக்கொள்ளும் துண்டுடனும், இந்த இயக்கம் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கையை வேட்டியுடனும் ஒப்பிட்டு - துண்டு போதுமென வேட்டியை விட்டு விடக்கூடாது தம்பி என அன்றைக்கே எச்சரித்தவர் நமது அண்ணன்.

அந்த எச்சரிக்கையை இதயத்தில் பதிய வைத்துக் கொண்டு எழுச்சி நடைபோட்டு வந்துள்ள இந்தத் திராவிட இயக்கம், 1957 பொதுத் தேர்தலில் அண்ணா தலைமையில் சட்டப்பேரவையில் நுழைந்து - அடுத்த பத்தாண்டுகளில் 1967-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலும் அமர்ந்தது.

1949 - கழகம் தோன்றுவதற்கு முன்பிருந்தே, திராவிடர் கழகத்தின் சார்பாக நாம் வலியுறுத்தி வந்த சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாக்க வேண்டுமென்ற கோரிக்கை - இந்த மண்ணுக்குத் ''தமிழ்நாடு'' எனப் பெயர் சூட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை - இந்தி ஆதிக்கம் கூடாது என்பதற்காக தமிழ், ஆங்கிலம் மட்டும்தான் என்று வற்புறுத்தி வந்த இரு மொழிதிட்டக் கோரிக்கை - இவையனைத்தும் 1967-ல் அண்ணா தலைமையில் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகே நிறைவேற்றப்பட்டன.

மேலும், திராவிட இயக்கத்தின் சார்பாக தொடர்ந்து எடுத்துக்கூறப்பட்டு வந்த பெண்ணுரிமை - பெண்களுக்குச் சொத்தில் சம பங்கு - பெண்களுக்கு வேலை வாய்ப்புகளிலும், உள்ளாட்சி நிர்வாகங்களிலும் உரிய சதவிகித ஒதுக்கீடு - உண்மையான நில உச்சவரம்பு - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் தனியாக இருபது சதவிகிதம் - தொழிற்கல்வியை நாடிடும் கிராமப்புற மாணவர்களுக்கென பதினைந்து சதவிகித ஒதுக்கீடு - ஆலய அறங்காவலர்களில் கண்டிப்பாக ஒரு ஆதிதிராவிடர் இடம் பெற வேண்டுமென்ற அரசின் ஆணை - எங்கும் எதிலும் தமிழ் என்ற நிலை நோக்கி விரைந்து நடைபோடும் செயல் - இவையும்,

இன்னும் எண்ணற்ற சாதனைகளும் கழக ஆட்சியின் மாட்சிக்குச் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன.

மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவு செய்வதிலும், வாழ்க்கை நிலையை வளப்படுத்துவதிலும் இந்த அரசுக்குள்ள ஆர்வமும், அக்கறையும் மாற்றாரும் அவர்தம் மனத்துக்குள் பாராட்டுவனவேயாகும்.

இந்தியாவிலேயே முதன்முதலாகக் குடிசை மாற்று வாரியம் கண்டது யார்? நமது அரசல்லவா?

ஆதி திராவிடர்களுக்கு இலவச காங்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் கொண்டு வந்தது யார் நாமல்லவா?

குடிநீர்வாரியம் அமைத்தது யார்? நாம்தானே!

கண்ணொளி வழங்கும் திட்டம் - கை ரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கிய திட்டம் - தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மாவட்டந்தோறும் மறுவாழ்வு இல்லங்கள் என்ற திட்டம் - எல்லாமே இந்தியாவில் முதன்முதலாகத் தொடங்கப்பட்டு நடைமுறையில் வந்ததற்கு நமது கழக அரசுதானே காரணம்!

மின்விளக்கு இல்லாத கிராமங்களே இருத்தலாகாது எனச் செயல்பட்டு வெற்றிகண்டதோடு - விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதும் நமது அரசுதான்!

நெசவாளர்கள் நல்வாழ்வுக்காக நாள்தோறும் 20 சதவிகித தள்ளுபடி (ரிபேட்) வழங்க ஆணை பிறப்பித்ததும் கழக அரசுதான்!

உடன்பிறப்பே,

அண்ணா காலத்திலேயே கழகம், அரசியலில் ஈடுபட முடிவெடுத்த காரணத்தினால்தான், இத்தனை சமுதாய மேம்பாடுகளைச் சாதனைகளாக ஆக்கிட முடிந்தது.

இன்னமும் கூட மதவெறியர்கள், சாதிவெறியர்கள், மனித நேயத்தைக் குழிதோண்டிப் புதைத்திட முனைவதைத் தடுத்திட சமத்துவபுரம் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதும் கழக ஆட்சியில்தான்!

மக்கள் தமது தேவைகளைத் தாமே நிறைவு செய்து கொள்ள அரசின் ஒத்துழைப்புடன் ''நமக்கு நாமே'' திட்டம், நாடு புகழும் திட்டமாக போற்றப்படுகிறது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கிராமப்புறங்களில் புகழப்படுகிறது.

அடுக்கிக்கொண்டே போகலாம்! ஆண்டு இரண்டுக்குள் இந்தக் காலகட்டத்தில் கழக அரசு ஆற்றியுள்ள பணிகளை எடுத்தெழுத ஏடு இடம் கொள்ளாது.

இத்தனை சாதனைகளையும் மக்கள் உணர்ந்து, கழக அணிக்கு இந்தத் தேர்தலில் வெற்றி வாகை சூடுவார்கள் என்றுரைத்த மாவட்டங்களின் செயல்வீரர்கள், மத்திய ஆட்சியில் பங்கு பெற்ற தமிழ்நாட்டு அமைச்சர்கள் தமிழகத்திற்குத் தங்கள் பணியாக ஆற்றியுள்ள சாதனைகளையும் விளக்கத் தவறவில்லை.

காவிரிக்கு நடுவர்மன்றம் கண்டதே நமது அரசுதான் என்பதையும் - இன்னமும் அந்தப் பிரச்சினையில் தமிழக அரசு உறுதியாக இருப்பதையும் - இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை உச்சநீதிமன்றத்தில் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அதில் இறுதிவரையில் அழுத்தமாக நின்று வாதாடி வெற்றி பெறவேண்டுமென்பதையும் - இல்லையேல், அரசியல் சட்டத்தில் இடஒதுக்கீடு அந்தந்த மாநிலங்களுக்கேற்ப இருக்கும் நிலையில் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்பதையும் - இந்தக் கலந்துரையாடல் கூட்டங்களில் கழகச் செயல்வீரர்கள் எடுத்துக்கூறியது எத்துணைக் களிப்பை எமக்கு ஏற்படுத்தியது தெரியுமா?

இவ்வளவு ஆர்வமும், ஆற்றலும், அக்கறையும் கொண்டு நாட்டுக்கு உழைக்கும் நம்மை, சூதுமதியால், சூழ்ச்சியால், துரோகத்தால், தூண்டிவிடும் செயலால் தொலைத்துவிடலாமெனத் தோள் தட்டிக்கொண்டு மாற்றார் புறப்பட்டிருப்பதையும், அவர்கள் எவ்வளவு சட்டவிரோதமான முறையில் தங்களின் எதிர்ப்புத் திருவிளையாடல்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் எடுத்தியம்பிய உடன்பிறப்புகள், அவர்கள் மீது அரசு மிகுந்த கண்காணிப்புடன் இருக்கவேண்டுமென்றும் அறிவுறுத்தினர்.

“எந்தெந்த முனைகளில் அந்தத் துரோகச் செயல் - தூண்டிவிடும் திருவிளையாடல் - நடைபெறுகிறதென அரசுக்குத் தெரியும். அரசு, விழிப்புடன்தான் இருக்கிறது”

என்று நான் செயல்வீரர்கள் கூட்டத்திலும் சொல்லியிருக்கிறேன். இப்போது உனக்கும் சொல்லுகிறேன்.

விழிப்புடன் இருப்போம் - விஷவித்துகளைப் பரப்பிட முனைவோர்க்கு இடம் தரமாட்டோம் - விதிகளை மீறி விளையாடிடுவோர் யாராயினும், அவர்களை எந்த அரசும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது என்பதைச் செயல்படுத்திக் காட்டுவோம்.

உடன்பிறப்பே, இதுபோன்ற பிரச்சினைகளை அரசுக்கு விட்டுவிடு - நீயும், உன்போன்ற உடன்பிறப்புகளும், நமது அணியில் உள்ள உடன்பிறப்புகளும் - அமைதி வழியில், ஆரோக்யமான ஜனநாயக நெறியில் - தேர்தல் களம் புகுந்திட வேண்டுகிறேன்.

வெற்றிக்கனிகள் காத்திருக்கின்றன; வீரர்காள்! வீராங்கனைகாள்! நமக்காக; நமது நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக!

அன்புள்ள,

மு. க.

(08-01-1998)

2386. மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது!

உடன்பிறப்பே,

சில தலைவர்களைப் பற்றியும், அவர்களது எழுத்து அல்லது பேச்சுகளைப் பற்றியும் பதிலுக்குப் பதில் விமர்சனம் செய்து லாவணிக்கச்சேரியில் இறங்குவது என்பது எனக்குப் பிடித்தமான பணியல்ல என்பது உனக்குத் தெரியும்.

அவற்றை அலட்சியப்படுத்த வேண்டும் என்று ஒரு அரசியல் பண்பாட்டை அண்ணா அவர்கள் கடைப்பிடித்ததோடு, என் போன்றோர்க்கும் கற்றுத் தந்துள்ளார். அரசியலில், மாற்றாரின் ஆபாச அர்ச்சனைகளுக்கு மறுமொழி கூறிக் கொண்டு, நேரத்தையும், நமது தரத்தையும் கெடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்பது அண்ணாவின் கருத்து! எனினும், அந்த மாற்றார் கழகத்தைப் பற்றியோ, கழகத் தலைமை பற்றியோ மக்களிடையே பரப்பிட முனையும் விஷமத்தனமானச் செய்திகளுக்கு விடையளிக்கும் வகையில் விளக்கமளிக்க அவர் தவறியதில்லை.

அந்த அண்ணாவின் வழிநின்று இயக்கத்தைக் கட்டிக்காத்து வரும் நமக்கு, அத்தகைய விளக்கங்களை அளிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் வருகிறபோது அதனைத் தட்டிக் கழிக்க முடியாத காரணத்தினால்தான் இந்தக் கடிதம் எழுத நேரிடுகிறது.

சில கட்சிகளின் தலைவர்கள் பாடுகிற சந்துமுனைச் சிந்துகளுக்கு, அதேபோல மெட்டமைத்து, அதேபோல சாகித்தியம் எழுதிப் பாடுவதற்கு நமது அரசியல் நாகரிகம் இடம் தராது எனினும், நாம் பயின்ற பாசறையின் பாரம்பரியப் பண்பின் அடிப்படையில் விளக்கம் தரவேண்டியுள்ளது.

ஜெயலலிதா அம்மையார் கூட்டிய நெல்லை மாநாட்டை முன்னின்று நடத்தியவர், அந்த மாநாட்டில் பேசியவற்றைப்

படித்துப் பார்த்தேன். அண்ணா ஒருமுறை 'திராவிட நாடு' இதழில், திராவிட இயக்கத்தைத் தரக்குறைவாகத் தாக்கிப் பேசிய வேலூர்க்காரர் ஒருவரைப் பற்றிக் குறிப்பிடும்போது, நரகல் நடையழகர் - நடுங்கா நாக்கழகர் என வர்ணித்திருந்தார். அதே அடைமொழி பொருந்துகிற அளவுக்கு இந்த நண்பர் நெல்லை மாநாட்டில் பேசியிருக்கிறார். நான் மறந்துவிடவில்லை! சில ஆண்டுகளுக்கு முன்பு இவர் ஜெயலலிதாவை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கி, நான் கலந்து கொண்ட பாளையங்கோட்டை பொதுக்கூட்ட மொன்றிலேயே அந்த அம்மையாரைப் பற்றிப் பேசிய மிகக் கடுமையானதும், கேவலமானதும், அசிங்கமானதுமான சொற்களைக் கண்டு நான் மிரண்டு போய், அவர் சட்டையைப் பிடித்து இழுத்து உட்கார வையுங்கள் என்று மேடையில் இருந்தவர்களிடம் சொன்ன அந்த நிகழ்ச்சியை!

இப்படிச் சில வீரவசன வியாபாரிகள், வர்ணனைகளையும் - வாய் கூசக்கூடிய வசை புராணங்களையும் மனப்பாடம் செய்து வைத்துக்கொண்டு, எந்த இடத்திற்குத் தாவுகிறார்களோ அந்த இடத்துக்குத் தக்கவாறு பச்சோந்திப்பாஷையில் தங்களின் காலட்சேபத்தை அமைத்துக் கொள்ளும் திறமை பெற்றவர்களாக இருப்பதை நாடு நன்றாக கவனித்துக் கொண்டுதானிருக்கிறது.

இன்னொரு தலைவர்! மிகப்பெரிய மக்கள் செல்வாக்கையும், பின்தொடர்ந்து வரும் அக்ரோணிக் கணக்கிலான தொண்டர்களையும் தன்பால் கொண்டிருப்பவர் அவர்! அந்த மாநாட்டில் கேட்டிருக்கிறார்; தன் மகனுக்குக் கருணாநிதி ஸ்டாலின் என்று ஏன் பெயர் வைத்தார் என்பதாக!

இதுபற்றி நான் பலமுறை, பல மேடைகளில் விளக்கமளித்திருக்கிறேன்.

திராவிட இயக்கத்தினர் பொதுவுடைமைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் - தந்தை பெரியார், பொதுவுடைமை நாடான சோவியத் ரஷ்யாவுக்குச் சென்று திரும்பியதையொட்டி, இந்த இயக்கத்தினர் சம தர்மக் கொள்கையில் மேலும் அழுத்தமான ஈடுபாடு கொண்டு, பொதுவுடைமைக் கொள்கை கொண்ட தலைவர்களின் பெயர்களையும், நாடு, நகரங்களின் பெயர்களையும் தமது மக்களுக்குச் சூட்டி மகிழும் காலம் மலர்ந்திடத் தொடங்கியது.

அப்போதுதான் மறைந்த அண்ணன் குத்தூசி குருசாமி அவர்கள், தனது மகளுக்கு ரஷ்யா என்று பெயர் சூட்டியிருந்தார். பேராவூரணி குழந்தை என்கிற இந்த இயக்கத்தின் பெருந்தூண்களில் ஒருவர், தனது மகனுக்கு மாஸ்கோ என்று சூட்டியிருந்தார். என் மகன்களுக்கு முத்து, அழகிரி, ஸ்டாலின், தமிழரசு எனப் பெயர்கள் சூட்டியபோது, மாற்றார் முகாமில் அதுபற்றிக் கேள்விகள், கேலியாக எழுந்ததுண்டு. நான் அவற்றுக்கு அப்போது சொன்ன பதில் :-

என் தந்தை முத்துவேலர் நினைவாக, முத்து என்ற பெயர் - எனக்குச் சுயமரியாதை உணர்வூட்டி ஊக்கப்படுத்திய பட்டுக்கோட்டைத் தளபதி பகுத்தறிவுச் சீயம் அண்ணன் அழகிரிசாமியின் நினைவாக, அழகிரி என்ற பெயர் - ரஷ்ய அதிபர் ஸ்டாலின் மறைந்தபோது பிறந்த காரணத்தால், ஸ்டாலின் என்ற பெயர் - தமிழரசு அமைய வேண்டுமென்பதால், தமிழரசன் அல்லது தமிழ் என்று பெயர் - அதாவது, குடும்பம் - நாடு - உலகம் - மொழி - என்ற அடிப்படையில் வைக்கப்பட்ட பெயர்கள் என்பதேயாகும்.

என் பெண்களின் பெயர்களும் தமிழ்ச்செல்வி, கனிமொழி என்ற தமிழ்ப் பெயர்கள்தான்!

பேரன் பேத்திகளின் பெயர்களும் அவ்வாறே!

பாவம்! இதுபற்றிப் பேச ஐந்து கோடி ரூபாய் செலவில் ஒரு மாநாடு அவர்களுக்குத் தேவைப்பட்டிருக்கிறது.

வேறென்ன கொள்கையா, மண்ணாங்கட்டியா? ஏதாவது இருந்தால்தானே அவைபற்றிப் பேச முடியும்!

இன்னொரு தலைவர் - அவர்கள் கட்சி ஆரம்பிக்கும் போதே வேலூரில் நடந்த தொடக்க விழாவில், கருணாநிதி குடும்பத்துப் பெண்கள் அனைவரும் வெள்ளைச் சேலை கட்டும் நாள் விரைவில் வரும் என்ற சூளுரை மேடையிலேயே முழக்கியவர்கள் - இப்போதும் நெல்லை மாநாட்டில் அதே பாணியில், கருணாநிதி குடும்பத்தையே கூண்டில் ஏற்றுவேன் - அழிப்பேன் - ஒழிப்பேன் என்று அடலேறு எனப் புலிவேடம் கட்டி ஆடியிருக்கிறார். பரிதாபம்! இப்போது அந்தப் புலித்தோல், புண்ணியவதியின் பாதாரவிந்தங்களில் பாதபூஜைப் பொருளாக மாறிவிட்டது கண்டு உலகத் தமிழர் ஏளனப் புன்னகை பூக்கிறார்கள்!

இன்னொரு தலைவர்! இவர் பெயரைச் சொல்லலாம் - இன்னமும் இவரிடம் எனக்கு மரியாதை உண்டு - டாக்டர் ராமதாஸ் அவர்கள்! அவர் அந்த மாநாட்டில் பேசும்போது என்னை ஒரு தீயசக்தி என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அவர் தந்த பட்டம் கண்டு நான் பதற்றமடையவில்லை, ஆனால் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை - அதாவது இஸ்லாமிய மற்றும் ஆதி திராவிட சமூகத்தினரை என்னுடன் மோதவிட வேண்டுமென்ற ஒரு திட்டத்துடன் அந்த மாநாட்டில் அவர் உரையாற்றியிருப்பதற்கு நான் விளக்கம் அளித்துத்தானே ஆக வேண்டும்.

நோன்புக் கஞ்சி குடித்ததைத் தவிர கருணாநிதி,
இஸ்லாமிய மக்களுக்கு என்ன செய்து விட்டார்?

இது டாக்டர் ராமதாஸ் அவர்களின் கேள்வி - அய்யா ராமதாஸ் அவர்களே! உருது பேசும் முஸ்லிம்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று முஸ்லிம்கள் பல ஆண்டு காலம் கோரி வந்ததை முன்பிருந்த அரசுகள் அலட்சியப்படுத்தியதையும் - நான் முதல்வராக இருந்தபோது, அதற்குச் சட்டத்தில் இடமில்லை என்று அதிகாரிகள் கூறிய நிலையில், சட்டத்தில் இடமில்லாவிட்டாலும் என் இதயத்தில் இடமிருக்கிறது என நண்பர்கள் அப்துல் லத்தீப், அப்துல் வகாப் போன்ற முஸ்லிம் லீக் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சட்டப் பேரவையிலேயே பதில் அளித்து, தமிழ் பேசும் முஸ்லிம்கள், உருது பேசும் முஸ்லிம்கள் அனைவருக்கும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடமளித்து அறிவித்து, அதனை அமல்படுத்திய அந்தச் சமுதாய நன்மை சாதனையைக் கூடவா தாங்கள் மறந்துவிட்டீர்கள் என்று கேட்காமல் இருக்க முடியுமா?

தாழ்த்தப்பட்டவர்கள் சீப் செகரட்டரியாக,
டி.ஜி.பி.யாக வர அருகதை இல்லையா? வந்தால்
கோட்டை வெடித்து விடுமா?

என்று நண்பரும், டாக்டருமான ராமதாஸ் அவர்கள், அந்த மாநாட்டில் பேசி, ஜெயலலிதா அம்மையாரின் கைதட்டலை வாங்கி மகிழ்ந்திருக்கிறார்.

1989-ல் நான் முதல்வராகப் பொறுப்பேற்றபோது, மிகமிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த எம்.எம். ராஜேந்திரன்

ஐ.ஏ.எஸ். அவர்களைத்தான் சீப் செகரட்டரியாக நியமித்திருந்தேன் என்பதையும் - அவரையே ஸ்பிக் தொழிற்சாலைத் தலைவராகவும் நியமித்தேன் என்பதும் - முதன்முதலாக ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த துரை ஐ.பி.எஸ். அவர்களைத்தான் டி.ஜி.பி.யாக நியமித்தேன் என்பதையும் ராமதாஸ் அவர்கள் எப்படி இதற்குள் மறந்துவிட்டாரோ தெரியவில்லை.

இப்போதுகூட, நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத் தலைவர் என்ற பெரிய பொறுப்பில் முருகராஜ் ஐ.ஏ.எஸ். அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறாரே! அவர் ஆதிதிராவிடர் அல்லவா?

பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியில் இப்போது பொறுப்பேற்றிருப்பவர் ஜெகதீசன் அவர்கள் - அவர் யாராம்? தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் அல்லவா?

இன்று முதலமைச்சரின் சிறப்புச் செயலாளராக இருக்கிற விசுவநாதன் ஐ.ஏ.எஸ். அவர்கள், எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதை டாக்டர் ராமதாஸ் அவர்கள், விசாரித்துத் தெரிந்து கொண்டிருக்கலாமே!

அது மாத்திரமா? கடந்த வாரம் கூட தலைமைச் செயலாருக்கு அடுத்துள்ள பதவியான விழிப்புப்பணி ஆணையாளர் பதவிக்கு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஏ.பி.முத்துச்சாமி, ஐ.ஏ.எஸ்., அவர்களைத்தான் நியமித்திருக்கிறேன்.

அதுபோலவே சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவராக அதே சமுதாயத்தைச் சேர்ந்த மணிவண்ணன், ஐ.ஏ.எஸ்., அவர்களை நியமிக்கச் செய்ததும் நான்தான்.

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான தங்கராசு அவர்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். அவர் இந்த அரசினால் நிர்வாகத் தீர்ப்பாயத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்த உண்மைகளையெல்லாம் மறைத்துவிட்டு, இப்போது அவர் தூய சக்தி என்று ஏற்றுக் கொண்டுள்ள ஜெயலலிதா அம்மையாருக்குத் துதி பாடுவதற்காக, என்னைத் தீயசக்தி என்று தூற்றியது கண்டு நான் வருந்தவில்லை.

ஆனால், இந்த ஆட்சிக்கும், எனக்கும் விரோதமாகச் சில சமூகங்களைத் தூண்டிவிடும் அவரது சதித்திட்டம் கண்டுதான் நான் மிகவும் வேதனை அடைகிறேன்.

எல்லச் சமுதாய மக்களுக்கும் பாதுகாப்பாகவும் - சமுதாய மக்களுக்கிடையே பாலமாகவும் இருப்பதுதான் இந்த அரசு என்பதை நண்பர் டாக்டர் ராமதாஸ் மறைக்க முயன்றாலும் - நல்லவர்கள் யாரும் மறைக்க மாட்டார்கள்! மறுக்கவும் மாட்டார்கள்!

இந்தக் கடிதத்தை முடிப்பதற்கு முன் கடைசியாக ஒரு கேள்வி! தாழ்த்தப்பட்ட ஒருவரைத்தான் தமிழ்நாட்டு முதலமைச்சராக ஆக்குவேன் என்று கூறி கட்சி வளர்த்த டாக்டர் ராமதாஸ் அவர்கள், இப்போது யாரை முதலமைச்சராக ஆக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அணி சேர்ந்திருக்கிறார் என்பதைத் தயவுசெய்து சொல்ல வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(09-01-1998)

2387. இங்கே அழைப்பது அண்ணாவின் இதயம்!

உடன்பிறப்பே,

முகில் மந்தைகள் மேய்கின்ற மலைத் தொடர் ஒன்று! வளம் கொஞ்சுகிறது - வனப்பு தழைத்துக் கிடக்கிறது. முகில் கூட்டத்தை விரட்டுவது போல கிளைக்கரம் ஆட்டுகின்ற செழித்த மரங்கள் உயர்ந்து நிற்பதில் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன. அந்த மரக் கும்பலின் கொம்பு ஒன்றில் தேனடையொன்று தென்படுகிறது. கடும் உழைப்பைத் தொழிலாகக் கொண்ட தேனீக்கள் நறுமண மலர்களில் இருந்தும், திருமிகு பூக்களில் இருந்தும் பறந்து பறந்து மொண்டு வந்த தேன் நிறைந்த குடமாக அந்தத் தேன்கூடு மரக்கொம்பில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. எத்தனை நாள் பாடுபட்டு, எத்தனை ஆயிரம் தேனீக்கள் உருவாக்கிய இன்சுவை மாளிகை அது! தேன்நாடி மலர்தேடி பூங்காக்கள் தோறும் பறந்தோடிய அந்தத் தேனீக்களுக்கல்லவா தெரியும், தங்கள் உழைப்பின் வடிவம் அந்தக் கொம்புத் தேன் கூண்டு என்று!

அந்த மலைப்பகுதியில் உடலால் நகர்ந்தவாறு ஒருவன் தென்படுகிறான். பாவம்! இரண்டு கால்களுமற்ற முடவன். மேகப்புகை, மரங்களைச் சேலை போலச் சுற்றிக் கொள்கிற அழகையும் பார்க்கிறான். சில மேகங்கள், மங்கையர் மேனியிலிருந்து தானாகவே நழுவிடும் மெல்லிய ஆடைகளைப் போல, மரங்களை விட்டு அகலுவதையும் காண்கிறான். மானினம், தேன்சிட்டு, மயில், குயில், மாடப்புறா இவையனைத்தும் அந்த மலையின் அழகுக்கு அழகு செய்வதை உணருகிறான். அவன் விழிகள் விண்ணோக்குகின்றன. வீறுகொண்டு நிற்கும் மரத்தின் கொம்பிலே, நமது தென்னாட்டின் வடிவத்தில் தேனடை ஒன்று இருப்பதை அவன் கண்கள் காணத் தவறவில்லை. கண்டவுடன் அவன் நாவில் நீர் ஊறுகிறது. அடடா! அந்தத் தேன் கூட்டை

எடுத்துவிட்டால்.... அதுவும் மலைத்தேன்! அதிலும் கொம்புத்தேன்! எப்படியும் அந்தத் தேனடையை அடைந்தே தீர வேண்டும் என்று எண்ணுகிறான். அதற்கு அந்த மரத்தில் அல்லவா ஏறிட வேண்டும்? மரம் ஏறிடக் காலில்லாதவனால் எவ்வாறு இயலும்? கீழேயிருந்து ஒரு கல்லையெடுத்துக் குறிபார்த்து வீசினால் தேனடை உடையும்! தேன் கொட்டும்! வாய்பிளந்து அதனை அருந்தி இன்புறலாம்! இப்படியும் ஓர் ஆசை அந்த முடவனுக்கு!.

கல் எறிந்தால், தேன் கூட்டிலிருந்து தேனீக்கள் படையல்லவா கிளம்பும்! அந்தத் தாக்குதலில் இருந்து தப்பிட, அந்த முடவனால் ஓடிடவும் முடியாதே!

இறுதியாக அவன் மனம் திடமான ஒரு முடிவுக்கு வருகிறது. மரம் ஏறித் தேன் கூட்டைக் கவர்ந்திடவும், இயலாது! கல் எறிந்து அதனைச் சிதைத்து, சிந்துகின்ற தேனருவியைக் குடித்திடவும் இயலாது! எனவே, இன்னலற்ற ஒரு வழியை அவன் கண்டுபிடிக்கிறான். கண்களால் தேனடையைப் பார்க்கிறான். தன் இரு வெறுங்கைகளையும் குழித்து வைத்துக் கொண்டு அதில் தேன் கொட்டுவது போலக் கற்பனை செய்து கொண்டு, தேனருந்தும் பாவனையில் வெறுங்கையை நக்கி, நக்கி இன்பமடைகிறான்.

இந்த வேடிக்கையான காட்சியைக் காதலால் துன்புறும் ஒரு பெண்ணுக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார், குறுந்தொகையில் புலவர் பரணர் என்பார்.

காதலை தற்போதைக்குச் சற்றுத் தள்ளி வைத்துவிட்டு; பரணரின் பாடலை அரசியல் ரீதியாக அணுகுவோமா?

கழகமெனும் தேன்கூட்டை, கடும்பணியால் தேனீக்கள் போலத் தொண்டர்கள் அமைத்த அந்தக் கொம்புத்தேனாம் கொள்கைக் கூட்டை, உடைத்திடச் சில பேர், உடைத்துத் தேன் பருகச் சில பேர், அண்ணாந்து பார்த்துப் பார்த்துக் கழுத்து வலிகண்ட காரணத்தால், அந்தக் காலில்லா முடங்கள் வேறு வழியின்றி வெறுங்கையைக் குழித்துக் கொண்டு தேனை நக்குவது போல் நடித்து மகிழ்கின்றன.

“குறுந்தாட் கூதளி ஆடிய நெடு வரைப் பெருந்தேன்
கண்ட இருங்கால் முடவன் உட்கைச் சிறு குடை கோலி,

கீழ் இருந்து சுட்டுபு நக்கியாங்கு...”

எத்துணை அழகு செறிந்த, பொருள் பொதிந்த நயமிகு பாடல் கண்டாயா?

முடவன், தேனைச் சுவைக்க முடியவில்லை. சுவைப்பதுபோல் பாசாங்கு செய்து ஆறுதல் அடைகிறான்.”

உடன்பிறப்பே, இருபது ஆண்டுகளுக்கு முன்பு எமர்ஜன்சி காலத்தையொட்டி, என் கடிதங்கள் பெரும்பாலானவை தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே வெளியிடப்பட வேண்டுமென்ற நிலையிருந்தபோது, இலக்கியங்களின் துணைகொண்டு அரசியல் சூழல்களை மறைமுகமாக விளக்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில், நான் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியைத்தான் இப்போது, மீண்டும் உனக்கு நினைவூட்டியிருக்கிறேன்.

இந்த இலக்கியப் பாடலில் வரும் கதாநாயகனைப் போன்றவர்கள் சிலர், இன்னமும் தமிழக அரசியலில் இருந்துகொண்டு, தி.மு.க. எனும் தேன்கூட்டை, ஆம் - உன்போன்ற லட்சோபலட்சம் உடன்பிறப்புகள் உழைத்து உருவாக்கிய தேன்கூட்டை, கவரவும் முடியாமல், கல் எறிந்து சிதைக்க முனைந்தால் அதனால் ஏற்படும் விளைவுக்கும் அஞ்சி, கழகத்தை அழித்து விட்டோம் - கழக அரசைக் கவிழ்த்து விட்டோம் என்று தங்களுக்குத் தாங்களே கனவு கண்டுகொண்டு, தம்மை நம்பிக்கொண்டு இன்னமும் இருக்கிற ஏமாளிகளைத் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏமாந்தது போதுமென எனது இனிய உடன்பிறப்புகள் பலபேர் அவர்களின் கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு மீண்டும் கழகப் பாசறைக்கு வந்துகொண்டேயிருக்கிறார்கள்.

நாலாண்டுகளுக்கு முன்பு, நம்மிடமிருந்து பிரிந்து சென்றோர் தனி இயக்கம் கண்டபோது, அரசியல் ரீதியாக எதிர்ப்புக் கருத்துகளை நாம் வெளியிட்டது என்பது தவிர்க்க முடியாதது எனினும், எனக்கிருந்த ஒரே ஒரு ஆறுதல், பரவாயில்லை! நம்மைக் காட்டிலும் தீவிரமாகக் கொள்கை முரசம் கொட்டப் போவதாகச் சொல்லித்தானே சென்றிருக்கிறார்கள் - தமிழின உணர்வை முழக்கப் போவதாகக் கூறித்தானே தனிக் கட்சி கண்டிருக்கிறார்கள்.

சாதி மத மோதலற்றதும் - மூட நம்பிக்கையொழிந்த சமுதாய மறுமலர்ச்சி கொண்டதுமான - இன எழுச்சிப் பகுத்தறிவுப் பாசறையைப் பாதுகாத்திட இன்னும் ஒரு படை புறப்படுவது - பொது நோக்கில் பார்த்தால் தேவையானதுதானே! ஊழல் கும்பல் ஒன்றை, ஊரையடித்து உலையில் போட்டுக் கொள்வதை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டி, அந்தக் கும்பலை வீழ்த்திட வீறுகொண்டு வேறொரு முனையிலும் தாக்குதல் நடத்தச் சில தம்பிகள் போர்க்கோலம் பூண்டிருப்பது நல்லதுதானே? என்பதுதான்!

ஆனால், அப்படி எனக்கு ஏற்பட்ட ஆறுதலுக்கும் இடமின்றி இதோ அவர்கள் எங்கேயோ சென்று விட்டனர்.

அவர்கள் கையில் ஏந்தியிருந்த கடுமையான லட்சியம் என்ற கட்கம் கீழே விழுந்து கிடக்கிறது - புரட்சிக்காகத் தயாரிக்கப்பட்டதெனக் கூறப்பட்ட போர்வாள், உறையுடன் துருப்பிடித்துப் போய் ஊழல் கும்பலின் மாளிகைப் படிக்கட்டில் கிடக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து விழித்துக் கொண்டோர், தாங்கள் இருக்க வேண்டிய இடம், முன்பு இருந்த இடமே என்பதைப் புரிந்துகொண்டு நமது கரம் பற்றிக் கண்கலங்குகிறார்கள். நம் கண்ணீரும், அவர்களின் கண்ணீரும் அருவியாகப் பெருகி அண்ணா வளர்த்துத் தந்த குடும்பப் பாசத்திற்கோர் இமாலய எடுத்துக்காட்டாக விளங்குவதை நாடு காண்கிறது. நல்லோர் மகிழ்கின்றனர்.

கோட்டைக்கு அழைத்துச் செல்கிறேன் வா என்றார்கள் - என்னிடம் கொண்டிருந்த பாசத்தை ஒருகணம் மறந்துவிட்ட என் அன்புத்தம்பிமார்கள் சிலர், அதை நம்பித்தான் ரயில் ஏறினார்கள். ஆனால் ஏறிய ரயிலோ, அருகில் உள்ள கோட்டை ஸ்டேஷனுடன் நின்றுவிட்டது. அழைத்தவர்களோ, இப்போது கோட்டையில் மீண்டும் ஒரு கேட்டையே உட்கார வைப்பதற்கு ஓடுகிறார்கள் - ஓடுகிறார்கள் - ஓடிக்கொண்டே ஊதுகுழல் ஊதுகிறார்கள்!

நம்மைவிட எல்லாவற்றிலும் தீவிரம் - வேகம் - அனல் - கனல் - அனைத்துமிருக்குமென புதிய கட்சி பற்றி நானே என் மனத்துக்குள் நம்பியிருந்தேன் என்றால், அத்தகையவர்களின் அற்புதமான நடிப்பில் அவசரப்பட்டு என் அருமை உடன்பிறப்புகள் சிலர் நம்பி மோசம் போனதில் என்ன ஆச்சரியமிருக்க முடியும்.

இப்போது தெரிந்து, தெளிந்து, திரும்பிக்கொண்டிருக்கும் உடன்பிறப்புகளை, இதயம் திறந்து, இரு கரம் நீட்டி ஆரத் தழுவி அரவணைத்து வரவேற்றுக்கொண்டிருக்கிறேன்.

மேலும் வருவதற்கு எவரும் தயங்கிடவோ, கூச்சத்தால் கூனிக் குறுகி நெளிந்து வளைந்திடவோ தேவையில்லை,

இதோ இங்கிருப்பது அன்றைக்கே நான் இரவலாகப் பெற்றுள்ள அண்ணாவின் இதயம்தான்! அந்த இதயத்தின் அழைப்புத்தான் என் அருமை உடன்பிறப்புகளுக்கு இப்போது நான் விடுக்கின்ற அழைப்பு என்பதை உறுதிப்படுத்தவே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. க.

(10-01-1998)

2388. அடையாளம் காட்டிக் கொள்கிறார்கள்!

உடன்பிறப்பே,

சென்னை சத்யா ஸ்டுடியோ வளாகத்தின் வெளிச்சுவரில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், நமது கழக உறுப்பினருமான எம்.கே. பாலனும் மற்றும் கழகத்தினரும் அந்த ஸ்டுடியோவில் இயங்கி வரும் ஜானகி எம்.ஜி.ஆர். கல்லூரியின் அனுமதிக் கடிதம் பெற்று, கழகத் தேர்தல் பிரச்சாரத்துக்கான சின்னங்களையும், என் படங்களையும் வரைந்துள்ளனர். அதனை எதிர்த்து அ.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், என் உருவப்படங்களின் முகத்தில் தார்பூசி அழித்து ருத்ரதாண்டவம் ஆடியுள்ளனர்.

இதுபற்றிச் சட்டமன்ற உறுப்பினர் ராமஜெயமும், எம்.கே. பாலனும், பகுதிச் செயலாளர் கரிகாலனும், கு.க. செல்வமும் செய்தியாளர்களிடம் கூறும்போது, நாங்கள் முறைப்படி நிர்வாகத்திடம் உத்தரவு பெற்றுச் சுவரில் விளம்பரம் செய்துள்ளோம். மேலும், சத்யா ஸ்டுடியோவில் இயங்கி வரும் ஜானகி எம்.ஜி.ஆர். கல்லூரிக்கு ஜெயலலிதா ஆட்சியில் ஒப்புதல் தர மறுத்துவிட்டார்கள். முதல்வர் கலைஞர்தான் கல்லூரி நடத்துவதற்கு ஒப்புதல் அளித்துத் திறந்து வைத்தார் என்பதை அ.தி.மு.க.வினர் மறந்துவிடக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சுவரில் வரையப்பட்ட என்னுருவப்படத்தின் மீது தார்பூசி விகாரப்படுத்தியதற்காக் கழக உடன்பிறப்புகள் யாரும் ஆத்திரப்படக் கூடாது. திராவகம் வீசி நிஜமுகங்களையே விகாரப்படுத்திய கும்பல் ஒன்று, மீண்டும் கோட்டையில் குந்திட குதியாட்டம் போட்டுக் கொண்டிருக்கும் நிலையில் என் உருவப்படத்தின் முகத்தில், தார்தானே பூசினார்கள் என்று நீயும், ஏனைய உடன்பிறப்புகளும் அமைதி அடைய வேண்டுமேயன்றி, அமளி எழுவதற்குத் துளியும் இடம் தரலாகாது என்பது என் பணிவன்பானதும், கண்டிப்பானதுமான வேண்டுகோளாகும்.

வெற்றி, கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருக்கிறது என்பதும் - தோல்வி தங்களின் வாசல் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது என்பதும் தெளிவாகத் தெரிகிற காரணத்தால், இப்படியெல்லாம் அநாகரிக - அராஜக - ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதைத்தவிர, அவர்களுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. நாம் எடுத்து வைக்கும் ஆதாரபூர்வமானக் குற்றச்சாட்டுகளுக்கும், வெளிப்படுத்திக் காட்டியுள்ள உலக மகா ஊழல்களுக்கும் - உரிய பதில்களை அளிப்பதற்கு வக்கற்று வகையற்றுப் போன காரணத்தினால்தானே வசை புராண அறிக்கைகளை ஏடுகளில் வெளியிட்டு ஒருவிதமான ஆத்ம திருப்தி அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

அதற்காகத்தானே நெல்லை மாநாடே நடத்தியிருக்கிறார்கள்.

அந்த மாநாடு பற்றிய பல்வேறு செய்திகளை வெளியிட்டு விமர்சித்துள்ள 'இந்தியா டுடே' தமிழ் இதழில் ஒரு படம் பார்த்தேன். ஆம்! நெல்லை அ.தி.மு.க. ஊர்வலத்தில், என்னை இழித்தும் பழித்தும் சித்தரித்து, கொண்டு வரப்பட்ட வாகனங்களில் ஒன்று - அந்த வாகன உருவப் பொம்மையை வண்ணத்தில் படம் பிடித்து அந்த இதழ் வெளியிட்டுள்ளது. அதுபற்றி விமர்சனம் செய்துள்ள எழுத்தாளர் வாசந்தி அவர்கள், முச்சந்தியில் மறைந்த நாகரிகம் என்று அந்தக் கட்டுரைக்குத் தலைப்பு கொடுத்திருக்கிறார். அந்த வண்டியில் உருவகப்படுத்தியிருந்த காட்சியின் வண்ணப் படமும் அதே இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.

மிகவும் சிரமப்பட்டு அந்த உருவகக் காட்சியை, சிலைகள் வடிவில் அமைத்த நண்பர்களைப் பாராட்டத்தான் வேண்டும். கடுமையானதும் - காட்டுமிராண்டித்தனமானதும் - முச்சந்தியில் மறைந்துவிட்ட நாகரிகம் - என்ற வேதனையுடன் வாசந்தி போன்றவர்கள் குறிப்பிட்டாலும் கூட, அந்தக் கலை நுணுக்கத்தைப் பாராட்டாமல் புறக்கணித்து விட முடியுமா?

ஜெயலலிதா அம்மையார் அவர்களை அவரது ஆட்சிக்காலத்தில் அன்னை பார்வதியாக - லட்சுமியாக - சரசுவதியாகச் சித்திரம் தீட்டிப் படங்கள் ஒட்டி, அவற்றைப் பார்த்து அவர் மகிழ்ந்ததுண்டு. அகிலாண்டேஸ்வரி, பிரமாண்ட நாயகி, மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி என்றெல்லாம் ஓவியம் தீட்டிச் சுவரொட்டிகள் ஒட்டியபோது, அவற்றை அவர் சுவைத்துப் பூரித்ததும் உண்டு.

அவ்வளவு ஏன்! இந்து பக்தர்களின் இதயங்களைப் புண்படுத்தியது போதாதென்று கிறிஸ்துவ மக்களின் உணர்வுகளுக்கும் அறைகூவல் விடுவது போல, ஜெயலலிதா அம்மையாரைக் கன்னிமேரியாகச் சித்தரித்து அந்த ஆள் உயரப்படங்களை மாநிலம் முழுவதும் ஒட்டி வைத்ததும் - கம்பங்களில் கட்டிக் களித்ததும் நாடு மறந்துவிட்ட விவகாரமல்ல!

அந்தக் கூட்டத்தினர்தான் இப்போது நடத்திய மாநாட்டில், அவரை மகிஷாசுர மர்த்தினியாகவும், என்னை மகிஷாசுரனாகவும் சித்தரித்து ஊர்வலத்தில் நகரும் காட்சி வண்டியாகக் கொண்டு வந்து - அம்மையார் ஜெயலலிதாவின் புன்னகையைப் பெரும் பரிசாகப் பெற்றிருக்கிறார்கள்.

மகிஷாசுர மர்த்தினி என்ற மகா காளி உருவத்தில் ஜெயலலிதாவின் சிலை!

அகன்ற நெற்றியில் அள்ளிப் பூசியிருக்கும் விபூதியும், குங்குப் பொட்டும்!

ஒரு கையில் வெட்டரிவாள் - மற்றொரு கையில் இரத்தம் சொட்டச் சொட்ட துண்டிக்கப்பட்ட என் தலைகள் - கைகளில் மட்டுமா! கழுத்து நிறைய துண்டிக்கப்பட்ட என் தலைகளின் நீண்ட மாலை - நீண்டு தொங்கும் காளியின் நாக்கு - வாயின் இருபுறமும் சிங்கப் பற்கள் - இடையையும் தொடையையும் மறைக்க வெட்டித் தொங்க விடப்பட்ட கைகள் - உடலில் கைக்குட்டை அளவு ஆடைகூட இல்லை - வைரம் திரைப்படத்துக் கதாநாயகி போலவே காளியையும் சித்தரித்திருந்த விரசம் - காலடியில் என் உருவத்தைக் கிடத்தியதோடு, என் முதுகின் மேல் அந்தப் பத்திரிகாளியின் பாதம் அழுந்தியிருப்பது போன்ற தோற்றம் - உடன்பிறப்பே, இந்த ஊர்வலப் படத்தினை வெளியிட்டு ''இந்தியா டுடே'' இதழ், படத்தின் கீழே வக்கிரம் :- மகிஷாசுர மர்த்தினியாக ஜெயலலிதா; அசுரனாகக் கருணாநிதி என்று குறிப்பெழுதியுள்ளது.

அத்துடன் நில்லாமல், பின்வரும் கருத்துகளையும் வாசந்தி அவர்கள் அந்த இதழில் தீட்டியுள்ளார் அது வருமாறு :-

> மக்களின் உணர்வுகளைத் துச்சமாக மதிப்பது போலத் தொண்டர்களின் உணர்வுகளை அலட்சியப்படுத்த இனிமேல் முடியாது என்று ஜெயலலிதாவும், அவரது

கூட்டணி சகாக்களும் புரிந்து கொள்வது அவர்களுக்கு நல்லது. கொஞ்சங்கூடக் கூச்சமில்லாமல், தங்களது அடிப்படைத் தத்துவங்கள், கட்சியில் தம்மை ஈர்க்க ஊன்றுகோலாக இருந்த தத்துவங்கள் - ஒரு தனி நபரின் (அவர் கட்சித் தலைவர் என்றாலும்) சொந்த லாபத்திற்காக, விருப்பு வெறுப்பை சமாதானப்படுத்துவதற்காக, கூட்டணி என்ற பெயரில் காற்றில் விடப்பட்டபோது, ஆட்டு மந்தையாய் தொண்டர்கள் பின்தொடர்வார்கள் என்று ஜெயலலிதாவும், அவரது கூட்டணி நண்பர்களும் நினைப்பதே அவர்களது அகந்தையின் அடையாளம். ஏனென்றால், வெட்கங்கெட்டு இவர்கள் கை கோர்த்தது இவர்களது சொந்த லாபத்துக்காக. சொந்த வெறுப்பைக் கக்குவதற்காக, அதில் அசிங்கமும், அநாகரிகமும் பகிரங்கமாவது பற்றி எந்தக் கூச்சமும் இல்லை. தன்னிடம் நேரடியாகச் செய்திகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள் தன் வீட்டு முகவரிக்கு மடல் எழுதலாம் என்ற கருணாநிதி அறிவிப்புக்கு, எந்த வீட்டுக்கு என்று கருணாநிதி தெரிவிக்கவில்லை, முகவரியும் கொடுக்கவில்லை என்று கிண்டலடிக்கிறார் ஜெயலலிதா. பதிலுக்கு திருப்பியடிக்க மற்றவருக்கு எத்தனை நேரம் ஆகும்? நெல்லையில் அ.தி.மு.க. வெள்ளிவிழா கோலாகலப் பேரணியில், அவரை மகிஷாசுர மர்த்தினியாகவும், கருணாநிதியை அசுரனாகவும் காட்டிய மிதவைகளைக் கண்டு களித்த ஜெயலலிதாவுக்கும், ரோம் நகரம் பற்றியெரியும் போது பிடில் வாசித்த நீரோவுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட மனநிலை உள்ளவர்களிடம் அதிகாரம் சென்றால் மக்கள் நிலை என்னவாகும்? சென்ற ஆட்சியில் என்ன நடந்தது என்பதை மக்கள் மறந்துவிட முடியுமா என்ன?

பதிலுக்கு திருப்பியடிக்க மற்றவர்களுக்கு எவ்வளவு நேரமாகும்?

என்று அந்தக் கட்டுரையில் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது.

உடன்பிறப்பே! அ.தி.மு.க.வினரின் இதுபோன்ற வக்கிரங்களுக்கும், கோணல் சேட்டைகளுக்கும், குள்ளமதிச் செயல்களுக்கும், குதர்க்கத் திருவிளையாடல்களுக்கும் - பதில் சொல்ல அதிக நேரமாகாது உனக்கு என்பது, எனக்கு நன்றாகத் தெரியும். அதற்காக நீ ஆற்ற வேண்டிய பணிகளை விட்டுவிட்டு, பதிலுக்குத் திருப்பித் தரும் பணியில் ஈடுபடவேண்டாம் என்று உன் கரம் பிடித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

புலிவேட்டைக்குப் புறப்பட்டவன், அதைவிடுத்து இடையே எலிவேட்டையில் கவனத்தைத் திருப்பினால் நினைப்பு - நேரம் - பயன் எல்லாமே வீண் தானே!

அவர்கள் யார் என்பதை, நமக்குச் சிரமம் இல்லாமலே நாட்டுக்கு அடையாளம் காட்டிக் கொண்டு நமது வேலையை வெகுவாகக் குறைத்து விடுகிறார்கள் என்ற நிம்மதியுடன் தொடர வேண்டும் நமது பணி!

இந்த என் கண்டிப்பான வேண்டுகோளை, உன் அண்ணனின் கட்டளையென்று ஏற்றுக் கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

அன்புள்ள,

மு. க.

(11-01-1998)

2389. தமிழர் திருநாள் உறுதிமொழி ஏற்போம்!

உடன்பிறப்பே,

இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, 1970 ஜனவரி 12ஆம் நாள் சென்னை வானொலியில் பொங்கல் திருநாள் கவியரங்கத்திற்கு என்னைத் தலைமையேற்க அழைத்திருந்தார்கள். அன்றையக் கவியரங்கில் நான் பாடிய தலைமைக் கவிதை இந்தப் பொங்கல் நாளில் என் நினைவில் நிழலாடுகிறது. அந்த நினைவை உன்னோடும் ஏனைய உடன்பிறப்புகளோடும் பகிர்ந்து கொள்கிறேன்.

கடும் வறட்சியினால் தமிழகம் பாதிக்கப்பட்ட 1969-ஆம் ஆண்டு, அத்துயர் தணிப்பதற்காக மத்திய அரசின் துணையை நாடி பிரதமர் இந்திராகாந்தி அவர்களை வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட அழைத்திருந்தேன். அவரும் வந்தார். பாதிக்கப்பட்ட பகுதிகள் பலவற்றைப் பார்வையிட்டோம். பாதகங்களையும் சாதகங்கள் ஆக்கிக் கொள்வோம் எனச் சூளுரைத்து அன்றைய மத்திய அரசின் உதவியோடு, ஏரி, குளம், கண்மாய் என ஆயிரக்கணக்கான நீராதாரங்களைத் தூர்வாரி ஆழப் படுத்தியும் - கரைகள் உயர்த்தியும் - லட்சக்கணக்கான மக்களுக்கு வறட்சிப் பணிகள் வாயிலாக வேலைவாய்ப்பு வழங்கியும், அக் கொடுந்துயர் தணித்தோம். பின்னர் மழையும் பொழிந்தது. அதனைச் சுட்டிக்காட்டுவதாக என் தலைமைக் கவிதை தொடங்கிற்று.

“வாவி, குளம் வாய்க்கால்கள் நீரெல்லாம்
ஆவியாகி வறட்சிப் புயல் வந்துற்றுப் பயிரெல்லாம்
சாவியாகப் போன நிலை கண்டுவிட்டுத் தமிழ் அரசு
தாவியோடித் திடுதிடென வெப்பத்துயர் தணித்ததாலும்
ஓவிய முகில் அனைத்தும் கருக்கொண்டு புவி

மேவிட மழைக் குழந்தை ஈன்றதாலும் உணவுக்
கட்டுப்பாடென்று முன்பு
ஏவிய அரசாணை திரும்பப் பெற்று இன்பக்
காவியத் திருநாளாம் பொங்கலன்று – அன்றைக்குக்
கூவிய குயில்கள் எல்லாம் மீண்டும் கூவ – மக்கள்
தூவிய மலர்மலைமேல் மாத்தமிழாள் நடந்து வர –
மாநிலத்து மாந்தரெல்லாம்
மா, பலா, வாழையெனும் முக்கனியின் சுவையினூடே
தித்திப்புப் பொங்கல் தின்றிடவே வேண்டுமென்று
சக்திக்கு ஏற்றவாறு உழைக்கின்றோம்

இனிய நம் தலைவர் அண்ணா அவர்கள், மறைந்து ஆட்சிப் பொறுப்பின் சுமை என் தோளில் ஏற்றப்பட்டபோது, ஆரம்ப கட்டத்திலேயே அந்தக் கொடுமையான வறட்சியையும் சமாளிக்க வேண்டிய கடமையின் கட்டாயம் ஏற்பட்டது. பின்னர் இயற்கை அளித்த மழைக் கொடையால் இன்னல் நீங்கியது. அந்த உணர்வுதான் அந்நாள் பொங்கல் விழாக் கவிதையின் முகப்பு வரிகளாக முறுவலித்து நிற்கின்றன. ஆனால் இந்நாளில், இவர் ஆட்சிக்கு வந்தால் மழையே பொழியாது என்று அரசியல்வாதிகள் சிலர் தேர்தல் பிரச்சாரமே செய்ததற்கு முற்றிலும் மாறாக, ஐம்பதாண்டுக் காலமாக பெய்யாத அளவுக்கு அவ்வளவு மழை, வானத்திலிருந்து அருவியாகவே கொட்டி தமிழக மக்களை அகமகிழ வைத்துள்ளது.

“அந்த மகிழ்ச்சியுடன்;
எழுவாய் தமிழா என்றே
உழுவர் நாள் கொடி ஏற்றிடுவோம்!
மழுவர் நிலம் காப்பதற்கு
மார் தட்டிச் சூள் உரைத்திடுவோம்!
பொங்குக பால் என்று முழங்குகின்றோம்
பசும்பாலா? அல்ல; அல்ல!
பைந்தமிழ்த் தேர்ப்பாகன் தந்த பால்
அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால்
அதற்கும் அப்பால்
வெறென்ன பால் பொங்க வேண்டும்?

கன்னல் கொண்டு வா என்றேன் சுவைப்பதற்கு
அவளோ பிள்ளைக்
கனியமுதைத் தூக்கித் தருகின்றாள்; அதுதான் இன்பம்!
வாங்கி வருக மஞ்சள் என்றாள்! எதற்காக? அதனை
வழித்திடலாம் உன் முகத்தில்! என்றேன்.
என் வீட்டு மகிழ்ச்சி கண்டு
எதிர் வீட்டார் இஞ்சி தின்னல் ஆகாதென்று அதனை
வேரோடு பிடுங்கிப் பொங்கல்
வேகின்ற பானையிலே கட்டுதலே இந்நாட் சிறப்பாம்!
முட்டுகின்ற மாட்டுக்கும் பொங்கல் உண்டு, மாடு
பிடிக்கத் தோள்
தட்டுகின்ற வீரர்க்கும் பொங்கல் உண்டு.
காளைதனை வென்றவனே எனக்கேற்ற காளை எனப்
பாளை நகைப் பாவையவள் பகர்ந்ததெல்லாம் பழைய
நாளை நினைப்பூட்டும் இலக்கியமாம்.
ஒளி வரவால் இருள் மறையும்!
உளி வரைந்த சிற்பங்கள் பளபளக்கும்!
களி நடன மயில்களெலாம் கலாபம் காட்டும்
தெளிதேன் தருக என இழுத்திடுவான் குஞ்சி;
துளி தேன் தந்துவிட்டுப் பறந்திடுவாள் வஞ்சி!
பொங்கல் நாளில் புதுப்புது இன்பம்
எங்கணும் தோன்ற எழுந்தான் கதிரோன்!
எதையும் அன்பால் அணுகி வென்றிட
உதயசூரியன் உயர்ந்தான் இன்று!
பார்த்தீரோ பசுமை வெள்ளம்
பச்சைப் பாய் விரித்தது போல் காட்சி என்னே!
சிந்து பாடும் சிறுநதியின் சிரிப்பொலி கேள்!
சீறிவரும் வானவேங்கைக் காட்டாற்றுத் தண்ணீர்
மீறி வரவொண்ணுமோ அணைகள் தாண்டி!
கடன்பெற்று வேளாண்மை புரிகின்ற
முயற்சிக்கெல்லாம்
உடன்பட்டு உறுதுணையாய் நிற்கின்ற அரசு காண்க!

உரம் மலிவாய் வழங்குவதற்கும் ஈகைக்
கரம் வேண்டுமன்றோ! அதனைத்
தரமறிந்து அண்ணன் தந்துவிட்டே போயுள்ளார்.
சிரம் ஆட்டி எனை ஏற்காமல் சிலர்
ஓட்டைகளைக் காட்டுகின்றார். நாத
சுரம் காட்டும் ஓட்டையெலாம் நல்லிசைக்கே
என்றிடுவேன்

அசையும் விரலாக நீர் இருந்தால்
இசையும், தென்றலாய் மாறிவிடும் இற்றை நாளில்!
வான் முட்ட எழுந்து நிற்கும் ஆலையிலே
தான் மட்டும் வாழுவதற்குச் சிலர் இருந்தால்
பேன் பிடித்த தலையாகும் நமது நாடு.
நான் படித்த மருந்ததற்குச் சமதர்மந்தான்
அந்நிலைதான் வருதல் மட்டும்
நன்நிலையில் உழைப்போர் வாழ வகைகாணல் மிகவும்
நன்று!

அதற்கு, வாய் திறந்து சூளுரைப்போம் இன்று.
பூட்டுப் போடவில்லை பொதுவுடைமைக்
கொள்கைதனைப்
புறக்கணித்தும் பேசவில்லை.
ஏட்டுக்குள் இருக்கின்ற அக்குறிக்கோள்
நாட்டுக்குள் மெல்ல மெல்ல வந்தேதான் தீர வேண்டும்.
சமதர்மப் பாட்டுக்குள் பொதிந்துள்ள கருத்தெல்லாம்
பரவுமுன்னே பாங்காகத் தொழில் அமைய நம் நாட்டில்
கூட்டான அமைப்புகள் பெருகிடவே
பொங்கல் நாளில் புதிய பாதை ஏற்றிடுவோம்!
இனிய பாதையில் இடைக்காலப் பாதையென்போம்;
பின்னர்

கனிய வைப்போம் கற்களையே!
உழவரது வியர்வையினால் சூல் கொண்ட
கழனித்தாயின் வயிற்றில் மகளாய் வந்து

அனைவரது சீராட்டும் பெற்றுக்கொண்ட கதிராம்
மங்கை
மணவறையிற் பெண்போலத் தலைகுனிந்து
நிற்கின்றாள் பொங்கல்நாளில்.
தமிழர் என்போர் மகிழ்கின்றார்;
தைதை என்றே குதிக்கின்றார்!
தண்ணொளி சேர்ப்பது தையன்றோ?
தையல் என்றால் பெண்ணன்றோ?
தைப்பதும் ஒருவகைத் தொழிலன்றோ?
முள்ளாய்த் தைப்பார் சிலபேர்கள்! நமக்குக்
குல்லாய் தைப்பார் சிலபேர்கள்!
தமிழர் என்போர் மகிழ்கின்றார்;
தைதை என்றே குதிக்கின்றார்! என்னைக்
கவி, தை என்றே அழைக்கின்றார்
தைத்தல் எனது தொழிலல்ல
புதைத்தல் எனது தொழில் என்பேன்.
தீமையைப் புதைத்தல் தீதறு செயலாம் – இய
லாமையைப் புதைத்தல் இனிப்புறு தொழிலாம் – அறி
யாமையைப் புதைத்தல் அறிவார் தொழிலாம்
ஊமைகள் வாழ உயிரைக் கொடுத்த
உத்தமன் காலில் முகத்தைப் புதைத்தல் என்றன்
தொழிலாம்.
பட்டா பல லட்சம் பெற்றவர்கள் வாழ்த்துகிறார்
தட்டாமல் தண்ணீர் தருவதற்கும் திட்டமிட்டு
எட்டாத பழம் என்று இருந்தோர்க்கும் வளவங்கி
முட்டாது கடன் தரவே தனி முயற்சி!
கிட்டாதோ அதிகாரி பார்வையென அலைந்த துயர்
வெட்டாமல் வெட்டியின்றி மாதமோர் நாள்
கட்டாயம் சிற்றூர் சென்று மனு நீதி வழங்குகின்றோம்!
பொன் சாரம் இட்டழைக்கும் பூ மான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலைமாற்றி
எங்கணுமே மின் இணைப்பு
ஏற்படவே உழைக்கின்றோம்!

இவையெல்லாம் புகழ்ந்துரைத்து பொங்கல் நாளில்
தொகை தொகையாய் மாலை வேண்டாம்,
பரிசு வேண்டாம்!
அவைப் புலவீர்; அழுகுறவே ஓர் பாட்டு நீர் பாடின்,
பகைப்புலம் ஒழித்த பாண்டியன்போல் நிமிர்ந்து
நிற்பேன்.
குகைப் புலியை முறத்தாலே எதிர்த்த நாட்டில்
திகைப்புற்று நிற்போமோ வன்முறையை வீழ்த்திக்
காட்ட!
புகைக் கருத்துப் போக்கிவிட்டுப் புதுக்
கருத்துப் போற்றிடுவோம் பொங்கல் நாளில்"

என்னுயிர் உடன்பிறப்பே! இது எழுபதில் பாடிய கவிதை! இன்றோ எண்ணற்ற சாதனைப் பட்டியல் நம் கழக ஆட்சி நாட்டுக்கு அளித்துள்ளது!

"எல்லா விவசாயிகட்கும் இலவச மின்சாரம் –
ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம்
ஆண் பெண் இருவர்க்கும் ஆஸ்தியிலே சம உரிமை!
உள்ளாட்சி மன்றங்களில், உத்தியோக வாய்ப்புகளில்
உரிய சதவிகிதம் மகளிர்க்கு உண்டென்று ஆக்கியதும்
கழக ஆட்சிதான்!
தாழ்த்தப்பட்டோருக்குத் தரமான வீடுகள் –
தமிழகத்தில் இலவசமாய் முதலில் தந்து மகிழ்ந்ததும்
நாம் தானே!
பட்டிதொட்டிகளில் பயின்ற மாணாக்கர்க்கு
பதினைந்து சதவிகிதம்
தொழிற்கல்வி அனைத்திலுமே பகிர்ந்தளிப்பதும்
இன்றைக்குத்தான்!
அடிப்படைத் தேவைகளை அட்டியின்றி மக்கள்
பெறுவதற்கு
அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நமக்கு நாமே திட்டம்
சாதிமதக் கொடுமை வீழ்த்தி சகோதரராய்
எல்லோரும் வாழ்வதற்குச்

சமத்துவபுரம் எனும் திட்டம் இவையனைத்தும்
இணையிலாக் கழக ஆட்சியின் சாதனைக் கடலின்
சில துளிகள்தான்!
உழைப்போம் மேலும்; தமிழகம், தழைப்பதற்குத்
தயங்காது
உழைப்போம்! தளராது உழைப்போம். தடை பல கடந்து
உழைப்போம்; உழைப்போம்! இதனையே
தை முதல்நாள் - தமிழர் திருநாள் உறுதிமொழியென
ஏற்போம்!

எனச் சூளுரைத்து, உனக்கும், என் உள்ளத்தில் அழியா ஓவியமாக இருக்கின்ற தமிழ் இனத்தார் இத்தரணி மீது எங்கெங்கிருக்கின்றார்களோ; அவர்கள் அனைவர்க்கும் பொங்கல் வாழ்த்துகளை வழங்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(14-01-1998)

2390. இவர்களும் அவர்களும்; அவர்களும் இவர்களும்!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொண்டிருப்பது ஏன்? என்று ஒரு வினாவை எழுப்பி, அதற்கான விடையையும் திரு. வாஜ்பாய் அவர்கள், மத்திய பிரதேசத்தில் சிந்த்வாரா எனுமிடத்தில் செய்தியாளர்களிடம் சற்று விளக்கமாகவே கூறியிருக்கிறார்.

மாற்றுக் கட்சியினர் அவரைத் துளைத்தெடுத்து இந்தக் கேள்வியை எழுப்புவதைவிட, ஆயிரம் மடங்கு அதிகமாக அவரது மனச்சாட்சி அவரைத் துளைத்தெடுப்பது நன்றாகத் தெரிகிறது.

தன்மீது வீசப்படுகிற மாற்றுக் கட்சிகளின் கணைகளைச் சமாளிப்பதில் மிகுந்த சாமர்த்தியசாலி என்று பெயர் பெற்றவர் வாஜ்பாய் என்பது நாடறிந்த ஒன்றேயாகும்.

எதிர்த் தரப்பிலிருந்து அக்கினியாஸ்திரம் வீசப்படும் போது வர்ணாஸ்திரத்தை வீசி, அக்கினியைச் செயலற்றதாக்க தாக்கி திரு. வாஜ்பாய் அவர்கள் கையாண்டுவரும் பேச்சு முறை - பேட்டி முறை என்பதாக விளங்கி வருகிறது என்ற போதிலும், என்ன காரணத்தாலோ அவர் தடுமாற்றத்துக்கு ஆளாகி, அக்கினியாஸ்திரத்தைச் சமாளிப்பதாகக் கருதிக் கொண்டு வாயுவாஸ்திரத்தை, பிரயோகம் செய்திருக்கிறார். அக்கினியுடன் காற்று மோதினால் அக்கினியின் ஆற்றல்தானே அதிகமாகும்.

அதுபோலத்தான் ஆகிவிட்டது திரு. வாஜ்பாய் அவர்கள் சிந்த்வாராவில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி!

டான்சி ஊழல், ஸ்பிக் பங்கு பேர ஊழல், நிலக்கரி ஊழல், ஐந்தாண்டு ஆட்சியில் அறுபது கோடி ரூபாய்க்கு மேல் சொத்து சேர்த்த ஊழல், ஐந்து கோடி ரூபாய்க்கு நகை நட்டு ஊழல், இலவச வேட்டி சேலை ஊழல், கிராமங்களுக்கு வண்ணத்

தொலைக்காட்சிப் பெட்டி வாங்கியதில் ஊழல், டாமின் நிறுவனத்தில் கிரானைட் குத்தகை ஊழல், குழந்தைகள் செருப்பு வாங்கியதில் ஊழல், சுடுகாட்டுக் கொட்டகை ஊழல், ஒரு கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஊழல் என்று எண்ணித் தொலையாத அளவுக்கு ஏராளமான ஊழல்களைத் தாராளமாகச் செய்து, இன்னும் சில மாதங்கள் ஆள்வதற்கு அனுமதித்திருந்தால் இந்தியநாட்டுப் படத்தில் தமிழ்நாடு இருக்குமிடத்தில் ஒரு ஓட்டைதான் இருக்குமென்கிற அளவுக்குக் கொள்ளையடித்துக் கும்மாளம் கொட்டியவர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டுள்ள பாரதீய ஜனதா கட்சிக்கும், அதன் தலைவர்களுக்கும் ஊழலற்ற ஆட்சியை மத்தியில் அமைப்போம் என்று கூறுவதற்கு எப்படி முடிகிறது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவது இயல்புதானே!

அந்தக் கேள்வியின் அழுத்தம் தாங்காமல்தான் பா.ஜ.க.வின் கூட்டணியில் உள்ள சமதா கட்சியும், அதன் தலைவர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டசும் கடுமையான அளவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க நேரிட்டுள்ளது.

தமிழகத்திலும் அந்த வினாக்குறி, விசுவரூபம் எடுத்துள்ளது கண்ட நிலையில்தான் திரு. வாஜ்பாய் அவர்கள், சாமர்த்தியமாக சமாளிப்பதாக நினைத்துக் கொண்டு, அக்கினியாஸ்திரக் கனலை அணைத்திட வாயுவாஸ்திரத்தை ஏவிப் பார்த்திருக்கிறார். கருத்தில் ஏற்பட்ட தவறு அவரின் கைத்தவறுதலுக்கு காரணமாகிவிட்டிருக்கிறது.

> "ஜெயின் கமிஷன் அறிக்கையினால், தமிழர்களின் உணர்வுகள் புண்படுத்தப்பட்டுள்ளன. இதனால் வடமாநிலங்களுக்கும், தென்மாநிலங்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள இடைவெளியைக் குறைக்கவே அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துள்ளோம்''
>
> இது வாஜ்பாய் அவர்கள், சிந்த்வாரா செய்தியாளர்கள் கூட்டத்தில் செப்பிய மொழியாகும்.

உடன்பிறப்பே, முதலில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பசுமையான நினைவு கூர்ந்திடல் வேண்டும். ஜெயின் கமிஷன் அறிக்கை ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் மீது

அபாண்டப் பழி சுமத்தி வெளிவந்தவுடன், அதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்ட தலைவர்களில் வாஜ்பாயியும் ஒருவர் என்பதை மறந்துவிட முடியாது. ஆனால் ஜெயின் அறிக்கை, தமிழர்களின் உணர்வைப் புண்படுத்திய ஒன்று என்பதை வாஜ்பாய் மட்டுமல்லாமல், இந்திய நாட்டுத் தலைவர்கள் பலரும், தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலரும் எடுத்துக் காட்டி கண்டனக் குரல் எழுப்பியபோது, இங்குள்ள அ.தி.மு.க.வின் தலைவி எடுத்த நிலை என்ன? அ.தி.மு.க. கட்சியின் நிலைப்பாடு என்ன?

ஜெயின் கமிஷன் அறிக்கையினால், மொத்தத் தமிழ்மக்களின் உணர்வுகள் புண்படுத்தப்பட்டுவிட்டன என்று வாஜ்பாய் போன்றவர்களின் குற்றச்சாட்டை மறுக்கும் வகையில், அ.தி.மு.க.வின் அவைத் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள ஜெயின் கமிஷன் அறிக்கை - ஓர் ஆய்வு என்ற நூலில் ஜெயின் கமிஷன் மீது சுமத்தப்படுகின்ற இதுபோன்ற குற்றச்சாட்டுகள், பொய்யானவை மோசடியானவை - பிரச்சினையைத் திசை திருப்பும் முயற்சிகள் என்று அழுத்தம் திருத்தமாகவும், கடுமையாகவும் கண்டித்திருக்கிறார்.

அந்த அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு; ஜெயின் கமிஷன் அறிக்கையினால் புண்பட்டுப் போயுள்ள தமிழர்களின் உணர்வுகளுக்கு மருந்து தடவுவதாக திரு. வாஜ்பாய் கூறுவது எவ்வளவு வேடிக்கையானது! விசித்திரமானது!

தமிழர்களை ஜெயின் குறை கூறவே இல்லை - தமிழர்கள் மீது அவர் பழிசுமத்தவே இல்லை - எனவே தமிழர்களின் உணர்வு புண்பட்டுப் போகவே இல்லை - என்று ஜெயின் கமிஷன் அறிக்கைக்குப் புது வியாக்கியானம் கொடுத்துக் கொண்டிருக்கிற அ.தி.மு.க.வுடன் அணி சேர்ந்து, தமிழர்களின் புண்படுத்தப்பட்ட உணர்வுகளை ஆற்றிட முனைகிறோம் என்பது எந்த வகையில் பொருத்தமான சமாதானம் என்பதை வாஜ்பாய் அவர்கள்தான் விளக்க வேண்டும்.

சிந்த்வாரா செய்தியாளர்களின் பேட்டியில் வாஜ்பாய் அவர்கள், மற்றொரு ரகசியத்தை, மலைப்பாறையில் மண் குடத்தைப் போட்டு உடைப்பது போலப் போட்டு உடைத்து விட்டார். அதற்காக அவருக்கு நன்றி கூறத்தான் வேண்டும்.

1992-ஆம் ஆண்டு பாபர் மசூதியை இடித்துத் தகர்த்திட கரசேவை என்ற பெயரால் ஒரு சூழ்ச்சித் திரை தொங்கவிடப்பட்டபோது, டெல்லியில் பிரதமர் நரசிம்மராவ் முன்னிலையில் கூட்டப்பட்ட கூட்டமொன்றில், அந்தக் கரசேவைக்கு ஆதரவாக எழுந்த ஒரே ஒரு தனிக் குரல் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரின் குரல்தான்!

அப்போது வெகுண்டெழுந்து கண்டன அறிக்கை விடுத்த திரு. வாழப்பாடியார் அவர்கள், ஜெயலலிதா அவர்களை பா.ஜ.க.வின் ஊது குழல் என்று வர்ணித்தார்.

பாபர் மசூதி பிரச்சினையில், ஜெயலலிதா எடுத்த நிலையை எப்படியும் மக்கள் மனத்திலிருந்து மாற்ற வேண்டுமென்பதற்காக, அம்மையாரின் அந்தக் கருத்துக்கு ஏதேதோ பாஷ்யங்கள் எல்லாம் சொல்லி, பதவுரைகள் தீட்டி - அவர் ஒன்றும் அயோத்தி விவகாரத்தில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக இல்லை என்றெல்லாம் சாதிக்க முயற்சி செய்தார்கள் - இன்னமும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் திரு. வாஜ்பாய் அவர்கள் சிந்த்வாரா பேட்டியில் என்ன கூறியுள்ளார்! அடடா! எத்தகைய அருமையான வாசகம்! அப்பட்டமான உண்மை, உள்ளங்கை நெல்லிக்கனியாக இதோ வெளி வந்திருக்கிறது!

> "அயோத்தி ராமர்கோயில் பிரச்சினையில், பா.ஜ.க.வின் நிலையை ஆதரித்த ஒரே நபர் ஜெயலலிதாதான். அப்போதே அவர் எங்களுடன் நெருக்கமாகிவிட்டார்"

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. தலைவியும், அவரது ஆர்ப்பாட்டப் பரிவாரக் கூட்டமும் மூடிமூடி மறைத்துப் பார்த்த இந்த ரகசியம், பூனைக் குட்டி வெளியே வந்து விட்டது என்று அய்யா பெரியார் அவர்கள் அடிக்கடி சொல்வார்களே! அது போல வாஜ்பாய் வாய்மூலமாகவே வெளியே வந்து விட்டது பார்த்தாயா!

ஜெயலலிதா கட்சிக்கும், பா.ஜ.க.வுக்கும் கூட்டணி முடிவானபோது, டெல்லியில் தம்பி முரசொலி மாறன், சமூக நீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்களைச் சந்தித்துப் பேசிக்

கொண்டிருந்தாராம். அப்போது மாறன், வி.பி. சிங் அவர்களிடம் இந்தச் செய்தியைச் சொன்னாராம். அவர், சிரித்துக் கொண்டே பதில் அளித்தாராம்! இதில் என்ன மாறன் ஆச்சரியம் இருக்கிறது? அவர்கள் 1992 ஆம் ஆண்டு முதலே ஒரே அணியில்தானே இருக்கிறார்கள் என்று!

உடன்பிறப்பே, அயோத்தியிலேயே ஆரம்பமாகிவிட்டது இந்த ரகசிய அணி என்கிறபோது, இவர்கள், அவர்களின் மதவாத அரசியலை ஏற்றுக் கொள்வது என்பதும் - அவர்கள், இவர்களின் உலக மகா ஊழலைக் கண்டும் காணாதவர்கள் போல இருப்பதும் என்பதும் இயல்பான விஷயங்கள்தானே!

அன்புள்ள,

மு. க.

(16-01-1998)

2391. ரஜினியின் அறிக்கை - சிலரது பார்வை!

உடன்பிறப்பே,

பள்ளிக்கூடப் பால பாடத்தில் சில வேடிக்கைக் கதைகள் இடம்பெற்று, அந்த இளம்பிராயத்தில் சிரித்து மகிழ்வதற்கேற்ப ஆசிரியர்கள் அந்தக் கதைகளை மாணவர்கள் மத்தியில் விவரித்துச் சொல்லும்போது ஒரு கிளுகிளுப்பு உள்ளத்தில் ஏற்படுவதுண்டு.

உதாரணமாக, ஒரு காக்கை, ஒரு வடையை வாயில் வைத்துக்கொண்டு, ஒரு மரக்கிளையில் உட்கார்ந்து இருந்தது. அதை ஒரு நரி பார்த்துவிட்டு அந்த வடையை எப்படியாவது பறித்துக்கொண்டு ஓடிவிட வேண்டுமென்று எண்ணியது. அதற்காக அந்த நரி, காக்கையை நோக்கி அண்ணாந்து பார்த்து, காக்கையாரே! காக்கையாரே! கறுப்பு நிறத்திலும்கூட உமது அழகே அழகு - உமது இனிமையான குரலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். குயிலுக்குக் கூட உம்மைப் போல அவ்வளவு இனிமையாகப் பாடத் தெரியாதாம் - எங்கே பார்க்கலாம்; உமது அழகான வாயைத் திறந்து ஒரு அருமையான பாட்டுப் பாடும் என்று தந்திரமாக ஒரு கோரிக்கை வைத்தது.

முகஸ்துதி கேட்டு ஏமாந்து போன அந்தக் காக்கை, மரக்கிளையிலிருந்தபடியே வாயைத் திறந்து கா - கா என்று பாடத் தொடங்கியது. அப்படி அது வாயைத் திறந்தவுடன் வாயிலிருந்த வடை கீழே விழுந்து விட்டது. நரி அதனை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டது. இந்தக் கதை இளமைக் காலத்தில் பள்ளிக்கூடங்களில் சொல்லித் தரப்பட்டு இன்றளவும் புழக்கத்தில் இருந்து வருகிறது என்பதை நீ அறிவாய்.

முகஸ்துதி செய்பவர்களை நம்பி ஏமாறக் கூடாது என்ற அறிவுரையை, இளம் மனங்களில் பதிய வைப்பதற்காக இந்தக் கதை. ஆனால், இன்னொரு காக்கை வாயிலிருந்த வடையைக்

கிளையில் வைத்து, அதைக் காலால் மிதித்துக்கொண்டு கா - கா எனப் பாடிக்காட்டி நரியை ஏமாற்றி விட்டது.

ஒற்றுமையுடன் இருந்தால் பலம் - இல்லையேல் பலவீனம் - அது பகைவர்க்குத்தான் ஆதாயம் என்பதை விளக்கிடுவதற்காக, நான்கு எருதுகள் ஒன்றாக இருந்தபோது எதிர்க்கப் பயந்த சிங்கம், அவை தனித்தனியாக ஆனபோது, அவைகளைக் கொன்று குவித்தது என்ற கதை, நான்கு எருதுகளும் ஒரு சிங்கமும் என்ற தலைப்பில் பாலபாடத்தில் இடம் பெற்றிருந்தது.

இப்படி நரியிடம் ஏமாந்த காக்கை - நான்கு எருதுகளும் ஒரு சிங்கமும் எனும் தலைப்புகளில் ஆரம்பப் பள்ளிகளிலேயே, மாணவர்க்கு ஆர்வமூட்டி, அறிவுரை வழங்கிடக் கதை சொல்வது போல - பிறவிக் குருடர்களும் யானையும் என்று ஒரு கதையும் அந்தக் காலத்திலிருந்தே சொல்லப்பட்டு வருகிறது.

இரண்டு பேர், பிறந்தது முதலே கண்ணொளி இல்லாதவர்கள், அவர்களுக்கு எந்தெந்தப் பொருள் எப்படியிருக்குமென்றெல்லாம் தெரியாது. அவற்றின் பெயர்களும் தெரியாது. வீட்டிலே உள்ளவர்கள் அந்தப் பிறவிக் குருடர்களிடம் சில பொருள்களைக் கொடுத்து, அவற்றின் பெயர்களையும் சொல்லிக் கொடுப்பார்கள். அப்படித்தான் அவர்கள் எந்தப் பொருள் எப்படியிருக்கும் என்பதையெல்லாம் கற்றுக்கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு ஒருநாள் யானை எப்படியிருக்கும்? என்று தெரிந்துகொள்ளும் ஆவல் ஏற்பட்டது. பாவம்! அவர்களால் யானையைப் பார்த்துத் தெரிந்துகொள்ள இயலுமா? இயலாது! அவர்கள்தான் கண்ணில்லாதவர்களாயிற்றே! அதுவும் பிறவிக் குருடர்களாயிற்றே!

எனவே, அவர்களின் உறவினர் சிலர் ஒரு யானையைக் கொண்டுவந்து நிறுத்தி, அந்தப் பிறவிக் குருடர்களைப் பார்த்து இதோ யானை வந்து விட்டது. இதைத் தடவிப் பார்த்து எப்படியிருக்கிறது! என்று தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறினர். யானையைத் தடவிப் பார்த்த அந்தப் பிறவிக்குருடர்களுக்கு யானையின் முழு உருவத்தைப் பற்றியோ, அதன் கம்பீரத்தைப் பற்றியோ எதுவும் தெரிந்திருக்க வழியில்லை அல்லவா!

ஒரு குருடர், யானையின் காதைத் தொட்டுத் தடவிப் பார்த்தார். உடனே ஓங்கிக் கத்தினார். ஓ! யானை முறம்போல்

இருக்கிறது! இன்னொரு குருடர், யானையின் காலைத் தொட்டுத் தடவிப் பார்த்தார். அவர் அதிசய உணர்வுடன் சொன்னார், ஓ! யானை தூணைப் போல் இருக்கிறது!

இப்படி அவர்களிருவரும் ஏற்கனவே தாங்கள் தடவிப் பார்த்து அறிந்த முறத்தையும், தூணையும் நினைவில் வைத்துக்கொண்டு ஒருவர் யானையை முறம் என்றும், மற்றொருவர் தூண் என்றும் வர்ணித்து விட்டார்கள்.

> உடன்பிறப்பே, யானையைத் தடவிப்பார்த்த பிறவிக் குருடர்கள் தங்கள் மனதிற்குப்பட்ட மாதிரி, யானையை உருவகப்படுத்தியது போலவே -
>
> அரசியல் அரங்கிலும் ஓரிரு நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கியுள்ளன.

சூப்பர் ஸ்டார் தம்பி ரஜினிகாந்த் அவர்கள் அளித்த பொங்கல் வாழ்த்துடன், வரும் தேர்தலில் அவர் தி.மு.க. - த.மா.கா. அணியைத்தான் ஆதரிக்கப் போகிறேன் என்று விடுத்த அறிக்கையையொட்டி, அதிர்ச்சியுற்ற சிலபேர் அல்லது சில கட்சியினர் தங்கள் விமர்சனங்களைச் செய்யத் தொடங்கியுள்ளனர்.

தம்பி ரஜினியின் ஆதரவைத் தமது அணிக்குப் பெறுவதற்கு, அவர்கள் யார் யாரைத் தூது அனுப்பினார்கள் - எத்தனைபேர் வாயிலாக சிபாரிசுகள் செய்தார்கள் - எத்தனை தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அலையாய் அலைந்தார்கள் என்பதெல்லாம் ஊர் அறியாத ரகசியங்கள் அல்ல! அனைத்தும் அம்பலத்திற்கு வந்தவைதான்!

1996-இல் தி.மு.க.வுக்கும் - த.மா.காவுக்குமிடையே தொகுதி உடன்பாடு ஏற்பட வேண்டும், தேர்தல் கூட்டணி உருவாக வேண்டுமென்று பெரிதும் முயன்று, அந்த அணி உருவாகிடக் காரணகர்த்தாவாக இருந்தவர் சூப்பர் ஸ்டார் ரஜினி என்பது மறுக்க முடியாததும், மறைக்க முடியாததுமான உண்மையாகும்.

ஏதோ இயக்குநர் மணிரத்தினம் இல்லத்து முகப்பில் குண்டுவெடித்து விட்டது என்பதற்காக மட்டுமல்ல! அதைப்பற்றி ரஜினி அவர்கள் பேசியதுகூட குற்றம் - அப்படிப் பேசிய மேடையில் நண்பர் ஆர்.எம்.வீ. இருந்ததே பெருங்குற்றம் என்ற எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டித்து மட்டுமல்ல, ஒரு ரூபாய்

சம்பளம் வாங்குவதாகக் கூறி ஊரை ஏமாற்றிக் கொண்டு, அளவுக்கு மீறி ஆஸ்திபாஸ்திகளைச் சேர்த்துக் கொண்டு - முப்பதுக்கு மேற்பட்ட ஆடம்பர மாளிகைகள் - தேயிலை எஸ்டேட்டுகள் எனத் தமிழ்நாட்டையே வளைத்துப் போட்டுக் கொண்டு - நிமிடத்துக்கு ஒரு ஊழல் எனச் செய்துகொண்டு ஆர்ப்பரித்த ஆட்சி, மீண்டும் வந்தால் பிறகு, இந்த நாட்டை ஆண்டவனால்கூட காப்பாற்ற முடியாது என்பதற்காகத்தான், ரஜினிகாந்த் அவர்கள் அன்றைக்கு தி.மு.க. - த.மா.கா. கூட்டணியை ஆதரித்து அறிக்கை வெளியிட்டார்.

இன்றைக்கும் அதே மனோநிலையில்தான் அவர் தி.மு.க. - த.மா.கா. அணியை ஆதரித்து அறிக்கை விடுத்திருக்கிறார். இதனால் ஆயிரம் வோல்ட் மின்கம்பியைத் தொட்டுவிட்ட பயங்கரமான அதிர்ச்சியில் சிக்குண்ட சில பேர், யானையைத் தடவிப் பார்த்து யானை முறம்போல் இருக்கிறது - தூண் போல இருக்கிறது எனக் கூறியவர்களைப் போன்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

உடன்பிறப்பே, நமது முன்னோர்களின் தீர்க்க தரிசனத்தைப் பார்த்தாயா? எதிர்காலத்தில் அரசியலிலும் சிலபேர் இப்படி வருவார்கள் என எதிர்பார்த்துத்தான் யானையைத் தடவிப் பார்த்தோர் கதையை அன்றைக்கே எழுதி வைத்திருக்கிறார்கள்.

அன்புள்ள,

மு. க.

(17-01-1998)

2392. கோபி விழாவும், கோப அறிக்கையும்!

உடன்பிறப்பே,

ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையொன்று வரும்! அந்த அறிக்கையைச் சாக்காக வைத்து காங்கிரஸ் கட்சித் தலைவர் சீத்தாராம் கேசரி அவர்கள், ஐக்கிய முன்னணி அரசுக்குத் தந்து கொண்டிருந்த ஆதரவை திரும்பப் பெற்றுக்கொள்வார்! அதனையொட்டி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, நாடாளுமன்றத் தேர்தல் வரும் என்று யாருமே நினைத்துக் கூடப் பார்க்காத நேரத்தில் மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பே எம்.ஜி.ஆர். கழகத்தின் தலைவர் நண்பர் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள், என்னைச் சந்தித்து கோபியில் எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்து வைக்க வேண்டுமென்றும், அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சி எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழாவுடன் இணைத்து நடத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். நானும் உடனடியாக அதற்கு ஒப்புதல் அளித்தேன். அதற்கேற்ப இன்று கோபியில் அந்த விழா நடைபெறுகிறது. நானும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மூப்பனார் அவர்களும் அந்த விழாவில் கலந்து கொள்கிறோம். அதற்காக விமானம் மூலம் இன்று பயணப்படுகிறோம்.

இதற்கிடையே காலை ஏடுகளைக் கண்டால் கோபி விழா நிகழ்ச்சி குறித்து, கடுங்கோபத்துடன் சிலரது கண்டன அறிக்கைகள் - விமர்சனக் கட்டுரைகள் என்று ஏதேதோ! அடடா! அவர்களின் அணை கடந்த எரிச்சலையும், ஆத்திரத்தையும் கொட்டித் தங்கள் அரசியல் பண்பாட்டை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உயிரோடு வாழும்போது தலைவர்களுக்கிடையே பல்வேறு கருத்து மாறுபாடுகள் - மோதுதல்கள் இருப்பதும், அந்தத் தலைவர்களில் யாரேனும் மறைந்துவிட்டால் - அவர்களுக்கு

உயிரோடிருக்கும் தலைவர்கள் மரியாதை செலுத்துவது என்பதும் அரசியல் நாகரிகம் - பண்பாடு என்ற அடிப்படையில் இயல்பாகவே இந்தச் சமுதாயம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையாகும்.

இப்போதுதான் நான் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையைத் திறந்து வைக்கிறேன் என்பதல்ல! அறந்தாங்கியில் சில ஆண்டுகளுக்கு முன்பு, திரு. திருநாவுக்கரசு அவர்கள் முயற்சியால் அமைக்கப்பட்ட எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்து வைத்திருக்கிறேன்.

எம்.ஜி.ஆர். உயிரோடிருந்தபோது அறிவிக்கப்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், தொடக்க விழா நடத்தப்படாமலே இருந்த நிலையில், 1989-ல் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடன் குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களை அழைத்து எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழாவை நடத்தியதை, இந்த வசவாளர்கள் தங்களுக்கு வசதியாக மறந்து விடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, இப்போது 1996-ல் ஆட்சிக்கு வந்தவுடன், ''எம்.ஜி.ஆர். திரைப்பட நகரம்'' என்று பெயர் சூட்டி அறிவித்ததும் நான்தான் என்பதை, மக்கள் மறந்து விடுவார்கள் என்று இவர்கள் மனப்பால் குடிப்பதுதான் ஆச்சரியமானதாகும்.

சென்னை - சத்யா ஸ்டுடியோவில் எம்.ஜி.ஆர். ஜானகியம்மையார் கல்லூரிக்கு ஜெயலலிதா ஆட்சியில் அனுமதி கிடைக்காமலே இருந்தது. 1996-ல் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் அந்தக் கல்லூரிக்கான அனுமதி வழங்கப்பட்டதை அந்தக் குடும்பத்தினர் நன்றியுணர்வுடன் நினைத்துப் பார்ப்பதை இவர்கள் அறிய மாட்டார்கள் போலும்.

கோபியில் என்னையும், மூப்பனார் அவர்களையும் அழைத்து, எம்.ஜி.ஆர். அவர்களின் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியை ஆர்.எம்.வீ. அவர்கள் நடத்துகிறார் என்றதும், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் முழம் நீளத்துக்கு ஓர் அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டுவிட்டார். எம்.ஜி.ஆர். சிலையைத் திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும், நடத்தவும் எங்களுக்குத் தகுதியில்லை என்கிறார்.

அது என்ன தகுதி என அவர் எண்ணுகிறாரோ! அதுதான் எனக்கும் புரியவில்லை.

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து வந்து, வாய் பேச முடியாத நிலையில் உடல் நலிவுடன் இருந்தபோது, இந்த அம்மையார் ஜெயலலிதா, தனது கைப்பட ஆங்கிலத்தில் அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தின் முக்கிய நோக்கம், எம்.ஜி.ஆரை அகற்றிவிட்டு ஜெயலலிதாவை முதலமைச்சராக்க வேண்டும் என்பது; அந்தக் கடிதம் பிளாக் செய்யப்பட்டு அப்போதே பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்திருக்கிறது. அந்தக் கடிதத்தில் ஜெயலலிதாவின் புகழையும், செல்வாக்கையும் கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்றும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். இப்படியெல்லாம் கடிதம் எழுதித் துரோகம் செய்யும் தகுதி ஆர்.எம்.வீ. அவர்களுக்கும், விழாவில் கலந்து கொள்ளும் எங்களுக்கும் இல்லை என்று ஜெயலலிதா அம்மையார் கருதுகிறார் போலும்!

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு நடைபெற்ற பதவிப் பிடிச் சண்டையின்போது, எம்.ஜி.ஆரின் அருமைத் துணைவியார் ஜானகி அம்மையாரைப் பற்றிக் குழாயடிச் சண்டையில் ஈடுபடும் சில பெண்கள் கூட கூறிடக் கூசுகின்ற கேவலமான வார்த்தைகளை இந்த அம்மையார் உதிர்த்து, அவைகள் ஏடுகளில் வெளிவந்து கொண்டிருந்தனவே! அந்தத் தகுதியும், சிறப்பும் இப்போது கோபி விழாவில் கலந்து கொள்ளும் எமக்கில்லையென இயம்புகிறாரோ? இந்தப் பெருமாட்டியார்!

மோரிலே விஷம் கலந்து கொடுத்து, எம்.ஜி.ஆர். அவர்களை ஜானகி அம்மையார் கொன்றுவிட்டார் என்று பத்திரிகைகளுக்கும் பக்கம் பக்கமாகச் செய்தி கொடுத்துப் பேட்டியளித்தாரே இந்த ஜெயலலிதா அம்மையார்! அந்தத் தகுதியிருந்தால்தான் கோபி சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்ள முடியுமென வாதாடுகிறாரா இந்த வனிதாமணி!

எம்.ஜி.ஆர். அவர்களிடத்தில் எந்த அளவுக்கு - ஜெயலலிதா அவர்கள் விசுவாசம் கொண்டிருந்தார் - எவ்வளவு மரியாதை வைத்திருந்தார் - எப்படி அவரை நடத்தினார் - என்ற முழு விபரங்களும் ஜெயலலிதாவின் மனச்சாட்சிக்கு நன்றாகவே தெரியும்.

அந்த மனச்சாட்சியைப் பேச விடாமல், அதன் வாயை அடைத்துப் போட்டுவிட்டு மக்களில் ஒரு பகுதியினரையும், கட்சியின் தொண்டர்களையும் தொடர்ந்து ஏமாற்றலாம் என்று ஜெயலலிதா திட்டமிட்டு, தன்னையே ஏமாற்றிக் கொள்ளுகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் கோபி நிகழ்ச்சியைக் கண்டனம் செய்து கோபாவேசமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையாகும்.

எம்.ஜி.ஆர். அவர்களின் விசுவாசமிக்க ஊழியர் - எம்.ஜி.ஆர். நினைவு இல்லக் காவலர் - முத்து என்பவர் கஞ்சா வைத்திருந்ததாக அவர் மீது பொய் வழக்கு ஜோடித்துக் கைது செய்து கண்ணீர் விடச் செய்த கைங்கர்யம் ஒன்றே, இந்த அம்மையார் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே கொண்டிருந்த தூய்மையான அன்புக்கு (?) அடையாளமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறதே!

இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும் - விரசமாகவும் இருக்கும் - எனவே விரிவுக்கஞ்சி இத்துடன் விடுக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(18-01-1998)

2393. உதவாதினி ஒரு தாமதம், உடனே எழுக உடன்பிறப்பே!

உடன்பிறப்பே,

1996-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. 18 இடங்களில் போட்டியிட்டு புதுவை நாடாளுமன்றத் தொகுதியைத் தவிர, மற்ற 17 இடங்களில் வெற்றி பெற்றது. த.மா.கா. 20 இடங்களில் போட்டியிட்டு 20 இடங்களிலும் வென்றது. நமது கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி 2 இடங்களில் (நாகை, சிவகாசி) போட்டியிட்டு இரண்டையும் வென்றது.

இப்போது வந்துள்ள இந்தத் தேர்தலில், நமது கூட்டணிக் கட்சிகள் தொகுதிகளைப் பிரித்துக் கொள்வதில் சில நடைமுறைப் பிரச்சினைகள் - வெற்றி வாய்ப்புகளைப் பற்றிய நிலைமைகள் - என்ற அடிப்படைகளைப் புறக்கணிக்க முடியாத காரணத்தாலும், வெற்றி பெற்ற தொகுதிகளில் பணியாற்றிய கட்சிகள் ஒன்றரை ஆண்டுக் காலம் மட்டுமே நாடாளுமன்றப் பதவிப் பொறுப்பில் இருந்த காரணத்தாலும், பெருமளவு மாற்றங்களைச் செய்ய முடியாத நிலையில், நமது அணியின் தோழமைக் கட்சிகளின் உரிமையோடு கூடிய கோரிக்கைகளை ஏற்க முடியாத சூழல் ஏற்பட்டு விட்டது என்பதை மிகுந்த வேதனையுடன் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

நான் தொடர்ந்து கூறி வந்ததையொட்டி, தோழமைக் கட்சிகளின் மதிப்புக்குரிய தலைவர்களுடன் நானோ அல்லது நமது தலைமைக் கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்களோ தொடர்புகொண்டு நிலைமையை விளக்கி, அவர்களது ஆதரவைத் தந்து இந்தக் கூட்டணியின் வெற்றிக்குத் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

இருப்பது நாற்பதே இடங்கள் - அவற்றில் கடந்த தேர்தலில் 20 - 18 - 2 என்று பகிர்ந்து கொண்டு ஒரு வழிமுறை ஏற்படுத்தியாகிவிட்டது. ஐந்தாண்டுக் காலம் கணக்கிட்டு அமைக்கப்பட்ட அந்த வழிமுறை ஒன்றரை ஆண்டுக்காலத்தில் திடீரென மாற்றப்பட வேண்டுமெனில், அதனால் ஏற்படக் கூடிய சிக்கல்கள் சாதாரணமானவை அல்ல.

எனவேதான், தீர்க்கமாக ஆலோசித்து, வேறு வழியே இன்றி, தோழமைக் கட்சியின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி விளக்கமளித்து, அதன்பிறகு தி.மு.கழகம் போட்டியிடக்கூடிய பதினெட்டு தொகுதிகளை அறிவித்து, அந்தத் தொகுதிகளில் போட்டியிட விரும்பும் கழகத்தினரின் விண்ணப்பங்களைத் தலைமைக் கழகத்தில் அளித்து 21.1.1998 முதல் அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் நேர்காணலுக்கு வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

‘‘என்ன இது? கழகத் தலைமை எந்தத் தேர்தலிலும் கடைப்பிடிக்காத நிதானத்தை இந்தத் தேர்தலில் கடைப்பிடிக்கிறது?’’

என்று உன்போன்ற உடன்பிறப்புகள் நினைக்கத் தொடங்கியது எனக்குத் தெரியும்.

இவ்வளவு காலதாமதம் ஏன்? அதுவும் தேர்தல் என்றால் முதலில் வேட்பாளர் பட்டியலை வெளியிடுவது திராவிடர் முன்னேற்றக் கழகம்தான் என்றிருந்த தனிச்சிறப்புக்கு மாறாக, இப்போது மட்டும் இந்த அளவு காலம் தாழ்த்துவானேன்?

என்று உன் போன்றோர் முணுமுணுக்கவும் தொடங்கிவிட்டீர்கள் என்பதையும் நான் அறியாமல் இல்லை.

இதிலிருந்தே என் சங்கடத்தை நீ புரிந்து கொள்ள வேண்டும். ஏனோ தானோ என்றோ - எடுத்தேன் கவிழ்த்தேன் என்றோ - அறியாமை அடிப்படையிலோ, ஆணவத்தின் அடைப்படையிலோ அரசியல் நடத்திப் பழக்கப்படாத தலைமை, தி.மு.க. தலைமை என்பதை நீ நன்றாகவே உணர்ந்திருக்கிறாய். அதனால்தான் நமது கூட்டணியை ஆதரிக்க முன்வந்துள்ள தோழமைக் கட்சிகளின் ஒத்துழைப்பு என்பது, தொகுதிகளில் அக்கட்சிகளின் வேட்பாளர்கள் போட்டியிட்டுத்தான் தரப்பட வேண்டுமென்றில்லாமல்,

சமுதாயச் சீர்குலைவு சக்திகளையும், ஊழல் கும்பல்களையும், மதவெறி மாய்மாலங்களையும் இந்தத் தேர்தலில் வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்தப்பட வேண்டுமென்ற பொதுவான குறிக்கோளுடன் அமைய வேண்டுமென மெத்தப் பணிவன்புடன் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று (19.1.1998) ஆந்திரத் தலைநகரம் ஐதராபாத்தில் சகோதரர் சந்திரபாபு நாயுடு அவர்கள் முன்னின்று நடத்திய வரலாற்றுச் சிறப்புடைய ஐக்கிய முன்னணிப் பேரணிக்கும் - முன்னணியின் மையக்குழுக் கூட்டத்திற்கும் நானும், தம்பி முரசொலிமாறனும், ஆர்க்காடு வீராசாமியும் சென்று வந்தோம். காலையில் சென்று மாலையில் திரும்பினோம்.

பிரதமர் குஜ்ரால் அவர்களுடனும், ஐக்கிய முன்னணிக் குழுவின் தலைவர் தேவேகௌடா அவர்களுடனும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சுர்ஜித் அவர்களுடனும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பரதன் அவர்களுடனும் - தமிழ்நாட்டுத் தேர்தல் நிலவரங்கள் குறித்து விரிவாக விவாதித்தேன். எத்தகைய முடிவு மேற்கொள்ள வேண்டிய நிலைமை கழகத்திற்கு ஏற்பட்டுள்ளது என்பதையும் விளக்கினேன்.

இங்கு அமைந்திடும் நமது கூட்டணிக்கு ஆதரவளித்திட தமிழ்நாட்டில் உள்ள அவர்களின் கட்சித் தலைமைகளுக்கு வழிகாட்டுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

நான் நினைப்பது போல நல்லதே நடக்குமென நம்புகிறேன்.

ஐதராபாத்திலிருந்து திரும்பியவுடன், இனியும் நமது தேர்தல் பணியைத் தொடங்குவதில், காலம் தாழ்த்தக்கூடாது என்று நானும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் முடிவெடுத்து - உடனடியாகத் தோழமைக் கட்சித் தலைவர்களை இயன்ற வரையில் தொடர்பு கொண்டு - இருக்கின்ற நிலையை எடுத்துரைத்து, அதன் பிறகு நமது பொதுச் செயலாளர் அறிவித்திருப்பதுதான் கழகம் போட்டியிடக் கூடிய பதினெட்டு தொகுதிகள்! இவற்றுடன் குன்னூர், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிகளும் சேரும்! புதுவையில் உள்ள உசுடு சட்டமன்றத் தொகுதியில் த.மா.கா. போட்டியிடும்!

வேட்பாளர் பெயர் அறிவிப்பு - வேட்பு மனுக்களைப் பெறுதல் போன்ற பணிகள்தான் தாமதமாயினவே தவிர, தி.மு.க.வும் சரி, த.மா.கா.வும் சரி, தங்கள் கட்சிகளின் செயல்வீரர்களைச் சந்தித்து எல்லா மாவட்டங்களிலும் கூட்டணியின் தோழர்களுக்கு இடையில் ஏற்பட்ட சிறுசிறு கசப்புகளை அறவே மறந்துவிட்டு, தோளொடு தோள் நின்று தேர்தல் வெற்றிக்கு ஓய்வின்றி உழைத்திட வேண்டுமென்று அறிவுறுத்தும் கடமையைச் செம்மையாகவே செய்துள்ளன.

நம்மிடமிருப்பது பதினெட்டு தொகுதிகள்தான் - எஞ்சியுள்ள இரண்டு தொகுதிகள் எந்தக் கட்சிகளுக்கு என்பது எங்கள் வேண்டுகோளை அந்தக் கட்சிகள் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து பெருமனத்துடன் ஒப்புதல் அளித்த பிறகு அறிவிக்கப்பட இருக்கிறது.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள பதினெட்டு தொகுதிகளிலும், கழக வேட்பாளர்களாக யார் யார் நிறுத்தப்படுகிறார்கள் என்பதை எதேச்சாதிகாரமாகத் தெரிவித்து விடமாட்டோம். என்றைக்குமே அந்த முறையை மேற்கொண்டவனல்ல நான் என்பதை நீ அறிவாய்.

முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் இருப்போரின் கருத்துகளுக்கு மதிப்பளித்து, அவற்றைக் கேட்டு ஆராய்ந்து - இறுதியாகத் தலைமைக் கழகம் எடுக்கும் முடிவுக்கு என்றைக்குமே கட்டுப்பட்டு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்திடும் கழகக் கண்மணிகள் லட்சோப லட்சம் பேர் நிறைந்துள்ள பாசறைதான் இது என்பதும், என் பாசமிகு உடன்பிறப்புகள் என்றைக்குமே ஒற்றுமைக் குறைவினால் மோசம் போய் விடமாட்டார்கள் என்பதும் - இவைகளே என்னை என் உழைப்பில் ஊக்கமளித்து உயிர் வாழ வைக்கும் மருந்துகளாகத் திகழ்ந்து வருகின்றன என்பதும்தானே உண்மை!

அதனால்தான் அந்த முழு நம்பிக்கையுடன் உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். நமது அணி போட்டியிடுகின்ற நாற்பது தொகுதிகளிலும் வெற்றி முரசு கொட்டிட, நாற்பது தொகுதிகளும் நமக்கு ஒன்றே - இங்கே யார் வேட்பாளர்? அங்கே யார் வேட்பாளர்?

என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல் - நம் அணியின் அனைத்து வேட்பாளர்களும் நமது வேட்பாளர்களே என்று இதயமார்ந்த தூய உணர்வுடன் உன் தொண்டினைத் தொடங்கிடுக! உடனே தொடங்கிடுக உடன்பிறப்பே! உடனே தொடங்கிடுக!

என்னால் ஏற்பட்ட காலதாமதத்தையும் உன்னால் வழங்கப்படும் ஓய்வறியாத உழைப்பால்தான் நாற்பது தொகுதிகளிலும் சரிக்கட்டிட வேண்டியுள்ளது!

எனவே, உதவாதினி ஒரு தாமதம் - உடனே எழுக உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(21-01-1998)

2394. இரண்டு நிகழ்ச்சிகள்! இரண்டு ஒப்பீடுகள்!

உடன்பிறப்பே,

அண்மையில் நாளேடுகளில் வெளிவந்த இரண்டு செய்திகளை இன்றைய அரசியலுடன் ஒப்பிட்டு இந்தக் கடிதம் எழுதுகிறேன். இதோ, முதல் செய்தி!

"நெல்லை கருப்பந்துறையில் பெருமாள் சாமி கோவில் உள்ளது. அந்தக் கோவிலில் பாம்பு புற்று உள்ளது. அதில் ஒரு நல்ல பாம்பு குடியிருந்து வந்தது. அந்தப் பாம்புக்குப் பால் வைத்து பக்தர்கள் வழிபாடு நடத்துவார்களாம். அந்தக் கோவிலில், கருப்பந்துறையைச் சேர்ந்த சுப்பையா என்பவரது மகன் அய்யனாரும் (வயது 7) மற்ற சிறுவர்களும் விளையாடிக் கொண்டு இருந்தனர்.

அப்போது, பாம்பு புற்றுக்குள் அய்யனார் தெரியாமல் காலை விட்டு விட்டான். அப்போது அவன் காலில் பாம்பு கடித்து விட்டது.

அய்யனார் கதறினான். சிறிதுநேரத்தில் விஷம் உடலில் ஏறியதால் மயக்கம் அடைந்து விழுந்தான்.

உடனடியாக அவனது பெற்றோர் ஓடி வந்து, அய்யனாரை தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்குச் சென்றனர். அவனைக் காப்பாற்ற முடியாது என்று மருத்துவர்கள் கூறவே, அவனைப் பாளையங்கோட்டை பெரிய மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கும் மருத்துவர்கள் அவன் நிலைமை மோசமாகிவிட்டது என்று கூறியதால், அய்யனாரைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தனர். சிறுவன் வாயில் இருந்து நுரை தள்ளி அவன் உயிர் பிரிந்து விட்டது.

இதை அறிந்த ஊர் மக்கள் பலர் வேதனையுடன் வீட்டு முன்பு கூடினார்கள். அப்போது அந்தக் கூட்டத்தில் இருந்த சமுத்திரம் என்ற சாமியாடி, திடீரென சாமி வந்து ஆடினாராம். அவர், அவனை நான்தான் தீண்டினேன், அவனை என் கோவிலில் வை, இரவு 12 மணிக்குள் நான் அவனைப் பிழைக்க வைப்பேன் என்று குறி சொன்னாராம்.

சாமியே, நேரில் வந்து பிழைக்க வைப்பேன் என்று கூறிவிட்டதே என்று அப்பகுதி மக்கள் அய்யனார் உடலைத் தூக்கிச்சென்று கோவில் முன்பு கிடத்தினார்கள்.

அய்யனார் உடல் அருகில் சாமியாடியும், அவனது தந்தை - தாயும் அமர்ந்து வேப்பிலையை வைத்து அடித்துக்கொண்டும் இருந்தனர்.

திடீரென புற்றில் இருந்து சிறுவனைத் தீண்டிய அந்தப் பாம்பைப் புற்றில் கையை விட்டுச் சாமியாடி வெளியே எடுத்தார். பாம்பு அவர் கையை விட்டுக் கீழே இறங்கி சிறுவன் அருகில் படுத்துக்கொண்டதாம். பிற்பகல் 3 மணியில் இருந்து இரவு 7 மணி வரை சிறுவனின் அருகிலேயே பாம்பு படுத்து இருந்ததை அப்பகுதி மக்கள் திரண்டு வந்து பார்த்தனர்.

இரவு 7 மணிக்குப் பாம்பு அங்கிருந்து ஊர்ந்து அருகில் உள்ள புதருக்குள் சென்று விட்டதாகக் கூறினார்கள்.

சிறுவனை நம்பிக்கையுடன் கோவிலில் வைத்து பிழைப்பான் என்று எதிர்பார்த்த அவனது பெற்றோரும், உறவினர்களும், ஊர் மக்களும் கொட்டும் பனியில் டார்ச் லைட் வைத்துக் கொண்டு காத்து இருந்தனர்.

ஆனால் பாம்பு மீண்டும் வரவில்லை.

சிறுவன் அய்யனாரின் உடல் அசைவற்று உயிர் பிரிந்த நிலையில் கிடந்தது.

இனி பாம்பு வர வாய்ப்பு இல்லை என்று அனைவரும் கூறியதால், அய்யனாரின் உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று புதைக்க முடிவு செய்தனர்.

அதன்படி, அய்யனார் உடலை அங்கிருந்து சுடுகாட்டுக்குத் தூக்கிக் கொண்டு சென்று புதைத்து விட்டு, அனைவரும் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

அய்யனார் என்ற ஏழு வயதுப் பாலகனைப் போலத்தான் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய அ.தி.மு.க. வளர்ந்து, வளம் பல பெற்று, வலிமையுடன் திகழ்ந்து கொண்டிருந்தது. ஆனால் அவரது மறைவுக்குப் பிறகு, புற்றுக்குள் காலை வைத்த அய்யனாரைப் பாம்பு தீண்டியது போல, ஜெயலலிதாவின் தலைமையை ஏற்றுக் கொண்ட அ.தி.மு.க.வை, ஊழல் என்ற கருநாகம் தீண்டிவிட்டது. கருநாக வடிவில் வந்த ஊழல் வேறு யாருமல்ல! நானேதான் என்று கூறிக்கொண்டு, சிறுவன் அய்யனார் உடலில் பாய்ந்த விஷத்தை இறக்கிட சமுத்திரம் என்ற சாமியாடி வேப்பிலை அடித்து ஆட்டம் போட்டது போலவே, ஊழல் விஷமேறி சாய்ந்து கிடக்கும் அ.தி.மு.க.விடமிருந்து விஷத்தை இறக்கப் போவதாகவும், அ.தி.மு.க.வைப் பிழைக்க வைக்கப்போவதாகவும் அம்மையார் ஜெயலலிதா, அக்கட்சியின் தொண்டர்களை ஏமாற்றுகிறார்.

அய்யனாரைக் கடித்த பாம்பை, அந்தச் சாமியாடி சமுத்திரம், அந்தப் பையன் உடலைச் சுற்றிப் படுக்க வைத்து, பம்மாத்து செய்தது போலவே - மேலும் மேலும் ஊழல்களை ஊர்ந்து வரச் செய்து, அ.தி.மு.க.வைச் சுற்றி ஜெயலலிதா வட்டமிடச் செய்கிறார்.

கடைசிவரையில் தங்களின் அன்புச் செல்வன் அய்யனார் காப்பாற்றப்படுவான் என்று காத்திருந்து ஏமாந்து போன பெற்றோர்களைப் போலவும், அந்த ஊர் மக்கள் போலவும், அ.தி.மு.க.வின் அருமைத் தொண்டர்களும், ஆதரவாளர்களும் ஏமாற்றமடையத்தான் போகிறார்கள்.

ஊழல் விஷத்தைக் கக்கிய பாம்பு, மீண்டும் புற்றுக்குள் போய்விடப் போகிறது! பிழைக்க வைக்கின்றோம் பாருங்கள் என்று வேப்பிலை எடுத்து வேகமாகச் சாமி ஆடியவர்கள், நாங்கள் என்ன செய்வது? முயற்சித்தோம்! முடியவில்லை.! விதி யாரைத்தான் விட்டது! என்று வேதாந்த உபதேசம் புரிந்து விட்டுத் தப்பித்தோம் பிழைத்தோமென்று ஓடிவிடத்தான் போகிறார்கள்.

விஷத்தைக் கக்கிய பாம்பே அந்த விஷத்தை எடுத்து விடுமென நம்பி ஏமாந்த கருப்பந்துறை மக்களைப் போலவே,

இன்னமும் சாமியாடிகளை நம்பியிருக்கிற அ.தி.மு.க.வின் உண்மைத் தொண்டர்கள், இறுதியாகத் தங்கள் அறியாமைக்கு வருந்தி தலைகுனியத்தான் போகிறார்கள். அந்தத் தலைக்குனிவு வேண்டாம், தலை நிமிர்ந்தே தன்மானத்துடன் வாழ்வோம் எனச் சூளுரைக்கும் சுயமரியாதைச் சுடர்களாகத் தங்களை மாற்றிக்கொள்வோர் மட்டுமே அங்கிருந்து தப்பித்து வெளியே வர முடியும்.

உடன்பிறப்பே, இன்னொரு செய்தி, கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற ஒரு சோகமான நிகழ்ச்சியைப் பற்றியது.

இதோ அந்தச் செய்தி.

“கர்நாடக மாநிலம் பெல்லாரி மாவட்டம் ஹொலகெரே கிராமத்தை சேர்ந்த பெண்கள், மகர சங்கராந்தி (பொங்கல்) அன்று, பக்கத்து ஊரில் நடந்த திருவிழாவைக் காணச் சென்றனர்.

திருவிழாவைக் கண்டு களித்துவிட்டு, அனைவரும் குதூகலமாக ஊருக்குத் திரும்பினார்கள். துங்கபத்ரா ஆற்றைக் கடந்துதான் அவர்கள் ஹொலகெரே கிராமத்துக்கு வரவேண்டும். அதற்காக எல்லோரும் துங்கபத்ரா ஆற்றில் இறங்கினார்கள்.

அப்போது, ஆற்றில் இருந்த ஒரு முதலை கவுரம்மா என்ற பெண்ணின் காலைக் கவ்விப் பிடித்தது.

உடனே அவள் அய்யோ! அம்மா! என்னை காப்பாற்றுங்க.... காப்பாற்றுங்க என்று அலறினாள்.

முதலையைப் பார்த்ததும் மற்றவர்கள் தயங்கி நின்றார்கள். ஹனுமக்கா, மாரம்மா என்ற இரண்டு பெண்களும் துணிச்சலோடு முதலையிடம் நெருங்கி, கவுரம்மாவை மீட்க முயன்றனர்.

முதலையின் வாயில் இருந்து கவுரம்மாவைப் பிடித்து இழுத்தனர். முதலை தனது பிடியை இறுக்கியது.

இந்தப் போராட்டத்தில், ஹனுமக்காவும், மாரம்மாவும் தண்ணீரில் மூழ்கி, மூச்சுத் திணறிப் பரிதாபமாகச் செத்தனர்.

முதலையிடம் சிக்கிய கவுரம்மாவும் படுகாயம் அடைந்து, இறந்தாள்.”

இந்த நிகழ்ச்சியும் கூட இப்போதுள்ள தமிழக அரசியலுக்கு மிகப் பொருத்தமாக இருப்பதைப் பார்க்க முடிகிறதல்லவா!

ஊழல் முதலையின் வாய்க்குள் சிக்கித் தவித்து, இன்று நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிற அ.தி.மு.க.வின் தலைவியைக் காப்பாற்றப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டுதானே - கவுரம்மாவைக் காப்பாற்றப்போன அனுமக்கா, மாரம்மா எனும் பெண்களைப் போல, அத்வானியும், வாஜ்பாயியும் முயற்சி மேற்கொண்டுள்ளார்கள்.

இந்த முயற்சியை, கர்நாடக மாநிலத்தில் ஒரு கிராமத்தில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஜெயலலிதா நீதிமன்றங்களில் கேட்ட முன்ஜாமீன் போல, நமக்குப் பாரதீய ஜனதா கட்சியின் மீது ஒரு முன் அனுதாபம் ஏற்படுகிறதல்லவா!

அன்புள்ள,

மு. க.

(22-01-1998)

2395. இளைஞர் அணிகளின் எழுச்சிப் பேரணிகள்!

உடன்பிறப்பே,

அண்ணா அறிவாலயத்தில் இரண்டு நாட்களாக எள் விழுவதற்குக்கூட இடமில்லை. கழகம் போட்டியிடுவதாக அறிவித்துள்ள பதினெட்டு தொகுதிகளிலும் வேட்பாளர்களாக நிற்பதற்கு முன்வந்து விண்ணப்பம் அளித்துள்ளவர்களையும், அவர்களுக்குப் பரிந்துரை செய்திட வந்திடும் கழக நிர்வாகிகளையும் நேர்காணல் நிகழ்ச்சி 21.1.1998 காலை 10 மணியளவில் தொடங்கி இரவு 10 மணி வரையில் நடைபெற்று, இன்றும், நாளையும் மேலும் தொடர இருக்கிறது.

தாங்கள் நிற்பதற்குத் தொகுதி கிடைக்கிறதோ இல்லையோ அல்லது தாங்கள் பரிந்துரை செய்தவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுமோ இல்லையோ, அவற்றைக் குறித்தெல்லாம் கவலைப்படாமல் - அலட்டிக் கொள்ளாமல் கழகத்திற்கு ஆற்றிட வேண்டிய கடமையைக் கட்டுப்பாட்டுணர்வுடன் ஆற்றிடுவதற்கு அணி வகுத்து வரும் ஆயிரம் ஆயிரம் உயிரனைய உடன்பிறப்புகளை அண்ணா அறிவாலயத்தில் காணும்பொழுது உள்ளம் பூரிக்கிறது - ஊக்கம் கொழிக்கிறது - உற்சாகம் கரைபுரள்கிறது!

கழகம் தொடங்கப்பட்டபோது, அலுவலகம் நடத்துவதற்கும், அண்ணாவும் மற்ற தம்பிமார்களும் சந்தித்து ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனை நடத்துவதற்கும் வடசென்னையில் வாடகைக்குப் பிடிக்கப்பட்ட வசதியற்ற ஓர் இடத்தில்தான் மாநில மாநாடுகள் பற்றிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. கறுப்புக்கொடிப் போராட்டங்களில் களம் கண்ட கழகக் கண்மணிகள், காவலர்களின் தடியடிக்கும், துப்பாக்கி ரவைகளுக்கும்

ஆளாகி, ரத்தம் வழியும் காயங்களுடன் படுத்திருந்த அவசர மருத்துவமனையாகவும் அந்த வாடகைக் கட்டிடம்தான் சென்னையில் நமக்கென்று இருந்தது.

பின்னர்தான் ராயபுரத்தில் அறிவகம் - தேனாம்பேட்டையில் அன்பகம் - அதற்குப் பிறகுதான் அறிவாற்றலாலும், அன்பான அகத்தினாலும் நம்மைப் பிணைத்த அண்ணாவின் பெயரால் அண்ணா அறிவாலயம் என்று எண்ணிடும்பொழுது, அடடா! எத்துணை இன்பம்! எத்துணைப் புத்துணர்ச்சி!

இந்த அறிவாலயம் எழுவதற்குக் கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் நானும், நமது கழகக் கண்மணிகளும் எத்தனை நாள் நின்றுகொண்டு நடக்கும் பணிகளை வேகப்படுத்தினோம் என்பதை விட - அறிவாலயக் கட்டிடம் ஒவ்வொரு அங்குலமும் உயர்வதற்கு அடுக்கப்பட்ட செங்கற்கள் - பூசப்பட்ட சிமண்டு - எல்லாமே உன்போன்ற உடன்பிறப்புகள் வியர்வை சிந்தி உழைத்து, திரட்டித் தந்த காசுகளின் மொத்த வடிவமன்றோ என்பதை எண்ணித்தான் நான் பலமுறை ஆனந்தக் கண்ணீர் வடித்திருக்கிறேன்.

அறிவாலயத்தின் முகப்பில் சிலை வடிவில் நிற்கிறாரே! பூவிதழின் மென்மையினும் மென்மையான புனித உள்ளம் - அன்பு உள்ளம் - அரவணைக்கும் அன்னை உள்ளம் கொண்ட நமது அண்ணன் - நம் இதய மன்னன் அவரைக் காணும்பொழுதெல்லாம் அய்யோ! நம்மால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு நற்செயலும் அவர் வழிநின்றுதானே நிறைவேற்றப்படுகின்றன. அதனைக் காண அவரில்லையே! என்ற நினைவும், நினைவைத் தொடர்ந்து விழியோரம் நீர்த்துளியும் தோன்றாத நாள்தான் ஏது? நேரம்தான் ஏது?

அறிவாலயத்தில் நாள்தோறும் விடியற்காலையில் நான் நடக்கும்போதெல்லாம் அண்ணாவின் சிலையைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறேன். அவர், தம்பீ! என்று என்னை அழைத்து கழக ஆக்கப்பணிக்கான ஆணையொன்றினை இடுவது போன்ற உணர்வுதான் என் நெஞ்சைக் குலுக்கிக் கொண்டிருக்கிறது.

அவரின் நினைவுநாள் என்று ஒன்று பிப்ரவரி மூன்றாம் நாள் வருகிறது - உடன்பிறப்பே! அவரை நினைக்காத நாள் என்று

ஒன்று இருந்தால்தானே பிப்ரவரி 3-ஆம் நாள் நினைவுநாள் எனலாம்!

எனினும் அந்தநாள், இந்த ஆண்டு, அந்த அண்ணன் வர்ணிப்பாரே இந்த இயக்கத்தின் ஈட்டி முனைகள் இளைஞர்கள்தான்! என்று, அந்த இளைஞர் அணியின் பட்டாளம், தமிழ்நாட்டின் தெருக்கள்தோறும் பவனிவரும் எழுச்சி நாளாகவும் அமைய இருக்கிறது. தேசத் தந்தை காந்தியடிகளின் நினைவு நாளில், தமிழ் மாநிலக் காங்கிரஸ் இளைஞர்கள் லட்சக் கணக்கானோர் சைக்கிள் ஊர்வலம் நடத்துகின்றனர். தென்னாட்டுக் காந்தி அண்ணாவின் நினைவுநாளில் கழக இளைஞர்கள் லட்சக்கணக்கானோர் சைக்கிள் ஊர்வலம் நடத்த இருக்கின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் நமது அணியினர் போட்டியிடும் நாற்பது தொகுதிகளிலும் இந்த சைக்கிள் ஊர்வலங்கள்! அந்தந்தத் தொகுதிக்குத் தேவையான தேர்தல் சின்னங்களைப் பொருத்திக் கொண்டு வீறுகொள் பவனிகளாக, வெற்றிகொள் பவனிகளாக வர இருக்கின்றன.

கழகத்தின் இளைஞர் அணியினரின் சைக்கிள் ஊர்வலம் குறித்த விபர அறிக்கையை இளைஞர் அணிச் செயலாளர் தம்பி ஸ்டாலின் விடுத்துள்ளதைக் கண்டிருப்பாய்!

அண்ணா நினைவுநாளையொட்டி, இரண்டு மூன்று நாட்கள் தமிழக முழுவதும் பரவலாக இளைஞர் அணியின் சைக்கிள் ஊர்வலப் பிரச்சாரம் நடைபெற வேண்டும் என அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

பிப்ரவரி 2-ஆம் நாள் மாலையில், சென்னையில் பிரதமர் குஜ்ரால் அவர்கள் கலந்து கொள்ளும் நமது கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டம் இருப்பதால், சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் இளைஞர்கள் மறுநாள் 3-ஆம் நாளன்று காலையில் சைக்கிள் ஊர்வலத்திற்குத் தயார் ஆவது சிரமம் என்பதைக் கருதிப் பார்த்துத்தான், சென்னைக்குத் தொலைவில் உள்ள மாவட்டங்களில் பிப்ரவரி 3-ஆம் தேதி நடத்தத் தொடங்கி விடலாமென்றும், சென்னைக்கு அருகில் உள்ள மாவட்டங்களில் பிப்ரவரி 4 அல்லது 5 தேதிகளில் நடத்திடத் தொடங்கலாமென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

இளைஞர்கள் நடத்த இருக்கும் அந்த எழுச்சிமிகு சைக்கிள் பேரணிகள், ஜனவரி 30-ஆம் நாள் த.மா.கா. சார்பில் நடைபெறுவதும் - பிப்ரவரி 3-ஆம் நாள் முதல் தி.மு.க. சார்பில் நடைபெறுவதும் உன் போன்ற உடன்பிறப்புகளின் உறுதுணையுடன் நடைபெற வேண்டும்.

அமைதி

ஆர்வம்

அரசியல் பண்பாடு

இவற்றை, அண்ணா நமக்குத் தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் வழிநின்று, இளைஞர் அணியினர் எழுச்சியுடன் கடைப்பிடித்திட அவர்களுக்கு அரணாக இருந்திடுமாறு உன்னையும், லட்சக்கணக்கான உடன்பிறப்புகளையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(23-01-1998)

2396. உயரத் தூக்கிப் பிடி நம் வெற்றிக் கொடி!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை, தம்பி முரசொலிமாறன் அவர்கள் தலைமையில் இயங்கிடும் குழுவினரால் தயாரிக்கப்பட்டு, அதன் வெளியீட்டு விழாவும் -

கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர், சட்டப் பேரவை உறுப்பினர் தம்பி ராஜேந்தர் அவர்கள் எழுதி, இசையமைத்துள்ள தேர்தல் பிரச்சாரப் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா வெளியீட்டு விழாவும் -

வருகிற 29-ஆம் நாள், வியாழக்கிழமை, மாலை 6 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலய வளாகத்தில் நடைபெற இருக்கின்றன.

அந்த எழுச்சிமிகு நிகழ்ச்சிக்கு ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! என்று உன்னை அழைத்திடும் இதேநேரத்தில் - இடையில் நமை விட்டுப் பிரிந்து மீண்டும் ஒளிபெற்ற கண்ணினராய் அண்ணா அறிவாலயம் நோக்கி வந்து கொண்டிருக்கும் இனிய உடன்பிறப்புகளை, இதயம் கனியக் கனிய நான் வரவேற்று மகிழும் காட்சிகளையும் கண்டுகளித்துக் கொண்டிருக்கிறாய் என்பதை நான் அறிவேன்.

பச்சைக் கொடிக்கும், பச்சைப் பாம்புக்கும் வேறுபாடு தெரியாமல் பச்சைக்குழந்தைகள் இருக்கலாம்! ஆனால், இவர்களுமா இப்படி என்று நான், என் நெஞ்சத்தை அலை பொங்கும் கடலாக்கிக் கொண்டு அவதிப்பட்டதுண்டு!

அந்த அவதி நீங்கி, ஏலேலசிங்கன் பொருள் ஏழு கடல் போனாலும் திரும்பி வரும் எனும் முதுமொழிக்கேற்ப, சிதறிக் கிடந்திடும் முத்துக்கள் ஒவ்வொன்றாக - அல்ல அல்ல - அணி அணியாக வந்து என் கழுத்துக்கு ஆரமாவதை; ஓர் அன்னை

தன் குழந்தையை அள்ளி அணைத்து மகிழும் மகிழ்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்த்தன்றோ நெகிழ்ச்சியுறுகிறேன்!

உலகப் பூப்பந்தின் பல பகுதிகளில் வாழ்கின்ற தமிழ்ப் பெருமக்களின் உள்ளங்களில் எல்லாம் தங்கச் சிம்மாசனம் போட்டு வீற்றிருக்கும் நம் அண்ணன் - பேரறிஞர் பெருந்தகை - பகுத்தறிவுப் பகலவனாம் பெரியாரின் மூத்த மைந்தன்; நமையெலாம் தவிக்கவிட்டு நீடு துயில் கொண்டபோது, இந்தக் கழகம் காத்திடும் பொறுப்பை ஒரு கட்டளையாக உன்போன்ற உடன்பிறப்புகள் எனக்கிட்டபோது, நான் கூறியது உனக்கு நினைவிருக்குமென்றே நம்புகிறேன்.

அண்ணன் தந்த கழகமெனும் அகல்விளக்கைக் கையிலேந்திக் கொண்டு - சுழன்றடிக்கும் சூறாவளிக் காற்றில் அது அணைந்து விடாமல் இரு கரம் கொண்டு பொத்தியவாறு, சரளைக் கற்களும், முட்களும் நிறைந்த கரடுமுரடான வழியில், கொட்டும் மழையில் மலையுச்சி நோக்கி நடைபோடும் - ஒரு சிறுமியைப் போல், பயணித்துக் கொண்டிருக்கிறேன் என்று தழுதழுத்த குரலில் நான் உரை நிகழ்த்தியபோது, என் கண்களைப் போன்றே உன் கண்களிலும் அருவியைக் கண்டேன்.

அந்தப் பாசமிகு அருவி - பந்தம் நிறைந்த அருவி - பலகிளைகளாகப் பிரிந்து செல்வதால் நமது குறிக்கோளான இனமான உணர்வுப் பயிர் விளைந்து செழித்து உயர்ந்திட இயலாமற் போகுமே என்ற ஏக்கம் எனைப் பிடித்தாட்டாத நாளில்லை - வேளையில்லை!

ஆனால், என் ஏக்கம் தணித்திட, அந்த அருவிகள், சற்று திசைமாறிச் சென்றிருந்தாலும் இன்று மீண்டும் உரிய திசையில் வந்து ஒட்டிக்கொண்டு திராவிட இயக்கப் பேரருவியாகத் திகழும் நிலை காணக் காணக் கோடி இன்பம் கொள்ளுகிறேன்!

இனி என் கண்களை நிம்மதியாக மூடலாம் என்று ஆறுதல் அடைகின்றேன்!

பிரிந்தோடியதைப் பெரிதுபடுத்தாமல் - எனைத் தேடி வந்த நம் குடும்பச்செல்வங்கள் என இரு கரம் நீட்டித் தழுவிக் கொள்கிறேன்.

இன்னும் வருவர் - எங்கிருப்பினும், எப்பதவியில் இருப்பினும் இங்கிருக்கும் சுயமரியாதை எங்கும் இருந்ததில்லையென வருவர் - உதட்டளவில் அண்ணா பெயரை உச்சரித்துவிட்டு அவர் கொண்டிருந்த கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைப்போரின்

குள்ளநரித் தனத்தைத் தாமதமாக உணர்ந்து கொண்டோர் - தயங்காமல் இங்குதான் வருவர்!

"தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் - இந்த
வைய முழுதுமில்லை தோழி!"

எனப்பாடிய பாரதியின் பாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருப்போர் அவர்கள் - எனவே தி.மு.க.வை மறந்திருக்க இயலுமோ அவர்களால்!

திராவிட எனும் முத்திரை குத்திக் கொண்ட எந்த இயக்கமாயினும் அங்கிருப்போரின் பத்தரைமாற்றுப் பசும்பொன் அனையார், தி.மு.க.வின் கைத்தலம் பற்றவே முனைவர்!

அவர்களே அறிவாலயம் நோக்கி அணிவகுத்துக் கொண்டிருக்கின்றனர், அறிவாலயத்து லட்சியங்கள் வென்றிட, வேதனைகளிலும், சோதனைகளிலும் சோர்வடையாது எனக்குத் துணைநின்ற லட்சோபலட்சம் உன்போன்ற உடன்பிறப்புகள் கொண்ட கழகப் பாசறையில் கலந்திட வந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்களையும், உன்னையும்! இல்லை - இல்லை - நம்மையெல்லாம் ஒருசேரக் காணும் நாட்களில், ஒரு சிறப்பு நாளாகத்தான் இந்த ஜனவரி 29-ஆம் நாள் அமைய இருக்கிறது.

தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் நிகழ்ச்சியிலும், தேர்தல் பிரச்சாரப் பாடல்களின் ஒலிநாடா வெளியிடப்படும் நிகழ்ச்சியிலும் உன்னைச் சந்திக்க இருக்கிறேன். மன்னிக்கவும் உடன்பிறப்பே! நாம் சந்திக்க இருக்கிறோம்.

கழக வேட்பாளர்கள் பெயர்கள் கொண்ட பட்டியல், இக்கடிதத்தை நீ படிக்கும் நேரத்தில் உன் கைக்குக் கிடைத்திருக்கும்.

நாற்பது தொகுதிகளில் நிற்பவர்கள் - ஆம்! நமது அணியின் வேட்பாளர்கள், அனைவரும் வென்றாக வேண்டும் என்ற உறுதியுடனும், வெல்வார்கள் என்ற நம்பிக்கையுடனும் உயரத் தூக்கிப் பிடி, வெற்றிக் கொடி!

அன்புள்ள,

மு. க.

(25-01-1998)

297. காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?

உடன்பிறப்பே,

கதிரவனைக் கையால் மறைத்துவிடலாம் என்று தன் கண்களைக் கையால் மறைத்துக் கொண்டு வெற்றிப் புன்னகை புரியும் வீணர்கள், மற்றவர்களைப் பைத்தியக்காரர்கள் என்று எண்ணிக் கொண்டு, தங்களையே பைத்தியக்காரர்களாக ஆக்கிக் கொள்வார்கள்.

கதிரவனைக் கையால் மட்டுமல்ல; காரிருளாலும் மறைக்க முடியாது என்ற உறுதியுடன்தான் காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ? என புரட்சிக் கவிஞர் கவிதை பாடிக் கேட்டார்!

பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ? என வெகுண்டெழுந்து வினவிய கவிஞர் அவர்கள், காரிருள் எப்படிச் சூரியனை மறைத்துவிட முடியாதோ, அதுபோல எத்தகைய எதிர்ப்பினாலும், உண்மை ஒரு நாள் வெளிப்படுவதை மறைத்துவிட முடியாது என்று அழுத்தம் திருத்தமாக முழங்கியிருக்கிறார்.

திராவிட இயக்கத்தை - திராவிட இயக்கத் தலைவர்களை - திராவிட இயக்க முன்னணியினரை, அரசியல் துறை, சமுதாயத்துறை, கலைத் துறை, இலக்கியத் துறை என அனைத்துத் துறைகளிலும் எதிர்ப்புகாட்டி அழித்து விடவேண்டுமென்று திட்டமிட்டுச் செயல்பட்டோர், அதில் வெற்றி காண முடியவில்லை என்றதும், இருட்டடிப்பு செய்து வீழ்த்திவிடலாமென்று வியூகம் வகுத்தனர்.

தந்தை பெரியார் என்று தரணி போற்றுகிற அளவுக்கு அந்தப் பகுத்தறிவுப் பகலவனின் ஒளி பரவிவிட்ட நேரத்திலும் - சில

நாளேடுகளில் எங்கோ ஒரு மூலையில் சிறிய அளவில் வரும் செய்தியில்கூட ஈ.வெ. ராமசாமி நாயக்கர் என்று கடுகுபோல, அவர் பெயர் அச்சுக் கோக்கப்பட்டிருக்கும்.

பல லட்சம் பேர் திரண்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பல தலைவர்கள் பேசியிருப்பார்கள் - அவர்களின் பெயர்கள் எல்லாம் கொட்டை எழுத்துகளில் பிரசுரிக்கப்படுகிற ஏடுகளில், கடைசி வரியாக அண்ணா துரையும் அந்தக் கூட்டத்தில் பேசினார் என்று பொடி எழுத்துகளில் போடப்பட்டிருக்கும்.

மறைந்த நம் தம்பி என்.வி.என். சோமு அவர்கள் முன்னின்று நடத்திய ஒரு நிகழ்ச்சி - அவர் தொழிற்சங்கத் தலைவராக இருந்த பத்திரிகையொன்றின் விழா நிகழ்ச்சி - அதில் கலந்து கொண்டு நான் பேசும்போது சொன்னேன்;

சில ஆங்கிலப் பத்திரிகைகள் கடற்கரை மணற் பரப்பு போன்றவை. அங்கே வலைகளை மேடாகக் குவித்துவைத்தால் எளிதில் தெரியும். வைர மோதிரம் அந்த மணற்பரப்பில் விழுந்துவிட்டால் கண்டுபிடிப்பது சிரமம். அதுபோலத்தான் அந்த ஏடுகளில் எங்கள் செய்திகளை வைர மோதிரத்தைத் தேடுவதுபோல், தேடிக்கண்டு பிடிக்கிறோம்!

இப்படி நான் பேசியபோது, அந்தப் பத்திராதிபரும் தொழிலாளத் தோழர்களுடன் சேர்ந்து ரசித்துச் சிரித்தார்.

ஏடுகள் மட்டுமா? இந்தியாவில் உள்ள அகில இந்தியக் கட்சிகள், அதிலும் குறிப்பாக அகில இந்திய காங்கிரஸ் கட்சி என்று, முன்பு ஒன்று செல்வாக்குடன் இருந்ததே! அந்தக் கட்சி, திராவிட இயக்கத் தலைவர்களைக் கண்டு கொள்வதே தனது பெருமைக்கு இழுக்கு என்று கருதிக் கொண்டிருக்கிறது.

இந்திய சுதந்திரத்துக்குப் போராடித் தியாகம் செய்த தமிழ்நாட்டுத் தலைவர்களின் பட்டியலில், தந்தை பெரியார் அவர்களுக்கு ஒரு தனியிடம் உண்டு என்பதையே தடுப்புச் சுவர் எழுப்பி மறைத்துக் கொண்டிருந்தது அந்தக் கட்சி!

சமூகநீதிக்கான குரல் எழுப்பி, காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டிலிருந்து வெளியேறிய பெரியார் அவர்களை வகுப்புவாதி என்று வர்ணித்ததும் காங்கிரஸ் கட்சியின் மிகப் பெருந்தலைவர்கள்தான்!

பெரியாரைப் பற்றிய செய்திகளைப் பெரிதாக வெளியிடாமல் இருக்குமாறு பத்திரிகைகளை பயமுறுத்தி வைத்திருந்ததும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்திலேதான்!

அதேபோல, அண்ணா அவர்களை அறிஞரா? எனக் கேட்டவர்களும், அவர் பெயரை உச்சரிப்பதே தங்களின் மதிப்புக்குக் குறைவு என மமதை கொண்டலைந்தவர்களும் காங்கிரசில் இன்னமும்கூட இருக்கிறார்கள்.

ஆனால், உடன்பிறப்பே, அத்தகையோரின் அலட்சிய மனப்பான்மையனைத்தும் அடியோடு பட்டுப்போய்விட்டதைக் காலம் இன்றைக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. இதோ! நம்மைத் தமது கவனத்திற்கு உரியவர்களே அல்லர் என்று ஒரு காலத்தில் கருதியிருந்தோர் - இன்று நமது இயக்கப் பெயரை, நமது இயக்கத்தின் தலைவர்களின் பெயரைச் சொல்லித் தீர வேண்டிய கட்டாயத்துக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையே ஒரு பெரும் சான்றாகும்.

நாட்டு விடுதலைக்காக மகாகவி சுப்பிரமணிய பாரதி, ராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜர் ஆகியோர் ஆற்றிய பெரும் பங்கு போற்றுதலுக்கு உரியது.

தந்தை பெரியாரின் சேவையை யாரும் மறக்க முடியுமா? சமுதாயச் சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கியவர் தந்தை பெரியார். நாட்டின் இதரப் பகுதிகளுக்கெல்லாம் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது அவரது இயக்கம்.

தி.மு.க. தொடக்கத்தில் பிரிவினைவாதம் பேசியது உண்மைதான். ஆனால், பின்னர் அக்கொள்கையைக் கைவிட்டது அக்கட்சி. தேசிய ஒருமைப்பாட்டுக்காகவும், நாட்டு ஒற்றுமைக்காகவும் பெரும் பங்காற்றியவர் அதன் தலைவர் அண்ணா என்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் உள்ள இந்தப் பகுதியை இன்று பத்திரிகையில் படித்ததும்;

"காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?"

என்ற பாவேந்தரின் வரிகள் எனக்கு மட்டுமல்ல! உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும் நினைவுக்கு வராமல் போய்விடுமா?

அன்று பெரியாரைக் கலகக்காரர் என்றவர்கள், இன்று கலங்கரை விளக்கம் என்கின்றனர்.

பிரிவினைக் கோரிக்கையை விட்ட பிறகும்கூட அண்ணாவைப் பிரிவினைவாதி என்றவர்கள், இன்று அண்ணா ஒருமைப்பாட்டுக்கும், நாட்டு ஒற்றுமைக்கும் பெரும் பணியாற்றியவர் என்கின்றனர்.

சந்தர்ப்பத்திற்காகச் சொல்கின்றார்கள் என்றாலும், சரியான உண்மையை, காலம் தாழ்ந்தாலும்கூட சொல்லித்தானே தீரவேண்டும். அதுவரையில் நமது பாராட்டுகள்! பெரும் எதிர்ப்பால் உண்மையெனும் வெளிச்சத்திற்குத் தடை போட்டுவிட முடியாது - அந்த உண்மை தடையுடைத்துத் தகத்தகாய ஒளியினை வீசியே தீரும் என்பதை இனியேனும் அவர்கள் உணர்ந்து கொண்டால் சரி!

அன்புள்ள,

மு. க.

(26-01-1998)

2398. கடற்கரை அழைக்கிறது, கழுகக் கண்மணியே வா!

உடன்பிறப்பே,

நமது கூட்டணியின் வேட்பாளர்கள் களத்தில் இறங்கிவிட்டார்கள்; வெற்றிப் புன்னகையுடன் வெற்றி நோக்கிப் புருவங்களை உயர்த்திக்கொண்டு!

அவர்களை அறிமுகப்படுத்தும் மாபெரும் பொதுக்கூட்டம், அகன்று நீண்டு பரந்து கிடக்கும் சென்னைக் கடற்கரை மணற்பரப்பில் அண்ணல் காந்தியடிகளின் சிலைக்கருகே பிப்ரவரி இரண்டாம் நாள் மாலை நடைபெற இருக்கிறது.

இந்தியப் பிரதமர் மாண்புநிறை குஜ்ரால் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றுகிறார். நானும், பேராசிரியர் அவர்களும், திரு. மூப்பனார் அவர்களும், நமது தோழமைக்கட்சிகளின் தலைவர்களும் அந்தச் சிறப்புவாய்ந்த சீர்குலுங்கும் எழுச்சிமிகு நிகழ்ச்சியில் பங்கேற்கிறோம்.

அந்த மகத்தான பொதுக்கூட்டத்திற்கு உன்னையும், தமிழ்ப் பெருமக்களையும் இருகரம் நீட்டி வரவேற்கிறேன் என்பதைச் சுட்டிக்காட்டி அழைப்பதற்காகவே இந்தக் கடிதம்.

அகில இந்திய அளவில் நமது ஐக்கிய முன்னணியில் பத்துக்கு மேற்பட்ட கட்சிகள் இடம் பெற்றிருக்கின்றன என்றாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த அளவு எண்ணிக்கை நமது தேர்தல் கூட்டணியில் இல்லை என்பது உண்மைதான்!

தேர்தலில் தொகுதி உடன்பாடு செய்துகொண்டு, இங்குள்ள தோழமைக் கட்சிகள் அனைத்தும் இடம் பெறக்கூடிய நிலை உருவாகிட, நடைமுறை வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்பதை நான் வருத்தமுடன் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை - கடந்த 1996-ம் ஆண்டு தேர்தலில் தி.மு.க. 18 இடங்களிலும், த.மா.கா. 20 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி 2 இடங்களிலும் போட்டியிட்டு 39 இடங்களில் வெற்றி பெற்று, ஐந்தாண்டுக்காலம் பதவிப் பொறுப்பில் இருந்திருக்க வேண்டியதற்கு மாறாக - திடீரென ஒன்றரை ஆண்டுக்காலத்திற்குள்ளாக இன்னொரு தேர்தல் என்றதும், தி.மு.க.வுக்கும், த.மா.காவுக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கும் ஏற்கனவே இருந்த தொகுதிகளை, புதிதாக இந்த அணியில் இணைய விரும்பிய மார்க்சிஸ்ட் கட்சிக்கும், ஜனதா தளத்திற்கும், மற்ற கட்சிகளுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டு விட்டது.

நாடாளுமன்றத்தில் எந்தவொரு இடமும் இல்லாமல் இந்தத் தேர்தல் களத்தில் இறங்கியுள்ள அ.தி.மு.க. போன்ற கட்சிகள் வேண்டுமானால், தங்களுக்குச் சரிபாதிக்கு மேற்பட்ட தொகுதிகளை வைத்துக்கொண்டு மீதித் தொகுதிகளில் அவற்றின் தோழமைக்கட்சிகளுக்குத் தாராளமாகக் கொடுக்கும் வாய்ப்பு பெற்றவைகளாக இருக்கலாம்.

ஆனால் நமது கூட்டணியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே 1996-லேயே 40 தொகுதிகளில் சரி பாதி 20 தொகுதிகள் த.மா.கா.வுக்கு எனப் பகிர்ந்துகொண்டு எஞ்சிய 20 தொகுதிகளில் 2 தொகுதிகளில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியுடன் பகிர்ந்துகொண்டு 18 தொகுதிகளில் தி.மு.க. என்ற நிலையில் தேர்தல் களத்தில் இறங்கியவர்கள்.

இப்போதுகூட இந்திய கம்யூனிஸ்டு தொகுதிகள் இரண்டில் ஒன்றை மார்க்சிஸ்ட் கட்சியுடன் பகிர்ந்து கொள்ளுமாறு இரு கட்சிகளின் தலைவர்களுடனும் நானே நேரடியாக வலியுறுத்திக் கேட்டுக் கொண்டேன். இருப்பதில் ஒன்றை இழக்கக்கூடிய சூழலில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு வரும் ஏப்ரல் திங்களில் நடைபெறும் ராஜ்ய சபா தேர்தலில் ஒரு இடம் தரப்படுமென்ற உறுதியும் அளித்தேன். ஆனால் அவர்களும் சரி! மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும் சரி! ஆலோசித்துக் கூறுவதாகச் சொல்லிவிட்டு, பின்னர் அத்தகைய ஏற்பாட்டுக்கு உடன்பட இயலாது என அறிவித்து விட்டனர்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியினருடன் அதுபற்றிக் கழகம் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போதே, மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் ஆறு தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதும் - அவர்கள் வேறு ஒரு புதிய அணி அமைக்கப் போவதாகச் செய்திகள் வெளியிடப்பட்டதும் உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் அறிந்த ஒன்றேயாகும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், ஜனதாதளமும் ஏற்கனவே நமது கூட்டணியில் (தமிழகத்தைப் பொறுத்த வரையில்) இல்லாதவை. அதற்காக இப்போது அந்தக் கட்சிகளோ அல்லது வேறு கட்சிகளோ இந்தக் கூட்டணியில் இடம்பெறக் கூடாது என்பதல்ல. ஆனால் இருக்கின்ற தொகுதிகள் நாற்பதுதான் - இதை எத்தனை தோழமைக் கட்சிகள் பகிர்ந்து கொள்வது என்பதுதான் பிரச்சினை!

இப்போதுகூட தொகுதிகளை அந்தந்தக் கட்சிகளின் விருப்பத்திற்கேற்ப பகிர்ந்துகொள்ளக் கூடிய சாதனையை எங்களால் செய்ய முடியுமானால் எங்களை விட (தி.மு.க. - த.மா.கா.) மகிழ்ச்சியும், மன நிறைவும் கொள்ளக் கூடியவர்கள் யாருமே இருக்க முடியாது.

அப்படியொரு சாதனை, சாத்தியமில்லாமற் போய் இன்றைய தேர்தல் களத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆகிய கட்சிகள் மட்டுமே நமது அணியின் சார்பில் போட்டியிடக் கூடிய நிலை ஏற்படுமென்றால், அப்போதும் தொகுதிகளைப் பெறாமலே கூட நமக்குத் துணை நிற்கும் தோழமைக் கட்சியினர், இந்த நாட்டில் ஊழலும் - மதவெறியும் தலைகாட்டாமல் இருப்பதற்காக தடந்தோள் தட்டித்தான் கிளம்புவர்.

ஒரு வேளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், ஜனதா தளமும் பிறிதோர் அணி அமைத்துப் போட்டியிட்டாலும், அவைகளும் ஒரு பொதுவான குறிக்கோளின் அடிப்படையில், அதாவது ஊழலுக்கு எதிர்ப்பு - மதவாத சக்திகளுக்கு எதிர்ப்பு என்ற அடிப்படையில் நமது தோழமைக் கட்சிகள் என்றே நாம் கருத வேண்டும்.

ஒரே குறிக்கோளுடன், மத்திய ஐக்கிய முன்னணி ஆட்சி அமைய வேண்டுமென்ற நோக்கத்துடன் தேர்தல் களத்தில் இறங்கியுள்ள நமது கூட்டணி, இதே குறிக்கோளுடனும், நோக்கத்துடனும் அமைந்திடும் வேறு கூட்டணிகளுடன் - மோதுதல் அரசியலில் ஈடுபடத் தேவையுமில்லை - ஈடுபடப் போவதுமில்லை!

பொதுப் பிரச்சினைகளில் ஒரு காலத்தில் சந்திக்க நேரிடும் என்ற தொலை நோக்குடன், அரசியலிலாகட்டும் அல்லது வேறு எந்தத் துறைகளிலாகட்டும் அணுகுமுறைகள் இருக்க வேண்டுமென்பதைக் கடந்த கால அனுபவங்களில் இருந்து கற்றுக் கொள்வதே சாலச் சிறப்பாகும். எதிர்காலமாவது ஆக்கபூர்வமானதாக அமைந்திட வேண்டுமென்ற ஆசையுடன்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

இதே உணர்வுடன், பிப்ரவரி 2-ஆம் நாள் அலை கடலை வெற்றி கொள்ள, அணி அணியாக வந்திடுக சென்னைக்கு என்று உன்னையும், தமிழ்நாட்டு மக்களையும் அழைக்கின்றேன்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக என்பார்களே! அதேபோல நமது கழகம், வலிவும், பொலிவும் பெறுவதை ஒவ்வொரு நாளும் கண்டுணர்ந்து களிப்பிலாடும் கான மயிலாகின்றேன்.

ஒரே எதிரி ஊழல் ராணிதான் என்று எந்தக் கடற்கரையில் நடைப்பயண முடிவில் படை முகத்துப் பெருவீரர் போல் ஓங்கிக் குரலெடுத்து முழக்கினார்களோ! அவர்கள் இன்று அந்த ஒரே எதிரியின் மாளிகை முகப்பில் மண்டியிட்டு மனுக் கொடுப்பது கண்டு மனங்கலங்கியவர்கள் - மானத்திற்கு மதிப்பளிப்பவர்கள் - பெரியார் பெயரையும், அண்ணா பெயரையும் உச்சரித்து நம்மைப் பெரும் ஏமாற்றத்துக்கு ஆளாக்கி விட்டார்களே என்ற ஆதங்கத்துடன், அண்ணா அறிவாலயம் நோக்கி அன்றாடம் ஆயிரம் ஆயிரமாய் அணி வகுத்து வந்த வண்ணமிருக்கின்றனர்.

அவர்களையெல்லாம் நான் ஆரத்தழுவிக் கொண்டு அண்ணா அறிவாலயத்து உடன்பிறப்புகளுடன் அவர்கள் சங்கமம் ஆவதை எத்துணை அக மகிழ்ச்சியுடன் காண்கிறேன் தெரியுமா?

பிரிந்தோர் கூடுகின்றனர் - சிதறிய குடும்பம் ஒன்று சேருகின்றது - ஆம்! திராவிட இயக்கம் இன்னும் பல மடங்கு வலுப்பெறுகிறது! வளருகிறது, வளருகிறது, வளர்ந்து கொண்டே இருக்கிறது!

அந்த மகிழ்ச்சி பொங்கிட உன்னையும் உன்போன்ற உடன்பிறப்புகளையும், தமிழ்ப் பெருமக்களையும் பிப்ரவரி 2-ஆம் நாள் கடற்கரைக் கூட்டத்திற்கு மீண்டும் மீண்டும் அழைக்கின்றேன்.

வா! வா! கடற்கரை அழைக்கிறது! கழகக் கண்மணியே வா!

அன்புள்ள,

மு. க.

(28-01-1998)

2399. என் நம்பிக்கைக்கு நல்ல துணை நீதானே!

உடன்பிறப்பே,

ஆங்காங்கு கடலெனத் திரண்டு தி.மு.க. – த.மா.கா. இந்திய கம்யூனிஸ்டு வேட்பாளர்கள், வேட்பு மனு அளித்த நிகழ்ச்சிகள், கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்திருக்கின்றன.

அதனைக் கண்ட மாற்றார் மனம் புழுங்கி, மத்திய அமைச்சர் அருணாச்சலம் போன்றவர்களையும், மாநில அமைச்சர் பிச்சாண்டி போன்றவர்களையும் ஏசிப் பேசியது மட்டுமல்லாமல், எதற்கும் துணிந்த நிலையில் தாக்குகிற அளவுக்கும் போயிருக்கின்றனர் என்ற செய்திகளை ஏடுகளில் காண முடிகிறது. எனக்கும் தகவல்கள் வந்துள்ளன.

அதுமட்டுமல்லாமல், நெல்லையில் த.மா.கா.வைச் சேர்ந்த அன்பு என்பவரை, நெஞ்சில் அன்பெனும் உணர்வு சிறிதும் இல்லாதவர்கள் அடித்து, வதைத்து ஆற்றிலே தூக்கியெறிந்திருக்கிறார்கள். அந்தக் கொலைகாரர்கள் மீதும், கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு கடமைப்பட்டிருக்கிறது.

எத்தகைய சூழ்நிலையிலும் - எதிர்ப்பாளர்கள் எரிச்சல் கொண்டு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டபோதிலும் - நமது கூட்டணியைச் சேர்ந்து உடன்பிறப்புகள் அமைதி காத்து, ஜனநாயகம் வென்றிட ஒத்துழைக்க வேண்டியது, இதுபோன்ற நேரங்களில் மிகமிக முக்கியமான தேவையாகும்.

திட்டமிட்டுத் தேர்தல் பணிகளுக்குக் குந்தகம் விளைவிக்கவும் - வாக்காளர்களையும், பொதுமக்களையும் மிரட்டிப் பீதி அடையச் செய்யவும் - அராஜக அமளிகளில் ஈடுபடுவோர் யாராயினும், அவர்கள் மீது நடுநிலை தவறாமல் காவல்துறையினர் நடவடிக்கை எடுத்திடக் கடமைப்பட்டுள்ளார்கள்.

தி.மு.கழகம் தேர்தலில் ஈடுபடலாமா - வேண்டாமா என்பது குறித்து 1956-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் பொதுமக்களின் கருத்தை வாக்குச் சீட்டுகள் வாயிலாக அறிந்தபோது, நமது அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையை நீயும், நானும் மறந்திருக்க முடியாது.

ஓட்டு முறை - வேட்டு முறை எனும் இரண்டு முறைகள், ஆட்சிமன்றத்திற்குச் செல்வதற்குக் கடைப்பிடிப்பதுண்டு. எனினும், நமது இந்தியா போன்ற ஜனநாயக நாடுகளில் வேட்டு முறை வெறுத்து ஒதுக்கப்பட்டு, ஓட்டு முறை மூலமே ஆட்சிகள் அமைகின்றன. ஜனநாயக நெறியில் முழு நம்பிக்கையுள்ள கழகம், மக்களாட்சி மாண்பு நிலைத்திடவும் செழித்திடவும் - ஓட்டு முறையையே விரும்புகிறது எனும் கருத்தினை பேலட்டா? அல்லது புல்லட்டா? Ballet or Bullet? என்று ஆங்கிலத்திலேயே கேட்டு - அதற்குத் தமிழாக்கமாக ஓட்டுமுறையா? அல்லது வேட்டு முறையா? என்று வினா எழுப்பி, விடையும் விளக்கமாக அளித்தார் ஓட்டுமுறையே உலகிற் சிறந்தது என்பதற்கு!

அந்த முறையின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடக் களத்தில் இறங்கியுள்ள கட்சிகள், மக்களின் ஆதரவைப் பெருவாரியாகப் பெறும் நம்பிக்கையை இழந்துவிடுகிற நிலையில், தமது கட்சிகளில் வம்பு செய்வதற்கெனவே வளர்க்கப்படுகிற வன்முறைக் கும்பல்களைத் தூண்டிவிட்டு அமைதியைக் குலைத்து, ரத்தச் சகதியில் வெற்றிக் கொடியை நட்டுப் பார்க்கலாம் என்று முனைவது, இறுதியில் பெரும் ஏமாற்றத்தையே அந்தக் கட்சிகளுக்குத் தரும்.

எனவே, அமைதிப்பூங்காவில் அமளி நடத்தத் துணிந்திடுவோர் யாராயினும் அவர்களை அலட்சியப்படுத்திவிட்டு, நமது கூட்டணியில் உள்ள உடன்பிறப்புகள் அனைவரும் - தங்களின் ஒற்றுமையை மேலும் பலப்படுத்திக்கொண்டு, உறுதியுடன் அணிவகுத்து, உதயசூரியன், சைக்கிள், கதிர் அரிவாள் சின்னங்களின் அமோக வெற்றிக்குத் தூய தொண்டாற்றிடத் தோளொடு தோள் சேர்ந்து கிளர்ந்தெழுக!

இன்றுடன் வேட்பு மனு தாக்கல் நிறைவடைகிறது - நமது அணியைப் பொறுத்தவரையில், 27.1.98 அன்று மாங்காடு எனும் சிற்றூரில் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு. மூப்பனார்

அவர்கள், தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து, கழக வேட்பாளருக்கு ஆதரவு திரட்டியுள்ளார்.

இன்று 29.1.1998 கழகத்தின் தேர்தல் அறிக்கை அண்ணா அறிவாலயத்தில் வெளியிடப்படுகிறது. அதே நிகழ்ச்சியில் தம்பி டி. ராஜேந்தர் தயாரித்துள்ள தேர்தல் பிரச்சார ஒலிநாடாவும் வெளியிடப்படுகிறது. ஏற்கனவே திரைப்படத் தயாரிப்பாளர் அழகப்பன் முயற்சியில் தேர்தல் பிரச்சாரப் பாடல்களின் ஒலிநாடா வெளி வந்துள்ளது.

பிப்ரவரி 2ஆம் நாள், சென்னைக் கடற்கரையில் பிரதமர் கலந்துகொள்ளும் தேர்தல் பிரச்சாரக் கூட்டம்.

பிப்ரவரி 3-ஆம் நாள் காலையில் நமது ஆருயிர் அண்ணன் துயிலுமிடத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி! ஆண்டுதோறும் நடைபெறுவது போல அமைதியாக! ஆர்ப்பாட்டம் இன்றி!

அதேநாளில் இளைஞர் அணியினர் நடத்த இருக்கும் சைக்கிள் ஊர்வலப் பிரச்சாரம்; மாநில முழுதும் தொடங்கி 3-4-5 நாட்களில் எழுச்சியுடன்! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரம் நெஞ்சில் தாங்கியவாறு!

இவற்றைத் தொடர்ந்து நானும், கழக முன்னணியினரும் உன்னையும், தமிழ்ப்பெருமக்களையும் காண நேரில் வருகிறோம்.

நடப்பவைகள் எல்லாமே நல்லவைகளாக நடக்கட்டும் - நடக்குமென்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு!

அந்த நம்பிக்கைக்கு நல்ல துணையாக இருப்போர் உன்போன்ற உடன்பிறப்புகள்தானே!

அன்புள்ள,

மு. க.

(29-01-1998)

2400. வாழுமோ நஞ்சு உமிழும் வஞ்ச நெஞ்சம்?

உடன்பிறப்பே,

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை முடிந்து, 26 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்கான புலன் விசாரணை நடத்திய சிறப்புப் புலனாய்வுத் துறை இயக்குநர் திரு. கார்த்திகேயன் அவர்கள் தீர்ப்பு வழங்கப்பட்டதையொட்டிச் செய்தியாளர்களைச் சந்தித்த போது 'வாய்மையே வெல்லும்' என்று தனது பேட்டியைத் தொடங்கி, இந்தக் கொலைக்கான சதியில் விடுதலைப் புலிகளைச் சார்ந்தவர்களே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் - இதில் அரசியல்வாதிகள் யாருக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

இருப்பினும், நஞ்சு நிறைந்த தனது வஞ்சக நெஞ்சத்தின் வெளிப்பாடாக, ஜெயலலிதா ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் கருணாநிதி, சிதம்பரம் மற்றும் சிலரையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும். கூண்டில் ஏற்ற வேண்டும் என்று கொக்கரித்திருக்கிறார். இந்த வாசகம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவரவில்லை. இந்து, தினமணி, தினமலர் ஏடுகளில் மட்டும் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்த்தேன். இந்த விஷம்கக்கும் வாக்கியத்தை வெளியிடக் கூடாதென்று மற்ற ஏடுகள் எண்ணியிருக்கக்கூடும். இப்படியும் விஷம்கக்கக் கூடியவர்தான் இந்தப் பெண்மணி என்பதை உலகம் தெரிந்து கொள்ளட்டுமே என்ற நல்ல எண்ணத்துடன் இந்த ஏடுகள் அந்த வாக்கியத்தை வெளியிட்டிருக்கலாமென்றே நம்ப வேண்டியுள்ளது. அங்ஙனமாயின், அதற்காக அந்த ஏடுகளுக்கு நன்றி கூறத்தான் வேண்டும்.

வி.என். ஜானகி அம்மையார், மோரில் விஷம் கலந்து கொடுத்து எம்.ஜி.ஆர். அவர்களைக் கொன்று விட்டார் என்று

பத்திரிகைகளுக்குப் பகிரங்கமாகவே பேட்டி கொடுத்து, அதற்குப் பிறகு, தேர்தல் சின்னத்தைப் பெறுவதற்காகவே ஜானகி அம்மையாருடன் பேரம் பேசிய பெண்மணிதான், ஜெயலலிதா என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஜெயலலிதா மட்டுமல்ல! ராஜீவ்காந்தி கொலையுண்ட அடுத்த கணமே அந்த இடத்தை விட்டுச் சில கனமான கரன்சி நோட்டுப் பெட்டிகளுடன் மாயமாய் மறைந்துவிட்டதாக அப்போது பேசப்பட்டவரும் - வர்மா கமிஷன் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவருமான - மாஜி காங்கிரஸ்காரர் ஒருவரும், துபாய் புகழ் காங்கிரஸ்காரர் ஒருவரும் கூட இந்தத் தீர்ப்பையொட்டி தங்களுக்கேயுரிய தீ நாக்கு கொண்டு நம்மைத் திட்டித் தீர்த்துள்ளனர்.

ஜெயின் கமிஷன் விசாரணை நடக்கும்போது அந்தக் கமிஷனில் வாக்கு மூலம் தந்தவர்களில் சுப்பிரமணியம் சுவாமியும் ஒருவர் என்பதை நாடறியும்.

அவர் தந்த அந்த வாக்குமூல வரிகள் ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையில் இடம்பெறத் தவறவில்லை.

> "கொலைக்கு முன்பும், பின்பும் ஜெயலலிதா, விடுதலைப்புலிகளின் கொள்கைப் பிரச்சாரகராகவே விளங்கினார். ராஜீவ்காந்தியின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டாமென்று ஜெயலலிதாவுக்கு விடுதலைப்புலிகள் முன்கூட்டியே தகவல் தெரிவித்திருந்ததால், அ.தி.மு.க.வும், காங்கிரசும் கூட்டணி வைத்திருந்த போதிலும், ராஜீவ்காந்தியுடன் இணைந்து தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஜெயலலிதா கலந்து கொள்ளவில்லை. விமான நிலையத்திற்கு அவரை வரவேற்கவும் செல்லவில்லை."

இவ்வாறு ஜெயின் கமிஷனில் சுப்பிரமணியம்சுவாமி அவர்கள், கொடுத்துள்ள சாட்சியத்தை மக்கள் மறந்துவிடுவார்கள் என்று ஜெயலலிதா எண்ணிக் கொண்டு, அறிக்கை வெளியிடுவது என்பது அவரது அபார அறிவுடைமைக்கு ஓர் அருமையான எடுத்துக்காட்டு என்றுதான் கூறவேண்டும்.

உடன்பிறப்பே,

ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை வந்தபோது, நாட்டில் உள்ள ஏடுகள் என்ன எழுதின - கட்சித் தலைவர்கள் பலர் என்ன கருத்து தெரிவித்தனர் - என்பதையெல்லாம் தொகுத்து சென்னை சிந்தனையாளர் மன்றத்தினர் 'ஜெயின் அறிக்கை - புதைக்கப்பட்ட உண்மைகள்' என்ற தலைப்பில், தமிழிலும், ஆங்கிலத்திலுமாக இரு புத்தகங்கள் வெளியிட்டுள்ளதை நீ படித்திருக்கக் கூடும்.

அவற்றில் சிலவற்றை உன் நினைவுக்கும், தமிழ் மக்கள் அனைவரின் நினைவுக்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

> ''நான் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்தேன். கருணாநிதியுடன் எனக்குக் கருத்து வேறுபாடுகள் உண்டு என்பது வெளிப்படை. ஆனால், நான் ஒருபோதும் தி.மு.க.வையோ, கருணாநிதியையோ கொலை வழக்கில் தொடர்புபடுத்தியதில்லை. அதற்கான எந்த ஆதாரமும் என்னிடமில்லை.

இவ்வாறு 13.11.1997 அன்று, முன்னாள் பிரதமர் சந்திரசேகர் அவர்கள், கூறியதாக இந்து ஏட்டில்தான் செய்தி வெளிவந்துள்ளது.

> "ராஜீவ்காந்தி படுகொலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுப்பாளியாக்க முடியாது என்று மூத்த அரசியல் தலைவர் சி. சுப்பிரமணியம் இன்று கூறினார்."
>
> "பாதுகாப்பு அம்சத்தை, கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட ஸ்ரீபெரும்புதூரில் 1991 மே மாதம் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்த காங்கிரஸ் கட்சிதான் அதற்குப் பொறுப்பு என்று அவர் கூறினார்."

இது 14.11.1997 அன்று யு.என்.ஐ. செய்தியாக வெளியாகியுள்ளது.

> * "முன்னாள் வெளியுறவுத் துறை செயலாளர் திரு. ஜே.என். தீட்சீத் அவர்கள், தன்னுடைய அசைன்மெண்ட் ''கொழும்பு'' என்ற நூலில், இந்திய அமைதிப்படை இலங்கையில் தனது நடவடிக்கையைத் தொடங்கிய பின்னரும்கூட அ.தி.மு.க. முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் கணிசமான நிதி உதவியினை விடுதலைப் புலிகளுக்கு அளித்து வந்தார் என்று

தெரிவித்துள்ளார். மத்திய அமைச்சரவை செயலகத்தின் கீழ் செயல்பட்ட 'ரா'வும் கூட, பிரதமரின் நேரடி கண்காணிப்பில் இருந்தாலும், விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து தொடர்பு வைத்திருந்தனர் என்றும், இந்திய அமைதிப்படையினருக்கும், 'ரா' அமைப்பினருக்கும் இடையே சரியான ஒருங்கிணைப்பு இருக்கவில்லை என்றும் கூறியுள்ளார்."

இலங்கையில் இந்தியத் தூதுவராகப் பணிபுரிந்து, பின்னர் இந்தியாவில் வெளியுறவுத் துறை செயலராக இருந்த அவர் கூறிய மேற்கண்ட குற்றச்சாட்டுகள் மிகக் கடுமையானவை. ராஜீவ் காந்தி மற்றும் எம்.ஜி.ஆர். அரசுகளின் கொள்கைகள், இந்திய மண்ணில் விடுதலைப் புலிகள் தங்கு தடையின்றி நடமாடுவதை அனுமதித்தன என்பது தெளிவாகிறது. ராஜீவ் காந்தியைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் அடங்கிய இடுப்புக் கச்சையைத் தயாரித்த சிவராசன், இந்திய வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டவர்.

1983 முதல் 1989 வரை இத்தகைய நிலை இருந்திருக்கையில், 1990-ல் ஒருசில மாதங்களே பதவியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது, தற்பொழுது ராஜீவ்காந்தி கொலைக்காகக் குற்றச்சாட்டைச் சுமத்துவது முற்றிலும் நியாயமற்றது.

இவ்வாறு டைம்ஸ் ஆப் இந்தியா இதழ் தன்னுடைய 25.11.1997 தேதியிட்ட தலையங்கத்தில் எழுதியுள்ளது.

* நீதிபதி ஜெயின் கூறியிருக்கும் போராளிகளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி முக்கியமாகச் சுயபாதுகாப்புக்காகத்தான். ராணுவ நடவடிக்கைகள் எடுப்பதற்கோ அல்லது போராளிக் குழுக்களுக்கிடையே மோதல்களை ஊக்குவிப்பதற்கோ அல்ல என்ற கருத்து அப்பாவித்தனமானது. இக்கருத்து ஒவ்வாதது..... இலங்கை அரசியலமைப்புச் சட்ட வரம்பிற்குள் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ராஜீவ் நிர்வாகத்தின் கீழிருந்த மத்திய அரசு தொடர்ந்து தெளிவாக இருந்ததாக நீதிபதி ஜெயின்

தெரிவித்திருக்கும் முடிவு அபத்தமானது..... புது டெல்லியில் உள்ள அரசு எப்போதும் தேச விரோதியாக விடுதலைப் புலிகளை அறிவிக்கவில்லை.....

..... மத்திய அரசின் கொள்கை அடிப்படையிலேதான் விடுதலைப்புலிகள் மற்றும் இதர போராளிகள் இயக்கம் தமிழகத்தில் செயல்பட்டு வந்தன.

இவ்வாறு இந்து பத்திரிகையில் 27.11.1997 அன்று மாலினி பார்த்தசாரதி அவர்கள் தனது கட்டுரையிலே கருத்து தெரிவித்திருந்தனர்.

* "இன்றுள்ள சூழ்நிலையில், ஜெயின் கமிஷன் தமிழர்களுடைய உணர்வுகளைப் புண்படுத்தியதற்காக குறைந்தபட்சம் மன்னிப்பாவது கோர வேண்டும்."

இது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை 24.11.1997 தேதியிட்ட தலையங்கத்தில் தெரிவித்துள்ள கருத்தாகும்.

*"தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளின் கொலை வெறிச்செயலுக்கு, தி.மு.க.வைச் சேர்ந்தவர்களில் யார் யார் உதவி புரிந்தார்கள் என்று தனித்தனியாகச் சுட்டிக்காட்டியிருந்தாலன்றி, ஜெயின் அறிக்கையின் முடிவுகள் ஏற்கனவே தெரிந்தவற்றைத் தவிர, புதிய உண்மைகள் எதையும் வெளிக் கொணராது"

இவ்வாறு இந்துஸ்தான் டைம்ஸ் இதழ் தனது 12.11.1997 தேதியிட்ட தலையங்கத்தில் எழுதியுள்ளது.

* "தங்களுடைய இதயத்தில் இந்தியாவின் நலன்களுக்கு இடம் கொடுக்காதவர்கள்தான் ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையைத் தீவிரமாக எடுத்துக் கொள்வார்கள். நாட்டின் நலன் என்பது காங்கிரசின் நலன்கள் அல்ல. அது இந்தியாவின் தேச ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பாதிக்கக் கூடிய மிகவும் ஆபத்தான அம்சங்கள் கொண்ட அரசியல் ஆவணம். 66 மாதங்கள் விசாரணைக்குப் பிறகு அளிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கை, ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் எந்தவிதமான சதியும் இருப்பதாகக் கூற முடியாமல் தோல்வி

அடைந்து விட்டது. அதற்கு மாறாக சீக்கியர்களையும், தமிழர்களையும் பற்றி ஆதாரமற்ற, கடுமையான குற்றச்சாட்டுகளைக் கூறி, அந்த இரு சமுதாயங்களைப் பற்றியும் மிகவும் இழிவுபடுத்தும் கருத்துகளைத் தெரிவிக்கும் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். சதித்திட்டத்துக்கு எந்தவிதமான ஆதாரத்தையும் காட்ட முடியாத ஜெயின், எளிதான வழியில் தமிழ் நாட்டில் உள்ள தமிழ்ச் சமுதாயம் முழுவதையும் ராஜீவ் கொலைக்குக் குற்றம்சாட்டியுள்ளார்."

இவ்வாறு பா.ஜ.க. தலைவர் வாஜ்பாய் அவர்கள், ஜலந்தரில் 23.11.1997 அன்று நடைபெற்ற செய்தியாளர்கள் பேட்டியின் போது கருத்து தெரிவித்துள்ளார்.

இவற்றுடன், நாடாளுமன்றத் தேர்தலுக்காக, நமது கழகம் 29.1.1998 அன்று மாலை வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பகுதியையும் கேசரி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள், கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்பதைவ் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்போது, வெளியாகியிருக்கும் நீதிமன்றத் தீர்ப்பு கொலைக்கான சதி உள்ளிட்ட அனைத்துக் குற்றங்களையும் செய்தோருக்குத் தண்டனை விதித்திருப்பது, கேசரி காங்கிரஸ், அரசியல் ஆதாயம் தேட எத்தகைய மலிவான அரசியலில் ஈடுபட்டது என்பதையும், கொஞ்சமும் மனிதத் தன்மையின்றி எத்தகைய கொடுமையான பழியைச் சுமத்த முயன்றது என்பதையும்; அதே நேரம் இந்திய ஜனநாயகத்தில் சட்டத்தின் ஆட்சி சர்வ வல்லமை பெற்றது என்பதையும், அதன் பீடு நடையை, அற்ப அரசியலும், அராஜகத் தீவிரவாதமும் தடுத்து நிறுத்திட முடியாது - என்பதையும் உலகிற்கு உணர்த்துவதாக இருக்கிறது.

எனவே, செய்ய வேண்டிய பாவங்களையெல்லாம் செய்துவிட்டுப் பிறகு காலம் கடந்து மன்னிப்பு கேட்கும் பாவ மன்னிப்பு கேட்பாளர்களின் கூடாரமாகிவிட்ட கேசரி காங்கிரஸ், ஒரு நல்லாட்சியைக் கவிழ்த்த பாவத்திற்கும் பொறுப்பேற்றுக் கொள்வதோடு, 700 கோடி ரூபாய்ச்

செலவில் நடைபெற இருக்கும் தேவையற்ற இந்த திடீர்த் தேர்தலுக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

இல்லை, இல்லை! கோர்ட்டார் தீர்ப்பைவிட கமிஷன் அளித்த ஆதாரமற்ற பிதற்றல்தான் உயர்ந்தது! - என்று கூறுவோர் கேசரி காங்கிரசில் இன்னும் இருப்பார்களேயானால், திருமதி இந்திராகாந்தியின் படுகொலைக்குத் தனி ஒரு நபர் உடந்தையாகவும் - உட்கையாகவும் - அக்கொலைக்குக் காரணமாகவும் இருந்தார் - என்று தக்கர் கமிஷன் பெயர் சொல்லிக் குற்றஞ்சாட்டியிருக்கிறதே! அவர் மீது இதுவரை அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன? - என்கிற வினாவை மக்கள் மன்றத்திலும், உகந்த நீதிமன்றங்களிலும் எழுப்பிப் பரிகாரம் காணத் தவறமாட்டோம்.

இதுதான் உடன்பிறப்பே, ராஜீவ்காந்தி கொலையை அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்த முனையும் கேசரி காங்கிரசாருக்கும் - ஜெயலலிதா போன்றவர்களுக்கும் சுட்டிக்காட்டப்படும் விளக்கமும், எச்சரிக்கையும் ஆகும்.

அன்புள்ள,

மு. க.

(31-01-1998)

2401. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்!

உடன்பிறப்பே,

ஜெயின் கமிஷன் அறிக்கையையொட்டி கருணாநிதியும், ப. சிதம்பரமும் நீதிமன்றக் கூண்டில் ஏற்றப்படவேண்டும் என்ற கருத்தைத் தனது அறிக்கையில் மட்டுமின்றி - ஜெயலலிதா, தனது கட்சியின் தேர்தல் பிரகடனத்திலும் வலியுறுத்தி வெளியிட்டுள்ளார்.

ஜெயின் கமிஷனைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு, அவர் மக்களைத் திசை திருப்ப முயற்சி செய்வதற்குக் காரணம் என்னவென்று புரிகிறதா?

* ஐந்து ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தபோது மட்டும், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டபடி அறுபத்தி நான்கு கோடி ரூபாய்ச் சொத்து சேர்த்ததற்காக ஜெயலலிதா மீதுள்ள வழக்கு.

* நிலக்கரி இறக்குமதியில் 6.5 கோடி ரூபாய் ஊழல்.

* அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை வாங்கிய ஊழல் - வாங்கிய விலையிலும் இரண்டே முக்கால் கோடி ரூபாய் ஊழல்.

* கிரானைட் கற்கள் குத்தகை விட்டதில் 75 கோடி ரூபாய் ஊழல்.

* டாமின் கிராபைட் சுத்திகரிப்பு ஆலை ஒப்பந்தப்புள்ளி ஊழல் - ஆறரை கோடி ரூபாய்.

* கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே ஓட்டல் அனுமதி வழங்கிய ஊழல்.

* ஸ்பிக் பங்கு விற்பனையில் 28 கோடி ரூபாய்க்கு மேல் ஊழல்.
* கிராமங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வாங்கியதில் 12 கோடி ரூபாய் ஊழல்.
* மீனா விளம்பர ஏஜன்சி ஊழல்.
* இலவச வேட்டி சேலை ஊழல்.
* சுடுகாட்டுக் கொட்டகைகள் ஊழல்.
* சிறுவர்களுக்குக் காலணி வழங்கியதில் ஊழல்.

இப்படிப் பல கோடி ரூபாய்க்கான ஊழல்கள் ஜெயலலிதா ஆட்சியில் நடைபெற்று, மாமல்லபுரத்துச் சாலையில் மட்டும் அரண்மனை போன்ற முப்பது பங்களாக்கள் - கொடைநாடு தேயிலை எஸ்டேட் ஏழு கோடி ரூபாயில் - அந்நியச் செலாவணி மோசடியில் 3 லட்சம் டாலர் (ஒரு கோடி ரூபாய்) வங்கியில் போடப்பட்டது - என்பதாகப் பட்டியலிடப்படும் பல கோடி ரூபாய் ஊழல் முடைநாற்றத்தை மறைக்கலாமென்றுதான், ஜெயின் கமிஷன் என்ற சென்ட் தெளிக்கப் பார்க்கிறார்.

இலங்கைப் போராளிகளுக்கு இந்தியாவில் உள்ள இ. காங்கிரஸ் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளுமே 1983 முதல் ஆதரவும், அனுதாபமும் காட்டி வந்துள்ளன.

அதிலும் குறிப்பாக, அவர்களுக்குப் பிரதமர் இந்திரா காந்தி காலத்திலேதான் நாடு முழுவதும் பயிற்சி முகாம்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இப்படி அவர்களுக்கு உதவி புரிந்தவர்களை வரிசையாகப் பட்டியலிட்டுக் காட்ட முடியும். இது வரலாற்று உண்மை.

அவ்வளவு ஏன்? இதே ஜெயலலிதா, சென்னை மாநகரில் பத்மநாபாவும், அவரது தோழர்களும் 1990 ஜூன் மாதம் படுகொலை செய்யப்பட்ட பிறகு, அதாவது நான்கு மாதம் கழித்தும், அதற்குப்பிறகும் ஆற்றிய உரையிலும், இந்து, எக்ஸ்பிரஸ் ஆகிய ஏடுகளுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டிகளிலும் என்ன சொல்லியிருக்கிறார்? இதோ அவர் சொன்னவை, அப்படியே தரப்படுகின்றன.

*"இலங்கையில் தமிழர்களைக் காப்பாற்ற எதுவும் செய்யாததற்காக, ஜெயலலிதா, மத்திய அரசையும், மாநில அரசையும் (ராஜீவ் காந்தி கலந்து கொண்டு பேசிய பொதுக் கூட்டம் ஒன்றில்) விமர்சித்தார்... இலங்கை அரசுக்கு எதிரான தற்போதைய போராட்டத்தில் விடுதலைப் புலிகள் தோல்வியடைந்தால், அத்தீவில் உள்ள தமிழினம் முழுவதுமே அழிந்துவிடும் என்று அவர் எச்சரித்தார்."

- இந்து பத்திரிகையில் (8.10.1990)

* "சிங்கள ராணுவமும், காவல்துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கம் துணிவான போராட்டத்தில் ஈடுபட்டுச் சிங்கள ராணுவத்தை எதிர்த்துத் தீரத்துடன் போர் நடத்தி வருகிறது. கடந்த இரு மாதங்களில் தமிழ்நாட்டில் புகார் கூறும் அளவுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் நடத்தி வருகின்றது. இது ஒரு அதிதீரமான செயல்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால், இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதும் அழிந்து விடும் என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகளின் வெற்றி இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் வகையில் எதுவும் செய்வதற்குப் பதிலாக, தமிழக முதலமைச்சர் கருணாநிதி, தன்னை பாதுகாத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அவருடைய அனைத்து சக்தி மற்றும் கவனம் முழுவதும் முதலமைச்சரின் நாற்காலியைப் பாதுகாத்துக் கொள்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டு வருகிறது. கருணாநிதியின் மனோபாவம் இவ்வாறிருந்தால், இதற்கு மாறாக வேறுவிதமாக, செயல்படுவதை வி.பி.சிங்கிடம் நாம் எதிர்பார்க்க முடியாது.

இலங்கைத் தமிழர்களின் கதி பற்றி வி.பி.சிங் எந்தவிதக் கவலையும் படுவதாகத் தெரியவில்லை. மாறியுள்ள சூழ்நிலையில் ஒரே மருந்து தமிழ்மக்கள்,

விடுதலைப்புலிகளை ஒட்டுமொத்தமாக ஆதரிப்பதுதான். தனது அதிகாரத்திற்கு உட்பட்ட இயன்ற அனைத்து உதவிகளையும் முதலமைச்சர் வழங்க வேண்டும். மத்திய அரசு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், அதில் குறிப்பிடப்பட்ட விதிகளின்படி, சமாதானத் தீர்வு ஒன்றைக் காண வேண்டும். அல்லது விடுதலைப் புலிகளை இந்திய அரசு நூற்றுக்கு நூறு ஆதரிக்க வேண்டும்."

கேள்வி :- விடுதலைப்புலிகள் இயக்கம் அமைதி ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது. ஆனால் நீங்கள் இன்னமும் விடுதலைப்புலிகளை ஆதரிக்க வேண்டும் என்று கூறுகிறீர்களே?

ஜெயலலிதா :- நம்முடைய முக்கிய நோக்கம் என்ன? தமிழ் இனம் அழிக்கப்பட்டு விடக்கூடாது. இலங்கையில் வாழும் தமிழர்கள் இனப்படுகொலையிலிருந்தும், பூண்டோடு ஒழிக்கப்படுவதிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் விடுதலைப்புலிகள் தவறுகளைச் செய்துள்ளனர். ஆனால், நாம் விடுதலைப்புலிகளை ஆதரிக்காவிடில், அது இலங்கையில் தமிழ் இனத்திற்கு அழிவை ஏற்படுத்தும். அதை நாம் அந்த நோக்கத்தோடு பார்க்க வேண்டும்.

கேள்வி :- எம்.ஜி.ஆர். செய்த அளவுக்கு இல்லாவிட்டாலும், கருணாநிதி விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்யவில்லையா?

ஜெயலலிதா :- அதற்கான எந்தத் தடயத்தையும் நான் காணவில்லை.

- ஜெயலலிதா பேட்டி :-

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் (4.10.1990)

பங்களாதேஷ் பிரச்சினையில் இந்திராகாந்தி செய்ததைப் போல, ராணுவ நடவடிக்கை பற்றி இந்தியா சிந்தித்தால் அதில் தவறு எதுவுமில்லையென்று நான் கருதுகிறேன்.

- ஜெயலலிதா பேட்டி :-

இந்து பத்திரிகையில் (29.4.1991)

எம்.ஜி.ஆர் செய்த அளவுக்கு விடுதலைப் புலிகளுக்குக் கருணாநிதி உதவி செய்தார் என்பதற்கு எந்தத் தடயத்தையும் தன்னால் காண முடியவில்லை என்று எக்ஸ்பிரசுக்கு பேட்டியளித்த ஜெயலலிதாதான் இன்று ஜெயின் கமிஷனைத் தூக்கி வைத்துக் கொண்டு தொபு தொபு என்று குதியாட்டம் போடுகிறார்.

இந்தப் பேட்டிகளில் புலிகள் பற்றி ஜெயலலிதா சொல்லியுள்ளவையனைத்தும், ஜெயின் கமிஷன் முன்னிலையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை - நீதிமன்றம் கூண்டு விசாரணை என்று மிரட்டல் விட்டுப் பிதற்றிக் கொண்டிருக்கும் அந்தப் பெருமாட்டி நினைவு கூர்ந்திடுவது அவருக்கு நல்லது!

சாட்சி சொன்னபோது நீதிமன்றத்தில் பொய்களை மாறிமாறிச் சொன்னார் என்றும், அந்தப் பொய்களைப் பிறகு கண்டுபிடித்து விட்டார்கள் என்றும், யாரைப்பற்றி ஆதாரபூர்வமாக நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அவரைத் தனது சகக் கூட்டணி கட்சித் தலைவராக வைத்துக்கொண்டு, தான் திருடி பிறர் மீது பழி போடுவாள் என்ற பழமொழிப்படி, ஜெயலலிதா சீறிப்பாய்வதை தமிழகம் உணர்ந்து சிரிக்கத்தான் செய்கிறது!

'ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் - உள்ளே இருக்குமாம் ஈரும்பேனும்' என்பது போல, தனது ஊழல்களை மறைத்துத் திசை திருப்பிட, ஜெயினை வைத்துத் தலையில் கொண்டை போடப் பார்க்கிறார் - அந்தக் கொண்டைக்குள் இருக்கிற கோடி கோடி ஊழல்களுக்கு அவர் பதில் சொல்ல வேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை மட்டும் அவர் மறக்காமல் இருக்க வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(01-02-1998)

2402. இனிய முகம் கண்டிட இன்று புறப்படுகிறேன்!

உடன்பிறப்பே,

இன்று (4.2.1998) முதல் வெளி மாவட்டங்களில் உள்ள நமது கூட்டணியின் வேட்பாளர்களுக்குத் தமிழ்ப் பெருமக்களிடம் வெற்றிக்கான ஆதரவு திரட்டப் புறப்படுகிறேன்.

என் வருகையை நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்திருப்பீர்களோ, அதைவிட ஆயிரம் மடங்கு ஆவலுடன் உங்களின் திருமுகங்களைக் காண நான் ஓடிவருகிறேன் என்பதை நீ உணர்ந்திடுவாய் உடன்பிறப்பே!

மத்தியில் ஐக்கிய முன்னணி ஆட்சி மீண்டும் மலர்ந்திடும் என்ற நம்பிக்கையுடன் - மலர வேண்டுமென்ற ஊக்கத்துடன், உற்சாகத்துடன் தேர்தல் களத்தில் நிற்கும் உன்னையும், நாற்பது தொகுதிகளில் நாள் முழுவதும் அயராது பணியாற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்களையும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் செயல்வீரர்களையும், நமது தோழமைக் கட்சிகளான எம்.ஜி.ஆர். கழகம், இந்திய தேசிய லீக், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், அகில இந்திய பார்வார்டு பிளாக், சூப்பர் ஸ்டார் ரஜினி ரசிகர் மன்றம், தீரனின் பாட்டாளி மக்கள் கட்சி, மனித உரிமைக் கழகம், அம்பேத்கர் மக்கள் இயக்கம், தமிழ் தேசியக் கட்சி, தமிழ் மாநில முஸ்லிம் லீக், சிறுபான்மையோர் இயக்கம் ஆகிய கட்சிகளின் செயல்வீரர்களையும் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் செயல் வீரர்களையும், அதேநேரம் இரண்டு தொகுதிகள் தவிர்த்து, முப்பத்தெட்டு தொகுதிகளில் நமது கூட்டணியின் வெற்றிக்காக வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்யும் மார்க்சிஸ்ட் கட்சியின் செயல்வீரர்களையும் சந்திக்க இருக்கும் இந்தச் சுற்றுப் பயண நிகழ்ச்சி, முதுமை காரணமாக எனக்கு உடலிலோ, உள்ளத்திலோ தளர்ச்சி ஏற்படவில்லை என்பதை எடுத்துக்காட்டும் எழுச்சிமிகு நிகழ்ச்சியாக இருக்குமென்பதில் எந்தவிதமான அய்யப்பாடுமில்லை என்பேன்.

என் உயிரினும் மேலான உடன்பிறப்பாக நின்று, தோழமைக் கட்சிகளின் இனிய செயல்வீரர்களுடன் அணிவகுத்து என்னை வரவேற்க இருக்கும் உனக்கு, என் பணிவன்பான வேண்டுகோள் சில உண்டு!

நான் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், குறித்த நேரங்களில், குறித்த இடங்களில் மட்டும் நடைபெறுவதற்கு உன்னுடைய ஒத்துழைப்பும், தோழமைக் கட்சி செயல்வீரர்களின் ஒத்துழைப்பும் மிகமிகத் தேவை!

ஆங்காங்கு ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகள் எதுவும் ஆடம்பர விழாக்களாக அமைந்து விடாமல் - எளிமையுடன் அதேசமயம் எழுச்சியுடன் திகழ்ந்திடல் வேண்டும்.

இப்போது கூட பூக்கள் விரித்த தரையிலேதான் பூவையாரின் கார் சக்கரம் சுழல வேண்டுமென, மலர்ப்பாதை அமைத்து அவர்களின் மகாராணியை வரவேற்ற நிகழ்ச்சியொன்று ஏடுகளில் படங்களாக வெளிவந்துள்ளதைக் கண்டேன். இதுவரையில் நீ எனக்கு அளித்திடாத அந்த ஆணவமிகுந்த வரவேற்பை, இப்போதும் அளித்திடமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் ஆர்வக்கோளாறு காரணமாக நீ அவசரப்பட்டு விடக் கூடாதல்லவா! அதற்காக முன்கூட்டியே சொல்லி வைக்கிறேன்.

இன்னொன்று, இப்போது நான் என்னதான் முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருந்தாலும் - தேர்தல் பணிக்காக வருவதால், கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியின் தலைவனாக - நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைத் தொண்டனாகத்தான் வருகிறேன். எனவே, நான் வரும் வழியில் கல்விக்கூடங்களில் பயிலும் மாணவச்செல்வங்கள் இருபுறமும் நின்று என்னை வரவேற்பது என்பது கூடவே கூடாது. மதநல்லிணக்கத்திற்காகவும், மனிதநேயம் வளர்ப்பதற்காகவும் பல இடங்களில் மாணவமணிகளும், ஆசிரிய அன்பர்களும் மனிதச் சங்கிலியாக அணிவகுத்து நின்றது கண்டு நான் மகிழ்ந்தேன் என்பதற்காக, இப்போதும் யாராவது அதுபோல் மாணவர்களைப் பயன்படுத்துவதை அனுமதித்தல் ஆகாது!

தேவையான அளவிற்கு எங்கள் பின்னால் கார்கள் வரவேண்டுமே தவிர, தேர்தல் பணிகளை விட்டு விட்டுப் பல கார்கள் எங்களின் பின்னால் அணி வகுப்பதை அனுமதிக்கக்கூடாது.

கடந்த ஆட்சிக் காலத்தில் அம்மையார் 10 கிலோ மீட்டர் பயணம் என்றால் நூறு கிலோ மீட்டர் தூரம் போக்குவரத்து தடை செய்யப்படுமே! அவ்வாறின்றி, தேவையான பாதுகாப்பு அளவுக்கு மட்டுமே போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

பயணத்திற்காக ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் தவிர, வேறு பாதைகளில் என்னை வரவேண்டுமென்று பிடிவாதம் காட்டினால் - தேர்தல் கமிஷன் நிர்ணயித்துள்ள நேரப்படி நிகழ்ச்சிகளை முடிக்க இயலாத நிலைமைக்குத் தள்ளப்பட்டு, விதிமுறையை மீறிய செயலுக்கு நீயும், நானும் ஆளாக நேரிடும் என்பதால், அந்த முயற்சிகளில் தயவுசெய்து வீண்பிடிவாதம் காட்டக்கூடாது என வேண்டுகிறேன்.

சென்னையில் தேர்தல் பிரச்சார நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது கூட என் சொந்தக்காரில்தான் செல்லுகிறேனே தவிர, அரசாங்கக் காரை நான் பயன்படுத்துவது கிடையாது - அதுபோல என் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளிலும் அரசு இயந்திரங்கள் தவறான முறையில் செயல்படுத்தப்படக்கூடாது என்பதில் நானும் கண்ணும் கருத்துமாக இருப்பேன். நீயும் கவனமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது நிகழ்ச்சியில் கலந்துகொள்கிற - அல்லது எனக்கு முன்போ, அல்லது பிறகோ பேசுகிற சொற்பொழிவாளர்கள் யாராயினும், கண்ணியம் தவறாமலும், கடமை உணர்வுடனும், கட்டுப்பாட்டுடனும் தங்கள் பேச்சுகளை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இது நான் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் மட்டுமல்ல! நானில்லாத எல்லா நிகழ்ச்சிகளிலும் எப்போதுமே கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது.

நமது மனம் புண்படும்படியாகவும் - பொதுமக்களைப் பொய் கூறி ஏமாற்றும் வகையிலும் - அ.தி.மு.க. கூட்டணியில் உள்ளவர்களும், அந்தக் கூட்டணியின் தலைவர் ஜெயலலிதா அவர்களும் பேசி வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அதற்கு நாம் அளிக்கும் பதில், மக்களுக்கு விளக்கமளிக்கும் வண்ணம்தான் இருந்திடல் வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், எந்தப் பெண்ணுக்கும் ஏற்படாத துன்ப துயரங்களை கருணாநிதி எனக்கு ஏற்படுத்தியுள்ளார் என்று மக்களின் முன்னால் ஜெயலலிதா அவர்கள் பேசுகிறார் என்கிறபோது, எந்தப் பெண்ணும்

பிரதமராகவோ, முதலமைச்சராகவோ இருந்து இந்த அளவு ஊழல்கள் புரிந்ததில்லை என்பதை, இருக்கின்ற திட்டவட்டமான ஆதாரங்களுடன் நமது சொற்பொழிவாளர்கள், மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

எனது ஆட்சியில் ஒரு குண்டு வெடித்ததற்கே ரஜினிகாந்த் அப்படித் துள்ளிக்குதித்தாரே! இப்போது இத்தனை குண்டுகள் வெடிப்பதற்கு என்ன சொல்கிறார்? என்று சூப்பர் ஸ்டார் - தம்பி ரஜினி அவர்களை ஜெயலலிதாவும் அவரது அணியினரும் தரக்குறைவாகத் தாக்குகிறார்கள் என்பதற்காக, நமது அணியின் சொற்பொழிவாளர்களும் அதேபாணியில் இறங்கி விடாமல், உரிய பதிலை விளக்கமாக அளிக்க வேண்டும்.

ஜெயலலிதா ஆட்சியில் ஒரு குண்டுதானா வெடித்தது?

சென்னையிலே சேத்துப்பட்டில் உள்ள ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தின் கட்டிடம் குண்டு வெடிப்பில் தூள் தூளாகி 11 பேர் மாண்டு போனது எப்போது? 8.8.1993 அன்று ஜெயலலிதா ஆட்சியில்தானே?

அது மாத்திரமல்ல! ஜெயலலிதா ஆட்சியில் குண்டுகள் வெடித்தது இதோ ஆண்டு வாரியாக!

24.6.1991 முதல் 31.12.1991 வரை மாத்திரம் நடைபெற்ற வெடிகுண்டு சம்பவங்களின் எண்ணிக்கை 26 - இதிலே கொல்லப்பட்டவர்கள் : 5 பேர்; காயம் அடைந்தவர்கள் : 25 பேர்.

1992-ஆம் ஆண்டு நடைபெற்ற வெடிகுண்டு சம்பவங்களின் எண்ணிக்கை 67. இதிலே கொல்லப்பட்டவர்கள் : 10 பேர்; காயமடைந்தவர்கள் : 98 பேர்.

1993-ஆம் ஆண்டு நடைபெற்ற வெடிகுண்டு சம்பவங்களின் எண்ணிக்கை 47. இறந்தவர்கள் : 43 பேர்; காயம் அடைந்தவர்கள் : 62 பேர்.

1994-ஆம் ஆண்டு நடைபெற்ற வெடிகுண்டு சம்பவங்களின் எண்ணிக்கை 32. கொல்லப்பட்டவர்கள் : 29 பேர்; காயம் அடைந்தவர்கள் : 29 பேர்.

1995-ஆம் ஆண்டு நடைபெற்ற வெடிகுண்டு சம்பவங்களின் எண்ணிக்கை 89. இறந்தவர்கள் : 40 பேர்; காயம் அடைந்தவர்கள் : 127 பேர் -

1996-ஆம் ஆண்டு 1.1.1996 முதல் 12.5.1996 வரை நடைபெற்ற வெடிகுண்டுகளின் சம்பவங்களின் எண்ணிக்கை 72. கொல்லப்பட்டவர்கள் : 8 பேர்; காயமடைந்தவர்கள் : 53 பேர்.

ஆக, இந்த அம்மையார் ஆண்ட ஐந்தாண்டு காலஆட்சியில் நடைபெற்ற வெடிகுண்டு சம்பவங்களின் எண்ணிக்கை 333. அதிலே இறந்தவர்கள் : 135 பேர்; காயம் அடைந்தவர்கள் : 394 பேர்.

10.7.1995 அன்று இயக்குநர் மணிரத்தினம் வீட்டு முகப்பிலேயே வெடிகுண்டு வெடித்தது. 11.7.1995 அன்று சேலம் வாழப்பாடியிலே குண்டு வெடித்து எட்டு பேர் மாண்டார்கள்.

இயக்குநர் மணிரத்தினம் வீட்டிலும் குண்டு வெடித்தபோதுதான் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தனது வேதனையை தெரிவித்தார். அப்படி அவர் வேதனை தெரிவித்தபோது அந்த மேடையில் இருந்த அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் அவரை மறுத்துப் பேசிக் கண்டிக்கவில்லை என்பதற்காக ஆர்.எம்.வீ. அவர்கள் ஜெயலலிதா ஆட்சியில் எப்படியெல்லாம் தூற்றப்பட்டார்; எத்தகைய கொடுமைகளை அவர் சந்திக்க நேரிட்டது. இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி, இப்போது குண்டுவெடிப்புகளை யார் கண்டித்தாலும் அவர்களை இந்த அரசு கண்டிப்பதில்லை என்பதையும், ஏற்ற நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படுகின்றன என்பதையும் விளக்கிட வேண்டும்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள், மணிரத்தினம் வீட்டில் குண்டு வெடித்தது என்பதற்காக மட்டுமல்ல! ஜெயலலிதா ஆட்சியில் நடைபெற்ற கோடிகோடியான கொள்ளைகளையும், ஊழல்களையும், திருத்திக் கொள்ளுமாறு வேண்டிக் கேட்டும் கூட, திருந்த மறுத்த - அதற்கு மாறாக எல்லோரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசியதையும் பார்த்துத்தான், ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஆண்டவனால்கூட இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது, என்று மனம் குமுறிச் சொன்னார் என்பதை மீண்டும் ஒருமுறை மக்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

இப்படி அடக்கமாக - அமைதியாக - அவசரமோ ஆத்திரமோ இல்லாமல், ஆயிரமாயிரம் நிகழ்ச்சிகள் அம்மையாரின் அய்ந்தாண்டு கால ஆட்சியில் அக்கிரமமாக நடந்துள்ளவைகளை, அடுக்கடுக்காகவும் மறுக்க முடியாத ஆதாரங்களுடனும் மக்கள்

மன்றத்தின் முன் வைக்கக் கூடிய பேச்சாற்றல் படைத்தவர்கள் நிரம்ப உண்டு நமது அணியில்!

நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, அந்த மேடைகளில் மட்டும்தான் இவற்றைக் கூறிட வேண்டுமென்பதல்ல! திண்ணைகளில் அமர்ந்து நாலுபேர் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளும் போதும், திரையரங்குகளுக்குச் சென்று கொண்டிருக்கும் போதும், படம் முடிந்து திரும்பி வரும்போது சந்திக்கும் நண்பர்களுடன் உரையாடும் போதும், பெரியவர்களை, தாய்மார்களை, ஆசிரியர்களை, மாணவர்களை, அரசு அலுவலர்களை, விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் என்ற எல்லாப் பிரிவு மக்களையும் காணும்போதும் நடத்தும் உரையாடல்களிலேயே, நாடு நலமுடன் திகழ்வதற்கான உண்மை விபரங்கள் பலவற்றை விளக்கலாம். அத்துடன் நஞ்சு நினைப்பாளர்கள் வஞ்ச நெஞ்சமுடன் நாட்டைக் கெடுக்க முனையும் கேட்டினையும் களைந்திட வாரீர் என அனைவரையும் நம்முடன் இணைக்கலாம்.

உன்னையும், கூட்டணியின் செயல்வீரர்களையும், மாநிலம் முழுதும் அலைஅலையாய்த் திரள இருக்கும் என் அன்புக்குரிய தமிழ்த் திருநாட்டுப் பெருமக்களையும் காணப் புறப்படும் அவசரத்திலும், ஆர்வத்திலும் எழுதப்படும் கடிதம் இது!

எழுதியவை மட்டுமின்றி, எழுதாமல் விடுபட்டுப் போயுள்ளவற்றையும், நமது அணியின் ஏற்றமிகு வெற்றிக்காக, நீயே சிந்தித்துச் செயல்படுத்தத் தவறமாட்டாய் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு! அந்த நம்பிக்கையுடன் உன் இனிய முகம் கண்டிட இன்று புறப்படுகிறேன்.

இந்தக் கடிதத்தை எழுதி முடிக்கும்போது இன்னொரு இனிய செய்தி! ஜனதா தள மாநிலத் தலைவர் வடிவேலு அவர்கள், ஜக்கிய முன்னணி வெற்றி பெறத் தமிழகத்தில் நமது கூட்டணிக்கு ஜனதா தளமும் ஆதரவளிக்கும் என்று அறிக்கை விடுத்துள்ளார்.

அன்புள்ள,

மு. க.

(05-02-1998)

2403. ஊமையோ, செவிடோ; என் உடன்பிறப்புதான்!

உடன்பிறப்பே,

நீயும், நானும், நாடும், ஏடும் எதிர்பாராத அளவுக்குத் தமிழகத் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததையொட்டி ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் உன் போன்ற உடன்பிறப்புகளாலும், மற்றும் கட்சிச் சார்பற்ற பெருமக்களாலும் எனக்கு எழுதப்பட்டவைகளை வழக்கம் போல் ஒன்று விடாமல் படித்துப் பார்த்தேன். அனைத்தும் ஆறுதல் கூறும் மடல்களாக இருப்பதோடு, தேர்தல் முடிவுக்கு அவரவர்களுக்கும் தோன்றிய காரணங்களை உள்ளடக்கியவைகளாகவும், அறிவுரை, தெளிவுரை மிக்கவைகளாகவும் விளங்குகின்றன.

எல்லாக் கடிதங்களிலும் ஆழமாகப் பதிந்து கிடக்கும் ஓர் உணர்வினை, இதோ இலால்குடியிலிருந்து ஓர் உடன்பிறப்பு எழுதியுள்ள கடிதத்தின் வாயிலாக நீயும், நானும் புரிந்து கொள்ள முடியும்.

அந்தக் கடிதத்தை, அவர் கைப்பட எழுதியதை அப்படியே இணைத்துள்ளேன்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுக்கு எழுதுவது. தேர்தல் முடிவுகளால் தாங்கள் கவலைப்பட வேண்டாம். என்னைப் போல இலட்சக்கணக்கான ஊமை, செவிடு தங்களுக்கு உடன்பிறப்புகளாக உள்ளனர். நானே தற்கொலை செய்து கொள்ளலாம் என்று நினைத்தேன். தாங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம்.

அன்பு உடன்பிறப்பு
பி. அருள்தனசாமி
(ஊமை, செவிடு)
பெரியவர் சீலி அஞ்சல்
இலால்குடி தாலுக்கா, திருச்சி.

தேர்தல் முடிவு காரணமாக எனக்கு ஏற்படாத கலக்கம் இந்த உடன்பிறப்பின் கடிதத்தைப் படித்த போது ஏற்பட்டது. ஊமையாக, செவிடாக இருக்கிற ஓர் உடன்பிறப்பு இத்துணை உணர்ச்சி வயப்பட்டுள்ளாரே என்பதை நினைத்துக் கலங்கியபோது, எங்கும் பரவியுள்ள உன் போன்ற உயிரினுமேலான உடன்பிறப்புகள் எத்துணை உணர்ச்சி வயப்பட்டிருப்பீர்களோ என்ற கவலையும் என்னைக் கவ்விக் கொள்ளாமல் இல்லை.

இரண்டு மூன்று கழகக் கண்மணிகள் தீக்குளித்து மாண்டனர் என்ற செய்திகளையும் ஏடுகளில் கண்டு அதிர்ந்தேன். அந்த வட்டாரத்துக் கழக நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறிடவும் அனுப்பி வைத்தேன். உணர்ச்சி வசப்பட்டுத் தீக்குளித்திடும் இந்த முறையை நமது கழகம், தொடர்ந்து கண்டித்து வருகிறது எனினும், அதனையும் மீறி சில ஆருயிர் உடன்பிறப்புகள் தமது ஆவியை இவ்வண்ணம் போக்கிக் கொள்ளும் செய்திகள் என் சிந்தையில் தீக்கொளுத்திக் கருக்கிடுகிறது என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்து - இம்முறையை இனியும் யாரும் உணர்ச்சி மேலிட்டுக் கையாண்டிட வேண்டாமெனக் கண்டிப்பாகவும், மன்றாடியும் கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் களமாயினும் - அறபோர்க் களமாயினும் - எதிலும், எந்த நிலையிலும் சோர்வடையாமல் தொடர்ந்து பணியாற்றும் ஆற்றலும், உறுதியும் படைத்தவர்கள் நமது கழகச் செயல்வீரர்கள் என்பது வரலாறாக இருக்கும் போது, அதற்கு மாறாக ஒரு சிலர் உணர்ச்சி வயப்படத் தேவையில்லை. தேவையே இல்லை.

தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளிவந்தவுடன் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள் கூட்டத்தில் நான் பல விளக்கங்களை அளித்த பிறகு, இறுதியாக ஒரு நிருபர் என்னைப் பார்த்து, இந்த முடிவு காரணமாகச் சோர்ந்திருக்கும் உங்கள் கட்சித் தொண்டர்கள் என்று தொடங்கி, ஏதோ கேட்க முனைந்தார். அப்போது நான் குறுக்கிட்டு என்ன சொன்னேன் தெரியுமா?

அவர்கள் சோர்ந்திருக்கவில்லை. எந்த நிலையிலும் என்னுடன் சேர்ந்தே இருக்கிறார்கள்.

இந்தப் பதிலைச் சொல்லும்போது எனக்கே ஒரு பெருமிதம் - உன் ஒளி பொருந்திய விழிகள், ராஜ குடும்பத்தில்

பிறக்காவிட்டாலும் உனக்கேயுரிய அந்த ராஜ கம்பீரம் இவைகள்தான் என் மனக்கண்ணின் முன்னால் தெரிந்து எனக்கு மேலும் தெம்பூட்டின! என்றைக்குமே தெம்பூட்டிக் கொண்டிருக்கின்றன!

இலால்குடியிலிருந்து உருக்கமிகு மடல் ஒன்றை ஓரிரு வரிகளில் எனக்கு எழுதிய அந்த (ஊமை, செவிடு) உடன்பிறப்பைப் பற்றி, தம்பி நேருவிடம் விசாரித்தறிந்தேன். கடிதத்தையும் காட்டினேன். அந்த உடன்பிறப்பு, ஏதோ எனக்கு ஒரு கடிதம் எழுதியதுடன் தனது பணியை முடித்துக் கொள்பவர் அல்லவாம். அப்படிச் சிலர் நம்மிலே உண்டு. ஆனால் ஊமையாய்ச் செவிடாய் இருக்கும் இந்த உடன்பிறப்பே, ஒவ்வொரு நாளும் - ஒவ்வொரு மணித்துளியும் கழகத்திற்காக ஓடியாடி உழைப்பவராம்.

உணர்வுகளால் பேசுகிறார்;
அதனால் அவர் ஊமையல்ல!

சிந்தனைப் பொறி அடைபடவில்லை;
அதனால் அவர் செவிடுமல்ல!

இதனைக் கேட்ட பிறகு, இதுவரை உழைத்துக் கொண்டிருக்கும் கழக உடன்பிறப்புகளுக்கு இன்னமும் ஊக்கத்துடன் ஓய்வறியாமல் உழைத்திட வேண்டுமென்ற ஆர்வம் தோன்றும், அக்கறை பெருக்கெடுக்கும்.

ஓரிருவர் உழைக்காமலேயே உழைப்பது போல் காட்டிக் கொண்டிருப்பவர்களுக்கோ, வெட்கம், பிடுங்கித் தின்னும்!

நிலையான ஆட்சியொன்று மத்தியில் அமைந்திடுமென்ற எதிர்பார்ப்புடன் வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள், நேர்மையான கழக ஆட்சிக்குத் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளதை எண்ணி மகிழ்வோம் என்பது, ஏதோ உன்னையும் என்னையும் சமாதானப்படுத்திக் கொள்வதற்காக அல்ல! இந்த இரு வெற்றிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள தோல்விகளை, வெற்றிக்கான படிகளாக ஆக்கிக் கொள்ள வேண்டிய உறுதியை, இந்தத் தேர்தல் முடிவு நமக்கு வழங்கியிருக்கிறது என்பதை மறவாமல் நமது பணியைத் தொடருவோம்.

அன்புள்ள,

மு. க.

(12-03-1998)

2404. வாழப்பாடி நினைவில் வந்ததும் வராததும்!

உடன்பிறப்பே,

மதிப்புக்குரிய நண்பர் வாழப்பாடியார் அவர்கள், மாண்புமிகு மத்திய அமைச்சராகி விட்டார். மகிழ்ச்சிதான் எனக்கு. வாழ்த்துகிறேன். பாராட்டி வரவேற்கிறேன்.

வாஜ்பாய் அவர்களின் அரசுக்கு நாடாளுமன்றத்தில் வலிமை கூடி, வெற்றி பெற்றுவிட்ட அதே சூட்டோடு சூடாக சென்னை மாநகரில் அடியெடுத்து வைத்த வாழப்பாடியார் அவர்கள், வந்ததும் வராததுமாக நம்மீது அர்ச்சனைப்பூக்களை வாரியிறைத்திருப்பதைக் கண்டு நான் ஒன்றும் அதிர்ந்து போய்விடவில்லை. உனக்கும் அந்த நிலை ஏற்பட்டிருக்காது என்றே நம்புகிறேன்.

பழைய வரலாற்றுச் செய்திகள் பலவற்றைச் சொல்லி, தனக்குரிய அபாரமான ஞாபக சக்தியை அவர் வெளிப்படுத்திக்கொண்டிருப்பது உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும்.

> "பாம்புக்குப் பால் வார்த்தது போல கருணாநிதி விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு கொடுக்கத் தொடங்கினார்"

இப்படி இன்று வாழப்பாடியார் சொல்வது உண்மையோ அல்லவோ! அவர் நம்மீது தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிற குற்றச்சாட்டு இது!

அடுத்து அவர் தி.மு.க. ஆட்சி இன்னும் எத்தனை நாட்கள் நீடிக்கும் எனக்கேட்டு, அதிக நாள் நீடிக்காது எனப் பொருள்படும்படியாகத் தனது ஜனநாயகக் குரலை ஓங்கி உயர்த்தி ஒலித்திருக்கிறார்.

இதுவும் அவர் நீண்டகாலமாக நமக்கு விடுத்து வரும் சாபம்தான்! அந்தச் சாபங்கேட்டு நான் சங்கடப்படவில்லை - சங்கடப்படவும் மாட்டேன்! ஏனெனில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுவதும், சோதனைச் சூறாவளிகள் சுழன்றடிப்பதும், மீண்டும் புதிய வலிவுடன் கழகம் கம்பீரமாக எழுந்து நிற்பதும் கடந்த கால அனுபவங்கள்!

அவர் இன்னும் சிலவற்றை நினைவுபடுத்தியிருக்கிறார். 'நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக!' என்று நான் அன்று கூறியதும் - சர்க்காரியா கமிஷனையும் - அன்றைய வழக்குகளை அரசியல் ரீதியாக இந்திராகாந்தி நம்மீது தொடர்ந்த காரணத்தினால்தான், அரசியல் ரீதியாகவே அந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன என்பது போன்ற தனது கண்டுபிடிப்புகளையெல்லாம் - தனது பழைய நினைவாற்றலுடன் இணைத்து அவர் பேசியுள்ள பாங்கு வியந்து போற்றுதற்குரியது என அவரது தொண்டர்களும், ஆதரவாளர்களும் புகழ்ந்து கூறிடத்தான் செய்வர்.

ஜெயலலிதா மீதுள்ள வழக்குகளில் கருணாநிதியின் சட்டம் தனது கடமையைச் செய்யட்டும் - டெல்லியில் அரசியல், தனது வேலையைக் காட்டும் என்று வாழப்பாடியார் அறைகூவல் விட்டிருப்பது பிரதமர் வாஜ்பாய் அவர்களைக் கலந்து விடுத்த அறைகூவலாக இருக்க முடியாது.

ஏனெனில் சி.பி.ஐ. (C.B.I.) பணிகளில் அரசியல் தலையீட்டை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள், நேற்றுத்தான் லக்னோவில் செய்தியாளர்கள் பேட்டியில் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

ஆனால் ஒன்று உடன்பிறப்பே! விடுதலைப்புலிகள் - சர்க்காரியா கமிஷன் - என இத்தனை விஷயங்களை நினைவாற்றலுடன் வெளியிட்டிருப்பதாகத் தனக்குத்தானே பெருமை கொண்டும் - தன்னைப் பின்பற்றுபவர்களைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியுமுள்ள வாழப்பாடியார் எனும் அந்தப் பெருமகனார், வேறு சில பழைய நிகழ்வுகளை மிக வசதியாக மறந்திருப்பாரோ என்பதற்காக இதோ சிலவற்றை அவரது சீரிய சிந்தனைக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

1994-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ஆம் நாள் என்பது மிக நீண்டகாலத்துக்கு முந்தைய ஆண்டல்ல என்பதை நீயும்,

நானும் இந்த நாடும் நன்றாகவே அறியும். அதாவது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு! அந்த நன்னாளில் - அந்த சுபயோக சுப தினத்தில் - அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடியார் அவர்களின் தலைமையில் - மிக நீண்ட புகார் மனு ஒன்று ஆளுநர் சென்னாரெட்டி அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அந்த மனுவில் அடங்கிய குற்றச்சாட்டுகளின் பட்டியல் பெரிய ராமாயணம் - மகாபாரதம் அளவுக்கு நீண்டுகொண்டே போனவை!

அதில் ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். நினைவாற்றல் மிக்க வாழப்பாடியார் அவர்கள், தனது அபாரமான நினைவாற்றலுடன் இவற்றையும் இணைத்துக்கொள்வார் என்று எதிர்பார்ப்புடன்!

> "ஜெயலலிதா தலைமையிலே நடைபெறும் அ.இ.அ.தி.மு.க. அரசு ஊழல் மயமானது. முதலமைச்சரே தன்னுடைய பதவியைப் பயன்படுத்தி சொத்துகளைக் குவித்துக் கொண்டிருக்கிறார். முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் திட்டமிட்டுச் சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டுள்ளார்கள். மாநிலத்தில் ஊழல் மயமான சூழ்நிலைதான் உலவுகிறது. விடுதலைப்புலிகள் மிகவும் தீவிர நடவடிக்கையிலே ஈடுபட்டுள்ளார்கள்"
>
> (16.3.1994 அன்று வாழப்பாடியார் ஆளுநரிடம் கொடுத்த மனுவில் குறிப்பிட்டது.)

பாம்புக்குப் பால் வார்த்தது போல விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தந்தார் கருணாநிதி - அந்தப் பாம்புகள் ராஜீவ்காந்தியைக் கொன்று விட்டன என்று குற்றம்சாட்டும் மாண்புமிகு வாழப்பாடியார் அவர்கள், 1994 மார்ச் திங்கள் 16-ஆம் நாள் ஆளுநர் சென்னாரெட்டி அவர்களிடம் கொடுத்த மனுவில் விடுதலைப் புலிகளைப் பற்றியும், ஜெயலலிதா ஆட்சியைப் பற்றியும் என்னக் கூறியுள்ளார் தெரியுமா? அந்தப் பட்டியலை அவரே மீண்டும் ஒருமுறை தனது கண்களால் காணட்டும்.

> விடுதலைப் புலிகள், சென்னையிலும் குறிப்பாக தலைமைச் செயலகம் வரையிலே தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, அதற்குச் சான்றாக ஒரு பட்டியல் வாழப்பாடியார் கொடுத்துள்ளார். அந்தப் பட்டியல் வருமாறு :-

1. 9.11.1992 அன்று மதுரை அருகே உள்ள மேலூர் சிறைச்சாலையிலிருந்து யோகிராஜ் மற்றும் சந்திரன் ஆகிய இரண்டு போராளிகள் தப்பிவிட்டார்கள்.

2. 16.11.1992 அன்று வேலூர் சிறைச் சாலையிலிருந்து 16 இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தப்பிவிட்டார்கள்.

3. 17.11.1992 அன்று வேலூர் சிறைச்சாலையிலிருந்து போராளிகள் ரஞ்சித், குமார், மகேந்திரன் ஆகியோர் தப்பி விட்டார்கள். (8.1.1993 அன்று இவர்கள் மீண்டும் பம்பாயில் கைது செய்யப்பட்டனர்.)

4. 8.4.1993 அன்று விடுதலைப்புலிகளுக்குச் சீருடை விநியோகம் செய்த சக்திவேல் என்ற விடுதலைப்புலி சேலம் சிறைச்சாலையிலிருந்து தப்பினார்.

5. 29.4.1993 அன்று விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் கிருபன், ரவி மற்றும் சந்திரன் ஆகியோரைக் காவலர்கள் சென்னையிலிருந்து புதுக்கோட்டைக்கு அழைத்துச் சென்றபோது - மாமண்டூரில் காவல் துறையின் பிடியிலிருந்து தப்பி விட்டார்கள். ஆயுதங்களை வைத்திருந்த கூட்டம் ஒன்று ஒரு காவலரைச் சுட்டுக் கொன்று விட்டு - பத்மநாபா கொலை வழக்கிலே முக்கிய குற்றவாளியான கிருபனை தப்புவித்துக் கொண்டு சென்றுவிட்டார்கள்.

6. 8.5.1993 அன்று விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் ஆல்பர்ட், அந்தோணி, வில்சன், ரவீந்திரன் மற்றும் லோகநாதன் ஆகியோர் காஞ்சிபுரம் சிறையிலிருந்து தப்பிவிட்டார்கள்.

7. 16.5.1993 அன்று ராஜீவ்காந்தி கொலை வழக்கிலே முக்கிய சாட்சியான சார்லஸ் என்ற நவாஸ், சைதாப்பேட்டை சிறையிலிருந்து தப்பினார்.

8. 22.5.1993 அன்று விஜயகுமார் என்ற இலங்கைத் தமிழர் திருச்செந்தூர் முகாமிலிருந்து தப்பிவிட்டார்.

29.4.1993 அன்று மாமண்டூரில் நடைபெற்ற சம்பவத்தைப் பொருத்தவரையில் - ஜெயலலிதா கொடுத்த அறிக்கையில் அந்த நிகழ்ச்சிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும் 'ரா' நிறுவனத்தால் நடத்தப்பட்ட கடத்தல் நாடகம் என்றும் கூறினார்.

9. 1993-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் விடுதலைப்புலிகள் என்று சந்தேகிக்கப்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்ட போதிலும்' பிறகு அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லாமல் சுதந்திரமாக விடப்பட்டு விட்டார்கள்.

இத்தனைக் குற்றச்சாட்டுகளுடன் கூடிய அந்தப் புகார் மனுவின் பொழிப்புரையாக வாழப்பாடியார் அவர்கள் கூறியிருப்பது வருமாறு :-

"The Speaker of the Tamil Nadu Legislative Assembly Mr. Sedapatti Muthiah is acting in a high handed manner. The opposition is not allowed to raise the issue of corruption in the Assembly. One Mr. Thamaraikani, MLA is often used by the ruling party to physically attack the opposition members.

Of late there are attempts to silence the Judiciary also. False cases are foisted against the close relative of Judges who discharges their Constitutional duties."

தமிழகச் சட்டமன்றப் பேரவையின் சபாநாயகர் திரு. சேடப்பட்டி முத்தையா அடக்குமுறையான தன்மையில் செயல்படுகிறார். சட்டமன்றப் பேரவையிலே எதிர்க்கட்சிகள் லஞ்சம் குறித்த பிரச்சினையைப் பற்றி எழுப்புவதற்கே அனுமதிக்கப்படுவதில்லை. தாமரைக்கனி என்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஆளுங்கட்சியால் எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தாக்குவதற்காகவே பயன்படுத்தப்படுகிறார்.

தற்போதெல்லாம் நீதித்துறையையும் அமைதிப் படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

அரசியல் சட்டக் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றும் நீதிபதிகளின் நெருங்கிய உறவினர்கள் மீது பொய் வழக்குகளைப் போடுகின்றார்கள்.

"The Chief Minister and other Ministers are looting the State. There is large scale corruption. The Government machinery is silenced. The Police Force is made helpless. The crime rate is alarmingly increasing. People with criminal records are ruling the State and manning various Corporations. There is complete breakdown of the Constitutional Machinery"

முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் மாநிலத்தையே கொள்ளையடிக்கின்றார்கள். மிகப் பெரிய அளவிலே ஊழல் நடைபெறுகிறது. அரசாங்க இயந்திரமே ஸ்தம்பித்து விட்டது. அதிகார வர்க்கம் அமைதியாகி விட்டது. காவல் துறையால் எதுவும் செய்ய இயலவில்லை. குற்ற எண்ணிக்கை ஆபத்தான அளவிற்கு அதிகமாகி விட்டது. குற்றப் பதிவுக்கு ஆளானவர்கள் நாட்டையும், அரசு வாரியங்களையும் ஆளுகிறார்கள். அரசியல் சாசன இயந்திரம் முழுவதுமாக உடைந்துவிட்டது

உடன்பிறப்பே,

பழைய செய்திகள் பலவற்றை நினைவுக்குக் கொண்டு வந்து தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதற்குத் திட்டம் தீட்டப்படுவதாக திருவாய் மலர்ந்தருளியுள்ள மாண்புமிகு வாழப்பாடியார் அவர்கள், 1994 மார்ச் 16-ஆம் நாள் ஆளுநரிடம் தந்த இந்தக் குற்றச்சாட்டுகளின் பட்டியலையும் நினைவிற்கொள்வது நலம்.

அன்புள்ள,

மு. க.

(31-03-1998)

2405. சைதை கிட்டு; செயலில் சிட்டு!

உடன்பிறப்பே,

என் பவள விழாவினையொட்டி, ஜூன் 1ந்தேதி முதல் மகளிர் அணியின் சார்பில் கருத்தரங்கமும், மாணவர் அணியின் சார்பில் சுழலும் சொற்போரும், மீனவர் அணியின் சார்பில் பட்டி மன்றமும், இளைஞர் அணியின் சார்பில் கவியரங்கமும், இலக்கிய அணியின் சார்பில் வாழ்த்தரங்கமும் என நடந்தேறிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல்,

கடல் பொங்கிக் கரையில் வழிந்ததோ எனும் அளவிற்குக் கழகக் கண்மணிகளும், தமிழ்ப்பெரு மக்களும் குழுமியிருந்த பவள விழாப் பொதுக்கூட்டத்தில் -

முத்துச்சிப்பிக்குள் இருந்து நான் வெளிவருவது போன்ற காட்சியை உருவாக்கி, வாழ்த்தலைகளின் முழக்கங்களை என் செவி குளிரக் கேட்கச் செய்து, என் சிரம் நாணிக் குனியுமளவிற்குப் பாராட்டுப் புகழுரைகளை வாரி வழங்கிய சீர்மிகு நிகழ்ச்சியை சென்னையில் நடத்திக் காட்டிய சைதை கிட்டு, பலராமன் எனும் இரு மாவட்டக் கழகச் செயலாளர்களைப் போற்றிப் புகழாதோரில்லை.

அதிலும் 'சைதை கிட்டு செயலில் சிட்டு' எனத்தகும் விதத்தில் ஓடியாடிச் சுழன்று சுழன்று, அல்லும் பகலும் அயராது செய்த பணி என் உள்ளத்தைக் கிறுகிறுக்க வைத்துவிட்டது.

மாநில மாநாட்டை நிகர்த்த அந்த விழாவில், இந்தியத் திருநாட்டின் முன்னாள் பிரதமர் குஜ்ரால் அவர்கள், நான் ஆற்றவேண்டிய கடமையை உணர்த்தினார். நாட்டிற்குத் தேவையான நல்லுரைகளைப் புகன்றார். மத்தியில் இருக்கும் ஆட்சிக்கு அரிய ஆலோசனைகளை மொழிந்தார். அவை யாவும் நாம் வழிமொழியத்தக்கவை.

அத்துடன் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அன்புக்கினிய நண்பர் திரு. மூப்பனார் அவர்கள், என் உழைப்பை வியந்து பாராட்டி, அதனை இளைஞர்களும் கற்றிட வேண்டும், கற்றுச் செயலாற்றிட வேண்டும் என்றதோர் செய்தியை என் பிறந்தநாள் செய்தியாகவே வெளியிட்டார்.

அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஏ.பி. பரதன், துணிந்து நில்! தோள்களை உயர்த்து! நம் தூய உறவு தொடரும் என்று துந்துபி முழங்கினார்.

மார்க்சிஸ்ட் தலைவர்களில் ஒருவரான வரதராசன், என்னை வாழ்த்துவதற்கும், கழகத்தைப் போற்றுவதற்கும் அடிப்படையான காரணங்களை அணியாரமாகக் கோத்துத் தந்தார்.

தியாகச் செம்மல் பெரியவர் செங்கல்வராயன் அவர்கள், அண்ணா காலந்தொட்டு இக்காலம் வரையில், இந்த இயக்கத்தோடு தான் கொண்டுள்ள அன்பிற்குக் காரணங்களை வாழ்த்துரையோடு சேர்த்து வழங்கினார், வெல்லமும் தேன்பாகுமாக!

பாசமும் நேசமும் கொண்ட பண்பிற்குரிய அப்துல் சமது அவர்கள், பழைய நாள் நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்தளித்து அன்பைப் பொழிந்தார். அமுதமாயிருந்தது அது!

அன்பால் என்னைக் குளிப்பாட்டும் அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள், தன் பன்மொழித் திறன் கொண்டு பாராட்டு மழையில் என்னை நனைத்தார்.

அந்நாள் நமது அடிகளாரை நினைவுறுத்தும் அருள்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், என் வாழ்க்கை அத்தியாயத்தில் சில ஏடுகளைப் புரட்டிக் காட்டி என்னைச் சிலிர்த்திடச் செய்தார்.

அருமைச் சகோதரர் ஆர்.எம்.வீ., அந்நாளில் அருமை நண்பர் எம்.ஜி.ஆருக்கும், எனக்கும் இருந்த ஆழமான நட்பை நினைவுக் காட்சிகளாக்கினார்; நெஞ்சு நெகிழ்ந்தது.

நட்பின் பெருமை சொல்லும் கோவை செழியன், இளமைக் காலத்திலேயே ஏற்றுக்கொண்ட இலட்சியப் பயணத்தை விவரித்து என்னை இன்பக் கடலில் மிதக்கவிட்டார்.

ஜனதாதளம் வடிவேலு, கலை இலக்கியங்களை மேற்கோள் காட்டிக் கனிவுடன் என்னைக் கட்டித் தழுவினார்.

பெரியவர் அய்யணன் அம்பலம், திறந்த இதயத்தோடு என் திறமைகளைக் கொஞ்சம் அதிகப்படுத்தியே புகழ்ந்துரைத்தார்.

தம்பி திருநாவுக்கரசு, தனக்கேயுரிய ஆற்றுப்பெருக்கு நடையில் அரசியல் கருத்துகளை எடுத்துக்கூறி, என்னைப் பாச உணர்வால் பிணைத்தார்.

பேராசிரியர் தீரன், முதல் நாள் நடைபெற்ற கவிதை அரங்கிற்கு முத்தாய்ப்பாக ஒரு கவிதை பாடி, கற்கண்டுத் தமிழால் வாழ்த்தி மகிழ்ந்தார்.

அன்புப் பேராயர் எஸ்றா சற்குணம், மத நல்லிணக்கத்திற்கு ஆற்றவேண்டிய எதிர்காலப் பணிகளை நினைவுகூர்ந்து என்னைப் பரவசமுறச் செய்தார்.

வை. பாலசுந்தரம், கடந்த வரலாற்றுச் சுவடிகளையெல்லாம் விரித்துக் காட்டி, என்றும் உண்டு உன்னோடு! எந்தன் தொண்டு என்று உறுதியளித்தார்.

டாக்டர் கிருஷ்ணசாமி, சமூக நீதிக்கும், சமுதாய நீதிக்கும் சலியாது உழைத்திட எஞ்சியுள்ள நாளெல்லாம் பயன்படட்டும் என்று மிஞ்சு புகழுரை ஒன்றை நிகழ்த்தினார்.

எழுத்துலகப் பிதாமகன் ஆசிரியர் சாவி, நெஞ்சில் தேக்கி வைத்திருந்த நெடுநாள் பற்றினையெல்லாம் வெளிக்காட்டி ஒளியேற்றினார் தன் உரைக்கு!

இனமானப் பேராசிரியர், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி, ஆருயிர் இளவல் நாஞ்சிலார், சென்னைக்குத் தந்தை எனக்கு மகன் - மு.க. ஸ்டாலின், இந்திய நாட்டுத் தொழில் அமைச்சர்களில் இவருக்கே முதல் இடம் என்று நிலைத்த புகழ் பெற்ற தம்பி முரசொலி மாறன், நண்பர்கள் நல்லகண்ணு, பீட்டர் அல்போன்ஸ், ஏ.எம். கோபு ஆகியோர் வீற்றிருந்த அந்த எழில்மிகு மேடையில், என்னரும் தம்பி சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அனுப்பிய வாழ்த்தை அவருடைய ரசிகர் மன்றத் தலைவர் சத்தியநாராயணன் படித்தளித்தார்.

நன்றியுரை ஆற்றினார் பலராமன்.

என் இதயம் நிறைந்த மாவட்டக்கழகச் செயலாளர்களாம் இந்த இயக்கத்தின் தளகர்த்தர்களும், அமைச்சர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், பகுதி என்றும், ஒன்றியங்கள்

என்றும், வட்டங்கள் என்றும் அமைப்புரீதியாகப் பணியாற்றும் செயல் தங்கங்களும் எதிரே வீற்றிருந்த காட்சியும், என்னுயிரினும் மேலான உடன்பிறப்பாம் உன் போன்றோர் திரண்டிருந்த காட்சியும், தமிழகப் பெருமக்கள் ஆடவர் பெண்டிரென அலைஅலையாய் வந்து அமர்ந்திருந்த காட்சியும் என் நெஞ்சை விட்டு என்றும் அகலாத காட்சிகள்!

இதற்கெல்லாம் காரணம் என்னை ஆளாக்கிய பெரியாரும், என்னை வழிநடத்திய அண்ணாவும் என எண்ணிப் பெருமூச்செறிந்து, எனைப் பெற்ற தாய் தந்தைக்கு நன்றிகளைக் காணிக்கையாக்கி, என் ஆயுள் இன்னும் கூடத்தக்க அளவிற்கு அற்புதம் விளைவித்த சென்னை மாவட்ட அடலேறுகள் அனைவருக்கும் வாழ்த்தும் வணக்கமும் கூறி சைதை கிட்டு செயலில் சிட்டு என்ற நினைப்போடு, விழாவிற்கு வரவியலாத சூழ்நிலையில் தொலை தூரத்திலிருந்து என்னை வாழ்த்துகின்ற உன் போன்ற உடன்பிறப்புகளுகெல்லாம் என் நன்றியை மீண்டும் மீண்டும் காணிக்கையாக்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(05-06-1998)

2406.விளக்குக! இருள் விலக்க, விளக்காகுக!

உடன்பிறப்பே,

ஜனவரித் திங்கள் முதல் ஏப்ரல் மாதம் முடிய நான்கு மாதங்களில் 120 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 110 இடங்களில் பயங்கரக் கொள்ளைகள் நடைபெற்றுள்ளன. 65 பேர் கடத்தப்பட்டனர். கற்பழிக்கப்பட்ட பெண்கள் 11 பேர். எங்கே தெரியுமா? உத்திரப்பிரதேச மாநிலத்தில் - அதுவும் பாரதீய ஜனதா ஆட்சி நடைபெறும் இடத்தில் - இன்னும் சொல்லப் போனால் அந்த மாநில முழுதுமுள்ள கணக்கல்ல இது! ஒரே ஒரு தொகுதியில், அதாவது லக்னோ நாடாளுமன்ற தொகுதியில் - பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்குப் பெரு வெற்றி தந்துள்ள அந்தத் தொகுதியையும் சேர்த்து உ.பி. மாநிலத்தில் ஆட்சி புரிபவர் பா.ஜ.க.வின் முதலமைச்சர் திரு. கல்யாண்சிங் அவர்கள்தான்! ஆழ்ந்து நோக்கும் போது லக்னோ எனும் அந்த ஒரு நகரத்தில் மட்டும் இந்தப் பொல்லாத புள்ளி விபரப்பட்டியல் வெளியாகியிருக்கிறது. நான்கு மாதங்களுக்கு சுமார் 120 நாட்கள் என்றால், ஒரு நாளைக்கு ஒரு கொலை என 120 கொலைகள் விழுந்திருக்கின்றன! ஒரே ஒரு நகரத்தில்! மற்றும் கற்பழிப்புகள், கொள்ளைகள், ஆட்கள் கடத்தல்கள் - எல்லாமே சேர்த்து 300-க்கு மேற்பட்ட சட்டவிரோத நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

இந்தச் செய்தி எட்டாத தொலைவில் டெல்லிப் பட்டணமும் இல்லை - செய்தியின் கடுமையை உணராத ஆட்சியாளர்களாக டெல்லியில் கோலோச்சுபவர்களும் இல்லை.

அதற்காக எடு 356 அஸ்திரத்தை! விடு உ.பி. மாநில பா.ஜ.க. ஆட்சியின் மீது! என்று செங்கோட்டையிலிருந்து சீற்றம் பிறந்திடவுமில்லை! ஏன்? என்ன காரணம்? அங்கே நடப்பது பா.ஜ.க. ஆட்சி என்பதினாலா? அல்ல! அல்ல! என்பதே என் கருத்து. வேறென்ன காரணம் என்று உன் போன்றோர் கேட்கக் கூடும்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சமாளிப்பது மாநில அரசுக்கு உட்பட்ட ஒன்று என்பதையும், மாநில அரசுக்கு தேவைப்பட்டால் அதற்குத் துணை நின்று சட்டம் ஒழுங்கு காத்திட மத்திய அரசுக்குக் கடமையுண்டே தவிர, அதற்காக 356-ஐப் பயன்படுத்தக்கூடாது என்பதையும் சமீப காலத்திற்கு முன்புகூட சங்கநாதமாக முழங்கிய கட்சிதானே பாரதீய ஜனதா கட்சி! அதனால்தான், உ.பி.யில் லக்னோவில் நான்கே மாதங்களில் தொடர்ந்து நடந்துள்ள நாச காரியங்களைக் காரணம் காட்டி 356 என்னும் கொடுவாளைத் தூக்கிட முன்வரவில்லை.

இதோ இன்னொரு தகவலையும் தெரிவிக்கிறேன். அதாவது நான் தெரிவிப்பதல்ல, மத்திய உள்துறை அமைச்சரும் பா.ஜ.க.வின் பெருந்தலைவர்களில் ஒருவருமான திரு. அத்வானி அவர்கள் நாடாளுமன்றத்தில் ஜூன் 9-ஆம் நாள் எழுத்து மூலமாக அளித்துள்ள பதிலில் தெரிவிக்கப்பட்ட விபரத்தைத்தான் குறிப்பிடுகிறேன். அந்தப் பதிலில் மத்தியப் பிரதேசத்தில் மட்டும் கற்பழிப்பு வழக்குகள் 3117 பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், குறிப்பாக, டெல்லி தலைநகரில் மட்டும் 666 பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்தக் குற்றங்கள் நடைபெற்றது 1997 ஆம் ஆண்டில் - மத்தியப்பிரதேசத்தில் காங்கிரஸ் ஆளுகிறது. டெல்லியில் ஆண்டு கொண்டிருப்பது பா.ஜ.க. கட்சி! இத்தனை கற்பழிப்புகளா? சட்டம் ஒழுங்கு என ஒன்று உயிரோடு இருக்கிறதா எனக் கேட்டு மத்திய அரசு 356 பிரிவை பிரயோகிப்பதற்காக வில்லை வளைக்கவில்லை. காரணம் என்ன? சட்டம் ஒழுங்கு என்பது மாநிலப் பிரச்சினை என்று மத்தியில் ஆட்சியிலிருப்போருக்குத் தெரியுமே; அதனால்தான்!

உடன்பிறப்பே, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாநிலம் பற்றியும் செய்திகள் வந்துகொண்டேதானிருக்கின்றன. அஸ்ஸாமில் குண்டுகள் வைத்துப் பல பாலங்கள் தகர்க்கப்பட்டு, போக்குவரத்தே ஸ்தம்பித்து விட்டது கடந்த வாரத்தில்! ஆந்திர மாநிலத்தில் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கிற அளவுக்கு மதக் கலவரம்! அத்துடன் நேற்று கூட பத்து போலீசார் கண்ணிவெடிக்குப் பலியாகியிருக்கிறார்கள் அங்கே! அதற்காக அஸ்ஸாம் - ஆந்திரா ஆகிய மாநில அரசுகளை வீழ்த்துவதற்கு 356 எனும் விஷக் கணையை ஏவி விட முடியுமா? அந்த மாநில அரசுகள் கோரினால் மத்திய அரசு உரிய உதவிகளை வழங்கவேண்டுமே தவிர,

கலைப்புப் பாணத்தைக் கையில் எடுத்திடுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது?

என்ன செய்வது உடன்பிறப்பே! நியாயங்களின் பக்கம் தலைவைத்துப் படுப்பது கூடத் தவறு என்று பிடிவாதம் பிடிப்பவர்கள் நாட்டில் சில பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். உருக்கத்தால் ஊழலை மறைத்து விடலாம் என்று ஓநாய்கள் அழுவதையும் - வேங்கைகள் உதிரம் சொட்டும் நாக்குடன் வேதாந்த உபதேசம் செய்து கண்ணீர் உகுப்பதையும் - இன்னும் இந்த நாட்டு மக்கள் நாடகம் என்பதையும் - கை தேர்ந்த நடிப்பு என்பதையும் எத்தனை நாளைக்கு உணராமல் இருந்துவிடப் போகிறார்கள்! அந்த நம்பிக்கையுடன் உன் வேக நடை, விவேக நடை, தொடரட்டும்! விளக்க வேண்டியவைகளை விளக்கும் விதத்தில் மக்களிருக்குமிடமெல்லாம் சென்று விளக்கிடும் பணியை மேற்கொண்டிடுக! விளக்காகுக! விரைந்து பொய் இருட்டை விலக்குவதற்கு!

அன்புள்ள,

மு. க.

(12-06-1998)

2407. தேசியத் திட்டத்தில் என்னதான் தேடினாலும்...!

உடன்பிறப்பே,

விழுப்புரத்தில் அண்மையில் நடைபெற்ற பவளவிழாப் பொதுக்கூட்டத்தில், ஒரு குறிப்புக்காக உளுந்தூர் பேட்டை மாரி என்பவரைப் பற்றிச் சொல்லிவிட்டு, அவர் இப்போது எங்கேயிருக்கிறாரோ தெரியாது என்று நான்கூறி வாய் மூடுவதற்குள் அந்தப் பெருங்கூட்டத்தின் நடுவிலிருந்து ஒரு குரல், இதோ இருக்கிறேன் என்று ஒலித்தது மாத்திரமல்ல - அந்தத் தம்பி மாரி இளமை தேய்ந்து முதுமைவாய்ந்த உருவுடன் மேடையை நோக்கி ஓடிவந்து என் கரங்களைப் பற்றிக் கொண்டு கண்கலங்கித் தன் களிப்பைத் தெரிவித்த காட்சி இன்னமும் என் மனத்திரையை விட்டு அகலவில்லை.

உடன்பிறப்பே, அந்தக் கூட்டத்தில் உளுந்தூர்பேட்டை மாரியைப் பற்றி ஏன் குறிப்பிட்டேன் என்பதையும் விளக்கி விடுகிறேன். மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைவதற்கு முன்பு, ஐக்கிய முன்னணி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தி.மு.கழகம், காவேரிப் பிரச்சினையைக் கைகழுவி விட்டது என்றும் - சமூகநீதிக்கான இடஒதுக்கீட்டை மறந்தேவிட்டது என்றும் - ஒருசில கட்சியினர் நம்மீது புழுதி வாரி வீசி, மேடைகளில் முழக்கினர். ஏடுகளில் அறிக்கைகள் விடுத்தனர்.

அவர்களின் கூற்றுப்படி, தி.மு.கழகம் அல்லது தி.மு.க. ஆட்சி, காவிரிப் பிரச்சினையைக் கைகழுவிவிட்டதா என்றால் இல்லை! இல்லவே இல்லை! நடுவர் மன்றம் அமைவதற்கே பெருமுயற்சி எடுத்து, பிரதமராக வி.பி. சிங் அவர்கள் இருந்தபோது அதனை அமைக்கும் நிலை உருவாகி, அதன் இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு ஏற்காத நிலையில், உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று

வரும் வழக்கில் தீவிரமாக வாதாடி வருகிற ஆட்சிதான் தி.மு.க. ஆட்சி! இருந்தாலும் காவேரியைக் கைகழுவி விட்டனர் என்று அந்தச் சிலர் கர்ச்சனை செய்து கொண்டேதானிருந்தனர்.

அதுமட்டுமல்ல! அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் வென்று மத்திய ஆட்சியில் இடம்பெறும் நிலை ஏற்படுமென்றால், தேசியத் திட்டம் ஒன்றைத் தயாரிப்போம் - காவிரிப் பிரச்சினையை அத்திட்டத்தில் இணைத்து உடனடியாகத் தீர்வு காண்போம் என்றும் கொக்கரித்தனர். இடஒதுக்கீட்டை மாநில அளவில் நிர்ணயித்துக் கொள்ள ஒரு தாமதமும் இன்றிச் செயல்படுவோம் என்றும் மார்தட்டிக் கொண்டனர் - தோள்தட்டிக் குதித்தனர்!

இவையும், இவைமட்டுமன்றி வேறு சில தமிழ்நாட்டுப் பிரச்சினைகளும், தமிழ்மக்களின், தமிழ்மொழியின் உரிமைகளும் அத்திட்டத்தில் இடம்பெற்று நிறைவேற்றப்படுமென்றும் முரசறைந்தனர்.

உடன்பிறப்பே, நாடாளுமன்றத் தேர்தலில் வென்றனர் - டெல்லிப் பட்டினம் சென்றனர் - ஆட்சிப் பொறுப்பிலும் பங்கு கொண்டனர்!

தேசியத் திட்டம் தீட்டிய திருவாளர்களே - அத்திட்டத்தில் இடம்பெறுமென்ற காவிரிப் பிரச்சினைக்கான தீர்வு எங்கே? இடஒதுக்கீடு 69 சதவிகிதம் என்ன ஆயிற்று? என்றெல்லாம் இப்போது அவர்களைப் பார்த்துக் கேட்டால் இதோ பார்! இதோ இருக்கிறது! என்றும், உற்றுப் பார், தெரியும் என்றும் கூறுகிறார்களே தவிர, அவை தேசியத் திட்டத்தில் இருக்குமிடமே தெரியவில்லை. அவற்றை நிறைவேற்றிட தி.மு.க. ஆட்சி எடுத்துள்ள நீதிமன்ற வாயிலான முயற்சிகளைத் தவிர, வேறெதுவும் எடுத்திட அவர்கள் முன்வந்ததாகவும் தெரியவில்லை. இதனை நான் விழுப்புரம் கூட்டத்தில் விளக்கும்போதுதான் உளுந்தூர்பேட்டை மாரி நினைவுக்கு வந்தார்.

பல ஆண்டுகட்கு முன்பு, அந்த உளுந்தூர்பேட்டை மாரி அந்த ஊர்ப் பேருந்து நிலையத்திற்கு வந்து போகும் பயணிகளுக்கு உதவியாளராக இருந்து பணியாற்றிய போது, கவியரசு கண்ணதாசனுக்கு நண்பரானார். அவரது வேண்டுகோளுக்கிணங்க கண்ணதாசன், அவரைத் தனது மாலையிட்ட மங்கை திரைப்படத்தில் நடிக்கச் செய்தார் ஓரிரு காட்சிகளில்!

அந்த ஓரிரு காட்சிகளில் பெரும் பகுதி, படத்தின் நீளப் பிரச்சினை காரணமாக வெட்டப்பட்டு, உளுந்தூர்பேட்டை மாரி, ஒரு காட்சியில் ஓரிரு விநாடிகள் மட்டுமே தோன்றக் கூடிய நிலைமை ஏற்பட்டது. அதாவது மின்னல்வெட்டுப் போல தோன்றி மறையும் காட்சி!

இதற்கே அவர் என்ன செய்தார் தெரியுமா? அந்தப் படம் உளுந்தூர்பேட்டையில் திரையிடப்பட்டபோது ஊர் முழுதும் தட்டி எழுதி வைத்தார்.

"உளுந்தூர்பேட்டை மாரி நடிக்கும்
மாலையிட்ட மங்கை திரைப்படம்
காணத்தவறாதீர்!"

இப்படி எழுதப்பட்ட தட்டிகள் ஊர் முழுவதும் வைக்கப்பட்டது மட்டுமல்ல! அந்த மாரி, தனது நண்பர்களைக் கூட்டிக்கொண்டு நாள்தோறும் அந்தத் திரைப்படக் கொட்டகைக்கும் செல்வார் அவரது செலவிலேயே டிக்கெட் எடுத்து!

பாருங்கள், பாருங்கள் - இதோ என் சீன் வரப்போகுது

என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, நண்பர்கள் கண்களை ஏமாற்றிவிட்டு அந்தக் காட்சி, பளிச்சிட்டு அதே விநாடியில் மறைந்து விடும்,

பாவம்! நண்பர்களுக்கும் ஏமாற்றமாயிருக்கும் மாரிக்கும் மன வருத்தமாகத்தானிருக்கும்.

அதைப்போலத்தான் உடன்பிறப்பே; இப்போது தேசியத் திட்டத்தில் தங்கள் திட்டமெல்லாம் இடம்பெற்று நிறைவேறி வருவதாக முன்பு முழங்கியோர் இப்போதும் முழங்குகிறார்கள்! எங்கே நிறைவேறுகிறது? என்று ஆவலுடன் பார்த்தால்,

ஊளுந்தூர்பேட்டை மாரி என்பவர் மாலையிட்ட மங்கை படத்தில்; அவர் நடித்துள்ளதாகத் தெரிவித்த காட்சியை தனது நண்பர்களுக்குக் காட்டி அழைத்துச் சென்ற நிகழ்ச்சிதான் நினைவுக்கு வருகிறது.

இதைத்தான் விழுப்புரம் கூட்டத்தில் நான் வேடிக்கையாகச் சொன்னேன்!

காவிரிப்பிரச்சினையிலும் - இடஒதுக்கீட்டுப் பிரச்சினையிலும் தி.மு.க. ஆட்சி என்ன நிலையெடுத்து அவற்றில் உறுதியாக இருக்கிறதோ, அப்படித்தான் எங்களாலும் இருக்க முடிகிறது

என்பதைத் தவிர, அவர்களால் வேறு விளக்கம் என்ன தர முடியும்!

அவர்கள் கூடி அமர்ந்து வகுத்திட்ட தேசியத் திட்டத்தில், என்னதான் தேடிப் பார்த்தாலும் அதில் தி.மு.க. ஆட்சி எடுத்த உறுதியானதும் - தெளிவானதுமான புதிய நிலை எதையும் காண முடியவில்லையே!

உளுந்தூர்பேட்டை மாரியின் கதை, இதற்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த்தாயா?

அன்புள்ள,

மு. க.

(14-06-1998)

2408. கடமை ஆற்றிடக் கழகக் கண்மணியே எழுக!

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத் தேர்தலையொட்டி நடைபெற்ற குன்னூர், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிகளின் இடைத்தேர்தல்களிலும் - இப்போது நடைபெற்று முடிந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளின் இடைத் தேர்தல்கள் மிகப் பலவற்றிலும் - தமிழக மக்களின் ஆதரவு, கழகக் கூட்டணியின் பக்கம்தான் இருக்கிறது என்பது மிகத் தெளிவாக உணர்த்தப்பட்டிருக்கிறது.

ஆக்கபூர்வ எதிர்க்கட்சிகளின் இலக்கணத்துடன் செயல்படும் நமது தோழமைக் கட்சிகளின் சிறந்த கருத்துகளை மதித்து ஏற்றுக் கொள்வதிலும் - மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்ற முனைந்து முயற்சிகளை மேற்கொண்டு இயன்ற வகையெல்லாம் இடையறாது பணியாற்றி வருவதிலும் - தமிழ் மக்கள் கொண்டுள்ள மனநிறைவின் வெளிப்பாடாகவே இந்த இடைத்தேர்தல்களின் முடிவுகள் அமைந்துள்ளன. மேலும் இவர்களை ஊக்கப்படுத்தினால், நமது தேவைகளை உரிய முறையில் விரைவாகப் பெற்றிட இயலும் என்ற ஆர்வமும், நம்பிக்கையும் மக்களுக்கு இருக்கிறது என்பதையும் அவர்கள் இந்த இடைத்தேர்தல்களில் கழகக் கூட்டணிக்கு வழங்கியுள்ள வெற்றிகளில் இருந்து கணித்திடவும் முடிகிறது.

அந்த மக்களின் நம்பிக்கை சிறுதுளியும் கெடாத அளவுக்கு ஆட்சியில் இருக்கும் நாமும் - உள்ளாட்சி அமைப்புகளின் வாயிலாக, மக்களுடன் மிக நெருங்கியிருக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களும் நடந்து கொள்ள வேண்டும் என்று சூளுரை மேற்கொண்டு, சுழன்று சுழன்று தொண்டு புரிந்திடல் வேண்டும். அதில் தொய்வு என்பதே தலைகாட்டுதல் கூடாது.

எந்த நிலையிலும் - எல்லா நிலைகளிலுமே, அது உயர்வாயினும், தாழ்வாயினும் ஒன்று போலவே சமமாகக் கருதும் உளப்பக்குவத்துடன் உழைத்திடும் உன் போன்ற உடன்பிறப்புகளால்தான் இந்தக் கழகம் இத்துணை வலிவு பெற்றுத் திகழ்கிறது என்பதை ஒருக்கணமும் நான் மறந்தவனல்ல என்பதை நீ அறிவாய்! உணர்வாய்! அதனால்தான் நீ என்னுடனும், இந்தக் கழகத்துடனும் ஒன்றிக் கலந்திருக்கிறாய்!

எத்தனையோ ஏச்சு, பேச்சு, எதிர்ப்புக் கணைகள், அடைமழையெனப் பொழியும் அவதூறுகள், வேதனைகள், சோதனைகள், அச்சுறுத்தல்கள், அனைத்தும் ஈட்டிகள் எனப் பாய்ந்தாலும், ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டுவதும் கோழைத்தனமென்று, எதையும் தாங்கும் இந்த இதயமென்று நிமிர்ந்து நிற்கும் நீயும், நின்போன்ற என் உடன்பிறப்புகளும் கட்டி வளர்த்துக் காத்திடும் கழகமன்றோ இது!

இந்தக் கழகம் கண்ணீரில் பிறந்து, செந்நீர் சிந்தி வளர்ந்து, சிறைக் கோட்டங்கள் பலவற்றை யாத்திரை ஸ்தலங்கள் எனக் கொண்டு இன்றைக்கு நின்று நிலைத்திருப்பதற்குக் காரணமே பெரியாரிடமிருந்து பெற்ற அடிப்படைக் கொள்கைக் உணர்வுகளும், அண்ணாவிடமிருந்து பெற்ற கொள்கை கோட்பாடு பற்றிய அணுகுமுறைகளும்தான் என்பதை நம்மை முழுதும் உணர்ந்தோர் எவரும் மறுத்திட எண்ணிடார்!

> “இந்த என்னுடைய ஆட்சிச் சக்கரம், ஏழை, எளியோர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சாதாரண சாமான்ய மக்கள், நடுத்தர வர்க்கத்தினர் எனப்படும் எல்லாப் பிரிவினரின் நல்வாழ்வையும் மையமாக வைத்துச் சுழலும்.”

என்று, 1967ல் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் அண்ணா அவர்கள் கூறியதைக் கனவிலும் மறவாமல், அவர் வழியில் அயராது நடைபோடும் நமக்கு ஆட்சியென்பது மக்கள் பணியாற்ற ஒரு நல்வாய்ப்பு என்றாலும் கூட, அதனினும் வலிமை வாய்ந்ததும், மேலும் மேலும் வலிமை பெற வேண்டியதும் நமது கழகம் என்ற அடிப்படை உண்மையை மறந்துவிடக் கூடாதல்லவா?

அதனால்தான் நாட்டு ஜனநாயகத்தைக் காப்பதற்காக நெருக்கடி கால நெருப்பில் குளித்து, புடம் போட்ட தியாகத் தங்கமாக வெளிவந்த இந்தக் கழகம், உட்கட்சி ஜனநாயகம்

வளர்ப்பதையும் உயிர்மூச்சாகக் கொண்டு கட்சியின் அடிமட்டத்திலிருந்து தலைமைக் கழகம் வரையில் தேர்தல்களின் வாயிலாகவே நிர்வாகப் பொறுப்புகளில் எவரும் அமர முடியும் என்ற நிலையை அண்ணா காலத்திலிருந்தே கடைப்பிடித்து வருகிறது.

அந்த முறையில் இதுவரையில், கழகத்தின் பொதுத் தேர்தல்கள் பத்து நடைபெற்று, இப்போது பதினோராவது பொதுத் தேர்தலை நடத்திட முனைந்திருக்கிறோம். 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்ட கழகத்திற்கு இது பொன்விழா ஆண்டின் தொடக்கமாகும். ஆம், உடன்பிறப்பே! வரும் செப்டம்பர் திங்களில் இருந்து கழகத்தின் பொன்விழா ஆண்டு ஆரம்பமாகிறது - அதனால்தான் இந்தத் தேர்தலில் கிளைக் கழகம் முதல் தலைமைக் கழகம் வரையில் வாக்களிக்கப் போகிறவர்கள் கழகப் பொன்விழா ஆண்டின் உறுப்பினர்கள் என்ற பெருமையைப் பெற இருக்கிறோம். இதுகுறித்து 25.4.1998 அன்று கூடிய செயற்குழுவிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கழகப் பொன்விழா ஆண்டு உறுப்பினர்கள் சேர்க்கும் பணி, என் பவளவிழா ஆண்டுத் தொடக்கமான ஜூன் திங்களில் ஆரம்பித்து, 31.7.1998க்குள் முடிவடைய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதையும் நினைவிற் கொண்டு உறுப்பினர் சேர்த்தல் - புதுப்பித்தல் ஆகிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அறிவேன். ஆயினும், அப்பணியில் மேலும் தீவிரம் காட்டிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே அறுபது லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது நமது கழகம். அந்த எண்ணிக்கையை மேலும் பெருக்கிடவும், அடித்தளம் இன்னும் பலமாகத் திகழவும் - இந்தப் பேரியக்கமாம் திராவிட நல்லியக்கத்தின் தொண்டுகள் தூய்மையாகத் தொடரவும் - உறுப்பினர்களைச் சேர்த்துக் குறிப்பிட்ட நாளான ஜூலை 31ஆம் நாளுக்குள் தலைமைக் கழகத்தில் சேர்த்திட வேண்டுமென்ற கடமையைத் தவறாது ஆற்றிட கழகக் கண்மணியே எழுக; என அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(22-06-1998)

2409. அடாத புயலிலும்
அகல் விளக்கேந்தி நடப்போம்!

உடன்பிறப்பே,

13.8.1968-ஆம் நாளன்று கும்பகோணம் மூர்த்தி கலையரங்கில் தமிழக அரசு வேளாண்மைத் துறையின் சார்பில் என் தலைமையில் புதிய பாதை எனும் தலைப்பில் கவியரங்கம் ஒன்று நடைபெற்றது.

“முத்தென்றும்
மணியென்றும்
சிட்டென்றும்
சிமிழென்றும்
கண்ணென்றும்
முக்கென்றும்
கணக்கின்றிப்
பெறுதல் விடுத்து
நெல் என்றும்
வரகென்றும்
கரும்பென்றும்
உளுந்தென்றும்
பருப்பென்றும்
எள் என்றும்
கொள் என்றும்
உணவு பெருக்கிடுவீர்!
உற்பத்தி செய்திடுவீர்!”

என்ற கவிதை வரிகளில், வீட்டு நலத்திற்கும், நாட்டு வளத்திற்கும் நான் வேண்டுகோள் விடுத்த கவியரங்கம் அது! அதாவது முப்பது

ஆண்டுகளுக்கு முன்பு! அண்ணாவின் தலைமையில் பொதுப்பணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தபோது!

அந்தக் கவியரங்கில் நான் பாடிய தலைமைக் கவிதையில், ஆறுகளையெல்லாம் இணைத்து நான் எழுதியிருந்த கற்பனைக் கவிதை நடை வரிகளை இன்னமும் மறவாமல் தம்பி துரைமுருகன், பலநேரங்களில் மனப்பாட அளவில் சொல்லி மகிழ்வதை நீயும், நானும் கேட்டு வியந்து போயிருக்கிறோம். நான் எழுதிய கவிதைக்காக அல்ல! நான்தான் கவிஞனே இல்லையே!

பிறகு எதற்காக வியப்பு? முப்பதாண்டுகட்கு முன்பு நான் எழுதியதை இன்றைய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் நினைவில் வைத்துக் கொண்டு ஓர் எழுத்தும் தவறாமல் அப்படியே உச்சரிக்கிறாரே; அதற்காக!

1942-ஆம் ஆண்டு வாக்கிலேயே, அதாவது, ஐம்பத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்பே-

“பரணி பல பாடிப் பாங்குடன் வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிது மிலாச் சுயநலத்துச்
சோதரர்கள் சிலர் கூடி
வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக்
கரணங்கள் போட்டாலும் - அதை எதிர்த்து
மரணத்தின் உச்சியிலே மானங்காக்க
மறத்தமிழா போராடு!”

என்று வசன கவிதை எழுதிய காலந்தொட்டு, கவிதை வரிகளையே கவிதையல்ல எனும் தொகுப்பில் எழுதி வெளியிட்டிருக்கிறேன்.

அதன் தொடர்ச்சி கெடாமலேதான் குடந்தை மூர்த்தி கலையரங்கில் 1968-ஆம் ஆண்டு நடைபெற்ற வேளாண்துறைக்கான கவியரங்கத்தில் பின்வரும் ஒரு கற்பனையை எழுதி வெளியிட்டேன். கும்பகோணம் பகுதியில் குடமுருட்டியாறு என ஒரு ஆறு இருக்கிறது. என் கற்பனையும் அந்த ஆற்றிலிருந்து தொடங்குகிறது.

“குடமுருட்டிக் காவிரிப் பெண்
ஆடுகின்ற காட்சி கண்டு - காதல்

கொள் இடம் இதுதான் என்று; காதல்
கொள்ளிடம் இதுதான் என்று
வீரசோழன் வருகின்றான் ஓடம்போக்கி – என்மேல்
வை,கை என்று வளைக்கின்றான்
வைகை என்று வளைகின்றான் – உன் பல்
மணிமுத்தா என நெளிகின்றான்,
காவிரியோ கண்சிமிட்டி, என்
மன்னியார் வருகின்றாள்
மறைந்திடுக அத்தான் என்றாள் – அவனோ
வரட்டுமே மன்னியார் – நம்
காதலுக்கு அவளென்ன கல்வணையா?
காமினி, பாமினி, நாமினி காதலர்கள்
ஆம் இனி திருமணமென்று
அனைவர்க்கும் சொல்லிவிடு.
காதல் அக்கினியாறுமோ
கண்ணே அருகில் வந்துவிடு.
காதல் அக்கினி ஆறுமோ?
கண்ணே அருகில் வந்துவிடு.
அவளோ
யாரும் நம்மீது தப் பெண்ணார் நம்
காதல் பிரிக்க வெண்ணார் – பிறர்
வெட்டார் நம் உறவெனினும், அத்தான்
வெட்கம் எனைத் தடுக்கு தென்றாள்.
வீரசோழன் விரைந்தணைத்துக் கொண்டவாறு
பாலாறும் முன்னே பருகிடுவோம் என்றான்
மஞ்சளார் முகவதியும் அவன் மடிமீது சாய்ந்தபடி
மணம் எப்போது அத்தான் என்றாள்,
பெரியாறு தலைமையிலே
பெரிதாக நடக்குமென்றான்.

உடன்பிறப்பே, இந்தக் கவிதை வரிக் கற்பனையில் பின்னி வரும் ஆறுகள் தமிழ்நாடு முழுவதும் பரவிப் பாய்ந்து பயிர்களை வளர்த்து உயிர்களையும் வாழவைக்கின்றன.

அவற்றில் பல ஆறுகளையும் - பாசனம் மற்றும் வடிகால் வாய்க்கால்களையும் காவிரி நதி தீரமான சோழமண்டிலத்தில் ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் செம்மையாக்கிச் செழிப்பை உயர்த்திடவும் அரும்பணியொன்றை கடந்த ஆண்டு கழக அரசு தொடங்கியதல்லவா? அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் அந்தப்பணி தொய்வின்றி நடைபெற அதில் ஈடுபட்டோரைக் கண்டிடவும் - நிறைவுறும் பணிகளைப் பார்வையிடவும் - இரண்டு நாட்கள் ஏறத்தாழ ஐநூறு கிலோ மீட்டர் தொலைவு இடைவெளி சிறிதுமின்றிச் சென்று திரும்பியுள்ளேன்.

தூர்வாரும் பணிகளைத் தொண்டு செய்தே பழக்கப்பட்ட ஓய்வறியாத உழைப்பாளி தம்பி கோ.சி. மணி (உள்ளாட்சித்துறை அமைச்சர்) ஒருக்கணமும் சோர்வின்றி நடத்தி முடித்து என்னையும், தஞ்சை விவசாயிகளையும் மகிழ்வித்துள்ளார்.

வேளாண்மைத்துறை அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் ஆற்றல்மிகு திட்டப்பணிகளால், பல பகுதிகளில் நெய்வேலி காட்டாமணிச் செடிகள்மீது மருந்து தெளிக்கப்பட்டு வாய்மைக்கு முன் பொய்மை பொசுங்கி வாடுவதுபோல வாடிக்கிடக்கும் காட்சியினையும் கண்டேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பொறியாளர்கள் நன்கு திட்டமிட்டு ஆற்றியுள்ள பணிகளின் வெற்றிக் குவியலைத் தஞ்சைத் தரணியில் கண்டுகளித்தேன்.

சோழமன்னர்கள் காலத்திற்குப் பிறகு, ஏறத்தாழ நான் பிறந்த ஆண்டான 1924-ஆம் ஆண்டு வாக்கில் வெள்ளைக்காரர் காலத்தில் அந்த ஆறுகள், கரைகள் உயர்த்தப்பட்டும், ஆழப்படுத்தப்பட்டுமுள்ளன. பின்னர் 1934-ல் மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டு திறந்த பிறகு, இத்தனை ஆண்டுக்காலமும் சிறிய அளவில் குடிமராமத்துப் பணிகள் மட்டுமே அந்தப் பாசனப் பகுதியிலும், வடிகால் பகுதியிலும் நடைபெற்றுள்ளன.

இப்போதுதான் சுமார் எழுபத்தி நான்கு ஆண்டுகளுக்குப்பிறகு இந்த அரசில் ஒரு புதிய வரலாறு படைத்திருக்கிறோம். 14 ஆயிரம் கிலோ மீட்டர் தூரமுள்ளதும், உடலில் உள்ள ரத்த நாளங்கள் நரம்பு மண்டலம் போன்றதுமான ஆறுகள், வாய்க்கால்களை முழுமையாகத் தூர்வாரி சீர்படுத்திச் செம்மைப்படுத்திடச் சென்ற ஆண்டு தொடக்கம் செய்துள்ளோம்.

இரண்டு ஆண்டுகளில் நாலாயிரம் கிலோ மீட்டர் தொலைவுக்கானப் பணிகள் முடிந்துள்ளன. மொத்தத் திட்டத்தின் மதிப்பீடு 154 கோடி ரூபாயில் சுமார் முப்பது கோடி ரூபாய் அளவுக்குச் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பத்தாயிரம் கிலோ மீட்டர் தொலைவு ஆறுகளும், வாய்க்கால்களும் வருகிற மூன்று ஆண்டுகளுக்குள் சீர்பெற்று வலிவுடன் திகழ்ந்திட முன்கூட்டியே பணிகள் முடுக்கி விடப்பட இருக்கின்றன.

ஒருமுறை பழுது பார்த்தோம் - மராமத்து செய்து முடித்தோம் - பெருமளவில் தூர் வாரினோம் என்றில்லாமல், தொடர்ந்து பாசனம் மற்றும் வடிகால்களைக் கவனித்து அவ்வப்போது உறுதிப்படுத்திட உரிய திட்டங்கள் விரைவில் தீட்டப்படும்.

சோழ மண்டிலம் மட்டுமின்றி, தமிழகத்திலுள்ள மற்ற மாவட்டங்களின் ஆறுகளையும் ஆழப்படுத்திட - அகலப்படுத்திட இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அந்த முயற்சியை விரைவுபடுத்தவும் - பணிகளை விரிவுபடுத்தவும் தொடர்புடைய துறைகள் முனைந்துள்ளன என்பதையும் உனக்கும், மற்ற மாவட்டங்களின் உழவர் பெருமக்களுக்கும் உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றினை நேரில் கண்டிடவும் நிகழ்ச்சி நிரல் வகுத்துக் கொண்டிருக்கிறேன்.

உடன்பிறப்பே, புயல் காற்று அடிக்கும் நேரத்திலும் கையில் அகல் விளக்கேந்தி அதனை அணையாமல் எடுத்துக் கொண்டு, சரளைக் கற்கள் நிறைந்த மலை உச்சியில் ஏறிடும் மன உறுதியும், நிதானமும் கொண்டதுதான் நீயும், நானும் இருக்கும் இந்தக் கழகமும், கழகத்தின் ஆட்சியும்!

எனவே இந்தக் கழகத்தின் பயணத்தில், இடையிடையே இனிய குயில்களின் இசைக்குரல் வளமும் கேட்டு மகிழலாம் - நரிகளின் ஊளை ஒலியும் கூட கேட்கும் - குயிலின் குரல்கேட்கும் உற்சாகத்துடன், நரிகளின் ஊளைகளைப் புறந்தள்ளி நமது பயணம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும். நல்லோரின் அறிவுரைகளை ஏற்போம்! பொல்லாதோர் இழிவுரைகளைப் புறம்தள்ளி நடப்போம்; நடப்போம்; நடந்து கொண்டேயிருப்போம்!

அன்புள்ள,

மு. க.

(26-06-1998)

2410. நமக்கு வழங்கப்பட்டுள்ள நல்ல பாடம்!

உடன்பிறப்பே,

நேற்றைய தினம் தொலைக்காட்சிச் செய்திகள் பார்த்துக் கொண்டிருக்கும்போது காட்டப்பட்ட ஓர் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியைப் பற்றியும் - அதன் விளைவாக என் உள்ளம் எப்படிப் பாதிக்கப்பட்டது என்பதையும் - அந்த நிகழ்ச்சி, நமக்கும், நாட்டுக்கும் உணர்த்தும் பாடம் என்னவென்பதையும் - உன்போன்ற உடன்பிறப்புகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் போலிருந்தது. அதனால்தான், அந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்த்தது முதல் இந்தக் கடிதத்தை எழுதத் தொடங்கும் வரையில், ஏதோ ஒரு இனந்தெரியாத உணர்வுடன் அல்லற்பட்டுக் கொண்டிருந்தேன்.

இறுதி அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்ற இடம் கோவை! அஞ்சலி செலுத்தியவர்கள் படைவீரர்களும், அதிகாரிகளும்! இறுதி அஞ்சலிக்குரியவர்களாகக் கிடத்தப்பட்டிருந்தவர்கள் இரண்டு வாலிபர்கள்!

இருவரில் ஒருவரின் பெயர் காஜா மொய்தீன், இன்னொருவர் பெயர் அறிவழகன் - இந்த இரண்டு பெயர்களைக் கேட்டவுடன், அதுவும் கோயம்புத்தூருடன் இணைத்துக் கேட்டவுடன், அய்யகோ - மறுபடியுமா? மதமோதுதலா? ஒருவருக்கொருவர் சுட்டுக் கொண்டோ - அல்லது குத்திக் கொண்டோ மாண்டு மடிந்துவிட்டனரா? என்ற பதைப்பு ஏற்படத்தான் செய்யும்!

நல்லவேளையாக அப்படியொன்றும் நடைபெற வில்லையென ஓர் ஆறுதல் பெருமூச்சுவிட்டுக் கொள்ள முடிகிறது!

இராணுவ மரியாதைக்கு ஆட்பட்ட அந்த வாலிபர்கள் உயிரற்ற உடலினராகப் படுத்தவாறு, உணர்வுபூர்வமான பாடம்

ஒன்றினை நமக்குப் போதித்துக் கொண்டிருக்கும் காட்சியின் மாட்சியை என்னவென்று புகழ்ந்து பாராட்டுவேன்!

காஜாமொய்தீன் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரவங்காடு பகுதியைச் சேர்ந்தவர். அறிவழகன் கடலூர் மாவட்டத்தில் உள்ள சின்னகுப்பம் எனும் ஊரைச் சேர்ந்தவர். இருவரும் இந்திய ராணுவத்தில் பணியாற்றியவர்கள். காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் படைவீரர்களின் தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் நடத்தியபோது பாகிஸ்தானியர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானவர்கள்.

அறிவழகன் - இந்து! காஜா மொய்தீன் இஸ்லாமியர்! ஆம்! மதத்தினால் இந்து, முஸ்லிம்கள்! மொழியினால் தமிழ்நாட்டுக்குரியவர்கள்! ஆனால் நாட்டுக்காகப் போரிடும்போது, மாநில உணர்வோ, மத உணர்வோ எதுவும் எதிர் நிற்கவில்லை - மாறாக, இந்திய நாட்டுக்காரர்கள் எனும் நாட்டுப்பற்று மட்டுமே ஓங்கி உயர்ந்து நின்றிருக்கிறது!

ஆம், உடன்பிறப்பே - அறிவழகனும், காஜா மொய்தீனும் அண்ணன் தம்பிகளாக சகோதர பாசத்துடன் தோளொடு தோள் சேர்ந்து நின்று - எல்லையில் நுழைய எத்தனித்த எதிரிகளைத் தடுத்துத் தாக்கி அந்த அரிய பணியில் உயிர் இழந்துள்ளனர்.

எனக்குக் கிடைத்த தகவலின்படி, காஜாமொய்தீன் கடந்த மே மாதம்தான் தனது சகோதரரின் திருமணத்திற்காகச் சொந்த ஊருக்கு வந்து, சில நாட்கள் குடும்பத்தாருடன் தங்கியிருந்து மீண்டும் இராணுவ முகாமுக்குச் சென்றிருக்கிறார். சென்றவர் திரும்பவில்லை உயிரோடு! அவர் உடல் மட்டுமே பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்து அறிவழகனையும் - நீலகிரி மாவட்டத்து காஜாமொய்தீனையும் இந்திய நாட்டுக் குடிமகன்கள் என்ற உணர்வு மட்டுமே ஒன்றுபடுத்தியிருக்கிறது - அந்த உணர்வின் முன்னால் இந்து என்றும், முஸ்லிம் என்றும் மதப்பாகுபாடு இருப்பினும், மதவேறுபாடு இல்லை! மனமாறுபாடு இல்லை! இந்த மண்ணின் மைந்தர்கள் - இந்த மண்ணின் காவலர்கள் - இந்த மண்ணின் பாதுகாப்புக்காக இன்னுயிரையும் தத்தம் செய்திட முன்வந்த இளம் சகோதரர்கள்! இந்திய நாட்டு ராணுவ வீரர்கள்!

இவர்கள் பிறந்த இந்தத் தமிழ் மண்ணில் காலம் காலமாக காஜாமொய்தீனின் பரம்பரையினரும் - அறிவழகனின் பரம்பரையினரும் உறவுமுறை சொல்லி, ஒருவரோடு ஒருவர் பாசமுடன் பழகிவருகின்றனர்.

முன்னேறிய சமூகத்தினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர் எனப்படும் இஸ்லாமியர், கிறித்துவர் - இப்படி அனைவரையும் ஒருவருக்கொருவர் மோதுதல் இன்றி அவரவர்க்குரிய நியாயமான உரிமைகளுடன் வாழ்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கும் - அதற்காகக் குரல் எழுப்புவதற்கும் தொடங்கப்பட்ட நீதிக்கட்சியின் தொண்டும் - அக்கட்சியின் விரிவாக்கமாக இன்று அரசியலில் சமுதாய வரலாற்றைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டு வருகின்ற பெரியவர்கள் நன்குணர்ந்தே இருக்கின்றனர்.

இடையில் அள்ளித் தெளித்திடும் அவசரக் கோலமாகவும், அதனால் விளையும் அமளிக்களமாகவும் தமிழகத்தை ஆக்க முனைந்திடும் நேரடியான - அல்லது மறைமுகமான - தீவிரவாதச் செயல்களால் மதநல்லிணக்கத்துக்குக் கேடுபாடுகளும், தேவையற்றச் சாதிச் சண்டைகளும் உருவாகி, அமைதிக்கு அறைகூவல் விடுக்கும் நிகழ்ச்சிகள்தான் பெருகிட முடியும். அந்தத் தீயவழிக்குத் திசைதிருப்புகிறவர்கள், தமது திருவிளையாடல்களை ஒருபுறம் நடத்திட முனையும்போது, அவற்றைத் தடுத்து அடக்கிட அரசின் சட்டங்கள் மட்டும் போதாது என்பதை நான் நன்கறிவேன். சமுதாய அமைதிக்கும், நாட்டின் நலனுக்கும், நல்ல திட்டங்கள் இடையூறின்றி நிறைவேற்றப்படுவதற்கும் நல்லெண்ண அடிப்படையில் மனமாற்றம் ஏற்பட்டாக வேண்டும். அதில்தான் மக்களின் அமைதியான நல்வாழ்வு உறுதிப்படுத்தப்படும். மண்ணின் பாதுகாப்புக்கும் உத்திரவாதம் ஏற்படும்.

அதனை விளக்குவதற்காகவே இந்திய எல்லையில் காஜாமொய்தீனும், அறிவழகனும் இரத்தம் சிந்தி இன்னுயிரை ஈந்து நல்ல பாடமொன்றை நமக்கு வழங்கியிருக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்வோம்.

அன்புள்ள,

மு. க.

(29-06-1998)

2411. சென்னை பொதுக்குழு; அழைக்கிறது உன்னை!

உடன்பிறப்பே,

நமது கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களின் அறிவிப்பைக் கண்டிருப்பாய். ஆகஸ்டுத் திங்கள் - முதல் நாளும், இரண்டாம் நாளும் சனி, ஞாயிறு கிழமைகளில் சென்னையில் கழகத்தின் பொதுக்குழு கூடுகிறது. இந்திய நாட்டு அரசியல் அரங்கில் எத்தனையோ விதமான காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடிக் கொண்டும் - நகர்ந்து கொண்டும் - வெகுவான வினாக் குறிகளை ஆடவிட்டுக் கொண்டும் இருக்கும் இந்தச் சூழ்நிலையில், கழகத்தின் பொதுக்குழு கூடுகிறது என்பதும், இரண்டு நாட்கள் விவாதம் நடத்தி முக்கிய முடிவுகளை எடுக்க இருக்கிறது என்பதும் உன்னைப் போன்ற உடன்பிறப்புகளை மட்டுமல்ல - அரசியல் நிலைப்பாடுகளை ஆழ்ந்து கவனிப்போர் அனைவரையுமே ஆர்வத்துடன் நோக்கிடச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

கழகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கைக்குழு, ஆய்வு செய்து பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்படும் கழக வரவு செலவு கணக்குகளை விவாதித்து, அதன்மீது கருத்துகளைக் கூறுவதும் - ஏற்றுக் கொள்வதும் பொதுக்குழுக் கூட்டங்களில் கழகம், தொடர்ந்து கடைப்பிடித்து வரும் முறையாகும்.

இந்தப் பொதுக்குழுவிலும் இதுவரையிலான கழகத்தின் வரவு செலவுகள் வைக்கப்பட்டு, தணிக்கைக் குழுவினரின் அறிக்கையும் வழங்கப்படும்.

தொடர்ந்து, கழகத்தின் ஆக்கப்பணிகள் குறித்து பொதுக்குழுவில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள், அரிய ஆலோசனைகளை வழங்கிடுவர். ஏதோ வந்தார்கள், பேசினார்கள் என்றில்லாமல் கழகம் மேலும் மேலும் எழுச்சியுடன் நடைபோடவும்

- வலிமையுடன் வளர்ந்தோங்கவும் - அவர்கள் எடுத்து வைக்கும் வைரக் கட்டியென ஒளிவிடும் கருத்துகளுக்குப் பட்டை தீட்டப்பட்டு அவை தீர்மானங்களாக உருப்பெறும்.

ஆளும் கட்சியாகக் கழகம் திகழும் இந்த நேரத்திலும் எத்தனையோ எதிர்ப்புகளையும் - தாக்குதல்களையும் - சதித் திட்டங்களையும் எதிர்கொண்டு தன் பயணத்தைத் தங்கு தடையின்றி நடத்த வேண்டியுள்ளது.

குத்தீட்டி கொண்டு கொல்ல வருவோர் - குழிபறித்து அதிலே தள்ள வருவோர் - சீற்றம் தொடுப்போர் - சிரித்துக் கெடுப்போர் - சிலந்தி வலை பின்னுவோர் - எனப் பல ரகத்தினர் உண்டு; நம்மை அழிக்க நினைத்து, உள்ளத்தில் பகை கொண்டு உலவுபவர்கள்.

தென்றல், தன் தளிர் விரல்களால் நம்மைத் தடவிடும் போது ஏற்படும் இன்ப மகிழ்ச்சியையும் - புயல், தன் உதடுகளைக் குவித்து நம்மை ஊதிப் பொடியாக்க முனையும் போது ஏற்படும் வேதனையையும் இரண்டு வித்தியாசமான நிகழ்வுகள் எனக் கருதாமல் இரண்டையும் சமமாகக் கருதி, முறையே ஒன்றை ஏற்றுக் கொள்வது போலவே மற்றதையும் எதிர்கொள்ள வேண்டிய கடமையுடன் ஏற்றுக்கொண்டு பழக்கப்பட்டுவிட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நாம்!

அதனால் அருவியின் பாட்டு - அக்கினியின் ஆட்டம் இரண்டில், முதலாவதில் மயங்காமலும், இரண்டாவது கண்டு தயங்காமலும் நமது இலட்சியப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ள நமக்கு இருக்கிற வலிவும் பொலிவும் - நாம், ஆட்சியில் இருக்கிறோம் என்பதால் அல்ல!

நமது தமிழ்நாட்டு மக்களை வளமுடன் வாழச் செய்திட, திட்டங்கள் தீட்டிடவும், தீட்டிய திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்திடவும், ஏழை எளிய மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்வை மையமாக வைத்து நிர்வாகத்தைத் திறம்பட நடத்திச் செல்லவும் - ஆட்சி என்பது நமக்குக் கிடைத்த வாய்ப்பு எனக் கருதுகிறவர்களேயல்லாமல், இந்த அதிகாரங்களும், பதவிகளும் நமக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என என்றைக்குமே கருதியவர்களல்ல நாம்! கருதப் போகிறவர்களுமல்ல!

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பதை மறவாமல், கட்சி இருந்தால் தான் ஆட்சி என்பதை உறுதிப்படுத்திக் கொண்டுள்ள உடன்பிறப்புகளின் கூடாரம் இது!

எனவேதான், இயக்கமெனும் இந்த எஃகுக் கோட்டையை மேலும் பலமாக்கிட, இப்போது விரைவில் நடைபெற இருக்கிற நமது கழகத்தின் பொதுத் தேர்தலுக்கான உறுப்பினர்களைச் சேர்த்திடும் பணி தீவிரப் படுத்தப்படுதல் வேண்டும். கடந்த காலங்களைவிட உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகுந்து நிற்க வேண்டும். கழக அமைப்புகள் ஒவ்வொன்றும் - அவை கிளையாயினும், ஒன்றியமாயினும், வட்டமாயினும் - பகுதியாயினும் - மாவட்டமாயினும் எல்லாமே சுறுசுறுப்புடனும், விறுவிறுப்புடனும் இயங்கியாக வேண்டும்.

அந்தப் புது முறுக்கினைப் பெற்று, புது வேகம் கண்டிட கழகத்தின் பொன் விழா ஆண்டு உறுப்பினர்கள், கழகத்தின் பொதுத் தேர்தலில் ஒவ்வொரு கட்டத்திலும் தங்களின் கடமையை, கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் ஆற்றிடல் வேண்டும்.

கழகப் பொதுத் தேர்தலில் வாக்களிக்கப் போகும் உறுப்பினர்கள், மாவட்டந்தோறும் எல்லா மட்டங்களிலும் ஆர்வத்துடன் சேர்க்கப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் வருகிறார்கள்.

அவ்வாறு சேர்ந்த உறுப்பினர்களின் பட்டியல்கள் இம்மாதம், அதாவது ஜூலை மாதம் இறுதி வாரத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு வந்து சேர்ந்தாக வேண்டும். உறுப்பினர்கள் சேர்க்கும் கடைசி நாள் ஜூலை 31 என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, இன்று முதலே உறுப்பினர்கள் பட்டியல் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டால்தான் தலைமைக் கழகத்தின் வேலைப் பளு குறையும்.

ஆகஸ்டு 1 மற்றும் 2 தேதிகளில் நடைபெறும் சென்னைப் பொதுக்குழுவில், கழகப் பொதுத் தேர்தல்கள், கிளைகள் தொடங்கி, தலைமைக் கழகம் வரையில் எவ்வெப்போது நடக்க இருக்கின்றன என்கிற முடிவு எடுத்து அறிவிக்கப்பட இருக்கிறது.

எனவே, இப்பொதுக்குழுவில் வரவு செலவு கணக்கு மட்டுமல்ல; கழக உறுப்பினர்கள் மாவட்ட ரீதியாகச் சேர்க்கப்பட்டுள்ள கணக்கும் இடம்பெறும்.

கழக ஆக்கப்பணிகளுக்கானத் திட்டங்கள் வகுக்கப்படும்.

கழகத்தின் கண்ணோட்டத்தில் இந்திய நாட்டு அரசியல் அரங்கு பற்றிய பார்வையும் முக்கியத்துவம் பெறும்.

இதற்கிடையே இன்னுமிருக்கிற நாலைந்து வாரங்களுக்குள், நாட்டு நடப்பில் எத்தனையோ மாறுதல்கள் வரலாம்!

அனைத்தையும், கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்துக் கணக்கிட்டுக் காரியமாற்றிடவே, ஆகஸ்டு 1 மற்றும் 2 நாட்கள் சென்னையில் பொதுக்குழு!

அதற்கு முன்பே தலைமைக்குக் கிடைத்திட வேண்டும், கழக உறுப்பினர்கள் சேர்ந்த பட்டியல்கள்!

அன்புள்ள,

மு. க.

(05-07-1998)

2412. மனச்சாட்சி உறங்காமலிருந்தால்!

உடன்பிறப்பே,

தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று குரல் கொடுப்பதில், முதலிடத்தில் இருப்பது பா.ம.க.தான். இரண்டாவது இடத்தில்தான் அ.தி.மு.க. இருக்கிறது என்று திருப்பூரில் செய்தியாளர்கள் கூட்டத்தில், பா.ம.க.வின் நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாசு அவர்கள், பெருமிதத்துடன் அளவற்ற பூரிப்புடன் கூறியிருக்கிறார்.

யார் எந்த இடத்தில் இருந்து இந்தக் கருத்தைச் சொல்லியிருந்தாலும், அவர்களையெல்லாம் முந்திக் கொண்டு, பந்தயத்தில் வெற்றி பெற்று முதலிடத்துக்கு வந்ததுபோன்ற அந்தக் கம்பீரத்துடன், இவ்வாறு முழங்கியுள்ள டாக்டர் இராமதாசு அவர்களைப் பாராட்டித்தான் தீரவேண்டும்.

நான் பாராட்டுவதைவிட - நாம் பாராட்டுவதை விட - அவர் எதிர்பார்க்கும் பயனுள்ள பாராட்டு, கிடைக்க வேண்டிய இடத்திலிருந்து அவருக்குக் கிடைத்தே தீரும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால் ஒன்று! தி.மு.க. ஆட்சியைக் கலைக்கச் சொல்வதில் நான்தான் முதல் ஆள்! என்று மார்தட்டிக் கொள்பவரின் மனச்சாட்சி உறங்காமலிருந்தால், அது அவரைப் பார்த்து எழுப்பும் கேள்விகளுக்கு அவரால் விடையளிக்க முடியுமா என்பது சந்தேகம்தான்!

1969-ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கெனத் தனி அமைச்சரையும், தனி இயக்குநரகத்தையும், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கெனத் தனியே ஒரு மானியக் கோரிக்கையையும், தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கெனத் தனியே ஒரு துறையையும்,

மிகப் பிற்படுத்தப்பட்டோர் கூடுதல் பயனடையும் வகையில் 89-ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருக்கெனத் தனி இயக்குநரகத்தையும் உருவாக்கினேனே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

பிற்படுத்தப்பட்டோர் நலம் காண, சட்டநாதன் குழுவை 13.11.1969 அன்று அமைத்து, அதன் பரிந்துரைகளைப் பெற்று, பிற்படுத்தப்பட்டோருக்கு, அதுவரை இருந்து வந்த 25 சதவிகித ஒதுக்கீட்டை 31 சதவிகிதம் என்றும், ஆதி திராவிட மக்களுக்கு 16 சதவிகிதம் என்று இருந்த ஒதுக்கீட்டை 18 சதவிகிதம் என்று உயர்த்தியும், மீண்டும் 1989-ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் சேர்ந்து 18 சதவிகிதம் என்று இருந்த ஒதுக்கீட்டை ஆதி திராவிடர்களுக்கு மட்டும் 18 சதவிகிதம் என்றும், மலைவாழ் மக்களுக்காகத் தனியாக ஒரு சதவிகிதமும் வழங்கி, சமூகநீதிக்கு வழிவகுத்துத் தந்தது இந்த ஆட்சிதானே; அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பல ஆண்டுக்காலமாக ரத்தம் சிந்திப் போராடிப் பெற முடியாத இருபது சதவிகித ஒதுக்கீட்டை 1989-ஆம் ஆண்டு வலிய அழைத்து வன்னியர், சீர் மரபினர் உள்ளிட்ட மக்களுக்கு வழங்கியதே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

இருபது சதவிகித இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில், அ.தி.மு.க. ஆட்சியிலே துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட 27 வன்னியத் தியாகிகளுக்கு இந்தச் சுதந்திரப் பொன்விழா ஆண்டினை முன்னிட்டு சமூக நீதிக் காவலர் பட்டமும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று இலட்ச ரூபாய் நிதியும் வழங்கியதோடு, தேச விடுதலை தியாகிகள் மற்றும் மொழிக் காவலர்களின் குடும்பங்களைச் சேர்ந்த வாரிசுதாரர்களைப்போலவே இந்தச் சமூக நீதிக் காவலர்களின் வாரிசுதாரர்களுக்கும் மாதந்தோறும் 1,500 ரூபாய் வழங்கி வருகிறோமே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

அ.தி.மு.க. ஆட்சியிலே தொடரப்பட்ட வழக்குகளில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியினர் நீதிமன்றங்களுக்கு அலைந்து கொண்டிருந்தார்களே, அந்த வழக்குகளையெல்லாம் ஆட்சிக்கு வந்ததும் ஒரே உத்தரவில்

திரும்பப் பெற்றோமே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

ஆதிதிராவிடர்களுக்கு வழங்குவது போல இலவச வீட்டு மனைகள், ஒட்டர், நரிக்குறவர், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர் ஆகிய நான்கு பிரிவினருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்ததை விரிவுபடுத்தி, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்து மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கும் வழங்க உத்தரவிட்டோமே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

இதே திட்டத்தை 1997-98-ஆம் ஆண்டு மேலும் விரிவுபடுத்தி கிராமங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கும், முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கும் வீட்டு மனை வழங்க மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோமே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

1969ஆம் ஆண்டு, முதல் முறையாக முதலமைச்சரான போது புகுமுக வகுப்புக்கு இலவசக் கல்வித் திட்டத்தை விரிவாக்கினேனே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

1989இல் முதலமைச்சரானபோது, மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கும் எந்தவித நிபந்தனையுமின்றி இளங்கலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வியையும், 1990ஆம் ஆண்டில் ஆண்டு வருமான வரம்பு 12 ஆயிரம் ரூபாய் வரையுள்ள பிற்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வியையும், மீண்டும் தற்போது அந்த வருமான வரம்பை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் சலுகை அளித்திருக்கிறோமே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

1969இல் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இருந்த விடுதிகளின் எண்ணிக்கையை 11லிருந்து 1976ஆம் ஆண்டிற்குள் 196 ஆகவும், 88-89இல் 581 ஆக இருந்த விடுதியை 89-90இல் 696 ஆகவும், 95-96இல் 835 ஆக இருந்த விடுதியை 96-97இல் 880 ஆகவும், 97-98இல் மேலும் புதிதாக 62 விடுதிகளையும் ஏற்படுத்தியிருக்கிறோமே, அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

ஆதிதிராவிட மாணவர்கள், விடுதிகளில் சேர்ந்து பயில, பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு 15 ஆயிரம் ரூபாயாக இருந்ததை 50 ஆயிரம் ரூபாயாக கடந்த ஆண்டில் உயர்த்தியதுபோலவே, இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள், விடுதிகளில் சேருவதற்கு இருந்த பெற்றோரின் வருமான வரம்பு 15 ஆயிரம் ரூபாய் என்பதை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறோமே, அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

ஆதிதிராவிடர்களுக்கு இருப்பதைப்போல, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றத்திற்காக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சியளிக்கும் தனிப்பயிற்சி நிலையத்தை 1971ஆம் ஆண்டு உருவாக்கியதோடு, 96இல் அவர்களுடைய மாணவ விடுதி உணவுக் கட்டணத்தை 200 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தியும் வழங்கியிருக்கிறோமே, அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

அனைத்துத் தொழில் கல்வியிலும் ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் உள்ளிட்ட கிராமப்புற மாணவர்கள் பயனடைய, 15 சதவிகித தனி இடஒதுக்கீடு செய்திருக்கிறோமே, அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

கிராமத்தில் உள்ளவர்கள் பயனடைய வேண்டும் என்பதற்காக, பட்டதாரிகள் மற்றும் பட்டதாரிகள் இதுவரை இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், பாலிடெக்னிக்குகளில் சேர்ந்து இலவசக் கல்வி பெறுவதற்காக இதுவரை இருந்த எண்ணிக்கை வரம்பை அறவே நீக்கியிருக்கிறோமே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா?

இதுவரை ஒரு பட்டதாரிகூட இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு - அவர்கள் எந்த வகுப்பினைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் - மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ, கால்நடை மருத்துவக் கல்லூரியிலோ, பல் மருத்துவக் கல்லூரியிலோ, வேளாண்மைக் கல்லூரியிலோ, சட்டக் கல்லூரியிலோ சேர விரும்புவார்களானால், அவர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையிலே, ஒவ்வொரு பிரிவிலும்

முதல் பத்து இடங்களைப் பெறுபவர்களுக்கு - அவர்களின் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்து அதன் மூலம் பட்டதாரிகளே இதுவரையில்லாத குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயன்பெற வழிவகுத்துக் கொடுத்திருக்கிறோமே, அதற்காக இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டுமா?

கிராமப்புறத்திலே உள்ள ஏழை - எளிய வீட்டுப் பெண்கள் படிப்பறிவைப் பெற வேண்டும் என்பதற்காகவும், அதே நேரத்தில், அப்படி 8ஆம் வகுப்பு வரை படிக்கும் பெண்களுக்குத் திருமண உதவிக்காகவும் பத்தாயிரம் ரூபாய் வீதம் கோடிக்கணக்கில் வாரி வழங்கி வருகிறோமே! அதற்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமா? இன்னும் எத்தனை எத்தனை திட்டங்கள்! சாதனைகள்! மாநிலத்தை வளமாக்கும் மகத்தான திட்டங்கள்! மாபெரும் சாதனைகள்! இதற்கெல்லாம் காரணமான இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்பதில் டாக்டர் அவர்களுக்கு முதலிடமா? இதனை அவரே அறிவிப்பதா?

உடன்பிறப்பே, கழக ஆட்சியில் இந்தச் சாதனைகள், திட்டங்கள் எல்லாமே, தமிழக மக்களின் நலனுக்காக அறிவிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள பட்டியலில் ஒரு பகுதியே ஆகும்! ஆம்! சமூக நலன் - சமூக நீதி குறித்தச் சாதனைகளும், திட்டங்களும் மட்டுமேயாகும். இவையன்றி இன்னும் எத்தனையோ சீர்மிகு சாதனைகள், சாதாரண - சாமானிய - ஏழை எளிய - நடுத்தர மக்களுக்காக அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த ஆட்சிக்கு எதிரா, போர்க்கொடி தூக்குவதில்ப் தன்னை முதலாவதாக அறிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறார் திரு. டாக்டர் இராமதாசு அவர்கள்! இதனால் டாக்டர் அவர்களுக்கு தனி மகிழ்ச்சி என்றால், அதில் எனக்கேதும் வருத்தமில்லை.

அன்புள்ள,

மு. க.

(14-07-1998)

2413. அனைவர்க்கும் பொருந்தும் அன்பு வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

வெள்ளுடை வேந்தர் தியாகராயர் காலத்தில் பள்ளிச் சிறார்களுக்குச் சென்னை மாநகராட்சி அளவில் பள்ளிகளில் வழங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம், பெருந்தலைவர் காமராசர் காலத்தில் மாநில முழுவதுமுள்ள பள்ளிச் சிறார்களுக்கு மதிய உணவுத் திட்டமென விரிவு படுத்தப்பட்டு, அத்திட்டத்திற்கு ஊர்ப் பெருமக்கள் நிதி உதவி வழங்க வேண்டுமென்றும், பள்ளி ஆசிரியர்கள் உணவு சமைத்துப் பிள்ளைகளுக்குப் பரிமாற வேண்டுமென்றும் இருந்த நிலையை மாற்றி, அரசின் முழுச் செலவிலும், பொறுப்பிலும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு சத்துணவுத் திட்டமெனும் சமுதாய நலத் திட்டமொன்றை என் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிமுகப்படுத்திச் செயல்படுத்தி வந்ததை, அவருக்குப் பிறகு மூன்றாவது முறையாக 1989ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நான், அந்த சத்துணவுத் திட்டத்தை மேலும் செம்மைப்படுத்தும் நோக்கத்துடன் பிள்ளைகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு தடவை முட்டை வழங்கத் தொடங்கி, இப்போது ஆட்சிக்கு வந்தபிறகு வாரம் ஒருமுறை சத்துணவுடன், முட்டையும் வழங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது என்பதை நீயும் அறிவாய், நாடும் நன்கறியும்.

ஏழை எளிய வீட்டுப் பெண்கள் எட்டாம் வகுப்பு வரையிலாவது படிக்க வேண்டும் என்ற ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, அத்தகைய பெண்களின் திருமணத்திற்காகப் பத்தாயிர ரூபாய் நிதியினைக் கழக அரசு வழங்குவதில் உள்ள அதே நல்ல நோக்கம் தான் மதிய உணவுத் திட்டத்திலும், சத்துணவுத் திட்டத்திலும் மைய இழையாக விளங்குகிறது என்பதை எவரும் மறுத்திட இயலாது.

ஆனால், அதே நேரத்தில் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். அறிவிக்கப்படுகிற எத்தகைய மக்கள் நலத்திட்டங்களாயினும், அவை அந்தப் பயனாளிகளுக்கு முழுமையாகப் போய்ச் சேர வேண்டும். அவ்வாறு போய்ச் சேர்ந்திடாமல் முழுப் பயனுமே இடையிலே தோன்றிடும் எத்தர்களுக்குக் கிட்டிவிடுமேயானால், முள்ளின் முனையிலே மூன்று குளம் வெட்டினேன்; அதில் இரண்டு குளம் பாழ் - ஒன்றில் தண்ணீரே இல்லை என்ற கேலிக்குரிய பழமொழிதான் மிஞ்சும். பனிக்கட்டி பலபேரின் கைகளில் மாறிமாறிச் செல்லும்போது, கடைசியாகப் போய்ச் சேர வேண்டிய கையில் ஒரு துளிநீர்தான் போய்ச் சேர்ந்தது என்றால் - என் போன்றோர் கண்களில் நீர்தான் துளிர்க்கும்.

அதிலும் வளர்ந்த வாலிபர்களுக்கோ - முதிர்ந்த பெரியோர்களுக்கோ அரசின் நல்ல திட்டங்கள் சென்று சேரவில்லை என்பதால் ஏற்படும் வேதனையைவிட, பிஞ்சுப் பிள்ளைகளுக்குக் கல்வியில் ஊக்கத்தை ஏற்படுத்துவதற்காக முதலில் அவர்களின் பசிப்பிணியைப் போக்கிட வேண்டும் என்ற குறிக்கோளுடன் தொடங்கப்பட்டு, தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டுள்ள சத்துணவுத் திட்டத்தில் ஒரு சில இடங்களில் தவறு நடைபெறுகிறது எனக் கண்டிடும்போது, உள்ளம் நெருப்பாகிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

சில நாட்களுக்கு முன்பு சிவகாசி, தர்மபுரி பகுதிகளில் சத்துணவுத் திட்டத்தில் மேலும் பிள்ளைகளுக்கு உடல் வலிவை வழங்கக் கூடிய முட்டைகளைத் தருவதில் கூட அலட்சியமும், அக்கறையற்ற தன்மையும், அதிலும் ஏதாவது அடிக்க முடியுமா என்ற அசிங்க நினைப்பும் கொண்டவர்களின் செயலால் வெளிவந்த செய்தியைப் பார்த்தவுடன் அதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுபோல் எதுவும் சத்துணவுக் கூடங்களிலோ, நியாய விலைக் கடைகளிலோ, இவை போன்ற இடங்களிலோ நடைபெறாமல் தடுப்பதற்கும் - நடந்துவிட்ட தவறுகளைக் கண்டறிந்து தண்டிப்பதற்கும், நமது அமைச்சர்கள் வெளியூர்களுக்குச் செல்லும் போதெல்லாம் அந்த இடங்களில் திடீர் சோதனையிட வேண்டுமென்று பலமுறை கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அந்த வேண்டுகோளை அமைச்சர்கள் சிலர் ஏற்று அவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதறிந்து மனநிறைவு கொள்கிறேன். எல்லோரும் அப்பணியில் ஈடுபட்டால் மாவட்டங்களில் - ஒன்றியங்களில் - வட்டங்களில் என்ற நிலையில் அடிமட்டத்தில் நடைபெறக் கூடிய தவறுகளைக் கூடத் தடுத்து, திட்டங்களின் பயன்களை எல்லா மக்களும் துய்த்திடச் செய்திட முடியும் என்பது என் கருத்து.

ஒவ்வொரு துறைக்கும்உரிய அமைச்சர்கள் அவரவர் துறைகளுக்குரியனவற்றை மட்டும் ஆங்காங்குச் சென்று ஆய்வு செய்வதுடன், சோதனையிடுவதுடன் - முக்கியமாக சத்துணவுக் கூடங்களிலும், நியாயவிலைக் கடைகளிலும் திடீரெனச் சென்று செம்மையாக அவை செயல்படுகிறதா என்று நேரடியாக அறிந்து கொள்ள வேண்டும். கழனிக்கு உரமிடுவதைவிட, உழவனின் கண்பார்வை அடிக்கடி கழனியில் படுவது பல மடங்கு பயன் தரும் என்று கூறப்படுவதே, வேலி தாண்டி வந்து விளைச்சலை மேயும் விலங்குகளிடமிருந்து பயிரைக் காக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன்தானே!

இரண்டு நாட்களுக்கு முன்பு நமது அமைச்சர் தம்பி அய். பெரியசாமி அவர்கள், சென்னை மாநகரிலும், திருவள்ளூர் மாவட்டத்திலும் சில சத்துணவு மையங்களில் திடீர்ச் சோதனைகளை நடத்தியுள்ளார். அவற்றில் ஒன்றிரண்டு மையங்களில் பிள்ளைகளுக்கு முட்டை வழங்கப்படவில்லை என்ற திடுக்கிடும் செய்தி - ஒரு மையத்தில் இருப்பில் இருக்க வேண்டிய அரிசி இல்லை என்று மேலும் அதிர்ச்சி தரக் கூடிய மற்றொரு செய்தி!

பிள்ளைகளுக்கு அன்னை நிலையிலிருந்து அரசு வழங்கும் சத்துணவை, அவர்களுக்கு அன்னை நிலையிலிருந்து அளித்திட வேண்டிய சத்துணவு மைய ஊழியர்களில் ஒரு சிலர், தங்களின் இதயங்களைக் கல்லாக்கிக் கொண்டு அந்தப் பிள்ளைகளின் வயிற்றில் அடிப்பதை எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்!

அவ்வப்பொழுது எழுப்பப்படும் கோரிக்கைகளை மிகுந்த அக்கறையுடன் நிறைவேற்றி வைக்கும் இந்த அரசு, அவர்களிடம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் நற்பணியை, நமக்காக அல்ல - மக்களுக்காக ஆற்ற வேண்டியதற்கு மாறாக - மாசு வந்து சேரும்

வண்ணம் உருக்குலைத்துவிடுவார்களேயானால், அதைவிடப் பழிபாவச் செயல் வேறு ஏதேனும் இருக்க முடியுமா என்ற கேள்விக்கு, அந்தத் துறைகள் பலவற்றில் உள்ள சில அழுக்கு மனம் படைத்தவர்கள், மற்றவர்க்கு இல்லாவிடினும் தமது மனச்சாட்சிக்குப் பதில் அளித்தே ஆக வேண்டும்.

இதுபோன்ற தவறுகள், மக்கள் நலத்திட்டங்கள் எவையாயினும், அவற்றைச் சீர்குலைக்குமளவுக்குச் சிலரால் விளைவிக்கப்படுவதை அறிவுரைகளால் மட்டுமல்ல, அரசு எடுக்கும் கடுமையான நடவடிக்கைகள் வாயிலாகவும் தடுத்து நிறுத்த எந்தவிதத் தயக்கமும் எப்போதும் இருக்கப் போவதில்லை.

எனவே, அரசின் திட்டங்கள், பணிகள் எங்கெல்லாம் நடைபெறுகிறதோ, அவற்றை மேற்பார்வையிடுவதற்கு அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் விழிப்புடன் இருக்க வேண்டுமென்பதைப் போலவே, உன்போன்ற உடன்பிறப்புகளும், மக்கள் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் விழிப்புடன் இருந்திட வேண்டும்.

விளையும் கழனியை அடிக்கடி கண்டு, பாதுகாத்து பயிர் செழிக்கப்பணி புரியும், உழவரைப்போல நமது அமைச்சர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். செயல்படுவார்கள், செயல்பட வேண்டும்.

அமைச்சர்களுக்கு மட்டுமல்ல; இது அரசின் திட்டங்கள் செம்மையுற நடந்திட வேண்டுமென்ற அக்கறையுள்ள அனைவர்க்கும் பொருந்துகின்ற அன்பு வேண்டுகோளேயாகும்.

அன்புள்ள,

மு. க.

(15-07-1998)

2414. திரைப்படத் தொழில் தேய்ந்து போகவோ?

உடன்பிறப்பே,

ஏதோ திரைப்படத்துறைக்குக் கழக அரசு, அள்ளி அள்ளிக் கொடுத்துக் கஜானாவையே காலி செய்துவிட்டது போல ஒரு வார ஏடு வருத்தம் மிகக் கொண்டு, மெய்சிலிர்க்கிறது! உடல் புல்லரிக்கிறது! என்று எரிச்சல் கொட்டும் ஏகடியத் தலையங்கமொன்றைத் தீட்டி மகிழ்ந்திருக்கிறது. அந்த ஏடு, எப்போதுமே திரைப்படத்துறைக்குப் பரம்பரை பரம்பரையாகப் பகையாளியாக இருந்தது போலவும் - இருப்பது போலவும் தன்னைக் காட்டிக்கொண்டு எழுதியுள்ள தலையங்கம்தான் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. அந்த ஏட்டின் பழைய கால வரலாறு அப்படிப்பட்டதல்ல! திரைப்படத்துறையிலேயுள்ளவர்களின் கவர்ச்சிப் படங்கள் - அவர்கள் எழுதும் தொடர் கதைகள் - தொடர் கட்டுரைகள் - அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் - பேட்டிகள் போன்றவற்றை வெளியிட்டுத் தனது வாணிபக்கலையை வளர்த்துக் கொண்டு, மக்கள் மத்தியில் ஓர் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் புகழ் பெற்ற ஏடுதான் அது!

இப்போது மட்டும் அதற்குத் திடீரென்று மெய்சிலிர்ப்பானேன்? உடல் புல்லரிப்பானேன்?

சமூகத்திற்கு எழுத்தறிவிக்கிற ஓர் ஆசிரியரோ, சோறிடுகிற உழவரோ, உயிர் காக்கும் நர்சுகளோ, ஆயுட் காலம் முழுவதும் நேர்மையாக உழைத்தாலும் சம்பாதித்துவிட முடியாத கூலியை கிசுகிசு மூட்டுவதின் மூலமும், கிளுகிளுப்பூட்டுவதின் மூலமும் சம்பாதித்து விடுகிற சினிமா பிரபலங்கள், வரியைக் குறைக்கக் கேட்பதையும், அடுத்த சில மணி நேரங்களில் அரசு அதற்கு ஆணையிடுவதையும் காணப் புல்லரிக்கிறது என்று எழுதுகிறது முத்தாய்ப்பாக அந்த ஏடு! இதற்கு நானும் லாவணி பாணியில்

பதில் சொல்வதென்றால், ஏ.சி. அறையில் அமர்ந்தவாறு இந்தத் தலையங்கத்தை அந்த ஏட்டில் எழுதியவர், அந்த நிர்வாகத்திடம் வாங்குகிற மாத ஊதியம் எத்தனை ஆயிரங்கள் என்பதையும் - அதே நேரம் அந்த ஏட்டின் அலுவலகத்தில், இயந்திரங்களுடன் சேர்ந்து பணி புரியும் பாட்டாளிகள், விழி பிதுங்கப் பிதுங்கப் பிழை திருத்தும் உதவி ஆசிரியர்கள், கொட்டக் கொட்டக் கண்விழித்து அலுவலகக் காவல் முதல்; அனைத்து வேலைகளிலும் ஈடுபட்டு உழைக்கின்ற தொழிலாளத் தோழர்கள் - மாதந்தோறும் பெறுகிற ஊதியம் எவ்வளவு என்பதையும் புள்ளி விபரமிட்டு எழுதிக் காட்ட முடியும்.

திரைப்படத் தொழில் என்பது, யாரோ சில புகழ் பெற்ற கதாநாயகர்களும், கதாநாயகிகளும், இயக்குநர்களும் பெறுகின்ற பெருவாரியான ஊதியத்தை மட்டும் சுட்டிக்காட்டி, அந்தத் தொழிலே சீரழிந்து விடவேண்டுமென்று எண்ணுகிற அளவுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்டவர்கள் ஈடுபட்டிருக்கிற சிறிய தொழில் அல்ல!

சிற்றூர் ஒன்றில் இருக்கின்ற சினிமாக் கொட்டகையிலிருந்து சென்னை மாநகர் வரையில் உள்ள இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட திரையரங்குகளில் பணியாற்றுகிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், அலுவலர்கள், அவர்களைச் சார்ந்து அவர்களை நம்பி வாழுகின்ற குடும்பங்கள் இவற்றையும், அதனைத் தொடர்ந்து, படப்பிடிப்பு ஸ்டுடியோக்கள், வெளிப்புறப் படப்பிடிப்பாயினும் அவற்றில் பணியாற்றும் பல்வகைத் தொழிலாளிகள் - எல்லாவற்றையும் கணக்கிட்டால் லட்சக்கணக்கானோர் திரைப்படத் தொழிலைத் தங்களின் வாழ்க்கைக்குக் கிடைத்த ஒரே வழியாக நினைத்துக் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

சுமார் ஓராண்டு காலத்திற்கு மேலாகத் திரைப்படத் தொழில், பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக மிகவும் நலிவுற்று, அழிவின் விளிம்புக்குப் போய்விட்ட நிலையில்தான், அவர்கள் பேரணியாக ஓரணியில் திரண்டனர். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வலியுறுத்தி வருகின்ற கோரிக்கைகளுடன் என்னைக் கோட்டையில் சந்தித்தனர். அவர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை உணர்ந்து,

அவற்றை நிறைவேற்றுவதாக வாக்களித்தேன். அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நாற்பது சதவீத கேளிக்கை வரியை முப்பது சதவீதமாக ஆக்கியதிலும் - ஒட்டுமொத்த வரியில் (கம்பவுண்டிங்) சலுகை காட்டியதிலும், சுமார் 45 கோடி ரூபாய்க்கான சலுகைகளையே திரைப்படத்துறையினர் பெற்றிருக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் அந்த ஏடு கூறுவதுபோல விவசாயிகளோ, அல்லது வேறு எந்தப்பிரிவைச் சேர்ந்தவர்களோ, ஆசிரியர்களோ, தொழிலாளிகளோ புறக்கணிக்கப் பட்டுள்ளனரா என்றால், அதற்கு இதோ இந்த ஒரு சில எடுத்துக்காட்டுகளே தக்க விடையாக அமையுமென நம்புகிறேன்.

வேளாண்மைத் தொழிலை வளர்க்க, ஆறு குளங்களை ஆழப்படுத்தித் தூர்வார மட்டும் இந்த ஆண்டு 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறியாளர் துயர் துடைக்கக் குழு அமைத்து, அக்குழுவின் பரிந்துரையை உடனே ஏற்று அவசர நிவாரணமாக ஒதுக்கிய தொகை மட்டும் 64 கோடி ரூபாய். வணிகர்களுக்குக் கடந்த ஆண்டு வரிச் சலுகைகளில் 400 கோடி ரூபாயும், இந்த ஆண்டு, மேலும் 50 கோடி ரூபாயும் அரசுக்கு இழப்பு!

வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக விவசாயிகளின் நிலவரியை ரத்து செய்ததால், அரசுக்கு இழப்பு 44 கோடி ரூபாய்! கூட்டுறவுக் கடன்களில் விவசாயிகள் செலுத்த வேண்டிய அபராத வட்டியை ரத்து செய்ததால், இழப்பு 50 கோடி ரூபாய்! சத்துணவுத் திட்ட பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை வழங்க, அரசின் செலவு 140 கோடி ரூபாய்! ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர் சுமார் 12 லட்சம் பேருக்கு மத்திய அரசுக்கு நிகரான ஊதியம் வழங்க முடிவெடுத்ததால், இந்த ஆண்டு முதல் கூடுதல் செலவு சுமார் 1200 கோடி ரூபாய்!

பேருந்துக் கட்டணத்தை அண்டை மாநிலங்களைக் காட்டிலும் குறைவாக வசூலிக்க முடிவெடுத்ததால், ஆண்டு தோறும் இழப்பு சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல்! சத்துணவு அருந்தும் குழந்தைகளுக்கு இந்த ஆண்டு முதல், வாரம் ஒரு முட்டை வழங்குவதால், கூடுதலான செலவு - 19 கோடி ரூபாய்! மற்ற மாநிலங்களைப் போல நியாயமாக நிர்ணயிக்க வேண்டிய

பால் விலையில் 50 காசு குறைத்த காரணத்தால், அரசு இப்போது வழங்குகிற மானியத் தொகை ஆண்டொன்றுக்கு 30 கோடி ரூபாய்!

இவையன்னியில், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் - பிளஸ் டூ வரையில் படிக்கும் மாணவர்க்குப் பேருந்துகளில் இலவசப் பயணம் - இந்த ஆண்டு அறுபதாயிரம் பெண்களுக்குத் திருமண உதவிக்காக 60 கோடி ரூபாய் - இன்னோரன்ன பல திட்டங்கள் எல்லாப் பிரிவு மக்களையும், அவர்தம் நல்வாழ்வையும் மனத்திற்கொண்டுதான் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றையெல்லாம் மறந்துவிட்டுத் - இவற்றைத் தனது வாசகர்களில் நினைவிலேயிருந்து மறைத்துவிட்டு திரைப்படத் தொழிலை நலிந்துவிடாமல் பாதுகாக்க அரசு எடுத்த முடிவுக்காக, அந்த வார ஏட்டுக்கு மெய்சிலிர்க்கலாமா? உடல் புல்லரிக்கலாமா?

பல லட்சக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து - கடன்பட்டு ஒரு படத்தை வெளியிடுகிறவர், மனம் பதைக்கப் பதைக்க - மறுநாளே அந்தப் படத்தை ஒரு கூட்டத்தார் திருட்டு வீடியோக்களில் காட்டுவதால் ஏற்படும் அதிர்ச்சியை, உணர்வுபூர்வமாக எண்ணிப் பார்க்கவேண்டுமேயல்லாமல், கள்ளநோட்டு அடிப்பவர்களுக்கும் - கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கும் வக்காலத்து வாங்குவது போல - விஷயம் தெரிந்த விபரமான அந்த ஏடு விகடகவி பாஷையிலே எழுதலாமா? என்பதுதான் என்னுள்ளத்திலிருந்து உரிமையுடன் வெளிப்படுகிற வினாவாகும். திரைப்படத் தொழில் தேய்ந்து போக வேண்டுமென்று நினைப்பது, லட்சக்கணக்கான தொழிலாளர் மீது அக்கறையற்ற உணர்வின் வெளிப்பாடாகவே கருதப்படும்!

அனபுள்ள,

மு. க.

(18-07-1998)

2415. இப்படியும் நாடகம் நடக்குது இந்த நாட்டிலே!

உடன்பிறப்பே,

அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் புகழும் வேகத்தில், உத்தமர் காந்தியடிகளை இகழ்ந்துரைக்கும் செயலில் சில ஆண்டுகளுக்கு முன்பு, ஓர் அரசியல் கட்சி வடநாட்டிலே வலம் வந்தது உனக்கு நினைவிருக்கும். ஆனால், அந்தக்கட்சி முளைப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே நாதுராம் கோட்சே கும்பல் காந்தியடிகளைக் கொன்றதற்கு நியாயம் கற்பித்து, மதவாத இயக்கத்தின் சார்பிலே கோட்சேக்குத் துதிபாடிய ஒரு கூட்டம் இருந்ததையும் - அது இன்னமும் துணிவுடன் தனது ஆதரவை கோட்சேயின் வெறிச்செயலுக்கு வாரி வழங்குவதையும் எண்ணிப் பார்க்கவே மிகுந்த வேதனையாக இருக்கிறது.

இன்று ஏடுகளில் வந்துள்ள செய்தி என்ன?

மராட்டிய மாநிலத்தில், நான்தான் நாதுராம் கோட்சே பேசுகிறேன் என்ற பெயரில், காந்தியடிகளைச் சுட்டுக் கொன்ற கொடியவனின் பெருமைகளைக் கூறும் வண்ணம் ஒரு நாடகம் நடைபெற்று வருகிறது. அதைக் கண்டித்துப் பாராளுமன்றத்தில் பலத்த குரல் முழங்கியதற்குப் பதிலளித்த உள்துறை அமைச்சர் அத்வானி அவர்கள், அந்த நாடகத்தைத் தடை செய்யுமாறு மராட்டிய மாநில அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார். அத்துடன் அவர் காந்தியடிகளின் சிறப்புகளையும் எடுத்துரைத்து, நாட்டு விடுதலைக்கு அவர் நடத்திய அமைதி வழிப் போராட்டத்தையும் பாராட்டியிருக்கிறார்.

எத்தனை கருத்து வேறுபாடுகள் ஒரு தலைவருடன் இருந்தாலும் - அவர் மறைந்த பிறகு, அவரைப் பற்றிக் குறை கூறுவதையும், குற்றம் சொல்லி விமர்சிப்பதையும் தொடர்ந்து செய்வது அரசியல் நாகரிகமாக ஒப்புக் கொள்ள இயலாது.

காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முதல் நாள் வரையில், அவரது கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்துப் பேசிக்கொண்டும், எழுதிக் கொண்டும் இருந்தவர் தந்தை பெரியார். ஆனால், அவர் மிகவும் காட்டுமிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டு மறைந்தார் என்ற செய்தி கேட்டதும், இந்த நாட்டுக்கு ''காந்தி நாடு'' எனப் பெயர் வைக்க வேண்டுமென்று அறிக்கை விட்டவர் பெரியார்தான்!

காந்தியடிகள் கொல்லப்பட்ட நாளுக்கு முதல்நாள் வெளிவந்த விடுதலை ஏட்டில், கந்தமூலாதிகளைச் சிபார்சு செய்கிறார் காந்தி முனிவர் என்று அவரது கருத்தினைக் கேலி செய்து அறிஞர் அண்ணா ஆற்றிய உரையொன்று வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், அவர் ஒரு பாதகனின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார் என்றதும், பதறிப் போய் நெஞ்சு நெக்குருக வானொலியில் இரங்கலுரை ஆற்றியவரும் அதே அறிஞர் அண்ணாதான்!

இந்தப் பண்பாடு, மறைந்த தலைவர்களுக்குக் காட்டும் மரியாதையின் வெளிப்பாடு!

உலகத்தைச் சோகத்தில் ஆழ்த்திய அந்தச் செய்தி வந்தபோது, இதுதான் சமயமென்று பழியை முஸ்லிம்கள் மீது சுமத்தி, நாட்டில் ரத்தக் களரி ஏற்படுத்த ஒரு வஞ்சகக் கூட்டம் வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழகத்தில் மதக் கலவரம் தலைகாட்டத் தொடங்கியவுடன், பெரியார் அவர்களையும், அண்ணா அவர்களையும் வானொலி நிலையத்தினர் அழைத்து அமைதி உருவாக்கிட வேண்டுகோள் விடுக்கச் செய்தனர்.

அதற்குள், 'மகாத்மாவைக் கொன்றவன் ஒரு மராத்திய இந்து பிராமணன்' என்ற செய்தி வெளிவந்துவிட்டது. மதக் கலவரம் நல்லவேளையாகப் பிசுபிசுத்துவிட்டது. சகுனிகளின் சதிச் செயல் எடுபடவில்லை.

காந்தியடிகளின் மறைவையொட்டி, தஞ்சை மாவட்டம் நன்னிலத்தில் பெரியார் பேசும் பொதுக்கூட்டம் ஒன்று - அந்தக் கூட்டத்தில் நானும் பேசுகிறேன். காந்தியடிகளுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம் என்பதால், எல்லோருடைய பேச்சும் காந்தியடிகளுக்கு நேர்ந்த துன்ப முடிவு குறித்தே அமைந்திருந்தது.

"காந்தியாரைக் கொன்றது முஸ்லிம் என்று ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்தார்கள். அதை மறுக்கும் வண்ணம் அவரைக் கொன்றது ஒரு மராத்திய பிராமணன்தான் என்ற உண்மைச் செய்தி வந்துவிட்டது"

என்று நான் உருக்கமாகவும், ஆவேசமாகவும் பேசினேன். அப்போது எனக்கு இருபத்தி ஐந்து வயது. இளமை முறுக்கு அல்லவா? அந்தத் துடிப்புடன் பேசினேன். நான் பேசி முடித்தபிறகு இறுதியாகத் தந்தை பெரியார் பேசினார்.

"எனக்கு முன் பேசிய கருணாநிதி அவர்கள், காந்தியாரைக் கொன்றது ஒரு மராத்திய பிராமணன் என்றார். இல்லை. இல்லவே இல்லை. அவரைக் கொன்றது ஒரு துப்பாக்கி!"

இப்படி அழுத்தம் திருத்தமாகத் தனது பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டு பெரியார் அமர்ந்தார். கூட்டம் முடிந்து பெரியாருடன் வேனில் பயணம் செய்தபோது, நான் அவரிடம் கேட்டேன்;

"அய்யா - காந்தியாரைக் கொன்றது துப்பாக்கி என்றீர்களே! ஏன்?"

உடனடியாகப் பெரியார் சொன்னார் - ஆமாம்! யாரும் ஆத்திரப்பட்டு அவர்களைச் சேர்ந்தவர்களைத் தாக்கி ரகளை பண்ணக் கூடாதல்லவா? அதனால்தான், அப்படிச் சொன்னேன். நீ கூட அதுபோலப் பேசியிருக்கக்கூடாது. என்று பெரியார் கூறியதும், அய்யா இன்றைக்குக் காலையில் நமது விடுதலைப்பத்திரிகையில் கொட்டை எழுத்தில் முதல் பக்கத்தில் அப்படித்தானே செய்தி போடப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

அப்படிப்போட்டது கூட இந்த நேரத்தில் தவறுதான் - சமய சந்தர்ப்பம் தெரியாமல் போடப்பட்டிருக்கிறது.

- என விளக்கமளித்தார் தந்தை பெரியார். அதனையொட்டி எங்கள் உரையாடல் வேனில் தொடர்ந்தது.

உடன்பிறப்பே;

காலமெல்லாம் ''பிராமணதுவேஷி'' என்று விமர்சிக்கப்பட்ட அந்தப் பேரறிவாளர் பெரியார் அவர்கள், காந்தியடிகள் கொல்லப்பட்ட சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டைக்

காடாக்க எள்முனையளவும் விரும்பவில்லை. விரும்பியிருந்தால் அவர் அப்போது எவ்வளவோ வேகமான தாக்குதலைத் தொடுத்திருக்கக்கூடும். அதற்கு மாறாக, நாட்டுக்குக் காந்தி நாடு எனப் பெயர் சூட்டக் கோரிக்கை வைத்தார். காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றவர் யார் - எந்த வகுப்பினர் - என்ற விவரங்களைச் சொல்வது விபரீதமாக முடியுமெனக் கருதி, அதனைத் தன்பேச்சில் விலக்கிக் கொண்டார். ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், அதனைத் தீர்த்துக் கொள்ள வன்முறையை வழியாகக் கொள்வதை அடியோடு வெறுத்தார். வன்முறைக்குப் பதில் வன்முறை என்ற வெறிபிடித்த வறட்டு வாதத்தையும் அவர் கிஞ்சிற்றும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அவர் வழியில் வந்தவர்கள்தான் நாம் - நமது வழியும் அறவழிதான்! அன்பு வழிதான்! அரசியலில் பண்பாடு காத்திடும் தூயவழிதான்!

இவ்வழிக்கு நேர் எதிரான வழிதான், நான் நாதுராம் கோட்சே பேசுகிறேன் என்ற தலைப்பில் நாடகம் நடத்துவதும் - கோட்சேயைக் கோபுரக் கலசமெனப் போற்றிப் புகழ்வதும் - வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வாய்மைப்போர் புரிந்து, நாடு மீட்டுத் தந்த வார்தா முனிவர் காந்தியடிகளை வசைபாடுவதும் ஆகும்!

கருத்து மாறுபாடுகள் காழ்ப்புணர்ச்சி எனும் கட்டாரி கொண்டுதான் தீர்க்கப்படவேண்டுமென்பது கயமையின் உச்சம்.

கருத்து மாறுபாடுகளுக்கிடையிலேயும், கனிவுமிக்க அரசியல் நாகரிகம் முகிழ்ப்பதுதான் கலாச்சார மேம்பாட்டின் உச்சம்!

இதனை மராட்டிய மாநிலத்தில் நாதுராம் கோட்சே நாடகம் நடத்துவோர் உணர்ந்துகொண்டால் நாட்டுக்கு நல்லது.

திரு. அத்வானியின் அறிவுரையை அந்த மாநில அரசு ஏற்று நடந்தால் வரவேற்கலாம்! இல்லையேல், வினை விதைக்கிறார்களே வினை அறுப்பதற்கு என்ற வியாகூலந்தான், விசுவரூபம் எடுக்கும்.

அன்புள்ள,

மு. க.

(19-07-1998)

2416. கற்கண்டுச் செய்தியொன்று கரூரில் இருந்து!

உடன்பிறப்பே,

களிப்பூட்டும் செய்தியொன்று கரூர் மாவட்டத்திலிருந்து கிடைத்தது. 9.7.1998 அன்று தமிழ் நாளிதழி(தினகரன்) லும் 14.7.1998 அன்று ஓர் ஆங்கில ஏட்டி(இந்தியன் எக்ஸ்பிரஸ்)லும் - படங்களுடன் செய்தியொன்று விரிவாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதைக் கையுடன் கொண்டு வந்து அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அவர்கள், என்னிடம் மிகுந்த மகிழ்ச்சியுடனும், பெருமிதத்துடனும் நேற்றைய தினம் தந்து என்னை வியப்பிலும், களிப்பிலும் ஆழ்த்தினர்.

"A long felt dream of the downtrodden in the district has now became a reality as the district administration has exceeded its target of issuing free house site pattas to the people of various communities at Manavadi village where the samathuvapuram project as conceived by the Chief Minister is taking shape."

முதலமைச்சரின் திட்டமான சமத்துவபுரம் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் கரூர் மாவட்ட நிர்வாகம், நிர்ணயித்த இலக்கைவிட அதிகமான பட்டாக்களை வழங்கி, மணவாடி கிராமத்தில் மக்களின் நீண்ட நாள் கனவை உண்மையாக்கியுள்ளது என்று, ஆரம்பமாகும் அந்தச் செய்திக் கட்டுரையின் விரிவாக்கமாக மேலும் சில விபரங்களை நீயும் அறிந்து கொள்ள வேண்டும். மற்ற மாவட்டங்களின் நிர்வாகங்களும் பின்பற்ற வேண்டும்.

சரியாகச் சொல்லவேண்டுமானால், 35 ஆண்டுகளாகப் பட்டாக்களைப் பெறுவதற்காகக் காத்திருந்த மக்கள் மீது இப்போதுதான் மாவட்ட ஆட்சியின் கடைக்கண் பார்வை விழுந்துள்ளது என்று, அந்தப் பகுதி மக்கள் பரவசமுடன் பாராட்டுப்பத்திரம் படித்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கு சென்று வந்த செய்தியாளர்கள், என்னிடமும், அவர்கள் பணியாற்றும் பத்திரிகைகளுக்கும் தந்துள்ள இனிய செய்திகளையும், அவர்கள் அந்தப் பகுதி மக்களிடம் எடுத்த பேட்டிகளையும் உன்னோடு பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியடைவது என்பது, நாம் ஈடுபட்டுள்ள இலட்சியப்பயணத்துக்கு மேலும் ஊக்கம் தரக்கூடியதல்லவா?

அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களும், அனைத்துச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் ஒரே இடத்தில் சேர்ந்து வாழ வேண்டும் என்கிற எண்ணத்தில், சமத்துவபுரம் என்கிற திட்டத்தை அறிவித்ததற்கிணங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சமத்துவபுரம் அமைக்கப்படுகிறது. சமத்துவபுரத்துக்கு அரசாங்கமே நிலம் கையகப்படுத்தி அல்லது விலை கொடுத்து வாங்கி, தலா 5 சென்ட் நிலம் வீதம் 100 வீடுகள் கட்டுவதற்கு மனைகளை அமைக்கிறது. 100 பயனாளிகளை அனைத்து மதம், சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகப் பார்த்துத் தேர்வு செய்கிறது. அனைத்துச் சமுதாயங்களையும் சேர்ந்த 100 பேருக்கும் இலவசமாக மனைப்பட்டா வழங்குவதுடன், தலா ரூ.35 ஆயிரம் மானியமும் வழங்குகிறது.

தேவைப்படுகிறவர்களுக்கு இதோடு மேலும், 10 ஆயிரம் ரூபாய் வீடு கட்டுவதற்குக் கூட்டுறவு சங்கம் வாயிலாகக் கடன் வசதியும் செய்து கொடுக்கப்படுகிறது. இந்த அடிப்படையில் சமத்துவபுரத்தை அரசு உருவாக்குகிறது.

கரூர் மாவட்டத்தில், கடந்த ஆண்டு, வெள்ளியணை மற்றும் சின்னப்பனையூரில் சமத்துவபுரம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. மேற்கண்ட ஊர்களில் தலா 100 வீடுகள் வீதம் மொத்தம் 200 வீடுகள் கட்டும் பணி துரிதமாக நடந்து வருகிறது. இதில் அனைத்து சமுதாய மக்களும் சேர்ந்து வசிப்பார்கள். இதன் மூலம் மத, சமுதாய நல்லிணக்கம் பேணப்படுகிறது.

இப்படி ஒரு புறம், அனைத்துச் சமுதாய மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்காகத் திட்டம் கொண்டு வரப்பட்டு கழக அரசு சமத்துவபுரங்களை மாவட்டம் தோறும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

அதேசமயம், மறுபுறத்தில் ஓசை இல்லாமல் தானாகவே ஒரு சமத்துவபுரம் கரூர் மாவட்டத்தில் உருவாகியுள்ளது.

கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், மணவாடி பஞ்சாயத்து பகுதியில், கல்லுமடை என்கிற கிராமத்தில் கழக அரசு ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கியது. இப்பகுதியில் சுமார் 1000 பேருக்குக் கரூர் மாவட்ட நிர்வாகம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் வாயிலாக இலவச வீட்டுமனைகளைப் பிரித்து வழங்கியிருக்கிறது.

மும்மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்த இடத்தில் குடிசை போட்டு ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள் என்கிற தகவல் கிடைத்து, அந்தப் பகுதிக்குச் சென்றார்கள் செய்தியாளர்கள்!

எதிர்பாராமல் கிடைத்த தகவல் அடிப்படையில், எதிர்பார்த்தவாறே அங்கு சமத்துவபுரத்தைக் கண்டு வியந்தார்கள். அரசு வழங்கியுள்ள பட்டா நிலங்களில் 200-க்கும் மேற்பட்டவர்கள் அங்குக் குடிசை போட்டு வசித்து வருகிறார்கள். கடைகள் ஆங்காங்கே முளைத்து இருக்கின்றன.

தானாகவே உருவான இந்தச் சமத்துவபுரத்தில் வசிக்கும் சிலருடன் பேசியபோது, நிருபர்களுக்குக் கிடைத்த விஷயங்களை உன் பார்வைக்கு வைக்கிறேன்.

* ஜெயசந்திரன் (நாடக நடிகர்) - கூறுகையில்... சுமார் 20 ஆண்டுகளாக நாங்கள் குடியிருக்க ஓர் இடம் கேட்டு விண்ணப்பித்துக் கொண்டிருந்தோம். இப்போது, தி.மு.க. ஆட்சியில்தான் எங்களுக்குப் பட்டா கிடைத்து இருக்கிறது. இந்து - முஸ்லிம் - கிறிஸ்தவர் என மும்மதத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு வசித்து வருகிறோம். கலைஞர் திட்டத்தினால் விடப்பட்ட மினி பஸ் கூட இந்தக் குடியிருப்புக்கு அருகில் வந்து போகிறது. ரூட் பஸ்சும் - டவுன் பஸ்சும் இந்த வழியாக, போகும்போது ரோட்டு மேலே நிறுத்திச் சென்றால் வசதியாக இருக்கும் எனக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்றார்.

* ராஜம்மாள் (பழ வியாபாரி) கூறும்போது... நான் தட்டுக் கூடையிலே பழங்களை, கொண்டு போய் வீடு வீடாக விற்று பிழைத்து வருகிறேன். சொந்தமாக ஒரு வீடு இல்லையே என்கிற ஏக்கம் கவலை இப்போது நீங்கிவிட்டது என்றார்.

* ஜெகினாபானுமேரி கூறும்போது... கரூரில் வாடகை வீட்டில் நாங்கள் வசித்து வந்தோம். காலம் பூராவும் வாடகை வீட்டில்தான் குடியிருக்கவேண்டும் என நினைத்த எங்களுக்குச் சொந்தமாக

இந்த அரசாங்கம் மனை வழங்கி இருப்பது மகிழ்ச்சியாக இருக்குது என்றார்.

* தாந்தோணிமலை கல்யாண வெங்கட்ரமண சுவாமி கோவிலில், அர்ச்சகராக வேலை செய்யும் வரதராஜன் கூறுகையில்...

தாந்தோணிமலை கோவிலில் குருக்களாக வேலை செய்து வருகிறேன். எனக்குன்னு ஒரு வீடு இந்த அரசாங்கத்தாலே கிடைச்சிருக்குது என்றார்.

உடன்பிறப்பே,

அந்த இடத்தில் 42 ஏக்கர் நிலத்தை, ரூ. 12 லட்சம் கொடுத்து வாங்கி, ஆயிரம் பேருக்குப் பிரித்துக் கொடுத்து இருக்கிறோம்.

மணவாடிப் பகுதியில் முஸ்லிம்கள் 226 பேர், கிறிஸ்தவர்கள் 216 பேர், பிராமணர்கள் மற்றும் முன்னேறிய சமூகத்தினர் 217 பேர், மீதி உள்ள உள்ள மனைகளில் மற்ற சமுதாயத்தினரும் வசித்து வருகின்றார்கள். ரூ. 10 ஆயிரம் வரை ஒவ்வொருவருக்கும் கடன் வசதி செய்தல், அறிவொளி இயக்கம் தொடங்குதல் போன்றவற்றுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பட்டா கேட்டு விண்ணப்பிப்பவர்களின் மனுக்களை விசாரித்து, நடவடிக்கை மேற்கொள்ளத் தனியாக அதிகாரிகள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில், கரூர் மாவட்டத்தில் இலவச மனைப்பட்டா வழங்க இலக்கு 1125. ஆனால், வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 5462.

இந்தப் பணிகளை ஆர்வமுடன் செய்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவரும், நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகளும் பாராட்டுக்குரியவர்கள்.

நாம் விரும்பும் சமத்துவபுரம் - மாவட்டத்திற்கு ஒன்று இரண்டல்ல! நமது மாநிலமே - ஏன் நமது நாடே சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்பதுதானே!

சமத்துவபுரத் திட்டத்தை அறிவித்து, முதன்முதலாக வேலூர் மாவட்டம் பொய்கை என்ற ஊரில் அதற்கான அடிக்கல் நாட்டினேன். விரைவில் அதற்குத் திறப்பு விழா நடக்க இருக்கிறது. நூறு குடும்பங்கள் சேர்ந்து வாழக்கூடிய அந்தச் சமத்துவபுரத்தில்

வாழ்வதற்கு அக்கிரகாரவாசிகளும் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்களை அடிக்கல் நாட்டு விழாவில் கண்டு, அப்போதே பாராட்டினேன்.

பொய்கைக்கு அடுத்து, இதோ கரூரில் இயல்பாகவே சமத்துவபுரம் தோன்றியுள்ள செய்தி, நமக்குத் தாங்கொணா பூரிப்பைத் தருகிறது.

இந்த ஆண்டுக்குள் இன்னும் பல மாவட்டங்களில் சமத்துவபுரத் திறப்பு விழாக்கள் - அடிக்கல் நாட்டு விழாக்கள் நடைபெற இருக்கின்றன.

அதற்குப் பொய்கையும், கரூர் மணவாடியும் நமக்கு உற்சாக மூட்டுகின்றன.

வாழ்க சமத்துவம்!

வெல்க சமத்துவபுரத் திட்டத்தின் நோக்கம்!

அன்புள்ள,

மு. க.

(22-07-1998)

2417. வைரமணி மட்டுமல்ல; வைராக்கியமணியும் கூட!

உடன்பிறப்பே,

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று வைரமணிச் சொற்களை, நமக்கும், நாட்டுக்கும் வழங்கியுள்ளார் நமது அண்ணா என்றால், நம்மைப் பொறுத்தவரையில், அவற்றை வைரமணிகளாக மட்டுமல்ல - வைராக்கிய மணிகளாகவும் போற்றி நடக்கவேண்டும் என்பதை என்றைக்குமே மறந்திட இயலாது. மறந்திடவும் கூடாது.

பொதுவாழ்வுப்பணி - கழகம் வளர்த்திடும் பணி - கழகத்தின் ஆட்சிப்பணி இவை ஒவ்வொன்றிலும், கடமையும், கண்ணியமும், கட்டுப்பாடும் காக்கப்பட வேண்டும் என்ற நெஞ்சுறுதியுடன் ஒரு தவம் மேற்கொள்வதுபோல, கழகத்தின் ஒவ்வொரு உடன்பிறப்பும் செயல்பட்டால் அதைவிட எனக்கு மனநிறைவு தரத்தக்கது வேறெதும் இருக்க முடியாது. எந்தவொரு இயக்கமும், அது தொடங்கப்பட்டபோது கொண்டிருக்கும் வீறும், விறுவிறுப்பும், தியாக உணர்வும், தீவிரப்போக்கும் கால ஓட்டத்தில் சற்று மாறுதல் அடைவது இயல்பு. ஆனால் சில இயக்கங்கள், அவை அரசியல் அடிப்படையில் தோன்றியவைகளாக இருப்பினும் - அல்லது சமுதாயப்புரட்சியை முன்வைத்துத் தோன்றியவைகளாக இருப்பினும் - அடியோடு தலைகீழாக மாற்று உருவமே பெற்றுச் சீர்குலைவதற்கும் - சீ! சீ! என இகழப்படுவதற்கும் பதவிப்பற்றும், பணவெறியும் முக்கியக் காரணங்களாகி விடுவதை இந்த நாடு, தன்னுடைய கூர்மையான விழிகளால் அளவெடுத்துக் கொண்டுதானிருக்கிறது.

எத்தனை உயிர்கள், எத்தனை ரத்தம், எத்தனை தலைகள் விலையாகக் கொடுக்கப்பட்டுத் தியாக வேள்வியிலே விடுதலைப் போராட்டத்தில் வெற்றிக் கொடியேற்றியது காங்கிரஸ் பேரியக்கம்!

நாட்டு விடுதலைக்காகப் போர்க்களம் புகுந்திருந்த காலகட்டத்தில், காங்கிரஸ் பேரியக்கம் பெற்றிருந்த சிறப்பும், செல்வாக்கும், புகழும், பெருமையும் அக்கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, மெல்ல மெல்லக் கருமேகம் சூழ்ந்த வானத்தின் நிலைமைக்கு உள்ளாகிவிட்டதையும், மீண்டும் ஒரு விடியலுக்காக அக்கட்சி கடும் விரதம் மேற்கொண்டிருப்பதையும் இந்திய நாட்டு வரலாறு, பொன் எழுத்துகளால் பொறிப்பதற்கு மாறாகப் புண் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய நிலையன்றோ உருவாகியிருக்கிறது.

ஆட்சியும், அதிகாரமும் தியாக உள்ளத்தைத் தீய்த்து விடும் - தீர உணர்வை மாய்த்துவிடும் - தேவைகளைப் பெருக்கிக் கொள்ள ஆசையைத் தூண்டும் - அவற்றைத் தீர்த்துக்கொள்ள நாடுகிற வழி தீயவழியெனத் தெரிந்தாலும், அந்தச் சமயத்தில் அது தூய வழியாகத் தெரியும்! இந்த மாற்றம்தான் மாற்றுக்குறையாத தங்கமாக இருந்த காங்கிரஸ் பேரியக்கத்தை மாத்திரமல்ல - மற்றும் பல அரசியல் சமுதாய இயக்கங்களையும் மாசு மருவுள்ளவைகளாக ஆக்கிவிட்டிருக்கின்றன.

இதையெல்லாம் ஆழமாக உணர்ந்திருந்த காரணத்தினால்தான், 1967-ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிக்கு வருவதற்கானத் தீர்ப்பை, தமிழ்நாட்டு மக்கள் வழங்கியபோது பேரறிஞர் அண்ணா அவர்கள், பெருமகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக பெரும் வருத்தமுற்றார்.

சென்னையில், நுங்கம்பாக்கம் அண்ணா இல்லத்தில், 1967 தேர்தல் முடிவுகளை வானொலியில் கேட்டுக் கொண்டே அண்ணா அவர்களைச் சுற்றி, நானும் மற்றும் அவரது தம்பிமார்களும் அமர்ந்திருக்கிறோம்.

ஒன்று, இரண்டு என்று வெகுவேகமாகக் கழக இடங்கள் வெற்றி வெற்றி எனக் கூடிக்கொண்டே போகிறது. எப்போதுமே மகிழ்ச்சியை அமைதியாக அடக்கிக்கொள்ள முடியாத என்னரும் நண்பர் என்.வி. நடராசன் அவர்கள், எழுந்து குதிக்கிறார். இரவு எட்டு மணியாகிறது! கழகம் வெற்றி பெற்ற இடங்கள் நூறு என்று வானொலி அறிவிக்கிறது. இன்னும் நூறுக்கு மேற்பட்ட இடங்களின் எண்ணிக்கையும், முடிவும் அறிவிக்கப்படவேண்டிய நிலையில், கழகம் தான் ஆட்சி அமைக்கப்போகிறது என்ற உறுதி

எல்லோருக்கும் நம்பிக்கையுடன் பிறக்கிறது. சற்று நேரத்தில் கழக வேட்பாளர்கள் வெற்றி, நூறையும் தாண்டி வேகமாகச் செல்கிறது.

அண்ணா! இப்ப என்ன சொல்றீங்க? என்று பூரிப்பு பொங்க என்.வி. நடராசன் அவர்கள், எங்களையெல்லாம் கட்டித் தழுவிக்கொண்டு துள்ளுகிறார்.

ஆனால், அண்ணா அமைதியாக வீற்றிருக்கிறார். அவர் முகத்தில் மகிழ்ச்சியின் மின்னல்கூட இல்லை. என்ன அண்ணா! ஆட்சியே வரப்போகிறது - இல்லை இல்லை - வந்தே விட்டது. நீங்கள் வருத்தமாக இருக்கிறீர்கள்?

இந்தக் கேள்விகள், என்.வி.என். இடமிருந்து மட்டுமல்ல - எல்லாத் தம்பிமார்களிடமும் இருந்தும் கிளம்புகிறது. அண்ணா நீண்ட மௌனத்திற்குப் பிறகு வாய் திறந்தார். அந்தச் செம்பவள இதழ்கள் சிந்தும் முத்துக்களுக்காகக் காத்திருந்த எங்கள் கண்கள் அவரது முகத்தை மொய்த்துக் கொண்டன.

> "ஆட்சி வந்துவிட்டது! சரி! ஆனால், கட்சி என்ன ஆகுமோ என்ற கவலை வந்துவிட்டது."

இதுதான் அண்ணாவின் சோகத்துடன் கலந்து பொழிந்த சொல்லருவி!

அவர் கவலைப்பட்டது போலவே, ஆளுங்கட்சியான கழகத்துக்கு எத்தனையோ சோதனைகள் - அவர் இருக்கும்போதும், அவரை இயற்கை அணைத்துக் கொண்ட பிறகும்!

உடன்பிறப்பே! அண்ணா அமைத்துத் தந்த இந்த ஆட்சியின் சார்பாக - அவர் வழிநின்று ஆயிரமாயிரம் சாதனைகளை நிகழ்த்தினாலும்கூட, அதற்காக இந்த ஆட்சிக்கு அனைத்துப் பிரிவு மக்களிடமிருந்தும் சான்றிதழ்கள் படித்தளித்து உற்சாகமூட்டினாலும் கூட, அன்றைக்குக் கழகம் நூறு இடங்களுக்குமேல் வெற்றிமேல் வெற்றி ஈட்டியதாகச் செய்திகள் வந்து கொண்டிருந்தபோது அண்ணா அவர்கள் உணர்வுபூர்வமாகச் சொன்ன அந்த வார்த்தைகளை என்னால் மறந்துவிட முடியவில்லை.

நாள்தோறும் நினைவுபடுத்திக்கொண்டு செயல்படுகிறேன்! நாழிகை தோறும் நினைவுபடுத்திக் கொண்டு பணியாற்றுகிறேன்! நடமாடும்போது மட்டுமல்ல! உறங்கும்போது கூட என்னை

அடிக்கடி தட்டி எழுப்பி, படுக்கையில் - சிந்தனையில் உட்கார வைப்பது கூட அண்ணாவின் அந்தச் சொற்கள்தான்! ஆம்! அன்றைக்கு வேதனையுடன் வெளிப்படுத்தினாரே, அந்தச் சொற்கள்!

"ஆட்சி வந்துவிட்டது சரி! ஆனால், கட்சி என்ன ஆகுமோ என்ற கவலை வந்துவிட்டது."

அண்ணா பட்ட அந்தக் கவலையைத் தீர்ப்பதற்குத்தான் - அப்படியொரு கேடு, கட்சிக்கு வந்துவிடக்கூடாதென்பதற்குத்தான் - எத்தனையோ சோதனைகளிலும், வேதனைகளிலும், துரோகச்செயல்களிலும், அடக்குமுறைகளிலும், அவதூறுகளிலும் இருந்து - விடுபட்டுத் தொடர்ந்து வீறுநடை போடுகிறோம். வெற்றிச் சங்கு முழக்குகிறோம்.

ஆட்சி என்பது வரும் போகும் - கட்சிதான் நமது இதயத் துடிப்பு, சுவாசக்காற்று, குருதியோட்டம் - உயிர், உடல் எல்லாமே என்ற உணர்வுடன் இருப்பதால்தான், அன்று அண்ணாவுக்கு ஏற்பட்ட கவலைக்குரிய காரணம், கழகத்தைத் தாக்கிடாமல் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறோம்.

எல்லோருமா? என்று யாராவது கேட்கக்கூடும்! எவரேனும் ஒருவர், இருவர் கட்சியைக் காட்டிலும் ஆட்சி அதிகாரங்களும், பதவிப்பவிசுகளும்தான் பெரிதெனக் கருதலாம்!

அவர்கள் என் உடன்பிறப்புகள் அல்லர் - என்று ஒதுக்கி வைத்துவிட்டுத்தான்,; உழைக்கின்றேன் ஒவ்வொரு விநாடியும்! உத்தம உடன்பிறப்பாம் உன்னையும், உன் நாடி நரம்புகளால் புனையப்பட்ட இந்த இயக்கத்தையும் பாதுகாத்திட!

எனக்கும், கழகத் தலைமைக்கும் துணை நிற்கும் நீயும், உன்போன்ற கழகக் காவலர்களும் - உடனடியாகக் கழகத்தின் எழுச்சிக்காக நடத்தி முடிக்கவேண்டிய பணியை நமது பொதுச்செயலாளரும், கழக அமைப்புச் செயலாளர்களும், நானும் கடந்த இரண்டு மாத காலத்திற்கு மேலாக நினைவூட்டி வருகிறோம்.

அதுதான் கழக உறுப்பினர்களைப் புதுப்பித்தலும், சேர்த்தலும் ஆகிய அரும்பணியாகும். அப்போதுதானே அண்ணா உருவாக்கிய இந்தக் கழகத்தின் வலிவையும், பொலிவையும் அமைப்பு ரீதியாகக்

கட்டி வளர்த்து, நமது கண்ணின் மணியெனும் கொள்கைகளை இந்த மண்ணில் வென்றெடுக்க முடியும்.

இது கழகத்தின் பொன்விழா ஆண்டு - உன் வாழ்த்துகளைப் பெறுகிற எனக்கும் பவளவிழா ஆண்டு - இந்த ஆண்டில், கழகப் பொன்விழா உறுப்பினராக என் அன்பு உடன்பிறப்புக்களின் பெயர்கள், உறுப்பினர் சேர்க்கும் படிவங்களில் பதிந்திட வேண்டாமா?

கடமையுணர்வுடன் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு - கண்ணியத்துடன் தலைமைக் கழகத்திற்கு விபரங்கள் வழங்கப்பட்டு - கட்டுப்பாட்டுடன் கட்சித் தேர்தல்களை ஜனநாயக முறையில் நடத்தி முடித்திட,

நாட்கள் குறிக்கப்படும் பொதுக்குழு, சென்னையில் ஆகஸ்டு 1 மற்றும் 2 தேதிகளில் நடைபெறுகிறது.

அந்த நாட்களுக்குள், அதாவது ஜூலை 31 ஆம் தேதிக்குள், உறுப்பினர்கள் சேர்க்கப்பட்ட படிவங்கள் தலைமைக்கு வந்துவிடவேண்டும். முறைப்படி உடனடியாக அமைப்புகளின் தேர்தல்கள் அறிவிக்கப்பட இருக்கிறது.

மேலும் சில நாட்கள் தவணை கிடைக்கும் என நம்புவது வீண் நினைப்பு!

அண்ணா உருவாக்கிய ஆட்சியை அவர் வழி நின்று அயராதுழைத்துக் காத்து நிற்கவும் - அதற்கும் ஒருபடி மேலாக, கட்சி என்ன ஆகுமோ? என்று கவலைப்பட்ட அண்ணாவின் கவலையை நினைத்துப் பார்த்து, நம் உயிரினுமேலான இந்தக் கழகத்தின் இருவண்ணக் கொடியை உயர்த்திப் பிடிக்கவும் கொண்டுள்ள உறுதியைக் குன்றின் மீதேறி முரசு கொட்டி முழக்குவோம்!

அன்புள்ள,

மு. க.

(25-07-1998)

2418. மார்க்சிஸ்ட் ஏட்டுக்கு மறுப்பல்ல; விளக்கம்!

உடன்பிறப்பே,

"எதிர்க்கட்சியாக இருக்கிற வரையில், மக்கள் மீதான அரசின் வரி உயர்வு, கட்டண உயர்வுத் தாக்குதல்களை வன்மையாக எதிர்ப்பது, ஆளுங்கட்சியாக மாறிவிட்டால் அதே தாக்குதல்களைத் தானும் நடத்துவது என்பது முதலாளித்துவக் கட்சிகளின் ஒரு நடைமுறை. அதில் இருந்து, தான் விதிவிலக்காகி விடவில்லை என்பதுபோல் தி.மு.க. அரசும், தமிழக மக்கள் மீது கடுமையான மின்சாரக் கட்டண உயர்வைச் சுமத்தியிருக்கிறது."

இது ஒரு நாளேட்டில் வந்துள்ள தலையங்கத்தின் முதற்பகுதி! எதிரிக் கட்சியொன்றின் அதிகாரபூர்வமான ஏடாகவோ அல்லது ஆதரவு ஏடாகவோ இருந்து, இப்படியொரு தாக்குதலைக் கழக அரசின்மீது தொடுத்திருந்தால் நான் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். வேதனையும் அடைந்திருக்க மாட்டேன். எதிரிகள்தானே என்று எண்ணி ஆறுதல் பெற்றிருப்பேன். இப்படியொரு தலையங்கம் தீட்டியிருப்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வமான நாளிதழ் என்கிறபோது, உனக்கே கூட வியப்பு மேலிடுகிறதல்லவா!

மின் கட்டணத்தில் செய்யப்பட்டுள்ள மாறுதல் குறித்து, மார்க்சிஸ்ட் கட்சி, தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு எத்தனையோ கடுமையான வார்த்தைகளை அகராதியைக் குடைந்தெடுத்து என் மீதும், கழக அரசின் மீதும் சரமாரியாகப் பொழிந்திருக்கலாம். ஜனநாயகத்தில் வரவேற்கப்படவேண்டியதும் - மதிக்கப்பட வேண்டியதுமான விமர்சனங்களை வெறுப்பின்றி சந்தித்துத்தான் ஆகவேண்டும். ஆனால், முதலாளித்துவக் கட்சிகளின் நடைமுறைதான் தி.மு.க. அரசின் நடைமுறை என்று

எப்படித்தான் தலையங்கம் தீட்டிட மார்க்சிஸ்ட் கட்சி நண்பருக்கு மனம் வந்ததோ என்றுதான் புரியாமல் திகைத்து நிற்கிறேன்.

1969ஆம் ஆண்டு ஆட்சித்தலைமைப் பொறுப்பேற்று, 1976ஆம் ஆண்டு எமர்ஜன்சிக் கொடுமையை எதிர்த்து லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடனும், மற்றும் மார்க்சிஸ்டுகளுடனும் இணைந்து நின்று போர்க்குரல் கொடுத்து, அதன் காரணமாகவே ஆட்சியை இழந்த அந்தக் கால கட்டத்திலும் சரி! 1989இல் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, ஆளுநரின் கருத்துக்கு மாறாக - ஆளுநரின் அறிக்கையில்லாவிடினும் கவலையில்லையென ஜனநாயகக் கொலையை மத்திய அரசு நடத்தியபோது, 1991-ஆம் ஆண்டு ஆட்சியைப் பலி கொடுத்த அந்தக் காலகட்டத்திலும் சரி!

இப்போது இந்த இரண்டரை ஆண்டுக்காலத்திலும் சரி! முதலாளிகளுக்கு வெண்சாமரம் வீசுகிறக் கொத்தடிமை நிலைக்கு என் கொற்றம், என்றைக்குமே தாழ்ந்து தலை வணங்கியதில்லை. ஆனால், ஒரு மின் கட்டண மாறுதலுக்காக, மார்க்சிஸ்டு கட்சி, தி.மு.க. ஆட்சியை முதலாளித்துவக் கட்சிகளுடன் ஒப்பிட்டுக் குறிப்பிட்டிருப்பதன் உள்நோக்கம்தான் எனக்கு விளங்கவில்லை. அந்தக் கட்சியின் தலைவர்களுக்கோ - நண்பர்களுக்கோ - அல்லது அக்கட்சியின் அதிகாரப் பூர்வமான அந்த ஏட்டுக்கோ - தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி, கடந்த ஐந்து ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் எள்முனையளவுகூடப் பெருகிடவில்லை என்ற உண்மை, தெரியாத ஒன்றல்ல!

1989ல் கழக ஆட்சி ஆரம்பமானவுடன், ஏற்கனவே உச்சநீதிமன்ற வழக்கின் காரணமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த வடசென்னை அனல் மின்நிலையத் திட்டத்தை, எந்த முதலாளிகளுக்கும் வளைந்து கொடுக்காமல் நிறுவிடக் கடும் முயற்சி மேற்கொண்டு - அதனை இந்தியக் குடியரசுத் தலைவரை அழைத்துத் தொடங்கி வைத்து - அனல் மின்நிலையம் இயங்கிடச்செய்த பிறகு, எந்தவொரு பெரும் மின் உற்பத்தி நிலையத்தையும் உருவாக்கிட, அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சியில் முயற்சி இல்லை என்பது அனைவரும் அறிந்ததேயாகும்.

1996ல் கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்ததும், மின்சாரத்தின் தேவை அதிகமாகிற அளவுக்கு தொழில்மயமாகிறது தமிழகம். அந்தத் தேவையை நிறைவு செய்யுமளவுக்கு மின்

உற்பத்தியில்லை என்ற நிலை கூடாது என்பதற்காக - மின் உற்பத்தியைப் பெருக்கிட, குறுகிய காலத் திட்டங்களாக கோரப்பட்டு, அவற்றில் மத்திய அரசு முதல்கட்டமாக ஐந்து திட்டங்களுக்கு மட்டுமே நாப்தா வழங்க ஒப்புக்கொண்டதால், பின்வரும் மின்திட்டங்கள் விரைவில் தொடங்கப்பட்டுள்ளன.

* தூத்துக்குடியில் இரண்டு மின் திட்டங்கள் - இதன் மூலம் 206 மெகாவாட் - டிசம்பர் 1999இல் உற்பத்தி தொடங்கும்.
* கள்ளிக்குடி மின் திட்டம் - 106 மெகாவாட் - டிசம்பர் 1999இல் உற்பத்தி தொடங்கும்.
* எண்ணூர் மின்திட்டம் - 103 மெகாவாட் - மார்ச் 2000இல் உற்பத்தி தொடங்கும்.
* ஓசூர் மின்திட்டம் - 52 மெகாவாட் - மார்ச் 2000இல் உற்பத்தி தொடங்கும்.

இவைகளையன்னியில், 117 மெகாவாட் உற்பத்தியாகக் கூடிய வாடிப்பட்டி மின்திட்டம், ஜூலை 2000 இல் தொடங்கும். மற்றும் செங்கற்பட்டு, பெருந்துறை, அரக்கோணம் ஆகிய திட்டங்கள் மூலம் 300 மெகாவாட் மின்உற்பத்தி 2000 இல் தொடங்கும்.

பேசின் பிரிட்ஜ் 200 மெகாவாட் மின்திட்டம் - 1998 டிசம்பரில் உற்பத்தியைத் தொடங்கும். மற்றும் பிள்ளைப் பெருமாள் நல்லூர் - சமயநல்லூர் - சாமல்பட்டி மின்திட்டங்கள் மூலம், சுமார் 530 மெகாவாட் 2001-க்குள் உற்பத்தி தொடங்கப்பட இருக்கிறது. மற்றும் நெய்வேலி (மூன்றாம் கட்டம்), ஸ்பிக், வீடியோகான் மின் திட்டங்கள் பெரிய அளவில் தொடங்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, 2003க்குள் உற்பத்தி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சாரத்தின் தேவைகள் பெருகுகிற அளவுக்குத் தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அந்தத் தேவைக்கு ஏற்ப, மின்சாரத்தை வழங்க வேண்டுமென்பதற்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படும்போது, இடையில் ஏற்பட்ட பற்றாக்குறைக்கு மராட்டிய மாநிலங்களிலிருந்தும் - பஞ்சாப்பிலிருந்தும் - வடகிழக்கு மாநிலங்களிலிருந்தும் அதிக விலை கொடுத்து மின்சாரத்தைப் பெற்று வழங்கியதற்குப் பல கோடி

ரூபாய் இழப்பு ஏற்பட்டது என்பது எல்லோரும் அறிந்ததேயாகும். வணிக வரிச் சலுகைகளாலும், பல பொருள்களுக்கு வரி ரத்து செய்யப்பட்டதாலும் இந்த இரண்டரை ஆண்டுகளில் 500 கோடி ரூபாயும் - மத்திய அரசுக்கு நிகரான ஊதியம் மாநில அரசின் அலுவலர்க்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கியதால், ஆண்டுக்கு 1200 கோடி ரூபாயும் - விவசாயிகளின் கூட்டுறவுக் கடனுக்கான அபராத வட்டி, நிலவரி ஆகியவற்றை ரத்து செய்ததால் சுமார் 100 கோடி ரூபாயும் - மேலும் பல சலுகைகளாலும் எத்தனையோ கோடி இழப்பு!

அந்த இழப்பு மட்டுமா? விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை, எக்காரணம் கொண்டும் நிறுத்தமாட்டோம் என்று உறுதி கொண்டுள்ளதாலும் - ஏழை எளியோர் குடிசைகளுக்கு மின்கட்டணம் இல்லையென்பதாலும் - 50 யூனிட் பயன்படுத்துகிற வீடுகளுக்கும், 100 யூனிட் பயன்படுத்துகிற வீடுகளுக்கும் - முறையே ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு பழக்கத்தில் இருக்கிற 65 காசும், 75 காசும் அப்படியே இருக்கிறது, உயர்த்தப்படவில்லை என்பதாலும் - மின் வாரியத் தொழிலாளர் ஊதிய உயர்வாலும், இந்த அரசு வழங்கவேண்டிய மான்யத் தொகை பலகோடி என்பதை மறந்துவிட்டு, ஏழை எளியோரை இந்த மின்கட்டணம் வாட்டி வதைக்கிறது எனக் கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதமாக இருக்க முடியுமா? அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதமாக இருப்பினும், அதற்காக இந்த அரசை முதலாளித்துவ அரசுகளுடன் ஒப்பிட்டு எழுதுவதும், பேசுவதும், வெந்த புண்ணில் வேல் எறியும் செயலாக அல்லவா இருக்கிறது!

ஒரு திரைப்படத்தில் நான் எழுதிய வசனத்தில் ஒரு ஏழை குமுறுவான்! என்னை முட்டாள் என்று சொல்லுங்கள் - கோழையென்று சொல்லுங்கள் - ஆனால் துரோகியென்று மட்டும் கூறாதீர்கள் என்று! அதைப் போலத்தான் நானும், இந்தக் கழகத்தை எப்படி வேண்டுமானாலும் வசை பாடுங்கள் - முதலாளித்துவ கட்சி என்று மட்டும் வர்ணிக்காதீர்கள் என்று மார்க்சிஸ்டுகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, 20.7.1998 அன்று தமிழகத்தில் மின்கட்டண மாறுதல் செய்யப்பட்டபோது, மாற்றாமலே இருக்கிற மின்கட்டணம் - வீடுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 65 காசு - அதாவது 50 யூனிட் வரையில்!

ஆனால் மார்க்சிஸ்ட் கட்சி ஆட்சி நடத்தும் மேற்கு வங்கத்தில், 1996-ஆம் ஆண்டிலிலேயே, 50 யூனிட் வரையில் மின்கட்டணம், வீடுகளுக்கு ஒரு யூனிட்டுக்கு 108 காசு! 51 யூனிட் முதல் 100 யூனிட் வரையில் வீடுகளுக்கு, தமிழ்நாட்டில் ஒரு யூனிட்டுக்கு மின்கட்டணம் 75 காசு - ஆனால் மேற்கு வங்கத்தில் 128 காசு!

மேலும், 101 யூனிட் முதல் 200 யூனிட் வரை, தமிழகத்திலே மின் கட்டணம் 130 பைசா. மேற்கு வங்கத்தில் 101 யூனிட் முதல் 120 யூனிட் வரை 128 பைசா என்றும், 121 யூனிட் முதல் 200 யூனிட் வரை 166 பைசா என்றும் மின் கட்டணம் 1996-ஆம் ஆண்டிலேயே நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இப்படி ஒப்பிட்டுக் காட்டி, மேற்கு வங்கத்தை மனம்போன போக்கில் நான் விமர்சிக்க விரும்பவில்லை. அங்குள்ள நிலை அது. நிலைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட மின்கட்டணம்.

தமிழகத்தைப் போல, அனல் மின்நிலையங்கள் மூலம் மின் உற்பத்தியைப் பெரும்பாலும் எதிர்பார்க்கிற மாநிலங்களில் மின்கட்டணம் சற்று அதிகமாகத்தான் இருக்கும் - ஆனால் அதிலும், ஏழை எளியோரின் குடிசைகளுக்கும், விவசாயிகளுக்கும் மின்கட்டணம் இல்லை - குறைந்த வருவாய் உடையவர்களுக்கு மின் கட்டணத்தில் சலுகை - தமிழ்நாட்டில்தான் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை, உன் போன்ற உடன்பிறப்புகள் ஊருக்கும், நாட்டுக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

நமது கட்சி முதலாளித்துவக் கட்சியா என்பதற்கான விளக்கம் - தேவைப்பட்டால் அவசியம் ஏற்படும்போது மேலும் விரிவாக நான் தரத் தயாராயிருக்கிறேன். உன்போன்ற உடன்பிறப்புகள் அதற்கு விளக்கமளிக்கத் தொடங்கி, வீணாக உறவில் விரிசல் ஏற்படுத்திடக் காரணமாக இருந்திட வேண்டாம்.

அன்புள்ள,

மு. க.

(26-07-1998)

2419. கனியாக - தேனாக - கற்கண்டாக!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் உன் கரங்களில் தவழ்ந்தபடி உன் கண்ணொளியால் அதிகப் பிரகாசம் பெறும்போது, நீ ஒருவேளை சென்னைப் பொதுக்குழுவில் இருப்பாய், அல்லது பொதுக்குழுவின் தீர்மானங்கள் - எடுத்துரைக்கப்படும் கருத்துகள் பற்றியச் சிந்தனையில் சிற்றூரிலோ, பேரூரிலோ, நகரிலோ, மாநகரிலோ இருந்து கொண்டு இந்தக் கடிதத்தைப் படித்துக்கொண்டே, என்னையும் நினைத்துக்கொண்டிருப்பாய்! அதாவது நான், உன்னை நினைத்துக்கொண்டே இதை எழுதுவதைப்போல!

தொடர்ந்து, வாரம் மூன்று அல்லது நான்கு முறையாவது உனக்குக் கடிதம் எழுதுவது என்று தீர்மானித்துக்கொண்டுதான் எழுதத் தொடங்கினேன், அவ்வாறே எழுதினேன்.

ஆட்சியென்றவுடன் அஞ்சல் வாயிலாகத் தொடர்பு கொள்வதைக் கூட மறந்துவிட்டேன் என்று, எங்கே நீ நினைத்துக்கொள்வாயோ என்ற காரணத்தால் அல்ல! ஏனென்றால், ஆட்சியைவிட நீயும், நானுமிருக்கிற இந்தக் கழகத்தை அதிகம் நேசிப்பவன் நான் என்பதையும் - அதிலும் உன்னை என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்பு என்று நெஞ்சில் பதியவைத்துக் கொண்டிருப்பவன் என்பதையும் நீ அறியாமல் இல்லை. அறிந்துள்ள காரணத்தினால்தான், உன்னை நான் மறந்துவிட்டேன் என்று மறந்தும் கூட நீ கூற மாட்டாய் என்பது எனக்கும் தெரியும்.

தொடர்ந்து கடிதம் எழுத எண்ணியதற்குக் காரணமே, எந்தக் கால கட்டத்திலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் - ஆளுங்கட்சியாக இருந்தாலும் உன்னையும், என்னையும் பிணைப்பது இந்தக் கடிதம்தானே!

முரட்டுத்தனமான, மூர்க்கத்தனமான தணிக்கைமுறை, எமர்ஜன்சி காலத்திலே என்னைத் தடுத்து நிறுத்தித் தாக்கியபோது

கூட, நான் உனக்குச் சொல்லவேண்டிய கருத்துகளை உனக்குப் புரியும்படியாகவே கடிதவாயிலாக சொல்லி இருக்கிறேன்.

அண்ணா நினைவிடத்திற்கு வர இயலாதவர்கள் என்ற வாசகத்தை வெளியிட்டதன் மூலமே, யார் யார் மிசா கைதிகளாக சிறையில் பூட்டப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை, 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் தேதியன்று குறிப்பால் உனக்கு உணர்த்தியவனல்லவா நான்! நீயும் அதனை உணர்ந்துகொண்டு உடல் சிலிர்த்ததும் உண்டு - உணர்ச்சிப்பிழம்பானதும் உண்டு!

யாருமே என்னைப் பார்க்க என் வீட்டுக்கு வரக் கூடாது - கழக அலுவலகத்திற்கு வரக்கூடாது - என் காரை ஓட்டுகிறவர்களுக்கே கூட உடனடியாகச் சிறைவாசம் - வெளியூரில் எனக்குச் சாப்பாடு போட்டவர்களின் கைகளுக்கு விலங்கும், கடைத்தெருவில் அவர்களுக்கு வீதி உலாவும், என்றெல்லாம் கொடுமைகள் கொடுக்குகளை அலகுகளாகக் கொண்டு என் இதயத்தைக் குத்திக் குதறிக் கொண்டிருந்த போது கூட, அந்தக் குருதித்துளியை மையெனக் கொண்டு உனக்குத் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தவனல்லவா நான்!

எனவே அந்த நெருக்கடியில் கூட, கடிதம் மூலம் தொடர்பு கொண்டு நீயும், நானும் கழகத்தை வளர்த்திருக்கிறபோது, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும் போது மட்டும் அந்தக் கடமையைத் துறந்து விடுவேனா? என் கண்மணியாம் உன்னை மறந்து விடுவேனா?

இருப்பினும், இடையில் ஒருவாரம் கடிதம் மூலம் உன்னைத் தொடர்பு கொள்ளாமைக்குக் காரணம் உண்டு - தூர்வாரும் பணிகளைப் பார்வையிட, தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர், மதுரையெனப் பல மாவட்டங்களில், ஓய்வில்லாமல் சுற்றிவந்ததால் உடல் நிலை சற்றுப் பாதிக்கப்பட்டு விட்டது. இந்தச் செய்தி எதிர் பார்ப்பாளர் சிலருக்கு இனிப்பாக இருக்கும். உனக்கோ இதயம் பிளக்கும்.

இந்தக் கடிதத்தை நான் எழுதுவது, இரவு ஒரு மணிக்கு, இந்தியக் குடியரசுத் துணைத் தலைவரை விமான நிலையத்தில் வரவேற்கச் சென்று வந்த பிறகுதான்!

இப்போது நலமாக இருக்கிறேன். நலிவுற்று இருந்தபோதும் - அதற்காக எந்த நிகழ்ச்சியையும் ஒத்தி வைக்கவில்லை. ரத்து செய்யவுமில்லை.

வெளியூர் செல்லாமல் சென்னையில் மட்டும் நடந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டேன் என்பதை ஏடுகள் உரைத்திட நீ கேட்டிருப்பாய்!

குறிப்பாக, நமது பேராசிரியர் தலைமையில் நடைபெற்ற ஒரு விழா - 235 மாணவ மாணவியர்க்குப் படிப்புச் செலவுக்கான பத்திரங்களும், நிதியும், பாராட்டும் வழங்கும் விழா - அந்த விழாவில் பேராசிரியரும், பொருளாளரும் எவ்வளவோ தடுத்தும் கூடக் கேளாமல், அத்தனை மாணவ மாணவியர்க்கும் நின்றவாறு அவற்றை வழங்கியதோடு, உரையாற்றியும் முடித்தேன்.

என்ன செய்வது! கட்சிப்பொறுப்போ அல்லது ஆட்சிப் பொறுப்போ எதுவாயினும், ஏற்றுக்கொண்டதை நிறைவேற்றித்தானே ஆக வேண்டும்.

உதாரணமாக, நீயே ஒரு காரியத்தை உனக்காகச் செய்கிறாய் என்று வைத்துக்கொள் - அதிலே நீ காட்டுகிற அக்கறையிலும், ஆர்வத்திலும் 50 சதவிகிதமாவது நீ ஏற்றுக் கொண்ட பொறுப்பில் காட்டினால்தானே மனச்சாட்சி உன்னைக் குற்றம் கூறாமல் இருக்கும்.

நீயோ அல்லது உன்னைப்போன்ற ஓர் உடன்பிறப்போ, யோசித்துப் பார்க்க வேண்டும் - நாம் ஒரு முனிசிபல் கௌன்சிலர் அல்லது சட்டப்பேரவை உறுப்பினர் தேர்தலுக்குப் போட்டியிட்டால், வாக்குச் சேகரிக்க - தேர்தல் பணிகளைக் கவனிக்க - பணியாற்றும் தொண்டர்களைச் சந்திக்க - எத்தனை மணி நேரம் இரவிலும் பகலிலும் செலவிடுகிறோம்? எத்தனை முறை தேர்தல் அலுவலகங்களுக்குப் போகிறோம்? ஆனால், தேர்தல் முடிந்த பிறகு நம்மால் நம் ஊரில் உள்ள கிளைக் கழக - அல்லது ஒன்றியக் கழக - அல்லது நகரக் கழக அலுவலகத்திற்கு ஒரு நாள் ஒரு மணி நேரமாவது சென்று வர முடிகிறதா? ஏன் - என்ன காரணம்? நாம் வளர எடுத்துக் கொள்ளும் முயற்சியை விட, மும்முடங்கு அதிகமாக நம்மை வளர்த்த கட்சியை, மேலும் வளர்க்க முயற்சி எடுத்தால்தானே நமது நாடும், சமுதாயமும் தழைக்கும் என என்றைக்காவது ஒரு நாள், நீ எண்ணிப் பார்த்தால் உனக்கே நாணம் மேலிடும்.

அந்த நாணத்திற்கு இடம் தரக்கூடாது என்று நாளும் இந்த இயக்கத்தின் எழுச்சிக்காகச் சந்தனக் கட்டை போல், மெழுகுவர்த்தி போல் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டுள்ள என்

உடன்பிறப்புகளின் எண்ணிக்கைதான் கழகத்தில் பெரும்பான்மை என்பது எனக்குத் தெரியும் என்றாலும் - அந்தப் பெருமிதமான பட்டியலில் இன்னும் சிலர் இடம் பெறாமல் இருப்பதற்காக உரிமையுடன் நான் கோபம் கொள்வது தவறா?

ஆகஸ்டு 1 மற்றும் 2 இல் கூடுகிற பொதுக்குழு, எந்தக் காலகட்டத்தில் கூடுகிறது என்பதை நான்கு வாரங்களுக்கு முன்பே, நான் சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

நமது ஆட்சியின் மீது ஏதாவது புழுதி வாரித் தூற்ற வேண்டும் என்றும் - தாங்களே சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை எழுப்பி, ஆட்சிக்குத் தொல்லை தர வேண்டுமென்றும் - கிடைத்திட்ட அதிகாரங்களையும், பதவிகளையும் கொண்டு இந்த ஆட்சிக்கு எதிராகச் சதிவலைகள் பின்னிடலாமென்றும் - எண்ணங்கொண்ட சிலபேர் இன்னமும் இருக்கிறார்கள்! இருப்பார்கள்! இருக்கத்தான் செய்வார்கள்!

ஒரு பொதுப்பிரச்சினை - அதற்கு ஆதரவு தருவதற்கு அனைத்துக் கட்சிகளும் சேரும்போதாகட்டும் - அல்லது வன்செயல்களைக் கண்டனம் செய்வதற்காக அனைவரும் சேரும்போதாகட்டும்; இதுதான் சமயமென்று இந்த ஆட்சி மீது பழி கூறத் தலைப்படுகிற அளவுக்கு, அரசியல் ஆதாயம் தேடிகள் சிலர் உலவுகிற நாட்டில்தான் நாம் நமது கழகத்தை நடத்துகிறோம்.

ஆதிக்கக்காரர்களிடமிருந்து எப்படி இந்தச் சமுதாயம் விடுபட வேண்டுமென்று கருதுகிறோமோ, அதேபோல, அரசியல் ஆதாயம் தேடிகளிடமிருந்தும் இந்தச் சமுதாயத்தை விடுவித்திட முனைந்தாக வேண்டும்.

இதனை உணர்ந்து செயல்படத் திட்டங்கள் தீட்டவும் - நமது கழகத்தின் அரசியல், சமுதாய, பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் தீர்மானங்களை வடித்தெடுக்கவும் - கூடுகிற பொதுக்குழுவிலும் உன்னைச் சந்திப்பவன் நான்! பொதுக்குழு உறுப்பினரல்லாத காரணத்தால், சென்னைக்கு வராமல் ஊரிலேயே இருக்கும் உன்னைப்பற்றியும் சிந்திப்பவன்தான் நான்!

இந்தப் பாசம் பட்டுப்போகாதவரையில் கழகத்திற்கு மோசமும், நாசமும் விளைவிக்கத் துடிப்போர், துவண்டு போவாரே தவிர - துளி தூசியும் வெற்றி பெற்றிட மாட்டார்!

ஆம், உடன்பிறப்பே! நீ இருக்கும்போது! உன் நெஞ்சில் நானிருக்கும்போது! என்று ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொள்கிறேன்.

அதைத் திருப்பி, நானிருக்கும் போது! என் நெஞ்சில் நீ இருக்கும்போது! என்றும் ஒருமுறை சொல்லிப் பார்த்துக்கொள்கிறேன்.

எத்தனை முறை இந்த இரண்டு வாசகங்களைச் சொன்னாலும் அத்தனை முறையும் - கனியாக - தேனாக - கற்கண்டாகச் சுவைக்கிறதே!

அந்த உறவும், பாசமும்தானே நம் உயிரனைய கழகத்தைத் தாக்கும் பகைப்புலத்தை எதிர்க்கும் கவசமாகவும் - கட்கமாகவும் இருக்கின்றன!

அன்புள்ள,

மு. க.

(01-08-1998)

2420.சமாதானபுரம் அழைக்கிறது!

உடன்பிறப்பே,

ஆகஸ்டு முதல் நாளும், இரண்டாம் நாளும் கழகத்தின் பொதுக்குழுவில் தொடங்கி, காவிரிப் பிரச்சினைக்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் - அதனைத் தொடர்ந்து புதுடெல்லியில் பிரதமர் முன்னிலையில் நான்கு மாநில முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தையும், உடன்பாடும் - மேலும் தர்மபுரி, திண்டுக்கல், மதுரை, தஞ்சை, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் என்று இரவு பகல் எந்நேரமும் ஓய்வுக்கு ஓய்வு அளித்துவிட்டு, உன்போன்றோர் திருமுகங்களையும் - ஒட்டி உறவாடும் நம் தமிழ்க்குடி மக்கள் லட்சோப லட்சம் பேர்களையும் கண்டு களிக்கும் வாய்ப்பு பெற்று, ஆகஸ்டு 31-ஆம் நாள் மாலையில் சென்னை திரும்பியவுடன் நெல்லை மாநாட்டுப் பணிகள் என்னையும், உன்னையும், கழகத்தின் தளகர்த்தர்களையும் கரம் நீட்டி வரவேற்றுக் காத்திருக்கிறோம் என்று புன்னகை பூத்திடுவதை உணர முடிகிறது.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் கழக முன்னணியினர் மதுரையிலேயே எங்களை வந்து சந்தித்து, இரவு பனிரெண்டு மணி வரையில் நெல்லை மாநாடு குறித்தும், ஏற்று நடத்தவேண்டிய எழுச்சிமிகு பணிகள் குறித்தும் கருத்துகளைப் பரிமாற்றம் செய்து கொண்டு திரும்பினர்.

ஒரு திங்கள், ஏழுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் அரசு நிகழ்ச்சிகளிலும் - கழக நிகழ்ச்சிகளிலும் - தஞ்சை மண்ணில் விவசாயிகள் சங்கத்தினர் நடத்திய நிகழ்ச்சியிலும் - மதுரை மதநல்லிணக்கம் மற்றும் மாநில உரிமைப் பாதுகாப்பு மாநாட்டிலும் கலந்துகொண்டபோது, தமிழ்மக்கள் இடைவிடாது பொழிந்த பாசமழையில் நனைந்தேன் - நனைந்தேன் - இன்னமும் அதனை நினைந்து மகிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு கழகத்தின் பொன்விழா தொடங்குகிற ஆண்டு! 1949 செப்டம்பர் 17-ஆம் நாள், சென்னை ராபின்சன் பூங்காவில் - வானம் பன்னீர் தெளிக்கும் வேளையில் - கண்ணீர்த்துளிகளே! நாட்டின் கண்மணிகளே! எனக் கனிவு ததும்ப அழைத்து நமது கண்ணான தலைவர் அறிஞர் அண்ணா, இரு வண்ணக் கொடியேந்தி இயக்கிவைத்த இந்தக் கழகத்துக்கு ஐம்பதாம் ஆண்டு பொன்விழா, இந்த ஆண்டு செப்டம்பரில் தொடங்குகிறது.

ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பிறந்தநாள் - பெரியார் பிறந்தநாள் - கழகம் பிறந்தநாள் மூன்றையும் இணைத்து முப்பெரும் விழாவாகச் சென்னையில் பெரிய அளவில் நடத்துவது நாம் ஏற்றுக்கொண்ட ஒரு கடமையாகும்.

அந்தக் கடமையை இந்தப் பொன்விழா ஆண்டில் சீரும் சிறப்புமாகச் செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள் தொடங்கி மூன்று நாட்கள் பொன்விழாச் சிறப்பு மாநாடாக சென்னையில் நடத்திட எண்ணிக் கொண்டிருந்தபோது, பிறிதோர் இயக்கத்தினர் நடத்துகின்றார் அண்ணா பிறந்தநாள் விழா, அதற்குப் பிரதமரே வருகிறார் என்று அறிவிப்பு வந்திடவே, பிரதமர் கலந்துகொள்ளும் விழாவுக்கிடையே சென்னையில் நாமும் விழா நடத்துவது இரு சாராருக்கும் இடையூறாக இருக்குமென்பதால், சென்னையில் 15-ந் தேதி ஒருநாள் மட்டும் அண்ணா அறிவாலயத்தில் அண்ணா பிறந்தநாள் விழாவை நடத்திவிட்டு - அதன் தொடர்பான தி.மு.க. பொன்விழாத் தொடக்க ஆண்டுச் சிறப்பு மாநாட்டையும், முப்பெரும் விழாவையும் நெல்லையில் நடத்துவதென்று முடிவெடுத்து அதற்காகச் செப்டம்பர் 17, 18 தேதிகளைத் தேர்வு செய்துள்ளோம்.

நெல்லையில் இந்தச் சிறப்பு மாநாடு, பேரறிஞர் அண்ணாநகர் எனும் பெரும் வளாகத்தில் பந்தலமைத்து நடைபெறுகிறது. உடன்பிறப்பே! மாநாட்டுப் பந்தல் வளாகம் அமையும் அண்ணாநகர் உருவாகும் பகுதிக்கு ஏற்கனவே உள்ள பெயர் என்ன தெரியுமா? அடடா! இயல்பாகவே அந்த இடத்துக்கு அமைந்துவிட்டிருக்கிற பெயர் - சமாதானபுரம்! சமாதானபுரம், எத்தனை நினைவுகளை நம் நெஞ்சில் தென்றலின் சுவாசம் போல் உலவவிடுகிறது பார்த்தாயா?

சாதித் தகராறுகள் - மத மோதல்கள் - இவற்றைத் தூண்டிவிட்டு, அந்தப் பூசல்கள் அணைந்து போகாமல்

கவனித்துக்கொண்டு - களங்கண்டு - பணங்கண்டு - பதவிச் சுகம் கண்டிடத் துடித்து நிற்போர் சிலரின் பிடிகளில் இருந்து, சமுதாயத்தை விடுவிக்கத் தேவைப்படுவது சமாதானபுரங்களும் - சமரசத் தூதுவர்களும்தானே!

எனவே, நெல்லையில் அமைய இருக்கும் அண்ணா நகரில் கூடிடும் நாம், சமாதானபுரத்திலிருந்துச் சிறகடித்துக் கிளம்பிப் பறக்கும் சமரசப் புறாக்களாகத் திகழ்ந்திடுவதற்கு ஏற்ற திருநாட்களாக அந்த இரண்டு நாட்களும் ஆகட்டும்!

அதற்கான விடியலாகத்தான் தமிழகத்தில் அனைத்துப் பிரிவினரும், அண்ணன், தம்பி, அக்காள், தங்கைகளாக வாழ்வதற்கு ஒப்புதல் அளித்து சமத்துவபுரக் குடியிருப்புகளில் வசிப்பதற்கு முன்வந்து கொண்டிருக்கிறார்கள்.

பொன்விழாப் பேரணிக்கு முன்பு, செப்டம்பர் 17 காலையில் நெல்லையில் நான் திறந்து வைக்க இருக்கும் சமத்துவபுரம், தமிழகத்தில் தோன்றும் மூன்றாவது சமத்துவபுரம். விரைவில் தமிழகமே சமத்துவபுரம் ஆகும் என்பதற்கான நம்பிக்கை நட்சத்திரங்கள் இவை!

மதமோதல்களைத் தவிர்த்து மதநல்லிணக்கம் காண்போம் என மதுரை மூதூரில் தி.மு.க. - த.மா.கா. - மார்க்சிஸ்டு - இந்திய கம்யூனிஸ்டு - ஜனதா தளம் ஆகிய ஐந்து கட்சிகள் நடத்திய மாநாட்டின் போதுதான், தமிழகத்து ஏடுகள் பலவற்றில் ஆறுதல் தரும் அதிசயச் செய்தி ஒன்று வந்தது.

விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களை வழியிலே நிறுத்தி வரவேற்பளித்து, ஊர்வலத்தில் வந்தவர்களை மெத்தவும் உபசரித்து பாசம் பொழிந்தனர் பழனி நகரத்து முஸ்லிம் மக்கள் - கனிவு காட்டிக் களிப்பு சிந்தினர் காயல்பட்டினத்து இஸ்லாமியர் - பரிவுடன் உதவினர், பண்பு நிலைநாட்டினர் பல்லடத்து முஸ்லிம்கள் - என்றெல்லாம் வந்த செய்திக்கும், நாம் செப்டம்பர் 17, 18 நாட்களில் நெல்லை சமாதானபுரத்தில் அண்ணாநகரில் அலை கடலாகப் பெருகிடப் போவதற்கும் எத்துணைப் பொருத்தம் இருக்கிறது பார்த்தாயா!

இனி, எம் மதத்தினர் எடுக்கும் விழா ஆயினும் என்ன நடக்குமோ என்று பொதுமக்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்

கொண்டிருக்காமலும் - ரத்தம் சிந்தாமலும் - அச்சுறுத்தல், அரிவாள் தூக்குதல் இல்லாமலும் அவ்விழாக்களில் அமைதி, வெண்சாமாரம் வீச வேண்டும்.

சமத்துவபுரம் - சமாதானபுரங்கள் என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளாக ஆகிவிடாமல், செயல் வடிவங்களாக ஆக வேண்டும்.

அந்தச் செயலாற்றும் சீலர்களாக விளங்கும் உன் போன்ற உடன்பிறப்புகள் ஒன்றுகூடி, தமிழகத்தில் தலைநீட்டப் பார்க்கும் தீங்குகளை வென்று காட்டிட வேண்டும் என்பதற்காகத்தான் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு, நமது அண்ணன் இந்தக் கழகம் கண்டார்.

எல்லா முனைகளிலும் ஏற்றமுடன் திறம் காட்டும் இயக்கம் இது என்பதையும் - அரசியல் நாகரிகத்தின் எடுத்துக்காட்டான இயக்கம் இது என்பதையும் - அறவழி பிறழா இயக்கம் இது என்பதையும் - தமிழ்நாட்டு மக்களுக்கும், இந்தியநாட்டு ஜனநாயகத் தத்துவத்துக்கும் இந்த இயக்கமே காவல் அரண் என்பதையும் - உலகிற்கு உணர்த்த மேலும் ஒரு வாய்ப்புத்தான் இந்தச் சிறப்பு மாநாடு!

ஆம்! நமது கழகத்தின் ஐம்பதாண்டு வரலாற்றைத் தொகுத்தளிக்கும் பொன் விழாச் சிறப்பு மாநாடு! இன்றே தயாராகுக! இனிய உடன்பிறப்பே! மற்றவை அடுத்த மடலில்!

அன்புள்ள,

மு. க.

(03-09-1998)

2421. கண்ணீரும் பன்னீரும் கலந்த மண்ணில்!

உடன்பிறப்பே,

நெல்லையில் நமது கழகப் பொன்விழாத் தொடக்கச் சிறப்பு மாநாடு, இதுவரையில் நடைபெற்றுள்ள நமது மாநாடுகளையெல்லாம் வென்றிடும் வண்ணம் அமைந்திடல் வேண்டுமென்கிற ஆர்வமுடன், மாநாட்டுக் குழுவினர் அயராது பாடுபடத் தொடங்கிவிட்டனர். நெல்லை மாவட்டச் செயலாளரும் தம்பி ஆவுடையப்பனும் - மாநாட்டுப் பொறுப்பாளரும், கழக அமைப்புச் செயலாளருமான தம்பி பொன். முத்துராமலிங்கமும் நாள்தோறும் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு, நடக்கும் பணிகள் குறித்தும் நடக்கவேண்டிய பணிகள் குறித்தும் கலந்துரையாடி, தலைமைக் கழகத்தின் சார்பில் என் ஆலோசனைகளையும், பொதுச்செயலாளரின் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றனர்.

மாநாட்டுப்பணிகளை மேற்பார்வையிட, நமது கழகத்தின் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும், தம்பி துரைமுருகனும், தம்பி நேருவும் இரண்டு நாட்கள் நெல்லையில் முகாமிட்டு, உழைத்திடும் உடன்பிறப்புகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டி வருகின்றனர்.

உன்னைப்போலவே நானும் நெல்லை மாநாடு கண்டிட துடித்துக்கொண்டிருக்கிறேன். எந்த மாநாட்டிலும் ஏற்படாத துடிப்பு இந்த மாநாட்டுக்குச் செல்வதில் மட்டும் ஏன் என்று நீ கேட்டிடுவாய்!

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தை நமது ஆருயிர் அண்ணன் ஆரம்பித்து வைத்தபிறகு, கழகத்தின் பிரச்சாரக்குழு கூடி எடுத்த முடிவுக் கேற்பவும், செயற்குழு தந்த ஒப்புதலுக்கேற்பவும் அதே ஆண்டு அக்டோபர் 17-ஆம் நாள் தமிழக முழுவதும் கழகக் கிளைகளின் துவக்க விழாக்கள் நடத்தப்பட்டன. பிரச்சாரக்குழுவில்

ஒரு உறுப்பினர் என்ற முறையில் நான் கலந்துகொண்டு கிளைக்கழகத்தைத் துவக்கி வைக்கவேண்டிய நகரங்கள் என்று இரண்டு இடங்கள் தலைமைக்கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டன. அந்த நகரங்களுக்குச் சென்று வா என்று அண்ணா ஆணையிட்டார் எனக்கு!

அந்த நகரங்கள் எவை தெரியுமா? 1949 அக்டோபர் 17-ஆம் நாள் தூத்துக்குடி! அக்டோபர் 18-ஆம் நாள் கோயில்பட்டி!

ஆம்! பிரிக்கப்படாமல் ஒன்றாக இருந்த நெல்லை மாவட்டத்திற்குச் சென்று இரு நகரங்களில் இதே இயக்கத்தின் பாசறைகளை உருவாக்கிய எனக்கு, அதே நெல்லை மாவட்டத்தில் இந்த இயக்கத்தின் பொன் விழாவைச் சிறப்புமிகு மாநாடாக நடத்தும்போது தலைமைப் பொறுப்பேற்றிடும் வாய்ப்பு கிட்டியுள்ளது என்பது எத்துணை மகிழ்ச்சி தரக்கூடியது! எத்துணை உணர்ச்சி பொங்கச் செய்யக்கூடியது!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எந்த நெல்லைச் சீமையில் நான் உயிராக நேசிக்கும் கழகத்தின் இரு வண்ணக்கொடியை ஏற்றி வைத்துப் பெருமிதம் கொண்டேனோ, அதே நெல்லைச் சீமையில், அன்றைக்குத் தொடக்கவிழா நடத்திய தோழர்களில் இயற்கை எய்தியோர் போக எஞ்சியிருப்போரையும் - தொடர்ந்து அலை அலையாகப் பெருகி மகா சமுத்திரமாக விரிவடைந்துள்ள கழகச்சேனையின் தளகர்த்தர்களையும், வீரமிகு சிப்பாய்களையும் இந்தப் பொன்விழா தொடக்க ஆண்டில் காணப்போகிறோமே! கண்டு களிக்கப் போகிறோமே என்கிற நினைவு, என்னைத் தூங்கவிடுமா என்ன!

இந்த நெல்லைச் சீமையிலேதானே பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையின் கதவுகள் என்னை இழுத்துச் சாத்திக்கொண்டு, தன்னை வெல்வான் தரணியை வெல்வான்! எனும் அறிவுரை கூறின! அந்தக் கதவுகளின் அனுமதி பெற்று என்னைக் காணவந்த அண்ணாவின் கண்ணீரையும் - அதே நாள் அவர் பேசிய பொதுக்கூட்டத்தில், என் தம்பி கருணாநிதி அடைபட்டிருக்கும் பாளையங்கோட்டைச் சிறைச்சாலை எனக்கு யாத்திரை ஸ்தலம் என்று என் இதயத்தில் தெளித்தாரே! அந்தப் பன்னீரையும் ஒருக்கணம் எண்ணினாலே அந்த அன்புத்தலைவனின் ஆறுதலும், அரவணைப்பும் கிடைப்பதற்குக் காரணமாக இருந்த அந்த மண்ணை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளத் துடிக்கத்தானே செய்யும் என் நெஞ்சம்!

அந்த மண்ணில் அரசின் நினைவுச்சின்னமாக ஆக்கப்பட்ட பாரதி பிறந்த வீட்டையும் - அந்த நிகழ்ச்சிக்கு நான் சென்றிருந்தபோது பாரதி கைப்பட எழுதிய ஏட்டையும் கண்டு மெய்சிலிர்த்து நின்ற காட்சியைத்தான் மறக்க முடிகிறதா?

வாளேந்தி வஞ்சக வெள்ளையரை விரட்டப் போரிட்டு மாண்ட வீரன் - என்றைக்கும் அழியாப் புகழேந்தி வாழும் தீரன் கட்டபொம்மனுக்குக் கோட்டையும் - அவன் தளபதி சுந்தரலிங்கத்துக்கு நினைவுக் குடியிருப்பும், அவர்களின் வழித்தோன்றலுக்கு வசதி வாய்ப்புகளும் நமது ஆட்சியிலன்றோ உருவாக்கப்பட்டன என எண்ணும்போது, அந்தச் சீமைக்கு சிறப்பு மாநாட்டுக்குச் செல்வதில், சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்காமல் இருக்குமா!

புல்லர்களாம் வெள்ளையரையும், அவர்க்குத் துணை நின்ற பொல்லாதவர்களையும் எதிர்த்து நின்று விழுப்புண் பெற்று வீழ்ந்துவிட்ட தலைதாழாச் சிங்கம் - தன்மானக் குன்றம் - பூலித்தேவனுக்கோர் நினைவு மாளிகை புதிதாக அமைக்கிறோமே! அதுவும் அந்த நெல்லை மண்ணில்தானே!

இப்படி என் பொதுவாழ்வில் கலந்துவிட்டதும், என்றும் கலையாததுமான பல நினைவுகள் - என் ஆர்வத்தை வினாடிக்கு வினாடித் தூண்டச் செய்து நெல்லைப் பயணத்துக்காகத் துடிக்கச் செய்கின்றன!

இத்திங்கள் 15-ஆம் நாள், நம் இதயச் சிம்மாசனங்களில் நிலையாக வீற்றிருக்கும் அமைதியின் உறைவிடம் - ஆற்றலின் நிறைவிடம் - இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழர் அண்ணாவின் பிறந்தநாளைச் சென்னை அறிவாலயத்தில் வழக்கம்போல் கொண்டாடிவிட்டு, அடுத்ததாக, 16-ஆம் நாளே தூத்துக்குடிக்குப் பயணம் - அன்று மாலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா. 1989 - 90-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அந்தக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டி, பெருந்தலைவர் காமராசர் அவர்களை நாட்டுக்குத் தந்த நற்றாய் அன்னை சிவகாமி அவர்களின் பெயரை, மாவட்ட ஆட்சியர் வளாகத்துக்கும் - பெரியாரின் அன்புக்கும், பேரறிஞர் அண்ணாவின் பரிவுக்கும் - உன் போன்றோர் பாசத்துக்கும் உரியவராக வாழ்ந்த படை முகத்துப் பெருவீரன் கே.வி.கே. சாமியின் பெயரை மாவட்ட ஆட்சியர் மாளிகைக்கும் சூட்டி மகிழ்ந்தேனே! அந்தக்

கட்டிடத்தை ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு நாமே கட்டி முடித்துத் திறக்கப்போகிறோமேயென்ற ஆர்வமும், அனிச்சமலர் விரல்பட்டு வீணையின் நரம்பு அதிர்வது போன்ற துடிப்பும் எனக்கு ஏற்படாமலிருக்க முடியுமா?

செப்டம்பர் 16-ஆம் நாள் மாலை தூத்துக்குடி நிகழ்ச்சி நிறைவுற்று - மறுநாள் செப்டம்பர் 17 - ஆகா! அந்த நாள்தான் தமிழனுக்குச் சூடு பிறந்தநாள் - சொரணை பிறந்தநாள் - சுயமரியாதை பிறந்தநாள் - ஆம்! ஆம்! நமது பகுத்தறிவுப் பகலவன் அய்யா பெரியார் பிறந்த நாள் - பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம், ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுதுபார்! என்று 1945-ஆம் ஆண்டு, அந்தக் குருகுலத்திலிருந்து கவிதை எழுதினேனே - அந்தத் தென்னகத்துச் சமுதாய காரல்மார்க்ஸ் பிறந்தநாள் - அந்த நாளில், காலையில் நெல்லையில் சமத்துவபுரம் திறப்புவிழாவிற்குச் செல்வதற்கு முன்பு அவரது சிலைக்கு மாலை அணிவிக்கிறோம்.

நெல்லையில் பெரியார் சிலை இல்லையே என்றார்கள். நெஞ்சில் கனத்துடன் அந்தச் செய்தியை காதில் வாங்கிய அடுத்த கணமே, கழகச் சார்பில் நெல்லையில் பெரியாருக்கு நிலையான சிலையொன்று அமைத்திட, தம்பி முல்லைவேந்தனிடம் பொறுப்பு ஒப்படைத்து நெல்லைக்கு அனுப்பி வைத்துள்ளேன். அந்தச் சிலை கழகத்தின் சார்பில், கழகத்தின் செலவிலேயே வைக்கப்பட இருக்கிறது.

அன்று பிற்பகல் எழுச்சி மயமானதும் - எவரையும் அணுவளவுகூடப் புண்படுத்தாததுமான - கழகத்தின் பொன்விழாப் பேரணி!

தொடர்ந்து மறுநாள் சிறப்பு மாநாடு - தூய என் உடன்பிறப்புகளைத் தொடர்ந்து இரண்டு நாட்களிலும் நான் கண்டுகளிக்கும் பேரணியும், மாநாடும், பவளவிழா காணும் எனக்கு வாழை, மா, பலா எனும் முக்கனிகளின் சுவைதான்! பொன்விழா காணும் கழகத்துக்கு நம்மை அர்ப்பணிப்பது, அக்கனிகளையும் வென்றிடும் அளவுக்கு வாய்த்திடும் சுவைதானே!

அன்புள்ள,

மு. க.

(05-09-1998)

2422. குருவிக் கதையும் - நமது கொள்கை வழியும்!

உடன்பிறப்பே,

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் கதாகாலட்சேபம், காணும் மக்களை வயிறு வலிக்கச் சிரிக்க வைத்து, அறிவுக்கு விருந்தளிக்கும் அற்புதமான பிரச்சார முறையாகும். அதனை நேரில் கண்டோர், கேட்டோர் இதில் இருவிதமான கருத்துக் கூறமாட்டார்.

அற்ப விஷயங்களை அலட்சியப்படுத்தாமல் அதில் எல்லாம் கவனத்தைச் செலுத்தினால் நேரமும் வீணாகும்; நெஞ்சமும் தேவையில்லாமல் புண்ணாகும். அதற்கோர் வேடிக்கையான கதையைக் கலைவாணர் ஒரு பாடலாகவே இசைக்கக் கேட்டு இன்புற்றிருக்கிறேன்.

மாளிகைத்தாழ்வாரத்தில் மகாராஜா ஒருவர் மந்தகாசப் புன்னகையைச் சிந்தியவாறு உலவிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு குருவியின் குரல் கேட்டது. சாதாரணக் கீச்சுக் குரல் அல்ல. பேச்சுக் குரல்! மகாராஜா வியப்புடன் திரும்பிப்பார்த்தார். குருவியேதான். மாளிகைத் தாழ்வாரத்தின் பலகணிக்கட்டையில் உட்கார்ந்து கொண்டு அந்தக் குருவி, உரக்கப் பேசியது.

என்கிட்ட ஒரு காசு இருக்கு யாருக்கு வேணும்? என்கிட்ட
ஒரு காசு இருக்கு யாருக்கு வேணும்?

இப்படி ஒரு முறை, இருமுறையல்ல! பல முறை குருவி கேட்டுக்கொண்டேயிருந்தது. பொறுமையிழந்த மகாராஜா அந்தக் குருவியைப் பார்த்து, எனக்கு வேணும்! எங்கிட்டே கொடேன்! என்றார், அவர் சொன்னதுதான் தாமதம், அந்தக் குருவி தன்னிடமிருந்த காசை அவரிடம் கொடுத்துவிட்டு - உடனே கேலியாகக் கத்திப் பேசத் தொடங்கிவிட்டது -

அய்யோ பாவம்! என்கிட்ட ஒரு மகாராஜாவே பிச்சை வாங்கினாரு! என்கிட்ட ஒரு மகாராஜாவே பிச்சை வாங்கினாரு!

கொம்பிலேறிக்கொண்டு குருவி இவ்வாறு கிண்டல் செய்ததும், மகாராஜாவுக்குக் கோபம் பீறிட்டுக் கிளம்பியது. உடனே அந்தக் காசைத்தூக்கி குருவியிடம் வீசி, இந்தா உன் காசை நீயே வச்சுக்க! என்று கூறிவிட்டு, அங்கிருந்து திரும்ப எத்தனித்தார். கீழே விழுந்த காசைக் குருவி தன் கால்களால் மிதித்துக்கொண்டு, மேலும் அந்த மகாராஜாவை அவமானப்படுத்துவது போலக் குரல் எழுப்பியது.

பாத்தீங்களா! பாத்தீங்களா! இவ்வளவு பெரிய மகாராஜா எங்கிட்ட பயந்து போயி, காசைத் திருப்பிக் கொடுத்துட்டாரு!

குருவியின் கிண்டல் நிறைந்த இந்தத் தாக்குதலை மகாராஜாவினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை தான் - அதற்காக அவரென்ன நால்வகைச் சேனையை அந்த இடத்திற்கு அழைத்து வந்து, குருவியிடம் ஒரு குருட்சேத்திர யுத்தமா நடத்த முடியும்? அந்தச் சிறிய குருவியின் பேச்சுக்கு மறுபேச்சு பேசியதும் - வீண் வம்புக்கிழுத்த அந்தக் குருவியிடம் வாதம் புரிய முனைந்ததும் தனது பைத்தியக்காரத்தனமென்று எண்ணிக்கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். நகர்ந்தார் எனினும், அந்தக் குருவி அவர் மனதில் ஏற்படுத்திய புண்ணின் வடு அவர் நெஞ்சைவிட்டு நகரவில்லை.

உடன்பிறப்பே, குருவியின் சேட்டையும், கோட்டைக் கொற்றவனின் தலைகுனிவும் நம்ப முடியாத கதை - நடக்க இயலாத கதை என்றெல்லாம் தள்ளிவிடலாம்.

குருவி பேசுமா? அப்படியே பேசினாலும், ஒரு மகாராஜா அதனிடம் சென்று வாதிட்டுக் கொண்டிருப்பாரா? இவ்வாறெல்லாம் கேட்கத் தோன்றும்!

அறிவுரைகள் - பொன்மொழிகள் - விலங்குகளையும், பறவைகளையும் கதாபாத்திரங்களாக்கி வழங்கப்படுவது போலவே, இந்தக் கதையில் குருவியும், கோலோச்சும் கொற்றவனுமாக இருவர் கதாபாத்திரங்களாகக் காட்சி தருகின்றனர். கரடியும் நண்பனும், காக்கையும் நரியும் என்றெல்லாம் அறிவுரைக்கதைகள் இருக்கின்றனவே! அவற்றைப் போலத்தான் இந்தக் கதையும்!

இந்தக் கதையினால் பெறப்படும் அறிவுரைதான் என்ன? கிடைக்கும் பொன் மொழிதான் யாது?

பொதுவாழ்வுக்கு வந்து விட்ட பிறகு, அவர் கேலி பேசுகிறார் - இவர் இழிமொழி கூறுகிறார் என்றெல்லாம் மனம் நொந்து போகாமல், அனைத்து விமர்சனங்களையும் பொறுத்துக் கொண்டுதான் நமது பயணத்தை நாம் கொண்டுள்ள இலட்சியத்தை நோக்கித் தொடர்ந்திட வேண்டும்.

கூடகோபுரம், மாடமாளிகை, ஆணை கேட்டு அணி வகுத்திட ஆயிரமாயிரம் படைவீரர்கள் - அரசைப் புரந்து நிற்கும் லட்சோப லட்சம் மக்கள் - இத்தனையும் தன்னகத்தே பெற்றவராயிற்றே அவர்! அந்த மன்னர், ஒரு சின்னக்குருவியின் வலுச் சண்டைக்கும், வம்புச் சண்டைக்கும் மதிப்பு கொடுத்து அதனிடம் வாய் கொடுத்ததே தவறு என்பதுதான் அந்த மகாராஜா புரிந்து கொள்ளவேண்டிய உண்மை! புவியாளும் மன்னர்க்கு மட்டுமல்ல! பொது வாழ்வில் ஈடுபட்டோர் அனைவர்க்கும், இந்தக் கதையின் மையக் கருத்து, ஆம் கடைப்பிடிக்கப்படவேண்டிய கருத்து, இதுவே ஆகும்.

அண்மைக்காலமாக நமது கழக ஆட்சியின் மீதும், நம்மீதும் ஏதாவது களங்கம் சுமத்திட வழியில்லாமல் பெரிதும் ஏக்கமுற்று, கதையில் வரும் குருவியைப் போல சிலபேர், ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாமும், அந்த மகாராஜாவைப் போல ஏமாளித்தனமாக நடந்து கொண்டு, நமது கொள்கைவழிப் பயணத்தில் குறுக்குப் பாதை போய்விடக்கூடாது.

பெரியார் அமைத்த அடித்தள வலிவுடன், அண்ணா எழுப்பித் தந்த எழிலார்க் கழக மாளிகை உச்சியில், என்றும் நமது திராவிடக் கொடி நிமிர்ந்து பறந்திடவும் - கொள்கை முரசம் தாழாது ஆர்த்திடவும், நாம் மேற்கொண்டுள்ள நீண்ட நெடிய பயணத்தில் எத்தனையோ இடையூறுகள் ஏற்படத்தான் செய்யும்! சுடரொளியை மறைத்திடச் சூழ்ச்சி மேகங்கள் இருள்கூட்டித் திரளும்! பயணப் பாதையில் மலைப்பாறைகள் உருட்டி விடப்படும்! இருட்டில் ஆந்தைகள் அலறும் - நரிகள் ஊளையிடும் - நாய்கள் துரத்தும் - அனைத்தையும் ஓர் அலட்சியச் சிரிப்பால் அகற்றி, எவரும் அழிக்க முடியாத இயக்கம் இதுவெனவும் - எந்த இயக்கத்திலும் இல்லாத கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எமக்குண்டு எனவும் எடுத்துக்காட்டவும், ஏறுநடை சிங்கங்கள்,

எத்தனையோ துன்பங்களைத் துரும்பாகத் தூசியாக மதிப்பவர்கள் நாம் என்பதை உலகிற்கு உணர்த்தவும், இருநாள் சிறப்பு மாநாடு நெல்லையில்!

எத்தனை எதிர்ப்பு - துன்ப துயரம் வரினும், எமது பயணத்தை நிறுத்தமாட்டோம் எனச் சூளுரைக்கவும் - சாக்கடையில் கல் எறிந்தால் இழப்பு கல்லுக்கும், இழிவு நமக்குமே தவிர, சாக்கடைக்கு அல்ல என்பதை உணர்ந்து செயல்படவும் - நெல்லையில் நடைபெற இருக்கும் கழகப் பொன்விழா மாநாடு எல்லா வகையிலும் சிறப்புற விளங்கிட, நீயும், உடன்பிறப்புக்களும் தயாராகும் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன!

இதற்கிடையிலும் சரி! இனி மேலும் சரி! குருவியின் பேச்சை நம்பி, அதன் விருப்பம் போல் ஆடிய மகாராஜாவைப் போலில்லாமல், யார் எதுவாயினும் பேசிக் கொண்டிருக்கட்டும்! நாம் நமது தமிழ் மக்களுக்காக ஏற்றுள்ள பணியை ஆற்றியவாறு பயணத்தைத் தொடருவோம். அதற்கு வழிகாட்டக் கூடியதுதான் நெல்லை மாநாடு - செப்டம்பர் 17, 18 இரு நாட்கள்.

அன்புள்ள,

மு. க.

(06-09-1998)

2423. கலிங்கத்துப்பரணியும் - கழகப் பேரணியும்!

உடன்பிறப்பே,

கலிங்கத்தை நோக்கிக் கருணாகரத் தொண்டைமானின் தலைமையில் நால்வகை வீரர்கள் சேனை புறப்பட்டபோது, அந்த அரிய காட்சியைக் கலிங்கத்துப் பரணியில் ஜெயங்கொண்டார் வர்ணிக்கும் விதமே தனிச்சிறப்புக்குரியது. அந்த வர்ணனையின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் வாளின் முனைபோலப் பளபளப்புக் காட்டி - ஈட்டியின் கூர்மை போல எழுச்சியூட்டித் தாழ்ந்திருக்கும் தலைகளைக் கூட நிமிரச் செய்பவைகளாகும்!

ஆம்; உடன்பிறப்பே! தாழ்ந்த தமிழகத்தைத் தலைநிமிரச் செய்திட, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா கண்ட இந்தக் கழகத்தின் பொன்விழா எழுச்சிப் பேரணியை இலக்கிய ஆர்வலர்கள் எவர் காணினும், கலிங்கத்துப் பரணியை ஒப்பிட்டுக் காட்டி - கலிங்கம் நோக்கிச் சென்ற கருணாகரனின் பேரணியைப் போன்றதே இதுவும் என்று எழுதிடத்தான் போகின்றனர்.

“பார் சிறுத்தலின் படை பெருத்ததோ?
படை பெருத்தலின் பார் சிறுத்ததோ?
நேர் செறுத்தவர்க் கரிது நிற்பிடம்!
நெடுவிசும் பலால் இடமும் இல்லையே!”

இந்த பூமி சிறிதாக இருப்பதால் படை பெரிதாகத் தோற்றமளிக்கிறதா; அல்லது படைபெரிதாக இருப்பதால் பூமி சிறிதாகத் தோன்றுகிறதா? அணியில் உள்ள வீரர்களுக்கு நிலத்தில் நிற்க தேவையான இடமில்லை - நீலவானத்தைத் தவிர அவர்கள் நிற்பதற்கு வேறு இடமில்லை என்கிறார் கலிங்கத்துப் பரணி பாடிய கவிஞர் பெருமகனார்.

இந்த நிலையைக்காணும் நாள், உனக்கும், எனக்கும் வருகிற 17 மற்றும் 18 தேதிகளில் நெல்லையில் வாய்க்கத்தான் போகிறது.

எல்லையற்ற பெருங்கடலாய் எழுச்சிப் பேரணி, விரிந்து, பரந்து இடமின்றித் திணறும்போது, நெல்லை நகருமல்லவா நெருக்கடி தாங்காமல் திணறப்போகிறது!

இளைஞர் அணியினர் - சிங்க இளைஞனே! திறவிழி! திருப்புமுகம்! என்ற புரட்சிக்கவிஞரின் கர்ச்சனை கேட்டு, கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டமெனத் தடந்தோள் உயர்த்தி அணி வகுத்திட ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். பல்வேறு மாவட்டங்களில் இளைஞர் அணியினர் சார்பில் நடத்தப்பட்ட கொள்கை விளக்கப் பயிற்சிப் பாசறைகளில் புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கங்கள் பலர், தமிழ்க்குலம் காத்திடத் தயாராகிவிட்டனர் என்று இளைஞர் அணிச் செயலாளர் ஸ்டாலின் மிக்கப் பெருமிதத்துடன் சொன்னது மாத்திரமல்ல! அவர்கள் பெற்றுள்ள ஆற்றலைக் காட்டிட மாநாட்டு மேடையிலும் வாய்ப்பளிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். மூத்தோரின் அனுபவ மேன்மையும் - இளையவர்களின் ஆற்றல் மகிமையும் இந்த இயக்கத்திற்குக் கிடைத்துள்ள நிலையான சொத்து மட்டுமல்ல, நித்த நித்தம் வளரும் சொத்துக் கூட!

புதிய இரத்தம் பாய்ச்சப்பட்டு வளரும் இயக்கத்தின் இளந்தளிர்கள்தான், எதிர்காலத்தில் இந்த இயக்கம் காத்திடும் தொண்டர் அணியினராய் - தொழிலாளர் அணியினராய் - மகளிர் அணியினராய் - மாணவர் அணியினராய் - விவசாயிகள் மற்றும் நெசவாளர்கள், மீனவர், வழக்கறிஞர் அணியினராய் மாறிடுவர் - கழகம் வலிவு பெற மகத்துவம் விளைத்திடுவர்!

இத்தனை அணிகளும் பேரணியாய் உருக்கொண்டு கட்டுப்பாடு சிறிதும் குலையாமல் - கண்ணியம் கடுகளவும் குறையாமல், நெல்லைச் சீமையில் நடை பயிலும் அழகை நாம் காணப்போகும் அந்த நாட்கள் விரைந்தோடி வரவில்லையே என்று காலண்டரைப் பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்துப் போகின்றன.

“எழுந்தது சேனை! எழலும்
இரிந்தது பாரின் முதுகு!
விழுந்தன கானும் மலையும்!
வெறுந்தரை ஆன திசைகள்!”

கருணாகரனின் சேனை எழுந்தவுடன் அந்தச் சுமைதாங்க முடியாமல், பூமியின் முதுகு வளைந்துவிட்டதாம் - காடுகளும்

மலைகளும் நிலை குலைந்து வீழ்ந்ததால், காணுமிடமெல்லாம் கட்டாந்தரை ஆயிற்றாம்!

வர்ணனையின் உச்சத்திற்கே சென்று கவிதையை வரைந்து தள்ளிவிட்டார் ஜெயங்கொண்டார்! அவர் இப்போது இருந்து நமது பொன்விழாப் பேரணியைக் கண்டிருந்தால், இன்னொரு எழுச்சிக் காவியமன்றோ படைத்திருப்பார்!

ஆண்டுதோறும் செப்டம்பர் 15 தொடங்கி, அண்ணா - பெரியார் - கழகம் பிறந்த நாட்களை முப்பெரும் விழா நிகழ்ச்சியாகச் செப்டம்பர் இறுதிநாள் வரையில் நடத்திக் கொண்டுதானிருக்கிறோம்.

ஆனால், இந்த ஆண்டு கழகத்திற்குப் பொன்விழா ஆண்டு தொடங்குகிறது என்பதால், பொன்விழாச் சிறப்பு மாநாட்டை நடத்துகிறோம். அதில் முதல் நாள் நடக்க இருக்கும் பேரணி, சிறப்பு மாநாட்டுக்கே சிகரம் போல் அமைய இருக்கும் மற்றொரு சீர் சால் நிகழ்ச்சியாகும்.

நமது பேரணியில் ஐம்பதாண்டு கால கழக வரலாற்றின் நிகழ்ச்சிகளை விளக்கிடும் வண்டி வாகனங்கள் வரலாம் - முரசறைவது போன்ற முழக்கங்கள் எழுப்பலாம் - ஆனால் ஒன்று, மாற்றார் நடத்திய பேரணியொன்றில் காது கேட்க முடியாத அளவுக்கு எழுந்த கூச்சலும், ஏச்சும் பேச்சும், ஆபாசக் காட்சிகள் கொண்ட வண்டி வாகனக் காட்சிகளும் இடம் பெற்றதையும் - அவற்றுக்கு அந்தத் தலைமையின் தட்டிக் கொடுத்தல் நடைபெற்றதையும் மனத்தில் வைத்து, நமது பேரணியில் பதிலுக்குப் பதில் என்று எந்தக் காட்சியும் இடம் பெறக்கூடாது. அதே போல வெறுத்து முகஞ் சுளிக்கத்தக்க கோஷங்களும் இருத்தலாகாது.

நமது கழக வரலாற்று நிகழ்ச்சிகள் - கழக அரசின் சாதனை விளக்கங்கள் - கழகத்தின் கொள்கை முழக்கங்கள் மட்டுமே கொண்டதாக அந்தத் தன்மானத் தமிழர் பெருங்கடல், நெல்லை நகர் வீதிகளிலே அலை அலையாய்ச் சென்றிடவேண்டும்.

இளைஞர், தொண்டர், மாணவர், தொழிலாளர், மகளிர், விவசாயிகள், நெசவாளிகள், மீனவர், வழக்கறிஞர் அணிகளென ஒவ்வொரு மாவட்ட வாரியாகப் பேரணியில் கலந்துகொள்ள எல்லா மாவட்டங்களிலும் முனைப்பான பணிகள்

தொடங்கப்பட்டுவிட்டன. சில மாவட்டங்களில் அப்பணிகள் முற்றுப் பெற்றுவிட்டன.

"அதிர்ந்தன நாலு திசைகள்
அடங்கின ஏழு கடல்கள்
பிதிர்ந்தன மூரி மலைகள்
பிறந்தது தூளிபடலம்.

கருணாகரனின் படை கண்டு திசைகள் அதிர்ந்தனவாம் - கடல்கள் ஏழும் அடங்கினவாம் - மலைகள் சிதறி, தூசிப் படலம் கிளம்பியதாம்! கருணாகரனின் படையை மிஞ்சிடும் வண்ணம் நமது கழகப் படையின் எழுச்சியினைக் காணத்தான் போகிறோம். அந்தப் படை சென்றது, எதிரியை வீழ்த்தி வெல்வதற்கு!

இந்தப் படை செல்வது, எதிரியாக இருப்பவர்க்கும் நியாயத்தைச் சொல்வதற்கு - நேரான பாதைக்கு வாரீர் என்று அவர்களையும் அழைப்பதற்கு!

அன்புள்ள,

மு. க.

(07-09-1998)

2424. தெரிந்து கொள்வதற்கும் - தெளிவு பெறுவதற்கும்

உடன்பிறப்பே,

கண்ணியம் எள்ளின் முனையளவும் கெடாமல் கழகப் பேரணி நடைபெற வேண்டுமெனக் கடிதம் எழுதியிருக்கிறாய் தலைவா! ஆனால், அதே நெல்லையில் கடந்த ஆண்டு அவர்கள் நடத்திய பேரணியில், உன்னைப் போன்ற ஓர் உருவத்தை அந்தக் கட்சியின் தலைவியுடைய காலடியில் கிடத்தி மிதிப்பது போலவும் - உனது தலைகள் கோக்கப்பட்ட ஒரு மாலையை அந்தத் தலைவி கழுத்தில் அணிந்திருப்பது போலவும் சித்தரித்து ஒரு பொம்மை வண்டியை இழுத்து வந்தார்களே! அவர்களுக்குப் பாராட்டும், பரிசும்கூட அந்தத் தலைமையில் வழங்கப்பட்டதே - அதைப் பார்த்துக் கொதித்துக் குமுறிக் கிடந்த எங்களை நோக்கி இப்படியொரு அறிவுரை கூறுகிறாயே - எங்கள் நெஞ்சில் இந்த அறிவுரை எரிமலைக் குழம்பாக அல்லவா இறங்குகிறது - இன்னுமல்லவா அவர்களின் இழிதகைப் பிரச்சாரம், அவதூறுப் பேச்சுகள் அரசியல் நாகரிகத்திற்கே அறை கூவல் விடுக்கும் அளவுக்குத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று கோபம் கொப்பளிக்க எழுதப்பட்ட கடிதங்கள் பல எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. எழுதியவர்களுக்குத் தனித்தனியாக விளக்கம் எழுத இயலாத காரணத்தால், இந்தக் கடிதத்திலேயே உன்னைப்போன்ற உடன்பிறப்புகளுக்கும் சேர்த்து விளக்கம் தந்து, வேண்டுகோளும் விடுக்கின்றேன்.

ஓர் இயக்கத்திற்கென்று கொள்கைகளும் - கோட்பாடுகளும் - அவற்றை நிறைவேற்ற செயல்திட்டங்களும் இருக்கும்போது, அவற்றைப் பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்லவும் - அந்த இயக்கம் கடைப்பிடிக்கும் முற்போக்குத் திட்டங்களுக்கு நேர்மாறாக இன்னொரு இயக்கம் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து கொண்டிருக்குமேயானால், அப்போதுகூட கருத்துக்குக் கருத்து - எழுத்துக்கு எழுத்து - பேச்சுக்குப் பேச்சு என்ற முறையில் பண்பாடு

சிதறாமல், பதறாமல் பக்குவமாக மறுப்பு வழங்க வேண்டுமே தவிர, நரகல் நடையை நாடுவது என்பது நாகரிகமாகாது. நல்லோர் அதனை ஏற்றிடமாட்டார். தத்தமது இயக்கங்களை வளர்ப்பதற்கு உருவாகியிருக்கும் அல்லது உழைத்துக் கொண்டிருக்கும் தலைவர்கள் மற்றும் முன்னணிப் பிரமுகர்கள்கூட ஒருவர் கருத்தை மற்றொருவர் மறுத்துரைக்கும்போது, மரியாதை என்ற ஒரு பண்புக்கு மரண ஓலை வாசிக்கும் பழக்கம் இன்னமும் நாட்டில் இருக்கத்தான் செய்கிறது.

அரசியல்ரீதியிலாகட்டும் - சமுதாயரீதியிலாகட்டும் - ஓர் இயக்கத்தைச் சார்ந்தோர் இன்னொரு இயக்கத்தினரை விமர்சிக்கும்போது, தரக்குறைவு அங்கே தலைகாட்டாமல் தடுத்து நிறுத்துவதில் உரியவர்கள் தனிக்கவனம் செலுத்தினால், தமிழகத்தின் ஒட்டுமொத்தக் கலாச்சாரம் கட்டிக்காக்கப்படும். சமுதாயத்தையும், அரசியலையும் சாக்கடையாக்கி விடத் துடிக்கும் சதிச் செயல்கள் சாய்க்கப்பட்டுவிடும்.

ஆதாரமுள்ள குற்றச்சாட்டுகள் அடங்கிய அசைக்க முடியாத ஆவணங்கள் ஆயிரமாயிரம் தன்னைச் சூழ்ந்து கொண்டிருக்கும்போது - அடிப்படை ஆதாரம் அணுவளவுமில்லாத அவதூறுகளை அள்ளி இறைத்து நமது இயக்கத்தை அழித்துவிடலாமென ஆர்ப்பரிப்போரைக்கூட, அரசியல் ரீதியாக வாதிட்டு மக்கள் மன்றத்தில் அடையாளம் காட்ட வேண்டுமே தவிர, தரக்குறைவான விமர்சனங்கள் மட்டுமே அவர்களைத் தாக்கி வீழ்த்தும் கருவிகள் என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

தமிழ்மொழியை மத்திய ஆட்சிமொழியாக்கிடக் கழகம் என்ன செய்தது என்று கேட்போரிடம், இந்தக் கோரிக்கையை முதன் முதலாகத் திருச்சி மாநில மாநாட்டிலே தீர்மானமாக நிறைவேற்றியதே நமது கழகம்தான் என்ற விளக்கத்தை வழங்கும்போது, அதில் விரசம் கலந்திடத் தேவையில்லையல்லவா?

மாநிலங்களுக்கு மேலும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட சுயாட்சி தேவை என்பதை மக்களிடம் விளக்கிக் கூறும்போது, அது நமது கொள்கைத் திட்டமாக அமைந்திட வேண்டுமேயல்லாமல் - அதில் கோணல் வழி - குறுக்குவழி - குதர்க்கவழி போவதற்கு என்ன தேவையிருக்கிறது!

அண்ணா வழியில் அயராது உழைப்போம் - ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் - இந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம் - வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் - மாநிலத்தில் சுயாட்சி! மத்தியில் கூட்டாட்சி!

இந்த ஐம்பெரும் முழக்கங்களில்தான் நமது கழகத்தின் குறிக்கோளே அடங்கியிருக்கிறதே!

கழகத்தில் ஏறத்தாழ எழுபது லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் அனைவருக்கும் இந்த ஐம்பெரும் முழக்கத்திற்கான விரிவான விளக்கம் தெரிந்திருக்க வேண்டும். ஒரு சிலருக்குத் தெரியவில்லை என்பதற்காக வெட்கப்பட வேண்டியதில்லை. தெரிந்துகொள்வது, தெளிவடைவதற்காகத்தான்.

கழக உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், கழக ஆதரவாளர்கள் - பொதுமக்கள் எனச் சகல பிரிவினரும் கழகத்தின் கொள்கை விளக்கம் - அதை நடைமுறைப்படுத்த செயல்திட்டம் - நடைமுறைப்படுத்தப்படும்போது ஏற்படும் தடைகள், தடங்கல்கள், அனைத்தையும் அறிந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

அரசியல் நிலவரம் - நாட்டு நடப்பு - இவைகளைப் பற்றியெல்லாம் நெல்லை மாநாட்டில் கழகக் கண்மணிகள் உரையாற்றிடப் போகிறார்கள்.

அந்த உரைகளில் பொதிந்துள்ள கருத்துக் கோவைகள் ஒவ்வொன்றின் தலைப்பையும், நெல்லைப் பேரணியில் வருவோர் முழக்கமாக ஒலித்திட வேண்டும்.

ஐம்பெரும் முழக்கங்கள் கொண்ட தனித்தனி அட்டைகள், பதாகைகள், பெரியார், அண்ணா படங்கள் பேரணியில் வருவோர் கரங்களை அலங்கரிக்க வேண்டும். தாயகத்தின் இருள் அகன்றிட இந்த ஐம்பதாண்டுக் காலத்தில் ரத்தம் சிந்தியோர் - உயிர்விட்டோர் நம் நினைவில் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றார் என்பதைக் காட்டும், கறுப்பும், சிவப்பும் கலந்த கழகக் கொடி, பேரணியில் வரும் ஒவ்வொருவர் கையிலும் இருந்திடல் வேண்டும்.

தந்தை பெரியார், வாழ்க! வாழ்க! வாழ்கவே! என்று ஒருவர் உரத்த குரலெடுத்து முழங்க, பேரணியில் வருவோர் அனைவரும் வாழ்க! வாழ்க! வாழ்கவே! என ஒலித்திட வேண்டும். பேரறிஞர் அண்ணா, வாழ்க, வாழ்க, வாழ்கவே! இவ்வாறு ஒருவர் சொல்ல, பேரணியினர் அனைவரும் வாழ்க! வாழ்க! வாழ்கவே என ஒலிக்க வேண்டும்.

ஐம்பெரும் முழக்கமுடன், காண்போம் காண்போம் மதநல்லிணக்கம் காண்போம்! காப்போம், காப்போம்; மனித நேயம் காப்போம்! போரிடுவோம், போரிடுவோம்; சமூக நீதிக்காகப் போரிடுவோம்! போற்றுவோம், போற்றுவோம்; சமத்துவ சமதர்மம் போற்றுவோம்! என்ற அலையோசையும் இடைவிடாது நெல்லைப் பேரணியில் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன், ஒவ்வொரு அணியினரும் போட்டி போடத் தொடங்கிவிட்டார்கள் என்று!

அணியினர் மாத்திரமா? பொன்விழாச் சிறப்பு மாநாட்டுக்கு வந்திடும் பொதுமக்கள் கூட்டம், அந்தச் சிறப்பை உணர்ந்து நமது சமுதாய, பொருளாதார, அரசியல் முற்போக்கிற்கான எழுச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கத்தக்க வகையில் நெல்லைப் பேரணி நமது கழகத்துக்கு வலிவூட்டும்! வலிவூட்ட வேண்டும்!

இந்த என் நம்பிக்கை வீண்போகாது! இந்த நம்பிக்கையுடனேதான் உன்னையும், உன் போன்ற உடன்பிறப்புகளையும் நெல்லையில் காணவருகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(08-09-1998)

2425. உன் வருகையில்தான் என் வருகைக்கே சிறப்பு!

உடன்பிறப்பே,

அண்ணாவின் கரம் பிடித்து அவர் நிழலாக இருந்தது மட்டுமல்ல; அவர் மறைந்த பிறகும் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் அவரை அழியாத சித்திரமாகப் போற்றி வருவதுடன் - ஆண்டுதோறும் அவர் பிறந்த நாள் விழாவில் அவரது சிலைக்கு மாலை அணிவித்தும் - நினைவுநாளில் அவர் நீடுதுயில் கொள்ளும் சதுக்கத்திற்கு எந்தத் தடையிருப்பினும் அதனைத் தவிர்த்துவிட்டு, தவறாமல் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியும் வருபவர்கள் நாம்! மிசா கைதிகளாக உங்களில் பலர் ஓராண்டு சிறைப்பட்ட போதுதான் அண்ணா சதுக்கத்திற்கு வர இயலாதவர்கள் என்ற பட்டியலில் நீங்கள் இடம்பெற வேண்டியதாயிற்று. ஆம்; நாம் வாழும் நாள் வரையிலும், அவர் நினைவையும், அவருக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதையையும் அவர் வழியில் நிறைவேற்ற வேண்டிய அரும்பணிகளையும் மறந்திட மாட்டோம். மரக்கட்டைகளல்ல நாம்; மனிதர்கள் என்பதால் - மனிதரிலும் மனச்சாட்சிக்கு மதிப்பளிப்பவர்கள் என்பதால் - அண்ணா பெயர் என்பது அவசியத்துக்காக பூசிக் கொள்ளப்படும் அரிதாரமாக நமக்கு என்றைக்குமே இருந்ததில்லை.

அண்ணா என்ற பெயர் நமக்கு இதயத்தின் துடிப்பு - உயிர் மூச்சு - நாடி நரம்புகளில் சுழன்றுகொண்டிருக்கும் குருதிப்புனலின் கதகதப்பு - அந்தப் பெயரை மறந்தால் நமக்கு மட்டுமல்ல; நாட்டுக்கே நலிவு ஏற்பட்டுவிடும்!

எப்போதாவது நினைத்துக் கொண்டால் அண்ணா என்பதும் - நிலைமைக்கேற்ப அவர் பெயரைப் பயன்படுத்திக் கொள்வதும் - சில சமய சஞ்சீவிகளுக்கு மட்டுமே உடம்போடு ஒட்டிய சாமர்த்தியம் என்பதை எடுத்துக்காட்டும் எத்தனையோ எண்ணற்ற

நிகழ்ச்சிகள் தேதிவாரியாக நெஞ்சில் நிழலாடிக் கொண்டுதான் இருக்கின்றன.

என் செய்வது! இரத்த நாக்குடன் வேதாந்தம் பேசும் வேங்கைகள் - கிளிசரின் இல்லாமலே கண்ணீர் வடிக்கும் முதலைகள் - சிலரைச் சில காலம் ஏமாற்றலாம் எனும் இடைவேளையைப் பயன்படுத்திக் கொண்டு திறமையாக நடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், உச்சகட்டக் காட்சியில் உண்மைகள் வெளிச்சத்துக்கு வரத்தான் போகின்றன என்ற உறுதிப்பாட்டுடன், அண்ணாவின் அரவணைப்பில் வளர்ந்த தம்பிகளாகிய நாம் நமது பயணத்தைத் தொய்வின்றித் தொடருகிறோம்.

உடன்பிறப்பே, இன்றுள்ள அரசியல் நிலவரம் என்பது, நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்கள் ஒரு படத்தில் கூறியதுபோல, இப்படித்தான் வாழ வேண்டும் என்றில்லை - மாறாக எப்படியும் வாழலாம் என்ற அளவில்தான் இருக்கிறது.

அண்ணாவின் மறைவுக்குப்பிறகு, அவர் நம் கரங்களில் ஒப்படைத்து விட்டுப்போன தி.மு.கழகம் எனும் இந்த அகல்விளக்கை, பெரும்புயலுக்கும் சூறாவளிக்குமிடையிலே ஒரு கரத்தில் ஏந்தி, மற்றொரு கரத்தால் விளக்கு அணையாமல் பொத்திப் பாதுகாத்துக் கொண்டு - ஒரு அடி எடுத்து வைத்தால் இரண்டு அடி சருக்கி விடுகிற பாதையில், மலையின் உச்சியை நோக்கி நடந்து கொண்டிருக்கிற நிலைதான் நமது நிலை! ஆனால் இப்படித்தான் வாழவேண்டும் என்ற இலக்கணத்தை, அழியாத கல்வெட்டாக இதயத்தில் செதுக்கி வைத்துக் கொண்டிருக்கிற நாம் அகல்விளக்கையும் அணைய விடக்கூடாது; மலை உச்சிக்கும் சென்றாக வேண்டும்; மழையையும், புயலையும் கண்டு மயக்கமோ, தயக்கமோ வரவும் கூடாது - இந்தச் சோதனையில் வென்று காட்டுவோம் வாரீர்; இதற்கு அண்ணாவின் அசைக்க முடியாத இலட்சியப் பற்றும், ஈடுஇணை காட்ட முடியாத அவரது அணுகுமுறையும் நமக்குத் துணை நிற்கும். அந்த நம்பிக்கையுடன் நாம் இயக்கிக் கொண்டிருக்கும் இந்தக் கழகத்திற்குத்தான் பொன்விழா!

ஆட்சியில் இருக்கிறோம்; அய்யா பெரியார் அமைத்துத் தந்த அடித்தளத்தை ஒதுக்கி வைத்துவிட்டு ஆட்சியெனும் கோட்டையை நாம் கட்டிவிடவில்லை! கோட்டைக்குள் குடி புகுந்துவிட்ட காரணத்தால், அண்ணா வழங்கிய கொள்கைகளைக்

கொல்லைப்புறமாக விரட்டிவிடவில்லை! இன உணர்வை இழந்தோமில்லை! மொழியுணர்வைத் துறந்தோமில்லை! அறிவாயுதத்தை வீசி எறிந்தோமில்லை! மக்களை மாக்களாக மதித்தோமில்லை! மக்களாட்சித் தத்துவத்தை மண்ணில் புதைத்தோமில்லை! மகுடம் காக்க மண்ணூர்ந்திடும் புழுவாய் நெளிந்தோமில்லை! விண்ணூர்ந்திடும் கதிரவனாய்த்தான் உயர்ந்தோம் - உழைத்தோம் - ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கிறோம்; உறுதி நமது கவசம் - உறைவாள் நமது கொள்கை - அதுவும் உறங்காத வாளாக!

பதவியைத் தமிழ் மக்களுக்குப் பணியாற்றும் ஓர் அரிய வாய்ப்பாக கருதிச் செயல்படுகிறோமேயல்லாமல், அப்பணியில் அல்லும் பகலும் அயராது ஈடுபடுகிறோமேயல்லாமல், இப்பதவியை ஜென்ம சாபல்யம் என்று என்றைக்கும் இளித்துக் கிடந்ததில்லை! இரண்டொரு முறை இதனை இழந்தபோதும் ஏங்கித் தவித்ததுமில்லை. எரிச்சல் கொண்டு தலையைப் பிய்த்துக் கொண்டதுமில்லை.

இத்தனை இலக்கணங்களும் பொருந்திய இந்த இயக்கம் ஐம்பதாம் ஆண்டுப் பொன்விழாத் தொடக்கத்தைச் சிறப்பு மாநாடாகக் கொண்டாடும் போதுதான் ''எக்னாமிக்ஸ் டைம்ஸ்'' என்ற பிரபல ஆங்கில ஏடு, "ராபின்சன் பார்க்''கிலிருந்து ''டைடல் பார்க்'' வரையில் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தீட்டி இருக்கிறது.

சென்னை ராபின்சன் பார்க்கில் கொட்டும் மழையில் கொள்கைக் குன்றமாய் இந்தக் கழகத்தை அண்ணா தொடங்கிய காலம் முதல், இன்று நமது ஆட்சிக்காலத்தில் வளர்ந்து வரும் விஞ்ஞான காலத்துக் கணினி யுகத்தில் தகவல் தொடர்பு நுட்பத் தொழில் வளர்த்திடத் தொடங்கப்படும் டைடல் பார்க் வரையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், மாறுதல்களையும் அக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

மாநாட்டுப் பந்தல் அமையும் அண்ணாநகர் பெருவளாகத்தில் ஐம்பதாண்டு காலக் கழக வரலாற்று நிகழ்ச்சிகளை ஓவியங்களாகத் தீட்டி, காட்சியாக வைக்க இருக்கிறோம் என்று கூறி, மாநாட்டுப் பொருளாளர் தம்பி ஆலடி அருணா அந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்.

ஐம்பது வயதுக்குள் இந்த இயக்கம் பெற்ற விழுப்புண்கள் - கண்ட களங்கள் - சந்தித்த வெற்றி தோல்விகள் - குறுக்கிட்ட சிறைச்சாலைகள் - அங்கு நடந்த சித்ரவதைகள் - புரிந்த சாதனைகள் - நிறைவேற்றிய செயல்கள் - உருவாக்கிய வரலாறுகள் - இவைதானே உடன்பிறப்பே, நமது அழியாத சொத்து! எவரும் அபகரிக்க முடியாத ஆஸ்திபாஸ்தி!

இதற்குரியவர்களான நாம், நெல்லையில் நடத்தும் இந்தப் பொன்விழாச் சிறப்பு மாநாடு, இந்திய நாட்டின் இன்றைய அரசியல் அரங்கில் நாம் வகுக்க இருக்கும் வியூகம் என்ன என்பதையும் உணர்த்துவதற்கு ஒரு வாய்ப்பாகத் திகழும் என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன்.

எனவே, இந்த மாநாடு இந்திய நாடு மட்டுமல்ல; உலகின் பல பகுதிகளில் உன்னிப்பாகக் கவனிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புக்குரிய மாநாடாகும்.

மாநாட்டின் எல்லா வகையான சிறப்புகளையும், சீராகவும், செம்மையாகவும் செய்துமுடிக்க நமது அமைப்புச் செயலாளர் தம்பி பொன். முத்துராமலிங்கம் நெல்லைக்கே குடிபோய் விட்டார்.

அங்கிருந்தே அரும்பணியாற்றிடும் தம்பி நெல்லை மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் தம்பி பெரியசாமி, குமரி மாவட்டச் செயலாளர் தம்பி ஆல்பன் மற்றும் பணியாற்றுவதற்காகப் பொறுப்பேற்றுள்ள பல்வேறு குழுக்களின் உடன்பிறப்புகள் உறங்காமல், ஓய்வு கொள்ளாமல் உழைக்கின்றனர் எனக் கேட்டு என் உள்ளம் பூரிக்கிறது. புளகாங்கிதமுறுகிறேன்.

மாநாட்டின் சிறப்பு என்பது, அங்குள்ளோர் ஆற்றும் பணியில் மட்டுமல்லவே! உன் போன்ற உடன்பிறப்புகள் வகுத்திடும் அணியிலுமன்றோ அடங்கிக் கிடக்கிறது!

உன் வருகையிருந்தால்தானே என் வருகைக்கே சிறப்பு! என்ன புரிகிறதா? புரிந்தால், புறப்படத் தயாராகி விட்டாயா?

அன்புள்ள,

மு. க.

(09-09-1998)

2426. உறுதிகொண்ட நெஞ்சினாய்! வா! வா! வா!

உடன்பிறப்பே,

இடையில் இன்னும் ஏழு நாட்கள்தான் இருக்கின்றன! கழக மகாக் கடல் நெல்லையில் பெருக்கெடுப்பதற்கு! கலிங்கம் சென்ற கருணாகரத் தொண்டைமானின் அணி வகுப்பின் மாட்சியை, நமது கழகப் பேரணியில் தாமிரபரணிக் கரையில் மீண்டும் ஒருமுறை காண்பதற்கு! இந்நாட்டான் இங்கு வாழ்ந்தான் - எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான் - தமிழ்நாட்டான் - தலை குனிந்தான்; இதோ நிமிர்ந்தான் - எழுச்சியுற்ற இளைஞன்தான் - ஏறுநடை சிங்கம் தான் - கொழித்து விட்ட உமிகள்தான் இனிக் குட்டைமனக் கூட்டத்தார் எனக் கொம்பு முழக்கி முரசொலிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணிகள் பலவும் ஆர்ப்பரித்து வீர உலா நடத்தப் போகும் அந்த 17-ஆம் தேதிக்கு இடையில் இன்னும் ஏழு நாட்கள் தானிருக்கின்றன!

அதற்கு முன்பு செப்டம்பர் 15 - அன்று எளிய முறையிலும், ஆனால் எழுச்சி என்றும் போல் எள்ளளவும் குன்றாமலும் நாம் ஆண்டுதோறும் நடத்துகின்ற திருவிழா ஒன்றிருக்கிறது, அண்ணா அறிவாலயத்தில்!

சிங்க நடையும், சிங்காரத் தென்றல் நடையும், பொங்கு கடல் நடையும் தன் புரட்சித் தமிழ்நடையில் கண்டவரும் - பூவிதழின் மென்மையான புனித உள்ளம், அன்பு உள்ளம், அன்னை உள்ளம் கொண்டவரும் - நமக்கெல்லாம் அண்ணனாக வாய்த்தவரும், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழனாக விளங்கி, இந்த உலகில் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் அவர்கள் உள்ளத்தில் தங்கச் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருப்பவருமான பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளைச் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கொண்டாடிவிட்டு மறுநாள் 16-ந் தேதி தூத்துக்குடி புறப்படுகிறேன்.

அண்ணா பிறந்தநாளில் தி.மு.க. அறக்கட்டளை சார்பாக, மேல்நிலைப்பள்ளித் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்க்கு நிதியும், சான்றிதழ்களும் அன்றைய மாலை நிகழ்ச்சியில் வழங்கப்பட இருக்கின்றன. நமது கழக அரசின் சார்பில் தமிழ்ச் சமுதாயத்தினரின் அறிவு பெருக்கும் காரியத்துக்காக - எட்டாவது வரையில் படிக்கும் ஏழைப் பெண்களுக்கு பத்தாயிர ரூபாய் திருமண உதவியும், மாதம் ரூபாய் இரண்டாயிரமும், இரண்டாயிரத்துக்குக் குறைவாகவும் வருவாய் உடைய குடும்பத்துப் பெண்களுக்குப் பட்டப் படிப்பு வரையில் இலவசக் கல்வியும் - அஃதன்றி ஆதிதிராவிடக் குடும்பம் மற்றும் மிகப் பின்தங்கியோர் குடும்பத்து மாணவிகளாயிருப்பின், வருமான வரம்பின்றி அவர்களுக்கும் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வியும் - பட்டதாரிகள், பட்டயதாரிகள் இல்லாத குடும்பத்திலேயிருந்து மதிப்பெண் வரிசையில் மாநில அளவில் ஒவ்வொரு தொழில் கல்வியிலும் முதல் பத்து இடங்களில் வருவோர் ஒவ்வொருவருக்கும் அந்தந்தத் தொழிற்கல்வி பயில ஆகும் முழுமையான செலவை அரசே ஏற்றுக் கொள்கிற சலுகையும் - தொழிற்கல்வியில் மாணவர் சேர்க்கையின்போது கிராமத்து மாணவர்களுக்கு 15 சதவிகித ஒதுக்கீடும் - என்றெல்லாம் பல திட்டங்கள் இருக்கின்றன எனினும், பொது நிறுவனங்களுக்கும் கல்வித் துறையை வளர்த்திடும் கடமையுள்ளது என்பதைக் காட்டிட, கழக அறக்கட்டளையின் வாயிலாகவும் நம்மாலியன்ற ஊக்கத்தை அந்த மாணவ மாணவியர்க்கு வழங்கி வருகிறோம்.

மேலும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பாடல்களை ஒப்பித்தல் போட்டியொன்றைக் கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் முரசொலி அறக்கட்டளையினர் நடத்தி, போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மற்றும் உயர்நிலை மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்க்கு நிதியும், சான்றிதழும் அண்ணா பிறந்தநாளில் வழக்கம் போல் வழங்க இருக்கிறோம்.

இந்த நாளில் கழகத்தின் முன்னோடிகளுக்குப் பெரியார் விருது - அண்ணா விருது - கலைஞர் விருது என மூன்று விருதுகளை ஆண்டுதோறும் அளிப்பது போலவே, இந்த ஆண்டும் அளிக்க இருக்கிறோம். இந்த விருதுகளைப் பெற இந்த ஆண்டு

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் முறையே, பூவாளூர் பெரியவர் சின்னதுரை, திருவைகுண்டம் ஜெகவீராராஜேந்திரன், கோவை மணியன் ஆகியோராவார்.

இவர்களில் பூவாளூர் சின்னதுரை அவர்கள் வயதில் முதிர்ந்தவர் - திராவிட இயக்கக் கொள்கை முதிர்ச்சி நிரம்பப் பெற்றவர். அந்தக் காலத்தில் பெரியார், அண்ணா முதற்கொண்டு இயக்கத்தின் முன்னணியினர் அனைவரையும் அழைத்துச் சென்று பிரச்சாரக் கூட்டங்களை நடத்தியவர். கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே கழகம் வளர்த்த துணிவுக்கும், உறுதிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். தன்னைத் தொண்டர்க்குத் தொண்டராகக் கருதிக்கொண்டு இன்றளவும் இயக்கப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். இலட்சியக் கிழவர்.

காட்டுத் தீயெனக் கனன்றெழுந்திடும் எதிர்ப்புகளைத் துச்சமென மதித்துக் களத்தில் நின்று எந்நேரமும் போராடுகிற நிலைமையிலும்கூட, களைப்பறியாது கடமையாற்றிக் கழகம் காத்தவர்களில் ஒருவர்தான் திருவைகுண்டத்தைச் சேர்ந்த ஜெகவீராராஜேந்திரன். வயதானவர். நெஞ்சில் வைரமேறியவர்.

போகாத ஊரில்லை - பேசாத இடமில்லை என்று தமிழகம் முழுவதும் அலைந்து திரிந்து, போக்குவரத்துக்கும் சரி - தங்குமிடத்துக்கும் சரி! கழக நிர்வாகிகளைத் தொல்லைப்படுத்த விரும்பாமல், ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகளில் தட்டாமல் தயங்காமல் சென்று கடமையாற்றி வருபவர் கோவை மணியன் என்னும் கொள்கைத் தங்கம் என்பது நான் சொல்லாமலே உனக்குத் தெரியும்.

இந்த மூவருக்கும் விருதுகள் வழங்கப்படும் நாளில் என்றும் போல் இசை முரசு அனிபாவின் இடிமுரசமும் கேட்கலாம். இந்த நிகழ்ச்சிகள் வழங்கும் மகிழ்ச்சி, அருவியாகிட, அதே இனிய உணர்வுடன்தான் நெல்லைப் பேரணிக்கும் - சிறப்பு மாநாட்டுக்கும் வர இருக்கிறேன்.

அந்த இனிமை, மேலும் மேலும் என் உணர்வுக்குச் சுவையூட்டும் இனிமையாக வேண்டுமேயானால், நெல்லை மாநாட்டில் எளிமை வேண்டும் - ஆம். உடன்பிறப்பே! அந்த எளிமைதான் கழகத்தின் வலிமை என எண்ணுபவன் நான்! சீவி

முடித்து - பொட்டிட்டு - பூவைத்துக் கொண்டு புன்னகை ததும்ப நின்றாலே அழகுதான்!

அதற்காக, அங்கமெலாம் முத்துக்களும், வைரங்களும் வைடூரியங்களும் ஆபரணங்களாய்த் தொட்டிலாடிக் கொண்டிருக்க வேண்டுமா? அதுதான் அழகா? இல்லை! அது ஆடம்பரம்! வீண் ஆர்ப்பாட்டம்! முத்துக்களைப் பல் வரிசையிலும் - ரத்தினத்தை இதழ்களிலும் - தங்கத்தைக் குணத்திலும் காண்பதே இனிமை! எளிமை இணைந்த இனிமை! எளிமை என்பதற்காக எழுச்சியே கூடாது என்று பொருள் அல்ல! எழிலுக்குப் பகையுமல்ல! பொன்விழாப் பேரணியிலும், மாநாட்டிலும் எழுச்சி பொங்கட்டும்! கொள்கை முழங்குவது போலக் காணுமிடமெல்லாம் நமது கொடிகள்! கொடிகள்! கொடிகள்!

குலக்கொழுந்துகளே! கொடிகளுடன் வாரீர்! இனமானத் தூதுவர்களே! இன்றே ஆயத்தமாகுக! தாமிரபரணிக்கரையில் தமிழர்சேனை திரளட்டும்! தாமிரபரணிக்குக் கரையுண்டு; எம் தமிழர் சேனைக்குக் கரையிலையோ என்ற கேள்வி எழட்டும் - அண்ணா தந்த கட்டுப்பாடு எனும் அறிவுரையே கரையாக அமையுமென்று பதில் கூறி, அதனை அமைத்துக்காட்டிட அணிவகுத்திட, அன்பு உடன்பிறப்பே! உற்றார், உறவினர், நண்பர் உடன் சூழ, உறுதிகொண்ட நெஞ்சினாய் - வா! வா! வா!

அன்புள்ள,

மு. க.

(11-09-1998)

2427. நான் உறங்கிட அனுமதி தருவாயா?

உடன்பிறப்பே,

நெல்லைப் பொன்விழா மாநாட்டுப் பணிகளை ஒவ்வொரு குழுவினரும் பகிர்ந்து கொண்டு ஆர்வமுடன் ஆற்றி வருகிறார்கள் என்ற செய்தி செந்தேனாகப் பாய்கிறது, செவிகளில்! தம்பி இரா. ஆவுடையப்பன் தலைமையில் மாநில அளவிலான பொதுக்குழு உறுப்பினர்கள், நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் கொண்ட மாநாட்டு வரவேற்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தம்பி வீரபெருமாளைத் தலைவராகக் கொண்ட மேடைக்குழு, 15 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. தம்பி முருகையாவைத் தலைவராகக் கொண்ட பந்தல்குழு, 22 உறுப்பினர்களைக் கொண்டு பணிபுரிகிறது. தம்பி ரோகினி நாராயணனைத் தலைவராகக் கொண்ட அலங்காரக் குழுவும், 22 உறுப்பினர்களைக் கொண்டு நெல்லை நகரையும் அதன் சுற்றுப் புறங்களையும் எளிய முறையில் எழுச்சிக்கோலம் கொள்ளச் செயல்பட்டு வருகிறது. தம்பி தங்கவேலுவைத் தலைவராகக் கொண்டு பத்து பேர் அங்கம் வகிக்கும் உபசரிப்புக்குழு, உவகை பொங்க உன்னையும், என்னையும் வரவேற்கத் தயாராகிக் கொண்டிருக்கிறது. தம்பி மாரியைத் தலைவராகக் கொண்டு 23 பேர் இடம்பெற்றுள்ள விளம்பரக் குழு, வண்ணமிகு விளம்பரங்களை எண்ணம் கவரும் விதத்தில் தொடங்கியுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தம்பி நயினா முகமது தலைமையில், 22 பேர் கொண்ட ஊர்வலக்குழு, பேரணியைக் குறித்த நேரத்தில் தொடங்கவும், கட்டுப்பாடு குலையாமல் நடத்தவும், கண்ணியம் தவறாமல் அமைந்திடவும் தனது கடமையைப் பொறுப்புடன் கவனித்து வருகிறது. இந்த இயக்கத்தின் நாடி நரம்புகளான தொண்டர்களுக்கான அணி, ஒன்பது பேரைக்கொண்ட குழுவாக, தம்பி ஆல்பிரட் தாஸ் தலைமையிலே அமைந்துள்ளது. தொண்டாற்றும் மகளிர் அணி 12 பேர் கொண்ட குழுவாக, தங்கை

திருமதி. இராஜம் கான் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது. மாநாட்டின் செலவினங்களை எதிர்கொள்வதற்காகத் தம்பி ஏ.எல். சுப்பிரமணியன் தலைமையில் நன்கொடைச் சீட்டுகளுடன் நாற்புறமும் பயணம் மேற்கொண்டுள்ளது. ஆறுபேர் கொண்ட மாநாட்டு அலுவல் ஆய்வுக்குழு, வழக்கறிஞர் தம்பி செல்வ சூடாமணி பொறுப்பில் இயங்கி வருகிறது.

மாநாட்டுக்கான நன்கொடையாக சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்பட தலா ஐயாயிரம் தரவேண்டுமென்றும் - மாநாட்டு வரவேற்புக்குழு உறுப்பினர்களாக உள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் நெல்லை, குமரி, தூத்துக்குடி மாவட்டப் பிரதிநிதிகள் தலா ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டுமென்றும் ஏற்கனவே தலைமைக் கழகத்திலிருந்து அனைவருக்கும் தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கழக முன்னோடிகள் அறிவித்திடும் தகவல்களைப் பார்க்கும்போது, தாங்குமா தாமிரபரணி தீரம் என்ற கவலையும், ஆவலும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு என் மனத்தை மழைத்தூறல் விழும்போது காயும் வெயில் போன்ற நிலைக்கு உள்ளாக்கியிருக்கின்றன.

நூறு இருநூறு வாகனங்களில் புறப்படுகிறோம் என்று நகர்ப்பகுதிகளிலேயிருந்து மட்டுமல்ல, கிராமப்பகுதிகளிலே உள்ள கிளைகள் - ஒன்றியங்களின் நிர்வாகிகள், செயல்வீரர்கள் கூட நெஞ்சுயர்த்தி அறிவிக்கும்போது, அப்படியானால் தமிழகம் முழுவதுமிருந்து, ஏன் - புதுவையிலிருந்தும், ஆந்திர, கர்நாடக, கேரளா மாநிலங்களிலிருந்தும், மும்பாய் பகுதியிலிருந்தும் மொத்தமாகப் பொன்விழா மாநாட்டுக்கு வரப்போகின்றவர்களின் எண்ணிக்கைக் கணக்கு, ஏட்டில் அடங்கப்போவதாக எனக்குத் தோன்றவில்லை.

முதல்நாள் பேரணி எப்பொழுது முடியப்போகிறதோ! என்னை நீ எப்பொழுது தூங்க விடப்போகிறாயோ! தெரியவில்லை!

இப்பொழுதே ஒவ்வொருநாள் கடிதமும் எழுதிமுடிக்க இரவு பனிரெண்டரைமணி ஆகிறது. அதன் பிறகு காலை 5 மணிக்கு எழுந்தால்தான் எழுதிய கடிதம் அச்சுக்கோத்து வருவதில் பிழைத் திருத்தம் செய்து, மீண்டும் அச்சியற்ற அனுப்ப முடிகிறது.

எனவே, இத்தனை நாள், இத்தனை மணி நேரம் என் தூக்கத்தைக் குறைத்ததுடன் நில்லாமல், வருகிற 17-ஆம் தேதியும் நெல்லையில் நான் உறங்குவதற்கு வழியில்லாமல் செய்யப்போகிறாய்! என்செய்வது! தொந்திரவுதான்!

தொந்திரவுக்குள்ளும் தோழி, நான் சுகம் கண்டேன் என்று காதலனின் செயல் குறித்துத் தன் தோழியிடம் ஒருத்தி பாடுவதாகப் புரட்சிக் கவிஞர் எழுதியுள்ளதைத்தான் நினைத்துக் கொண்டு இன்புற வேண்டும்.

உடன்பிறப்பே, ஒருக்கணம் விழிகளை மெல்ல மூடிக்கொண்டு சிந்தித்துப் பார்ப்போமா? பேரணி முடிகிறது. 18-ஆம் தேதி நான் கொடியேற்றுகிறேன். இசைமுரசு அனிபா, ''அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா'' என்று இனமுரசு ஒலிக்கின்றார்.

மாநாட்டுத் திறப்பாளர் நமது இனமானப் பேராசிரியர் முன்னிலையிலும், மாநாட்டுத் தலைவராம் என் முன்னிலையிலும், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி, துணை பொதுச்செயலாளர் நாஞ்சிலார் முன்னிலையிலும் மற்றும் கழக முன்னோடிகள், இயக்கத்தின் தளகர்த்தர்கள் முன்னிலையிலும் லட்சக் கணக்கில் குழுமியிருக்கும் மக்கள் வெள்ளத்தின் முன்னிலையிலும், படத்திறப்பு விழா நிகழ்ச்சிகள் தொடருகின்றன.

தொண்டு செய்து பழுத்தபழம், இனமான ஏந்தல், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் படத்தை, சுயமரியாதை இயக்கச் சுடரொளி இளம்பரிதியின் வழித்தோன்றல் சட்டப் பேரவைத் துணைத் தலைவர் தம்பி இளம்வழுதி திறக்கிறார். ஈட்டிமுனையின் பாய்ச்சல் மட்டுமல்ல! இனிப்பும் வழங்குபவர் நகைச்சுவையால்!

சாலையோரத்தில் வேலையற்றதுகள் - வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள்! அரசே! அதுதான் காலக்குறி! என்று எச்சரித்த பேரறிஞர் பெருமகனார் அண்ணாவின் படத்தைத் திறந்து வைக்கிறார் தம்பி முகவை தென்னவன்! தேனில் நனைத்தெடுத்த பலாச்சுளைச் சொற்களைப் பொழிபவர்!

இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே! என்று சங்கநாதம்

செய்த புரட்சிக்கவிஞரின் படத்தை, தங்கை புதுக்கோட்டை விஜயா திறந்து வைக்கிறார். தெளிந்த நீரோடை போன்ற கருத்தோட்டம் காணுகிறோம் - கரும்பனைய சொற்பொழிவு!

மனிதரில் நீயும் மனிதன்! மண்ணன்று! எழு! விழி! என்று ஆதிதிராவிடப் பெருமக்களை வீறு கொள்ளச் செய்து, சமுதாய விடுதலைக்குப் போர் முழக்கம் செய்த அண்ணல் அம்பேத்கர் படத்தைத் திறக்கிறார் தம்பி திருச்சி செல்வேந்திரன். கேலியும், கிண்டலும் அதிகமெனினும், சமுதாயப் பயிர் காக்கும் வேலி எனலாம் அந்தப் பேச்சை!

இந்திய நாட்டின் ஆட்சிமொழியாகும் தகுதி, இலக்கிய வளமும், தொன்மைப் பெருமையும் கொண்ட தமிழ்மொழிக்கே உண்டு என அன்றோர் நாள் அரசியல் நிர்ணய சபையில் முழங்கிய கண்ணியத்தின் காவலர் காயிதேமில்லத் படத்தை, மழலைப்பருவம் முதல் இந்த மறத்தமிழ்க்குலம் செழித்திட மேடையேறி முழங்கிவரும் தங்கை திருமதி சற்குணபாண்டியன் திறந்து வைக்கிறார்.

கோடையிடி பேச்சில் - குற்றாலம் அருவி நெஞ்சில் - என்ற புகழுக்குரியவரும், வீரத்திருமகனாகவும் விவேகப் பெருமகனாகவும் விளங்கிய பசும்பொன் தேவரின் படத்தை சொலல்வல்லன் சோர்விலான் சுந்தரத்தமிழ் கோத்துச் சொற்பெருக்காற்றும் ஆற்றலாளன், தம்பி இரகுமான்கான் திறந்து வைக்கிறார்.

சுயமரியாதை இயக்கத்தின் பெயரால், என்னைக் கண்ணைக் கட்டிக்கொண்டு கிணற்றிலே விழு எனப் பெரியார் கட்டளையிட்டாலும், உடனே விழுவேன் என்று பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை மீது கொண்டிருந்த அளவற்ற பற்றுபாசத்தை வெளியிட்ட சௌந்தர பாண்டியனார் படத்தை, கனியோ - தமிழோ - கவிதையோ - காவியமோ என வியக்குமளவுக்குக் கற்கண்டுச் சொற்பொழிவாற்றும், தம்பி கம்பம் செல்வேந்திரன் திறந்து வைக்கிறார்.

வரலாற்றுக் குறிப்புகள் - ஆதாரங்கள் - இவற்றை வாரி இறைத்துப் பேசும் திறன்கொண்ட தம்பி ஏ.ஜி. சம்பத் - கொள்கைக்குன்றமாம் கோவிந்தசாமி அவர்களின் வழித்தோன்றல்,

சிந்தனைச் சிற்பியும், தன்மானத் தமிழ் மகனுமான சிங்காரவேலரின் படத்தைத் திறக்கிறார்.

துரோகியொருவனின் துணையை இன்றைக்கு நாடினால், நாளை அந்தத் துரோகி நமக்குத் துரோகம் செய்வான் என்ற நீதியுரையை உள்ளடக்கிய மனோன்மணியம் தந்த சுந்தரனாரின் படத்தை, தமிழ்க்குடியின் பண்பாட்டுப் புகழையும் - இன உணர்வையும் - மொழி ஆர்வத்தையும் வளர்த்திடக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள முனைவர் தமிழ்க்குடிமகன் திறந்து வைக்கிறார். தென்றல் நடையில் உரையாற்றி!

கலையுலகில் கொடிகட்டிப் பறந்தவரும் - கழகக் கருத்துகளைப் பரப்பும் பணிக்குத் தன் கலைத்திறனைப் பயன்படுத்தியவருமான நகைச்சுவை மேதை - வாரி வழங்கிய வள்ளல் - கலைவாணர் என்.எஸ்.கே. படத்தை, இன்றையத் திரைஉலகின் ஒளிமிகு நட்சத்திரம் - இலட்சிய வீரர் சுப்ரீம் ஸ்டார் தம்பி சரத்குமார் திறந்து வைக்கிறார்.

இன்பத் தமிழ் காத்திடுவோம்! தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! என்று இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, எரிதழலில் வீழ்ந்து இன்னுயிரைப் போக்கிக் கொண்டவர்கள், சிறையேகியவர்கள் - சித்ரவதைப் பட்டவர்கள் - அனைவரது படத்தையும் வீறு கொண்ட நடையால் தமிழகத்தின் வீதிதோறும் விழிப்புணர்வு கொளுத்திக் கழகம் வளர்க்கும் தம்பி நெல்லிகுப்பம் புகழேந்தி திறந்து வைக்கிறார்.

படத்திறப்பு விழாக்களுக்குப் பிறகு, தீர்மானங்கள் - கருத்துரைகள் - திறப்புரை - தலைமையுரை ஏறத்தாழ இரண்டு மாநாட்டு நிகழ்ச்சிகளையே தொகுத்துத் தந்துவிட்டேன்.

மணி இப்பொழுது பனிரெண்டரையும் தாண்டி விட்டது. ஒரு மணிக்காவது உறங்கிட அனுமதி தருவாயா?

அன்புள்ள,

மு. க.

(12-09-1998)

2428. செல்வோம் நெல்லைக்கு; வெல்வோம் தொல்லைகளை!

உடன்பிறப்பே,

1942-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8-ஆம் நாள், அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'திராவிடநாடு' வார இதழ் காஞ்சியிலிருந்து வெளிவந்தது. அப்போது அண்ணாவுக்கு வயது 33 - எனக்கு வயது 18 - திருவாரூரில் முரசொலி துண்டு அறிக்கையாக மாதமிருமுறை வெளிவந்து மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட காலம் அது!

'திராவிடநாடு' இதழ் வெளிவந்த அதே மார்ச் திங்கள் 'இளமைப்பலி' என்ற தலைப்பில், புரட்சிக்கவிஞரின் கவிதையொன்றின் அடிப்படையில், விதவை மறுமணம் குறித்த சிறுகதையொன்றை நான் எழுதி அனுப்பி வைத்தேன் காஞ்சிபுரத்துக்கு! என்னை வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்தும் அளவுக்கு என் முதல் எழுத்து ஒரு வார இதழில்; அதுவும் நான் கண்ணாகவும், கண்ணின் மணியாகவும் போற்றிய அண்ணாவின் 'திராவிடநாடு' இதழில் வெளிவந்தது கண்டு, அதனை நம்ப முடியாமல் என்னை நானே கிள்ளிப்பார்த்துக் கொண்டேன்.

தொடர்ந்து இன்னொரு சிறுகதை! பகுத்தறிவு பரமசிவம் என்ற தலைப்பில் அனுப்பி வைத்தேன். அந்தக் கதை திராவிட நாடு இதழில் வெளிவரவில்லை. ஆனால் அடுத்த வாரம் திருவாரூர் வந்த அண்ணா அவர்கள், என்னை அவர் தங்கியிருந்த இடத்துக்கு வரச்சொல்லி என் இளமைத் தோற்றம் கண்டு ஆச்சரியப்பட்டு, நன்றாக எழுதுகிறாய்! நன்றாகவும்படி! என்று அறிவுரை கூறினார். இயக்கத்தில் கொண்டுள்ள ஈடுபாடு, படிப்பிலும் இருக்க வேண்டுமென்ற அண்ணாவின் அந்தக் கருத்தை முற்றிலுமாக நான் நிறைவேற்றாவிடினும், 14 வயது முதல் என் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த திராவிட இயக்க

உணர்வும் - தமிழ் மொழிப்பற்றும் - பிறமொழி ஆதிக்கத்தின் மீது கொண்ட வெறுப்பும் - பகுத்தறிவு நெறியே தன்மானம் காக்கும் நெறியென ஏற்றுக்கொண்ட இலட்சியமும் என்னைச் சமுதாயப் பணியிலும், அரசியல் பணியிலும் படிப்பை விட, அதிதீவிரமாக ஈடுபாடு கொள்ளச் செய்தன.

இந்த இளமைக்கால நினைவை - அதுவும் 56 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்வை, அண்ணாவின் முன்னால் இளங்காளையாக நின்று அவரின் அன்புப் பொழிவில் மூழ்கிய சம்பவத்தை, இப்போது குறிப்பிட வேண்டிய அவசியம் என்ன? இந்த விபரங்களைத்தான் நீ எழுதிய ''நெஞ்சுக்கு நீதி'' முதல் பாகத்திலேயே படித்திருக்கிறோமேயென்று நீ கேட்கக்கூடும்.

அந்தப் பழைய நினைவலைகளைத் தட்டி விடக்கூடிய அளவுக்கு இரண்டொரு நாட்களுக்கு முன்பு ஒரு வார இதழில், இதோ இந்தப் பழைய படம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. 1953 ஜூலை கல்லக்குடி போராட்டத்தில், ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்று விடுதலையான பிறகு, நான் அண்ணாவுடன் எடுத்துக்கொண்ட படத்துடன் இணைத்து ஒரு கடிதமும் கூட அந்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் 1951-ஆம் ஆண்டு எனக்கு எழுதிய கடிதம், அப்படியே அவரது கையெழுத்துடன், அந்த வார இதழில் 47 ஆண்டுகளுக்குப் பிறகு வெளி வருவதென்றால், அதைக் காணும்போது ஓர் இனம் தெரியாத பூரிப்பு ஏற்படத்தானே செய்யும்.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது, தஞ்சாவூர் வந்த நேரத்தில் கழகத்தின் தீர்மானப்படி, அறவழியில் கறுப்புக்கொடி காட்டுவதற்கு நாங்கள் முனைந்து முற்பட்டபோதுதான், அந்த அறப்போர் எப்படி நடைபெறவேண்டுமெனக் குறிப்பிட்டு அண்ணா அவர்கள் 'அன்புள்ள தம்பி' என விளித்து எனக்கு அந்தக் கடிதம் எழுதினார். அதை இதுநாள் வரையில் பத்திரமாகப் பாதுகாத்து என்னுடைய நண்பர் திருவாரூர் தென்னன், அந்த வார இதழ் ஆசிரியர் குழுவினரிடம் கொடுத்திருக்கிறார். அண்ணாவின் கடிதம் அந்த இதழில் வெளிவந்த பிறகுதான், கடிதம் எப்படி அவர்களுக்குக் கிடைத்தது என்ற உண்மையை நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

அண்ணா கைப்பட எழுதிய அந்தக் கடிதத்தை அந்த வார இதழில் கண்டு களித்தால் போதுமா? என்ன எழுதினார் என்பதை எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாதே!

அன்புள்ள தம்பி,

தோழர் என்.எஸ். இளங்கோவும், நீயும் தஞ்சை மாவட்டத்திலே தக்க ஏற்பாடுகள் செய்து வருவது கண்டு நம்பிக்கையும், மகிழ்ச்சியுமடைகிறேன். திருவையாறு நிகழ்ச்சியின் போது கறுப்புக் கொடி காட்டுவதை விட, அதற்காக ஆச்சாரியார் செல்கிறபோது பள்ளியக்கிரகாரத்திலோ அல்லது வேறு தக்க இடத்திலோ கறுப்புக் கொடி காட்டுவதுதான் சிறந்த முறை.

ஆர்வம் போதுமான அளவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. - கட்டுப்பாடாகவும், கண்ணியம் கெடாத முறையிலும், காரியத்தை நடத்த வேண்டுகிறேன். தஞ்சை மாவட்டம் - அடித்து அடித்துப் பழகிப் போன போலீஸ் படை இருக்கும் இடம். தூண்டிவிடும் பார்ப்பனத் தலைவர்கள் வாழும் இடம் - காங்கிரசிடம் புதிய மோகம் கொண்டுள்ள மிட்டா மிராசுகள் உள்ள மாவட்டம். எனவே, அங்கு அடக்குமுறை பல உருவில் வெளிப்படக் கூடும். நிலைமையை நன்கு அறிந்து நடந்துகொள்ள வேண்டுகிறேன்.

ஏதாவது ஓர் இடத்தில் மட்டும் கறுப்புக் கொடி காட்டினால் போதும். போலீஸ் பரேடின் போது வேண்டாம்! விழாப் பந்தலுக்கருகிலேயும் வேண்டாம். திரும்பிப்போ! என்பது தவிர, வேறு ஆபாசக் கூச்சலிட யாரையும் அனுமதிக்காதீர்கள். பலாத்காரம் துளியும் தலைகாட்டக் கூடாது. தோழர்களிடம் இதைக் கண்டிப்பாகக் கூறவும். முன்கூட்டியே கைது செய்தால் பரவாயில்லை.

பொறுப்பான காரியம். இதைத் தக்க விதத்திலே நடத்தித் தருவதற்கு ஏற்ற ஆற்றலும், பண்பும் உள்ளவர்கள் எனது தம்பிமார்கள் என்ற பூரிப்பும், நம்பிக்கையும் எனக்கு நிரம்ப நிரம்ப! உடனுக்குடன் தகவல் கொடுங்கள்!

26-ந் தேதி நான் திருச்சியில் இருக்கிறேன். தகவல் அங்கும், சென்னை மாலை மணிக்கும் தரவும்.

அன்பன்,

அண்ணாதுரை

உடன்பிறப்பே,

கறுப்புக்கொடி காட்டுகிற ஓர் அறப்போராட்டத்தில் கூட, எந்த அளவு கண்ணியம் காக்கப்பட வேண்டும், கட்டுப்பாடு போற்றப்பட வேண்டும், எத்தகைய முழக்கங்களை மட்டுமே அரசியல் நாகரிகத்துடன் எழுப்பிட வேண்டும், எத்தகைய ஆபாசக் கூச்சல்கள் அனுமதிக்கப்படக் கூடாது என்பதை அண்ணா அன்றைக்கே வலியுறுத்திச் சுட்டிக் காட்டியிருக்கிறார் பார்த்தாயா!

கைது செய்யப்படக் கூடும் - பலாத்காரம் துளியளவும் தலைகாட்டக் கூடாது - என்று, எத்துணை பொறுப்புடன் கழகக் கண்மணிகள் நடந்து கொள்ளவேண்டுமென்று அண்ணா அன்புக் கட்டளை பிறப்பித்தது மட்டுமல்ல;

பொறுப்பான காரியம், இதைத் தக்க விதத்திலே நடத்தித் தருவதற்கு ஏற்ற ஆற்றலும், பண்பும் உள்ளவர்கள் எனது தம்பிமார்கள் என்ற பூரிப்பும், நம்பிக்கையும் எனக்கு நிரம்ப நிரம்ப!

அடடா! இந்த வைர வரிகளில் ஒளிபொழிவது அத்தனையும் அண்ணன் நம்மீது கொண்ட வாஞ்சையல்லவா? அவர் நம்மீது வைத்த நம்பிக்கை வீண்போகாமல்தானே அவருக்கும் பொழுதும் அயராப் பணியாற்றினோம். அவர் மறைந்து நம் நெஞ்சில் நிறைந்த பிறகும் அதே பணியை அவர் வழியில் ஆற்றிக்கொண்டிருக்கிறோம்.

கறுப்புக் கொடி அறப்போரில் எத்தகைய கட்டுப்பாடும், கண்ணியமும் காக்கப்பட வேண்டுமென நமது ஆருயிர்த் தலைவர் விரும்பினாரோ, அந்த விருப்பத்தைத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டுதானிருக்கின்றோம் என்பதை நாட்டுக்கு மீண்டுமொருமுறை எடுத்துக்காட்ட கிடைத்துள்ள நல்வாய்ப்புத்தான் நெல்லையில் நாம் நடத்த இருக்கும் கழகப் பொன்விழாப் பேரணி!

1942 இல் தொடங்கி - 1969 வரையில், 27 ஆண்டுகள் எந்த அண்ணனின் இதயச் சிறகுகளின் கதகதப்பில் வளர்ந்தோமோ

- எந்த அண்ணனின் செம்பவள இதழ்கள் திறந்து தம்பி என அழைக்கும்போது பாசப் பிணைப்பில் திளைத்தோமோ - எந்த அண்ணனுடன் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரைகள் வரையில் பல கல் தொலைவு பயணம் செய்து கொள்கை பரப்பினோமோ - எந்த அண்ணனுடன் சிறைக்கோட்டங்களில் அடைப்பட்டுக் கிடந்தோமோ - எந்த அண்ணனின் தலைமையில் அமைந்த அமைச்சரவையில் அங்கம் வகித்தோமோ - அந்த அண்ணன் இல்லாமல் அன்றைக்கு அவர் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொன்விழாவைக் கொண்டாடுகிறோம் என்கிறபோது - எனக்கு எத்தனை உணர்ச்சிகள்! எத்தனை நினைவுகள்! கண்கள் பனிக்கின்றன! இன்றைக்கு அவர் இருந்தால் 90 வயது! மணிவிழாகூட நடத்த முடியாமல் நம்மைத் தவிக்க விட்டுப்போன அவரில்லாமல், அவர் கண்ட கழகத்திற்குப் பொன்விழா! அவருக்குத் தம்பியாக வாய்த்த எனக்குப் பவள விழா! இவையிரண்டும் அவரில்லாத விழாக்கள்! எனக் கூறுவதல்ல! நினைப்பதேகூட தவறு!

அவர் இருக்கிறார் நம்முடன்! ஆம்! 1962 ஆம் ஆண்டு தேர்தலில் காஞ்சியில் வெற்றி வாய்ப்பை அவர் இழந்தபோது, சட்டப்பேரவைக்குச் செல்லும் ஐம்பது கழக உறுப்பினர்களின் உருவில் நான்தான் செல்கிறேன் என்று கடற்கரை நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் கம்பீரமான புன்னகையுடன் கரம் உயர்த்திப் பேசினாரே! அது இன்னும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறதே! அந்த அண்ணன்தான் இப்போதும் நாம் நடத்துகிற பொன்விழாப் பேரணியில் கலந்துகொள்கிற லட்சோப லட்சம் உடன்பிறப்புகளின் உருவில் நெல்லை வீதிகளில் உலா வரப்போகிறார்.

அதாவது, அண்ணன் கண்ட கழகத்துக்கு அந்த அண்ணனே முன்னின்று, நடத்துகின்ற பொன்விழாப் பேரணி இது! கண்டிட, களித்திட, கருத்துப் புதையல் பெற்றிடச் செல்வோம் நெல்லைக்கு! வெல்வோம் தொல்லைகளை!

அன்புள்ள,

மு. க.

(13-09-1998)

2429. பாதை கடினம்; பயணத்தில் தேவை கவனம்!

உடன்பிறப்பே,

இன்று தேதி பதினைந்து! நாளைக்குப் பதினாறு! அடுத்த நாள் பதினேழு - இடையில் இரண்டே நாட்கள்தான்! என்ன? நெல்லை மாநாட்டுக்குப் புறப்பட்டு விட்டாயா!

இன்று உன் ஊரில் அண்ணாசிலையிருந்தால் அதற்கு மாலையணிவித்துவிட்டு - இல்லையென்றால் வீட்டில் உள்ள அண்ணா படத்துக்கு மல்லிகைச்சரம் அணிவித்து வணங்கிவிட்டு - துணை மயிலிருந்தால் அழைத்துக் கொண்டு - மழலைகள் இருந்தால் தூக்கிக் கொண்டு மளமளவெனப் பயணத்தைத் தொடங்கிட வேண்டியது தானே!

புகைவண்டிகளில் இடமில்லை! ஏற்கனவே நிரம்பி விட்டன - பேருந்துகளின் நிலையும் அவ்வாறுதான் என்று அறிவிக்கப்படுகிறது. அதனால் வேன்களில் செல்வதென்று, கழகக் கண்மணிகள் பயணக் கூட்டணிகள் அமைத்துக்கொண்டு பொன்விழா மாநாடு கண்டிட ஏற்பாடுகள் செய்திருக்கிறார்களாம்!

அந்தக் கூட்டணிகளில் ஒன்றில், உன் குடும்பத்தினரும் இடம் பிடித்துக்கொண்டால் நெல்லைப் பேரணி தொடங்குவதற்கு முன்பே உரிய நேரத்தில் வந்து சேர்ந்து விடலாம்.

மாநாடுகள், பேரணிகள்; அவை எந்த இயக்கத்தின் சார்பில் நடைபெற்றாலும் அவற்றில் கலந்துகொள்ள வாகனங்களில் செல்வோர், பயணம் முடிந்து பத்திரமாக ஊர் திரும்பிட வேண்டும் என்பதில் எனக்குக் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில், அதிக அக்கறையும், கவலையும் எப்போதும் உண்டு.

அதனால்தான், இதயத் துடிப்பை அடக்கிக்கொள்ள முடியாமல் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்! தாமதமாகப் புறப்பட்டு - குறித்த நேரத்தில் போய்ச்சேர வேண்டுமென்பதற்காக வாகனங்களை வாயு வேக மனோவேகத்தில் ஓட்டச் செய்து, இடையில் மரத்திலோ அல்லது எதிர்வரும் வாகனத்திலோ மோதி விபத்துகளை என் உடன்பிறப்புகளில் எவர் ஒருவரும் சந்தித்துவிடக் கூடாது என்ற என் குரலுக்குத் தயவு செய்து மதிப்புக் கொடுங்கள் என்று!

நெல்லை சமாதானபுரத்தில், அண்ணா நகரில் மாநாட்டுப் பந்தல் வேலைகள் நடப்பதை நேரில் சென்று காண வேண்டுமென்று எனக்கு ஆசைதான்! என் விருப்பம் எப்படியிருக்குமென்று என் நோக்கமறிந்து செயல்படக்கூடிய ஆற்றலாளர்களாக என் தம்பிமார்கள் மாநாட்டுப் பணிகளையும், பேரணிக்கான பணிகளையும் மேற்கொண்டிருப்பதால், அண்மைக்காலமாகவே நான் அவற்றில் அதிகமாகத் தலையிடுவதில்லை.

ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற கட்சி நடத்துகிற பொன்விழா மாநாடும், பேரணியும் என்பதால், அணுவளவும் அதிகார துஷ்பிரயோகம் நடந்துவிடக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் கண்டிப்புடன் கூறிக்கொண்டிருக்கிறேன். நெல்லையில் நடக்கும் பணிகளைத் தொலைக்காட்சி வாயிலாகச் சென்னையிலிருந்தவாறே - அண்ணா அறிவாலயத்தில் அமர்ந்துகொண்டு - நேற்றுக்கூட நானும், பேராசிரியரும், பொருளாளரும் மற்றும் கழக முன்னணியினர் சிலரும் பார்த்துப் பரவசமுற்றோம். நெல்லையில் சமத்துவபுரம் தயாராகிவிட்டதாம் - முதல் நாள் தூத்துக்குடி மாவட்ட சமத்துவபுரத்தைத் திறந்து வைத்துவிட்டுப் பொன்விழாப் பேரணி நாளன்று காலையில், நெல்லை சமத்துவபுரத்தையும்; சமத்துவக் கொள்கைக்குச் சமுதாயத்தை இட்டுச் செல்ல சுயமரியாதை இயக்கம் கண்ட பெரியாரின் சுடர்முகச் சிலையையும் திறந்து வைத்துவிட்டுப் பேரணியில் உன் திருமுகத்தைக் காண அமைந்துள்ள மேடையில் காத்திருப்பேன்.

பெரியார் சிலை - முழு உருவ வெண்கலச் சிலை - மாநகராட்சிக்குக் கட்ட வேண்டிய பராமரிப்புச் செலவு

உட்பட, மூன்று லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட செலவில், கழகச் சார்பில் நெல்லையில் அமைக்கப்பட எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டதாக இந்தக் கடிதத்தை நான் எழுதிக் கொண்டிருக்கும் போதுதான் தொலைபேசி வாயிலாகக் கேட்டறிந்து மகிழ்ந்தேன்.

இனியென்ன பொன்விழாப் பேரணி புறப்பட வேண்டியதுதான்! சங்கரன்கோயில் சுப்பையா நினைவு வளைவிலிருந்து ஆயிரம் பேர்! அல்ல! அல்ல! - பத்தாயிரம் பேர்! அல்ல! அல்ல! - ஒவ்வொன்றிலும் லட்சம் பேர் கொண்ட அணிகள் ஒவ்வொன்றாக, நாங்களிருக்கும் மேடையை நோக்கி வந்து, வாழ்த்துக்கூறி, வாழ்த்துப் பெற்று வரிசை வரிசையாகக் கதிரவன் பந்தல் நோக்கிச் செல்லும் அந்தக் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகத்தானே இருக்கும்!

அதிர்ந்துபேசி அறியாதவரும் - அமைதியின் வடிவமானவரும் - அதே சமயம் அசைக்கமுடியாத கொள்கைக் குன்றமாகத் திகழ்ந்தவருமான என் அன்புத்தம்பி கதிரவன் பெயரை, மாநாட்டுப் பந்தலும் - மற்றும் பகைகண்டு நடுங்காத பகுத்தறிவுச் செம்மல் பத்மநாபன் பெயரை மாநாட்டு அரங்கமும் - மாசில்லா வைர நெஞ்சினன், மலைத்தோள் கொண்டோன் மஸ்தான் பெயரை தோரணவாயிலும் - தூத்துக்குடி தூயவன் மாணிக்கத்தின் பெயரை நமது கொடி மேடையும் - மானமறவன் தம்பித் துரை, மாவீரன் கோட்டையப்பன், மாணவரணிச் சிங்கம் சேக் தாவூது பெயர்களை மாநாட்டு முகப்புகளும் தாங்கி நிற்கிற அந்தக் காட்சிகள், நம் உள்ளத்தில் எத்தனை எத்தனை உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, அந்தக் கழக முன்னணியினர் கட்டிக்காத்த இந்த இயக்கத்தைக் காத்திடும் உறுதியை நமக்கு மேலும் வலுப்படுத்தத்தான் போகின்றன.

பேரணியில் ஒலிக்க வேண்டிய முழக்கங்கள் யாவை என்பதை முன்பொரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். அவற்றை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்க! அண்ணா வழியில் அயராது உழைப்போம் - ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் - இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் - வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் - மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி எனும் ஐம்பெரும் முழக்கங்களுடன் - காண்போம் காண்போம் மதநல்லிணக்கம் காண்போம்! காப்போம், காப்போம்! மனிதநேயம் காப்போம்! போரிடுவோம், போரிடுவோம்! சமூக

நீதிக்காகப் போரிடுவோம்! போற்றுவோம், போற்றுவோம்! சமத்துவ சமதர்மம் போற்றுவோம்! வாழ்க வாழ்கவே தந்தை பெரியார் வாழ்கவே! வாழ்க வாழ்கவே பேரறிஞர் அண்ணா வாழ்கவே!

என்ற அலையோசை, பேரணிப் பெருங்கடலில் ஒலித்திட வேண்டும். பேரணியில் கலந்து - தோரணவாயில்களைக் கடந்து மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்து விட்டால்,

தென்றல் வீசப்போகிறது! தேன்மழை பொழியப்போகிறது! ஆம்! ஆம்! தம்பிகளின், தங்கைகளின் தமிழ் முழக்கம் கேட்கப் போகிறது என்பதைத்தான் இப்படிக் குறிப்பிடுகிறேன்.

திட்டவட்டமான பயணம் - தெளிவான சிந்தனை - தீர்க்கமான முடிவுகள் -

இவைதான் திராவிட முன்னேற்றக் கழகம்!

இந்தக் கழகத்தின் கருவூலமே! கடமையாற்றும் கண்ணின் மணியே! உடன்பிறப்பே! உழைப்பின் உருவமே! பாசத்தின் பிறப்பிடமே! நேசத்தின் உறைவிடமே! இப்படி உன்னை எத்தனை நாள் வர்ணித்துக் கொண்டிருந்தாலும் வர்ணிக்கப்படுவது நீ என்கிற போது என்றைக்குமே வற்றிவிடாது என் தமிழ்!

நேரில் வா, நெல்லைக்கு! பயணத்தில் கவனம்! கவனம்!

நமது பாதை கடினமானது! அதனால்தான் எச்சரிக்கை தேவைப்படுகிறது!

அன்புள்ள,

மு. க.

(15-09-1998)

2430. நெஞ்சில் நிலைத்த நெல்லை மாநாடு!

உடன்பிறப்பே,

வா என்று அழைக்கும் போதெல்லாம்
வருவதில்லை தென்றல்!

வானம், தா என்று கேட்கும் போதெல்லாம்
தருவதில்லை மழையை!

மழலையிடம் கோருகின்ற போதெல்லாம்,
தாய் பெறுவதில்லை முத்தம்!

ஆனால் நீயோ அழைத்தவுடன்
வந்துவிட்ட தென்றலாய் -

கேட்டவுடன் பொழிந்துவிட்ட மழையாய் - கோரிக்கை
மின்னியவுடன் தரப்பட்ட குழந்தையின் முத்தமாய் -

நெல்லைக்கு வா என்றவுடன் கிழக்குச் சூரியனாய் கிளம்பி விட்டாய்! ஆம், கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம் என்று 56 ஆண்டுகளுக்கு முன்பு புதுவையிலிருந்து புரட்சிக் கவிஞர் திருவாரூர் நோக்கி முழங்கினாரே! அந்த முழக்கத்தின் எழுச்சி வடிவமாய் ஏறு நடைபோட்டு நீ வந்த காட்சி இன்னும் என் கண்களை விட்டு அகலவில்லை.

எத்தனை வாகனங்கள் வந்தன என்று எண்ணி மாளவில்லையென மலைத்து நின்றார்கள், மாநாட்டையும் பேரணியையும் நடத்திய உடன்பிறப்புகள்!

வாகனங்களில் வருவோம், வசதியாகப் பேரணி தொடங்கும் இடத்தில் இறங்கி அணிவகுப்போம் என்று நினைத்து வந்தவர்கள், நெல்லையிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் கயத்தார் எனும் ஊரிலிருந்து, மதுரை நோக்கிப் பல கிலோ மீட்டர் தூரம் வாகனங்களை வரிசையாக நிறுத்திவிட்டு,

அங்கிருந்து நடந்தே வந்து பேரணியில் கலந்து கொண்டனர் என்ற செய்தி கேட்டபோது, செந்தேனும் பாய்ந்தது நெஞ்சில்! துயரமும் தோய்ந்தது! எத்தனை தொல்லை கொடுத்துவிட்டோம் என் கண்மணிகளுக்கு என எண்ணியவாறு அழைப்புக் கடிதங்கள் எழுதிய கையைக் கடிந்து கொண்டேன்.

அறுபது ஆண்டுகாலப் பொது வாழ்க்கையில் எத்தனையோ மாநாடுகள், எத்தனையோ பேரணிகளைப் பார்த்திருக்கிறேன். அண்மைக் காலங்களில் விடிய விடிய விழித்திருந்து கண்டு மகிழ்ந்த பேரணிகளும் உண்டு. ஆனால் இவ்வளவு அடர்த்தியாக, இத்துணை நீளத்துக்கு, இத்தனை நேரம் நடந்து வந்தவர்கள் மட்டுமே கலந்து கொண்ட பேரணி ஓர் அருவிப் பொழிவாகவே இருந்தது.

குற்றாலம் அருவியைக் காணும் போது, இடையிடையே பாறைகள் குறுக்கிட்டு ஐந்தாறு அருவிகளாகத் தோன்றும். ஆனால் நெல்லைப் பேரணிகள் குறுக்கீடுகள் இல்லை - அதனால் இடைவெளிகள் இல்லை! நயாகரா நீர் வீழ்ச்சியை நேரிலே பார்க்காவிடினும், படங்களிலே பார்த்திருந்தால் புரியும். அந்த இடைவெளியற்ற அடர்த்தியைத்தான் நெல்லைப் பேரணி எனக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

பேரணி முற்றாக முடிவடைவதற்கு முன்பு, அன்று காலையே மாநாட்டில் தலைமையுரை ஆற்றுவதற்குத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விடியற்காலை மூன்று மணியளவில் மேடையிலிருந்து காரில் புறப்பட்டு தங்குமிடத்திற்குச் சென்று கொண்டிருந்தேன்.

பேரணிப் பாதைகளில் சென்றால் மிகுந்த நெருக்கடி இருக்குமென்பதால் நான் சென்ற கார் நெல்லை நகரில் உட்புறத்துக் குறுக்குத் தெருக்களில் போக வேண்டியிருந்தது. அந்தத் தெருக்களில் கண்ட காட்சிகளால் என் கண்கள் பனித்தன.

சிற்றூர், பேரூர், பட்டிதொட்டிகள், நகர்ப்பகுதியிலிருந்து பொன்விழா மாநாட்டுக்கு வந்தோர், பேரணியில் தொலைதூரம் நடந்துவந்த களைப்பினால் உடலைச் சுருட்டிக் கொண்டு - கொத்துக் கொத்தாக வீதியோரப் புழுதி மண்ணில் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். அடடா! கட்சியினால் தனக்கு என்ன லாபம் என்று கணக்கிடாமல் - தன்னால் கட்சிக்கு என்ன லாபமென்று

கருதிக் கடமையாற்றும் அந்தக் கண்மணிகள் இந்தக் கழகத்தில் எதை எதிர்பார்க்கின்றனர்? எனக்கும் அவர்களுக்குமிடையே வானமளவுக்கன்றோ வற்றாத பாசம் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கிறது!

அதனால்தானே இந்தத் திருநாட்டில் எங்கோ ஒரு மூலையில் பிறந்த நீயும், திருக்குவளையெனும் சிற்றூரில் உதித்த நானும் உடன்பிறப்புகளாகி, இந்தத் திராவிட இயக்கத்தை வளர்த்திட செந்நீரும் கண்ணீரும் கலந்து சிந்தினோம். வளர்த்தோம். வளர்த்துக்கொண்டு இருக்கிறோம்.

வளர்ந்துள்ள இந்த இனமானப் பயிர் விளைவதற்கு நம்மைப்போல - நமக்கு முன்னே கழனி அமைத்து, களைநீக்கி, கதிர் குலுங்கிடக் கண் துஞ்சாது கருமமே கண்ணாகப் பாடுபட்ட முன்னோர்கள், முன்னணியினர், முதுபெருந்தலைவர்கள் படங்களாகி விட்டார்கள். எனினும், அந்தப் படங்களைத் திறந்து வைத்து அவர்கள் நமக்குப் போதித்த பாடங்களை, ரத்தினச் சுருக்கமாகவும் - ரத்தினக் கற்கள் எனச் சொற்கள் கொண்டும்; என் ஆருயிர் உடன்பிறப்புகள் உரை நிகழ்த்தியபோது, அண்ணா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அதை அப்படியே என் தலைமையுரையில் குறிப்பிட்டேன் பொன்விழா மாநாட்டில்!

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள் மாலை நேரத்துப் பல்கலைக் கழகங்கள்! அப்படித்தான் அன்றைக்கு நெல்லை மாநாட்டில் உரையாற்றிய உடன்பிறப்புகள் அனைவரும் பல்கலைக் கழகப் பேராசிரியர்களாகவும் - விரிவுரையாளர்களாகவும் திகழ்ந்தார்கள்.

நீயும் உன் போன்ற என் உயிரினுமேலான உடன்பிறப்புகளும் பதினாறு மணி நேரம் பேரணியில் நடந்து, விடிந்ததும் விடியாததுமாக - மாநாட்டுப் பந்தலுக்கு விரைந்து, விண்ணோக்கி உயர்ந்து நின்ற கம்பத்தில் அண்ணன் நம் கையில் ஒப்படைத்த இரு வண்ணக் கொடியை நான் ஏற்றி வைத்தபோது சூழ்ந்து நின்று வாழ்த்தொலித்த மக்கள் கடலை ஏடுகளில் படங்களாகக் கண்டபோது - இந்தக் கழகத்தின் விஸ்வரூப தரிசனம் கண்ட பெருமிதத்தினால் அப்படியே மெய்சிலிர்த்துப் போனேன்.

பேரணி புறப்படுவதற்கு முன்பு, பெரியார் சிலை திறப்பு! வயதில் அறிவில் முதியார், வாய்மைப் போருக்கு என்றும் இளையார், உயர் எண்ணங்கள் மலரும் சோலை என்ற வாக்கியங்களுடன் வையத்து வழிகாட்டியின் உருவத்தைத் திறந்து வைத்துவிட்டு, ஓடினேன் பொன்னாக்குடியெனும் ஊர் நோக்கி! அங்கேதான் நான்காவது சமத்துவபுரம் திறப்பு விழா!

சொல்வதைச் செய்வோம் என்ற நம் கொள்கைகளைச் செயல்படுத்தும் வாய்ப்பைக் கை நழுவ விடுவோமா? சிலரைப் போல கைகழுவித்தான் விடுவோமா?

உடன்பிறப்பே, நெல்லை மாநாட்டுப் பேரணி சிறப்பையும், பொன்விழா மாநாட்டுக் கூட்டத்தின் சிறப்பையும் போற்றிப் புகழாதார் இல்லை!

ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன்தான் வர்ணிக்க வேண்டும் என்று புராணீகர் கூறுவது போலத்தான் கூற வேண்டும். அத்துணை எழுச்சி! எழில்! எளிமை! இலட்சிய முழக்கம்!


ஆனால் எந்தக் குறையும் குற்றமும் காணமுடியாமல் தவிக்கும் இரு நாவு படைத்த சில நச்சரவங்கள் மட்டுமே திருநெல்வேலி மாநாட்டைத் தீண்டிப்பார்க்கின்றன. விஷத்தை முறிக்கும் பச்சிலை, அண்ணன் தந்தது அப்படியே இருக்கிறது நம்மிடம் என்பதை அறிந்திடாத அப்பாவிகள் அந்த அரவங்கள்!

அலட்சிய சிரிப்பால் அவர்களின் அசூயைகளைப் பொசுக்கிவிட்டு, நம் அணி வகுப்பு தொடரட்டும்! இன்னும் அநேகக் களங்கள் இருக்கின்றன!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(23-09-1998)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022